# கலைஞரின்
# கடிதங்கள்



6

06.10.1977 - முதல்
19.07.1978 - வரை

சீதை பதிப்பகம்

# கலைஞரின் கடிதங்கள்

## தொகுதி - 6

## 06.10.1977 - 19.07.1978

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

AVAILABLE @ :

**GOWRA PUTHAGA MAIYAM**
9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

**கௌரா ஏஜென்ஸீஸ்**
எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

**GOWRA AGENCIES**
NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

# கலைஞரின் கடிதங்கள்

# KALAIGNARIN KADITHANGAL

**விலை : ரூ.300.00** **CODE :2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
சேகர் ஆப்செட், சென்னை–5.
**ISBN** :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
SEKAR OFFSET, CHENNAI - 5.
**ISBN** :

42213
தி 894.8116
திகலை.6

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



# அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

**மு.க. ஸ்டாலின்**
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

# அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 1 மாதம் 6 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

"படமும் பாடமும்"
"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

# பதிப்புரை

## அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

**பதிப்பகத்தார்**

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 482. வெம்மை வேண்டாம்! ஒளிதான் தேவை! | 06-10-1977 | 23 |
| 483. எதிர்பார்க்கிறார்கள், என்ன பதில் என்று! | 07-10-1977 | 31 |
| 484. அய்யோ பாவம்! அமைச்சர்களும், அதிகாரிகளும்! | 11-10-1977 | 33 |
| 485. எதிர்பார்க்கவுமில்லை! ஏமாற்றமும் இல்லை! | 12-10-1977 | 37 |
| 486. தொடர்ந்து பேசியிருந்தால்... | 13-10-1977 | 41 |
| 487. அய்.ஜி.ஸ்டிரேசியும் அரசியலும்! | 14-10-1977 | 46 |
| 488. காவேரிப் பிரச்சினை - கட்சி வேறுபாடுகளை மறப்போம்! | 15-10-1977 | 51 |
| 489. அன்னை மடியில் இடம் உண்டு! அண்ணன் தந்த இதயம் உண்டு! | 16-10-1977 | 55 |
| 490. ஆதிசேடன் ஆச்சரியப்படுகிறான்! | 19-10-1977 | 58 |
| 491. கருத்தரங்கு தேவை! | 21-10-1977 | 63 |
| 492. மாஸ்கோவில் இந்தியப் பிரதமர்! | 23-10-1977 | 67 |
| 493. எத்தனை நாளைக்குச் சகித்துக் கொள்வது? | 24-10-1977 | 70 |
| 494. அறிவிப்புக்குக் குறைவில்லை; ஆனால்... | 25-10-1977 | 74 |

| | | |
|---|---|---|
| 495. எச்சரிக்கையுடன் பேசுவது நல்லது! | 26-10-1977 | 78 |
| 496. மு.க.ஸ்டாலினுக்கு கலைஞர் கடிதம்! | 04-12-1977 | 82 |
| 497. நல்லியண்ணனுக்கு கடிதம்! | 05-12-1977 | 83 |
| 498. எட்டுக்குக் காரணம் ஒன்பது? | 11-12-1977 | 84 |
| 499. இன்னும் வடியாத வெள்ளம்! | 18-12-1977 | 90 |
| 500. அமைச்சரின் உவமை அவர்களுக்கே பொருந்தும்! | 21-12-1977 | 94 |
| 501. தீப்பொறியாக்காதீர்! | 22-12-1977 | 98 |
| 502. நிறைஉழைப்புத் தோள்களே! வருக! வருக! | 23-12-1977 | 101 |
| 503. மனோகர மகாத்மியம்! | 24-12-1977 | 105 |
| 504. வீறுநடை போட, வா! வா! வா! | 25-12-1977 | 111 |
| 505. உங்கள் கேள்விக்கு இது பதில்! | 26-12-1977 | 115 |
| 506. நிதிநிலைப் புரட்சியும், நடுநிலை ஏடுகளும்! | 27-12-1977 | 119 |
| 507. மொட்டை மரமாக்காதீர்! | 28-12-1977 | 123 |
| 508. நம்பிக்கையுடன் வரவேற்போம்! | 1-01-1978 | 126 |
| 509. நீ வழங்கும் பொங்கல் பரிசு! | 11-01-1978 | 130 |
| 510. இப்படியும் அமைச்சர்களா? | 13-01-1978 | 133 |
| 511. அண்ணன் எண்ணம் உணர்க! | 14-01-1978 | 138 |
| 512. உன் சிந்தையில் உலவிட... | 17-01-1978 | 143 |
| 513. இது எந்தக் காலம்? | 19-01-1978 | 149 |
| 514. என் கண் - உனைத் தேடும்! | 23-01-1978 | 152 |
| 515. களம் சென்றார் காலடிகட்கு! | 25-01-1978 | 154 |
| 516. இந்த நாள் எழுச்சி நாள்! | 26-01-1978 | 157 |

| | | |
|---|---|---|
| 517. சரித்திரம் திரும்பும்! | 28-01-1978 | 162 |
| 518. மூன்று நாள் கெடு! | 29-01-1978 | 164 |
| 519. அண்ணா வழியில் சந்திப்போம்! | 30-01-1978 | 167 |
| 520. பயணம் தயாரா? | 31-01-1978 | 170 |
| 521. "மார்க்சிஸ்டுகள்" பார்வைக்கு! | 1-02-1978 | 174 |
| 522. வரலாற்று வளையம்! | 2-02-1978 | 179 |
| 523. சந்துமுனைச் சிந்து பாடுகிறார்! | 5-02-1978 | 182 |
| 524. உயரத்தில் உட்கார்ந்திருப்பதால்! | 7-02-1978 | 185 |
| 525. கடந்த கால நினைவுகள்! | 8-02-1978 | 188 |
| 526. உனக்குப் புரியும் என்பதால்! | 9-02-1978 | 192 |
| 527. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்திட... | 10-02-1978 | 194 |
| 528. மாங்கொல்லையில் கிடைத்த மாங்கனி! | 11-02-1978 | 198 |
| 529. "அமைப்பும் - அணிவகுப்பும்!" | 12-02-1978 | 202 |
| 530. பாடி வீடுகள்! | 12-02-1978 | 205 |
| 531. கவர்னர் உரை - ஏன் இல்லை? | 13-02-1978 | 208 |
| 532. இதிலுமா இரட்டை வேடம்? | 14-02-1978 | 212 |
| 533. உண்மையை ஒப்புக்கொள்கிறார்! | 15-02-1978 | 215 |
| 534. திடுக்கிட வைக்கும் தீர்மானம்! | 16-02-1978 | 218 |
| 535. இயந்திர மனிதர்கள்! | 17-02-1978 | 221 |
| 536. சுயாட்சி கீதமும் - சுருதி பேதமும்! | 18-02-1978 | 225 |
| 537. கவர்னர் உரை நிறுத்தம் - காரணம் இதுதானா? | 19-02-1978 | 230 |
| 538. குடியரசுத் தலைவர் உரையும் - நமது கருத்துக்களும்! | 22-02-1978 | 234 |

| | | |
|---|---|---|
| 539. கடமை வீரர்காள் - கட்டுப்பாடெனும் - கவசம் பூணுவீர்! | 23-02-1978 | 238 |
| 540. உன்னை நம்பித்தான்! | 24-02-1978 | 242 |
| 541. "பத்திரிகா தர்மம்" பார்த்தாயா? | 27-02-1978 | 245 |
| 542. காரணம் பொருந்துகிறதா? | 4-03-1978 | 248 |
| 543. "நரகம்" ஒரு விளக்கம்! | 7-03-1978 | 251 |
| 544. முடியாத தொடர் கதைகள்! | 9-03-1978 | 254 |
| 545. இங்கேயும் உண்டு பொதுமக்கள்! எச்சரிக்கை!! | 10-03-1978 | 259 |
| 546. நய்யாருக்கு வந்த நெருக்கடி! பாவம்; அது என்ன நெருக்கடியோ? | 12-03-1978 | 263 |
| 547. யார், எங்கே இருந்தாலும்! | 19-03-1978 | 266 |
| 548. ஆலோசகர் ஆணை ஒரு அபாயக் குறி! | 23-03-1978 | 269 |
| 549. மேடையிலே வீசுகின்ற புழுதிக் காற்று! | 24-03-1978 | 272 |
| 550. "எல்லாமே நீதான்!" என்றிருக்கிறேன்! | 25-03-1978 | 276 |
| 551. சிறையில் வாடுவோர் பற்றிய ஒரு முறையீடு! | 26-03-1978 | 279 |
| 552. மீண்டும் ஒரு வேண்டுகோள்! | 29-03-1978 | 282 |
| 553. மதுரைக்கு வருகிறேன்! | 31-03-1978 | 285 |
| 554. நம்மவர் வெற்றிக்கு நாளும் உழைத்திடுக! | 07-04-1978 | 288 |
| 555. மகாராஜா கூட்டிய மந்திராலோசனை மண்டபம்! | 09-04-1978 | 290 |
| 556. ராஜபார்ட்டும் - ரங்கதுரையும்! | 10-04-1978 | 293 |

| | | |
|---|---|---|
| 557. பெர்னாண்டஸ் கவனத்திற்கு! | 11-04-1978 | 296 |
| 558. வேடிக்கை பார்க்க முடியாது! | 13-04-1978 | 300 |
| 559. மிக நெருக்கமாக இருக்கிறேன்! | 14-04-1978 | 303 |
| 560. தாக்குதலும் - தாங்குதலும்! | 16-04-1978 | 307 |
| 561. கொடுங்கோன்மையை எதிர்த்துக் குரல் கொடுப்போம்! | 20-04-1978 | 312 |
| 562. "சித்தப்பிரமை" - யாருக்கு? | 3-05-1978 | 317 |
| 563. காட்டூராரும், கண்டியூராரும்! சிந்தனைக்குச் சில செய்திகள்! | 07-05-1978 | 322 |
| 564. மாவட்ட பாசறைகள் அமையட்டும்! | 14-05-1978 | 325 |
| 565. வழக்குகளை நம்புகிறார்; வழுக்கி விழப் போகிறார்! | 26-05-1978 | 330 |
| 566. கேட்காததும் - சொல்லாததும்! | 31-05-1978 | 335 |
| 567. நீ எனக்குத் தரும் பிறந்த நாள் பரிசு! | 1-06-1978 | 343 |
| 568. புதிய பொதுக்குழு கூடுகிறது! | 6-06-1978 | 349 |
| 569. அபாய அறிகுறிகள்! அரணைப் பலப்படுத்துவோம்!! | 7-06-1978 | 353 |
| 570. இன்னுமா இன அழிப்பு வேலை? உணர்வு படைத்தோர், உடன் செயல்படுக! | 11-06-1978 | 357 |
| 571. தூயவனின் நினைவு நாளில்! | 18-06-1978 | 361 |
| 572. புயல் இருக்கலாம் - புழுதிக் காற்று கூடாது! | 24-06-1978 | 364 |
| 573. திரளட்டும் தொழிலாளர் அணி! | 25-06-1978 | 367 |
| 574. அஞ்சாமல் - கண்துஞ்சாமல் ஆற்றிடுக கடமை! | 26-06-1978 | 370 |

| | | |
|---|---|---|
| 575. "தமிழகம் செய்த தவப்பயன்?" | 27-06-1978 | 373 |
| 576. அந்த வரிசையில் முதல்வரே தான்! | 28-06-1978 | 376 |
| 577. ஐந்து நகரங்களில் அணிவகுப்பு! அவசரச் சட்டம் ஆகாது! கூடாது! | 6-07-1978 | 379 |
| 578. கோர்ட்டுக்கு ஆறில்! கோவைக்கு ஒன்பதில்! | 7-07-1978 | 383 |
| 579. வீறுநடை போடு! வெற்றி நமதே! | 13-07-1978 | 385 |
| 580. குன்றென நிமிர்ந்து நில்! கோவையைப் பின்பற்று!! | 14-07-1978 | 390 |
| 581. மாற்றுக் குறைந்திருக்குமே! மாசு படிந்திருக்குமே!! | 19-07-1978 | 394 |

# 482. வெம்மை வேண்டாம்! ஒளிதான் தேவை!

**உடன்பிறப்பே,**

■ நாட்டில் நடக்கும் சில முக்கியமான நிகழ்ச்சிகளைப் பற்றி திட்டவட்டமான கருத்துகளையும் கூறலாம்.

■ பட்டதும் படாததுமாகவும் கருத்துகளை வெளியிடலாம்.

■ நமக்கும் தெளிவில்லாமல் மக்களுக்கும் தெளிவில்லாமல் குழப்பமான கருத்துகளையும் தெரிவிக்கலாம்.

■ இதுபற்றிக் கருத்து தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை, அல்லது கருத்து தெரிவிக்க விரும்பவில்லை என்ற அளவிலும் கூறிவிடலாம்.

■ மக்களுக்கே கருத்து தெரிவிக்கும் வாய்ப்பை வழங்கி விட்டு மௌனமாகவும் இருந்துவிடலாம்.

நான் குறிப்பிட்ட இத்தனை முறைகளும், நடைபெறுகிற அல்லது நடைபெற்றுவிட்ட ஒரு நிகழ்ச்சிக்கும் நாட்டு மக்களின் வாழ்க்கைக்கும் எந்த அளவு தொடர்பு என்பதைப் பொறுத்துக் கடைப்பிடிக்கப்படுபவைகளாகும்.

■ சுவரின் மீது வேகமாகப் பந்தை அடித்தால், அந்தப் பந்து அடித்தவனை நோக்கியே வருகிறது.

■ கூண்டுக்குள் இருக்கிற ஒரு புலியைக் குச்சியால் குத்துகிறபோது குத்துகிறவர்களுக்குக் கும்மாளமாக இருக்கிறது.

■ அதே புலி, கூண்டுக்கு வெளியே வந்து தன்னைக் குச்சியால் குத்தியவன் மீது தனது கூரிய பற்களையும், நகங்களையும் அழுத்தும்போதுதான் கூண்டுப்புலி குச்சியால் குத்தப்பட்டபோது எவ்வளவு வேதனையும், வேகமும் கொண்டிருந்தது என்பது புரிகிறது.

■ வெடிகுண்டை விரோதி மீது வீசுவதற்குக் குறி பார்க்கிறவன், அப்படிக் குறி பார்க்கும் பரபரப்பில் அவனையுமறியாமல் அந்த வெடிகுண்டைத் தன் கையிலேயே அழுத்தி விரல்களையும் இழந்து, உள்ளங்கையும் புண்ணாகி மயக்கமுற்று விழுந்து விடுகிறான்.

■ விலாங்குமீனே, வழுக்கிக்கொண்டு தப்பித்து விடக் கூடியது! அதைப் பிடிக்கிறவர்கள் கையில் விளக்கெண்ணெயையும் தடவிக்கொண்டு பிடித்தால் என்ன ஆகும்?

■ நாள்தோறும் இருட்டு நேரத்தில் ஊருக்குள் புகுந்து மனிதர்களின் கழுத்தைக் கௌவி ரத்தம் குடித்த சிறுத்தையொன்றை, வேட்டையாடுவதற்குத் துரத்தியபோது அது மான்தோல் ஒன்றைப் போர்த்திக்கொண்டு புல்வெளியில் படுத்துக் கிடந்தது.

உடன்பிறப்பே, என் முன்னே “இந்தியா 1977”ம் தெரிகிறது! “இந்தியா 1975-1976”ம் தெரிகிறது!

கைது செய்யப்பட்ட செய்தி தெரியாமல், கைது செய்வதற்கான காரணமும் சொல்லாமல், எந்தவொரு மாஜிஸ்டிரேட் கோர்ட் நீதிபதியின் முன்னாலும் கொண்டு போய் நிறுத்தாமல், ஒரு லட்சத்து அறுபதாயிரம் அரசியல்வாதிகளை ஓராண்டு காலத்திற்கு மேலாக மிசாக் கைதிகளாக சிறையில் பூட்டிய ஆண்டுதான் 1975-76-ஆம் ஆண்டு!

இந்திய மண்ணின் விடுதலைக்காக பதினான்கு ஆண்டுக் காலம் சிறையிலிருந்த ஜெயப்பிரகாஷ் அவர்களையும், தேசத்தின் முதுபெரும் தலைவர்களையும் தனிமைக் கொட்டடிகளில் போட்டு ஓராண்டுக்காலம் வாட்டி வதைத்த ஆண்டு, 1975-76ஆம் ஆண்டு!

தி.மு.கழகத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களை தியாகிகளாக்கமாட்டோம். அவர்களை கிரிமினல் குற்றவாளிகளாக, மாசு படிந்தவர்களாக, ஊழல் பேர்வழிகளாக மக்கள் முன்னால் அறிமுகப்படுத்தி, அதன் பிறகு சிறையிலே தள்ளுவோம் என்ற வஞ்சம் தீர்க்கும் செயலும், பழிவாங்கும் முயற்சியும் 1975-76ஆம் ஆண்டு!

அரசியல் வஞ்சம் தீர்க்க, பழிவாங்க எங்கள் மீது வழக்குகளைப் போடுகிறது 1977-ஆம் ஆண்டு என்று 1975-76-ஆம் ஆண்டு இப்போது குறைபட்டுக் கொள்கிற காட்சியைக் காணுகிறோம்.

"துரோகிகளை உருவாக்கு! தூள்தூளாக்கு தி.மு.கழகத்தை! பலகீனர்கள் யாரோ, அவர்களைப் பார்த்துப் பிடி! அவர்களைக் கொண்டு தி.மு.கழகத்தைச் சுக்கு நூறாக்கு!"

இது 1975-76-ஆம் ஆண்டு வகுத்த திட்டம்!

"இதோ ஒரு துரோகி சுப்பிரமணியம்! மந்திரிசபையில் இருந்தபோது மண்டியிட்டுக் கிடந்தவர்! இந்தியாவின் பராசக்தி இந்திரா எனப் புகழ்பாடியவர்! அவர் ஷா கமிஷன் முன்னால் இந்திராவைக் காட்டிக் கொடுத்துவிட்டார்! எடுத்து வா செருப்பு மாலை! துரோகிக்கு அணிவிப்போம்!"

இப்படி முழக்கமிடுவது 1977-ஆம் ஆண்டு!

கழகத்தை வீழ்த்தக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு வலை வீசப்பட்ட காலம் 1975-76!

அய்யோ! பையும், ராஜ்பகதூரும், சுப்பிரமணியமும், மற்றும் பலரும் இந்திராவைக் காட்டிக் கொடுக்கிறார்களே! என்று ஓலமிடுகிற காலம் 1977!

உடன்பிறப்பே, காலச் சக்கரம் எப்படிச் சுழலுகிறது பார்த்தாயா?

அரசியலில் கொள்கை மாறுபாட்டுக்காகப் பழிவாங்குவது அநியாயம்!

இதை ஆயிரம் முறை நாம் சொன்னபோது, ஆதிபராசக்தியின் காதுகள் மூடிக்கிடந்தன!

இன்று அந்த பராசக்தியே, கனல் பறக்கும் கண்களுடன், எரிமலையெனக் குமுறியவாறு,

"அரசியலில் கொள்கை மாறுபாட்டுக்காகப் பழிவாங்குவது அநியாயம்!"

என ஆர்த்திடும் செய்தியைக் கேள்விப்படுகிறோம்.

முன்பு நடந்த தவறு, இப்போதும் நடக்க வேண்டுமென்று விரும்புகிறவர்களல்ல நாம்!

- பழிவாங்குதல்
- வஞ்சம் தீர்த்தல்
- அவதூறு பொழிதல்
- அக்கிரமமாக நடத்தல்

இந்தப் பயிற்சிகளைக் கற்றுத் தந்த பள்ளியல்ல நாம் பயின்ற காஞ்சிபுரத்துப் பள்ளி!

மறப்போம்! மன்னிப்போம்!! இந்த மணிமொழிகளுக்குச் சொந்தக்காரர் நமது குருநாதர் பேரறிஞர் அண்ணா அவர்கள்!

“இந்திரா, ஏராளமான தவறுகளைச் செய்திருக்கிறார். அரசியல் சட்டத்தைக் கோணல்மாணலாகத் திருத்தியிருக்கிறார். உயிர் வாழ்வதற்குரிய உரிமை உட்பட குடிமக்களின் ஜீவாதார உரிமைகளைப் பறித்துவிட்டார். பத்திரிகைகளின் வாயை அடைத்துவிட்டார். நீதிமன்றங்களில் சுதந்திரத்தைப் பறித்து விட்டார். அவரை விசாரணையின்றிக் காவலில் வைக்கும் நோக்கம் எங்களுக்கு இல்லை. நள்ளிரவில் அவர் வீட்டுக் கதவைத் தட்டி நாங்கள் அவரைக் கைது செய்யவில்லை. தூரம் தொலைவில் உள்ள ஒரு சிறைக்குக் கொண்டு போய், காற்றுப் புகாத இருட்டறையில் வைக்கவில்லை.”

உள்துறை அமைச்சர் சரண்சிங்கின் அறிக்கையில் காணப்படும் வாசகங்கள் இவை!

நெருக்கடிப் பிரகடனத்தையொட்டி தேசத் தலைவர்கள் நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர். விசாரணைக்கு வாய்ப்பே இன்றிக் காவலில் வைக்கப்பட்டனர். காற்றுப்புக முடியாத இருட்டறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர்.

அன்று நடந்தவை இன்று நடக்கவில்லையென்று சுட்டிக்காட்டுகிறார் சரண்சிங்!

“இந்திரா காந்தியின் கைதும், மாஜிஸ்டிரேட் உத்தரவும், ஜனதா அரசில் நீதித்துறை சுதந்திரமாக இயங்குகிறது என்பதற்கு அடையாளம்” என்கிறார் ஜனதா தலைவர் திக்விஜய் நாராயண் சிங்!

“என்னைக் கைது செய்வதுதான் தேர்தல் நேரத்து வாக்குறுதியா?”

"அச்ச உணர்வும் இந்திரா காந்தியும் இரு துருவங்கள்!"

"என் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளாயினும், ஜோடிக்கப்படும் வழக்குகளாயினும் அரசியல் நோக்கம் கொண்டவைகளே!"

நிருபர்களிடம் பேசிய இந்திரா காந்தியார் நடுக்கமற்ற குரலில், திடமான உள்ளத்தோடு இந்தப் பதில்களை அளித்திருக்கிறார்.

இதைப் படிக்கும்போது இந்தப் பாழும் மனம், 1975-76-ஆம் ஆண்டுகளையல்லவா திரும்பிப் பார்த்து ஒரு நீண்ட பெருமூச்சை விடுகிறது!

"த்சு!த்சு! தேவையில்லாத காரியம்! இவ்வளவு தூரம் போயிருக்க வேண்டியதில்லை."

சில நடுநிலையாளர்களைப் போலவே நம் நெஞ்சிலும் இந்தக் கருத்து எதிரொலிக்காமல் இல்லை!

கழக ஆட்சியைக் கலைத்ததோடு நிற்காமல், இருபத்தி ஐயாயிரம் பேரைக் கைது செய்து, அவர்களை இரண்டு மூன்று மாதம் கழித்து விடுதலை செய்து, ஐநூறுக்கும் மேற்பட்டவர்களுக்கு ஓராண்டு சிறையில் கொடுமை புரிந்து, அடித்துத் துவைத்து, இருவரைப் பிணமாகத் தந்து, இவற்றிலும் திருப்தி அடையாமல் கிரிமினல் வழக்குகள், கொலை முயற்சி வழக்குகள் எனப் பல வழக்குகளை ஜோடித்து கழகத்தைப் பற்றி நாள் தவறாமல், வேளை தவறாமல், வானொலியில், டெலிவிஷனில், அவதூறுப் பிரச்சாரங்களை மிகக் கீழ்த்தரமான முறையில் செய்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினார்களே என்ற நினைவு நெஞ்சை விட்டு அகலாமல் இருந்தாலுங்கூட அவைகளையும் கடந்த ஒரு அனுதாப உணர்ச்சி நம்மை ஆட்கொள்ளத் தவறவில்லைதான்!

அண்ணாவின் இதயத்துக் கதகதப்பில் வளர்ந்தவர்கள் அல்லவா நாம்!

ஆட்சிக் கலைப்பு!

விசாரணைக் கமிஷன்!

கிரிமினல் வழக்கு!

இவ்வளவுக்கும் பிறகுகூட கௌகத்தி மாநாட்டில் இந்திரா காந்தி அம்மையார் எதிர்க்கட்சிகளுடன் பேசத் தடையில்லை என்று

கூறிய வார்த்தையை வைத்து, டெல்லியிலே எல்லாக் கட்சித் தலைவர்களையும் கொண்ட கூட்டத்தை நடத்தி, விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி இந்தியாவில் இயல்பான நிலையும், எல்லாக் கட்சிகளுக்குமிடையே ஒரு சுமுகமான சூழலும் ஏற்பட வழிவகுக்கலாம் என்று கேட்டுக் கொண்டதை அம்மையார் ஏற்றுக் கொண்டிருப்பார்களேயானால்-

அனைத்துக் கட்சியினருமே இணைந்து நின்று, இந்தியாவின் முன்னேற்றத்திற்குத் தேவையான திட்டங்களைத் தீட்டியிருக்க முடியும்.

அத்தகைய வேண்டுகோள்கள் அலட்சியப்படுத்தப்பட்டதன் விளைவு என்ன?

இன்று இந்தியாவில் எங்கு நோக்கினும் விசாரணைக் கமிஷன்கள்! அரசியல்வாதிகள் மீது வழக்குகள்! முன்னாள் முதலமைச்சர்கள், இந்நாள் முதலமைச்சர்கள் பலர் மீது கமிஷன் விசாரணைகள்!

இவைகளே அரசுகளின் தொடர் நடவடிக்கைகளானால், நாட்டு மக்களின் நலன்கள் பற்றி நினைப்பதற்கு நேரம் ஏது?

மீள முடியாது!

தப்ப முடியாது!

கைது!

சிறை!

ஜீப் ஊர்வலம்!

ஆளுங்கட்சியினரின் அன்றாடக் கோஷங்களாக இவை ஆகிவிட்டால்,

திட்டங்கள் நடவாது!

நன்மைகள் பெருகாது!

தேவைகளை நிறைவு செய்ய இயலாது!

பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது!

முடிவு என்ன ஆகும்? யார் அமைச்சர்களாக வந்தாலும் அவர்கள் பதவியிலிருந்து இறங்கும்போது ஒரு விசாரணைக் கமிஷனை மடியில் கட்டிக்கொண்டுதான் இறங்க வேண்டும்.

இதற்கு வழிவகுத்தது இந்திரா அரசுதான்! அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை அவர்களின் கண்டுபிடிப்பு!

அவர்களே உருவாக்கிய பூதம், அவர்களையே நோக்கி வாயைப் பிளக்கிறது!

சிட்டி பாபுவின் கல்லறை!

சாத்தூர் பாலகிருஷ்ணனின் கல்லறை!

சிறை வாழ்வால் நொந்து சீக்காளிகளாக

நடமாடிக் கொண்டிருக்கும்

கழகக் கண்மணிகளின் தோற்றம்!

அநியாய வழக்குகள்!

அடாவடிச் செயல்கள்!

அலுவலகங்கள், வீடுகள் சோதனைகள்!

அலங்கோலப்படுத்தப்படுகிறாள்; கண் எதிரே

மனைவி!

அலறுகிறது குழந்தை!

அன்புக்குரிய நண்பர்கள் கைவிலங்குடன்

கடைத்தெருவில் ஊர்வலம் விடப்பட்ட

கொடுமை!

ஓராண்டுக்குமேல் ஆகிவிட்டதால், அவைகளை மறக்க முடிகிறதா? பட்டை பட்டையாகப் புலிக்கோடுகள் போன்ற அடிபட்ட தழும்புகளுடன் என் எதிரே வரும் கழகத் தோழர்களைக் காணும்போது இன்னமும் என் கண்கள் குளமாகின்றனவே!

இவ்வளவுக்கும் பிறகு - இப்போது ஒரு இரக்க உணர்ச்சி பிறக்கிறதென்றால், அண்ணனே! அந்த இதயத்தை எங்களுக்கு வழங்கிய உன் பெருமையே, பெருமை!

உடன்பிறப்பே! "வேண்டும் நன்றாக! விருப்பம் நிறை வேறியது! இதுவும் வேண்டும்! இன்னமும் வேண்டும்!" - இப்படிப் பேசிடத் தோன்றும் உனக்கு! அடிபட்ட தழும்புகளைத் தடவிக் கொண்டு பேசுவாய், தெரியும் எனக்கு!

அது சராசரி மனிதனின் உள்ளத்திலிருந்து வரும் கருத்து! ஆனால் நாமோ, அண்ணனின் அன்பெனும் சர்வ கலா சாலையில் பயின்றவர்கள்! அரசியல் நாகரிகத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்து அதில் தேறியவர்கள்! எனவே அதற்கேற்ப அமையவேண்டும் நமது எழுத்தும் பேச்சும் இந்த விவகாரம் குறித்து!

குறைகளைச் சொல்லும் முறை ஒன்று! அதற்குரிய நேரம் மற்றொன்று! ஒருவர் பாதிக்கப்படும்போது அவர்தம் குறைகளை எடுத்துக் கூறும் விளக்கத்தில் வெம்மை இருத்த லாகாது! ஒளிதான் இருந்திட வேண்டும்!

அன்புள்ள,

மு.க.

(06-10-1977)

# 483. எதிர்பார்க்கிறார்கள், என்ன பதில் என்று!

**உடன்பிறப்பே,**

அரிசி மண்டலம் ஒரே மண்டலமாக ஆக்கப்படுவதைத் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளவில்லையென்று உணவு அமைச்சர் எட்மண்ட் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

நல்ல எண்ணத்தோடு மத்திய அரசு செய்துள்ள இந்தக் காரியத்தைப் பயன்படுத்திக் கொண்டு வியாபாரிகள், விலையை உயர்த்தினால் அவர்களைப் பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள்!

என்று பேசியிருக்கிறார் முதல்வர் எம்.ஜி.ஆர்.!

இந்த முரண்பாடு கண்டு நாம் வியப்படைய மாட்டோம்!

வழக்கமாக நடக்கிற காரியம் - உதிர்க்கிற கருத்துகள்!

உணவு அமைச்சருக்கு ஒரு கேள்வி! ஒரே மண்டலமாக ஆவதை ஏற்கவில்லை யென்று சொல்லிக் கொண்டிருக்கும் போது - அதே முடிவில் திடமாக நிற்க வேண்டுமேயல்லாமல், அதற்குள்ளாக அவசரப்பட்டு மாற்றுத்திட்டம் ஒன்றை மத்திய அரசுக்கு அறிவிப்பதற்காகச் செயலாளரை அனுப்புவானேன்?

முதலில் நிலைமையை விளக்கி உறுதியாக நின்று ஒரே மண்டலமாக்கும் கொள்கை, தற்போது சாத்தியமாகாது என்பதற்கான எதிர்ப்புகளைத் தெரிவித்து, அதற்குப் பிறகும் மத்திய அரசு, நமது தமிழ்நாட்டுக் குரலை ஏற்காவிட்டால், அதற்குப் பிறகு அந்த மாற்றுத் திட்டத்தை மத்திய அரசின் முன்னால் வைத்திருக்கலாமே!

பாதிக்கப்படும் மாநிலங்களின் உணவு அமைச்சர்கள் வருகிற ஒன்பதாம் தேதி கல்கத்தாவில் கூடி, ஒரே மண்டலக் கருத்து பற்றிய தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள் என்று செய்தி வருகிறது. அந்தக் கூட்டத்தில் தமிழக உணவு அமைச்சரும் கலந்துகொள்ளப் போவதாகக் கூறியுள்ளார். அதற்கிடையில் மாற்றுத் திட்டம் ஒன்றை மத்திய அரசின் முன்னால் வைப்பது தேவைதானா?

மாற்றுத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டால், பிறகு கல்கத்தா கூட்டத்தில் தமிழக அரசின் உணவு அமைச்சர் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

கல்கத்தா கூட்டத்தில் அனைவரும் கலந்து யோசித்த பிறகு, மாற்றுத் திட்டத்தை ஒருமுகமாக அறிவித்திருக்கலாம் அல்லவா?

அரிசி மண்டலம், ஒரே மண்டலமாவதால் 16,000 நியாய விலைக்கடைகள் திறக்க இயலாது என்று திரு. எட்மண்ட் கைவிரித்திருக்கிறார்.

இப்படி ஒரே மண்டலக் கொள்கை என்ற அறிவிப்பு வருவதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பே, திரு. எட்மண்ட் அவர்கள் 16,000 நியாய விலைக்கடைகள் (ரெவின்யூ கிராமத்திற்கு ஒன்று வீதம்) திறக்கிற திட்டத்தில் உறுதியற்று இருந்தார் என்பதற்கு அவரது சட்டசபைப் பேச்சே சாட்சியாக விளங்குகிறது.

கவர்னர் உரையில் அ.தி.மு.க. ஆட்சி ஏதாவது ஒன்றைப் புதுமையாகச் சொல்ல வேண்டுமென்ற ஆசையில், கண்ணை மூடிக்கொண்டு இடறி விழுந்த கதையாகும் அது!

அரிசி மண்டலம் ஒரே மண்டலமாவதால் நியாய விலைக் கடைகளின் அவசியம் அதிகமாகிறது என்பதை தமிழக உணவு அமைச்சர் ஏன் மறுக்கிறார் என்று புரியவில்லை.

நெல் கொள்முதலுக்கு, கழக அரசு தந்த விலையைவிட அதிக விலை அ.தி.மு.க. அரசு, தரும் என்று சட்டசபையில் முதலமைச்சர் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி கைதட்டலைப் பெற்றிருக்கிறார்.

அவ்வாறு அதிக விலை தந்து நெல்லைக் கொள்முதல் செய்து 16,000 நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டியதுதானே!

இல்லாவிட்டால், அரசின் சார்பில் ஆளுநர் உரையில் அறிவித்தது தவறு என்றாவது வாக்குமூலம் கொடுப்பதுதானே!

அரிசி, கிடைக்கத் தாமதமானாலும் அந்தக் கடைகளில், இந்த அரசு குறிப்பிட்டது போல சர்க்கரை, உப்பு, புளி, மிளகாய், பருப்பு, எண்ணெய் போன்ற மளிகைச் சாமான்களையாவது நியாய விலையில் விற்பனை செய்யலாம் அல்லவா?

மக்கள் எதிர்பார்க்கிறார்கள் - என்ன பதில் வரப் போகிறதென்று!

அன்புள்ள,

மு. க.

(07-10-1977)

# 484. அய்யோ பாவம்! அமைச்சர்களும், அதிகாரிகளும்!

**உடன்பிறப்பே,**

மதுரை மாநகரில் மாணவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார்கள் என்ற செய்தி கேள்வியுற்று, நெல்லை செல்லும் வழியில் அவர்களைக் காண்பதற்காக மதுரையில் இறங்கி மருத்துவமனைக்குச் சென்றேன். ஒரு மாணவர், கவலைக்கிடமான நிலையில் அவசர சிகிச்சை அறையில் வைக்கப்பட்டு, பிராண வாயு செலுத்தப்படுவதாக மருத்துவமனையில் உள்ளவர்கள் தெரிவித்தார்கள். தாக்குண்டு படுக்கைகளில் கிடந்த மற்ற மாணவர்களையெல்லாம் பார்த்து ஆறுதல் கூறினேன். அந்த மாணவர்களின் பெற்றோர்கள், அவர்கட்கு அருகே நின்று கதறி அழுதபடி இருந்தனர். தலையில் காயமுற்றோரும், கண்ணுக்கருகாமையில் அடி விழுந்து விழி வீக்கம் கொண்டோரும், பற்களை இழந்தோருமாக அந்த இளம் மாணவமணிகள் இருந்த நிலை, நெஞ்சை உலுக்குவதாக இருந்தது.

அவர்களை விசாரித்தபோது, தங்களைப் போலீசார் அடித்தது மட்டுமல்ல, அ.தி.மு.க.வினரும் அடித்தார்கள் என்று அழுதுகொண்டே சொன்னார்கள். கைக்கெடிகாரம், மற்றும் அவர்களது பொருள்கள் பலவற்றையும் அந்தக் குண்டர்கள் களவாடிச் சென்று விட்டதாகவும் மாணவர்கள் என்னிடம் முறையிட்டார்கள்.

நான் மருத்துவமனையிலும் மற்றும் வெளியிலே இருந்த மாணவர்களிடமும், மற்றவர்களிடமும் விசாரித்த விவரங்களை எடுத்துக் கூறியது மட்டுமல்லாமல், உண்மைகள் விளங்குவதற்கு நீதி விசாரணையொன்றை அரசு நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு அறிக்கை விடுத்தேன்.

அடுத்த நாளே மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை அதிகாரியும் என் அறிக்கைக்குப் பதில் அறிக்கை அளித்துள்ளார்கள்.

மாணவர்களை வெளி ஆட்கள் தாக்குவதை போலீசார் அனுமதித்ததாகவும், அ.தி.மு.க. ஆதரவாளர்களும் அ.தி.மு.க. பாட்ஜ் அணிந்தவர்களும் இவ்வாறு தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுவதும் சரியல்ல! எனவே இதுபோல தவறான அறிக்கைகளை விட்டு பொது அமைதியையும், சட்டம் ஒழுங்கையும் குலைப்பது சரியல்ல. மாணவர்கள் இருந்த கல்லூரி காம்பவுண்டுக்குள் வெளி ஆட்கள் யாரையும் அனுமதிக்கவில்லை.

இது மதுரை மாவட்ட அதிகாரிகளின் கூட்டறிக்கை! அமைச்சர்கள், எதிர்க்கட்சிக்கு அளிக்க வேண்டிய பதிலை அதிகாரிகளே அளித்துள்ளார்கள். அதிகாரிகள், நிகழ்ச்சிகளை விளக்குவது வேறு! அதே நேரத்தில் எதிர்க்கட்சிகளைப் பற்றி விமர்சிப்பது என்பது வேறு!

விமர்சிக்கும் வேலையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள். பரவாயில்லை! அவர்கள் அறிக்கைக்கும், அமைச்சர்கள் கூற்றுக்கும் பொருத்தமாவது இருக்கிறதா? ஒத்துவருகிறதா? இல்லை! அதிலும் முரண்பாடு!

அதிகாரிகள் சொல்லுகிறார்கள், வெளியாட்களை காம்பவுண்டுக்குள்ளே அனுமதிக்கவில்லையென்று!

ஆனால் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் என்ன சொல்லுகிறார் தெரியுமா?

இதோ, அவர்களது கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏட்டில் வந்துள்ள செய்தி!

மதுரையில் மாணவர் கிளர்ச்சி நடந்தபோது என்.சி.சி. ஆயுதக் கிடங்கை வெளியார் நால்வர் உடைத்து இருக்கக்கூடும். ஒருவர் முகமூடி அணிந்திருந்தார் என்ற திடுக்கிடும் தகவலும் கிடைத்துள்ளது. அமளி நடந்த நேரத்தில் கல்லூரிக்குள் இருந்த வெளியார் நால்வரை போலீசார் கைது செய்திருக்கிறார்கள். இந்த வெளியார்தான் என்.சி.சி. ஆயுதக் கிடங்கை உடைத்திருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். அவர்களை நிறுவனராகக் கொண்டு, அவரது அண்ணன் சக்கரபாணி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வருகிற அவர்களது கட்சி ஏட்டிலே தான் அமைச்சர் அரங்கநாயகத்தின் பேச்சு அக்டோபர் 8-ஆம் நாள் வெளியாகியிருக்கிறது!

அரங்கநாயகம் மட்டும், மதுரை அதிகாரிகளின் கூற்றை மறுக்கவில்லை. இதோ நிதி அமைச்சர் மனோகரன் அவர்களும் மறுக்கிறார், பார்!

திருச்சியில் அக்டோபர் ஒன்பதாம் நாள் நண்பர் மனோகரன் அவர்கள், நிருபர்களுக்குப் பேட்டி அளித்துள்ளார். அந்த விவரம் அக்டோபர் பத்து தினமணி இதழில் வெளியாகியுள்ளது. அதில்,

சில தினங்களுக்கு முன்னர் மதுரை மாணவர்கள் மீது நடந்த தாக்குதலில் அ.இ.அ.தி.மு.க.வினர் சம்பந்தப் பட்டிருப்பதாக கருணாநிதி கூறிய புகாரை மனோகரன் மறுத்தார். சர்க்காரின் பெயரைக் கெடுப்பதற்காக, தி.மு.க.வினர்தான் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர் என்றார்.

உடன்பிறப்பே, மதுரை அதிகாரிகளின் அறிக்கைக்கும், அமைச்சர்கள் வெளியிட்டுள்ள தகவல்களுக்கும் முரண்பாடு இருக்கிறதா இல்லையா?

வெளியாரை, கல்லூரி காம்பவுண்டுக்குள்ளேயே அனுமதிக்கவில்லை என்கிறார்கள் கலெக்டரும், போலீஸ் சூப்பிரண்டும்!

என்.சி.சி. ஆயுதக் கிடங்கை முகமூடியணிந்த நால்வர் உடைத்தனர் என்கிறார் கல்வி அமைச்சர்! அதுமட்டுமல்ல, கல்லூரிக்குள்ளிருந்த வெளியாரை போலீசார் கைது செய்ததாகவும் கல்வி அமைச்சர் கூறுகிறார்.

நிதி அமைச்சரோ, வெளியார் சென்று தாக்கியது உண்மை! ஆனால், அவர்கள் அ.தி.மு.க.வினர் அல்ல! தி.மு.க.வினர் என்கிறார்!

யாராகவாவது இருக்கட்டும், வெளியாரை உள்ளே அனுமதிக்கவில்லையென்று சத்தியம் செய்து அறிக்கைவிட்ட மதுரை அதிகாரிகள் இந்த முரண்பாட்டுக்குத் தருகிற விளக்கம் என்ன?

அதிகாரிகள் சொல்வது உண்மையா?

அல்லது

அமைச்சர்கள் சொல்வது உண்மையா?

அரங்கநாயகம் அறிவித்த அந்த முகமூடி மனிதன் எங்கே போனான்?

கைது செய்யப்பட்ட அந்த வெளியார் நால்வரும் யார்?

அவர்கள் பெயர் என்ன?

கல்லூரிக்குள்ளே வெளியார் நால்வர் கைது செய்யப் பட்டிருக்கும்போது யாருமே வெளியார் உள்ளே அனுமதிக் கப்படவே இல்லையென்று பொறுப்புள்ள அதிகாரிகள் பொய் சொல்லலாமா?

இதிலே உண்மை தெரியவேண்டுமானால்,

கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்திற்கு, பாளையங்கோட்டை, அண்ணாமலை நகர் சம்பவங்களுக்குக் கழக ஆட்சி நீதி விசாரணை வைத்ததுபோல, இந்த ஆட்சியும் நீதி விசாரணை வைக்கலாம் அல்லவா?

அமைச்சர்களும், அதிகாரிகளும் ஒருவரையொருவர் மறுத்து அறிக்கை விடுகிற இந்த அலங்கோலத்திற்கு அந்த நீதி விசாரணை முற்றுப்புள்ளி வைக்குமல்லவா?

முதல்வர் எம்.ஜி.ஆர். இந்த முரண்பாட்டைக் கவனிப்பாரா?

அல்லது இந்த ஆட்சியில் இது சகஜம், என்று வாய்மூடி மௌனியாக இருந்து விடுவாரா?

அன்புள்ள,

மு. க.

(11-10-1977)

# 485. எதிர்பார்க்கவுமில்லை! ஏமாற்றமும் இல்லை!

**உடன்பிறப்பே,**

தமிழ்நாட்டில் உள்ள அ.தி.மு.க. அரசுக்கும், மத்தியில் உள்ள ஜனதா அரசுக்கும் இடையே மோதல் உருவாக வேண்டுமென்று தி.மு.க. தலைவர் கருணாநிதி விரும்புகிறார். அவர் அதில் ஏமாற்றமடைவார் என்று திருச்சி பொதுக் கூட்டத்தில் பேசிய நிதி மந்திரி மனோகரன் சொன்னார்.

**(தினமணி, அக். 11)**

கோப்புகளைப் பார்க்கத் தயாரா? டேப்புகளைக் கேட்கத் தயாரா? என்று அறைகூவல் விடுத்துப் பேசி, அதற்குரிய பதிலை நாம் அளித்துத் தயார் எனக் கூறி நாளும், இடமும் குறிப்பிடுக எனக் கோரியதும் ஆமை போல அடங்கிக் கொண்டாரல்லவா? அதே பாணியில் தான் திருச்சியிலும் பேசியிருக்கிறார்.

எதையாவது இட்டுக் கட்டிச் சொல்வது - அது, பலித்த வரையில் பலிக்கட்டும் என்று எதிர்பார்ப்பது நண்பர் மனோகரன் கையாண்டு வருகிற முறையாகும்.

அ.தி.மு.க. அரசுக்கும், ஜனதா அரசுக்கும் மோதுதல் ஏற்பட வேண்டுமென்பதில் எனக்கோ, தி.மு.கழகத்திற்கோ அணுவளவு அக்கறையுமில்லை, அதைப் பற்றி நினைக்கவும் இல்லை என்பதை மனோகரன் அவர்களுக்குத் தெளிவாக்குகிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

தாசி என்பதற்கு வடநாட்டில் வேலைக்காரி, அடிமை, என்ற பொருள்கள்தான் என்றும், தமிழ்நாட்டில் அதற்குக் கொள்ளப்படுகிற பொருள் வடக்கே கிடையாது என்றும், அந்தக் கருத்தில்தான் ஆங்கிலத்திற்குத் தமிழும், மற்ற

இந்திய மொழிகளும் தாசிமொழிகளாக இருக்கின்றன என்றும் ராஜ்நாராயணன் பேசினார் என விளக்கம் தரப்பட்டு, ராஜ்நாராயணனின் பேச்சின் நோக்கம் ஆங்கில எதிர்ப்பே தவிர, தமிழ் போன்ற இந்திய மொழிகளை இழிவுபடுத்துவது அல்ல என்றும் கூறிய பிறகும், அ.தி.மு.க. மேடைகளில் மத்திய அமைச்சர் ராஜ்நாராயணனைப் பற்றித் தரக்குறைவாகப் பேசி, அவை ஏடுகளிலும் வெளிவருகின்றனவே! அது ஜனதா அரசுடன் அ.தி.மு.க. அரசு, மோதிக் கொள்வதாக ஆகாதா? அல்லது ஜனதா-அ.தி.மு.க. மோதுதலை ஏற்படுத்தாதா?

இந்திரா காந்தி அம்மையார் கைது செய்யப்பட்டதை யொட்டி காங்கிரசார் நடத்திய கிளர்ச்சிகளில் அ.தி.மு.க.வினரும் இணைந்திருந்தனர் என்று ஜனதா கட்சி, குற்றம் சாட்டியிருக்கிறதே? அது ஜனதாவுக்கும், அ.தி.மு.க.வுக்கும் மோதுதலை ஏற்படுத்த, வழி வகுக்காதா?

இந்திரா காந்தி கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் வகையில், இந்திரா விடுதலை என்ற செய்தியை மகிழ்ச்சிகரமாக வண்ண எழுத்துகளில் அ.தி.மு.க. ஏடுகள் வெளியிட்டுத் தங்களின் உணர்வைக் காட்டிக் கொண்டனவே, அவை - ஜனதா - அ.தி.மு.க. மோதுதலுக்கு வித்திடக்கூடியவை அல்லவா?

அ.தி.மு.க.வுக்கு மத்திய அரசுடன் மோதுதல் ஏற்பட வேண்டுமென்று கருணாநிதி விரும்புகிறார் என்பதைப் போலத்தான், மாணவர்களை கருணாநிதி தூண்டி விடுகிறார் என்பதுமாகும்!

ஏதோ ஒரு பிரச்சினைக்காக மதுரையில் நடைபெற்ற மாணவர் ஊர்வலத்தில் போலீசாரும், அ.தி.மு.க.வினரும் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு, கல்லூரி காம்பவுண்டுக்குள் சென்று மாணவர்களைக் கொடுமையாகத் தாக்கி, அதனால் ஏற்பட்ட விளைவுகளைக் கருணாநிதியின் தலையில் போடுவது என்றால் என்ன நியாயம்?

மதுரையில் என்ன நடந்தது என்பதை அறிய எல்லாக் கட்சிகளுமே நீதிவிசாரணை கோரியுள்ளன. ஜனதா கட்சி, ஒரு குழுவையே அமைத்து உண்மை நிலவரங்களை அறிய மதுரைக்கே அனுப்புகிறது. மனோகரனோ என்மீதும், கழகத்தின்மீதும் முட்டிக்

கொள்கிறார். அவரது திருச்சிப் பேச்சில் மாணவர்களையும், தொழிலாளர்களையும் நான் தூண்டி விடுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார். சென்னையருகே பாடியில் நடைபெறும் கிளர்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த தோழர் தங்கமணியும், மார்க்சிஸ்ட் கட்சித் தோழர் அரிபட்டும், காங்கிரஸ் தோழர் ரங்கராஜன் குமாரமங்கலம், ஜனதா ராமகிருஷ்ணன் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர் என்று செய்தி வருகிறது. இந்தக் கிளர்ச்சியில் முன்னணியில் இருப்பவர் தோழர் சிந்தன் - மார்க்சிஸ்டு கட்சிக்காரர் - அதாவது அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சி!

சுமார் 130 தொழிலாளர்களைப் பழி வாங்குகிற போக்கினைத் தி.மு.கழகமும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அந்தப் பிரச்சினையில் அ.தி.மு.க. அரசு அக்கறை காட்டாதது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. அந்த நிலையில் தி.மு.க.வுக்கு மாற்றமில்லை. ஆனால், அங்கு கிளர்ச்சியில் முன்நிற்பது தி.மு.க. அல்ல! ஆம், இதுவரையில் தி.மு.க. அந்தக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்குகிற கட்சிகளில் ஒன்றாக இல்லை. அப்படியிருந்தும், நிதி அமைச்சர் மனோகரன், தொழிலாளர்களைக் கருணாநிதிதான் தூண்டி விடுகிறார் என்கிறார்.

இதனை அர்த்தமற்ற பேச்சு என்பதா? அல்லது அபத்தமான பேச்சு என்பதா?

மாணவர்களையோ, தொழிலாளர்களையோ, தி.மு.க. தூண்டிவிடாது! ஆனால் அவர்கள் வன்முறை, அடக்கு முறைகளுக்கோ, கருங்காலித்தனத்திற்கோ ஆளாக்கப்பட்டால் அப்போது தி.மு.க. பார்த்துக் கொண்டிருக்காது.

கட்சி வேறுபாடுகளை மறந்து ஒரே அணியில் நின்று அவர்களுக்காகக் குரல் கொடுக்கும்.

மத்திய அரசுக்கும் மாநில அ.தி.மு.க. அரசுக்கும் மோதுதல் ஏற்படாது. அப்படி நினைத்தால் கருணாநிதி ஏமாறுவார்!

என்று மனோகரன் கூறியிருக்கவே தேவையில்லை!

மத்தியில் உள்ளவர்கள், கொஞ்சம் கோபமாக இருக்கிறார்கள் என்று வதந்தி பரவினாலே ஓடோடிச் சென்று சரணம் அடைவதில் சமர்த்தர்களான அ.தி.மு.க.

அமைச்சர்கள் இருக்கும்போது, அப்படியொரு மோதுதல் ஏற்படுமென்று நான் எதிர்பார்த்தால் தானே ஏமாறுவதற்கு?

மொரார்ஜி, பிரதமரானவுடனேயே பகிரங்கமாக அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அறிக்கை விட்டவராயிற்றே, இன்றுள்ள முதல்வர் எம்.ஜி.ஆர்.!

அப்படிப்பட்ட வீராதிவீரர்களுக்கு மத்திய அரசுடன் எந்த ஒரு முக்கியப் பிரச்சினையிலும் மோதிக் கொள்ளக்கூடிய தெம்பும், திராணியும் வருமென்று நான் எதிர்பார்க்கவுமில்லை, எனவே எனக்கு ஏமாற்றமும் இல்லை!

அன்புள்ள,

மு. க.

(12-10-1977)

# 486. தொடர்ந்து பேசியிருந்தால்...

**உடன்பிறப்பே,**

“கருணாநிதி, முதல்வராக இருந்தபோது அடிக்கடி நிருபர்களுக்குப் பேட்டியளிப்பார். இப்போது எதை யாவது எழுதிக் கொண்டிருக்கிறார். எனக்குப் பொறுப்பு இருக்கிறது. அவசரப்பட்டு நான் பேசவும் மாட்டேன். எழுதவும் மாட்டேன். மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதிலேயே என் கவனம் உள்ளது.”

அருப்புக்கோட்டைத் தொகுதியிலும், முகவை மாவட்டத்திலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் சிந்திய திருவாய்மொழிதான் இது!

மீண்டும் ஒருமுறை அவரது உரையின் அந்த மாணிக்க வாசகங்களை ஒருமுறை படித்துக் கொள்க!

அந்த வாசகங்களைத் தொடர்ந்து எம்.ஜி.ராமச்சந்திரன் மேலும் பேசியிருந்தால் என்ன பேசியிருப்பார் என்பதைக் கற்பனை செய்து பார்த்தேன். அந்தக் கற்பனை வருமாறு!

“கருணாநிதி, முதல்வராக இருந்தபோது அடிக்கடி நிருபர்களை சந்தித்துப் பேட்டி கொடுப்பார். நிருபர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்வது என்பது சாதாரண விஷயமல்ல. அதற்குத் திறமை வேண்டும். முன்னுக்குப்பின் முரணாக “தத்துப்பித்து” என்று எதையும் உளறிவிடக் கூடாது. இந்த வம்பே வேண்டாமென்றுதான் நிருபர்களைச் சந்திக்கிற வேலையை நான் வைத்துக் கொள்வதேயில்லை. அப்படியே நிருபர்களைச் சந்திப்பதாக இருந்தாலும் எதிர்க்கட்சி ஏடுகளின் நிருபர்களை நான் சந்திக்கவே மாட்டேன். சில நிருபர்கள் மிகவும் பொல்லாதவர்கள். ‘‘ஊழலை ஒழிக்கப் போவதாகச் சொல்லுகிறீர்களே! யார் யார் மீது ஊழல் குற்றம் சாட்டினீர்களோ அவர்களையெல்லாம்

முக்கால்வாசிப் பேரை உமது கட்சியில் சேர்த்துக் கொண்டீர்களே" என்று ஒரு நிருபர் கேட்டுத் தொலைப்பார். அதற்கு என்ன பதில் சொல்லித் தொலைப்பது? காவேரிப் பிரச்சினைக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசப் போவதில்லை என்று அறிவித்தீர்கள்- ஆனால் ஊராட்சி ஒன்றியத் தேர்தல் பற்றி விவாதிக்க அனைத்துக் கட்சியினரை அழைத்துப் பேசியிருக்கிறீர்களே! என்று ஒரு நிருபர் கேட்டால் நான் "திரு திரு" என்று விழிக்க வேண்டுமே தவிர, பதில் கூற முடியுமா? எனவேதான் நிருபர்கள் பேட்டியைக் கூடுமான வரையில் தவிர்த்துக்கொண்டு வருகிறேன். ஒரு விஷமக்கார நிருபர் கேட்டாலும் கேட்பார்! உங்கள் வருமான வரி பாக்கி எவ்வளவு என்று! இன்னொருவர், வரி பாக்கியா? வரி ஏய்ப்பா? என்று வினவுவார்! இதையெல்லாம் உத்தேசித்துத்தான் நிருபர்கள் கால்கடுக்கக் காத்திருந்தாலும், அவர்களை நான் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சில முக்கியமான பத்திரிகை முதலாளிகள், நிர்வாகிகள், ஆசிரியர்கள் அவர்களை எப்படிச் சரிக்கட்ட வேண்டுமோ, அப்படிச் சரிக்கட்டியாகிவிட்டது.

நிருபர்களின் பேட்டி எனக்கு எதற்காக? எனவே நிருபர்கள் என்னைப் பேட்டி கண்டு விளக்கங்கள் பெற விரும்புவது முயற்கொம்பேயாகும்! அத்திப் பூவேயாகும்! கருணாநிதி, எதையாவது எழுதிக் கொண்டிருக்கிறார் என்று நான் கூறுவதற்குக் காரணம் புரிகிறதா? அவர் எழுதுவதற்கு நேரடியான பதில் என்னால் அளிக்க முடியவில்லை என்று நான் சொல்ல முடியுமா? அதனால்தான் "எதையாவது எழுதுகிறார்" என்று அலட்சியப்படுத்துவதுபோல எடுத்தெறிந்து பேசுகிறேன். அவர் எழுதியதை மனப்பாடம் செய்ய முடியாமல் நான் கஷ்டப்பட்ட காலமெல்லாம் உண்டு. அவர் எழுதியதை அதே உயிரோட்டத்தோடு பேச முடியாமல் நான் தவித்த நேரமெல்லாம் உண்டு. இப்போது கருணாநிதி எழுதுவதை "நையாண்டி" செய்கிற அவ்வளவு பெரிய இடத்தில் அல்லவா அமர்ந்திருக்கிறேன். அதனால், நான் இப்போது அவர் எழுத்தைப் பற்றி எவ்வளவு ஏளனம் வேண்டுமானாலும் செய்யலாம். மதுரை மாணவர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு நீதி விசாரணை வேண்டுமென்று எழுதுகிறார். இவருடைய ஆட்சிக் காலத்தில் கிளைவ் ஹாஸ்டல், பாளையங்கோட்டை, அண்ணாமலை

நகர் மாணவர் சம்பவங்களுக்கு நீதி விசாரணை வைத்தாரா? என்று ஒரு கேள்வி கேட்டேன், பொதுக் கூட்டத்தில்! அதை எல்லாப் பத்திரிகைகளும் நன்றாகப் போட்டிருக்கின்றன. ஆனால் ஒன்று, கருணாநிதி ஆட்சிக் காலத்தில், கிளைவ் ஹாஸ்டல், பாளையங்கோட்டை, அண்ணாமலை நகர் சம்பவங்களுக்கு நீதி விசாரணைகள் வைக்கப்பட்டன என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும், அதை மக்கள் மறந்துவிடுவார்கள் என்று எனக்குப் புரியாதா என்ன? எனக்குப் பொறுப்பு இருக்கிறது, அவசரப்பட்டு எதையும் பேசமாட்டேன் என்றதும், மக்கள் கைதட்டுகிறார்களே! இப்படிப்பட்ட ரசிகர்கள் இருக்கும்போது எனக்கு என்ன குறைவு?

தபால் ஆபீசுகளில் கடன் வழங்கும் பிரிவு செயல்படுத்தப்படும் என்று நான் பேசியதை அவசரப்பட்டுப் பேசியதாக யாரும் எடுத்துக் கொள்ளாதீர்கள். மத்திய அரசோடு கலந்து பேசிவிட்டுத்தான் அறிவித்தேன். அந்தப் பிரிவு ஏற்படவில்லை யென்பதற்காக நான் அவசரப்பட்டு பேசியதாக அர்த்தமில்லை.

முக்குலத்து மக்கள் மீதுள்ள குற்ற பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்வேன் என்று நான் பேசியது அவசரப்பட்டுப் பேசியதல்ல! தேசிய பார்வார்டு பிளாக் கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொண்டு, விபரமறிந்துதான் நிதானமாகப் பேசினேன். ஆனால், அந்தச் சட்டத்தை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே ரத்து செய்துவிட்டார்களாம்! அதை அப்போது அவசரப்பட்டு ரத்து செய்துவிட்டார்கள் என்றால் அதற்கு நானா பொறுப்பு? இதற்காகத்தான் நிருபர்கள் வாடையே வீசக்கூடாது என்கிறேன். ரத்து செய்த சட்டத்தை நீங்கள் எப்படி ரத்து செய்ய முடியும் என்று கேட்பார்கள். இதே கேள்வியை சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி என்னைப் பார்த்துக் கேட்டாரே! நான் பதில் சொன்னேனா? சொல்வேனா? மௌனமாக இருந்துவிட்டேன். எனக்கு அதிகமாகப் பேசப் பிடிக்காது.

மருத்துவக் கல்லூரி தேர்வில் எந்த ஊழலும் நடக்கவில்லை. அதை நிரூபிக்க விசாரணைக் கமிஷன் வைக்கத் தயார் என்று நான் பேசியதுகூட அவசரப்பட்டுப் பேசியது அல்ல! உடனே மேல்சபையில் வீராசாமி போன்றவர்கள் “விசாரணைக் கமிஷன் வைத்திடுங்கள்” என்று திடீரென்று, நான் சற்றும் எதிர்பாராத

விதத்தில் கேட்டுவிட்டார்களே, அதுதான் அவசரப்பட்டுக் கேட்ட கேள்வியாகும்! அதற்கும் நான் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்துவிட்டேன். கண்ணொளி முகாமில் நூறு இருநூறு பேர் என்று கண் அறுவை சிகிச்சை செய்வது சரியான திட்டமல்ல என்று நான் சட்டசபையில் அறிவித்ததுகூட அவசர அறிவிப்பு அல்ல! ஆனால் கடந்த வாரம் பண்ருட்டியில் சுமார் முன்னூறு பேருக்கு பழைய முறைப்படியே கண் அறுவை சிகிச்சை செய்து இலவசக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. சட்டசபையில் அப்படிச் சொன்னீர்களே, இப்போது இப்படி நடந்திருக்கிறதே என்று யாராவது கேட்டால், அந்தச் சிக்கலான கேள்விக்கெல்லாம் நான் அவசரப்பட்டுப் பதில் சொல்லப் போவதில்லை. பதில் கூற முடியாத சமயங்களில் மௌனமாக இருந்துவிட்டால் அதையும் ஒரு திறமை என்று பாராட்டி எழுதிடப் பத்திரிகைகள் சில இருக்கத்தானே செய்கின்றன.

நாங்கள்தான் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தையே கொண்டு வந்திருப்பதாக மக்கள் நம்பும்படி நான் பேசுவது பொறுப்பான பேச்சாகும். ஆனால் ஒன்று! நான் சொன்ன அந்தப் பொய்யை மறுப்பதுபோல அதே கூட்டத்தில் குடிநீர் வடிகால் வாரிய மானேஜிங் டைரக்டர் படித்த அறிக்கையை சில பத்திரிகைகள் வெளியிட்டிருக்க வேண்டியதில்லை. தமிழ்நாட்டில் 55,000 கிராமங்கள் உள்ளன என்றும், இவற்றில் சுமார் 15,000 கிராமங்களுக்குக் குடிநீர் வசதியில்லை என்றும் ஒரு உண்மையான அறிக்கையை டைரக்டர் படித்திருக்கத் தேவையில்லை. இதிலிருந்து காங்கிரஸ் ஆட்சியிலும், கழக ஆட்சியிலும் சுமார் 40,000 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி ஏற்பட்டிருக்கிறது என்றும் தெளிவாகி விடுகிறதல்லவா? அதுமட்டுமா? குடிநீர் வடிகால் வாரியமே, அந்தக் கருணாநிதி காலத்திலேதானே அமைக்கப்பட்டு பல குடிநீர்த் திட்டங்கள் நிறைவேறியுள்ளன. நான் பொறுப்போடு சில பொய்களைப் பரப்பிக் கொண்டு வரும்போது எதற்காக, அந்தக் கூட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் அறிக்கையைப் படிக்க வேண்டும், இதெல்லாம் எனக்குப் பொறுப்பு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாமல் செய்கிற காரியங்கள்! சத்தியமாகச் சொல்லுகிறேன்! நான் அவசரப்பட்டு எதையும் பேசமாட்டேன்! தேர்தல் நேரத்தில் மொரார்ஜியைப் பற்றி ஒரு பயங்கரமான

அவதூறுச் செய்தியை நாடு முழுதும் பரப்பி, தேர்தல் முடிந்ததும் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அறிக்கை விட்டேன்! அதெல்லாம் அவசரத்தின் விளைவு அல்ல! நான் எவ்வளவு பொறுப்புடையவன் என்பதற்கு உதாரணம்!"

உடன்பிறப்பே, அருப்புக்கோட்டை பிரசங்கத்தை முதல்வர் எம்.ஜி.ஆர். மேலும் தொடர்ந்திருந்தால் அந்தப் "பேருரை" இப்படித்தானே இருந்திருக்கும்! இல்லையா?

அன்புள்ள,

மு.க.

(13-10-1977)

# 487. அய்.ஜி.ஸ்டிரேசியும் அரசியலும்!

**உடன்பிறப்பே,**

நமது மாநிலத்துக் காவல்துறை தலைமை அதிகாரி அதாவது அய்.ஜி.ஸ்டிரேசி அவர்கள், ஒருமாத காலத்திற்குள் இரண்டாவது முறையாக அரசியல் பேசியிருக்கிறார். சுருக்கமாகச் சொன்னால் அ.தி.மு.க. உறுப்பினராகி விட்டவரைப் போல கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்.

குறிப்பிட்ட சில சம்பவங்களைப் பற்றியோ, அல்லது மாநிலத்தின் பொதுவான சட்டம், ஒழுங்கு, அமைதி பற்றியோ காவல்துறையின் தலைமை அதிகாரி நிருபர்களிடம் கருத்து தெரிவிப்பது தவறல்ல. ஆனால் அவர், அண்மைக் காலத்தில் இருமுறை நடத்திய நிருபர்கள் கூட்டத்தில் அ.தி.மு.க. அரசுக்குப் புகழ்மாலை சூட்டியிருக்கிறார். அதைப் பற்றிக்கூட நான் கவலைப் படவில்லை. அது சரியா? தவறா? என்ற ஆராய்ச்சிக்குக்கூட நான் செல்ல விரும்பவில்லை.

ஆளுங்கட்சிக்குச் சில அதிகாரிகள் புகழாரம் தொடுத்துச் சூட்டுவது என்பது அவர்களின் மன இயல்புகளைப் பொறுத்தது. ஆனால், உண்மைகளை மறைத்துவிட்டு, ஆட்சிக்குத் துதிபாடும் பணியில் தன்னை ஒப்படைத்துக் கொள்வது என்பது ஸ்டிரேசியைப் போன்ற "நேர்மையானவர்" என்று பெயர் எடுத்த ஒரு அதிகாரிக்கு அழகல்ல! அவர் வகிக்கும் பதவிக்கு ஏற்றதுமல்ல!

"நாடு சுதந்திரமடைந்த பிறகு, தமிழ்நாடு போலீஸ் இலாகா, தற்போது முதல் தடவையாக அதிகாரத்திலுள்ள கட்சிக்காரர்களின் எவ்விதத் தலையீடுமின்றித் தன் கடமைகளைச் செய்ய முடிகிறது."

(அய்.ஜி.ஸ்டிரேசி, நெல்லை நிருபர் கூட்டம் - தினமணி 13.10.77)

இது தலைமைக் காவல்துறை அதிகாரி அளித்துள்ள கருத்தின் முதற்பகுதியாகும்.

பிரகாசம், ஓமந்தூரார், இராஜாஜி, காமராஜர், பக்தவத்சலம், அண்ணா ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்த காலத்தில் எல்லாம்கூட, ஆளுங்கட்சியினர் போலீஸ் இலாகாவில் தலை யிட்டனர் என்பதும், இப்போது நடக்கும் "புத்தபிரான்" ஆட்சியிலே தான் தலையிடவில்லை என்பதும் திரு.ஸ்டிரேசியின் கருத்தாகும்.

பழைய கோபதாபங்கள் என் மீது இருக்குமேயானால், "தி.மு.க. அரசில், போலீஸ் இலாகாவில் கட்சிக்காரர்கள் தலையிட்டனர். இப்போது எங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் தலையிடுவதில்லை" என்று அவர் கூறியிருக்கலாம்.

அதைவிடுத்து, இராஜாஜி, காமராஜர், அண்ணா, ஓமந்தூரார், பிரகாசம், பக்தவத்சலம் ஆகியோர் காலத்து ஆட்சியையும் அறைகூவலுக்கு ஏன் இழுத்தாரோ? தெரியவில்லை.!

அதோடு விட்டாரா? இந்த ஆட்சியில் தலையீடுகள் இல்லை என்று கூறியவர்,

"தமிழ்நாட்டில் முன்பு இருந்த அரசுகளில் அத்தகைய தலையீடுகள் இருந்தன என்றும் ஸ்டிரேசி குறிப்பிட்டார்."

என்று அடுத்த பகுதிச் செய்தியையும் தினமணி வெளி யிட்டிருக்கிறது.

நாள்தோறும் நமக்குச் செய்திகள் வந்துகொண்டேயிருக் கின்றன. அ.தி.மு.க.வினர், போலீஸ் ஸ்டேஷனிலேயே உட்கார்ந்து கொண்டு அவனைப்பிடி, இவனைப்பிடி என்று ஆணை பிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று!

திருச்சி போன்ற இடங்களிலும், சென்னையில் சில பகுதிகளிலும் கள்ளச்சாராய வேட்டைக்குச் சென்ற போலீசாரின் கடமையில் அ.தி.மு.க.வினர் குறுக்கிட்டார்கள் என்று புகார் வந்திருக்கிறது.

சாராயம் வைத்திருந்தோரையும், காய்ச்சுவோரையும் பிடித்த பிறகு "அரசியல்வாதிகள்" தலையீட்டால் குடித்ததாக வழக்கு போடப்பட்டதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

மதுரை மாணவர்களைத் தாக்கியதில் போலீசாரின் ஒத்துழைப்புடன் அ.தி.மு.க.வினர் பங்கு பெற்றனர் என்பது, மதுரை மாவட்டம் முழுவதும் பரவியுள்ள செய்தியாகும்.

அ.தி.மு.க.வினர் தூண்டுதலின்பேரிலும், பொய்ப் புகார்கள் கொடுத்ததின் பேரிலும் இந்த மூன்று மாத காலத்தில் தி.மு.கழகத் தினர் மீது மட்டும் ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக் கின்றன என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

திரு.ஸ்டிரேசி அறிந்துகொள்ள விரும்புவாரேயானால் - அறிந்துகொண்டு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பாரேயானால், அந்த விவரங்களைச் சேகரித்துத் தி.மு.கழகத் தலைமைநிலையத்தின் சார்பாக அவருக்கு அனுப்பி வைக்கத் தயாராகயிருக்கிறோம்.

இந்திரா காந்தி கைது செய்யப்பட்டபோது காங்கிரசார் நடத்திய கிளர்ச்சிகளில் அ.தி.மு.க. கலந்துகொண்டது என்று ஜனதா கட்சித் தலைவர்கள், மத்திய அரசுக்குப் புகார் செய்துள்ளார்களே, அதை ஸ்டிரேசி மறுக்கிறாரா?

கடைகளை அடைக்கச் சொல்லி பல இடங்களில் பெரிய போலீஸ் அதிகாரிகளே கடைக்காரர்களை மிரட்டியிருக்கிறார்களே! அந்த விவரங்கள் தந்தால், திரு.ஸ்டிரேசி அவர்கள் அவற்றை விசாரிக்கத் தயாராக இருக்கிறாரா? அல்லது அந்த உத்திரவே, மேலிடத்திலிருந்து வாயளவில் பிறப்பிக்கப்பட்டது என்பது உண்மையானால் பிறகு எப்படி அவற்றை விசாரிக்க முடியும்?

திரு.ஸ்டிரேசிக்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் குறிப்பிடு கிறேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல!

தஞ்சாவூரில் சட்டமன்றத் தேர்தலின்போது அருள் நமசிவாயம் என்ற வழக்கறிஞர், தனது வீட்டில் என் பேச்சு பதிவு செய்யப்பட்ட ஒரு டேப்ரிக்கார்டரைப் போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் வீட்டுக்குள் அ.தி.மு.க.வினர் படையெடுத்து டேப்ரிக்கார்டர் போடுவதை நிறுத்தச் சொல்லி வன்முறை ஆட்டம் ஆடினர். அவரும் டேப்ரிக்கார்டரை நிறுத்திவிட்டார்.

பிறகு சில நாட்கள் கழித்து அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற் கான வெற்றி ஊர்வலம் நடந்தபோது, ஊர்வலத்தில் வந்த அ.தி.மு.க.வினர் அந்த வழக்கறிஞர் வீட்டில் புகுந்து கலகம் விளைத்து, பொருள்களுக்குச் சேதம் உண்டாக்கி, சில பொருட் களைக் களவாடியும் சென்றுவிட்டனர். அந்த வழக்கறிஞர்

அதுபற்றி போலீசில் புகார் கொடுத்து மூன்று மாதம் ஆகிறது! போலீசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அ.தி.மு.க.வினர் தலையீட்டால், அந்தப் புகாரைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டனர்.

இப்படிப் பல ஆதாரபூர்வமான செய்திகள் இருக்கின்றன. உரிய நேரத்தில், உரிய இடத்தில், வெளியிடப்படும்.

ஒரு லேடி டாக்டர் கையெழுத்தைப் "போர்ஜரி" செய்தார் ஒரு அ.தி.மு.க. எம்.எல்.சி. என்று செய்தி வந்ததே? அது யார் தலையீட்டால் ஊறுகாய்ப் பானைக்குப் போய்விட்டது என்பதை திரு.ஸ்டிரேசி அறிவித்தால் நல்லது.

"கிணத்துக்கடவு - அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கந்தசாமி அவர்களின் புதல்வரையும், மற்றும் சிலரையும் ஒரு வழக்கின் காரணமாகப் போலீசார் கைது செய்து காவலில் வைக்கின்றனர். அதைக் கேள்வியுற்ற சட்டமன்ற உறுப்பினர் கந்தசாமி - (அதாவது அ.தி.மு.க. எம்.எல்.ஏ.) அவர்கள், எட்டு வீரர்களுடன் காவல் நிலையத்தில் நுழைந்து அங்கிருந்த அதிகாரிகளை மிரட்டி, காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களைப் பலவந்தமாக மீட்டுக் கொண்டு போய்விட்டனர்."

திரு.ஸ்டிரேசி அவர்கள், புதிதாகத் தயாரித்துள்ள "போலீஸ் அகராதி"யில் இந்தச் சம்பவம் "ஆளுங்கட்சியின் தலையீடு" என்ற பொருளைத் தராது என்று கூறுகிறார் போலும்!

இவற்றையெல்லாம் மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு திரு.ஸ்டிரேசி அவர்கள் புதிய ஆளுங்கட்சிக்குப் பாயிரம் பாடுவதும், முன்பிருந்த ஆளுங்கட்சிகளைக் குறை கூறுவதும் முறையானதல்ல!

அவரது இலாகாவிலேயே பல பிரச்சினைகள் குமுறிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். "நான் பெரிய இடத்தில் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே, வால்கள், தலைகளை மிரட்டுவதாகச் செய்திகள் வருகின்றன.

இடம் மாற்றல், இழிவுபடுத்தல், பழி வாங்குதல் போன்ற காரியங்கள் தங்குதடையின்றி நடப்பதாகவும் தகவல்கள்

வெடித்துக் கொண்டிருக்கின்றன. ஆதாரங்களின்றி எதையும் நான் குறிப்பிடவில்லை. அவற்றையெல்லாம் நடுநிலையோடு கவனித்து, மாநிலத்தில் எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவாக இருந்து முன்பு பதவியிலிருந்த "அருள்" அவர்களைப் போன்ற அதிகாரிகளை முன்மாதிரியாகக் கொண்டு, திரு.ஸ்டிரேசி அவர்கள் அரசியலில் தலையிடாமல் இருப்பாரேயானால், ஏற்கனவே "நேர்மையாளர்" என்று பெயர் பெற்ற அவர், மேலும் பெருமை பெற வாய்ப்பு உண்டு!

அன்புள்ள,

மு.க.

(14-10-1977)

# 488. காவேரிப் பிரச்சினை- கட்சி வேறுபாடுகளை மறப்போம்!

**உடன்பிறப்பே,**

கர்நாடக அரசு, மேலும் ஒரு அதிர்ச்சியான செய்தியைத் தமிழ்நாட்டு மக்களின் தலையில் வெடிகுண்டைப்போல் வீசி யிருக்கிறது. ஏற்கனவே 1924ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி தாங்கள் நடந்துகொள்ள முடியாது என்று ஏறத்தாழ பத்தாண்டு காலத்திற்கு முன்பிருந்தே கர்நாடக அரசு, மாறுபாடான கருத்துகளை வெளியிட்டு வந்திருக்கிறது. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி, 1974ஆம் ஆண்டில் ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. அப்படிப் புதுப்பிப்பது எந்த அடிப்படையில் அமைய வேண்டும் என்பது குறித்தும் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் தெளிவாகக் கூறுகிறது.

1. 1974ஆம் ஆண்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும் போது ஏற்கனவே காவிரிப் பாசனத்தை அனுபவித்து வரும் பழைய ஆயக்கட்டுதாரர்களின் உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது.

2. 1974ஆம் ஆண்டு ஒப்பந்தம், காவேரியில் உபரியாக வரக்கூடிய தண்ணீரை எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்ற அடிப்படையிலேயே இருந்திடும்.

3. கர்நாடக அரசு, புதிய அணைகளைக் கட்டுவதாக இருந்தால் அதற்கான விதிமுறைகள் (Rules and Regulations) தமிழக அரசோடு விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொண்ட பின்னரே, அணைகளைக் கட்டுவதும், அணைகளில் தண்ணீரைத் தேக்கு வதும் அனுமதிக்கப்பட வேண்டும்.

இந்த மூன்று முக்கிய விஷயங்களை உள்ளடக்கியதாகத் தான் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் உருவாகியிருக்கிறது.

ஆனால் 1965ஆம் ஆண்டு வாக்கில் கபினியும், 1967 - 68ஆம் ஆண்டு வாக்கில் ஹேமாவதியும் கட்டுகின்ற பணிகளை கர்நாடக அரசு மேற்கொண்டது.

தமிழக அரசு, அந்தத் திட்டங்கள் பற்றிய மறுப்புக் குறிப்பை, கர்நாடக அரசுக்கும் - மத்திய அரசுக்கும் தெரிவித்தது.

1968ஆம் ஆண்டு முதல் மத்திய அமைச்சர் கே.எல்.ராவ் முன்னிலையில் தமிழக அரசின் சார்பிலும், கர்நாடக அரசின் சார்பிலும் அமைச்சர்களும், அதிகாரிகளும் கலந்து பேசி, ஒரு நல்ல முடிவு ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் வீணாயின. கர்நாடக அரசு, "1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மதிக்க மாட்டேன்" என்று காட்டிய பிடிவாதம், தமிழ்நாட்டுக்கான எதிர்காலத்தை இருண்ட காலமாக்கி விடும் என்று தமிழகத்தின் சார்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு மூன்று கட்டங்களில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த போது, காவேரியில் தனக்குள்ள உரிமையை நிலைநாட்டுகிற வகையில் கேரள அரசும், அந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்ள அழைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியது. மத்திய அரசு அமைச்சர் முன்னிலையில் தமிழகம், கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநில அரசுகளின் அமைச்சர்களும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்தனர்.

தமிழகத்தின் பரம்பரை பாத்தியதையான பழைய ஆயக்கட்டுக்கள் பாதிக்கப்படாத நிலையில், எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் தமிழக அரசு தயாராகவே இருந்தது!

இந்தியா ஒரு நாடு! அதில் தமிழகம் ஒரு பகுதி! இங்கே ஏற்கனவே இருக்கிற பாசனப் பகுதிகளை அழித்துவிட்டு, கர்நாடகத்தில் புதிய பாசனப் பகுதிகளை உருவாக்குவது எப்படி நியாயமாகும் என்பதே தமிழ்நாட்டின் கேள்வி!

கர்நாடகத்தில் புதிய பாசனங்களே ஏற்படாமல் அது பாழ்பட்ட பாலை நிலமாக ஆக வேண்டுமென்பது நமது கருத்தல்ல! ஒப்பந்தப்படி உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி தமிழக ஆயக்கட்டுக்கள் பாதிக்கப்படாமல் கர்நாடகம், தன்னை வளப்படுத்திக்கொள்வதில் நமக்கு எவ்வித மறுப்பும் கிடையாது.

பேச்சுவார்த்தைகளில் பலன் கிடைக்காது என்ற நிலையில், இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று,

அரசின் சார்பிலும், தஞ்சை விவசாயிகளின் சார்பிலும் உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

காவேரிப் பிரச்சினையில் தமிழக அரசின் ஒவ்வொரு நடவடிக்கையும், தமிழ்நாட்டு அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டே, அதன் வழி நின்று அரசின் சார்பில் எடுக்கப்பட்டவைகளாகும்.

வழக்குகளை வலியுறுத்தாது விடுத்தால் மீண்டும் பேச்சு வார்த்தை மூலம் நல்ல முடிவு காண முடியுமென்று பிரதமர் இந்திராவும், மத்திய அமைச்சரும் உறுதியளித்ததையும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விவாதித்து, அந்த முடிவின்படி வழக்குகளை வலியுறுத்தாது விடுத்தோம்.

1972ஆம் ஆண்டு நடந்த பேச்சு வார்த்தையின்படி, ஆய்வுக்குழுக்களின் அறிக்கைகள் வரப்பெற்று இறுதி உடன்பாடு ஏற்படுகிற வரையில், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்கள் ஆயக்கட்டுக்களை புதிதாக ஏற்படுத்தக் கூடாது என்று முடிவெடுத்து மூன்று மாநில முதலமைச்சர்களும் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டிருக்கிறோம்.

ஆனால், அந்த இடைக்கால முடிவுக்கு மாறாக, கர்நாடகம் தண்ணீரைத் தேக்கிக் கொண்டு, ஆண்டுதோறும் அடம்பிடித்து வருகிற நிலையைக் காணுகிறோம்.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படியும்-1972-ல் ஏற்பட்ட இடைக்கால ஒப்புதல் முடிவுப்படியும் நமது உரிமைகளை முன்வைத்து தமிழக அரசு வாதாடிக் கொண்டிருந்தது, கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது!

ஆனால், இன்றைய அரசு இந்த உயிர்ப்பிரச்சினை பற்றி அனைத்துக் கட்சியினரின் கருத்தைக் கேட்கவோ, விவாதிக்கவோ விரும்பவில்லை. உரிமையை விட்டுக் கொடுத்து பண்டமாற்று முறையில் தண்ணீரைப் பெற கர்நாடகம் நோக்கி விரைகிறது.

அங்குள்ள அணையில், தேக்கி வைக்க முடியாத நிலையில், கர்நாடகம் தண்ணீரைத் திறக்கிறதேயல்லாமல் வேறில்லை என்பதும் தெளிவான உண்மையாகும்!

இடைக்கால உடன்பாட்டின்படி, எந்த மாநிலமும் (தமிழகம், கர்நாடகம், கேரளம்) புதிய ஆயக்கட்டுக்களை ஏற்படுத்தக் கூடாது

என்றால், கர்நாடகம் தனது புதிய அணைகளில் தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?

தமிழகத்தின் பழைய ஆயக்கட்டுக்களுக்கு உரிமையுடைய தண்ணீரைத் தர தயக்கம் காட்டுவது அல்லது மறுப்பது ஏன்?

இந்த அடிப்படையில் உரிமைக்குரல் எழுப்புவதற்குப் பதிலாக - பண்டமாற்று முறை, தமிழ்நாட்டின் எதிர்காலத்தைப் பாழாக்கி விடும்.

நான் தொடக்கத்தில் குறிப்பிட்டதுபோல், கர்நாடகம் புதிய வெடிகுண்டு ஒன்றை வீசியிருக்கிறது.

கிருஷ்ணராஜ சாகரிலிருந்து வருண கால்வாய்த் திட்டமென்ற ஒரு திட்டத்தைத் தொடங்குவதே அந்தப் பயங்கர குண்டு வீச்சாகும்!

அந்தக் கால்வாய்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டால் தமிழ் நாட்டுக்கு குறைந்தபட்சம் 45 டி.எம்.சி. தண்ணீர் பாதிக்கப்படும் என்று ஓய்வுபெற்ற தலைமைப் பாசனப் பொறியாளர் திரு.நமசிவாயம் அவர்கள் அபாயச் சங்கினை ஒலித்துள்ளார்.

வருண கால்வாய்த் திட்டத்திற்கு கர்நாடக அரசு அங்கீகாரம் அளித்து விட்டதாக செய்தி வந்து விட்டது.

தொடர்ந்து காவேரிப் பிரச்சினையில் தமிழ்நாட்டு நலன்கள் ஆபத்திற்கு உள்ளாவதை இனியும் பொறுத்துக் கொண்டிருப்பது முறையல்ல!

இன்றைய தமிழக அரசு, அனைத்துக் கட்சியினரையும் கலந்து பேசி முடிவுகளை மேற்கொள்ள முன்வரா விட்டால், ஏனைய அனைத்துக் கட்சித் தலைவர்களாவது கட்சி வேறுபாடுகளை மறந்து, இந்தப் பிரச்சினையில் ஒன்றுபட்டு விவாதித்து முடிவெடுக்க விரைவான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

(15-10-1977)

# 489. அன்னை மடியில் இடம் உண்டு! அண்ணன் தந்த இதயம் உண்டு!

**உடன்பிறப்பே,**

கழகத்திலிருந்து உள்ளூர்க் கோபதாபங்களால் விலகியவர்கள் சிலருண்டு - என் மீதோ, கொள்கை மீதோ உள்ளூரக் கோபத்தால் விலகியவர்கள் அல்ல அவர்கள்.

என்று நான், நம் கழகத்திலிருந்து விலகிய சிலரைப் பற்றி அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறேன். அப்படி அவர்கள் மாவட்ட அளவில், மாநகர அளவில், ஒன்றிய அளவில், கிளைக் கழக அளவில் ஏற்பட்ட கசப்பு உணர்ச்சிகளால் விலகியபோது என்னைச் சந்தித்து நேரடியாகவே விபரங்களைக் கூறி ஒதுங்கியுமிருக்கிறார்கள். சிலர், எனக்கு உருக்கமிகு கடிதங்களையும் எழுதி விட்டு விலகி இருக்கிறார்கள். நேரிலோ, அந்தக் கடிதங்களிலோ அவர்கள் என்னை நேசிப்பதையும், மனதாரப் புகழ்ந்து அன்பு செலுத்துவதையும், எங்கிருந்தாலும் என்னிடம் மரியாதையும், மதிப்பும் கொண்டு இருப்போம் என்று குறிப்பிட்டதையும் நான் மறந்து விடவில்லை. அந்தக் கடிதங்களும் மறைந்து விடவில்லை.

ஏதோ, அரசியல் அலை அவர்களை எங்கேயோ இழுத்துக்கொண்டு போய்விட்டது என்றுதான் நான் அவற்றை எடுத்துக்கொண்டேன்.

திட்டமிட்டுக் கழுத்தறுத்து துரோகம் புரிந்து வெளியேறும் கொள்கையற்றவர்களும் உண்டு! அந்தக் கூட்டத்தில் நான் இந்தச் சிலரைச் சேர்த்திடவில்லை.

அப்படிச் சென்ற சிலர், புகுந்த இடத்தின் புகழ் பாடினால் மட்டும் அங்கு நிலைக்க முடியாத காரணத்தால், பிறந்த இடத்தையும் புழுதிவாரித் தூற்றினால் தான் புதிய தலைமையின் நம்பிக்கையைப் பெற முடியும் என்ற கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டனர் என்ற கதையும் எனக்கு நன்கு தெரியும்.

எங்கிருந்து எங்கு வந்திருக்கிறோம்? என்பதை விரைவில் உணர்ந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை மட்டும் எனக்கு உண்டு!

அப்படி உணர்ந்து கொண்ட அரசியல்வாதிகள் சிலர், தாங்கள் சென்ற இடம் அண்ணாவின் கொள்கைக்கு எதிரான முகாம் என்பதை வெளிப்படுத்தினர். அகில இந்தியா என்ற ஒட்டுவேலை நடைபெறுவதை எதிர்த்தனர். பச்சை குத்தும் அநாகரிகத்தை வெறுத்தனர். அண்ணாவின் பெயர்தான் அங்கிருக்கிறதே தவிர, அண்ணாவின் கொள்கைக்கு எதிராக எல்லாம் நடைபெறுவதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அவர்களைப் பிரிவினைவாதிகள் எனக் கூறி, இந்திரா அரசிடம் காட்டிக் கொடுக்கிற அளவுக்குப் பழி வாங்கும் படலம் ஆரம்பமாயிற்று!

செந்தீயில் கால் வைத்து விட்டவர்கள் போல் செய்வதறியாது விழித்தனர்.

திக்குத் தெரியாத ஒரு நிலை!

திரும்பவும் தாய்க் கழகத்திற்கே வந்திட வேண்டுமென்ற மனப்போராட்டம்!

புதிய கட்சியோ கொலுமண்டபத்தில்!

தாய்க் கழகமோ கொள்கை மண்டபத்தில்!

கொலு மண்டபத்தின் அமைப்பு, குளிர்ச்சிமிக்கதாகத்தான் இருந்தது.

ஆனால், கொள்கையிலே திளைத்தவர்களுக்கு அந்தக் கோலாகலங்கள் மனமயக்கம் தரவில்லை! தராது!

இதோ அவர்கள் வந்து விட்டனர் தாயின் மடிக்கு!

நான் 16-10-76 கடிதத்திலேயே எழுதினேன்;

பெரியாரும் அண்ணாவும் கட்டிக்காத்த கொள்கைகளுக்கு அழிவு ஏற்படத் துணைபோகாதீர்கள் என்று! அப்போது கேட்கவில்லை. இப்போது அந்தக் கட்சித் தலைவர் உங்களைப் பிரிவினைத் தடைச்சட்டத்தின் முன்னே அல்லவா கொண்டு போய் நிறுத்தியிருக்கிறார். தேசத் துரோகக் குற்றம் சாட்டியிருக்கிறார்!

நீங்கள் என்னதான் அவசரத்திலும், ஆத்திரத்திலும் எம் மீது கொடிய சொற்களை வீசியிருந்தபோதிலும் இப்போது இப்படியொரு வீண்பழி சுமத்தப்பெற்று வஞ்சக வலை விரிக்கப்படும்பொழுது - தானாடாவிடினும் தன் தசையாடும் என்பதுபோல் நெஞ்சம் குலுங்கிடத்தான் செய்கிறது!

இப்படி நான் எழுதியபோது என்னைச் சந்தித்துப் பாசம் பொங்கிட, கண்களைக் குளமாக்கிக்கொண்டு கட்டித் தழுவிய உடன்பிறப்புகள், இதோ நம் தாயாம் தி.மு.கழகத்தின் மடியில் வந்து அமர்ந்துவிட்ட காட்சியைக் காணுகிறேன்.

தம்பிகள் சீனிவாசன், முத்துரத்தினம், சௌந்தரம் ஆகியோர் தலைமையில் தாய்க் கழகம் நாடி வந்த கண்மணிகளை - அன்பு உடன்பிறப்புகளை - நானும், நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், பொருளாளர் சாதிக் அவர்களும், தலைமைக் கழகச் செயலாளர்களும் பூரிப்பு தவழ சேர்த்தணைத்துக் கொண்டோம்!

இவரனையார் இன்னும் சிலருண்டு! அவர்கட்கும் அன்னை மடியில் இடம் உண்டு! அண்ணன் தந்த இதயம் இங்கே உண்டு!

**வரவேற்போம், வந்தவர்க்கு**

**வாழ்த்துச் சொல்வோம்!**

அன்புள்ள,

மு. க.

(16-10-1977)

## 490. ஆதிசேடன் ஆச்சரியப்படுகிறான்!

**உடன்பிறப்பே,**

அடிக்கல் நாட்டியது நாங்கள்,
திறந்து வைப்பது நீங்களா? என்று
கருணாநிதி கேட்டிருக்கிறார்

இதுபோல நண்பர் மனோகரன் ஒரு கூட்டத்தில் பேசி, அவரது கட்சிப் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருக்கிறது! தான், ஏதாவது ஒரு முரட்டுத்தனமான - அல்லது கோமாளித் தனமான பதிலைச் சொல்வதற்காக, நான் பேசியதை திரித்து எடுத்து வைத்துக் கொண்டு வாயாடுவது மனோகரனுக்கும், அவரது தலைவருக்கும் வாடிக்கையான விவகாரம்!

திறப்பு விழாக்களைப் பற்றி நான் என்ன பேசினேன் என்பது இதோ முரசொலியில் வெளியாகியிருப்பதை அப்படியே குறிப்பிடுகிறேன்.

இவைகளெல்லாம் நாங்கள் கிராமப்புறங்களிலிருந்து திட்டங்கள் தீட்டுவதற்கு அடையாளங்கள் என்று அவர் இவ்விழாக்களில் பேசி வருகிறார். ஆனால் எம்.ஜி.ஆர். திறந்து வைத்த குடிநீர்த் திட்டங்களுக்கு தி.மு.க. ஆட்சியில் அடிக்கல் நாட்டி, முக்கால்வாசித் திட்டம் நிறைவேறி, ஜனாதிபதி ஆட்சியில் முடிவுற்றதைத்தான் இப்போது அவர் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறார். புதிதாக அவர் எதையும் திறந்துவிடவில்லை.

காரைக்குடியில் ஒரு குடிநீர்த் திட்டத்தை எம்.ஜி.ஆர். திறந்து வைப்பதாக நான் செய்தி பார்த்தேன். அந்தத் திட்டமும் தி.மு.க. ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ.30 லட்சம் செலவில் நிறைவேறி, ஜனாதிபதி ஆட்சியிலேயே காரைக்குடி மக்கள் அதைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். இத்திட்டத்தை மக்கள் பயன்படுத்தத் தொடங்கி ஒரு ஆண்டுக் காலமாகிறது.

பயன் தந்து வருகிற ஒரு திட்டத்தை இப்போது முதல்வர் திறந்து வைக்கிறாராம்.

ஏற்கனவே பயன் தந்து வரும் திட்டத்தைத் திறந்து வைக்கலாமா? என்று நான் கேட்கவில்லை. ஆனால், அத்திட்டத்திற்கு ரூபாய் 30 லட்சம் செலவிட்டது தி.மு.க. ஆட்சிதான் என்பதை மறந்துவிட வேண்டாம்.

சென்னையில் ரூ.56 லட்சம் செலவில் போலீஸ் குடியிருப்பொன்று கட்டப்பட்டது. அதைக் கட்ட வேண்டுமென்று ஐ.ஜி. அருள் தமிழக அரசுக்கு குறிப்பொன்று தந்தார். அந்தக் குறிப்பின் அடிப்படையில் தி.மு.க. அரசு இதைக் கட்டியது. அக்கட்டிடங்களெல்லாம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் கழக அரசு கலைக்கப்பட்டது. இப்போது ஒரு கொத்தனாரைக் கொண்டு அக்குடியிருப்பைத் திறக்கச் செய்து அவ்விழாவில் எம்.ஜி.ஆர். கலந்து கொண்டார்.

இந்த மூன்று மாத காலத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள திட்டங்கள் கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டவையாகும். நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் திறந்து வைக்க வேண்டாமென்ற பொருளில் நான் சொல்லவில்லை.

கழக அரசு தனது ஆட்சிக்காலத்தில் ஏழை, எளிய பிற்படுத்தப்பட்ட, நடுத்தர கிராம மக்களுக்காகத் திட்டங்களைத் தீட்டியது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது எனது ஆட்சியில் எந்தத் திட்டமும் ஏழை, நடுத்தர, பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மக்களை மையமாகக் கொண்டுதான் தீட்டப்படும் என்று சொன்னார். பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகும் அதையே கடைப்பிடித்துத்தான் எனது தலைமையில் கழக ஆட்சிக் காலத்தில் திட்டங்கள் தீட்டப்பட்டன.

மேட்டுப்பாளையத்தில் நான் பேசிய இந்தப் பேச்சு 16-10-1977 முரசொலியில் வந்திருக்கிறது. இதில் எந்த இடத்திலாவது நான் அடிக்கல் நாட்டியது நாங்கள்! திறந்து வைப்பது நீங்களா? என்ற வாசகத்தைக் கூறியிருக்கிறேனா? இல்லை! இல்லவே இல்லை! என்னுடைய பேச்சின் கருத்தே, எம்.ஜி.ஆர்., கழக ஆட்சியில் கிராமங்கள் கவனிக்கப் படவில்லை. குடிநீர் வழங்கப்படவில்லை. எல்லா திட்டங்களையும் அவரது ஆட்சிதான் தொடங்குவது போலப் பேசி வருகிறார் அல்லவா? அந்தத் தகவல்

தவறானது என்பதையும், கழக ஆட்சிக் காலத்தில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தனிக் கவனம் செலுத்தப்பட்டது என்பதையும் சுட்டிக் காட்டுவதுதான்!

அதைப் புரிந்தும் புரியாதவரைப் போல, மனோகரன் நான் அடிக்கல் நாட்டியதை எம்.ஜி.ஆர். எப்படி திறந்து வைக்கலாம்? என்று நான் பேசியதாகக் கயிறு திரிக்கிறார். அதுவும் முறுக்கறுந்த கயிறு!

லஞ்ச ஊழல் அரசை, லஞ்ச ஊழலுக்காக, லஞ்சத்தால் நடத்திய கருணாநிதி!

இதுவும் மனோகரனின் பொதுக்கூட்டப் பேச்சுத்தான்! அவர் கட்சி ஏட்டில் வெளியானதுதான் -

லஞ்ச ஊழல அரசை, லஞ்ச ஊழலுகாக, லஞ்சததால நடத்தத் தொடங்கியிருப்பவர் நிதி அமைச்சர் மனோகரன்தான் என்பது இந்த மூன்று மாத கால ஆட்சியிலேயே நாடெங்கும் பரவிவிட்ட பேருண்மையாகும்.

தேர்தலில் நிற்பதற்கு சீட் கேட்டவர்களிடம் அச்சாரமாக ஐயாயிரம், பத்தாயிரம் பெற்றுக் கொண்டு அவர்களை அலைமோத விட்டவர் யார் என்பதை அவரது கட்சிக்குள்ளேயே பலர் பேசிக் கொண்டுதானிருக்கிறார்கள்.

இரண்டு மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததைத் தவிர, இவர் பார்த்த வேலை என்ன? பெரிய வருமானத்துக்கு வழி என்ன? ஏதாவது தொழிற்சாலை நடத்தினாரா? இருபது முப்பது படங்களுக்கு கதையோ வசனமோ எழுதினாரா? எந்த வழியுமின்றி இவருக்கு லட்சக்கணக்கில் சொத்துக்கள் சேர்ந்த மர்மம் என்ன? மாளிகை யொன்றைக் கட்டி அதனை பெருந் தொகைக்கு வாடகைக்கு விட்டிருப்பது எப்படி? இவர் இப்போது குடியிருக்கிற வீட்டுக்கு விவரமென்ன? அம்ஃதன்னியில் அமைச்சருக்கு அலுவலகம் என்று தனியாக ஒரு பெரிய வீடு அரசாங்க வாடகையில் எதற்காக? அமைச்சர்கள், அவரவர்கள் சொந்த வீட்டில் குடியிருக்க வேண்டும் என்று அண்ணா சொன்னாரா இல்லையா? சென்னையிலே இரண்டு சொந்த வீடுகளை வைத்துக் கொண்டு, அமைச்சுக் காரியங்களைப் பார்க்க இவருக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட வாடகையில் ஒரு

வீடு எதற்காக? கோட்டையிலே உள்ள அமைச்சர் அலுவலகம் என்ன ஆனது?

மற்றவர்களைப் பார்த்து லஞ்சம், ஊழல் என்று கூறுவதாலேயே மனோகரன்கள் மகாத்மாக்களாகிவிட முடியாது! இந்த மனிதர்கள், தங்களின் மகத்தான ஊழல்களை மறைக்க - மற்றவர்கள் மீது புழுதி வாரிக் கொட்டித் தாங்கள் புனிதர்களாகி விடலாம் என்று கருதுகிறார்கள்.

கையும், விலங்கும் காதல் செய்ய வேண்டிய நேரத்தில் காதல் செய்யட்டும்.

இந்த இலக்கியப் பேச்சும், திருவாளர் மனோகரப் புலவரின் மேடைப் பேச்சுத்தான்!

ஆம்! விலங்கொன்று காதல் செய்து, பிறகு அந்தக் காதலியைக் கைவிட்டு, அவள் ஏமாற்றம் தாங்காமல் காற்றோடு கலந்துவிட்டாள் என்ற கதை மனோகரன் மறந்துவிட்ட கதையாக இருக்கலாம். ஆனால் வடஆற்காட்டு மக்கள் பலபேர் மறக்காத சோகக் கதை அது!

விலங்கு, காதல் செய்யும் என்று மனோகரன் பேசியதைப் படித்ததும், அதனால் ஏற்பட்ட விபரீத முடிவு என் நினைவுக்கு வந்தது!

உடன்பிறப்பே! இந்தக் கதை பற்றி அதிக விளக்கம் கேட்காதே! காலம் வற்புறுத்தும் போது சொல்கிறேன்!!!

ஐ.ஜி. தெரிவித்த கருத்து பற்றி கருணாநிதி, எழுதியிருக்கிறார்! அவர் அவ்வாறு எழுதியிருப்பது பற்றிச் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க முடியுமா என அரசு ஆலோசனை செய்யும்.

இதுவும் மனோகரனின் மிரட்டல்தான்! உடன்பிறப்பே! உன் வாயிலாக மனோகரனுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனோகரனாரே! சீக்கிரம் ஆலோசனையை முடியுங்கள்! சட்டபூர்வ நடவடிக்கை எடுங்கள்! இந்த மூன்று மாதத்தில் அ.தி.மு.க.வினர் போலீஸ் இலாகாவில் எத்தனை இடங்களில் தலையிட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களுடன் நான் நீதிமன்றத்திற்கு வரத் தயாராயிருக்கிறேன். இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையில் மற்ற கட்சித் தலைவர்களும் ஐ.ஜி.க்கு மறுப்பு

தெரிவித்துள்ளார்கள் என்றாலும் அழைக்க வேண்டாம். நான் தயாராக இருக்கிறேன். விரைவில் அந்தரங்க ஆலோசனைகளை முடித்துவிட்டுச் சட்டபூர்வ நடவடிக்கையை மேற்கொள்க!

இதுவும் கோப்பு சவால்!

அல்லது டேப்பு சவால்!

போல ஆகிவிடாமல் உடனடியாக இறங்குக நடவடிக்கையில்!

கருணாநிதிக்கு எத்தனை நாக்கு?

இப்படியொரு சந்தேகம்கூட மனோகரனுக்கு ஏற்பட்டிருக்கிறது! கூட்டத்தில் கேட்டிருக்கிறார்!

நாவுக்கு அரசரல்லவா? அப்படி ஒரு பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறதே!

காலையில் ஒரு பேச்சு!

மாலையில் ஒரு பேச்சு!

நேற்று ஒரு கொள்கை!

இன்று ஒரு கொள்கை!

இந்திக்கு நாங்கள் ஆதரவாளர்கள்!

இந்திக்கு நாங்கள் எதிர்ப்பாளர்கள்!

மாநில சுயாட்சிக்கு ராணுவத்தை சந்திப்போம்!

மாநில சுயாட்சியை எதிர்க்கிறோம்!

இப்படி நீங்களும் உங்கள் தலைவரும் பேசுவதைப் பார்த்தால்,

ஆயிரம் நாவு படைத்த ஆதிசேடனும் - ஆச்சரியப் படுவானே!

ஏ! அப்பா இந்த அ.தி.மு.க.வுக்கு நம்மை விட அதிக நாக்குகள் போலிருக்கிறதே என்று!

இவர்களா, மற்றவர்களைப் பற்றி விமர்சிப்பது? சே! சே! வெட்கக்கேடு!

அன்புள்ள,

மு. க.

(19-10-1977)

# 491. கருத்தரங்கு தேவை!

**உடன்பிறப்பே,**

நாட்டு மக்கள், இன்று பரபரப்போடும், வியப்போடும் "அப்படியா? உண்மையாக இருக்குமா?" என்ற சந்தேக உணர் வோடும் ஆவலை முகத்தில் தேக்கிக் கொண்டும் - அதே நேரத்தில் சற்று முகத்தைச் சுளித்தவாறும் பேசுகிற பிரச்சினைகளில் "சிறுநீர் அருந்து! அதுவே சிறந்த மருந்து!" என்ற பெரிய இடத்து அறிவுரையும் ஒன்றாகி விட்டிருக்கிறது.

மக்கள் நல்வாழ்வுத் துறை மத்திய அமைச்சர் திரு.ராஜ் நாராயணன் தொடங்கி வைத்த இந்த விவகாரம், இந்தியப் பிரதமர் திரு.மொரார்ஜி அவர்கள் பெயரும் ஈடுபடுத்தப்படுகிற அளவுக்கு விரிவாகியிருக்கிறது.

இந்தியப் பிரதமரும், உள்துறை அமைச்சரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ராஜ் நாராயணனும் நாள்தோறும், தங்களுடைய சிறுநீரை அருந்துகிறார்கள் என்றும், அது ஒரு மேலான ஔடதம் என்றும் அதிகாரபூர்வமான செய்திகள் வந்துள்ளன.

எத்தகைய காரணங்களால் சிறுநீர் அருந்துகிற முறை நன்மை பயக்கக் கூடியது என்பதையும் விளக்கியிருக்கிறார்கள்.

ஆனால் இந்தப் பிரச்சினை பற்றி மருத்துவ நிபுணர்கள் யாரும் கருத்துகளை வெளியிட்டதாகத் தெரியவில்லை.

சிறு புண்களில் சிறுநீரைத் தொட்டுப் போட்டால் புண் ஆறிவிடுகிறது என்பதைக் கொண்டு, அதில் ஏதோ ஒரு தடுப்புச் சக்தி இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டாலுங்கூட உடல் நலத்துக்கு அது எவ்வகையில் ஏற்றது என்பதை ஆராய்ந்து முடிவு காண்பது மிக முக்கியம்.

இந்தக் கடிதத்தின் நோக்கமே யாரையும் கேலி செய்வதோ, அல்லது மறுப்பதோ அல்ல!

இந்தியப் பிரதமரே, இப்படியொரு மருத்துவ முறையைக் கடைப்பிடிக்கிறார் எனப் படிக்கிற சாதாரணப் பாமர மனிதன், தானும் அந்த முறையைக் கடைப்பிடிப்பதில் தவறில்லை என்று கருதக்கூடும்.

சிறுநீரில், சில தடுப்பு சக்திகள், நோய் நிவாரண சக்திகள் இருக்கக் கூடும். அந்தச் சக்திகள் எவை எவையோ, அவைகளுக்கென்று தனியாகவே மருந்துவில்லைகள், மருந்துத் தூள்கள், இன்று தயாரிக்கப்பட்டு மிக மலிவான விலையில் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

சில நிவாரண சக்திகளைப் பெறுவதற்காக முயன்று, சிறுநீரில் உள்ள வேண்டத்தகாத கழிவுப்பொருள்களையும் நுண்கிருமி களையும்கூட சேர்த்து அருந்துவதால் உடலுக்குத் தீமை விளையவும் கூடும் அல்லவா?

சிறுநீர் என்பதே, உடலில் இருந்து வெளியேறும் கழிவுப் பொருள்!

உடல், தேவையில்லையென்று கழித்துவிட்ட கழிவு நீரை மீண்டும் உட்கொள்ளுவதால், அதிலுள்ள தடுப்பு சக்திகளையும், ஆரோக்கிய சக்திகளையும் விட அதிகமான தூய்மையற்றதும் நுண்ணிய கிருமிகளும் கொண்ட சக்திகள் உடலில் பரவிட வழியேற்படுமா? ஏற்படாதா? என்பதைச் சாதாரண கேள்வியாகக் கருதிவிடக் கூடாது!

அடுக்களையிலிருந்து குழாய் மூலம் வெளியேறுகிற கழிவு நீரில் கூட, சோறு வடித்த கஞ்சி கலந்திருக்கும், குழம்பு கரைத்து மிச்சப்பட்ட புளிச்சக்கை கலந்திருக்கும். ஆனால் அவற்றோடு பெருவாரியாக அசுத்தப் பொருள்கள் கலந்திருப்பதால்தானே அந்தக் கழிவு நீரை வெளியே அனுப்பி விடுகிறோம்.

அதைப் போன்றே மனித உடலில் இருந்து வெளியேறும் சிறுநீரும் ஆகும்!

அதில் சில மருந்து சத்துகள் இருக்கலாம்! அந்த மருந்து சத்துகளைச் சிறுநீரில் இருந்து பெறாமல் - தனியாகவே தயாரிப்பதற்கான வாய்ப்புக் கூறுகளும் விஞ்ஞானமும்

வளர்ந்திருக்கும் போது, அந்தச் சில சத்துகளைப் பெறுவதற்காக, சிறுநீரை அருந்த வேண்டுமா? என்ற கேள்வி பிறப்பது நியாயந்தானே!

உடலுக்கு ஏதாவது கோளாறு என்றால் முதலில் டாக்டர்கள் சிறுநீர் பரிசோதனைதான் செய்கிறார்கள். சிறுநீரில் உள்ள நோய்க் கிருமிகளைக் கண்டறிந்து அதற்கேற்பச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

பெரிய இடத்தில் வாய்ப்பு வசதி உள்ளவர்கள் - அடிக்கடி தங்கள் சிறுநீரைச் சோதித்து அறிந்துகொண்டு அதனை அருந்துவ தாக வைத்துக் கொள்வோம்! அதுவே சிரமமான காரியம்!

ஒரு சாதாரண மனிதன், தன்னுடைய சிறுநீர்ப் பையில் ஏற்பட்டுள்ள நோய்க்கிருமிகளையோ, நோயை உருவாக்கும் சக்திகளையோ தெரிந்துகொள்ளாத நிலையில் அதை அருந்துவானேயானால், எத்தகைய இடர்ப்பாடுகளுக்கு ஆளாக நேரிடும் என்பதையும் மறந்திடலாகாது!

இந்த வாதத்தை வைப்பதால், வசதி வாய்ப்புள்ளவர்கள் தங்கள் சிறுநீரை நாள்தோறும் சோதித்து விட்டு அருந்தலாம் என்பது கருத்தல்ல!

சிறுநீர் மருந்து பற்றி யாரோ கருத்துகளை வெளியிட் டிருந்தால் அதனை அலட்சியப்படுத்திவிடலாம்!

மிக உயர்ந்த மட்டத்தில் பிரதமர் அளவுக்கு இந்தப் பிரச்சினை எழுந்திருப்பதால், "பிரதமரே மேற்கொண்டுள்ள முறையை நாமும் மேற்கொண்டால் என்ன?" என்று பாமர மனிதர்கள் பின்பற்றத் தொடங்கி விட்டால் என்ன செய்வது என்பதே எனக்குள்ள பயம்!

காமாலை நோய் ஒருவனுக்கு வந்திருக்கும்! அது காமாலை நோய்தானா? என்று கண்டுபிடிக்கவே நாலைந்து நாட்கள் ஆகும்! அதற்கிடையே அவன், தான் பழக்கப் படுத்திக்கொண்டுள்ளவாறு சிறுநீரை அருந்துவானேயானால், அந்தக் காமாலை நோயை அவன், தன்னையறியாமலே அதிகப்படுத்திக் கொள்கிறான் என்றுதானே அர்த்தம்.

திரு.ராஜ் நாராயணன் அவர்கள் கூறுவது போல, சிறுநீர் சிறந்த ஔடதமாகவே கூட இருக்கலாம்!

அவர்கள் சொல்லி விட்டார்களே என்பதற்காக, யாரும் ரகசியமாகக் கூட அந்த மருந்தைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டு விடக் கூடாது!

ராஜ் நாராயணன் அவர்களே, முயற்சி எடுத்து மருத்துவ நிபுணர்களின் கருத்தரங்கு ஒன்றைக் கூட்டி அந்தக் கருத்தரங்கில் அலோபதிக், ஆயுர்வேதிக், சித்தா, யுனானி, ஓமியோபதி போன்ற அனைத்துத்துறை நிபுணர்களையும் கலந்துகொள்ளச் செய்து அதில் கூறப்படும் கருத்துகளை நாடறியச் செய்து, எடுக்கப்பட்ட முடிவை அறிவிப்பதே சிறந்ததாகும்.

அதற்கிடையே, சர்வரோக நிவாரணி சிறுநீர்தான் என்ற பிரச்சாரம், பல்வேறு கேடுகளுக்கு வழிவகுத்து விடுமோ என்ற அச்சத்தால்தான் இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

அப்படியொரு கருத்தரங்கு நடைபெறும் வரையில் மற்றவர்கள் யாரும் இந்த முயற்சியில் அவசரப்பட்டு இறங்காமல் இருப்பது நல்லது!

அன்புள்ள,

மு.க.

(21-10-1977)

# 492. மாஸ்கோவில் இந்தியப் பிரதமர்!

**உடன்பிறப்பே,**

இந்தியப் பிரதமர் மொராஜி தேசாய் அவர்களுக்கு சோவியத் ரஷ்யா மகத்தான வரவேற்பை வழங்கியிருக்கிறது. ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரும் அதிபருமான பிரஷ்நேவ் அவர்களின் அழைப்பின் பேரில் மொராஜி அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். அவருக்கு மாஸ்கோ விமான நிலையத்தில் மாபெரும் வரவேற்பு விழா, குதூகலமாக நடைபெற்றது மட்டுமல்ல, பிரஷ்நேவ், பிரதமர் கோசிஜின், வெளி விவகார மந்திரி குரோமிகோ முதலியவர்கள் விமான நிலையத்திற்கு வந்து தங்கள் அன்பு மரியாதையை செலுத்தியுள்ளனர். அங்கிருந்து பிரதமர் மொராஜியும், வாஜ்பேயியும் கிரெம்ளின் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வழக்கத்திற்கு மாறாக, அதிபர் பிரஷ்நேவ் விமான நிலையத்திற்கு வந்திருந்து வரவேற்றார் என்று ஏடுகள் சிறப்புச் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்கும் உச்சக் கட்டப் பேச்சுவார்த்தைகள் கிரெம்ளின் மாளிகையில் தொடங்கியுள்ளன.

இந்திய - ரஷ்ய உறவைப் பலப்படுத்திக்கொள்ள, தம்முடைய அரசு ஆவலாக இருக்கிறது என்பதை இந்தியப் பிரதமர் தெரிவித்ததோடு, இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தைக் குறைத்து மதிப்பு போடக் கூடாது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

ரஷ்யத் தலைவர்களும், இந்தியாவுடன் தங்களுக்குள்ள நேச உணர்வுகளையும், உறவு மனப்பான்மையையும் வெளிக்காட்டியுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவு, மேலும் வலுவடையவும், நெருக்கமாகவும் இந்தப் பேச்சு வார்த்தைகள் துணைபுரியும் என்று நிச்சயமாக நம்பலாம்.

இந்திய நாடு, கூட்டுச் சேராத கொள்கையை தனது அயல் நாட்டுக் கொள்கையாக நேருவின் காலந்தொட்டு கடைப்பிடித்து

வருகிறது. அந்தக் கொள்கையைத் தி.மு.க. ஆதரித்து வந்திருப்பது மட்டுமல்ல, இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளைப் பொறுத்து தனது ஒத்துழைப்பையும் வழங்கிடத் தவறியதில்லை.

இலங்கையில் தமிழருக்கு இழைக்கப்பட்டக் கொடுமைகளைப் போன்ற சிலவற்றை தடுத்து நிறுத்த, இந்தியப் பேரரசுக்கு கவனமூட்டும் வகையில் கழகம் கடமையாற்றியது என்பதைத் தவிர, இந்தியப் பேரரசின் பொதுவான வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு முரண்பாடாகச் செயல்பட்டதே இல்லை.

கூட்டு சேராக் கொள்கை என வாயளவில் கூறிக் கொண்டு நடுநிலை தவறி ஒரு பக்கம் சாய்ந்துவிடுகிற போக்கினால் அபாயங்கள் ஏற்படக்கூடும் என்பதை உரிய நேரங்களில் நமது கழகம் எச்சரித்தும் இருக்கிறது. பூகோள ரீதியாகப் பார்க்கும்போது இந்தியநாடு, இன்று மேற்கொண்டுள்ள கோஷ்டி சேராமை என்ற வெளிநாட்டுக் கொள்கை, இயற்கையாகவே அமைகின்ற ஒன்றாகி விடுகிறது!

இதனைப் புறக்கணித்துவிட்டு எந்த ஒரு கட்சியும் மத்திய அரசுப் பொறுப்பிலேயிருந்து கோஷ்டி சேரும் கொள்கைக்கு, கொடியேற்று விழா நடத்திவிட முடியாது! நடத்திடவும் கூடாது!

இந்திரா காந்தியின் அரசோடு, சோவியத் ரஷ்யாவுக்கு நெருங்கிய உறவு இருந்தது எனப் பேசப்பட்டாலுங்கூட, இன்றைய ஆட்சி மாற்றத்தை சோவியத் ரஷ்யாவின் தலைவர்கள் அலட்சியப்படுத்தாமல் - மாறாக, அதற்குரிய மரியாதையை அளித்து புதிய பிரதமரை அழைத்துப் பேசி நேசக் கரம் குலுக்குவதின் மூலம், தங்களுடைய நல்லெண்ணத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

இந்திரா காந்தியின் அரசைத்தான் சோவியத் ரஷ்யா ஆதரித்து இந்தியாவுக்கு ஒத்துழைப்பு நல்கும் என்ற கருத்தும் இப்போது அடிபட்டுப் போயிற்று!

சோவியத் ரஷ்யாவுடன் உறவு காண ஜனதா அரசு விரும்பாது என்று செய்யப்பட்ட பிரச்சாரமும் அடிப்படையற்றது என ஆகிவிட்டது!

இந்தியப் பிரதமரின் மாஸ்கோ பயணத்தால், இந்திராவுக்குத்தான் ரஷ்ய நாடு அன்பு காட்டும் என்ற மாயை மறைந்துவிட்டது!

உலகின் மிகச் சிறந்த தொழில் வள நாடுகளுக்கிடையே, இந்தியா - பொருளாதாரச் சுயச் சார்பு நிலையை நோக்கி

நடைபோடுவதற்கு, சோவியத் ரஷ்யா அளித்த ஒத்துழைப்பு காரணமாக இருந்துள்ளது. இந்த ஒத்துழைப்பை மேலும் நாம் விரிவுபடுத்திக் கொள்ள முடியுமென நம்புகிறேன். இந்தியாவுக்கு மிக முக்கியமான பிரச்சினைகளில் ரஷ்யா அளித்து வந்துள்ள ஆதரவுக்கு இந்திய அரசின் சார்பிலும், இந்திய மக்களின் சார்பிலும் நன்றி தெரிவிக்கக் கடமையுடையவனாக இருக்கிறேன். எங்களைப் பொறுத்தவரை உங்களது நல்லெண்ணத்தை நாங்களும் பிரதிபலிக்கிறோம்.

- என்று இந்தியப் பிரதமர் கூறியிருப்பது, இருநாடுகளின் நட்புறவுக்குப் பொலிவு கூட்டுவதாகவே திகழ்கிறது!

இந்தியாவுடன் நட்புறவு கொள்ள விழையும் எல்லா நாடுகளுடனும் இந்தியா கரங்குலுக்கும் என்றும், ஆனால் ஏற்கனவே ஏற்பட்டுள்ள நட்புறவுக்குக் குந்தகம் விளையக்கூடிய தன்மையில், மற்ற நாடுகளுடன் நட்புறவு கொள்ளாது.

- என்றும் இந்தியப் பிரதமர் தேசாய் கூறியிருப்பது வரவேற்றுப் பாராட்டுத் தெரிவிக்கக்கூடிய செழுமிய உரையாகும்!

இரு நாட்டின் தலைவர்களும் நடத்துகிற விவாதங்கள் ஏற்கனவே துளிர்விட்டு, அரும்புகட்டி, மலர்ந்திருக்கிற நட்புறவுக் கொடியில் இந்தியாவுக்கான முன்னேற்றக் கனிகளைத் தோற்றுவிக்கப் பயன்படுமாக!

இந்தியா, முழுமையான அளவுக்குச் சுயச் சார்பு நிலையைப் பெற்றிட தேவையான அளவில் வெளிநாட்டு ஒத்துழைப்பும் பெற வேண்டியுள்ளது என்பதை மறந்து விட இயலாது.

எந்த நாட்டுடன் கொள்கிற நட்புறவானாலும், அது இந்தியா எனும் இந்தப் பெரிய நாடு, கட்டிக்காத்து வருகிற ஜனநாயகத்தை வளப்படுத்தும் வகையிலும், இன்றைய சமுதாயத்தின் இருளகற்றி சமதர்ம ஒளி விளக்கை ஏற்றிவைக்கத் துணைபுரியும் சோஷலிச சித்தாந்தம் வெற்றிபெறும் வண்ணமும், ஒரு விரைவான எதிர்காலத்தில் அரசியல், சமுதாய, பொருளாதார நிலைகளில் ஈடும் இணையற்ற தன்மையிலும் ஓங்கி வளர்ந்திடத் துணைபுரியக் கூடியதாக இருந்திட வேண்டும் என்பதே நமது கழகத்தின் நிலை! அந்த அடிப்படையில், நமது பிரதமரின் ரஷ்யப் பயணம் வெற்றி அடைய வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(23-10-1977)

# 493. எத்தனை நாளைக்குச் சகித்துக் கொள்வது?

**உடன்பிறப்பே,**

ஊருக்கெல்லாம் உபதேசம் செய்கிறார். உலகத்தையே திருத்த வந்த உத்தமர்போல் உரை நிகழ்த்துகின்றார். நியாயத் தராசின் முள், ஒரு தினையளவுகூட அப்புறம் இப்புறம் நகராமல் பார்த்துக் கொள்ளும் நீதி தேவன் என்று தன்னை வர்ணித்துக் கொள்கிறார். தன்னுடைய ஆட்சியில் புலியும், மானும் ஒரே கரையில் அருகருகே நின்று தண்ணீர் குடிக்கும் என்கிறார். தன்னுடைய கட்சிக்காரர்கள் யாரும் அத்துமீறிய காரியங்களில் ஈடுபட மாட்டார்கள்! அத்தனையும் புடம்போட்ட தங்கங்கள்! புண்ணிய நதியில் நீராடிய புனிதர்கள்! அப்படியே தப்பித் தவறி யாராவது தவறிழைத்தாலும் அவர்களைத் தண்டித்தே தீருவேன். கண்டித்தே தீருவேன். கட்சியை விட்டு வெளியேற்றியே தீருவேன் என்று சத்தியம் செய்கிறார்.

இவ்வளவும் சொல்லுகிற இன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஆட்சியிலே, அத்துமீறி அவர்கள் கட்சியினர் நடந்துகொள்ளாத நாட்களே கிடையாது என்கிற அளவுக்கு அட்டகாசங்கள் நடைபெறுகின்றன.

ஆலயத்துக்குச் சொந்தமான நிலங்களை, ஆளுங்கட்சியினர் வன்முறையாக ஆக்கிரமித்துக் கொண்ட தகவல்கள் ஆதாரப்பூர்வமாகச் சட்டமன்றத்திலேயே எடுத்துக் கூறப்பட்டன.

தொடர்ந்து ஆலய நிலங்கள் ஆக்கிரமிப்பு மட்டுமல்ல, எல்லோருடைய நிலங்களிலும் அ.தி.மு.க.வினரின் ஆக்கிரமிப்பு, போலீசார் ஒத்துழைப்புடன் மிக விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நான் ஊருக்கு நியாயம் பேசிக் கொண்டிருப்பேன்! நீங்கள் உங்களால் முடிந்த அளவுக்கு நினைத்ததையெல்லாம் முடித்துக் கொள்ளுங்கள்.

என்று அ.தி.மு.க.காரர்களுக்கு அவர்களது தலைவரும் முதல்வருமான எம்.ஜி.ஆர். அவர்கள் ரகசியமாக அறிவித்து விட்டார் என்றே தோன்றுகிறது.

சில இடங்களில் அநியாயங்களைக் கண்டிக்க வருகிற போலீசாரும், அ.தி.மு.க.வினரால் தண்டிக்கப்படுகிறார்கள். மேலிடமும் தலையிட்டு அந்த அநியாயங்களுக்கு மறைமுகமாக அங்கீகாரத்தை அளித்து வருகிறது.

சென்னையில் கள்ளச்சாராயம் காய்ச்சியவர்களைக் கண்டுபிடித்த போலீஸ் அதிகாரிகள் பட்டபாடு நாடறிந்த கதையல்லவா? காவல் துறையினரை அ.தி.மு.க.வினர் கட்டிவைத்து அடித்ததாகவும், கத்தியால் குத்தியதாகவும் வழக்கு போடப்பட்டது. ஆனால் இப்போது வழக்கு தயாரிக்கப்படும் போக்கைப் பார்த்தால், அ.தி.மு.க.வினர் தப்பித்துக் கொள்வதற்கு என்ன வழியுண்டோ அத்தகைய வழி கடைப்பிடிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அ.தி.மு.க.வின் வட்ட அமைப்பாளர் ஆயிற்றே! இலாகாக்களில் தலையிடாக் கொள்கை என்பது வாயளவில் சொல்லப்பட்டாலும், செயல் அளவில் தலையிட்டால்தானே வட்ட அமைப்பாளர் தப்பிட முடியும்?

கையெழுத்தை போர்ஜரி செய்தால் கூட அப்படிச் செய்தவர் அ.தி.மு.க. எம்.எல்.சி.யாக இருந்தால், அவர்மீது இந்த நேர்மையாளர் (?) ஆட்சியிலே வழக்குப் போட முடியுமா, என்ன?

இப்படிப் பல எடுத்துக்காட்டுகள் நூற்றுக்கணக்கில் உண்டு!

இதோ மற்றொரு எடுத்துக்காட்டு; கோவையில் நடைபெறும் நிகழ்ச்சி!

கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் காளியப்பன் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த நாச்சிமுத்துக் கவுண்டர் என்பவரை அவரது குத்தகை நிலத்திலிருந்து பலாத்காரமான முறையில் வெளியேற்ற அந்தத் தொகுதியில் உள்ள (அ.தி.மு.க.) எம்.எல்.ஏ. கந்தசாமியின் மகனும், மற்றவர்களும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அவ்வாறு வன்முறையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து காவல் நிலையத்தில் போலீசார் வைத்தனர். செய்தி அறிந்தார் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்! நடப்பது புனிதர் ஆட்சியல்லவா? தலையிடாக் கொள்கை கொண்ட நடுநிலை

அரசாங்கமல்லவா? ஊழல்தனைக் களையும் ஒழுக்கப் புரட்சியாளர் சர்க்காரல்லவா? எனவே, சட்டமன்ற உறுப்பினர் சீறும் புலியானார்!

யாரடா இவர்களைக் கைது செய்தது? எனக் கொதித் தெழுந்தார்!

காவல் நிலையத்திற்குள் புகுந்தார். போலீஸ் அதிகாரியை மிரட்டினார். கைது செய்யப்பட்டிருந்தவர்களில் சிலரை வன்முறைச் செயலால் மீட்டுக்கொண்டு வெளியேறினார். அவர் மீதும் வழக்கு என்று சொல்லப்பட்டது

அ.தி.மு.க.வினர் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, நாச்சிமுத்து கவுண்டர் நிலத்தில் யாரும் நுழையக்கூடாது என்று 144 போடப்பட்டு விட்டது! அதாவது குத்தகைதாரர் நாச்சிமுத்து உட்பட யாருமே நுழையக்கூடாது!

இந்த அநியாயச் செயல்களை விளக்கியும், அந்த நிலம் நாச்சிமுத்து கவுண்டரின் குத்தகைக்கு உட்பட்டது, உரியது என்பதற்கான நீதிமன்ற தீர்ப்புகளை எடுத்துக்காட்டியும், மாவட்டத்தில் உள்ள அதிகாரிகளிடமும், மாவட்ட ஆட்சித்தலைவர், காவல் துறை அதிகாரி ஆகியோரிடமும் முன்னாள் அமைச்சர் கண்ணப்பனும், மற்றவர்களும் முறையிட்டனர் சுமார் பத்து நாட்களுக்கு மேலாக!

அதிகாரிகளால் எதுவும் செய்ய இயலவில்லை!

உண்மை நிலையை விளக்கி, நெகமம் கிராமத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதன்பின்னர் கண்டன ஊர்வலம் பல்லாயிரவர் பங்கு பெற எழுச்சியுடனும், உணர்ச்சிப் பெருக்குடனும் நடைபெற்றது.

அரசும், அதிகாரிகளும், ஆளுங்கட்சியினரும் சேர்ந்துகொண்டு செய்கிற நியாயவிரோதக் காரியத்தை நாட்டுக்கு அறிவிக்கும் வகையில் முன்னாள் அமைச்சர் கண்ணப்பன், சி.டி.தண்டபாணி ஆகியோர் தலைமையில் மொத்தம் பனிரெண்டு பேர் தடையுத்தரவை மீறி சிறை புகுந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தையொட்டி வழக்கு நடைபெறலாம். இதிலே, அரசாங்கம் தனது விறுவிறுப்பையும், சுறுசுறுப்பையும் காட்டிக் கொள்ளலாம்.

ஆனால், ஒரு குத்தகைதாரரை வன்முறையால் வெளியேற்றியது!

காவலில் இருந்த கைதிகளை, அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர், அத்துமீறிச் சென்று விடுவித்தது!

இவற்றைப்பற்றிக் கவலை கொள்ளாமல், இவர்களுக்கு ஆதரவாக அரசு செயல்படுகிறது என்றால் - இந்தக் கொடுமைகளை எவ்வளவுதான் பொறுமையுடைய எதிர்க் கட்சியானாலும் எத்தனை நாளைக்குச் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

அன்புள்ள,

மு. க.

(24-10-1977)

# 494. அறிவிப்புக்குக் குறைவில்லை; ஆனால்...

**உடன்பிறப்பே,**

புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நிதிநிலை அறிக்கையினை யொட்டி மானியங்கள் விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆகஸ்டுத் திங்களின் பிற்பகுதியில் அமைச்சர் வீரப்பன் ஒரு அறிவிப்பைச் செய்தார்.

முதல்வரின் அனுமதியோடு இந்த அறிவிப்பைச் செய்யப் போகிறேன்.

என்று பீடிகை போட்டு,

வருகிறது! வருகிறது!! அண்ணா பிறந்த நாளன்று வருகிறது!

என்ற வகையில் பராக்கும் கூறி,

செப்டம்பர் 15-ஆம் நாள்முதல் சினிமா வரியில் அதாவது கேளிக்கை வரியில் ஒட்டுமொத்தக் கணக்கு முறை (கம்பவுண்டிங் சிஸ்டம்) கொண்டு வரப்படும்.

என்பதே அந்த அறிவிப்பாகும்! செப்டம்பர் 15 வந்தது! அண்ணா பிறந்த நாளும் வந்தது! கம்பவுண்டிங் முறை, கேளிக்கை வரிக்கு வந்ததா? என்றால், அதுமட்டும் வரவில்லை! ஆமாம்! வரவே இல்லை!

எதையாவது சிந்தித்துப் பார்த்து, ஏற்கனவே நடந்ததை எண்ணிப் பார்த்து, ஆர அமர யோசித்து அறிவித்தால்தானே, அது உருப்படியாக இருக்கும்.

தி.மு.க. அரசு, 14-9-74-ல் டூரிங் தியேட்டர்களுக்கும், 20-1-75-ல் நிரந்தரத் தியேட்டர்களுக்கும் கேளிக்கை வரிக்கான ஒட்டுமொத்தக் கணக்கு (கம்பவுண்டிங்) முறையைக் கொண்டு வந்தது, மாநகராட்சியிலுள்ள தியேட்டர்கள், நகராட்சியில் உள்ள தியேட்டர்களை இந்தக் கணக்கு முறை, கட்டுப்படுத்தாது என்றும்

அறிவிக்கப்பட்டது. மாநகர, நகரங்களில் உள்ள தியேட்டர்கள், படங்களுக்கு வாடகை வாங்கிக்கொண்டு திரையிடுகிற நிலைமை மாற்றப்பட்டால்தான் சிறிய படங்கள் வெளியிட முடியுமென்றும், அதற்கேற்ப அந்தத் தியேட்டர்காரர்கள் தங்கள் போக்கைத் திருத்திக் கொண்டால் கேளிக்கை வரியில் சலுகை காட்டுவது பற்றி அரசு யோசிக்குமென்று தெரிவிக்கப்பட்டது.

கழக ஆட்சி, ஒட்டு மொத்தக் கணக்கு (கம்பவுண்டிங்) முறை கொண்டுவந்தபோது தமிழ்நாட்டில் ஊராட்சி - பேரூராட்சிகளில் மட்டும் இருந்த, டூரிங், பர்மனெண்ட், செமி பர்மனெண்ட் தியேட்டர்களின் மொத்த எண்ணிக்கை 979 ஆகும்!

அவற்றில் அரசு அறிவித்த கம்பவுண்டிங் முறைக்கு ஒத்துக்கொண்ட தியேட்டர்காரர்கள் மொத்தம் 268 பேர்கள்தான்!

அவர்களிலும் 42 பேர், தங்களைப் புதுப்பித்துக் கொள்ளாமல் அந்த முறைப்படி வரி கட்டுவதிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

இதில் ஒரு சட்டப் பிரச்சினை இருக்கிறது! கம்பவுண்டிங் முறையைக் கட்டாயப்படுத்த முடியாது!

கம்பவுண்டிங் முறை

(அல்லது)

வழக்கம்போல் வரி கட்டுகிற முறை

இந்த இரண்டில் ஒன்றை விரும்பி ஏற்றுக்கொள்கிற உரிமை, தியேட்டர்காரர்களுக்கு உண்டு!

இப்படிச் சட்டத்திலேயுள்ள நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, ஏறத்தாழ 750-க்கு மேற்பட்ட தியேட்டர்காரர்கள், கம்பவுண்டிங் முறையை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள்.

நல்ல நோக்கத்துடன் கழக அரசு கொண்டுவந்த கம்பவுண்டிங் முறையை, மொத்தமுள்ள தியேட்டர்காரர்களில் முக்கால் பகுதியினர் ஏற்றுக்கொள்ளாததால், அந்த முறையை 21-7-75-ல் கழக அரசு கைவிட்டுவிட்டது.

கேளிக்கை வரி வசூலிப்பதில் மீண்டும் பழைய முறையே கடைப்பிடிக்கப்பட்டது.

திரைப்படத் தொழிலில் உள்ளவர்கள் என்னைச் சந்தித்து, தொழில் நசிந்துவிடாமல் இருக்க அரசு ஏற்பாடுகளைச் செய்ய

வேண்டுமென்று கூறினர். அவர்களோடு நீண்ட நேரம் மட்டுமல்ல, பல நாட்கள் விவாதித்தேன்.

இறுதியாக ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினர், தியேட்டர்களில் வரி ஏய்ப்பைத் தடுப்பது பற்றியும் - சினிமாத் தொழில் வளர்ச்சி பெறுவதற்கான வழிவகைகள் பற்றியும், வரி விதிப்பினை ஒரு கட்டுக் கோப்புக்குள் கொண்டு வருவது பற்றியும், சினிமாத் தொழிலில் உள்ள தொல்லைகளைக் குறைப்பது பற்றியும் ஆராய்ந்து விரைவில் அறிக்கை கொடுப்பது என்றும் தீர்மானமாயிற்று.

இந்தக் குழுவில் தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைத் தலைவர், துணைத் தலைவர், விநியோகஸ்தர்களின் சங்கத் தலைவர்கள், தியேட்டர் உரிமையாளர்களின் சங்கத் தலைவர்கள், மற்றும் ஏ.வி. மெய்யப்ப செட்டியார், நாகி ரெட்டியார், ஏ.எல். சீனிவாசன், ஜி.உமாபதி, டி. ராமானுஜம், அரங்கண்ணல், முரசொலி மாறன், கோவை செழியன், சின்னப்ப தேவர், எஸ். லட்சுமணன், எஸ்.பி. சிதம்பரம் செட்டியார், எஸ். கணேசன் முதலியார் இடம் பெற்றிருக்கிறார்கள்.

13-11-75-ல் இந்தக் குழு அமைக்கப்பட்டுத் தன் பணிகளைத் தொடங்கியது.

இரண்டு மாதங்களுக்குள்ளாகக் கழக ஆட்சி 31-1-76-ல் கலைக்கப்பட்டு விட்டது!

இப்போது எம்.ஜி.ஆர். ஆட்சி வந்ததும் - திரைப்படத் துறையில் உள்ளவர்கள், எம்.ஜி.ஆரைப் புகழ்வதற்கு மட்டும் தங்கள் திறமையைப் பயன்படுத்தாமல், கழக அரசு - கலை உலகுக்குத் துரோகம் செய்துவிட்டு என்று அறிக்கை விடுத்தனர்.

எம்.ஜி.ஆர். படங்களை ஓடாமல் செய்வதற்குத்தான், கழக அரசு கம்பவுண்டிங் முறையை ரத்து செய்தது என்று சில அறிவாளிகள் (?) கூச்சல் போட்டனர்.

எந்தத் திரைப்படத் தொழிலுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டார்களோ; அந்த துறையிலிருந்த தியேட்டர்காரர்கள் முக்கால் பகுதியினர், கம்பவுண்டிங் முறையை ஏற்றுக்கொள்ளாமையால்தான் கழக அரசு, அதைக் கைவிட நேர்ந்தது என்ற உண்மையை அரசியல் நோக்கோடு மறைக்க முயன்றனர். சரி; இப்போது கம்பவுண்டிங் முறை மீண்டும் வருமென்று அறிவித்து மூன்று மாதமாகிறதே; ஏன் இன்னும் கொண்டு வரவில்லை?

கோவையிலே இரண்டு நாளைக்கு முன்பு அமைச்சர் வீரப்பன் பேசியிருப்பதைப் பார்த்தால், இவர்கள் அறிவித்த கம்பவுண்டிங் முறை வராது என்றே சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

தியேட்டர்களில் வரி ஏய்ப்பு செய்வோரை, அபராதம் விதிப்பது மட்டுமல்ல - சிறையிலும் தள்ளுகிற அளவுக்கும், உரிமையை ரத்து செய்கிற அளவுக்கும் சினிமாத்துறைச் சட்டம், திருத்தப்படும்.

என்று அவர் உரையாற்றியிருக்கிறார் - கம்பவுண்டிங் முறை இருந்தால் வரி ஏய்ப்பு செய்ய முடியாது! வரி ஏய்ப்போரை சிறையில் தள்ள சட்டம் வரும் என்று வீரப்பன் பேசியிருப்பதிலிருந்து கம்பவுண்டிங் முறை வராது என்று தெரிகிறது!

தியேட்டர் உரிமையாளர்கள் கூட்டத்தில், எல்லோரும் ஏற்றுக்கொண்டால்தான் கம்பவுண்டிங் முறை கொண்டு வருவோம்! என்று முதலமைச்சர் மிரட்டியது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை!

கழக அரசு அமைத்த அந்தக் குழுவின் பரிந்துரைகளைக் கவர்னர் ஆட்சியில்தான் கவனிக்கவில்லை. இந்த ஆட்சியிலாவது கவனித்தார்களா? என்று கேட்டுக் கேட்டு நமக்கும் வாய் வலி கண்டுவிட்டது!

முதல்வரோ, கோயில்களுக்கு வரலாறு எழுத புலவர் குழுக்களை நியமிப்பதாக அறிவித்துக் கொண்டிருக்கிறார்!

ஏற்கனவே, அந்தக் கோயில்களுக்கு ஸ்தல வரலாறுகள் இருக்கின்றன!

ஒன்றைக் கேட்டால், இன்னொன்றைச் சொல்லி திசை திருப்புவதில் கெட்டிக்காரர்கள் ஆளுகிறார்கள்!

இல்லாவிட்டால் பதில் கூற முடியாத நேரத்தில் மௌனமாக இருந்து விடுகிறார்கள்!

அறிவிப்புகளுக்கு குறைவில்லை! அவைகள் நடப்பதுதான் இல்லை!

எல்லாம் பழைய மாதிரி

நன்கொடை அறிவிப்புகளாகவே இருக்கின்றன!

அன்புள்ள,

மு. க.

(25-10-1977)

# 495. எச்சரிக்கையுடன் பேசுவது நல்லது!

**உடன்பிறப்பே,**

“கருணாநிதியின் விளம்பர மோகம் ஊர் அறிந்த உண்மை. அதிகாரிகளின் கருத்தையும், ஆட்சேபத்தையும் மீறி அவர் அவசர அவசரமாக (அரிஜனங்களுக்கு) வீடுகள் கட்டச் சொன்னதால் 12 கோடி ரூபாய் பாழாகியிருக்கிறது. கட்டப்பட்டுள்ள நாற்பது ஆயிரம் வீடுகளின் இன்றைய நிலை என்ன? அந்த வீடுகளின் அடித்தளம் ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது. இவ்வளவு அவசரமாக வீடுகளைக் கட்டக் கூடாது என்று அதிகாரிகள் ஆட்சேபித்திருக்கின்றனர். ஒரே ஆண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற விளம்பரம் தேட வேண்டுமே! அதனால் பனிரெண்டு கோடி ரூபாய் பாழாகியிருக்கிறது.

இப்படி நமது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவிநாசியில் நடைபெற்ற விவசாயிகள் சிறு மகாநாட்டில் ஒரு கலப்படமில்லாத பொய்யை அவிழ்த்துக் கொட்டியிருக்கிறார். மகாநாட்டில் கூடியிருந்த “விவசாயி” படம் பார்த்த ரசிகப் பெருமக்கள் எல்லாம் “தடதட”வென்று கையைத் தட்டி ஆரவாரம் செய்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

முதலில் விளம்பர மோகம் பற்றிச் சில வார்த்தைகள்!

எந்த ஒரு அரசும், அல்லது அரசின் முதல்வரும் மக்களுக்கானத் திட்டங்களை வெளியிடுவது விளம்பர மோகம் என்கிறார் எம்.ஜி.ஆர்.!

விளம்பரம் என்றால் எம்.ஜி.ஆருக்கு வேப்பங்காய் கடிப்பது போல! விளக்கெண்ணெய் சாப்பிடுவதுபோல!

அதனால்தான் “அவரது கமல மலர்ப்பாதங்கள் முகவை மாவட்டத்தில் பட்டதுமே மழை பொழியத் தொடங்கிற்று” என்று அவரது அண்ணனின் பத்திரிகை கொட்டை எழுத்துச்

செய்தி வெளியிட்டது! அதாவது விளம்பரமென்றால் அவருக்கு நெருப்பை மிதித்தது போல!

> "மேடைக்குச் செல்லும் வழியில் சேற்றில் அவரது செந்தா மரையன்ன சிவந்த பாதம் பட்டது. அந்த செந்தாமரைப் பாதத்தில் சேறு ஒட்டிக் கொண்டிருந்ததும் ஒரு தனி அழகாகத் தானிருந்தது."

இப்படி வர்ணிக்கிறது அவரையே நிறுவனராகக் கொண்ட அவரது அண்ணனின் ஏடு!

"ராஜநடை போட்டு விழா மேடையில் அவர் ஏறி அமர்ந்தார்"

இதுவும் அதே ஏட்டின் வர்ணனைக் கட்டம்தான்!

பாவம், எம்.ஜி.ஆருக்கு விளம்பரமென்றாலே பாம்பைக் கண்டது போல!

"பங்களாதேஷ் தொடர்பான யுத்த நிதிக்கு நான் நடிக்கும் ஒரு படத்தின் ஊதியத்தை அப்படியே தந்து விடுகிறேன்" என்று நட்சத்திரக் கலைவிழாவில் அறிவித்தது விளம்பரமல்ல!

**அதிலே ஆச்சரியம், அதை இதுவரையில் கொடுக்காம லிருந்ததும் விளம்பரமல்ல! கொடுத்திருந்தால் விளம்பரமாகி விடுமல்லவா? கொடுக்காமல் விட்டதால்தானே விளம்பரமாக வில்லை! பாவம், எம்.ஜி.ஆருக்கு விளம்பரம் என்றால் விஷத்தைக் கண்டதுபோல!**

இப்படி நன்கொடை விளம்பரங்கள் - அறிவித்து அளிக்காமல் விட்ட விளம்பரங்கள் நூற்றுக்கணக்கில் உண்டு! காலம் வற்புறுத்தும்போது அவை வெளியிடப்படும்.

16 ஆயிரம் நியாய விலைக்கடைகள் திறக்கப்படும் என்றது விளம்பரமல்ல, திறந்தால்தானே விளம்பரம் - திறக்காமலே விட்டு விட்டால் "விளம்பர மோகி" என்ற கெட்ட பெயர் வராதல்லவா?

அவரோடு நடித்தவர்கள், பழகிய நண்பர்கள் கதை கதையாகச் சொல்வார்கள்! ஒரு படம் எடுத்து முடிந்ததும், தானே சென்று 'எடிட்டிங்' அறையில் உட்கார்ந்து கொண்டு தன்னை மீறி யாராவது நன்றாக நடித்திருந்தால் அந்தக் காட்சிகளையெல்லாம் வெட்டியெறிந்து விட்டு, தனக்கு மட்டும் முக்கியத்துவம் வருமாறு செய்துகொள்வார் என்று! அதெல்லாம் விளம்பர மோகமே இல்லை!

ஒரே ஒரு உதாரணம். ராஜா தேசிங்கு படத்தில் புலிகள் பூட்டிய வண்டியில் மற்றொரு நடிகர் பாடிக்கொண்டு வந்த பாட்டுக் காட்சி! அதைப் பார்த்தோர் அனைவரும் பாராட்டினர். ஆனால், திரைப்படக் கொட்டகைக்கு அந்தக் காட்சி வரவில்லை! இவரது "எடிட்டிங்" இரையாக்கிக் கொண்டது என, பாதிக்கப்பட்ட நடிகரே அறிவித்து அது பழைய ஏடுகளில் காணப்படும் ஆதாரமான செய்தி!

அது கிடக்கட்டும், பிரச்சினைக்கு வருவோம்!

"மக்களுக்கு நன்மைகளைச் செய்ய நினைக்கும்போது அதிகாரிகள் குறுக்கிட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் படியரிசித் திட்டம் கொண்டு வந்தவர் அண்ணா" என்று இதே எம்.ஜி.ஆர். அண்மையில்தான் சட்டமன்றத்தில் கூறினார்.

ஆனால், அரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அதிகாரிகள் ஆட்சேபித்ததையும் மீறி, நான் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியது தவறு என்கிறாரே, ஏன்?

இதிலும் இரட்டை வேடமா?

அப்படியாவது எந்த அதிகாரி ஆட்சேபித்தார்? ஏன் ஆட்சேபித்தார்? என்ன காரணம் காட்டப்பட்டது ஆட்சேபணைக்கு? இவைகளைப் பற்றி எம்.ஜி.ஆர். விவாதிக்கத் தயாரா?

எது, எதற்கோ கோப்புகள் இருக்கின்றன, எனப் பேசியவர் இந்தக் கோப்புகளையும் குவித்து வைத்துக் கொண்டு வாதிடத் தயாரா?

இந்த வீடு கட்டும் திட்டத் தொடக்கத்திலே ஒரு அதிகாரி தவறாகச் செயல்படுகிறார் என்று அப்போதே எதிர்க்கட்சியில் இருந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் சுட்டிக் காட்டினார்கள். "ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்! என்று கூறினேன். அவ்வாறே நடவடிக்கை எடுக்கப்பட்டது! இப்போது அந்த அதிகாரி எதை நம்பி, யாரை அடைக்கலம் புகுந்திருக்கிறாரோ - புரியவில்லை! ரத்தத்தின் ரத்தமன்றோ, அதனால்தான் எம்.ஜி.ஆர். இந்த விஷயத்தில் அதிகாரிகள் பக்கம் பேசுகிறார் போலும்!"

பனிரெண்டு கோடி ரூபாய் பாழாம்.! அரிஜன வீடுகள் நாற்பதாயிரமும் அடித்தளங்கள் ஆடுகின்றனவாம்! அவற்றை ஆடாமல் எம்.ஜி.ஆர்.தான் இப்போது பிடித்துக் கொண்டிருக்கிறாராம்!

எவ்வளவு பெரிய பொய்!

மிகமிக அபாண்டம்!

அவதூறு!

நாற்பதாயிரம் வீடுகளும் அஸ்திவாரம் ஆடிப்போய் விட்டது என்கிறாரே. அதை அவர் நிரூபிக்கத் தயாரா?

பெரிய திட்டத்தில் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு வீடுகளில் பழுது ஏற்பட்டிருக்கலாம். அந்தக் குறைகளைத் தவிர்த்து, திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமே யல்லாமல், தன்னால் கையாலாகாது என்பதற்காக - அல்லது தனக்கு விருப்பமில்லை என்பதற்காக ஒரு அநியாயமான கற்பனையை, பொறுப்பான இடத்திலே இருப்பவர் மக்களிடம் கூறுவது கண்ணியமான காரியமாகாது!

இப்படி வேண்டுமென்றே புழுதிவாரித் தூற்றாமல் பனிரெண்டு கோடி ரூபாய் பாழானதற்கான புள்ளி விவரக் கணக்கைத் தயக்கமின்றி வெளியிட முன்வர வேண்டும்.

பொய் - அவரது உடம்போடு பிறந்தது.

அதனை மாற்றிக்கொள்ள முடியாமல்தான்

மொரார்ஜியைப் பற்றி அவதூறு கூறி பிறகு, மன்னிப்புக் கேட்டு அறிக்கை விட்டார்!

இனியாவது அவர் எச்சரிக்கையுடன் பேசுவது நல்லது!

அன்புள்ள,

மு.க.

(26-10-1977)

# 496. மு.க.ஸ்டாலினுக்கு கலைஞர் கடிதம்!

## சிறையிலிருக்கும் கலைஞர் 28.11.77 அன்று மு.க.ஸ்டாலினுக்கு எழுதிய கடிதம்.

**கருணாநிதி**

**மத்திய சிறை**
**சென்னை**
28-11-1977

**அன்புள்ள ஸ்டாலின்!**

உனக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தி கேட்டு மகிழ்ச்சி. சாந்தாவுக்கு என் வாழ்த்துகளைக் கூறவும். 1953-ல் திருச்சி சிறையில் ஆறு மாத தண்டனை பெற்று நானிருந்த போது நீ கைக்குழந்தை! வீட்டிலிருந்து என்னைக் காண வருபவர்களோடு குழந்தையாக இருந்த நீயும் வருவாய். இருபத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு சென்னைச் சிறையில் மிசா கைதியாக (1976) ஓராண்டு நீ இருந்த போது நான் உன்னைக் காண வந்து கொண்டிருந்தேன். உன்னுடனும், கழக உடன்பிறப்புகளுடனும் தம்பி மாறன் மிசாக் கைதியாக இருந்த போது அவனுக்கோர் பெண் பிறந்தது. அந்தக் குழந்தையும் தன் தந்தையைப் பார்க்க சிறைச்சாலைக்குத்தான் வந்து கொண்டிருந்தது. இப்போது உனக்குப் பிறந்திருக்கிற என் பேரனும் என்னைப் பார்க்க சிறைக்கு வருவான் என்று கருதுகிறேன். இந்த அனுபவங்கள் எவ்வளவு இனிமையானவை பார்த்தாயா? இந்தக் குடும்பத்தில் மட்டுமல்ல, நமதியக்கமாம் பெரிய குடும்பத்தில் எத்தனையோ உடன்பிறப்புகளுக்கு இப்படிப்பட்ட சிறை அனுபவங்கள் கிடைத்திருக்கின்றன.

பொது வாழ்வு பூங்கா விநோதமல்ல! புயலை எதிர்த்து நிற்பது!

இதைப் புரிந்து கொள்ளாத சில பேர், இன்னமும் நாட்டிலே இருக்கிறார்கள்.

பாவம்! அவர்கட்காக நான் பரிதாபப்படுகிறேன்.

புதிய பேரனுக்கு என் வாழ்த்துகள்.

அன்புள்ள,

மு. க.

(04-12-1977)

# 497. நல்லியண்ணனுக்கு கடிதம்!

## வழக்கறிஞர் நல்லியண்ணன் எழுதிய கடிதத்திற்கு சென்னை மத்திய சிறையிலிருந்து கழகத் தலைவர் கலைஞர் எழுதிய பதில் கடிதம்!

கருணாநிதி

மத்திய சிறை

சென்னை

1-10-1977

உடன்பிறப்பே,

உன் மடல் கண்டு நான் மகிழ்ந்தேன். புயல் நிவாரண நிதிக்கு எனது சிறைச்சாலை முகவரிக்கே தொகை அனுப்பி வைக்கவும். ஆளுநரிடம் அந்தத் தொகை சேர்க்கப்பட்டு நமது மாநில அரசின் வாயிலாகத் தமிழ் மக்களின் துயர் துடைக்க நம்மாலியன்ற பணியினைச் செய்திடுவேம்.

உடல்தான் சிறைப்பட்டிருக்கிறதே தவிர, எங்கள் உள்ளமெலாம் வெள்ளத்தாலும், புயலாலும் வேதனையுற்றத் தமிழ் மக்களின் தொல்லைகளை எண்ணித்தான் அவர்களின் பின்னால் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

தம்பி நல்லியண்ணன்,

வழக்கறிஞர்,

10, பெசன்ட் ரோடு,

ராயப்பேட்டை,

சென்னை - 14.

அன்புள்ள,

மு. க.

(05-12-1977)

# 498. எட்டுக்குக் காரணம் ஒன்பது?

**உடன்பிறப்பே,**

**நாற்பது நாட்கள் இடைவெளிக்குப் பிறகு** உனக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன். துப்பாக்கி குண்டுகளுக்குப் பலியான தீனன், பாபு, சுப்பிரமணி ஆகியோருக்கு வீரவணக்கம் செலுத்திவிட்டு - நாங்கள் சிறைப்பட்டோம் என்றும், எங்கள் மீது கொலை முயற்சி, சதித் திட்டம் போன்ற பல பிரிவுகளில் வழக்கு போடப்பட்டிருக்கிறதென்றும் கேள்வியுற்று அதிர்ச்சியின் காரணமாக உயிர் விட்ட பம்பாய்ச் செழியன், புரசை பீட்டர் ஐசக், கோரிப்பாளையம் மைதீன் பிச்சை, நாகர்கோயில் பேரின்பதாஸ் ஆகியோர் கல்லறைகட்குக் கண்ணீரைக் காணிக்கையாக்கிவிட்டு, காலிழந்த வான்மதியுட்பட காயமுற்றுத் தழும்பேற்று நிற்கும் நூற்றுக்கணக்கான உடன்பிறப்புகளுக்கு ஆறுதல் கூறிவிட்டு, இயற்கையின் சீற்றத்தால் தமிழகத்திலும், ஆந்திரத்திலும் அழிந்துபட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள், விழிகளில் குளம் கொண்டு வேதனை நெருப்பு நெஞ்சிலே மூண்டிட தவித்து நிற்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் - இந்தக் கொடுமைகளை நினைத்துப் பார்க்கவும் நடுங்குகின்ற நெஞ்சுடன், உடன்பிறப்பே! உனக்கு இந்த மடலை எழுதுகிறேன்.

நிருபர்கள் என்னைக் கேட்டபோது, நாற்பது நாட்கள் எங்களுக்கு அளிக்கப்பட்ட ஓய்வு என்று தான் சொன்னேன். ஆனால், அந்த நாற்பது நாட்களிலும் ஏடுகள் வாயிலாகவும், நேர்காணல் மூலமாகவும் எங்களை வந்தடைந்த செய்திகள் கிடைத்த ஓய்வை நாங்கள் அனுபவிக்கவிடவில்லை.

புயலும், வெள்ளமும் பல ஊர்களையே இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிட்டது - பல ஆயிரம் உயிர்களையே பறித்துக்கொண்டு ஓடிவிட்டது - எஞ்சியிருப்போர்க்கும் கிடைக்க வேண்டிய உதவிகள் உரியகாலத்தில் கிடைக்க முடியாமற் போய்விட்டது - இத்தகைய செய்திகள்தான் சிறைச்சாலைக்குள் படையெடுத்த வண்ணமிருந்தன.

நாங்களோ - நீண்டு உயர்ந்த மதிற்சுவர்களுக்குள்ளே கம்பிக் கூண்டுகளில்! எங்களைச் சிறையில் அடைத்து மட்டுமல்ல, அடைபட்டுள்ள எங்களைப் பற்றி அமைச்சர்கள் உதிர்த்த இழிமொழிகள் - பழிச் சொற்கள் - அமைச்சர்கள் போதாதென்று அவர்தம் தயவுக்காகக் காத்திருப்போர் செய்திட்ட அர்ச்சனைகள் - அனைத்தையும் அண்ணா கற்றுத் தந்த அலட்சியச் சிரிப்பால் புறங்கண்டோம். எனினும், இயற்கையின் சீற்றத்தால் தாக்குண்டு தவிக்கும் நம்மருந் தமிழ் நாட்டு மக்களை, செய்தி கேள்வியுற்ற அடுத்தகணமே ஓடோடிச் சென்று பார்த்து உதவிகள் புரிந்திட இயலாமல் கால்கள் கட்டிப் போடப்பட்டிருக்கின்றனவே எனக் கலங்கினோம்.

தடையுத்தரவை மீறிடச் சென்ற எங்கள் மீது அதற்குரிய சட்டப்பிரிவின்படி வழக்கினைத் தொடுக்காமல், இந்திரா காந்தியைக் கொல்ல முயற்சித்தோம், கொலை முயற்சி செய்வதற்காகச் சதி செய்தோம் என்ற பயங்கரமான குற்றங்களைச் சுமத்தி வழக்கு போடப் போவதாக அறிவித்தனர். 307-வது பிரிவு - கழகக் கண்மணிகள் அனைவர் மீதும் பாய்ந்தது! இந்திரா ஆட்சிக் காலத்தில் மிசா சட்டம் அரசியல் கட்சிகளின் மீது ஏவப்பட்டது போல, இங்கே எதற்கெடுத்தாலும் 307-வது பிரிவு மினி மிசா உருக்கொண்டு கழகத்தினர் மீது சீறிப் பாய்ந்தது.

நான் என்ன செய்ய முடியும். சட்டம், தன் வேலையைச் செய்கிறது. சட்டத்தை சட்டத்தால்தான் சந்திக்க வேண்டும். நீதிமன்றம்தான் இனிமேல் எந்த முடிவும் எடுக்குமேயல்லாமல், கைது செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர்கள் விஷயத்தில் அரசு, எதுவும் செய்வதற்கில்லை.

என்று முதலமைச்சர் ஒருநாள் பேசுவார்.

அவர்கள் ஜாமீனில் போகலாம். ஜாமீனில் விடத் தயாராக இருக்கிறேன்.

என்று மறுநாள், இதே முதலமைச்சர் நீதிபதி பாத்திரத்தையும் தானே ஏற்றுக் கொண்டு ஒரு அறிக்கை விடுப்பார்.

நீங்கள் எப்படி ஜாமீனில் விட முடியும்?

என்று யாராவது ஒரு நிருபர், கொஞ்சம் துணிவை வரவழைத்துக் கொண்டு கேட்டுவிட்டால்,

அதாவது, அவர்கள் ஜாமீனில் போக விரும்பினால் அரசாங்க வக்கீல், அதைக் கோர்ட்டில் எதிர்த்து வாதாட மாட்டார்.

இப்படி விளக்கம் தருவார் முதல்வர்.

ஜாமீனில் போக முடியாது என்று அடையாளபூர்வமாக நாங்கள் சில பேர், உறுதியாக அறிவித்ததற்குக் காரணமே; எதற்கெடுத்தாலும் 307-வது பிரிவின்படி கழகத்தினர் மீது கொலை முயற்சி வழக்கும், ஏனைய பயங்கர குற்றப் பிரிவுகளைப் பயன்படுத்தி மிரட்டுகிற வழக்கும் பொய்யின் அடிப்படையில் ஜோடிப்பதை எதிர்க்கிறோம் என்பதுதான்.

ஜாமீனில்தான் போக வேண்டும் என்று கூறப்பட்டிருக்குமானால், வெளியில் உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் எண்ணற்றோர் இருக்கின்றார்கள், அவர்கள் தமிழக மக்களின் துயர் துடைக்கவும் தொடர்ந்து பணியாற்றுவார்கள். கழகக் கோட்டையைக் கட்டிக் காக்கவும் முன்வரிசைப் போர் வீரர்களாகத் திகழ்வார்கள் என்ற நம்பிக்கையுடன் ஆண்டுக்கணக்கில் வேண்டுமானாலும் நாங்கள் சிறையிலிருப்பது என்று தீர்மானித்து விட்டோம்.

ஜாமீனில்தான் விட முடியும்.

என்று சங்கநாதம் புரிந்து கொண்டிருந்தவர்களுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தியது, செயற்குழு அறிவித்த டிசம்பர் ஒன்பதாம் நாள் அறப்போர் மறியல் செய்தி!

உடன்பிறப்பே, ஊருக்கு ஊர் நீ முரசு கொட்டி அறப்போருக்கு ஆர்த்தெழுந்து விட்டாய் என்பதை அவனிக்கே உணர்த்தினாய்!

தமிழகத்தில் தாண்டவமாடும் அநீதியைக் கண்டித்து இலங்கைத் தமிழரும், இலண்டன் வாழ் தமிழரும், வேறு அயல்நாடுகளில் வாழும் தமிழரும், தங்கள் உணர்வுப் பெருக்கை, பாசப்பிணைப்பை வெளிப்படுத்தினர்.

விளைவுகள் என்ன? தமிழக அரசினர் தொடக்கத்திலேயே செய்திருக்க வேண்டிய காரியத்தை, எடுத்திருக்க வேண்டிய முடிவை - டிசம்பர் எட்டாம் நாளன்று தான் யோசித்துப் பார்த்தனர்.

டிசம்பர் எட்டுக்குக் காரணம், டிசம்பர் ஒன்பது என்பதை நாடறியும்!

ஒவ்வொரு முறையும் நாங்கள் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்படுவதும், அரசாங்க வழக்கறிஞர் ரிமாண்டு காலத்தை நீடிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதும், ரிமாண்டு காலம் நீடிக்கத் தேவையில்லை என்று கழக வழக்கறிஞர்கள் வாதாடுவதும் - பின்னர் ரிமாண்டை நீடித்து, நீதிபதி எங்களைச் சிறைக்கு அனுப்புவதுமாக இருந்து வந்தது!

முதல்வரோ, பாதிக்கப்பட்ட பகுதிகளைக் காணச் சென்றாலும் - மணவிழா நிகழ்ச்சியானாலும் - எல்லா இடங்களிலும் இந்திராவைக் கொலை செய்ய முயன்றதற்கு கருணாநிதி மீதும் மற்றவர்கள் மீதும் ஏராளமான தடயங்கள் கிடைத்துள்ளன என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிக்கொண்டேயிருந்தார்.

ஆனால் நீயோ, ஒன்பதாம் தேதியாக உயர்ந்து நின்றாய்!

ஆகவேதான் எட்டுக்குக் காரணம் ஒன்பது என்றாயிற்று!

ரிமாண்டை நீடித்து மீண்டும் காவலில் வைக்க வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தில் குரல் கொடுத்துக் கொண்டிருந்த அரசு வழக்கறிஞர், எட்டாம் தேதியன்று திடீரென்று - புலன் விசாரணைகள் முடிவுற்று குற்றப்பத்திரிகை தயாரிக்கச் சில மாதங்கள் ஆகலாம். எனவே அதுவரையில் இவர்கள் ரிமாண்டில் சிறையில் இருக்கத் தேவையில்லை என்று நீதிமன்றத்தில் அறிவித்தார்.

இதனை அக்டோபர் 31லேயே கூறியிருக்கலாம்!

அதற்குப் பிறகு இரண்டு முறை நாங்கள் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டோம். அப்போதாவது கூறியிருக்கலாம்!

டிசம்பர் எட்டாம் தேதிதான்

அப்படிக் கூறவேண்டிய நிலை

பிறந்திருக்கிறது!

அப்போதும் அந்த ஜாமீன் மந்திரத்தை அரசு வழக்கறிஞர் உச்சரிக்கத் தவறவில்லை. ரிமாண்டு வேண்டாம். ஜாமீனில் விடலாம் என்றார்!

ஜாமீனில் போவதில்லை என்பதுதான் நமது திடமான நிலையாயிற்றே!

அதைத் திட்டவட்டமாக நமது வழக்கறிஞர்கள் பாளை சண்முகமும், கணபதியும் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

ரிமாண்டில் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தவில்லை

என்று அரசு தரப்பு கூறியது. ஆனாலும் ஜாமீன் என்ற போலி கௌரவத்திற்காகப் போராடியது!

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு கோர்ட்டு சம்மன் அனுப்பும் போது வரவேண்டும்

என்ற அறிவிப்புடன் நாங்கள் விடுவிக்கப்பட்டோம்.

இதைத்தான் நான் முன்பே சொன்னேன். கருணாநிதி கேட்கவில்லை!

என்று ராஜாஜி விழாவில் பேசிய முதல்வர் குறிப்பிட்டதாக அவருடைய கட்சிப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

இதையா அவர் முதலில் சொன்னார்! இல்லை! இல்லவே இல்லை!

அரசின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் நாங்கள் ரிமாண்டில் சிறையில் இருக்க வேண்டுமென்றுதான் ஒவ்வொரு முறையும் வலியுறுத்தினார்.

முதல்வரும், அவரைச் சார்ந்தோரும், சார்ந்து இருப்போரும் ஜாமீன் முழக்கங்களைத்தான் செய்து வந்தனர்!

இப்போது ஜாமீனுமில்லை - நிபந்தனையுமில்லை – சர்க்கார் வக்கீலே முன் வந்து,

இனிமேல் ரிமாண்டு தேவையில்லை

என்று நீதி மன்றத்தில் கூறுகிறார்.

ரிமாண்டு காவல் தேவையில்லையென்று அரசு தரப்பினரே கூறிவிட்ட பிறகு ஜாமீன் எதற்காக? கையெழுத்துப் போட்டு விட்டுப் போங்கள் என்று கூடச் சொல்லாமல், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பிறகு சம்மன் அனுப்பினால் வர வேண்டும் என்ற அறிவிப்போடு நீதிபதி, தனது தீர்ப்பைச் சொல்லுகிறார்.

எட்டாம் தேதி அரசு மேற்கொண்ட இந்த நிலைக்குக் காரணம், என் அன்பு உடன்பிறப்பே! நீ ஒன்பதாம் தேதி மேற்கொள்ள இருந்த

நிலைதான் என்பதைச் சிறிதளவு அரசியல் அறிவு உள்ளவர்களும் மறுக்க முடியாது!

சரி நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும் -

நாங்கள் நாளை முதல் ஆறு நாட்கள் புயல் வெள்ளப் பகுதிகட்கு வருகிறோம். இதுவரையில் துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள உனக்கு ஊக்கமளிக்கவும், நமது தமிழ்நாட்டு அண்ணன், தம்பிகள், அக்காள், தங்கைகள், பெற்றோர், உற்றார் அனைவரையும் கண்டு ஆறுதல்களைப் பரிமாறிக் கொள்ளவும், நேரில் நிலைமைகளைக் கண்டு தொடர்ந்து ஆற்றிடவேண்டிய துயர்துடைப்புப் பணிகளை அரசுக்கு எடுத்துரைத்திடவும் இந்தப் பயணம் பயன்படுமென்ற நம்பிக்கையுடன் ஞாயிறு காலையில் நாங்கள் புறப்படுகிறோம்.

எட்டு - எங்களை அனுமதித்தது இந்தப் பயணத்திற்கு!

அந்த எட்டுக்கு காரணம் ஒன்பது அல்லவா?

அந்த ஒன்பதுக்குக் காரணம் என் உடன்பிறப்பே! - நீ அல்லவா?

அன்புள்ள,

மு. க.

(11-12-1977)

# 499. இன்னும் வடியாத வெள்ளம்!

**உடன்பிறப்பே,**

சிறைக்கதவு திறந்தவுடன் சிட்டெனப் பறந்தோம் சென்னையைவிட்டு! நானும், நமது பேராசிரியரும், தலைமைக் கழகச் செயலாளர் வீராசாமியும், தாங்கொணா வெள்ளத்தாலும் புயலாலும் தாக்குண்ட தமிழ் நிலத்தின் பல பகுதிகளைப் பார்வையிட!

மாவட்டக் கழகச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், வட்டாரக் கொள்கை பரப்புச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழகத்தின் பல்வேறு அமைப்புகளின் செயலாளர்கள் ஆங்காங்கு எங்களுடன் கலந்து கொண்டு ஆறு நாள் சுற்றுப்பயணத்திற்குத் துணை நின்றார்கள்.

முதல்நாள் காலை தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனத்திலிருந்து, இறுதியாக ஆறாம் நாள் இரவு திருச்சியில் புகைவண்டி புறப்படும் வரையில், இலட்சக்கணக்கான மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெற்று அவர்கட்கெல்லாம் எங்களின் ஆறுதலைச் சொன்னோம். பாதிக்கப்படாத மக்கள் அல்லது குறைந்த அளவு பாதிப்புக்கு ஆளானோர் - பாதிக்கப்பட்ட ஏழை எளியோர்க்கு உதவிடும் பொருட்டு எங்களிடம் பணமாகவும், நெல் போன்ற பண்டமாகவும் ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையினை இந்த ஆறு நாட்களில் வழங்கியிருக்கிறார்கள். வழங்கியவர்களில் மிகப் பெரும்பாலோர் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று தந்திட்ட போது அவர்களின் கண்களில் பொங்கிய அன்பும், பாசமும் அதனை, வெளிப்படுத்தும் கண்ணீரும் எங்களை மெய்மறக்கச் செய்தன.

வேடசந்தூர் எந்த அளவுக்குத் தொல்லைக்கு உட்பட்ட இடம் என்று உனக்குத் தெரியும். அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நெல் மூட்டைகளும், துணி மணிகளும் ஏராளமாக எங்களிடம் அளிக்கப்பட்டன. மொட்டைத் தலையராக உள்ள ஒருவர்

பரபரப்புடன் மேடையேறுகிறார். அவர் கண்களில் அருவி பெருகியோடிக் கொண்டிருக்கிறது. பதட்டத்துடன் பேசுகிறார். வெள்ளத்தில் என் மனைவி, மக்கள் எல்லாம் போய் விட்டார்கள். அதையும் தாங்கிக் கொண்டு இதோ நான்கு ரூபாய் தலைவரிடம் நிவாரண நிதி தருகிறேன், என்று நான்கு கசங்கிய ரூபாய் நோட்டுகளை என் கையில் வைத்து அழுத்துகிறார். என் நெஞ்சு மட்டுமல்ல, அங்கு கூடியிருந்த பல்லாயிரம் மக்களின் நெஞ்சும் ஒரு குலுங்கு குலுங்குகிறது.

கோடிக்கணக்கில் செலவிடப்பட வேண்டிய துயர்துடைப்புப் பணிகளுக்கு நாம் சேர்த்து அளிக்கப் போகிற ஒரு இலட்சமோ அல்லது இரண்டு இலட்சமோ பெருந்தொகை அல்ல! அணிலும் பாலம் கட்ட உதவியது என்பார்களே! அதைப் போல - நமது கடமையை நாம் செய்யும் போது எத்தனை பரந்த உள்ளங்கள் நம்மை ஊக்கப்படுத்தத் தயாராக இருக்கின்றன என்ற கணக்கைப் பார்த்துத்தான் நாம் நமது பணியில் மேலும் உற்சாகமாக ஈடுபடுகிறோம்.

உடன்பிறப்பே, எத்துணை பேரிழப்புக்கு நமது தாய்த் தமிழகம் உள்ளாகியிருக்கிறது என்பதைப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நெருங்கி அருகே சென்று மக்களைச் சந்தித்தால்தான் உணர்ந்து கொள்ள முடியும்.

நாகை, நகையிழந்த மங்கை போல காணப்படுகிறது என்று கூறினால் அது பொருந்தாது! பகை நுழைந்து பழிதீர்த்துக் கொண்ட நகரம் போல் விளங்குகிறது. கடல் அலையின் பசிக்கும், கடும்புயலின் வெறிக்கூத்துக்கும், அம்மவோ! எத்தனை குழந்தை குட்டிகள் - முதியோர் - இளையோர் பலியாகியிருக்கின்றனர். பச்சைப் பட்டாடை உடுத்திய பாவை போல் காட்சி தரும் தஞ்சைத் தரணியும், தென்னாற்காடு மாவட்டத்துக் கழனிகளும், திருச்சி புதுக்கோட்டை நெல் வயல்களும், பாழ்பட்டுக் கிடக்கும் நிலையைக் கல்மனம் கொண்டோர் காணினும் கண்ணீர் வடிப்பர்!

திருக்கண், லக்கம்பட்டி என்ற இரண்டு சிற்றூர்கள்! குடகனாறு அணைக்கு மேலேயுள்ள ஊர்கள்! வரட்டாறு எனும் காட்டாறு பெருகியதாம் - கண்மாய்கள் பெருமழையின் காரணமாக நிரம்பி வழிந்ததாம் - எல்லாம் ஒன்றுகூடி ஆங்காங்குள்ள ஊர்களின் மீது படையெடுத்தனவாம்! திருக்கண், லக்கம்பட்டி என்ற இரண்டு சிற்றூர்களில் மட்டும் எழுபது பேர் பிணமாயினர்.

அந்த இரு ஊர்களுக்கும் நாங்கள் சென்றோம். ஊரார் எங்களைச் சூழ்ந்து கொண்டு, தங்களுக்கு இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லையென்று கூறினர்.

முனியப்பன் என்ற நடுத்தர வயது படைத்தவர், தன்னுடைய சோகக் கதையைச் சொன்னார். நான் சிறு கடை வியாபாரி. எங்கள் ஊரை நோக்கி காட்டாற்று வெள்ளம் வருவதையறிந்து; வாருங்கள் எல்லோரும் மேட்டுப் பகுதிக்குப் போவோம் என்று கூச்சல் போட்டேன். ஊராரும், என் மனைவி, மக்களும் வெள்ளம் வந்த திசைக்கு எதிர்த்திசையில் ஓடினோம். அப்பாடா தப்பினோம்! என்று பெருமூச்சு விடுவதற்குள்ளாக எங்கள் எதிரே மற்றொரு கண்மாய் உடைத்துக் கொண்டு வெள்ளம் வந்து கொண்டிருந்தது. பதறிப் போன நாங்கள் அங்குள்ள ஒரு சாவடியில் நுழைந்தோம். வெள்ளப் பெருக்கு எங்கள் கழுத்து மட்டத்திற்கு உயர்ந்தது. பிள்ளைகளைத் தூக்கிக் கொண்டு, சாவடியின் கூரையைப் பிடித்துக் கொண்டு தொங்கினோம். அப்போது எதிரே இருந்த ஒரு கட்டிடம் இடிந்து விழுந்தது. அது விழுந்த வேகத்தில் வெள்ளத்தில் ஒரு பெரிய அலை எழுந்தது. அவ்வளவுதான்...

இதற்குமேல் முனியப்பனால் பேச முடியவில்லை. தேம்பித் தேம்பி அழுதார். நாங்களும் கதறி அழுது விட்டோம். அந்தப் பெரிய அலையின் வீச்சில் முனியப்பனுடைய மனைவி மக்கள் அவர் கண் எதிரிலேயே வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டு விட்டார்கள்.

இப்படி வேதனைச் செய்திகள் ஒன்றா? இரண்டா?

துயர் துடைப்புப் பணிகளில் அந்த முனியப்பன் போன்றவர்களுக்கே இதுவரையில் அரசின் உதவிக் கரம் நீளவில்லையென்பது எனக்கு வியப்பாகவும் இருக்கிறது. வேதனையாகவும் இருக்கிறது.

வள்ளிக்குடியென்னும் சிற்றூர் - அங்கு ஒரு விதவைத் தாயும், அவர்களின் மகளும் எங்களிடம் வந்து அழுது புலம்பினர். அந்த அம்மையாரின் கணவர் ஒரு ஆசிரியர். அதே ஊரில் இன்னொருவர். இருவருமே குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருந்தவர்கள். ஆசிரியர் பெயர் பழனியப்பன் என்று கூறினார்கள். இருவரும் வெள்ளத்தில் மாண்டுவிட்டனர். அவர்களின் குடும்பத்தை அரசாங்கத்தின் ஆயிர ரூபாய் நிதி எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

நாகையில் நகரசுத்தித் தொழிலாளர் வாழ்ந்த பகுதி நாசமுற்றுக்கிடக்கிறது. அவர்களுக்கு நிவாரணம் எதுவும் நாங்கள் அவர்களைச் சந்திக்கிறவரையில் தரப்படவில்லை. கரூருக்கு அருகே ஆற்றோரத்தில் குடியமர்த்தப்பட்டிருந்த இலங்கை அகதிகள் கழக அரசு காலத்தில் நூற்பாலையொன்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அவர்களின் வீடுகள் தரைமட்டமாகி, உடுத்த உடையின்றித் தவிக்கின்றனர். அவர்களும் தங்களுக்கு எந்த உதவியும் வந்து சேரவில்லையென்று முறையிட்டனர்.

திருச்சி, திருவரங்கம் பகுதிகளிலும், அறந்தாங்கி போன்ற இடங்களிலும் - ஏன்? நாங்கள் சென்று பார்த்த எல்லா இடங்களிலுமே கண்ணீரால் எழுதப்பட்ட மனுக்கள் ஐயாயிரத்திற்கு மேல் குவிந்துள்ளன எங்களிடம்!

நமது கழக உடன்பிறப்புகள், துயர் துடைப்புப் பணிகளில் மிக்க அக்கறையுடனும், ஆர்வத்துடனும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள் நேரிலே அறிந்து மனநிறைவு கொண்டோம். எனினும், ஆறுநாள் சுற்றுப் பயணத்தில் நாங்கள் கண்ட கோரக் காட்சிகளாலும், கேள்வியுற்ற சோகச் செய்திகளாலும் ஏற்பட்டுள்ள மனப்புண் விரைவில் ஆறக்கூடியதல்ல!

புயல் ஓய்ந்துவிட்டது - ஆனால் புயலினால், மூர்க்கத்தனமான விளையாட்டால் நிலமகளின் மேனியெங்கும் ஏற்பட்டுள்ள ரத்தக் கீறல்களின் எரிச்சல் ஓய்ந்தபாடில்லை!

வெள்ளம் வடிந்துவிட்டது - ஆனால் மென்மை மிகுந்த தண்ணீர் மிருக பலங்கொண்டு தமிழகத்தைத் தாக்கியதால் ஏழை மக்கள் வடிக்கும் கண்ணீர் இன்னும் காய்ந்தபாடில்லை!

இன்னும் வடியாத வெள்ளத்தை, ஆம்! மக்களின் கண்ணீர் வெள்ளத்தைக் கண்டு திரும்பியுள்ளோம்! இந்த வெள்ளமும் வடியக் கழகம், தன்னாலியன்றதையெல்லாம் செய்யும்.

அன்புள்ள,

மு. க.

(18-12-1977)

# 500. அமைச்சரின் உவமை அவர்களுக்கே பொருந்தும்!

**உடன்பிறப்பே,**

வழுக்கி விழுந்தவள் பத்தினித் தன்மை பற்றி போதகம் செய்யப் புறப்படுகிறாள்

இப்படியொரு வாசகத்தை உவமையாக்கித் தி.மு. கழகத்தைச் சாடியிருக்கிறார் ஒரு அமைச்சர்!

உவமை கூறி எழுதிய அமைச்சருக்கும், அவரது கட்சித் தலைவருக்கும் இந்த வாசகம் எவ்வளவு பொருத்தமுடையது என்று உலகத்திற்கே தெரியும்!

சிறைச்சாலையில் இந்தியாவில் ஒரு தீவு எனும் சிறிய நூல் ஒன்று எழுதியதாகக் குறிப்பிட்டேன் அல்லவா? அத்துடன், சிறையில் பூத்தச் சின்னச் சின்ன மலர்கள் என்ற எழுத்துச்சரம் ஒன்றும் தொடுத்துள்ளேன். அதில் ஒன்றை உனக்கு இப்போது நினைவு படுத்துகிறேன்.

உலகைத் திருத்தும் உத்தமன் என்று, ஒருவன் தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டான். அவன் வீட்டு நிலைக் கண்ணாடிக்கு ரசம் பூசப்படவில்லை. காரணம்; அவன் முகம் அதில் தெரிந்துவிடும் என்பதுதான்.

இப்படி ரசம் பூசப்படாத நிலைக் கண்ணாடியை வீட்டிலே மாட்டி வைத்துக் கொண்டிருக்கிற இன்றைய முதலமைச்சரும், அவரது அமைச்சர் குழுவினரும் மேடையேறித் தங்களது பத்தினித்தனம் குறித்துப் பேசும் போது;

- கப்பல்கள் கைதட்டிச் சிரிக்கின்றன,
- பேருந்துகள் பெருநகை புரிகின்றன,
- கால்நடை வைத்தியக் கல்லூரிகள் ஜெயகோஷம் போடுகின்றன,

- வெங்கடாத்திரி கமிஷன் விலா நோகக் கெக்கலி கொட்டுகிறது,
- நகர்வாலா மகாராணியிடம் பெற்ற நாற்பத்தைந்து லட்சம் கூத்தாடிக் கும்மாளம் போடுகிறது,
- படகு பல் இளிக்கிறது,
- குண்டர்களின் அரசர் கொட்டி முழக்குகிறார்.
- கண்ணாடி மாளிகை கதகளி ஆடுகிறது.

இவற்றையெல்லாம் வெளிப்படையாக அம்பலத்திற்குக் கொண்டு வரும் நாள் அதிகத் தொலைவில் இல்லை.

சில அமைச்சர்களின் நிலை எனக்குப் புரிகிறது. காலையிலிருந்து மாலைக்குள் ஒரு முறையாவது கருணாநிதிக்கு ஒரு அர்ச்சனை - கழகத்தின் மீது ஒரு தாக்குதல் - நடத்தா விட்டால், மறுநாள் விடியற்காலை தினசரி இதழில், அந்த அமைச்சர் விலக்கப்பட்டார் என்ற செய்தி வரக்கூடிய அளவுக்கு நிலைமை முற்றி விடும் என்று மிரட்டல்கள், கணைகளாகப் பாய்கின்றனவாம். எனவே, அந்தப் பரிதாபத்திற்குரிய பதவி விரும்பிகள் என்னைப் பயன்படுத்திக் கொண்டு எப்படியோ இருந்திடும் இடத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள்.

கருணாநிதி தப்பவே முடியாது என்று கப்பலின் உச்சியில் ஏறி நின்று ஒரு அமைச்சர் கடுமையாக எச்சரித்துள்ளார். கழக ஆட்சி கலைக்கப்பட்டவுடன் நீ கருணாநிதியை எதிர்த்து அறிக்கை விடாவிட்டால் தப்பவே முடியாது என்று இந்திராவின் ரகசிய அதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டு, எதிர்முனைக்குச் சென்றுவிட்ட அந்த அமைச்சரின் ஜாதகம் முழுவதும் என் கையிலே இருக்கும்போது அவர் எனக்கு எச்சரிக்கை விடுகிறார் உடன்பிறப்பே, எச்சரிக்கை விடுகிறார்!

மார்கழி மாதமாம் - மதி நிறைந்த நன்னாளாம் - அதில் நான் மதியிழந்து பேசுகிறேனாம் - அந்த அமைச்சர்தான் தலையிலும், நாவிலும் வழிந்தோடும் கொழுப்பை மறைத்துக்கொள்ள முடியாமல் என்னை மதியிலி என்று கொக்கரித்திருக்கிறார், ஒரு கூட்டத்தில்!

நான் இவர் விஷயத்தில் மதியிழந்தது உண்மைதான்! மரணப் படுக்கையில் இருந்த வேளாண்மைத் துறை அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் என் கரங்களைப் பிடித்துக் கொண்டு, எந்த ஒரு நபருக்குக் கட்சியிலே முக்கிய இடமோ, பதவியோ கொடுக்காதே! அவன் துரோகம் செய்யத் தயங்கமாட்டான் - என்று கூறினாரோ? அந்த நபருக்கு - கோவிந்தசாமி அவர்களுக்கு கையடித்துச் செய்து கொடுத்த சத்தியத்தையும் மீறி பெரிய பதவி கொடுத்தேனல்லவா? அது மதியிழந்து செயல்பட்டதற்கு உதாரணம்தானே!

உடன்பிறப்பே, நீ வாய் திறந்து கேட்காவிட்டாலும் - உன் விழி மூலம் பேசுகிறாய். எனக்குப் புரிகிறது!

அந்த ஒரு நபர் மட்டும் தானா? படிக்கட்டுமா பட்டியலை! மதிகெட்ட காரணத்தால் தானே நீ அவர்களையெல்லாம் உயரத்தில் தூக்கிவைத்தாய்! உன் தோளை மிதித்து மேலே ஏறியவர்கள், உன் தலையில் கல்லையன்றோ போட்டார்கள்!

இப்படித்தான் நீ பேசுவாய் - பேசியும் இருக்கிறாய் - என் செய்வது, மற்றவர் மனஅலைகளைப் பதிவு செய்கிற கருவியோ, படம் பிடித்துக் காட்டுகிற விஞ்ஞானமோ இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லையே!

இதயத் துடிப்புகளை அறிந்து கொள்ளக் கருவியுண்டு - இதயத்தில் தேங்கியிருக்கும் எண்ணங்களை அனுபவக் கருவி தவிர, வேறு எதனாலும் கண்டு கொள்ள முடியாதல்லவா?

அனுபவச் சுரங்கமாக விளங்கிய அண்ணா அவர்களேகூட, தன் நிழல்போல் இருந்த சிலர் துரோகிகளாக இருந்ததைக் கண்டுகொள்ள முடியவில்லை என்கிறபோது நான் எம்மாத்திரம்?

துரோகிகள் பேசட்டும்! எழுதட்டும்! அவர்களைப் பேச எழுத அவர்களின் தலைவர், நன்றாகத் தூண்டி விடட்டும்!

எழுத்தில், பேச்சில் இன்று எந்த எல்லைக்கு வந்திருக்கிறார்கள் என்றால், நான் பிறந்த குலத்தையே நாள்தோறும் இழிவுபடுத்துகிற அளவுக்கு வந்திருக்கிறார்கள். முதலமைச்சரின் அந்தரங்க ஆசியும் அவர்களுக்குத்தான் அமோகமாகக் கிடைக்கிறதாம். அறிஞர் அண்ணாவும் நானும் பிறந்த குலம், கீழ்த்தர அரசியல்வாதிகளால் விமர்சிக்கப்படுவதும்,

விகாரப்படுத்தி எழுதப்படுவதும், பேசப்படுவதும் தமிழகத்தில் அண்ணா உயிரோடிருக்கும்போதே நடைபெற்ற காரியம்தான்! அந்த நற்காரியத்தை நண்பர் எம்.ஜி.ராமச்சந்திரன் தனது தளபதிகளின் மூலமும், அமைச்சர்களின் மூலமும் தொடருகிறார் இப்போது! அவர்கள் அவ்வாறு தாக்கிட மறந்தாலோ, தயங்கினாலோ, அவர்களை ஊக்கி உற்சாகப்படுத்தி உம்! எழுதுக, பேசுக! என்று உசுப்பிவிட்டுக் கொண்டிருக்கிறார்.

நடக்கட்டும் இந்த அரசியல்! நாம் பொறுமையாகச் சந்திப்போம் இந்த அரசியலை!

அவர்களுக்கே பொருந்துகிற அமைச்சரின் வாசகத்தை நினைவுபடுத்தி முடிக்கிறேன்.

வழுக்கி விழுந்தவள் பத்தினிதனம் பற்றிப் போதகம் செய்யப் புறப்படுகிறாள்.

அமைச்சர், தன்னையும் தன் தலைவரையும் இப்படித் தாக்கிக்கொண்டு அடையாளம் காட்டிக் கொண்டிருக்கக்கூடாது! இருப்பினும், உண்மை வெளிவந்ததே என்பதில் நமக்கு மகிழ்ச்சி! இன்னும் வெளி வர வேண்டிய உண்மைகள் பல இருக்கின்றன!

அன்புள்ள,

மு. க.

(21-12-1977)

# 501. தீப்பொறியாக்காதீர்!

உடன்பிறப்பே,

ஆத்திரம் அறிவை மறைக்கும் என்பது பழமொழி! நமது மாநில அமைச்சர்களைப் பொறுத்து அந்த முதுமொழி எவ்வளவு உண்மையாக இருக்கிறது என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உண்டு. அவற்றில் ஒன்றை இன்று குறிப்பிடுகிறேன்.

விவசாயிகளின் கோரிக்கையை முன்வைத்துச் சென்னையில் பேரணியொன்று நடத்திட தி.மு.கழகம் முடிவெடுத்துள்ளது. தமிழகமெங்கணுமிருந்து விவசாயப் பிரதிநிதிகள் அந்தப் பேரணிக்கு வர இருக்கிறார்கள். பேரணி பற்றிய முடிவுகளும், விவசாயிகளின் முக்கிய கோரிக்கைகள் பற்றிய விளக்கங்களும் விவசாயிகள் அறப்போராட்ட ஆய்வுக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளன.

பேரணியென்ற செய்தியைப் படித்ததுமே மாநிலத்து உணவு அமைச்சர் எட்மண்ட் அவர்கள் துள்ளிக் குதித்து, தோளைத் தட்டி, பொய்களை அள்ளிக் கொட்டியிருக்கிறார்.

முதலில் சவால்! கருணாநிதிக்குப் போராடத் தகுதி ஏது? கழகத்திற்குப் போராடத் தகுதியே கிடையாது. இப்படி உக்கிரமாக உதித்திருக்கிறார் வார்த்தைகளை!

ஒத்திகை பார்க்கப்பட்ட மற்போர், வாட்போர் இவற்றைத் திரைப்படம் தயாரிக்கும் இடங்களில் பார்த்து ரசிகமணியாக மாறியிருக்கும் உணவு அமைச்சருக்குப் போராடும் தகுதிக்கு உரியவர் தன்னுடைய தலைவர் மட்டுமே என்கிற எண்ணம் போலும்!

அமைதியான முறையில் ஊர்வலம் நடத்தி, விவசாயிகளின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை முதலமைச்சரிடம் தருவது, என்பதுதான் முதற்கட்டமாக நடத்தப்படும் இந்தப் பேரணியின் நோக்கம்.

அமைச்சர், அடுத்த கட்டங்கள் போராட்டக் கட்டங்களாகவே அமைய வேண்டும் என்ற உள்நோக்கத்தோடோ என்னவோ, சீறிப் பாய்கிறார்! சினவேங்கையென உறுமிக் காட்டுகிறார்!

தகுதியுள்ளவர்கள் தங்களைத் தவிர யாருமில்லை, என்று தருக்கர் குரலிலே பேசுவதைவிட தகுதியற்ற தன்மை வேறொன்றிருக்க முடியாது. இதனை அமைச்சர் உணர்ந்து கொள்வது நல்லது.

தி.மு.க. ஆட்சியில் நெல்லுக்குக் குவிண்டாலுக்கு 73 ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால், தற்போது 77 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

என்று வடிகட்டிய பொய் ஒன்றையும் அமைச்சர் கூறியிருக்கிறார். இது, அவருடைய அதிகாரப்பூர்வமான கட்சி ஏட்டிலேயே வந்திருக்கிறது.

நெல் விலை 74 ரூபாய்க்கு மேல் தருவதற்கு மத்திய அரசு சம்மதிக்காத காரணத்தால் கழக அரசு, விவசாயிகளுக்கு போனஸ் பத்து ரூபாயும், போக்குவரத்துச் செலவு ஐந்து ரூபாயுமாகச் சேர்த்து மொத்தம் 89 ரூபாய் கிடைத்திடக் கொள்முதலில் வழி கண்டிருந்தது என்பதை ஏனோ இந்த எட்மண்ட் மறைக்க முயலுகிறார்?

இவர் மறைத்தாலும் விவசாயிகள் மறந்துவிடக் கூடியதல்ல இது!

அரசுக் கொள்முதல் இல்லை இப்போது - விவசாயிகள் வெளி மாநிலங்களில் அதிக விலைக்கு விற்றுக் கொள்ளலாம் என்று உணவு அமைச்சர் கூறியிருப்பது விந்தையாக இருக்கிறது.

விவசாயிகளிடம் வியாபாரிகள், நெல்லைக் குறைந்த விலைக்கேதான் கேட்கிறார்கள். அரசின் சார்பில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு கட்டுப்படியான விலை விவசாயிகளுக்குத் தரப்படும் என்று அறிவித்தால், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருளுக்குப் பாதுகாப்பு இருப்பதை உணர முடியும். வியாபாரிகளும், விவசாயிகளிடம் குறைந்த விலையில் நெல்லைப் பெறலாம் என்று எண்ணிட மாட்டார்கள். அத்தகைய விலைப் பாதுகாப்பைத்தான் அரசு செய்து தர வேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம்.

சட்டப் பேரவையில் முதலமைச்சர் வாக்குறுதி அளித்த போது உணவு அமைச்சரும் அங்கே தானே இருந்தார். முதல்வரின் வாக்குறுதியைக் கூட கவனிக்காமல் அவரது சிந்தனை எங்கே அலைந்து கொண்டிருந்தது?

கழக ஆட்சிக் காலத்தில் தரப்பட்ட போனஸ், போக்குவரத்துச் செலவுகளைவிட (அதாவது அதிகத் தொகை பதினைந்து ரூபாயைவிட) அ.தி.மு.க. ஆட்சியில் விவசாயிக்கு போனஸ் இன்னும் அதிகமாகவே தரப்படுமென்று பலத்த கரவொலிக்கிடையே முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் முழங்கிடவில்லையா? அதை வானொலி, டெலிவிஷன், நாளேடுகள் அனைத்தும் வெளியிட்டு மகிழவில்லையா?

தன்னுடைய நெல்லுக்குக் குவிண்டாலுக்கு 89 ரூபாய் விலையாகப் பெறும் நிலையில் இருந்த விவசாயி, புயலாலும், வெள்ளத்தாலும் தாக்குண்டுள்ள இந்த நேரத்தில் அ.தி.மு.க. ஆட்சியில், 77 ரூபாய்தான் பெற முடிகிறது என்றால், இது தி.மு.க. ஆட்சியில் இருந்ததைவிட, அதிக விலையென்று நண்பர் எட்மண்ட் அவர்களால் எப்படி வாதாட முடிகிறது என்பது தான் எனக்குப் புரியவில்லை.

எனவே, உண்மைகளைப் புறக்கணித்து விட்டு, தி.மு.க.வுக்குப் போராடத் தகுதியில்லை என்று எட்மண்ட் போன்றோர் பேசிக்கொண்டிருப்பார்களேயானால், அது அவர்களின் இயலாமையைக் குறிப்பதன் அடையாளமே தவிர வேறல்ல! இவ்தம் தகுதியை மக்கள் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிற நேரத்தில் உணவு அமைச்சர் இவ்வாறு உரைப்பது உளறல் வரிசையில் சேர்க்கப்பட்டு விடும்.

சென்னையில் நடைபெறும் விவசாயப் பேரணியினரின் கோரிக்கைகளைப் பெற்று விவாதித்து விவசாயப் பெருங்குடி மக்களின் வேதனையைத் தீர்க்க முன்வர வேண்டுமே யல்லாமல், படபடப்பாகப் பதில் கூறுவது பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாகத் தீப்பொறியாக ஆக்கி விடும்.

அன்புள்ள,

மு. க.

(22-12-1977)

42213
தி.மு.க. அறக்கட்டளை
போராசிரியர் ஆய்வக நூல் நிலையம் சென்னை-18
அண்ணா அறிவாலயம்

# 502. நிறைஉழைப்புத் தோள்களே! வருக! வருக!

**உடன்பிறப்பே,**

உற்பத்தி செய்கிற நெல்லுக்கு நியாயமானதும், கட்டுப்படியானதுமான விலை கிடைக்க வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்காகவும், நெல் விலை குறைந்தும், அரிசி விலை ஏறியும் உள்ள முரண்பட்ட போக்கை அகற்றி விவசாயிகட்கும், வாங்கிப் புசிப்போருக்கும் தக்கது செய்திட வேண்டுமென்று எடுத்துக் கூறவும், கரும்பு விலையை நிர்ணயம் செய்திட முன்போல முத்தரப்பு மாநாட்டினைக் கூட்ட வேண்டுமென்று சுட்டிக் காட்டவும், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏழை விவசாயிகட்கு கடன் ரத்து போன்றவைகளை நடைமுறைப் படுத்த வேண்டுமென்று கேட்கவும், முதலமைச்சரிடம் கோரிக்கை விளக்க மனு ஒன்றை அளித்து விவாதித்திட சென்னையில் வரும் 28-ஆம் தேதியன்று காலை விவசாயிகள் பேரணி யொன்றை தி.மு.க. சார்பில் விவசாயிகள் போராட்ட ஆய்வுக் குழு நடத்திடத் திட்டமிட்டுள்ளது. அத்தகைய மனு ஒன்றை அளித்து விவாதிக்க வேண்டுமென்ற முறையில் குழுவின் தலைவர் நண்பர் அன்பில் அவர்கள் முதல்வருக்குக் கடிதமொன்றும் எழுதியுள்ளார்.

விவசாயிகள் பேரணி என்றதும் உணவு அமைச்சர், தாண்டிக் குதித்து தலைகீழாகத் தகவல்கள் சிலவற்றைத் தந்தார்.

அடுத்து இப்போது நிதியமைச்சர் மனோகரன், நிலைகுலைந்து ஏதேதோ வார்த்தைக் கணைகளை ஏவியிருக்கிறார்.

அரசுடன் கோரிக்கைகளைப் பற்றிப் பேச்சு நடத்தாமலே போராட்டம் நடத்தப் போவதாகக் கருணாநிதி அறிவித்திருப்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள். இந்தப் போராட்டத்தில் அவர் ஏமாந்து போவார்.

இது நிதியமைச்சரின் பேச்சு! அவர்களின் அதிகாரபூர்வமான கட்சி ஏட்டில் வெளிவந்தது.

கோரிக்கைகள் பற்றிக் கழகத்தின் செயற்குழு, தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது.

அறப் போராட்ட ஆய்வுக் குழுவும், முதலில் விவசாயிகளின் பேரணியை நடத்தி, முதலமைச் சரிடத்திலே கோரிக்கை மனு அளிப்பது என்று தான் அறிவித் திருக்கிறது.

அதற்குள்ளாகக் கொதி தாங்காத உலைப்பானையைப் போல அமைச்சர்கள் குதிக்கிறார்கள், பாவம்!

நிதி அமைச்சர், கோவை விவசாயிகள் நடத்திய போராட்டம் குறித்து எடுத்துச் சொல்லி தி.மு.கழகம், விவசாயிகளைப் பற்றிப் பேசலாமா? என்று கேட்கிறார்.

உடன்பிறப்பே, அப்போது மனோகரனும், அவரது தலைவர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களும் அந்த விவசாயிகள் போராட்டம் குறித்தும், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது என்பது குறித்தும் மாநாடுகளிலும், மேடைகளிலும் பேசியது என்ன என்பது அப்போது கழக ஏடுகளில் வெளியாகி யிருக்கிறது.

இவரும், இவரது தலைவரும் தி.மு.கழகத்தில் இருந்தபோது நடந்த நிகழ்ச்சி யொன்றை எடுத்து வைத்துக்கொண்டு இன்று வாதிடும்போது அப்போது என்னய்யா செய்து கொண்டிருந்தீர்கள்? எதிர்த்துப் பேசினீர்களா? அல்லது கழக அரசு எடுத்த நடவடிக்கைக்கு நியாயங்களை எடுத்துச் சொன்னீர்களா? என்று யாராவது கேட்டால், அதற்கு இந்த அமைச்சர்களின் பதில் எதுவாக இருக்கக்கூடும் என்று எனக்குப் புரியவில்லை.

கோரிக்கை கொடுக்கத்தான் முதலில் பேரணி என்று அறிவிக்கிறோம். கோட்டைக்கு முன் மறியல் செய்வது போலக் கருதிக்கொண்டு கொடுக்கு கொண்டு கொட்டுகிறார்களே! ஏன்?

இவர்களே, முதற்கட்டமாகவே அறப்போராட்டம் கிளர்ச்சி வடிவத்துடன் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களா?

இந்தப் பேரணி மூலமாக அமளியை உருவாக்க ஒத்திகை நடப்பதாகக் கேள்விப்பட்டேன் என்றும் மனோகரன், பேசியிருக்கிறார்!

அமளியை உருவாக்க அ.தி.மு.க. தொண்டர் படை அமைக்கப்பட்டிருப்பதும், அதற்கு இடைவிடாது கலகம் செய்வதற்கானப் பயிற்சிகளை அளிப்பதும், அந்தப் படை அணிவகுப்பை முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் பார்வையிட்டு வாழ்த்துக் கூறுவதும் - சென்னையிலும் மற்ற இடங்களிலும் திட்டமிட்டு நடைபெறுகிற காரியமென்று அனைவருக்கும் தெரியும்.

ஒருவேளை, பேரணியினர் மீது மோதுதலை உருவாக்க ஆளுங்கட்சியினரின் அந்தக் குண்டர்படை ஏவப்படலாம்! அதற்காகத்தான் இப்போதே நண்பர் மனோகரன், அமளியை உருவாக்க ஒத்திகை நடப்பதாக நம்மீது பழி போட முன்வந்துள்ளார்.

உடன்பிறப்பே, அமைச்சர்களின் வாய் சும்மா இருக்க முடியாமல் பேசியதே? இந்த விவசாயிகளின் பேரணிக்கு எதிர்பார்த்ததைவிட எழுச்சி அதிகம் ஏற்பட்டு விட்டது என்றே நான் கருதுகிறேன்.

மனோகரன், ஆணவத்துடனும் பொறுப்பற்றும் பேசியுள்ள வேறு விவகாரங்கள் பற்றி நாளைக்கு எழுதுகிறேன்.

இப்போது, உன் வாயிலாக தமிழகத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் நல்வாழ்வுக்காகத் தி.மு.கழகம் எடுத்துள்ள இந்த முயற்சிக்கு வலிவுகூட்டுங்கள்! சென்னையில் 28-ஆம் தேதியன்று காலையில் நடைபெறும் விவசாயிகள் பேரணிக்கு வந்து கலந்து கொள்ளுங்கள்! அமைதி காத்து, அறநெறி போற்றி, கட்டுப்பாடு குலையாமல், கண்ணியம் சிதறாமல் - நடக்கட்டும் அந்த எழுச்சிமிகு பேரணி!

*சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்*

*ஆறு தேக்கிய நல்வாய்க்காலும்*

நெற்சேர உழுது உழுது பயன் விளைக்கும்
நிறை உழைப்புத் தோள்களே!
நீங்கள் புறப்படுங்கள் சென்னை நோக்கி!
இத்திங்கள் 28-ஆம் நாள்!
இடையிலே சில நாட்கள்தான்!

அண்ணாசாலை - அண்ணா அறிவாலயத்திற்கு அருகாமையிலிருந்து புறப்படும் விவசாயிகளின் பேரணி, வேதனைக்குரலை வெளிப்படுத்தட்டும்! வேண்டுவன யாவை என்பதை நாடாள்வோருக்கு உணர்த்தட்டும்! நாக்குத் தடிப்பேறிப் பேசுவோர்க்கு நல்லதோர் பாடமாக அமையட்டும் அந்தப் பேரணி!

அன்புள்ள,

மு. க.

(23-12-1977)

# 503. மனோகர மகாத்மியம்!

**உடன்பிறப்பே,**

இந்திய யூனியன் வங்கி அளித்திடும் கடன் தொகையைப் பழ வியாபாரிகளுக்கு நிதி அமைச்சர் வழங்குகிற விழா ஒன்று சென்னையில் இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்றது.

அந்த விழாவில் ஒரு நிதி அமைச்சர் என்ற முறையில் மனோகரன் அவர்கள், பொருளாதாரக் கருத்துகளை பொழிவார் என்றும் - ஏழை எளியோர் வாழ்வில் ஒளி பெற இத்தகைய கடன் வழங்கும் திட்டங்களுக்கு மென்மேலும் வங்கிகள் எவ்வாறெல்லாம் திட்டங்கள் தீட்ட வேண்டுமென்ற அரிய யோசனைகளை வழங்குவார் என்றும் - வங்கிகள் தேசிய மயமாவது என்பது பேச்சளவில் இல்லாமல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் செயலளவில் தீவிரப் பணிகளை மேற்கொள்ள எந்த நிலைகளில் முன் வரலாம் என்பது குறித்து எண்ணங்களை தொகுத்தளிப்பார் என்றும் விழாவுக்கு வந்திருந்தோர் எதிர்பார்த்திருக்கக் கூடும்.

ஆனால், பழ வியாபாரிகளுக்குக் கடன் வழங்கும் விழாவில் கழகத்தையும், கழக ஆட்சியையும், என்னையும் காரசாரமாகத் தாக்குவதற்கு, நேரத்தில் முக்கால் பகுதியைச் செலவிட்டிருக்கிறார்!

கடன் வழங்கு விழா - அதில் அவர் கடன் கழகத்தைத் தாக்குவது!

தலைவர் வழிதானே தளபதியாரும் சென்றிட வேண்டும்.

கலைவாணர் விழாவா? அங்கே பஸ் தொழிலாளர் போராட்டம் பற்றி விமர்சனம்?

கல்யாண நிகழ்ச்சியா? அங்கே கருணாநிதி ஜாமீனில் வந்தால் என்ன என்ற காரம் பொருந்திய கேள்வி!

இப்படி இடமும் பொருளும் தெரியாமல் இடறி விழுகிற தலைவரைப் போலவே அவரது முதல் தளபதியார் மனோகரனும் பழ வியாபாரிகட்குக் கடன் வழங்கும் விழாவில் தனது ஞானப் பழத்தைப் பிழிந்து சாறெடுத்து தன்னுடைய ரசிகர்கள் பருகத் தந்திருக்கிறார்.

அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

''நமது மாஜி நண்பர் கருணாநிதி உள்ளே இருந்து கொண்டு ஜாமீனில் வர மாட்டேன். வழக்குகளை வாபஸ் பெறாவிட்டாலும் வர மாட்டேன் என்று கூறிக் கொண்டிருந்தார். ஆனால் இடையில் வழக்குகள் வாபஸ் பெறப்படாத நிலையில் நிபந்தனையின் பேரில் வெளியே வந்தார்."

இது மனோகரனின் பழக்கடை வியாபாரிகள் கடன் வழங்கு விழாப் பேச்சு! வங்கியொன்று நடத்திய நிகழ்ச்சியில் நிதி அமைச்சரின் பேருரை .....!

இரண்டு மூன்று தடவை நீதிமன்றத்திற்கு நானும், பேராசிரியரும், மற்ற தலைவர்களும் முன்னணியினரும் கொண்டு வரப்பட்ட போது ரிமாண்டு நீடிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்திய அரசாங்க வழக்கறிஞர், ஒன்பதாம் தேதி தமிழக முழுதும் மறியல் போராட்டம் என்றதும் - எட்டாம் தேதி நீதிமன்றத்தில் இனிமேல் ரிமாண்டு நீடிக்கப்பட வேண்டியதில்லை என்று அதே அரசு வழக்கறிஞர் கூறியதற்குரிய காரணத்தை மாஜி நண்பர் மனோகரன் விளக்குவாரா?

இவர்களை நீதிபதி ஜாமீனில் விடுதலை செய்யலாம் என்று அரசு வழக்கறிஞர் கூறியதும், அதனைத் தி.மு.க. தலைவர்கள் தரப்பில் மறுக்கப்பட்டது மனோகரனுக்குத் தெரியாதா? ஜாமீனில் நாங்கள் போகத் தயாராக இல்லை. ரிமாண்டு தேவையில்லையென்று அரசாங்கமே கூறிவிட்ட பிறகு, பிறகு ஜாமீன் பிரச்சினை எங்கே எழுந்தது?

என்று நீதிமன்றத்தில் எங்கள் சார்பில் எடுத்துக் கூறிய கருத்துக்கு அரசாங்கத் தரப்பில் பதில் என்ன? மனோகரனாவது கூறுவாரா?

அரசாங்கம், ரிமாண்டை வலியுறுத்தவில்லை. ஆகவே நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம். சம்மன் அனுப்பும்போது

வரவேண்டும் என்று (நிபந்தனை விதித்து அல்ல) நீதிமன்றம் அறிவித்தது. சம்மன் அனுப்பினால் வரவேண்டும் என்பது எப்படி நிபந்தனையோடு கூடிய விடுதலையாகும். கைதாகாமல் இருக்கிற ஒருவருக்கே கூட கோர்ட் சம்மன் அனுப்பக் கூடும். கோர்ட்டை மதிக்கிறவர்கள் அந்த சம்மனை ஏற்று, அழைக்கிற கோர்ட்டுக்குப் போகத்தான் வேண்டும்.

ஏற்கனவே இந்திரா காந்தி அரசில், கவர்னர் ஆட்சியில் எங்கள் மீது போடப்பட்ட வழக்குகளில் (கோதுமை வழக்கு, கொலை முயற்சி வழக்கு ஆகியவற்றில்) நாங்கள் கைது செய்யப்படவில்லை. கோர்ட் சம்மன் அனுப்பியது. கோர்ட்டுக்குச் சென்றோம். இது சட்டம் - விதிமுறை - அதற்குக் கட்டுப்படுகிறவர்களைப் பொறுத்த விவகாரம்!

கீழே விழுந்தும் மீசையிலே மண் ஒட்டவில்லை என்பது போல வீரம் பேசுகிற ஆளுங்கட்சியினர், ஜாமீனில் வெளியே வர முடியும் என்று முழங்கிக் கொண்டிருந்து விட்டு, திடீரென ரிமாண்டு தேவையில்லை என நீதிமன்றத்தில் அறிவித்துவிட்டு, அத்தோடு நில்லாமல் அதற்கு வியாக்கியானங்களைச் செய்து கொண்டு அலைவானேன்?

மனோகரனுக்கு இன்னொன்றும் சொல்கிறேன். வழக்குகளை வாபஸ் வாங்குக என்பது கழகச் செயற்குழுவின் தீர்மானம் - வாபஸ் வாங்காமல் அவர்கள் தொடர்ந்து நடத்தினாலும் எங்களுக்கு மகிழ்ச்சியே! அப்போதுதான் ஆளுங்கட்சியும், இந்திரா காந்தியும் சேர்ந்து கொண்டு கறுப்புக்கொடி காட்டியோர் உயிரைக் குடிக்கவும், பலரை ஊனப்படுத்தவும் தீட்டிய சதித்திட்டங்கள் உலகிற்கு அம்பலமாகும். எத்தகைய பொய்மையின் அடிப்படையில் அந்த வழக்குகள் புனையப்பெற்றன என்பதும் நாட்டுக்குத் தெரிய வழி ஏற்படும்.

''விடுதலை பெற்ற கருணாநிதி, மூன்று நாட்கள் வீட்டில் இருந்துவிட்டு அதன் பிறகே வெள்ளப் பகுதிகளுக்குச் சென்றார்."

வியாழனன்று விடுதலை - வெள்ளியும் சனியும் கறுப்புக்கொடி நிகழ்ச்சியில் குண்டடி பட்டு மாண்ட தீனன் பாபு குடும்பத்தாருக்கு ஆறுதல் அளித்திடச் சென்றோம். மறைந்த நண்பர் பீட்டர் ஐசக் வீட்டுக்கு சனியன்று மாலையில் சென்று ஆறுதல் கூறினோம்.

ஞாயிறன்று காலை ஏழு மணிக்குப் புறப்பட்டு பிற்பகலுக்குள்ளாக சிதம்பரம், புவனகிரி, வல்லம்படுகை போன்ற வெள்ளப்பகுதிகளை அடைந்தோம்.

உடன்பிறப்பே, உனக்கு வேதனையோடு வேதனையாகச் சிரிப்பும் வருகிறதல்லவா? சிறையிலிருந்து வெளிவந்த நாங்கள் இரண்டுநாள் இடைவெளியில், புயல் வெள்ளப் பகுதிகளுக்குச் சென்று தொடர்ந்து ஆறு நாட்கள் அயராத சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டோம். ஆனால் முதல்வர் இராமச்சந்திரன் அவர்களோ, (சிறையில் அல்ல - வெளியில் இருந்தவர் - சிம்மாசனத்தில் இருப்பவர்) புதிய படத் தொடக்க விழாக்களையெல்லாம் முடித்துவிட்டு, ரஷ்ய நாட்டு நடன நிகழ்ச்சிகளை இரு நாட்கள் கண்டு களித்துவிட்டு, இருபது நாட்கள் கழித்தல்லவா, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தரிசனம் கொடுக்கக் கரிசனத்தோடு (?) சென்றார். மாஜி நண்பர் மனோகரனுக்கு இந்த விஷயமே தெரியாதா? யாரும் அவருக்குச் சொல்லக்கூட இல்லையா?

‘‘நான் பழைய மனோகரனல்ல! இப்போது பொறுப்புடன் வார்த்தைகளை அளந்து பேச வேண்டியவனாக இருக்கிறேன். இல்லாவிட்டால் அந்தப் பொல்லாத மனிதனுக்கு அர்ச்சனை வேறுவிதமாக இருந்திருக்கும்."

உடன்பிறப்பே, இவரைப் பழைய மனோகரன் என்று யார் சொன்னது? பழைய மனோகரன்! பல பசுமையான நினைவுகள்! அவற்றை விளக்க இப்போது நேரமுமில்லை. நான் விரும்பவுமில்லை. காலம் வற்புறுத்தும் போது தேவைப்பட்டால் அதனை விளக்கலாம். பொல்லாத மனிதனாம் நான்! பொறுப்புடன் பேசுகிறாராம்! இல்லையேல் அர்ச்சனை வேறு விதமாக இருக்குமாம்.

என்னைப் பல்லக்கில் தூக்கி வைத்து இருக்கிறீர்கள்! இல்லையேல் என் பழைய இயல்புப்படி மலந் தின்னச் சென்றிடுவேன்!

பன்றியொன்று இப்படிச் சொன்னதாக வேடிக்கைக் கதை கூறுவார்கள். அந்தக் கதையை மனோகரனின் பேச்சுக்கு உவமையாக்க மனம் கூசத்தான் செய்கிறது! எனினும் அவர்கள் வட்டாரத்துப் பேச்சுக்களைக் கேட்கும் போதும், அச்சு வாகனமேறி

வரும் எழுத்துகளைக் காணும் போதும் - அவற்றுக்கு நேராக இந்த உவமை ஒரு சிறு துளி என்று தான் எடுத்துக் கொள்ளவேண்டும்.

''காருள்ள வரை - கடல் நீர் உள்ள வரையில் நாமே ஆட்சிப் பொறுப்பில் இருப்போம் என்ற திமிர் கருணாநிதியைக் கெடுத்து விட்டிருக்கிறது."

இதுவும் பழ வியாபாரிகள் கடன் வழங்கு விழாவில் நிதி அமைச்சர் மாண்புமிகு மனோகரனார் அவர்கள் சிந்திய மணிவாசகம் தான்!

திமிர் நடை!

திமிர் கொண்ட பார்வை!

திமிர் நிறைந்த பேச்சு!

திமிர் வழியும் எழுத்து!

இவைகட்குச் சொந்தக்காரர் யார் என்று மனோகரனின் கட்சியில் இருப்பவர்கட்கே தெரியும். நான் விளக்கிடத் தேவையில்லை.

''முன்பு கள்ளச் சாராயப் பேர்வழிகட்குக் காவல் தரும் சர்க்கார் நடந்தது - இப்போது அந்தச் சாராயக்காரர்கள் எல்லாம் அ.தி.மு.க.வின் எதிரியாகி விட்டார்கள்."

மனோகரன்தான் பேசியிருக்கிறார்! விலா நோகச் சிரிக்கிறது நாடு! சென்னை நகரில் மட்டும் வட்டத்திற்கு இரண்டு கள்ளச் சாராய கிளை அமைப்புக்கள் இருக்கின்றன. அந்த அமைப்புகளின் சிற்றரசர்கள் சென்னை பேரரசருக்குக் கப்பம் கட்ட வேண்டும். அவர்களைப் போலீசார் நெருங்கக் கூடாது. தவறி நெருங்கினால், தேனாம்பேட்டையில் போலீஸ் அதிகாரிகளைக் கட்டிப் போட்டுக் கத்தியால் குத்தினார்களே? அதுதான் நடக்கும். இதில் மனோகரனுக்கும் நல்ல பங்கு இருப்பதால் அ.தி.மு.க. ஆட்சியில் கள்ளச் சாராய வியாபாரிகளே இல்லையென்று சாதிக்கப் பார்க்கிறார்.

முந்திய ஆட்சியில் வட்டங்கள் காவல் துறை அலுவலகங்களுக்குள் சென்று ஆர்ப்பாட்டங்கள் செய்தன.

இந்தப் பொய்க் குற்றச்சாட்டின் சிருஷ்டிகர்த்தா மனோகரனுக்கு ஒன்றை மட்டும் நினைவூட்டுகிறேன் -

கிணத்துக்கடவு தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ., போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்து, அங்கு காவலில் வைக்கப்பட்டிருந்த தன் மகனைப் பலாத்காரமாக விடுவித்துக் கொண்டு வெளியேறினார்.

இதை மறந்திருப்பார் மனோகரன்! பழ வியாபாரிகள் தானே! பழைய நிகழ்ச்சிகளை மறந்திருப்பார்கள் என்று எண்ணியிருப்பார்!

மனோகரனுக்கு மட்டுமல்ல! மக்களுக்கும் இந்த நிகழ்ச்சிகளை அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருப்பது - உடன்பிறப்பே! உன் கடமை.

அன்புள்ள,

மு. க.

(24-12-1977)

# 504. வீறுநடை போட, வா! வா! வா!

**உடன்பிறப்பே,**

எதிர்க்கட்சி, அமைதியான முறையில் மக்களின் குறை பாடுகளை அரசுக்கு அறிவிக்கப் பேரணி நடத்துவதென்பது ஜனநாயக நாட்டில் எங்கும் நடக்கக்கூடியதுதான்.

அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய காலத்தில், சென்னைக் கோட்டைக்கு எதிரிலேயே சட்டசபை நடக்கும் நேரத்திலே, பேரணியொன்றினை அண்ணா அவர்களே முன்நின்று நடத்தியிருக்கிறார்கள்.

பிறிதொருமுறை, தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் ஊர்வலமாக வந்து கோட்டை தலைமைச் செயலகத்துத் தாழ்வாரத்திலேயே ஒருநாள் முழுதும் அடையாள உண்ணாவிரதம் இருந்திருக்கிறோம்.

இவற்றையெல்லாம் நினைவுபடுத்திக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லாத இன்றைய ஆட்சியாளர்கள், தி.மு.க. விவசாயிகள் பேரணி நடத்தி, முதலமைச்சரிடம் கோரிக்கை மனு கொடுப்பதை ஏதோ ஒரு பயங்கரமான போராட்டம் என்று வர்ணித்துப் படபடப்புடன் பேசுகிறார்கள். வார்த்தைகளை கர்ணகடூரமாக வீசுகிறார்கள்.

பேரணி நடத்தி, மக்களின் முறையீடுகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதென்பது தி.மு.க. வரலாற்றில் பல சமயங்களில் நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகள்தான்!

இலங்கைத் தமிழர் பாதுகாப்புக்காக 1961-ல் அண்ணா நடத்திய பேரணியையே மறந்துவிட்டு, இப்போது நாம் இலங்கைத் தமிழர்களுக்காக நடத்திய பேரணியை இழித்தும், பழித்தும் பேசியவர்கள் தானே இன்றுள்ள அமைச்சர்கள்!

இவர்கள் தி.மு.க. நடத்தும் விவசாயிகள் பேரணி கண்டு ஆத்திரமடைவது இயற்கைதானே!

28-ந் தேதியன்று காலை முன்னாள் அமைச்சர் அன்பில் தலைமையில் முன்னாள் அமைச்சர்கள் மன்னை, சி.வி.எம். அண்ணாமலை ஆகியோர் அணிவகுக்க, அறப் போராட்ட ஆய்வுக் குழுவினர் முன்நடக்க, ஆயிரமாயிரம் விவசாயப் பெருங்குடி மக்களும், கழக உடன்பிறப்புகளும் ஊர்வலமாகச் சென்று கோட்டையிலுள்ள முதல்வரைச் சந்தித்துக் கோரிக்கை மனு கொடுப்பார்கள். இதுதான் அன்று நடக்க இருக்கும் பேரணி!

புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள ஏழை எளிய விவசாயிகளுக்காக ஒரு தலையாய எதிர்க்கட்சி, இப்படி அமைதியான முறையில் குரல் கொடுக்கக் கூட உரிமை பெற்றதல்ல என்று அமைச்சர்கள் சீறிப் பாய்வதின் நோக்கம்தான் நமக்குப் புரியவில்லை!

பேசித் தீர்த்திட வேண்டிய பிரச்சினையைத் தீப்பொறியாக்காதீர் என்று அமைச்சர்களுக்கு எடுத்துச் சொன்னால், படபடப்பாக இருக்கின்ற ஆளுங்கட்சியினர், நான் சொன்ன வாசகத்தையே புரிந்து கொள்ளாமல் பார்! பார்! தீப்பொறி பறக்கும் என்கிறான் கருணாநிதி என்று பிரச்சினையைத் திசை திருப்புகிறார்கள்.

விவசாயப் பெருங்குடி மக்களின் வேதனையைத் தீர்க்க முன் வரவேண்டுமேயல்லாமல், படபடப்பாகப் பதில் கூறுவது பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக தீப்பொறியாக்கி விடும்.

என்று நான் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். பிரச்சினை, தீப்பொறியாகக் கூடாது என்ற கவலையில் எழுதப்பட்ட கருத்தே தவிர, மனோகரன் கூறியதுபோல அமளி நடத்துவதற்கு ஒத்திகை எதுவும் பார்க்கப்படவில்லை என்பதை தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது கழகம் பேரணி நடத்துகிறது என்றதும், அ.தி.மு.க. தொண்டர்படை அணிவகுப்பை நிதி அமைச்சர் மனோகரன் 25-ந் தேதி காலை பார்வையிடுவதாக அவர்களது அதிகாரபூர்வ ஏட்டில் செய்தி வெளியிட்டு மிரட்டிப் பார்க்கிறார்கள். அதுதான் அமளிக்கு ஒத்திகை!

அ.தி.மு.க. தொண்டர் படை என்பது பத்தாயிரம் போலீசாருக்கு வேலையென்று எம்.ஜி.ஆர். அறிவித்தாரே? அந்த வேலையில் சேர்ப்பதாக ஆசை காட்டி ஆங்காங்கு மறைமுகமாக அரசாங்க ஆதரவோடு அமைக்கப்படுகிற குண்டர் படையாகும்.

இத்தகைய மிரட்டல்களுக்கெல்லாம் தி.மு.க. அஞ்சி நடுங்கி அழிந்து விடப் போவதில்லை.

இருப்பது ஒரு உயிர், அது போகப் போவதும் ஒருமுறைதான். அது நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே!

என்று கூறிய அறிஞர் அண்ணாவின் உண்மைத் தம்பிகள், இந்த அச்சுறுத்தல்களுக்கெல்லாம் மிரண்டு விடப் போவதில்லை.

அமைதியாக நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள பேரணியில் அமளி உருவாக்க யாரேனும் முயல்வார்களேயானால், அத்தகைய வன்முறையாளர்களை யாரும் திருப்பித் தாக்காமல் அப்படியே அவர்களைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படையுங்கள்.

விவசாயிகள் பேரணியில் - விவசாயிகளுக்காகக் கழகம் நடத்தும் பேரணியில் - அமைதியே நமது கவசமாக இருக்கட்டும்! உறுதியே நமது போர்க் கருவியாக அமையட்டும்!

நாம் நடத்தும் பேரணிக்கு அமைச்சர்களும், ஆளுங்கட்சியினருமே விளம்பரப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

அவர்கட்கு நன்றி கூறி, அலைஅலையாக வந்து கூடிடுவீர், பேரணிக்கு!

தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களிலிருந்து விவசாயிகள் சென்னைக்குப் பயணப்பட்டு விட்டார்கள் என்ற செய்தி வந்த வண்ணமிருக்கிறது.

செங்கை, தென்ஆற்காடு, வடஆற்காடு, சேலம், கோவை விவசாயிகளும் சென்னைக்கானப் பயண ஏற்பாடுகளைச் செய்து கொண்டுள்ளனர்.

மதுரை, நெல்லை, குமரியிலிருந்தும் முகவை, தர்மபுரி, நீலகிரி, புதுக்கோட்டை மாவட்டங்களில் இருந்தும் தகவல்கள் குவிந்தவண்ணமுள்ளன, தலைநகர்ப் பேரணியில் தாங்களும் கலந்து கொள்வதற்காக!

விவசாயிகளின் கோரிக்கை என்ன? முன்பே விளக்கப்பட்டாகி விட்டது! -

அவற்றை நிறைவேற்றி வைக்குமாறு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளத்தான் எழுச்சிப் பேரணி, நடைபெறுகிறது!

பேரணியில் வீறுநடைபோட
விவசாயத் தோழனே!
வா! வா! வா!
உழவர்க்கு உறுதுணையாக
என் அன்பு உடன்பிறப்பே!
நீயும் வா! வா! வா!

அன்புள்ள,
மு. க.
(25-12-1977)

# 505. உங்கள் கேள்விக்கு இது பதில்!

**உடன்பிறப்பே,**

விவசாயி உற்பத்தி செய்யும் நெல்லுக்கு நியாய விலை கொடுக்க வேண்டுமென்று கருணாநிதி கூறுகிறார். எவ்வளவு விலை என்பதைத் திட்டவட்டமாக சொல்லுங்கள் என்று நான் கேட்டேன். அதற்கு இதுவரையில் பதிலைக் காணோம்.

மதுரை மாநகரில் உணவு அமைச்சர் இவ்வாறு உரையாற்றியதாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பழைய திரைப்படமொன்றில் பீம்சிங்! இதென்ன புதுக் குழப்பம்? என்று ஒரு நகைச்சுவை வசனம் வரும்! சிரிப்பொலியால் திரைப்படக் கொட்டகை அதிரும்! அதே கேள்வியைத்தான் இப்போது விவசாயிகள் நமது உணவு அமைச்சரைப் பார்த்துக் கேட்கிறார்கள்.

கழக ஆட்சியில் நெல் குவிண்டால் விலை 74 ரூபாய் என்று அரசுக் கொள்முதலுக்குக் கொடுக்கலாம் என்று மத்திய அரசு குறிப்பிட்டபோது, போனஸ், போக்குவரத்துச் செலவு என்ற பெயரால் மேலும் அதிகமாக 15 ரூபாய் கொடுத்து, மொத்தம் 89 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது அவ்வாறு இந்த அரசு கொடுக்குமா? என்ற கேள்வியை நான் சட்டப் பேரவையில் எழுப்பிய போது முதல்வர் எம்.ஜி.ஆர். எழுந்து, அதைவிட அதிகமாகவே இந்த அரசு கொடுக்கும் என்றார்.

முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று தான் கழக செயற்குழு தீர்மானம் போட்டிருக்கிறது. விவசாயிகள் அறப்போராட்ட ஆய்வுக் குழுவும் அதைத்தான் சுட்டிக் காட்டிக் கோரிக்கை எழுப்பியிருக்கிறது.

விவசாயிகளுக்கு குவிண்டாலுக்கு 89 ரூபாய்க்கு மேல் விலை கொடுப்போம் என்றீர்களே? அதைத்தான் இப்போது விவசாயிகள் கேட்கிறார்கள். விவசாயிகளின் சார்பாக தி.மு.கழகம் கேட்கிறது.

எவ்வளவு விலை வேண்டும் என்று திட்டவட்டமாகச் சொல்லவில்லையாம்! அதனால் தான் உணவு அமைச்சர் அந்த விலையைக் கொடுக்க முன் வரவில்லையாம்!

இவர்கள் கழக ஆட்சி கொடுத்ததை விட அதிகம் கொடுப்போம் என்று சொன்னார்களே? அந்த அதிகம் கூடத் தேவையில்லை! கழக ஆட்சி கொடுத்த 89 ரூபாய் விலையைக் கொடுத்தாலே போதும் என்றுதான் இன்றைக்கு விவசாயிகள் கேட்கிறார்கள்.

தங்களின் பல கோரிக்கைகளில் ஒரு கோரிக்கையான இதனையும் இணைத்துத்தான் 28-ஆம் நாளன்று காலை பேரணி நடத்தி, முதலமைச்சரிடம் மனு கொடுத்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளத் திட்டமிட்டு அறிவித்திருக்கிறார்கள்.

இந்தப் பேரணிச் செய்தி கேட்டு, அரசும் ஆளுங்கட்சியினரும் அலறுவதும், ஆத்திரமாகப் பேசுவதும், அமளியைத் தூண்டும் வண்ணம் அறிக்கைகள் விடுப்பதும் ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

நெல் விலையை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசுடன் கருணாநிதி போராடத் தயாரா? என்று ஒரு ஹாஸ்ய மந்திரி என்னைப் பார்த்துக் கேட்கிறார்.

அப்படியொரு போராட்டத்தை விவசாயிகளின் நன்மைக்காக அ.தி.மு.க. அரசு தலைமையேற்று நடத்துமேயானால், எதிர்க்கட்சியான தி.மு.கழகம் - அந்தப் போராட்டத்தில் முன்னணியில் நிற்கத் தயார்!

எப்போது அந்தப் போராட்டம் என்பதை ஹாஸ்ய மந்திரி நாளைக்கே அவரது தலைவரைக் கேட்டு அறிவிப்பாரேயானால், இணைந்து நின்று மத்திய அரசை எதிர்த்து விவசாயிகளுக்காகப் போராடக் கழகம் தயாராகவே இருக்கிறது!

சவால் விடுவதும் - அதற்குப் பதில் அளித்தால் சந்து பொந்துகளில் ஒளிந்து கொள்வதும், அ.தி.மு.க. அமைச்சர்களின் வழக்கமாக இருந்து வருகிறது. அதனை விடுத்து, இதற்காவது அவர் தேதியைக் குறிப்பது நல்லது!

இந்தச் சவாலுக்கே ஹாஸ்ய மந்திரிக்கு, முதன் மந்திரியிடமிருந்து நல்ல திட்டு கிடைக்கும். ஏனய்யா! குட்டிகள் குரைத்து தாய் தலையில் வைக்கிறீர்கள்? மத்திய அரசையாவது -

நானாவது எதிர்ப்பதாவது? மொரார்ஜியைப் பேசிவிட்டு மன்னிப்பு கேட்டதை மறந்தீரா? வாய் மூடிக் கொண்டு சும்மா கிடங்கள்!

இப்படித் தலைவரிடமிருந்து வசை கிளம்பும்! இந்தச் சவால் இசைக்காரர்கள் திருதிரு என விழிப்பர் என்பதும் எனக்குத் தெரியும்.

அன்பில் தர்மலிங்கத்தைச் சிறையில் தள்ளக் கருணாநிதி சதி செய்கிறார் என்றும் அந்த ஹாஸ்ய மந்திரி, சிரிப்பு வெடிகளை உதிர்த்திருக்கிறார்.

பேரணி என்றால், கோரிக்கையை வழங்க அமைதியாக நடைபெறும் ஊர்வலம் என்று தெரிந்த பிறகும் - சிறையில் தள்ளுகிற அளவுக்கு இன்றைய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமேயானால், அதற்கும் தயாராகத்தான் தி.மு.கழகம் இருக்கிறது என்பதை அறியாதவரல்ல அமைச்சர்!

இந்திரா தமிழகம் வந்துவிட்டுப் போன பிறகு ஜனதா கட்சி சார்பிலே கூட ஒரு பேரணி நடத்தப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது.

அதன் பிறகு தி.மு.க. சார்பிலும் ஒரு பேரணி நடத்தப்பட்டு, கவர்னரிடம் மனு தரப்பட்டது.

அந்தப் பேரணிகளைப் போலத்தான் விவசாயிகளின் முறையீடுகளை முதலமைச்சரிடம் எடுத்துக் கூற இந்தப் பேரணியும் அமைதியான முறையில் நடைபெற இருக்கிறது.

அதற்குள்ளாக அமைச்சர்கள் மாறி மாறி அறை கூவல்களையும், ஆத்திரமூட்டும் அறிக்கைகளையும் விடுத்து நிலைமையைக் குழப்புவானேன்? என்பது தான் நமது கேள்வியாகும்.

மதுரையில் பேசிய உணவு அமைச்சர் என்னை ஒரு மிரட்டு மிரட்டியிருக்கிறார் பார்த்தாயா?

சட்டசபைக்குக் கருணாநிதி வரத்தான் போகிறார். எங்கள் எதிரே அமரத்தான் போகிறார். நான் கேட்கும் கேள்விகளுக்கு அவர் கட்டாயம் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

உடன்பிறப்பே, அவரது தலைவரைப் போல அல்லாமல் நான் கட்டாயம் சட்டசபைக்கு வருவேன். மக்களுக்காகப் பேசுவேன் என்பதை ஒப்புக் கொண்ட உணவு அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர் கேள்வி கேட்பாராம்! நான் பதில் சொல்லித்தான் ஆக வேண்டுமாம்! அமைச்சர்கள் எதிர்க்கட்சித்

தலைவரைப் பார்த்துக் கேள்விகள் கேட்பார்களாம் - எதிர்க்கட்சித் தலைவர் பதில் சொல்ல வேண்டுமாம்!

இதிலிருந்து நமது கேள்விகளுக்கு அமைச்சர்கள் (வழக்கம்போல்) பதில் சொல்ல மாட்டார்கள் என்று தெரிகிறது. கேட்கட்டும் கேள்விகளை! பதில்களை விளக்கமாகக் கூற விஷயங்கள் ஏராளமாக இருக்கின்றன! காலம் வற்புறுத்தும் போது பதில் கூறப்படும் என்று முதலமைச்சர் பாணியிலே அல்ல - ஒளிமிகுந்த பதில்கள், ஓராயிரம் கேள்விகளை உள்ளடக்கிய பதில்கள் - நிச்சயமாகத் தரப்படும். உணவு அமைச்சர் தேவைப்பட்டால் முன்கூட்டியே தனது கேள்விகளை சட்டப்பேரவைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கட்டும். அந்த மூலக் கேள்விகளுக்கான பதில்களுடன் வருகிறேன். பிறகு எத்தனை துணைக் கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கட்டும்.

அன்புள்ள,

மு. க.

(26-12-1977)

# 506. நிதிநிலைப் புரட்சியும், நடுநிலை ஏடுகளும்!

**உடன்பிறப்பே,**

மாநில அரசு தன்னுடைய எல்லா வருமானமுள்ள 300 கோடி ரூபாயை 7.5 இலட்சம் ஊழியர்களுக்கு சம்பளத்திற்காகச் செலவழிக்கிறது. மத்திய அரசின் மானியத்தொகையான 368 கோடி ரூபாயிலிருந்துதான் மாநிலத்திலுள்ள நாலரைக் கோடி மக்களுடைய மருத்துவ மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களுக்காகச் செலவழிக்கப்படுகிறது

இப்படியொரு சொற்பொழிவை, நமது தமிழ் நாட்டுக்கென்று கிடைத்திருக்கிற அறிவும், ஆற்றலும், சிந்தனைத் தெளிவுமிக்க முதலமைச்சர் (?) எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் சென்னை பொறியியல் கல்லூரியில் டிசம்பர் 22-ஆம் நாளன்று நடைபெற்ற விஞ்ஞானக் கருத்தரங்கில் ஆற்றினார்.

அங்கு கூடியிருந்த விஞ்ஞான மேதைகளின் விழிகள் அகன்று விரிந்து வியப்பைக் கொட்டின. மத்திய அரசு, மாநில அரசுக்கு இவ்வளவு பெருந்தொகை (அதாவது 368 கோடி ரூபாயை) மானியமாகக் கொடுக்கிறது என்பதையும், அந்த மானியத் தொகையைக் கொண்டுதான் மாநில மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களை மாநில அரசு நிறைவேற்றுகிறது என்பதையும் இத்தனை நாளும் எந்த முதல் அமைச்சரும் வெளியிடவே இல்லையே! மாநில மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களை மாநில அரசு நிறைவேற்றுவதாக அல்லவா, இதுவரையில் தவறாகக் கருதிக்கொண்டிருந்தோம் - இப்போதல்லவா நமது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். புள்ளி விபரங்களைப் புட்டுப்புட்டு வைத்துள்ளார் என்று அந்த நிபுணர்கள் எண்ணியிருக்கக்கூடும்.

அண்ணாவும், கருணாநிதியும் முதலமைச்சர்களாக இருந்தபோது வேண்டுமென்றே யல்லவா மத்திய அரசைப் பார்த்து அதிக மானியம் கொடு என்று கேட்டு வீண் வம்பு

செய்திருக்கிறார்கள்! இப்போது புரட்சித் தலைவர் (!) உண்மையான நிலைமையை எல்லோருக்கும் புரியவைத்து விட்டாரே! மாநில அரசின் மொத்த வருமானத்தைக் காட்டிலும் அதிகமாக மத்திய அரசு மாநிலத்திற்கு மானியத் தொகை வழங்குகிறது என்பதைக் கண்டுபிடித்த எம்.ஜி.ஆர்., அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பசைக் காட்டிலும் பெரிய மேதாவி என்பதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று அந்த விஞ்ஞானக் கருத்தரங்கில் கூடியிருந்த அனைவருமே மெய்சிலிர்த்துப் போயிருப்பார்கள்.

முதல்வரின் நிதிநிலை விளக்கப் பேருரை, அவருடைய அதிகாரபூர்வமான கட்சி ஏட்டிலும், இந்து ஏட்டிலும் வெளிவந்துள்ளது. டிசம்பர் 22 சென்னை இந்து ஏட்டில் முதல் பக்கத்தில் விளிம்பு கட்டிய பெட்டிச் செய்தியாக இந்த அரிய சொற்பொழிவு அழகுறப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இதைப் படித்துப் பார்த்த மத்திய அரசின் நிதி இலாக்கா அதிகாரிகளும், மாநில அரசின் நிதி இலாக்கா அதிகாரிகளும் - அயர்ந்தே போயிருப்பார்கள்!

ஒருவேளை நாம்தான் தவறிப்போய் மானியத் தொகையைத் தமிழ்நாட்டுக்கு அதிகமாக அனுப்பி விட்டோமோ? என்று மத்திய நிதி இலாகா அதிகாரிகள், நிதிநிலை ஏடுகளையும், கணக்குப் புத்தகங்களையும் இரவு பகலாகப் புரட்டியிருக்கக்கூடும்!

நாம்தான் வந்த பணத்தைச் சரியாக வரவு வைக்காமல் விட்டுவிட்டோமோ, என்று மாநில நிதி இலாக்கா அதிகாரிகள் தலையைப் பிய்த்துக் கொண்டு கணக்கு வழக்குகளைப் பார்த்திருக்கக்கூடும்!

ஏனெனில், இதுவரையில் எந்த நிதி அமைச்சரும், முதலமைச்சரும் செய்யாத புரட்சியை அல்லவா நமது முதலமைச்சர், விஞ்ஞானக் கருத்தரங்கில் செய்துள்ளார்.

அவரது பேச்சை இந்து பத்திரிகையிலும், அவரது கட்சிப் பத்திரிகையிலும் படித்த எனக்கு தூக்கிவாரிப் போட்டது. உடனடியாக, தமிழ்நாடு வரவுசெலவுத் திட்டம் பற்றி தமிழ்நாடு அரசின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் சென்ற கூட்டத் தொடரில் வழங்கப்பட்ட புத்தகங்களை எடுத்துப் புரட்டினேன். அந்தப் புத்தகங்களில் தரப்பட்டுள்ள புள்ளி விபரங்கள் எம்.ஜி.ஆர். தந்துள்ள விபரங்களுக்கு முற்றிலும்

முரணாக இருக்கின்றன. ஒருவேளை புரட்சித் தலைவர் சொன்னதுதான் சரி - புத்தகத்தில் இருப்பது தவறு என்று புத்தகத்தைத் திருத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வரவு செலவுத் திட்டப் புத்தகத்தில் தெளிவாக இருக்கிறது. மத்திய அரசு மாநில அரசுக்கு மானியமாகத் தருவது 44.73 கோடி ரூபாய்தான் என்று!

ஆனால் முதலமைச்சர் சொல்லுகிறார், மத்திய அரசு நமது மாநிலத்திற்குத் தருகிற மானியம் 368 கோடி ரூபாய் என்று!

மத்திய அரசின் வருமானவரி, தீர்வை போன்றவற்றில் மாநில அரசுக்குக் கிடைக்கவேண்டிய உரிய பங்குத் தொகையில் கிடைப்பதுகூட 136.98 கோடி ரூபாய்தான்!

மாநில அரசின் மொத்த வருவாய்க் கணக்கின்படி மொத்த வருமானமே 633.24 கோடி ரூபாய்தான்! ஆனால் முதலமைச்சர் கொடுத்த கணக்குப்படி மத்திய அரசு தருகிற மானியம் 368 கோடி - மாநில அரசு வருமானம் 300 கோடி - ஆக மொத்தம் 668 கோடி ரூபாய்! முப்பத்தி ஐந்து கோடி ரூபாய் எப்படி அதிகமாகக் குட்டி போட்டது என்பதும் புரியவில்லை.

இதையெல்லாம் விளக்கி, நமது மாநிலத்தின் நன்மைக்காக ஒரு அறிக்கை கொடுத்தேன். எதிர்க்கட்சித் தலைவன் என்ற பொறுப்பு உணர்ச்சியோடு!

அந்த அறிக்கை, முரசொலி, தினகரன், அலைஓசை, சில ஊர்களில் மாலை முரசு இதழ்களில் மட்டும் வெளிவந்தன. இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, தந்தி போன்ற ஏடுகளில் அந்த அறிக்கையை வெளியிடவில்லை.

முதலமைச்சர் நிதிநிலை குறித்து வெளியிட்ட தவறான கருத்தைப் பிரசுரித்தவர்கள், அந்தக் கருத்துக்கு என்னால் தரப்பட்ட மறுப்பையும், திருத்தத்தையும் வெளியிட்டு மாநிலத்தின் நன்மையைப் பாதுகாப்பார்கள் என்று கருதினேன்.

சுதந்திரமான பத்திரிகையாளர்கள் என்றும், நடுநிலை தவறாதவர்கள் என்றும் தங்களைப் பற்றி விளம்பரப்படுத்திக் கொள்கிற அந்தப் பத்திரிகையாளர்கள், முதலமைச்சரின் கேலிக்கூத்தை அம்பலமாக்கக்கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்து விட்டார்கள் போலும்!

உடன்பிறப்பே, நான் இரண்டு நாட்களுக்கு முன்பு விடுத்த அந்த மறுப்பு அறிக்கை இன்று மீண்டும் முரசொலியில் வெளியிடப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் மேதா விலாசத்தையும், பத்திரிகைகளின் பாரபட்சப் போக்கையும், நீ மேடைக்கு மேடை விமர்சனம் செய்ய அந்த அறிக்கையை மீண்டும் ஒருமுறை படித்துக்கொள்க!

இயன்றால், கிளை அமைப்புகளின் சார்பில் அந்த அறிக்கையைத் துண்டு வெளியீடுகளாக அச்சியற்றியும் வழங்கலாம்.

உடன்பிறப்பே, ஒருதலைப்பட்சமாக செய்திகளை வெளியிடுகிற ஏடுகளையும் - அவதூறாக, ஆபாசமாகக் கழகத்தைத் தாக்கி எழுதுகிற ஏடுகளையும் வாங்கக் கூடாது என்று சபதம் செய்து கொள்க என்று மீண்டும் ஒருமுறை உனக்குக் கூறுகிறேன். உரிமையின் காரணமாக!

அன்புள்ள,

மு. க.

(27-12-1977)

# 507. மொட்டை மரமாக்காதீர்!

**உடன்பிறப்பே,**

தமிழ்நாடு பொதுப்பணித்துறை பொறியாளர்கள் கடந்த சில நாட்களாக நடத்தி வருகிற அமைதியான போராட்டத்தின் அடுத்த கட்டமாக மூன்று பொறியாளர்கள், கால வரம்பற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது மிகவும் கவலையளிக்கும் செய்தியாகும்.

அரசினர் தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் என்று காரணம் காட்டப் பெற்று அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

இப்படியொரு நிலைமை, கழக அரசின் காலத்திலே ஏற்பட்டபோது மனிதாபிமான உணர்வோடு அந்தப் பிரச்சினை அணுகப்பட்டு, வேலையிழக்கும் நிலையில் இருந்த பொறியாளர்களுக்கு நிரந்தரப் பணி அளிக்கப்பட்டிருக்கிறது.

அதே அடிப்படையில் இப்போதுள்ள அரசும் சிந்தித்து அவர்களுக்கு வாழ்வு அளித்திருக்கலாம்.

அவர்கள் முதற் கட்டமாகத் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர். பின்னர் மொட்டையடித்துக் கொண்டு கோட்டையை நோக்கி ஊர்வலமாக வருவதாக அறிவித்தனர். அப்போதும் அவர்கள் அலட்சியப்படுத்தப்பட்ட காரணத்தால், தாங்கள் அறிவித்தவாறு மொட்டையடித்துக் கொண்டு கோட்டை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

அதன்பிறகு, கடற்கரையோரத்தில் கொளுத்துகிற வெயிலில் நாள் முழுவதும் அணிஅணியாகத் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

அரசு, அவர்களைத் தூசாகக் கருதியது மட்டுமல்ல! தவறான தகவல்களைக் கூறித் தப்பித்துக்கொள்ள நினைத்தது.

இது ஆயிரக்கணக்கான பொறியாளர்களின் பிரச்சினை அல்ல! நூற்றுக்கணக்கானவர்களின் பிரச்சினை!

அரசின் தேர்வுக் குழுவில் தேர்ந்தெடுக்கப்படாமல் வேலை வாய்ப்பு நிலையத்தின் மூலமாக தற்காலிகப் பணி பெற்றவர்கள் இவர்கள்! பெற்ற பணிகள் தற்காலிகமானவை என்றாலும்கூட, பல ஆண்டுகளாக அதாவது ஒன்பது பத்து ஆண்டுகளாக அந்தப் பணியில் இருப்பவர்கள் அவர்கள்.

இதைப் போன்று தற்காலிகப் பணியாளர்களை வேலைநீக்கம் செய்ய வேண்டுமென்று அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது செயற் குறிப்பு ஒன்று வந்தது. பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த நான், முதல்வர் அண்ணா அவர்களிடத்திலே அதுபற்றி எடுத்துக்கூறி, அண்ணா அவர்கள் உடனடியாக அந்தப் பாதிக்கப்பட்ட பொறியாளர்களுக்கு வேலை நிரந்தரம் செய்யத் தக்க ஆணைகளைப் பிறப்பித்தார்.

அதன் பிறகு 1971-ஆம் ஆண்டிலும் இதுபோன்ற ஒரு நிலை ஏற்பட்ட போது, தமிழக அரசு அலுவலர் தேர்வுக் குழுவின் மூலம் ஒரு சிறப்புத் தேர்வு நடத்தி எல்லா தற்காலிக இளம் பொறியாளர்களையும் பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறது.

எனவே, கடந்த காலத்தில் இத்தகைய தற்காலிகப் பணிப் பொறியாளர்களின் வாழ்வுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கைகளை எண்ணிப் பார்த்து, இந்த அரசு அவர்களிடம் இரக்கம் காட்டியிருக்க வேண்டும்.

இரக்கம் காட்டுவதற்குப் பதிலாக இழித்துப் பேசுவதும் - மாற்று வழி கண்டுபிடித்து அவர்தம் மனப் புயலை அடக்குவதற்குப் பதிலாக அவர்களைக் கேலி செய்வதும் - இன்றைய அமைச்சர்கள் பின்பற்றும் நடவடிக்கைகளாகி விட்டன.

மாணவர் பிரச்சினையானாலும், தொழிலாளர் பிரச்சினையானாலும், மீனவர் பிரச்சினையானாலும், விவசாயிகள் பிரச்சினையானாலும், அரசு அலுவலர் பிரச்சினையானாலும் - கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினையானாலும் - அத்தனையும் ஏதோ

இந்த அரசைக் கவிழ்க்க எழுப்பப்படுகிற பிரச்சினைகள் என்று அரசின் தரப்பில் ஒரு கற்பனைவாதம் கூறப்பட்டு, அவற்றுக்குக் களங்கம் கற்பிக்கப்படுகிறதே யல்லாமல், குழப்பமின்றிப் பிரச்சினைகளை ஆராய்ந்திட அரசு முன் வரக்காணோம்.

பொறியாளர் விவகாரத்தில் அரசு, அவர்களின் உயிரையே அர்ப்பணிக்கக் கூடிய நிலைக்கு ஆளாக்கக் கூடியது!

அவர்கள், தலையை மொட்டையடித்துக் கொண்டதோடு போதும்! அவர்களையே இழந்து அவர்கள் குடும்பங்களும் மொட்டை மரங்களாக ஆகி விட வேண்டாம்!

அன்புள்ள,

மு. க.

(28-12-1977)

# 508. நம்பிக்கையுடன் வரவேற்போம்!

**உடன்பிறப்பே,**

1977ஆம் ஆண்டு விடைபெற்றுக் கொண்டு, 1978-ஆம் ஆண்டு வருகை புரிந்திருக்கிறது.

விடைபெற்றுக் கொள்பவர்களுக்குப் பிரிவு உபசாரப் பாராட்டு விழா நடத்துவது வழக்கமென்றாலும் கூட 1975, 1976, 1977 ஆகிய ஆண்டுகளுக்கு விழா நடத்தி வழி அனுப்பி வைக்கிற நிலையில் நாமும் இல்லை. நாடும் இல்லை.

1975-ஆம் ஆண்டுதான் இந்தியாவில் சர்வாதிகாரம் என்னும் அன்னிய நாட்டுச் சரக்கு இறக்குமதியாயிற்று. அந்தச் சரக்கின் நெடி தாங்க முடியாமல் நாடே திணறியது, திக்குமுக்காடியது.

அதனைத் தொடர்ந்து இருபது மாதங்களுக்கு மேலாக 1976 இறுதி வரையில் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் அரசியல்வாதிகள் எந்தவிதமான விசாரணையுமின்றி மிசா கைதிகளாகப் பூட்டப்பட்டு கிடந்தனர்.

இந்திரா காந்தியின் சர்வாதிகாரச் சவுக்கு முனையின் அடிதாங்க முடியாமல் இந்தியாவின் ஆட்சித்தேரை காடுமேடுகளில், கண்ட பக்கமெல்லாம் இழுத்துச் செல்கிற குதிரைகளாக அதிகார வர்க்கம் செயலாற்ற வேண்டியிருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். கொள்ளையர்களாக, கொலைவெறியர்களாக விமர்சிக் கப்பட்டனர். திட்டமிட்டுக் களங்கம் சுமத்தி எதிர்க்கட்சிகளை அழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் என்று இந்திரா அம்மையார் உருவிய வாளை ஓங்கியபடி பவனி வந்தார்.

மிசாக் கொடுமையைக் கண்டித்து வினோபாவின் மாணவர் சர்மா என்பவர் தீக்குளித்து மாண்டார். மிசாவைக் கண்டித்த

தலைவர்கள் விலங்கு பூட்டப்பட்டு வீதியிலே இழுத்துச் செல்லப்பட்டனர்.

நெருக்கடிக் காலத்தில் நெஞ்சில் நெருப்பைக் கொட்டும் நிகழ்ச்சிகள் என்ன என்ன நடந்தது என்று ஷா கமிஷன் விசாரணையில் செய்திகள் புற்றீசல் போலப் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கொடுமையும், கோரமும், பீதியும் நிறைந்த ஆண்டுகளாக 1975-ம் 1976-ம் இருந்தன.

இருபது அம்சம் என்ற இந்திராவின் திட்டமும், ஐந்து அம்சம் என்ற அவரது புதல்வர் சஞ்சயின் திட்டமும் - திட்ட அளவில் பார்க்கும்போது ஏற்றுக்கொள்ளக் கூடியவைகள்தான்!

இருபது அம்சப் பொருளாதாரத் திட்டங்கள் பலவற்றை இந்திரா அறிவிப்பதற்கு முன்பே, தமிழகத்தில் கழக அரசு அவற்றை நிறைவேற்றத் தொடங்கி விட்டது என்பதை அப்போதே நாம் தெளிவுபடுத்தினோம். அதேபோன்று சஞ்சய் காந்தி வெளியிட்ட ஐந்து அம்சத் திட்டங்கள்; சாதி ஒழிப்பு, முதியோர் கல்வி, குடும்ப நலத் திட்டம், மரம் வளர்த்தல், வரதட்சணை ஒழிப்பு - என்பவைகளும் நமக்கு விரோதமானவைகள் அல்ல என்ற கருத்தினை விளக்கியிருக்கிறோம்.

ஆனால் இந்த இருபத்தைந்து அம்சத் திட்டமெனும் திரைமறைவில் அப்போது நடைபெற்ற அக்கிரமங்கள், அத்துமீறிய செயல்கள், அதற்குப் பலியான குடும்பங்கள், பழிவாங்கப்பட்ட பரிதாபத்திற்குரியவர்கள் - எனப்படும் பயங்கரப் பட்டியல் பற்றிய தகவல்கள் எதையும் நாடு தெரிந்துகொள்ள முடியாமல் இருட்டில் வைக்கப்பட்டிருந்தது.

இந்திரா, சஞ்சய் இரண்டு பேரின் நடவடிக்கைகளை எதிர்க்காமல் சில கட்சிகள், இந்திராவை ஆதரித்து சஞ்சய் காந்தியைக் கடுமையாக விமர்சித்த முரண்பாடுகளையும் நமது கழகத்தின் சார்பில் அப்போதே எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

எப்படியோ, இந்தியாவை ஒரு சர்வாதிகார நாடாக ஆக்க வேண்டுமென்று திட்டமிட்டும், தன் குடும்பமே தொடர்ந்து இந்திய நாட்டு சிம்மாசனத்தில் வீற்றிருக்க வேண்டுமென்று சதி நடத்தியும் -அதற்கு அனுசரணையாக நெருக்கடி நிலையைக் கொண்டு வந்த இந்திரா காந்தியின் போக்கினை ஆதரித்தது

தவறு என்று இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி இப்போது உணர்ந்து தீர்மானமே நிறைவேற்றியிருப்பதும் - திரு. சவாண், திரு. பிரமானந்த ரெட்டி போன்றவர்கள் இந்திராவின் கருத்துக்கு மாறுபட்ட நிலையில் இன்றைய தினம் உறுதியாக நிற்பதும் வரவேற்றுப் பாராட்டத்தக்கவைகளாகும்.

நெருக்கடி காலக் கொடுமைகளால் மனம் புழுங்கியிருந்த தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் பலர், இன்றைய தினம் தங்கள் ஆதரவு இந்திராவுக்கு இல்லை என்று அறிவித்திருப்பது அவர்களின் கட்சிக் கட்டுப்பாட்டை மாத்திரமல்ல; ஜனநாயகத்தின் மீது அவர்களுக்குள்ள ஆழமான நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது என்றே கூறலாம்.

தாமதமாக உணர்ந்தாலும் கூட, ஜனநாயகத்தை வளர்ப்பதற்கேற்ற முடிவினை எடுத்தவர்கள் அனைவரையும் வாழ்த்திடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்திராவின் தலைமையில் ஒரு கட்சி தோன்றுமேயானால், அதனுடன் எந்தக் கட்சிகளாவது தோழமை பூணுமேயானால் - அந்தச் சர்வாதிகார அணியை எதிர்த்து ஒரு ஜனநாயக அணி வலிமையுடன் எழுந்து நின்றால்தான், மீண்டும் இந்தியாவில் சர்வாதிகாரம் தலை தூக்காமல் அடித்து வீழ்த்த முடியும் என்பதை மக்களாட்சித் தத்துவத்தில் நம்பிக்கையுள்ள கட்சிகள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

உடன்பிறப்பே! ஏற்கனவே நெருக்கடி நிலையை ஆதரித்தவர்களும் இன்று தங்களைத் திருத்திக்கொள்கிற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால், 1975-76-ஆம் ஆண்டுகள் எத்துணைக் கொடுமை வாய்ந்தவை என்பதை இன்னுமா விளக்க வேண்டும்?

1977-இல் இந்தியாவில் ஜனநாயகம் தப்பிப் பிழைத்தது என்று மகிழ்ச்சியடைந்தாலும் கூட அந்த ஆண்டு போகிற போக்கில் தனது கொடுங்கரங்களால் தமிழகத்திலும், ஆந்திரத்திலும் ஆயிரக்கணக்கான உயிர்களை அல்லவா அள்ளிக் கொண்டு போய் விட்டது.

பயிர் பச்சை அழிந்திட - வாழையும் தென்னையும் வீழ்ந்திட, எத்தனை கோடி ரூபாய் மதிப்புள்ள விளைவுகள் பாழாயின!

வீடிழந்தோர், உடைமையிழந்தோர் வடித்திடும் விழிநீர் இன்னமும் நின்றபாடில்லையே!

இந்திராவின் சர்வாதிகாரம் வீழ்ந்தாலும் அந்த ஆவி, தமிழ்நாட்டைச் சுற்றிக் கொண்டிருப்பதாலோ என்னவோ - இங்குள்ள ஆட்சியாளர்களின் துப்பாக்கிக் குண்டுகள் மூவர் உடலைத் துளைத்து அவர்தம் உயிரைப் போக்கின. சதித் திட்டம், கொலை முயற்சி என்ற பயங்கரமான வழக்குகள், சிறைத் தண்டனைகள், அரசியல்வாதிகள் ஆயிரமாயிரம் பேருக்கு!

அத்துடன் நில்லாமல் 1977 இறுதிக் கட்டம் காழ்ப் புணர்ச்சியின் உச்ச கட்டமாகவே மாறியதையும் நாடு கண்டது.

இத்தகைய காரணங்களால் 1975, 1976, 1977 ஆகிய ஆண்டுகள் நமது பிரிவு உபசாரப் பாராட்டைப் பெறும் முழுத் தகுதி படைத்தவைகளாக இல்லை!

இன்று வந்திடும் 1978-ஆம் ஆண்டாவது அந்தத் தகுதியைப் பெறட்டும் என்ற வாழ்த்தோடும், அந்தத் தகுதியைப் பெறும் என்ற நம்பிக்கையோடும் வரவேற்றிடுவோம்.

அன்புள்ள,

மு. க.

(1-01-1978)

# 509. நீ வழங்கும் பொங்கல் பரிசு!

**உடன்பிறப்பே,**

சட்டப் பேரவை நிகழ்ச்சிகள் நேற்றுடன் முடிவடைந்து விட்டன. பொங்கல் விழா எடுக்கும் பணிகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவாய் என்பது எனக்குத் தெரியும்.

இந்த ஆண்டு பொங்கல் விழா, மகிழ்ச்சியும் சோகமும் கலந்து ஊமை வெயில் போலத்தான் இருக்கும். பொங்கல் பானை வைத்துப் பொங்குதற்கும் இடமின்றிப் புயலிலும் வெள்ளத்திலும் வீடு வாசல்களை இழந்தோர் பல்லாயிரவரன்றோ? சென்ற ஆண்டு பொங்கலிட்டு மகிழ்ந்தபோது தாயின் தோளில் தொத்திக்கொண்டு மழலை பொழிந்த பிள்ளைச் செல்வத்தை இந்த ஆண்டு வெள்ளமன்றோ அள்ளிக்கொண்டு போய்விட்டது!

புனலிடை மூழ்கிப் புத்தாடை பூண்டு எந்தத் தாய் தந்தையர்க்குக் காலில் விழுந்து வணக்கம் செலுத்தினரோ, அந்த முதியவர்களை மூச்சற்றவர்களாக்கி, தொலைதூரம் தூக்கி எறிந்துவிட்ட புயலன்றோ மிகக் கடுமையாக வீசிவிட்டது தமிழகத்தில், மஞ்சளும் இஞ்சியும் செந்நெல்லும் கன்னலும் கண்டு மகிழ்ந்தோர் உண்டு மகிழ்ந்து கொஞ்சி மகிழ்ந்தோர் இன்பம் பொங்குக அன்பே எனத் தழுவி மகிழ்ந்தோர் இணை இணையாகவும், இணை பிரிந்துமன்றோ இரையாகி விட்டனர் கொடும் இயற்கைச் சீற்றத்துக்கு!

பச்சைப் பட்டுடுத்திக் கட்டழகு காட்டிய கழனிப் பெண்கள் கரிக் கட்டைகள் போலன்றோ காட்சி தருகின்றனர். வாழைத் தோட்டம் வீழ்ந்தது, அதனால் வாழ்வும் வீழ்ந்தது என வடித்திடுகின்றார் கண்ணீர், வேதனை தாங்காமல்! முகில் தொட முனைந்த தென்னைகள் தலை கவிழ்ந்து கிடப்பது போர்க்களத்தில் வீரர்கள் காயமுற்றுச் சாய்ந்தது போலவன்றோ இருந்திடக் காண்கிறோம். இத்துணை சோகச் சூழலுக்கிடையேதான் தமிழரின் பொது விழாவாம் – நம் இனத்தின் பெரு விழாவாம் பொங்கலினைக் கொண்டாடுகிறோம் இந்த ஆண்டு!

இடையில் நாட்கள் மிகச் சிலவே இருப்பதால் உடன்பிறப்பே! உனக்கொரு வேண்டுகோள் விடுக்கின்றேன்; நீ செய்திடுவாய் என்ற நம்பிக்கையின் காரணமாக!

கிராமத்திலும் கண்டிருப்பாய், பட்டினப் பகுதிகளிலும் பார்த்திருப்பாய்!

கடந்த ஆண்டு யார் வீட்டிலாவது துக்கம் நேர்ந்து விட்டால் இந்த ஆண்டு பொங்கல் எடுக்கமாட்டார்கள். பக்கத்து வீட்டார் அல்லது உறவினர், தங்கள் வீட்டில் விழாக் கொண்டாடி சமைத்த பொங்கலையும், கரும்பையும், கனி வகைகளையும் விழாக் கொண்டாடாது வேதனையோடிருப்போர் இல்லத்திற்கு அனுப்பி வைப்பர்!

அது ஏதோ, ஒரு வீட்டுக்கு இன்னொரு வீட்டார் காட்டுகிற அன்பு!

இன்றோ, புயல் வெள்ளக் கொடுமையால் பாதிக்கப்பட்டோர், இன்னமும் வாழ்வை வகைப்படுத்திக் கொள்ள முடியாதவர், இழந்துவிட்ட குடும்பத்து விளக்குகளை எண்ணி எண்ணி ஏங்கிடுவோர் - ஆயிரக்கணக்கானோர்!

அவர்களுகெல்லாம் அன்பு உடன்பிறப்பே, இந்தப் பொங்கலன்று உன் ஆதரவுக்கரம் நீள வேண்டும். வெள்ளத்தால் பாதிக்காத வீட்டுப்பிள்ளை, கரும்பைச் சுவைத்துக் கொண்டிருக்கும்பொழுது அதைப் பார்த்தவண்ணம் பக்கத்து வீட்டு ஏழைப் பைங்கிளி கண்ணீர் கொட்டுவதை நீ காண்பாயானால், உன் இதயத்தில் இரத்தக் கண்ணீர் கொட்ட வேண்டும். அந்த ஏழைப்பிள்ளைக்கும் உன்னால் ஆன உதவி, ஒரு சிறு கரும்புத்துண்டு நீ தர வேண்டும்.

வசதியிருப்போர் பொங்குகின்றார்; எம் வீட்டில் உள்ளம்தான் துன்பத்தால் பொங்குகிறது என்பதைச் சொல்லாமல் சொல்வோரும் உள்ளனர். அவர்கட்கெல்லாம் நமது கழக அமைப்புகள் சார்பாக உன்னால் இயன்ற அளவு அவர்கள் ஆறுதல் அடையத்தக்க வண்ணம் புதுப் பொங்கல் வழங்கிட முனைந்திடு!

பொங்கல் விழாக் கூட்டங்கள்! கூத்துக்கள்! இசை, கலை இன்னோரன்ன இனிய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுத் திளைத்திடுவாய், எனக்குத் தெரியும்.

அவற்றோடு, நான் விடுத்திடும் வேண்டுகோளையும் செயல்படுத்திடுக!

தனியொரு உடன்பிறப்பினால் இது இயலாது என்பதால்தான் அமைப்புக்களின் சார்பிலே முறையாகப் பணிகளை மேற்கொண்டு கவலை நிறைந்த முகத்தோடும், ஒளிமங்கிய விழிகளோடும் உலவுகின்ற ஏழைத் தமிழ் மக்களுக்கும் பொங்கலின் இன்பம் சிறிதளவாவது கிடைத்திட வழி வகுத்திடு எனக் குறிப்பிடுகிறேன்.

புயல்வெள்ளப் பகுதிகளில் ஆறு நாட்கள் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தில் நாங்கள் கண்ட துன்பம் தோய்ந்த முகங்கள் இன்னமும் என் மனக்கண்ணை விட்டு அகலவில்லை.

அவர்களுக்கெல்லாம் ஒரு ஆறுதலாகத்தான் - இந்தத் தொண்டினைச் செய்திடுமாறு உன்னைக் கேட்டுக் கொள்கிறேன்.

இயற்கைப் புயல் அடிக்காமல் வறுமைப் புயல் அடித்து வாடும் வட்டாரங்களும் உண்டு - அங்குள்ள உடன் பிறப்புகளும்கூட, அந்த ஏழை எளியோரின் வயிற்றினைப் பொங்கலன்று குளிர வைத்து, அதன் காரணமாக மகிழ்ச்சி அடையலாம்.

நம் கடமை பணி செய்து கிடப்பதே என்பதுதான் கழகக் கண்மணிகளாம் ஒவ்வொரு உடன்பிறப்பின் இதயஒலியாக இருந்து வருகிறது!

அந்தப் பணி, பொங்கலன்று இப்படியொரு வகையாக உருவெடுக்கட்டும்!

ஏழையின் சிரிப்பில் தானே இறைவனைக் காண முடியுமென்று நமதண்ணன் அடிக்கடி எடுத்துரைப்பார்.

அந்தச் சிரிப்பினைக் கண்டிட, செங்கரும்புப் பொங்கல் நாளிலே செயலாற்றத் துடித்தெழுக! இன்றே அதற்கெனத் திட்டம் வகுத்திடுக!

எங்கே பார்க்கலாம்! எத்தனை ஊர்களில் இத்தகு பணியினைச் செய்திட்டாய்! என்பதை விபரமாக எழுது! அதுதான் நீ எனக்கு வழங்கும் பொங்கல் பரிசு! அந்தப் பரிசை வழங்குவாயா, என் உடன்பிறப்பே?

அன்புள்ள,

மு. க.

(11-01-1978)

# 510. இப்படியும் அமைச்சர்களா?

**உடன்பிறப்பே,**

இப்படியும் ஒரு முதலமைச்சர் இருப்பாரா? எதற் கெடுத்தாலும் அதிகாரிகள் மீதல்லவா பழிபோடுகிறார்! இவரும் இவரது அமைச்சர்களும் செய்கிற அல்லது சொல்கிற தவறுகளுக்கு அதிகாரிகளையல்லவா பொறுப் பாக்குகிறார்கள்! சட்டசபையில் பேசினாலும் - பொது நிகழ்ச்சிகளில் பேசினாலும், அதிகாரிகள் மீதே பொறுப் புகளைப் போட்டுவிட்டுத் தங்களின் இயலாமையைக் காட்டிக் கொள்கிறார்களே!

இவ்வாறு தமிழக அரசின் தலைமைச் செயலகத் திலேயிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகம் வரையில் உள்ள அதிகாரிகள் முணுமுணுக்கத் தொடங்கி விட்டார்கள்.

அதிகாரிகள் எல்லோருமே நல்லவர்கள், நம்பிக்கைக்கு உரியவர்கள் என்று நான் வக்காலத்து வாங்கி வாதிட முனையவில்லை.

ஆனால், கேலிக்கூத்தாகப் புள்ளி விபரங்களைக் கூறுவதும், சட்டசபையில் முன்னுக்குப் பின் முரணான பதில்களைத் தருவதும், அரசு ஆணைகளைப் பிறப்பிப்பதும் - இவற்றையெல்லாம் எதிர்க்கட்சியின் சார்பில் சுட்டிக்காட்டிக் கேட்டால்,

அய்யோ! நான் எத்தகைய அதிகாரிகளுக்கு மத்தியிலே பணியாற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன் பார்த்தீர்களா? அத்தகைய அதிகாரிகள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்

என்று முதலமைச்சர் பதில் அளிக்கத் தவறுவதில்லை.

மத்திய அரசு, மாநில அரசுக்கு மானியமாக சுமார் நாற்பத்தி ஐந்து கோடி ரூபாய்தானே அளிக்கிறது - உண்மை அவ்வாறு இருக்க மத்திய அரசு, மாநில அரசுக்குச் சுமார் முன்னூற்றி எழுபது

கோடி ரூபாய் மானியம் தருவதாக முதலமைச்சர் கூறியிருக்கிறாரே; இது எவ்வளவு பெரிய முரண்பாடு என்று சட்டப்பேரவையில் நான் கேட்டபோது, மக்கள் நன்மைக்காக அதிகப்படுத்திக் கூறுவது தவறல்ல என்ற கருத்தை முதலமைச்சர், பேரவையில் பதிலாகத் தருகிறார்.

இந்தப் பதிலைக் கேட்டு சிரிப்பதா? அழுவதா? என்றே தெரியவில்லை.

சீராளனைக் கொலை செய்தார்கள் என்று சில போலீஸ் அதிகாரிகள் மீது வழக்கு போட்டுள்ளீர்களே! 302-வது செக்ஷன்படி போட்ட அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டோர் ஏன் கைது செய்யப்படவில்லை? கொலை முயற்சியில் ஈடுபட்டார்கள் என்று 307-வது செக்ஷனுக்கே அரசியல்வாதிகளைக் கைது செய்த நீங்கள், 302-வது செக்ஷன்படி குற்றம் சுமத்தப்பட்டவர்களைக் கைது செய்யாத காரணம் என்ன?

இப்படியொரு கேள்வியினை நான் சட்டப்பேரவையில் எழுப்பியபோது முதலமைச்சர் அளித்த பதில் என்ன?

சட்டத்துறையின் கருத்துப்படிதான் செய்யப்பட்டிருக்கிறது!

இது முதல்வரின் பதில்.

சட்டத்துறையிலிருப்போர் தவறான கருத்துத் தெரிவித்திருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

இது, எங்களின் கேள்வி?

இதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் உறுதியளிக்கிறார் சட்டப்பேரவையில்!

சீராளன் கொலையுண்டது உண்மை. கொலை செய்தவர்கள் என்று சிலர் மீது வழக்கு. ஆனால் அவர்கள் யாரும் கைது செய்யப்படாமலே வழக்கு தொடரப்படுகிறது. அவர்களைக் கைது செய்துதான் வழக்கு போட வேண்டுமென்ற எண்ணம், போலீஸ் துறைக்கும் அமைச்சராக இருக்கிற முதல் அமைச்சருக்கு வரவில்லை, சட்டத் துறையின் பின்னால் ஒளிந்து கொண்டு ஏதோ ஒரு சமாதானம் கூறுகிறார். 307-வது செக்ஷனுக்குக் கைது செய்து ரிமாண்டில் வைக்கிறார்; அதுவும் அரசியல் கட்சிக்காரர்களை!

ஆனால் 302-வது செக்ஷனுக்கு யாரையும் கைது செய்யாமலே வழக்கு மாத்திரம் போடுகிறார்!

ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்களால் அமைக்கப்பட்ட இஸ்மாயில் கமிஷன், சென்னை சிறைக் கொடுமைகளை விசாரித்ததே, அந்த அறிக்கை அவையில் எப்போது வைக்கப்படும்?

இது எனது கேள்வி!

அறிக்கை ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் வைக்கப்படும்!

இது முதல்வரின் பதில்.

அதற்குப் பிறகு ஆறு ஏழு நாட்கள் ஓடிவிடுகின்றன. விசாரித்துப் பார்த்த அளவில் அந்த அறிக்கை ஆளுநருக்கே அனுப்பப்படவில்லையென்று தெரிந்தது.

ஒரு தவறான தகவலை முதல்வர் அவைக்கு அளித்தார் என்று ஆறு நாட்களுக்குப் பிறகு ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பினேன்.

அதற்கு முதல்வர் அளித்த பதிலும் விளக்கமும் என்ன தெரியுமா?

நான் கையெழுத்துப் போட்டு விட்டேன். அதை அதிகாரிகள் கவர்னருக்கு அனுப்பினார்களா என்பது தெரியாது. எனக்குத் தெரியாத விஷயம் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிந்திருக்கிறது. இப்படிப்பட்ட அதிகாரிகளும் இருக்கிறார்கள். அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தக் கருத்துடைய ஒரு பதிலைக் கூறுகிறார்.

நான் கேட்டது டிசம்பர் 31-ஆம் நாள்! கவர்னருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று முதல்வர் பதில் அளித்ததும் அதே நாள்தான். பிறகு ஜனவரி 6-ஆம் நாள் உரிமைப் பிரச்சினை கொண்டு வருகிறேன். முதல்வரோ, அதிகாரிகள் மீது பழியைப் போடுகிறார். டிசம்பர் 31-ஆம் நாள் பதில் அளித்தவுடனேயே, முதலமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரியை அழைத்து அந்த அறிக்கை கவர்னருக்கு அனுப்பப்பட்டு விட்டதா? என்று கேட்டிருக்க வேண்டாமா? கேட்டிருந்தால் ஜனவரி 6-ஆம் நாள் உரிமைப் பிரச்சினையே வர நேரிட்டிருக்காதே!

மதுவிலக்கு பற்றி ஒருநாள் அவையில் முதல்வர் பேசுகிறார். நண்பர் சாதிக் குறுக்கிட்டு குடிப்பவர்கள் மீது வழக்கு போட வேண்டாம் என்று அரசு உத்திரவு போட்டிருக்கிறதாமே! - என்று கேட்கிறார்.

அப்படி எந்த உத்திரவும் இல்லை என்று முதல்வர் பதில் அளிக்கிறார்.

நான் உடனே எழுந்து அரசு ஆணையின் நகல் பிரதி யொன்றைப் படித்துக் காட்டுகிறேன்.

குடித்துவிட்டு வன்முறையிலோ கலவரங்களிலோ ஈடுபடுகிறவர்களைத் தவிர மற்ற மதுவிலக்கு மீறிய வழக்குகளை வாபஸ் பெற்றுக்கொள்க

என்று போலீஸ் அதிகாரிகளுக்கு உத்திரவு போயிருக்கிறதே என்று கேட்கிறேன்.

ஏதோ தவறு நடந்துவிட்டது

என்று முதல்வர் பதில் அளிக்கிறார். போலீஸ் தலைமை அதிகாரிக்கு உள்துறை அலுவலகத்தில் இருந்துதானே ஆணை அனுப்பப்பட்டுள்ளது; அந்த முக்கியமான ஆணையில் முதல்வர் கையெழுத்திடவில்லையா? என்பது எனது அடுத்த கேள்வி.

உடனே மீண்டும் முதல்வர் அதிகாரிகள் மீது பாய்கிறார். அதனை விசாரித்து அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்கிறார்.

1969 முதல் 1976க்குள்ளான (கருணாநிதி) ஆட்சியில்தான் வேணுகோபால் என்பவருக்கு விசைப்படகு ஒதுக்கப்பட்டது.

இது மீன்வளத்துறை அமைச்சர் எட்மண்ட் அளித்த பதில்! திரும்பத் திரும்பக் கேட்கிறேன் - ஆமாம்! அதே காலத்தில்தான் என்று கூறிக் கழக அரசுமீது குற்றம் சாட்டுகிறார்.

மறுநாள் அந்த வேணுகோபாலுக்கு 1962-ஆம் ஆண்டில்தான் விசைப்படகு தரப்பட்டதாக வேணுகோபாலே எனக்கு விபரமாகக் கடிதம் எழுதுகிறார். அதை வைத்து மறுநாள் உரிமைப் பிரச்சினை எழுப்பி, அமைச்சர் அவைக்குத் தவறான தகவலைத் தந்துவிட்டார் என்று விளக்குகிறேன். அதற்கு அமைச்சரின் பதில் என்ன தெரியுமா? 1962 என்பது 1972 என்று தவறுதலாக டைப் செய்யப்பட்டு விட்டது. அதை நம்பி அப்படித்

தவறாகக் கூறிவிட்டாராம்! முதல்நாள் அவர் 1972 என்று வருடமே குறிப்பிடவில்லை. 1969 முதல் 1976க்குள்ளாக என்று மட்டுமே சொன்னார். உரிமைப் பிரச்சினை வந்தவுடனே டைப்பிஸ்ட் தலைமீது பழியைப் போட்டுவிடுகிறார்.

இப்படி ஒன்றல்ல இரண்டல்ல; நூற்றுக்கணக்கான கேலிக்கூத்துக்களை இன்றைய அமைச்சர்கள் நாள்தோறும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதிகாரிகள் தவறு செய்தால் அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்கட்டும். ஆனால், தங்களுடைய அறிக்கைகள், ஆணைகள், பதில்கள் அனைத்துக்கும் அதிகாரிகளைப் பொறுப்பாக்கித் தாங்கள் கெட்டிக்காரர்கள் என்று காட்டிக்கொள்ள முயல்வதைக் கண்டு இப்படியும் அமைச்சர்களா? என்று சாதாரண அறிவு படைத்தவர்கள்கூட கேட்கத்தான் செய்கிறார்கள்.

அன்புள்ள,

மு. க.

(13-01-1978)

# 511. அண்ணன் எண்ணம் உணர்க!

**உடன்பிறப்பே,**

உனக்கு என் பொங்கல் வாழ்த்துக்கள்!

கனியிடை ஏறிய சுளையையும் முற்றல் கழையிடை ஏறிய சுவையையும் வென்றிடும் தமிழ் எடுத்து வாழிய பொங்கல்! வாழிய! வாழிய என முழங்கிடும் இந்தத் தை முதல் நாளில் தமிழ் இனத்தின் பெருவிழாவையன்றோ தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் கொண்டாடுகிறோம்.

தமிழ்மொழி, தமிழ் இனம் - என்று கூறுவதே கசப்பாகிறது சிலருக்கு இப்போது! அப்படிக் கூறுவோரை இனவெறியர் என்ற பட்டம் சூட்டி வீழ்த்திடச் சிலர் கிளம்பியுள்ளனர். நாலு கோடிக்கு மேற்பட்ட தமிழர்களை ஒரு சதவிகிதத்திற்கும் குறைவானோர் ஆதிக்கம் செலுத்துவராம். அது கண்டு குமுறுவதற்கும் உரிமை இல்லையாம் - பரந்த மனப்பான்மையெனும் இனிப்பு தடவிய விஷத்தினை வாய்க்குள் செலுத்திடப் பார்க்கின்றனர்.

இந்த மண்டலம் ஆண்டோம்
இனிய இலக்கியம் படைத்தோம்
இமயம் வரை சென்று பகைவர்
தலையில் கல்லேற்றிக் கொணர்ந்தோம்
வீரமே நமது வரலாறு!

இன்று வீழ்ந்ததோ நமது மரபின் சிறப்பு என விழிகளில் குளங்கொண்டு தமிழ்ப் புலவர்கள் சோகப்பண் இசைக்கின்றனர் என்று மூட வீணர்களால் தமிழ் இனம் காட்டிக் கொடுக்கப்படுகிறது. தமிழ்மொழி, மரபு என்று பேசுவதே பொல்லாப் பாபம் என சபிக்கப்படுகிறது.

நாட்டால் இந்தியர்கள், கலாச்சாரத்தால் திராவிடர்கள், மொழியால் - தேசிய இனத்தால் தமிழர்கள்! இதுதான் நமது

முழக்கம். இதில் ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் எள்ளளவும் இல்லை. அதேபோல் நமது உணர்வில் இந்திய ஒருமைப்பாடும் குறுக்கிடக் கூடாது! குறுக்கிடாது நிச்சயமாக!

இந்தியாவின் மொத்தப் பாதுகாப்புக்கு நம்மை என்றென்றும் தயார்நிலையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் மொழி வழி பிரிந்துள்ள தமிழ் மாநிலத்தின் உரிமைகளைக் கட்டிக் காப்பதிலும் கண்ணும்கருத்துமாக இருக்கிறோம். இந்த உரிமைகளைக் குலைப்பதற்கு திராவிட கலாச்சாரம் என்ற சொல்லை யாரும் பயன்படுத்திக்கொள்ள முனைவரேல் அதனை தடுத்து நிறுத்தும் கடமை தமிழர்களுக்கு உண்டு!

நாம் இந்தியர்கள் என்பதால் இந்தி மொழியை தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்த விட்டு விடுவதில்லை.

அதேபோல் நாம் திராவிடக் கலாச்சாரத்திற்கு உரியவர்கள் என்பதால் மற்ற மொழிகள், தமிழ் மொழியின் மீது ஆதிக்கம் செலுத்தவோ - மற்ற மொழிக்காரர்கள் தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்தவோ உரிமை படைத்ததாக நாம் என்றைக்கும் ஒப்புக் கொள்ள முடியாது!

அவ்வாறே தமிழர்களும் வேறு மாநிலங்களில் தங்களுக்கு உரிய இடத்தையும், பாதுகாப்பையும் பெறலாமே தவிர... மற்ற மொழியினர் மீது ஆதிக்க உரிமை கொண்டாடிடக் கூடாது! கொண்டிடவும் இயலாது!

இவ்வளவு தெளிவான நிலையிலேதான் தமிழ்மொழி, மரபு, குறித்தும் அவற்றை எந்த ஒரு சக்தியும் அழித்திட விடமாட்டோம் என்பது குறித்தும் நமது கொள்கைக் குரலை ஒலித்து வருகிறோம்.

ஆனால், தமிழ்மொழி, மரபு என்று பேசினாலே, அது ஒரு இனவெறிப் பேச்சு என்று கொந்தளிக்கும் அரசியல்வாதிகள் சிலரைக் காணுகிறேன்.

தமிழ் என்னும் பெயரால் தமிழர்படை வைத்து பிற மொழியினர் மீது பாய்ச்சல் நடத்த முற்பட்டோர், அன்றைக்கே கழகத்தால் கண்டிக்கப்பட்டனர். அவர்கள் இப்போது நம்மிடமில்லை. இன்றைய ஆளுங்கட்சியில் இருக்கின்றனர். பிரிவினைப் பிரச்சாரத்திற்கு மீண்டும் வித்திட்டு, அதற்கென ஏடு நடத்தியோர்

கூட கழக அரசால் நடவடிக்கை எடுக்கப் பட்டனர். அவர்களும் இன்றைய ஆளுங்கட்சியில் தானிருக்கின்றனர்.

தமிழகத்தில் வாழும் சிறுபான்மை மொழியினர்க்குப் பாதுகாப்பு! அவர்களுக்குரிய இடம்! இவற்றில் கழகத்திற்கு மாறுபாடு கிடையாது - ஆனால், மொழி வழி அமைந்து விட்ட இந்த மாநிலத்தை தமிழாய்ந்த தமிழ்மகன்தான் ஆளுதல் வேண்டும் என்ற பாவேந்தர் பாரதிதாசனின் கருத்துக்கு மாறுபாடான நிலையில் ஏற்பட்டு விட்ட சூழல்களைத் தமிழர்கள் எங்ஙனம் பொறுத்துக் கொள்வர்!

உடன்பிறப்பே, தமிழ்நாட்டின் தலைமையிடத்தில் இருப்போர் தமிழ் உணர்வோ, தமிழ்ப் பண்போ கொண்டவராயிருந்தால் - தமிழர்களின் பெயர்களையெல்லாம் தரைமட்டமாக்க முனைவரோ?

இணைந்த சென்னை ராஜ்யத்தை நீதிக் கட்சியினர் ஆண்டனர். அந்தத் தலைவர்கள் பெயரால் எத்தனையோ கட்டிடங்கள், சாலைகள், பூங்காக்கள்!

அவர்கட்குப் பிறகு காங்கிரசார் ஆண்டனர். நீதிக் கட்சித் தலைவர்களின் பெயர்களை அகற்றிட யாரும் முனைந்தாரில்லை.

இருபதாண்டு காங்கிரஸ் ஆட்சியில் எத்துணையோ காங்கிரஸ் தலைவர்களின் பெயரால் கட்டிடங்கள், குளங்கள், ஏரிகள், பாலங்கள், பார்க்குகள்!

1967-ல் வந்த கழக ஆட்சி முன்பிருந்த காங்கிரசார் பெயர்களை அகற்றிடவில்லை.

அந்நியர் என்பதால் வெள்ளைக்காரர்கள் பெயர்கள் சில அகற்றப்பட்டிருக்கும் கடந்த காலங்களில்!

ஆனால் இன்று நடப்பதென்ன? கட்சி வேறுபாடின்றி எல்லாத் தமிழர்களின் பெயர்களும் தூளாக்கப்படுகின்றன. இடித்து நொறுக்கப்படுகின்றன!

இதிலிருந்து புரியவில்லையா; தமிழ்நாட்டை ஆள்வது யார் என்று?

1960-ஆம் ஆண்டு தம்பிக்கு எழுதிய மடலில் அண்ணா அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ஆங்கில அரசு நம்மைப்

பிடித்துக் கொண்டது. அதனை அகற்ற வேண்டி, அனைவரையும் ஒரு முகாமுக்குள் கொண்டுவர வேண்டியதாயிற்று. ஆகவே தமிழ் இனம், பிற இனம், தமிழ் மரபு, மற்றையோர் மரபு என்பன பற்றிப் பேசவும், எண்ணிடவுங்கூட நேரம் இல்லை; வெள்ளையன் அந்நியன். அந்நியன் விரட்டப்பட வேண்டும்; அதற்கு வீரம் மிகவும் வேண்டும்; அறிவாற்றல் கொண்டோர் அனைவரும் ஒன்று திரண்டு நின்றிட வேண்டும். அதிலே வடக்கு என்றோ, தெற்கு என்றோ பேதம்பேசுதல் ஆகாது என்று தேசியம் பேசப்பட்டது.

தேசியம் ஏற்றுக் கொள்ளவும் பட்டது. எனவேதான், வங்கத்து சட்டர்ஜியும், வலங்கைமான் சத்தாரும், பாஞ்சாலத்து லஜபதியும், பாஞ்சாலங்குறிச்சி சிதம்பரனாரும், அலகாபாத் மோதிலாலும், சேலத்து ஆச்சாரியாரும், பம்பாய்ப் பட்டிணத்து வாடியாவும், ஈரோட்டுப் பெரியாரும், கவிஞர் தாகூரும், கர்மவீரர் கலியாணசுந்தரனாரும் - முகுந்தலால் சர்க்காரும், சர்க்கரைச் செட்டியாரும் - என்று இப்படிப் பலரும் ஒன்றுபட்டு நின்றனர்; ஒரு பொது நோக்கத் திற்காக பொது எதிரியை விரட்டிட, வெள்ளை ஆட்சியை நீக்கிட.

அதன்பயனாக நன்மை ஒன்று விளைந்தது; வெள்ளை ஆட்சி ஒழிந்தது.

எதிர்பாராத வகையில் தீமை ஒன்று வந்துற்றது; தமிழன் தன் இனம், மரபு, நாடு மறந்ததே, அந்தத் தீமை.

அந்தத் தீமையின் விளைவாக ஏற்பட்டதே தடுமாற்றம். அந்தத் தடுமாற்றத்தினால், தமிழன், தமிழ்நாடு என்பதனை மறந்து நிலை கெட்டு நிற்கலானான்; தம்பி! நமது இயக்கம், இந்த நிலையினை மாற்றிட வெகு பாடுபட வேண்டிய தாயிற்று.

உடன்பிறப்பே, அண்ணாவின் ஏக்கம் புரிகிறதா உனக்கு?

வெகு பாடுபட்டு உருவாக்கிய உணர்வு - அதனைத்தான் இனவெறி என்ற பெயரால் அழித்திடத் துடிக்கின்றனர் சந்தர்ப்பவாதிகள்!

தமிழர்களின் பெயரைத் தகர்ப்போர் இன வெறியர்களா?

அவர்களை அடையாளம் காட்டுவோர் இன வெறியர்களா?

தமிழ்க்குலம் எடுக்கும் இந்தப் பொங்கல் விழாவில் இந்தக் கேள்விக்குப் பதில் உன் உள்ளத்தில் பொங்கட்டும்.

இந்தக் கேள்வியும் இதற்குக் கிடைக்கும் பதிலும்தான் அண்ணா குறிப்பிடும் அந்தத் தீமையை அகற்றக்கூடிய வலிமை வாய்ந்தவைகளாகும்.

குறிப்பால் உணர்த்தினேன்;

புரிந்து கொள்ளும் உடன்

பிறப்பு என்பதால்!

அண்ணன் எண்ணம் எதுவெனக் காட்டினேன்; அறிவுச்சுடர் நீ என்பதால் எளிதில் உணர்ந்து கொள்வாய் என்ற நம்பிக்கையுடன்!

அன்புள்ள,

மு. க.

(14-01-1978)

## 512. உன் சிந்தையில் உலவிட...

**உடன்பிறப்பே,**

கழகப் பொதுச்செயலாளர் அவர்களின் அறிக்கைக் கேற்பவும், திருத்தப்பட்ட கழகச் சட்ட திட்டப்படியும் தி.மு.க. ஊர்க்கிளை (கிராமக் கிளை) உட்கிளை (நகரங்களின் வார்டு கிளை) ஆகியவற்றின் தேர்தல் - வரும் 27, 28, 29, 30 ஆகிய நாட்களில் நடைபெற இருக்கிறது.

இந்தக் கிளைகளுக்கான தேர்தல் விதிமுறைகளை பற்றி கழகத்தின் அமைப்புச் செயலாளர் அவர்கள் விரிவான அறிவிப்பு ஒன்றை இரண்டொரு நாட்களுக்கு முன்பு முரசொலி வாயிலாக விடுத்துள்ளார்.

தி.மு.க. கொள்கை கோட்பாடும் சட்ட திட்டங்களும் என்ற தலைமைக் கழகத்தின் வெளியீடும், கழகத் தேர்தல் விதிமுறைகள் என்ற விளக்க ஏடும் எல்லா அமைப்புகளுக்கும் அஞ்சல் வழியாகத் தலைமை நிலையத்தின் சார்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அறிஞர் அண்ணா வகுத்த குறிக்கோளுக்கு ஏற்ப, தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களிலும் - இந்திய அரசுரிமை, ஒருமைத்தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு நெருங்கிய திராவிடக் கலாச்சாரக் கூட்டுறவு நிலவப் பாடுபடுவது என்பதைக் குறிக்கோளாகக் கொண்டும்,

அறிஞர் அண்ணா அறிவுறுத்திய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அடிப்படையில் அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணி ஆற்றிடவும், பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழி கண்டிடவும், பிறமொழி ஆதிக்கத்திற்கு இடம் கொடாமல், அந்தந்த

மாநில மொழிகளை வளர்த்திடவும், அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும், மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநிலங்களில் சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் (Autonomy for States; Federation at Centre) உருவாகிடவும் தொண்டாற்றுவது என்பதைக் கோட்பாடாகவும் கொண்டும்,

நமது கழகம் இயங்குகிறது என்பதைத் தொடர்ந்து எடுத்து விளக்கி வருகிறோம்.

திராவிடக் கலாச்சாரக் கூட்டுறவு நிலவப் பாடுபடுவோம் என்று கூறும்பொழுதே, நாம் தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கருநாடகம் என்ற மொழிவழி மாநிலங்களாக அமைந்திருக்கிறோம் என்பதையும் - இந்திய ஒருமைப் பாட்டுக்குப் பகைவர்கள் அல்ல என்பதையும் விளக்கியிருப் பதோடு அந்தந்த மொழிக்குரிய மாநிலங்களின் மொழியுரிமையோ, அந்த மக்களின் மற்ற உரிமைகளோ எவராலும் பறிக்கப்படுகிற ஆதிக்க உணர்வுக்கு இடம் தரமாட்டோம் என்பதையும் உறுதியாகவும் தெரிவித் திருக்கிறோம்.

நான் பொங்கலன்று உனக்கு எழுதிய கடிதத்தில் கூட மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் ஒன்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

நாம் இந்தியர்கள் என்பதால் இந்தி மொழியைத் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்த விட்டு விடுவதில்லை. அதேபோல் நாம் திராவிடக் கலாச்சாரத்திற்கு உரியவர்கள் என்பதால் மற்ற மொழிகள் தமிழ்மொழியின் மீது ஆதிக்கம் செலுத்தவோ, மற்ற மொழிக்காரர்கள் தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்தவோ உரிமை படைத்ததாக நாம் என்றைக்கும் ஒப்புக்கொள்ள முடியாது. அவ்வாறே தமிழர்களும் வேறு மாநிலங்களில் தங்களுக்குரிய இடத்தையும், பாதுகாப்பையும் பெறலாமே தவிர, மற்ற மொழியினர் மீது ஆதிக்க உரிமை கொண்டிடக் கூடாது. கொண்டிடவும் இயலாது.

பொங்கல் கடிதத்தில் நான் குறிப்பிட்டுள்ள இந்தக் கருத்து, நமது கழகம் ஏற்றுக்கொண்டுள்ள குறிக்கோளுக்கும், கோட்பாடுக்கும், தரப்பட்ட ஒரு விளக்கமேயாகும். நமது

குறிக்கோள், கோட்பாடுகளை ஆழ்ந்து படித்தால் இந்த உண்மை விளங்காமற் போகாது.

எனவே நாம் கொண்டுள்ள குறிக்கோளில் ஜனநாயக நெறியிலும், அமைதி வழியிலும், வன்முறைக்கு அணுவளவும் இடந்தராத நிலையிலும், அதே நேரத்தில் நமது குறிக்கோளுக்கும், கொள்கை கோட்பாட்டுக்கும் நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்கிற தியாக உள்ளத்தோடும் வெற்றியினைக் கண்டிடுவதே நமது நடைமுறைச் செயல்களாக இருந்திட வேண்டும்.

பிறமொழி ஆதிக்கம், பிற மொழியாளர் ஆதிக்கம் தடுத்தல் - பகுத்தறிவு அடிப்படையில் சீர்திருத்தப் பணியாற்றுதல் - ஏற்றத்தாழ்வற்ற சமதர்ம (சோஷலிச) சமுதாயம் உருவாக்குதல் - மத்தியிலே கூட்டாட்சியும், மாநிலங்களில் சுயாட்சியும் ஏற்படுத்தல் - இவையனைத்தையும் நிறைவேற்றிடத் தேவையானதும் பொருத்தமானதுமான ஜனநாயக நெறியைப் பாதுகாத்தல் - சர்வாதிகாரத்தை அது எந்த உருவில் வந்தாலும் எதிர்த்துப் போரிடுதல் - ஆகிய நமது தலையாயக் கோட்பாடுகளுக்காகவும் குறிக்கோளுக்காகவும் பணியாற்றுகின்ற அமைப்புரீதியான பெரும் இயக்கமாக, உன்னைப் போன்ற தியாக மாமணிகளைக் கொண்ட இயக்கமாக, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது.

அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லிய எந்தக் கொள்கையிலிருந்தும் நாம் நழுவிப் போகவில்லை. அவற்றை அடித்தளமாகக் கொண்டுதான் அந்தக் கொள்கைகளின் வெற்றிக்கான நடைமுறைகளை வகுக்கிறோம்.

1967-ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பு விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையையும், அவர் முதலமைச்சரான பிறகு 1968-ல் மாநில சுயாட்சி மாநாட்டில் ஆற்றிய தெளிவுரையையும், 1966-ல் அவசர காலச் சட்டத்தை எதிர்த்து டெல்லி மாநிலங்கள் அவையில் அவர் நிகழ்த்திய வீர உரையையும் இப்போதும் அமைதியாகவும், ஆழமாகவும் படித்துப் பார்க்கிறவர்கள் அந்த அண்ணன் வழியிலிருந்து தி.மு. கழகம் அணுவளவும் விலகிச் சென்றிடவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

■ தமிழ் மரபுக்கும், மொழிக்கும் பாதுகாப்புத் தேடுவதை இனவெறி எனக் கூறுபவர்கள்,

■ மாநில சுயாட்சிக் கொள்கையை எதிர்த்து நிற்பவர்கள்,

■ அவசரகாலச் சட்டத்தை ஆதரித்தவர்கள், இன்னமும் மறைமுகமாக ஆதரித்துக் கொண்டிருப்பவர்கள்,

தங்களை அண்ணன் வழியில் நடப்பவர்கள் என்று கூறிக்கொண்டு, மக்களை இன்னமும் ஏமாற்ற முனைகிறார்கள்.

அரசியல் வித்தின் காரணமாக ஆட்சிக் கட்டிலிலும் ஏறிக் கொண்டிருப்பதால், அண்ணாவின் கொள்கைகளை இதயத்தில் ஏந்தி இருக்கும் நம்மீது அவர்கள் ஆபாச அர்ச்சனைகளை மட்டுமல்ல; அடக்குமுறைகளையும் பொழிகிறார்கள்.

இந்த ஆறுமாத காலத்தில் நமது உடன்பிறப்புகள் மீது ஆயிரக்கணக்கான வழக்குகள்! தடியடிகள்! துப்பாக்கிக் குண்டுகள்! அனைத்தும் வீசிப் பார்த்துவிட்டார்கள் - இன்னமும் அதற்கு கொடுங்கணைகளை ஏவுவதற்குத் திட்டமும் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அவற்றைத் தாங்கிடும் திண்தோள் வீரர்கள், திடம் குலையா நெஞ்சினர், நமது கழகத்தில் இலட்சக்கணக்கானோர் உண்டு என்பதைச் சென்ற சில மாதங்களில் நாம் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். மிசாவைச் சந்தித்தோம்! இப்போது மினி மிசாவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது நடை பெற்ற கழகத் தேர்தல்களில் எல்லா அமைப்புக்களிலும் போட்டியிட்டவர்களையும், தேர்ந்தெடுக்கப்பட்டவர் களையும் நானறிவேன்.

அவர்களில் பெரும்பாலோர், கழகம் என்ற நிலையில் இருந்தாலும் கடமையினை ஆற்றிடும் உறுதி கொண்ட நெஞ்சு படைத்தவர்கள்! ஆனால் சிலர்? அந்தச் சிலரைப்பற்றி நான் மறைக்க விரும்பவில்லை. கழகம், ஆட்சியில் இருந்ததால் அமைப்புகளின் பொறுப்புகளுக்கு வர ஆசைப்பட்டு வந்தவர்கள்! கழக அமைப்புகளின் முக்கிய இடங்களில் அங்கம் வகித்திடத் துடித்தவர்கள்! அவர்கள் ஊரென்ன? பேரென்ன? நான் சொல்லாமலே நெருக்கடி நிலையும், மிசாவும், பாராளுமன்றத் தேர்தல் தோல்வியும் அவர்களை நாட்டுக்கு

அடையாளங் காட்டி நமது வேலையைக் குறைத்து விட்டன. அந்த ஆடிக் காற்றில் சில அம்மிக் குழவிகளே பறந்தபோது இலவம்பஞ்சுகள் எம்மாத்திரம்?

இந்தக் கடந்த காலத்தை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், கழக அமைப்புகளின் பொறுப்புகளுக்கு வரக் கூடியவர்கள் நமது கொள்கை கோட்பாடுகளை முற்றிலும் உணர்ந்தவர்களாகவும், அவற்றுக்காக எத்தகைய அவதிகளையும், அடக்குமுறைகளையும் ஏற்கக்கூடிய உறுதி வாய்ந்தவர்களாகவும் இருந்திடல் வேண்டும்.

பந்திக்கு நான்! படைக்கு வேறு யாரோ? என்ற மனநிலை படைத்தோர் அமைப்புகளின் பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

ஒரு இயக்கத்தில், எல்லோரும் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளக்கூடிய இயல்பு படைத்தவராக இருந்திட வேண்டுமென்று எதிர்பார்ப்பது எந்த இயக்கத்திலும் இயலாத ஒன்று!

எனவே, அத்தகையோர் கழக உறுப்பினர்களாக - கழகத்தின் ஆதரவாளர்களாக - இருந்திடலாம்! அமைப்புகளின் பொறுப்புக்கு வருவோர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காப்பவராக மட்டுமன்றி, கழகம், அறப்போர்க் களம் புக நேரிடின் அதற்கும் அஞ்சாத் துணிவுடை வீரர்களாகவும் இருந்திட வேண்டும். அயராது கழகத் தொண்டு ஆற்றுபவராகவும், அனைவரையும் அரவணைத்துச் செல்பவராகவும் விளங்கிட வேண்டும்.

வலியச் சென்று போராட்டங்களைத் தேடுபவர்களல்ல நாம்! அண்ணா கூறியதைப் போல வந்த போராட்டங்களை விட்டுவிட்டு ஓடிவிடுகிறவர்களுமல்ல!

ஜனநாயக நெறி -

அறப்போர் முறை -

அமைதி வழி -

இவற்றை நமது படைக்கலன்களாகக் கொண்டுதான் அண்ணன் தந்த குறிக்கோள், கொள்கை, கோட்பாடுகளை நிறைவேற்றப் பயணம் நடத்துகிறோம். அந்தப் பயணம்,

எத்துணை தூய்மையானது என்பதை விளக்கிடும் வண்ணம் தான் நமது கழக அமைப்புகளின் தேர்தல்கள் முறைப்படி ஜனநாயக அடிப்படையில் அவ்வப்போது நடைபெறுகின்றன.

தேவைப்படும் பொழுது நியமனதாரர்களைக் கொண்டு நடைபெறுகின்ற பொதுக் குழுவல்ல நம்முடையது!

நமது சட்டதிட்டங்கள், மேடைகளில் நடத்தப்படுகிற சந்தர்ப்பத்திற்கேற்ற சொற்பொழிவுகளின் தொகுப்புமல்ல!

முறையாக, வகையாக, செயற்குழு - பொதுக் குழுக்களில் விவாதித்து முடிவு செய்து தலைமைக் கழகத்தின் சார்பில் நூல் வடிவில் இருப்பவை நமது சட்டதிட்டங்கள்! கொள்கை கோட்பாடுகள்!

ஜனநாயகப் பாசறையாகத் திகழுகிற நமது கழக அமைப்புகளின் தேர்தல்கள், நடைபெறத் தொடங்குகிற நேரத்தில் உடன்பிறப்பே! உன் சிந்தையில் இந்தக் கருத்துக்கள் உலவட்டும் என்பதற்காகவே இந்தக் கடிதம் எழுதினேன்.

அன்புள்ள,

மு. க.

(17-01-1978)

# 513. இது எந்தக் காலம்?

**உடன்பிறப்பே,**

கல்வி வளர்ச்சி, கிராம மின்வசதித் திட்டம், சாலைகள் அபிவிருத்தி, சாலை அமைப்பு, ஆஸ்பத்திரிகள், சுகாதார வசதித் திட்டங்கள் ஆகியவற்றில் தமிழகம் முன்னணியில் உள்ளது. பல துறைகளில் முன்னேறிய நிலையில் உள்ளது

என்று சென்னைக்கு வந்துள்ள மத்திய ஏழாவது நிதிக் கமிஷன் தலைவர் நீதிபதி ஷெலாட் அவர்கள் நிருபர்களிடம் விளக்கியதாக, சென்னைப் பதிப்பு தினமணி (17-1-1978) செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழகம் பல துறைகளில் முன்னேறியுள்ளது என்ற நிலையைக் கடந்த ஆறு மாத கால எம்.ஜி.ஆர். ஆட்சி உருவாக்கியதென்று, எம்.ஜி.ஆரே கூட ஒத்துக் கொள்ள மாட்டார். ஏனெனில், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பேசிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கடந்த ஆறு மாதங்களில் எழுந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே நேரம் சரியாக இருந்தது என்றும், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றக் காலம் போதவில்லையென்றும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் (?) தனது கருத்தை அறிவித்திருக்கிறார்.

சரி; அப்படியானால் ஓராண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியிலே தமிழகம் ஒரேயடியாக முன்னேறிவிட்டதாக எடுத்துக் கொள்ள முடியுமா என்றால்; நிச்சயமாக முடியாது! ஓராண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியில் மிசாக்களை வேட்டை நாய்களாக்கி எதிர்க்கட்சிகளைத் துரத்தவும், எதிர்க்கட்சிகளை அழிப்பதற்குத் திட்டங்கள் தீட்டிடவும், தமிழ் உணர்வைக் கிள்ளி எறியவும்தான் நிர்வாக இயந்திரம் முடுக்கிவிடப்பட்டதே தவிர, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் எதுவும் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை.

மொத்தம் இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டின் பல்துறை முன்னேற்றத்திற்கு - நிதிக் கமிஷன் தலைவர் நீதிபதி ஷெலாட் அவர்கள் கூற்றுப்படி தமிழகம் முன்னணியில் இருப்பதற்கு எந்த வகையான திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு விடவில்லை.

தமிழ்நாட்டு வளத்தைப் பின்னுக்குத் தள்ளி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட தி.மு.க.வின் ஒன்பதாண்டு ஆட்சிக் காலத்திலேதான், நீதிபதி ஷெலாட்டின் பாராட்டைப் பெறுகின்ற அளவுக்குத் தமிழகம் முன்னேறியிருக்கிறது என்ற உண்மை, முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதிபோல் புறப்பட்டிருக்கிறது.

இருபதாண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியின்மீது நமக்குப் பல குறைபாடுகள் இருந்தாலும், தமிழக முன்னேற்றத்திற்கான அடிப்படைகள் அமையவில்லை என்று கூறிவிட முடியாது.

இருபதாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்ற சாதனைகளைப் போல இருமடங்கு, மும்மடங்கு சாதனைகளைக் கழக ஆட்சி, ஒன்பதாண்டுக்காலத்தில் நிறைவேற்றி, இன்றைக்கு ஏழாவது நிதிக்குழுவின் பாராட்டையும் பெற்றிருக்கிறது.

இருபதாண்டுக் காலக் காங்கிரஸ் ஆட்சியில் புதிதாகப் பாசன வசதி பெற்ற ஆயக்கட்டுகள் எட்டு லட்சம் ஏக்கர் - ஒன்பதாண்டுக் கழக ஆட்சியில் புதிதாகப் பாசன வசதி பெற்ற ஆயக்கட்டுகள் பதினாறு லட்சம் ஏக்கர்!

இருபதாண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் மின் இணைப்புத் தரப்பட்ட பம்ப் செட்டுக்கள் இரண்டு லட்சம்! ஒன்பதாண்டுக் கழக ஆட்சியில் மேலும் ஐந்து லட்சம் பம்ப் செட்டுக்கள் மின் இணைப்புப் பெற்று மொத்தம் ஏழு லட்சத்தைத் தாண்டியுள்ளது.

இந்தியாவில், கிராமங்கள் முழுவதும் மின் விளக்கு வசதிபெற்ற ஒரே மாநிலம் அரியானாதான்!

அந்த அரியானா, நமது செங்கற்பட்டு மாவட்ட அளவேதான் உள்ளது!

ஆனால், பல அரியானாக்களை ஒன்று சேர்த்தால் உருவாகக் கூடிய பெரும் பரப்பளவைக் கொண்ட தமிழ் நாட்டில் சுமார் ஆயிரம்

கிராமங்களைத் தவிர எல்லா கிராமங்களும் மின் விளக்கு வசதியை கழக ஆட்சியிலே பெற்றுவிட்டன.

ஏழாவது நிதிக் கமிஷன் தலைவர் குறிப்பிட்டுள்ள,

- கல்வி வளர்ச்சி
- கிராம மின் வசதி
- சாலை அமைப்பு
- சாலை அபிவிருத்தி
- ஆஸ்பத்திரிகள்
- சுகாதார வசதிகள்
- பல்வேறு துறை வளர்ச்சி

அனைத்திலும் இந்தியாவில் உள்ள இருபத்திரண்டு மாநிலங்களில் முன்னணியில் தமிழகம் நிற்கிறது என்றபோது - இந்த முன்னேற்றத்தின் பெரும் பகுதி, கிராம மக்களைத் தொடுகின்ற வகையிலேதான் அமைந்துள்ளது என்பதைச் சொல்லாமலே புரிந்து கொள்ளலாம் அன்றோ?

கழக ஆட்சி நடந்த காலம், இருண்ட காலம் என வர்ணிக்கும் இருட்டுமதியினர் - குருட்டு விழியினர் - இனியேனும் தங்கள் இழி இதய எரிச்சலை வெளிக்காட்டாமல் அடங்கிவிட வேண்டுமல்லவா?

ஏழாவது நிதிக்குழுவின் தலைவர் தந்துள்ள விளக்கம், கழக ஆட்சிக்குத் தரப்பட்ட நற்சான்றிதழ் எனக் கொள்ளலாம்.

கழக ஆட்சியில் எதுவும் நடக்கவில்லை யென்று கதைப்போர், இந்த முன்னேற்றம் நடந்த காலம் எந்தக் காலம் என்பதைத் தெரிவிப்பார்களா?

அன்புள்ள,

மு. க.

(19-01-1978)

# 514. என் கண் - உனைத் தேடும்!

**உடன்பிறப்பே,**

திருச்சி பொங்கல் விழா நிகழ்ச்சியிலிருந்து சென்னை திரும்பிய பிறகு மலேரியா காய்ச்சலால் தாக்குண்டு வீட்டிலேயே ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறேன். காய்ச்சல் இன்னும் அறவே நின்றபாடில்லை. இடையில் நீண்டகாலமாக தேசிய அளவில் தடுக்கப்பட்டிருந்த மலேரியா நோய், மீண்டும் ஆங்காங்கு தலைகாட்டத் தொடங்கியிருப்பது மலேரியாத் தடுப்புக்கான சுகாதார நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மந்தத்தின் காரணமாக இருக்கலாம்.

மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகளில் தொய்வில்லாமல் பார்த்துக் கொண்டால்தான் குடிசைகளில் வாழுகிற உழைக்கும் வர்க்கத்தைத் தொல்லையிலிருந்து காத்திடமுடியும். மாநில மத்திய அரசுகளின் முழுக்கவனம், குறிப்பாக ஏழை எளிய நடுத்தர வர்க்கத்தினரையும், பொதுவாக எல்லா மக்களையும் இதுபோன்ற தொடர் நோய்களிலிருந்து பாதுகாப்பதில் முழுமையாகத் திருப்பப்பட வேண்டும். எந்தத் தொற்று நோயும் அறவே ஒழித்துவிட்டோம் என்று திட்டவட்டமாக எண்ணிடாமல், தொடர்ந்து தடுப்பு நடவடிக்கைகள் தேவையென்பதற்காகவே இதனைக் குறிப்பிடுகிறேன். இந்தக் காய்ச்சலால் எனக்கேற்பட்ட கஷ்டம், மற்றவர்களுக்கும் ஏற்படக்கூடாது என்பதே என் கவலை.

ஒரு வாரமாக நான் என் நோய்ப்பற்றி வெளியில் சொல்லாமல் இருந்தமைக்குக் காரணம்கூட; உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் உடனே வீட்டை முற்றுகையிடுவீர்களே என்பதால்தான்!

இப்போதும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்; இன்னும் இரண்டொரு நாட்களுக்குப் பிறகு நான் வழக்கமான அலுவல்களில் ஈடுபடக்கூடும்; அதுவரையில் என் நலம் விசாரிக்க

வரவேண்டும் என்ற ஆர்வத்தைத் தயவு செய்து அடக்கிக் கொள்ள வேண்டுகிறேன்.

உனக்கும் இந்த வாரம், கழகத் தேர்தல் பணிகள் இருக்கின்றன. அதில் நீ காட்டும் உற்சாகமும், ஒற்றுமையும்தான் எனக்குப் பிணி தீர்க்கும் மருந்தாக இருக்குமென்பதை நான் சொல்லவும் வேண்டுமா?

கிளை அமைப்புகளின் புதிய நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், புதுப்பித்துக்கொண்ட அல்லது புதிதாகச் சேர்ந்துள்ள கழக உறுப்பினர்களும், பிப்ரவரி மூன்றாம் நாள் சென்னைக்கு வர வேண்டிய கடமையும் இருக்கிறதல்லவா?

ஆம்; அன்று நமது தலைவனின் நினைவு நாள்! காலத்தால் மறக்க முடியாத அந்தக் காஞ்சித் தலைவனுக்கு அன்றுதான் சென்னையிலே மாவட்டக் கழகம் சிலை அமைக்கிறது.

பெரும் பிரச்சினையாக்கப்பட்டு இறுதியிலே நமது அண்ணனின் சிலை வைக்கக் கிடைத்த இடம், வள்ளுவர் கோட்டத்திற்கு எதிரில்!

சிலை அமைப்பு, சிலை திறப்பு விழா நிகழ்ச்சிகளுக்கான அயராப் பணிகளில் சென்னை மாவட்டச் செயலாளர் சீத்தாபதியும், மாவட்டத்தின் மற்ற நிர்வாகிகளும் ஈடுபட்டுள் ளார்கள். தர்மபுரி மாவட்டப் பொறுப்பாளர் சென்ன கேசவலு, அழகான பீடமொன்று அண்ணா சிலைக்கென தயாராகிக் கொண்டிருக்கிறது.

பிப்ரவரி 3-ஆம் நாள் மட்டுமல்ல; எந்நாளும், எந்நேரமும், நமது நினைவை விட்டு அகலாத ஆருயிர் அண்ணனுக்கு, அவர் அமர்ந்து ஏடு படிப்பது போன்ற எழிலார் சிலை, தலைநகரில் - வள்ளுவர் கோட்டத்துக்கு எதிரில் - அமையும் பெருவிழா; நமது வரலாற்று ஏட்டில் மறக்க முடியாத திருவிழா அன்றோ!

அன்று, நமது கழகக் குடும்பமே சென்னையில்தானே இருக்கவேண்டும். அதிகம் எழுதுவானேன்; அன்று நீ வந்திருக்கிறாயா என்று என் கண், தேடிக் கொண்டேயிருக்கும்.

அன்புள்ள,

மு. க.

(23-01-1978)

# 515. களம் சென்றார் காலடிகட்கு!

**உடன்பிறப்பே,**

ஜனவரி 25 - மொழிப்புரட்சிநாள்!

மூண்டெழுந்த இந்தி எதிர்ப்புத் தீயை அணைக்க முடியாமல், தமிழகத்தையே அன்றைய ஆளவந்தார் பிணக்காடாக ஆக்கத் துடித்த நாள்!

மாணவர்களை அடக்குவதிலும் - தமிழ் மக்களின் உணர்வுகளை பொசுக்குவதிலும் - அடக்குமுறையைக் கோர நர்த்தனமாடச் செய்வதிலும் - துப்பாக்கிக் குண்டுகளை மழையாகப் பொழியச் செய்து, குருதியாற்றில் தமிழ் வாலிபர்களின் தேக்குமரத் தேகங்களைத் தெப்பம் போல் மிதக்கச் செய்வதிலும் பக்தவத்சலனார், எதற்கும் அசையாத மலைப்பாறை போல இருந்தார் என்ற பாராட்டை, மத்திய அரசிடமிருந்து பெற்ற நேரமும் அந்த நேரம் தான்!

கொம்புத் தேனாம் தமிழ் மொழி எமக்கிருக்க... கொட்டும் தேளாம் இந்தி மொழிக்கு எதற்காக ஆதிக்கம்?

- எனக் கேட்டுத் தங்கள் பொன்னவிர் மேனியைத் தீக்குளத்தில் குளிப்பாட்டி உயிர்நீத்தத் தியாகச் செம்மல்கள், உலகிற்கு தமிழர்களின் மொழிப்பற்றை முரசொலித்துக் காட்டிய வரலாற்றுப் புகழ் மிக்க நேரமன்றோ அந்த நேரம்!

தில்லையில் மாணவச் சீயம் இராஜேந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டதும், மாணவரணி மாயூரம் சாரங்கபாணி தன்னை நெருப்பில் சுட்டுக் கொண்டதும் அந்த மொழிப்புரட்சியின் போதுதானே!

தீக்குளித்து மாண்ட தீரர்களின் கல்லறைகள் இருக்கும் திக்கு நோக்கி வணங்குகிறோமே - அந்தத் தியாகிகளைக் களங்கப்படுத்தி அன்றைய ஆளவந்தார் பேசியதை நாடு மறந்திடுமா?

இந்தி ஆதிக்கம் பரவிட எடுக்கப்பட்ட முயற்சிகளை எதிர்த்து அறிஞர் அண்ணா போர்க்குரல் கொடுத்தார்; ஏன் - தமிழகமே போர்க்கோலம் பூண்டது!

நமது வெறுப்பைக் காட்டிட, அவரவர்கள் இல்லத்தில் கறுப்புக்கொடி பறக்கட்டும் எனக் கழகம் அறிவித்தது!

தங்கள் சொந்த வீடுகளில் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டால் போதுமானது - பொது இடங்களில் தேவை யில்லை என்று அறிஞர் அண்ணா திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அண்ணனின் ஆணைக்கேற்ப, உண்மைத் தமிழர்களின் இல்லங்களில் எல்லாம் உயர்ந்தது - கறுப்புக்கொடி!

உடல் மண்ணுக்கு - உயிர் தமிழுக்கு - என்று உறுதி முழக்கம் செய்த உத்தமத் தமிழர்கள், தங்கள் வீட்டு முகப்புகளில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஏற்றினர் - கறுப்புக்கொடி!

இந்தி வெறியின் மீது தங்களுக்குள்ள வெறுப்பைக் காட்டிக்கொள்ள - தங்கள் சொந்த வீடுகளில் கறுப்புக் கொடி கட்டிக் கொண்டதை, தமிழ் உணர்வு அற்ற கயவர்கள் - கொடியவர்கள் - இனத் துரோகிகள் எதிர்த்தனர்!

கறுப்புக்கொடி பறந்த இல்லங்களில் களம் அமைத்தனர் - அதனை, அந்நாள் காவல்துறையினர் வேடிக்கை பார்த்தனர்!

அண்ணா வீட்டில் ஏற்றியிருந்த கறுப்புக்கொடியை - கழகத் தலைவர் இல்லங்கள், கழக அலுவலகங்கள் ஆகியவற்றில் ஏற்றியிருந்த கறுப்புக்கொடிகளை - காவல்துறையின் துணையோடு - கயவர்கள் வீழ்த்தினர்!

சில இடங்களில் மோதல் - கலவரம் - அமளி!

கழகக் கண்மணிகள் ஆயிரம் ஆயிரமாகக் கைது செய்யப்பட்டனர்!

அரசியல் சட்டத்திற்குத் தீயிட்டு - தமிழகத்தின் இந்தி எதிர்ப்புக் குரலை எட்டுத் திக்கும் எதிரொலித்த அடலேறுகள், சிறைக்கோட்டத்தில் அடைபட்டுக் கிடந்தனர்!

பாதுகாப்புச் சட்டங்கள் - பாளையங்கோட்டைகள் - கழகத்தின் மீது பயங்கரப் பாய்ச்சல் நடத்தியதும் அப்போதுதான்!

குமுறும் எரிமலையாக - கொழுந்து விட்டு எரியும் அனற்காடாகத் தமிழகம் காட்சியளித்து குளிர்பொழியும் கோவா கடற்கரையாக அல்ல!

செந்தமிழுக்குத் தீமை வந்த

பின்னும் - இந்தத் தேகம்

இருந்தொரு லாபம் உண்டோ?

- என்ற எழுச்சிமிகு கேள்வி எங்கணும் கேட்டது!

துப்பாக்கி ரவைகளை மலர்களாக ஏற்றுக்கொண்டு, மானம் காக்கும் சீமையினர், மரண மஞ்சத்தில் துயில் கொண்டனர்!

தீப்பிழம்புக்கும் - தென்றலுக்கும் வேறுபாடு தெரியாமல் கனலில் களிநடனம் ஆடி - தமிழ் வாழ்க என இசைபாடி சாவுமங்கையைத் தழுவினர் மறவர்குலச் சிங்கங்கள்!

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை

மாட்ட நினைக்கும் சிறைச்சாலை

- என்ற புரட்சிக்கீதம், தமிழர்களின் உதட்டில் - உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டது!

ஆகா! அந்தத் தமிழ் உணர்வை - எண்ணிக் கொண்டாலே, இனிக்கிறது நெஞ்சம்!

அந்த களத்தில் உயிர் நீத்தவர்க்கு நமது வீர வணக்கம்!

அடிபட்டோர் - அடக்குமுறைக்கு ஆட்பட்டோர் இன்று எங்கு இருப்பினும், அந்தத் தியாக சீலர்களின் திருக்கரங்களுக்கு நமது அன்பு முத்தம்!

அன்னை மொழி காக்க ஆதிக்க இந்தியை எதிர்க்க... அன்று களம் சென்றார் காலடிகட்கு, நமது தலைத்தாழ்ந்த மரியாதை இந்நாளில் உரியதாகட்டும்!

அன்புள்ள,

மு. க.

(25-01-1978)

**நன்றி : கழகக் குரல் (25-01-75)**

# 516. இந்த நாள் எழுச்சி நாள்!

**உடன்பிறப்பே,**

ஜனவரி 25 - இந்தி எதிர்ப்புத் தியாகிகள் நாள் - ஆம் இந்தித் திணிப்பை எதிர்த்து, தமிழகம் பொங்கியெழுந்த நாள்தான் அது! நேருவின் உறுதிமொழியைக் காற்றிலே பறக்கவிட முனைந்தவர்களுக்கு எதிராகத் தமிழ்நாட்டில் மொழிப் போர்க் களம் அமைந்தது!

1965 - தமிழக வரலாற்றில் குருதியால் தீட்டப்பட்ட அத்தியாயத்தை அந்த ஆண்டுதான் இணைத்தது என்று கூறலாம்.

இந்தித் திணிப்புக்கு 1938-ஆம் ஆண்டு முதல் தமிழர்கள் காட்டி வருகிற தீவிர எதிர்ப்பின் உச்சகட்டமாகத்தான் 1965 விளங்கியது.

இராஜாஜி அவர்கள், இணைந்த சென்னை மாநிலத்தின் முதல்வராக இருந்தபோதுதான், இந்தி ஆதிக்கப் பேரலைக்குத் தமிழகத்தில் வழிவிடத் தொடங்கினார்.

அந்தப் பேராபத்தை உணர்ந்த தமிழர்கள் தங்களின் கடும் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டனர், கட்சி வேறுபாடுகளைக் கடந்துகூட அந்த எதிர்ப்பு எழுந்தது. காங்கிரஸ் தேசிய இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த நாவலர் சோமசுந்தர பாரதியார் அந்த இயக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு இந்தி எதிர்ப்புத் தளகர்த்தராக நிமிர்ந்து நின்றார். காங்கிரஸ் கட்சியின் செயல் வீரராக விளங்கிய என்.வி.என். அவர்கள், தமிழ் காக்கும் புனிதப் போரில் பெரியார், அண்ணா வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். தமிழ்த்தென்றல் திரு.வி.க., மறைமலை அடிகளார் போன்ற தமிழ்ச் சான்றோர்கள் இந்தித் திணிப்பால் தமிழர்க்கு விளையப் போகும் கேடுகளை விளக்கினர். இந்நாளில் ஆடும் கோயில்களுக்குச் சாமரம் வீசும் பூசாரிகளைப்போலச் சில புலவர்கள் வாழுகிறார்களே; அவர்களைப்போல இல்லாமல் தமிழ்ப்

பகையை எதிர்த்துத் தலைநிமிர்ந்து நின்றனர். அவர்கள் பட்டம் பதவிகளுக்கு யாரையும் நத்திக் கிடக்கவில்லை. எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடோம் என நெஞ்சுயர்த்தி முழக்கினர். முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் தமிழகமெங்கணும் சுற்றிச் சுழன்று இந்தி எதிர்ப்புப் பெரும் படையைத் திரட்டினார். தன்மானச் சுடர் சௌந்தரபாண்டியனார் எக்காளக் குரல் எழுப்பி எப்பக்கம் வந்து புகுந்து விடும் இந்தி - அது எத்தனை பட்டாளம் கூட்டி வரும்? என்ற பாரதிதாசனின் கேள்வியை தனக்கேயுரிய பாணியில் தமிழ்நாடு முழுவதும் கேட்டார். கே.எம். பாலசுப்பிரமணியம், பி. பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சங்கநாதங்கள் இந்தி எதிர்ப்பு வீரர்கட்கு உணர்ச்சியூட்டிக் கொண்டேயிருந்தன. அண்ணன் அழகிரிசாமி அவர்களின் வீர உரையும், மணவைத் திருமலைசாமியின் வேங்கை நடை எழுத்தும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் அயராத உழைப்பும், பெரியவர் எஸ்.வி. லிங்கம், பொன்னம்பலனார் போன்றோரின் படை நடத்தும் பாங்கும் 1938-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பெரிதும் துணை நின்றன.

சென்னையில் நடைபெற்ற போராட்டத்திற்குத் தலைமையேற்று ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றார் அண்ணா!

பெரியாரோ, பெல்லாரி சிறையில் வைக்கப்பட்டார்.

பெரியார் தலைமை வகிக்க வேண்டிய மாநாட்டுக்கு அவருக்குப் பதிலாக ஏ.டி. பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். தலைவருக்கு மாலை அணிவித்தனர். பன்னீர்செல்வம் அந்த மாலையைப் பெற்றுக்கொண்டு, உடனே அதனை மேடையிலிருந்த பெரியார் படத்தின் காலடியில் வைத்து என் தோளுக்கிட்ட மாலையைப் பெரியாரின் தாளுக்கு இடுகிறேன் என உருக்கமும் உணர்ச்சியும் போட்டியிட மொழிந்தார்.

அந்தப் பன்னீர்செல்வத்தைப் பார்த்துத்தான் சட்டசபையில் ராஜாஜி அவர்கள், இந்தியை யார் எதிர்க்கிறார்கள்? பெரியார் ஒருவரும், சோமசுந்தர பாரதி ஒருவரும் ஆக இரண்டு பேர்தான் எதிர்க்கிறார்கள் என்று கேலியாகச் சொன்னார். உடனே பன்னீர்செல்வம் உமது வாதப்படி இருவர் எதிர்க்கிறார்கள்! ஆனால் இந்தியைக் கொண்டு வருவது ஒருவர்தான் - அதுதான் நீங்கள்! -

எனவே எதிர்ப்புக்குத்தான் பெரும்பான்மை என்று சுடச் சுடப் பதில் கொடுத்தார்.

ஆனால் காலம் எப்படி மாறியது? இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி அதனை எதிர்த்த ஆயிரக்கணக்கான தமிழர்களை சிறையில் பூட்டி, தாளமுத்து - நடராசன் என்ற இரு காளையர் பிணமாகவும் காரணமாக இருந்த ராஜாஜி அவர்களே; 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு புரட்சிக்கு தனது முழு ஆதரவையும் கொடுத்தார் என்பதை நம்ப முடியவில்லையா? ஆனால் அப்படித்தான் நடந்தது.

1938-ல் தடுக்கப்பட்ட கட்டாய இந்தி, மீண்டும் அடிக்கடி தலைகாட்டி எதிர்ப்பைத் தாங்காது மறைந்தது என்றாலும், 1965-ல் அதிகார வேகத்துடனும், அரசியல் சட்டத்தின் துணையுடனும், தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்தப் பாய்ந்தது.

அதனைத் தடுத்து நிறுத்தும் அரணாக அண்ணாவின் தலைமையின் கீழ் தி.மு.க. உயர்ந்து நின்றது.

1965 குடியரசு நாளன்று, இந்தி ஆதிக்கம் தமிழர்கள் மீது நடத்தும் படையெடுப்பைப் பலங்கொண்ட மட்டும் எதிர்க்கிறோம் என்பதற்கு அடையாளமாக அந்த நாளில் தமிழர்களின் இல்லங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்க விடுங்கள் என்று அறிஞர் அண்ணா அறிவித்தார்.

அதற்கு முதல் நாளே, கழகத்தின் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். ஆயினும் தமிழர்களின் இல்லங்களில் கறுப்புக் கொடி பறப்பது நிற்கவில்லை, கறுப்புக் கொடி பறந்த இல்லங்களில் பொதுமக்கள் என்ற பெயரால் குண்டர்கள் தூண்டிவிடப்பட்டுக் கலாம் விளைவிக்கப்பட்டது. நடிகர் நண்பர் ராசேந்திரன் வீட்டில் அந்தக் குண்டர்கள் நடத்திய அட்டகாசத்திற்கு அளவே இல்லை, அதைப் போலவே அண்ணா வீட்டுக்கு முன்பும், என் வீட்டுக்கு முன்பும் முரசொலி, தென்னகம் போன்ற கழக ஏடுகளின் அலுவலகங்களின் முன்பும் கறுப்புக் கொடியை இறக்கிடச் சொல்லிக் குண்டர்கள் கற்களை வீசினர். அமளி உருவாக்கினர், கழகக் கண்மணிகள் பலரது இல்லங்கள் போலீசார் துணையோடு குண்டர்களால் சூறையாடப்பட்டன. இன்று சென்னையில் போலீசாரும் குண்டர்களும் தங்கள் சேட்டையைச் செய்யாத ஒரே ஒரு கழக உறுப்பினரின் இல்லம்,

நண்பர் எம்.ஜி.ஆரின் இல்லம்தான்! காரணம் அங்கே கறுப்புக் கொடி பறக்கவிடவில்லை, அதனால் அங்கே அமைதி தவழ்ந்தது. மற்ற கழகத்தினர் குண்டர்களின் கொடுந் தாக்குதலுக்கும், போலீசாரின் அடக்குமுறைக்கும், பொய் வழக்குகளுக்கும் ஆளாக்கப்பட்டனர்.

இதற்கிடையே தமிழக மாணவர்கள், அரிமாக் கூட்டமென ஆர்த்தெழுந்தனர். தமிழ் என் உயிருக்கு நேர் என்ற கவிதைக்கு வடிவமாகக் கீழப்பழுவூர் சின்னச்சாமி, இந்தியை எதிர்ப்பதின் அடையாளமாகத் தீக்குளித்துச் செத்து புதிய வரலாற்றை உருவாக்கியிருந்தார்.

ஜனவரி 25-ல் கைது செய்யப்பட்ட தலைவர்களும், கழக முன்னணி வீரர்களும், சில நாட்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டனர். இருந்தபோதிலும் இந்தி எதிர்ப்புப் போர்க்கனல் அணையவில்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மாணவன் இளங்கொழுந்து இராசேந்திரன், இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டார். களப் பலிகள் தொடர்ந்தன. தீந்தமிழ் காக்க, உயிர்த் தித்திப்பை எண்ணிடப் போவதில்லையென்று முழக்கமிட்டவாறு எட்டுத் தமிழர்கள் தங்கள் உடலைச் சுட்டெரித்துக் கொண்டனர். ஆம்; தீக்குளித்து மாண்டனர். அதில் ஒரு மாணவன் மாயூரம் சாரங்கபாணி!

கொந்தளிக்கும் கடலாக - குமுறும் எரிமலையாக - தமிழ்நாடு காட்சி தந்தது, மத்தியிலிருந்து அமைச்சர் டி.டி.கே. ஓடோடி வந்து வானொலி வாயிலாக இந்தி எதிர்ப்பாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அந்தக் குரலை தமிழகம் செவிமடுக்கவில்லை. சி. சுப்பிரமணியம் தனது பதவியை ராஜினாமா செய்து பார்த்தார். பயனில்லை. மீண்டும் பதவிக்குப் போய்ச் சேர்ந்தார் உடனடியாக!

அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் மொழிப்புரட்சி! தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் தமிழன், தோள் உயர்த்தி நின்றான். சூளுரைத்து நின்றான். தங்கள் எதிர்காலம் பாழாகக்கூடாதே என்று மாணவமணிகள்; மரணத்துக்கும் அஞ்சாமல் மொழிப் புரட்சியில் இரண்டறக் கலந்தனர். இந்தக் கிளர்ச்சிக்குத் தூண்டுகோலே நான்தான் என்று பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டுப் பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டேன்.

நாடெங்கும் நூற்றுக்கணக்கான கழக முன்னணியினர் பாதுகாப்புக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தீ! தீ! எங்கணும் தீ, கொழுந்து விட்டெரிந்தது.

நூற்றுக்கணக்கில் துப்பாக்கி ரவைகளுக்குப் பலியானோர் பிணங்களாயினர். மொழிப்போரின் அடையாளச் சின்னமாயினர். பிறமொழி ஆதிக்கத்தைத் தமிழன் தாங்கிக்கொள்ள மாட்டான் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் அந்த மொழிப் போர்!

அந்தப் புனிதப் போரில் வீழ்ந்துபட்டுக் கல்லறைகளானோர், விழுப்புண் பெற்றோர், அடக்குமுறை ஏற்றோர் அனைவருக்கும், வணக்கம் கூறும் நாளே; ஜனவரி 25!

இந்த நாளில் மொழிப் போர் வீரர்களை வாழ்த்துவோம்! மொழிப்போர்த் தியாகிகளை வணங்குவோம்.

அரசியல் சட்டத்தைக் கொளுத்தியும், அடக்குமுறைக்கு ஆட்பட்டும், ஓராண்டு, ஈராண்டு எனச் சிறை புகுந்த வீரர்கள் இன்று பல்வேறு கட்சிகளில் இருக்கின்றனர் எனினும்; கட்சி வேறுபாடு கருதாது அவர்கட்கெல்லாம் நமது பாராட்டுக்களை வழங்கிடுவோம்!

இந்த நாள் தமிழ் மொழிக் காவலர்களின் எழுச்சி நாளாக இருக்கட்டும்!

நாங்கள் இந்திக்கு ஆதரவாளர்கள் என்று நாடாளுமன்றத்திலே பேசிவிட்டு, இப்போது இந்தி எதிர்ப்பு வேடம் போடுகிறவர்களைத் தமிழர்க்கு அடையாளம் காட்டுகிற நாளாக அமையட்டும்!

அன்புள்ள,

மு. க.

(26-01-1978)

நன்றி : நம்நாடு ( 22-01-1978)

# 517. சரித்திரம் திரும்பும்!

**உடன்பிறப்பே,**

ஆறு வாரங்கள் என்றும், ஒருமாதமென்றும், மூன்று வாரம், இரண்டு வாரம் என்றும் நீதிமன்றத்திற்கு ஒரு விதமாகத் தீர்ப்புக்கள் அளிக்கப்பட்டு நீ, பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறாய்.

இந்திராகாந்தி என்ற எம்.ஜி.ஆரின் எஜமானியம்மாளுக்குக் கறுப்புக்கொடி காட்டியதையொட்டித் தொடரப்பட்ட வழக்குகள்! கழகத் தலைவர்களை விடுதலைசெய்யக் கோரி அமைதியான முறையில் மறியல் நடத்தியதற்காகப் போடப்பட்ட வழக்குகள்!

அவற்றையெல்லாம் அரசு, திரும்பப் பெற வேண்டுமென்று ஜனதா, மார்க்சிஸ்டு போன்ற கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் கூட அறிக்கைகள் விடுத்தார்கள். ஆணவத்தின் உச்சாணிக் கொம்பில் அதிகாரத்தின் நிலையாமையை உணராமல் ஆட்டம் போட்டுக்கொண்டிருக்கும் அரசு, அடுக்கடுக்காகக் கழகத்தினர் மீது வழக்குகளைத் தொடுத்து உன்போன்ற உடன்பிறப்புகளை சிறைச்சாலைக்கு அனுப்புவதின் மூலம் - கட்சிகளின் தலைவர்களது அறிக்கைகளைத் தனது கால்தூசுக்குச் சமமாகக் கருதிவிட்டது.

வழக்குகளை வாபஸ் பெற்றால் நகர்வாலா மகாராணியும் - நாற்பத்தி ஐந்து லட்சமும் அல்லவா எதிரே நின்று மிரட்டக்கூடும்.

உன்னைப் பொறுத்தவரையில் ஓராண்டுக்கால மிசாக் கொடுமையையே ஏற்றுக்கொண்டு புன்னகை புரிந்தவன் நீ! வாரக் கணக்கில் அல்ல; தமிழர்களின் உரிமை காக்கவும், பிறமொழி ஆதிக்கக்காரர்களின் பிடியிலிருந்து தமிழகத்தைக் காப்பாற்றவும் வருடக்கணக்கில் நீயும் நானும் சிறை செல்ல வேண்டிய நாட்கள்கூட வரலாம். அந்த நாட்கள்தான் தமிழகத்தின் தலையெழுத்தை அழித்தெழுதும் நாட்களாக அமையப் போகின்றன.

ஒரு குட்டி மந்திரி பேசியிருக்கிறார் பார்த்தாயா? நாம் நமது கழகத்தைக் கலைத்துவிட வேண்டுமாம். நான் ஆற்றிலோ குளத்திலோ விழுந்து சாகவேண்டுமாம். அல்லது நாமெல்லாம் வெளிநாடுகளுக்கு ஓடி விட வேண்டுமாம்.

பாவம்; கண்டியிலிருந்து வந்தவருக்குக் கெண்டியில் தண்ணீர் ஊற்றிக் கால் கழுவுகிறவர்கள், இந்த மண்ணுக்குரிய நமக்கு நாடு கடத்தல் தண்டனை விதிக்கப் பார்க்கிறார்கள்.

உடன்பிறப்பே, அமைச்சர்களின் கொழுப்பு வழியும் பேச்சுக்கள்; உன்னை எம்ஃகுக் கம்பியாக ஆக்கும்! நானறிவேன் நீ அறப்போர் வாளாக மாறுவாய்!

சிறையில் வாடும் என் ஆருயிரே! உன்னுடன் நானும் இருப்பதாக எண்ணிக் கொள்!

கவலைப்படாதே!

உறுதியாக இரு!

சரித்திரம் திரும்பும்!

அன்புள்ள,

மு. க.

(28-01-1978)

# 518. மூன்று நாள் கெடு!

**உடன்பிறப்பே,**

We are for Hindi புகழ் மனோகரனார், எனக்கு ஒரு புதிய அழைப்பை விடுத்திருக்கிறார்.

திட்டங்களுக்காகத் தமிழ் நாட்டுக்கு டெல்லி, அதிகப் பணம் கொடுக்க வேண்டுமென்று கருணாநிதி, ஒரு போராட்டத்தை அறிவித்தால் அவருடன் தோளோடு தோள் நின்று போராடத் தயாராக உள்ளேன்.

இதுதான் நமது அன்புக்குரிய நிதி அமைச்சரின் அழைப்பு.

நாம் போராட்டத்தை ஆரம்பித்தால் அவர் நம்முடன் சேர்ந்து கொள்வாராம்.

முதலில் சில சந்தேகங்களை நமது நிதியமைச்சர் மனோகரன் எனக்கு விளக்க வேண்டும். திட்டங்களுக்காக ஆண்டுதோறும் மத்திய அரசு 368 கோடி ரூபாய் அளிப்பதாக முதலமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்திருக்கிறாரே, அந்தத் தொகை போதாது என்று மனோகரன் போராடச் சொல்கிறாரா? அல்லது முதலமைச்சர் விவரம் புரியாமல் உளறி விட்டார் என்பதையாவது ஒப்புக் கொள்கிறாரா? தமிழகத்துக்கு அதிக நிதி உதவி, திட்டத்திற்காக வேண்டுமென்று ஆளுங்கட்சி போர்க்கொடி உயர்த்துவதா? அல்லது எதிர்க்கட்சி உயர்த்துவதா? முத்தக் காட்சியை எதிர்த்து சினிமா தியேட்டர் வாயில்களில் மறியல் போர் நடத்தப் போவதாக கவர்னர் முன்னிலையில் கர்ச்சனை புரிந்த முதலமைச்சர், திட்டத்துக்கு அதிக நிதி கேட்டு டெல்லியுடன் போராட முன் வராதது ஏன்? திட்டத் தொகையில் புயல் வெள்ளநிவாரண உதவித் தொகையைக் கழித்துக் கொள்ளக் கூடாதென்று கவர்னர் முன்னிலையிலேயே புயல் நிவாரண நிதியளிப்பு விழாவில் நான் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்ததை மனோகரன் படித்திடவில்லையா? திட்டத்திற்கு அதிக உதவி வேண்டுமென்றும், புயல் உதவி நிதியைத்

திட்டத் தொகையில் கழித்துக் கொள்ளக் கூடாதென்றும் சட்டப் பேரவையில் அ.தி.மு.க. அரசு, ஒரு தீர்மானம் நிறைவேற்ற முன்வருமா? அப்படித் தீர்மானம் கொண்டு வந்தால் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் முதல் கட்சியாக தி.மு.க. இருக்குமென்று பேரவையிலேயே நான் அறிவித்ததை மனோகரன் மறந்து விட்டாரா?

இதெல்லாம் ஆளுங்கட்சியின் வேலையில்லை; எதிர்க்கட்சிதான் முன்னின்று செய்ய வேண்டுமென்றால்; தி.மு.க. தீர்மானம் கொண்டு வரத் தயாராயிருக்கிறது. சட்டப் பேரவையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுத்து தோளோடு தோள் நிற்பார்களா?

தோளோடு தோள் நிற்பதாக உறுதி அளித்த மனோகரன்; அடுத்த வாக்கியத்திலேயே லஞ்ச ஊழல்களின் மொத்த வியாபாரியாகக் கருணாநிதி இருக்கிறார் என்று பிதற்றியிருக்கிறார்.

அண்ணா நகரில் மனோகரன் கட்டியுள்ள கண்ணாடி மாளிகை, பல லட்சம் ரூபாய் மதிப்புப் பெறும். அது ஊழலால் கட்டப்பட்டது என்பதை ஊரறியும்! நாடறியும்! ஆனால் அந்த மாளிகையின் மதிப்பைப் பாதி அளவுக்கும் கீழே குறைத்து சட்டசபையில் சொத்து விவரம் கொடுத்திருக்கிறார்! பிணம் தின்னும் கழுகு, பழம் தின்னும் கிளியைப் பழிக்கின்ற கதை போல, மனோகரன் நம்மைப் பழித்திட, இழித்துப் பேசிட முனைவது அவர் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வது போலாகும்.

போகட்டும்; மமதைப் பேச்சு மனோகரனுக்கு வாடிக்கை! மன்னித்து விடுவோம். மத்திய அரசுடன் திட்டத் தொகையை அதிகப்படுத்த போராடத் தயாரா? என்று ஒரு வீரமிக்க வினாவை விடுத்துள்ளார் அல்லவா!

ஆள வேண்டியது இவர்கள்!

அதிக நிதி கேட்டு மத்திய அரசுடன் போராட வேண்டியது நாம்!

பரவாயில்லை! ஏற்றுக் கொள்வோம் அந்தப் பொறுப்பை!

இவரது கூற்றை, இவரது தலைவர் முதலமைச்சர் ஏற்றுக் கொள்கிறாரா?

ஏற்றுக் கொள்வதாயின் மூன்று நாட்களுக்குள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

பதில் கிடைத்த அடுத்த நாளே; நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் செயற்குழுவைக் கூட்டி போராட்ட நாள் குறிக்கத் தயாராக இருக்கிறார், இதை நான் பேராசிரியரையும் கலந்து பேசிக் கொண்டுதான் எழுதுகிறேன்.

மனோகரன், எம்.ஜி.ஆருடன் கலந்து பேசித்தான் அந்தப் போராட்ட அறிவிப்பைச் செய்தாரா?

எதற்கும் இன்று முதல் மூன்று நாள் பொறுத்துப் பார்ப்போம்.

அன்புள்ள,

மு. க.

(29-01-1978)

# 519. அண்ணா வழியில் சந்திப்போம்!

**உடன்பிறப்பே,**

பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வது - கலகத்திற்கு வித்திடுவது - என்று கங்கணம் கட்டிக் கொண்டு முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் செயல்படுகிறார்; பிப்ரவரி மூன்றாம் நாள் சென்னையில் அண்ணா சிலை திறப்புவிழா என்று ஒரு மாதத்திற்கு முன்பே அறிவித்திருந்தோம்.

ஆண்டுதோறும் பிப்ரவரி 3-ஆம் நாள் காலையில் அண்ணா சதுக்கத்திற்கு அமைதியாகச் சென்று மலர் வளையம் வைத்து வணங்குவது தி.மு.கழகம் வழக்கமாக நடத்தி வருகிற நிகழ்ச்சி!

கடந்த நாலைந்து ஆண்டுகளாக நண்பர் எம்.ஜி. ராமச் சந்திரன், சென்னையில் அண்ணா அடக்கம் செய்யப்பட்டுள்ள நினைவிடத்திற்கு வந்து அஞ்சலி செலுத்தாமல் ஒவ்வொரு ஆண்டு பிப்ரவரி மூன்றாம் நாளிலும் காஞ்சி, தஞ்சை, விருத்தாசலம் என்று ஒவ்வொரு ஊரிலும் உள்ள அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவிக்க ஊர்வலமாகச் செல்வதைத் தான் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இப்போது திடீரென, அண்ணா சிலை திறப்பு விழா நிகழ்ச்சிக்கு எதிராகவும் போட்டியாகவும் எரிச்சலைக் காட்டிக் கொள்ளும் முறையில் சென்னையில் பிப்ரவரி மூன்றாம் நாள் காலையில் அமைதிப் பேரணிக்கு (?) தலைமை வகிப்பதாகவும், அதற்குத் தமிழகமே திரண்டு வரவேண்டுமென்றும் அறிக்கை விட்டார்.

சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காக்கும் பொறுப்பில் உள்ள ஒரு போலீஸ் அமைச்சர் இவ்வாறு செய்வது முறை தானா? என்று அறிக்கை வாயிலாகக் கேட்டிருந்தேன்.

அதற்கு எந்தச் சமாதானமும் சொல்லாமல், தான் நினைத்ததை முடித்தே தீருவேன் என்று பிடிவாதம் பிடித்தார்.

நமக்குள்ள கவலையெல்லாம்; தி.மு.க. என்றும் அ.தி.மு.க. என்றும் இரண்டாகப் பிளந்து நிற்கும் தமிழ்க்குலம், எம்.ஜி.ஆரின் சூழ்ச்சியின் காரணமாக அண்ணா சதுக்கத்தில் அசம்பாவித நிகழ்ச்சிகளுக்கு ஆளாகி விடக்கூடாது என்பது தான்!

எனவே, நமது தலைமைக் கழக சார்பில் பிப்ரவரி 3-ந்தேதி நிகழ்ச்சி நிரலை மாற்றி அமைத்து அறிக்கை விடுத்துள்ளோம், காலை ஊர்வலத்திற்கென அச்சியற்றப்பட்ட ஆயிரக்கணக்கான சுவரொட்டிகள் வீணாகிவிட்டன, அதனையும் பொருட்படுத்தாமல், நமது கழகத்தினர் பிப்ரவரி 3 மாலை 4 மணிக்கு அண்ணா சதுக்கம் சென்று அஞ்சலி செலுத்துவதென்றும் அங்கிருந்து புறப்பட்டு ஊர்வலமாக வள்ளுவர் கோட்டம் அடைந்து அதற்கு அருகில் உள்ள அண்ணா சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்வதென்றும் நமது நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்டு (29-1-1978) காலை ஏடுகளில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி மாற்றச் செய்தி வந்தபிறகு, எம்.ஜி. ராமச்சந்திரன் சென்னை அமைந்தகரை திருமணமொன்றில் பேசியிருக்கிறார். அதில் மணமக்களைப் பேசுவதை விடுத்து எனக்கு வாழ்த்து (?) கூறியிருக்கிறார். இவர்தான் அண்ணாவின் உண்மையான தம்பியாம்! நான் போலியாம்! அதோடு நிற்கவில்லை அவர்.

இதுவரை அண்ணா அமரர் ஆன நாளில் நான் மவுனமாக இருப்பது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு பிப்ரவரி 3-ந்தேதி நடக்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசப் போகிறேன், அந்தக் கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசப் போகிறேன். பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு மக்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப் போகிறேன்.

இந்த அறிவிப்பையும் எம்.ஜி.ஆர். அந்தத் திருமண விழாவில் செய்திருக்கிறார்.

1974-ஆம் ஆண்டு நாம் பெரியார் சிலை திறந்த நாளில், இப்படித்தான் ஒரு போட்டிப் பொதுக்கூட்டம் போட்டு பெரியார் சிலைக்குப் பீடம் கட்ட, ஒரு அடிக்கல் நாட்டு விழா நடத்தினார். பிறகு பீடம் 1975-ல் கட்டப்பட்டது, சிலை 1977-ல் வைக்கப்பட்டது.

அதே போட்டி மனப்பான்மை, எரிச்சல் உணர்ச்சி, இப்போதும் வெளிப்படுகிறது, அண்ணா சிலை திறப்பு விழா பொதுக்

கூட்டத்திற்குப் போட்டியாக திடீரென தனது மௌன விரதத்தைக் கூட கைவிட்டுவிட்டுப் பொதுக்கூட்டம் போடப் போகிறாராம்!

அதில் அண்ணாவைப் பற்றியல்ல; பல பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவாராம்!

மக்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வாராம்.

தெருக்கோடியில் வித்தை காட்டுகிறவன், தாயத்து விற்பதற்காக, இப்படித்தான் கடைசியாக ஒரு அதிசயம் காத்திருக்கிறது என்று கூறி, இறுதியில் எல்லோரையும் ஏமாற்றிவிட்டு ஜமக்காளத்தை சுருட்டிக் கொண்டு போவான்!

சட்டசபையில் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாதவர்; மக்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பொதுக்கூட்டத்தில் பதில் வழங்கப் போகிறாராம்.

எம்.ஜி.ஆர். வீரரானால் - அவர் மக்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தனித்தனியாகப் பதில் சொல்ல வேண்டாம்!

ஒரே மேடை போடுவோம்! அதில் அவரும் நானும் பேசுவோம்! அவர் கேட்கும் கேள்விகளுக்கு நான் பதில் சொல்கிறேன். அதைப்போல நான் கேட்கும் கேள்விகளுக்கு அவர் பதில் சொல்லட்டும்!

இந்த ஏற்பாட்டுக்கு எனதருமை நண்பர் எம்.ஜி.ஆர். இணங்குகிறாரா?

உடன்பிறப்பே! அண்ணா புத்தியை தீட்டு என்றார் - எம்.ஜி.ஆரோ கத்தியைத் தீட்டுகிறார்! அவரை நாம் அண்ணா வழியில் சந்திப்போம்!

அன்புள்ள,

மு. க.

(30-01-1978)

# 520. பயணம் தயாரா?

**உடன்பிறப்பே,**

வையம் புகழ் வள்ளுவருக்குச் சென்னை மாநகரில் எந்த இடத்தில் கோட்டம் எழுப்பினோமோ -அந்த இடத்தில்; சொலல் வல்லன் - சோர்விலன் - அஞ்சான் - அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது - என்ற குறளுக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் நமது ஆருயிர் அண்ணனுக்கு பிப்ரவரி மூன்றாம் நாள் மாலை சிலை அமைக்கிறோம்.

குறள் வடிவும் - நெஞ்சில் குறள் போன்ற தெளிவும் - குறள் காட்டும் வாழ்க்கை அறமும் கொண்ட அண்ணன், கையில் குறள் ஏந்திப் படிப்பது போன்ற கோலத் திருவுருவம். அவருக்கேயுரிய எளிமையையும், அமைதி தவழ் முகத்தினையும் அந்தச் சிலை யொன்றிலேதான் காண முடிகிறது.

தொடக்கத்தில் தஞ்சை மணிக்கூண்டுக்கருகிலும், அடுத்து திருச்சி சிந்தாமணியிலும், பின்னர் திருவத்திபுரத்திலும் (செய்யாறு) அருள்பொழியும் அந்தச் சிலை அமைக்கப் பெற்றுப் பெருவிழாக்கள் நடைபெற்றிருக்கின்றன.

எழிலார்ந்த அந்த சிலை வடித்த சிற்பியின் பெயர் கோவிந்தசாமி! முகப்பொலிவை அப்படியே சிலையில் வடிக்கும் ஆற்றல் பெற்றவர். வாணிமகாலுக்கு எதிரில் அமைத்துள்ள கலைவாணர் சிலையும் அவர் கைவண்ணம்தான்! பெரியார் பாலத்தருகே, நாம் வைத்துள்ள தந்தை பெரியார் சிலையும் அவர் படைப்புத்தான்! அந்தத் திறமையாளர் இன்றில்லை; மறைந்து விட்டார்.

ஒவ்வொருவர் சிலையும் உருவான நேரத்தில்; நான் வாரத்திற்கு மூன்று முறையாவது அவர் சிலை வடிக்கும் இடத்திற்குச் சென்று திருத்தங்கள் கூறுவேன். அலுத்துக் கொள்ளாமல் செம்மைப்படுத்திடும் பணியில் ஈடுபடுவார். அவர் திறமையில் அணுவளவும் குறையாமல் அவரது திருமகன் மோகனதாசு, சுறுசுறுப்பான வாலிபர், அந்த இளம் சிற்பியின் கரம்பட்டு உருவான அண்ணனின் சிலையைத்தான் வரலாற்றுச்

சிறப்புக்குரிய வள்ளுவர் கோட்டத்துக்கு அருகில் திறக்கப் போகிறோம்.

வரலாற்று நாயகனின் சிலையல்லவா? வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் கிடைத்ததில் என்ன வியப்பு! அரசின் சார்பில் முதலில் அடுக்கடுக்காகத் தடைகள் எழுந்த போதிலும், இறுதியில் நம் இச்சைக்குகந்த இடத்தில் சிலை வைக்க அனுமதி அளித்தமைக்காக நன்றி கூறத்தான் வேண்டும். அண்ணன், சென்னையில் வாழ்ந்த நுங்கம்பாக்கம் பகுதியிலேயே அவருக்குச் சிலை அமைவது மற்றொரு சிறப்புத்தானே!

உடன்பிறப்பே, நாலைந்து நாட்களுக்கு முன்பு எனக்குக் காய்ச்சல் ஒரு நாள் இரவு உச்ச கட்டத்தை அடைந்தபோது; கண்கலங்க எண்ணிக் கொண்டேன் - பிப்ரவரி மூன்றாம் நாள் என் அண்ணனின் சிலையைத் திறந்து வைத்த பிறகு எனக்கு எது நடந்தாலும் பரவாயில்லையே என்று!

வள்ளுவர் கோட்டம்... வாழ்வின் தலையாய குறிக்கோள்களில் ஒன்று என்றால்; அங்கு இயற்கையாகவே அண்ணன் சிலை அமைக்க இடம் கிடைத்திருப்பதும் - அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழர்களை வாழவைத்த தலைவனுக்குச் சிலை எடுப்பதும் அடுத்த குறிக்கோளின் அழியாத வெற்றியன்றோ!

அந்த வெற்றியின் சின்னத்திற்கு விழா எடுக்கிறோம்; அவர் நமது இதயத்தில் நினைவுச் சின்னமாக ஆன நாளில்!

அவரது வாழ்க்கை - தமிழ் வாழ்க்கை! வசை புராணங்களை வாழ்த்துக்களாகக் கருதிக் கொண்டு கொண்ட கொள்கையில் வளையாது நடத்திய வாழ்க்கை! முதல் நாள் வரையில் அண்ணா என்று அன்பொழுக அழைத்துவிட்டு, மறுநாள் சந்துமுனைகளில் நின்று திருவாளர் அண்ணாத்துரைக்கு என்ன அரசியல் தெரியும்? என்று கேட்டவர்களைப் பார்த்து வியப்புற்றார் எனினும்; அவர்கள்மீது வெறுப்புமிழாத வாழ்க்கை! வாழ்க வசவாளர்கள் என்று வாழ்த்திய வாழ்க்கை! மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று எதிர் வரிசையில் இருந்த திறமையாளர்களையும் மதித்து நடந்த வாழ்க்கை!

தமிழ் மரபு, தமிழ்க்கலை, இலக்கியம், வரலாறு இவற்றைக் காக்கவே தமது வாழ்வு பயன்பட வேண்டுமென்று அதற்கென ஒப்படைக்கப்பட்ட உயர்நெறி வாழ்க்கை!

கொம்புக்குக் கொம்பு தாவும் பிராணிகளைப் போல் - கொள்கை விட்டுக் கொள்கை தாவும் மனிதர்களை அவர் வாழ்க்கையில் சந்தித்ததுண்டு! அவர் செயல் கண்டு உள்ளுக்குள் சிரித்ததுமுண்டு! ஆவணியில் ஆராதித்து - புரட்டாசியில் புகழ்மாரி பொழிந்து - ஐப்பசியில் ஆபாச அர்ச்சனை புரிந்து - கார்த்திகையில் மீண்டும் கருணைக்கு இறைஞ்சி - மார்கழியில் மண்டியிட்டு - மீண்டும் தை மாதத்தில் தருக்கு மொழி பேசி - மாசி பங்குனியில் மமதையைக் குழைத்து எழுதுகிற பச்சோந்தி மனிதர்களை; இன்றைக்கு நாம் சந்திப்பது போலத்தான் அன்றைக்கு அண்ணாவும் சந்தித்தார்! ஆனால் அத்தகையவர்களை வைக்க வேண்டிய இடத்தில் வைத்து நடத்திய அரசியல் வாழ்க்கை அவரது வாழ்க்கை!

ஜனநாயகத்தை அரசியல் தத்துவமாக மட்டுமல்ல; வாழ்க்கை நெறியாகவும் கடைப்பிடிக்க கற்றுத் தந்தவர் அவர்!

வீரம், வாய் வீச்சு அல்ல! வாய்மை நிறைந்த உள்ளத்தில், எத்தகைய இழப்புக்கும் தயாராகக் கூடியிருக்கும் ஒரு தியாகக் கருவூலம்; என்பதற்கு விளக்கமாகத் திகழ்ந்தவர்! நம்மில் பலரையும் அதற்கேற்ப வளர்த்துப் பழக்கியவர்!

அன்பு உடன்பிறப்பே, அந்த அண்ணனுக்கு ஆயிரமாயிரம் சிலைகளைத் தமிழகமெங்கணும் நாட்டியிருக்கிறோம்.

இப்போது தலைநகரில் எடுக்க இருக்கும் விழா, சரித்திரத்துப் பொன்னேட்டில் அழித்தெழுத முடியாத சித்திரமாகப் போகிறது!

பிப்ரவரி மூன்றாம் நாள் மாலை 4 மணிக்கு காமராசர் சாலையில் கடற்கரையோரத்தில் அண்ணன் துயிலுமிடத்தில் மலர்வளையம் வைத்து வணங்குகிறோம்.

அங்கிருந்து அணி செய்த அண்ணாவின் உருவப் படத்துடன் நமது பேரணி, வள்ளுவர் கோட்டம் நோக்கிப் புறப்படுகிறது!

நானும், பேராசிரியரும், சாதிக்கும், பா.உ.ச.வும் மற்றும் முன்னணித் தலைவர்களும் அந்தப் பேரணியில் வருகிறோம்.

பேரறிஞர் அண்ணா வாழ்க!

அண்ணா வழியில் அயராது உழைப்போம்!

இந்த இரண்டு முழக்கங்களைத் தவிர வேறு எந்த முழக்கமும் இருக்கக்கூடாது.

■ அண்ணாவின் படங்கள் அமைந்த அட்டைகள்!

■ அண்ணா வாழ்க என்ற சொற்கள் கொண்ட பதாகைகள்!

இவற்றைத் தவிர வேறெந்த சித்திரங்களும் அந்தப் பேரணியில் இடம் பெறக்கூடாது! இதனை வேண்டுகோளாகக் கூட அல்ல; ஆணையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தலைநகரில் தமிழகமே வந்து நிறைந்திட வேண்டும்! தங்கைகள் - தம்பிகள் - அண்ணன்கள் - அக்காள்கள் - அனைவரையும் இணைத்துத்தான் உடன்பிறப்பே! என்று அன்பு ததும்ப அழைக்கிறேன்.

என்னைப் பெற்றெடுத்த தாயும் தந்தையும் மண்ணுக்குள் மறைந்துவிட்டனர் எனினும் - என்னைப் பெறாத தாயாக தந்தையாக; என்னைத் தங்கள் கண்ணுக்கு நிகராகக் கருதுகிற பெரியோர்களும் பெருமாட்டிகளும், இந்தப் பிள்ளையின் அழைப்பை ஏற்றுக் கொண்டு பெருநகராம் சென்னையில் பிப்ரவரி மூன்றில் கூடிட வேண்டும்!

தமிழர் தலைவனுக்கு எடுக்கும் விழா!

தன்மானத் தந்தை பெரியாரின் மூத்த மாணவனுக்கு நடக்கும் விழா!

வழிகாட்டிய வள்ளலுக்கு எடுக்கும் விழா!

தமிழினத்தின் விழி திறந்த வித்தகனுக்கு எடுக்கும் விழா!

இனிய உடன்பிறப்பே! இதற்கு மேல் என்ன சொல்ல வேண்டும்; வழிச்செலவுக்கு வகையில்லையென்றோ; உடல்நல மில்லையென்றோ; தவிர்க்க முடியாத பணியென்றோ; பிறகு என்னிடம் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம் என்று கருதாதே!

கடன் வாங்கிக் கொண்டாவது; கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு போதித்த இனத்தலைவன் விழாவுக்கு வா!

உடல் நலிவு எனினும்; விழா காண்பதே நலிவுபோக்கும் மாமருந்தாக அமையும் - எனவே தவறாது வா! இதைவிடப் பிறிதோர் பணி இருக்க முடியாது; எனவே இன்றே பயணத்திற்குத் தயாராகு!

அன்புள்ள,

மு. க.

(31-01-1978)

# 521. "மார்க்சிஸ்டுகள்" பார்வைக்கு!

**உடன்பிறப்பே,**

மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள், ஜனநாயக இடதுசாரி அணியில், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியும், தி.மு. கழகமும், அ.தி.மு.க.வும் சேரவேண்டுமென்று அழைப்பு விடுத்திருப்பதாக ஏடுகளில் செய்தி கண்டேன். அவர் அவ்வாறு தி.மு.க.வுக்கு அழைப்பு விடுத்திருப்பது உண்மையானதாக இருக்குமானால் சில விளக்கங்களை மார்க்சிஸ்டுகளிடமிருந்து பெறவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

வலது கம்யூனிஸ்டு என கூறப்படுகிற இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, இந்திரா காந்தியின் நெருக்கடிப் பிரகடனத்தை ஆதரித்தது. இப்போது அப்படி ஆதரித்தது தவறு என்று கட்சிச் சார்பில் வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டது. எனவே மார்க்சிஸ்டுகள் அந்தக் கட்சிக்கு அழைப்பு விடுவது நியாயமே ஆகும்! அந்த அழைப்பை ஏற்பதும் ஏற்காததும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுத்த விவகாரமாகும்.

நெருக்கடிப் பிரகடனத்தையும் இந்திராவின் எதேச்சாதிகாரத்தையும் எதிர்த்த பல்வேறு கட்சிகளின் இணைப்புத்தான் ஜனதா கட்சி!

ஜனதாவுடன் வேறு எந்தப் பிரச்சினையில் தி.மு.க.வுக்கு கருத்து மாறுபாடோ அல்லது கொள்கை மோதுதலோ வந்தாலுங்கூட, இந்தியாவின் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் அந்தக் கட்சி வகித்த பங்கிற்கு நமது மரியாதை அந்தக் கட்சியின் மீது எப்போதும் உண்டு.

நடந்து முடிந்த இரண்டாவது சுதந்திரப் போர்க்களத்தில் மார்க்சிஸ்டுகள் கொடுத்த விலையும் சாதாரணமானதல்ல!

அதைப்போலவே தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருந்த தி.மு. கழகம்; எப்படியாவது மத்திய அரசுக்கு மண்டியிட்டு மகுடத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று கருதாமல் அவசரநிலை அறிவிக்கப்பட்ட அடுத்த நாளே கழகச் செயற்குழுவைக் கூட்டி அதிகாரபூர்வமான தீர்மானத்தை இந்திராவின் நடவடிக்கைக்கு எதிராக நிறைவேற்றி இந்தியாவிலேயே முதல் குரல் கொடுத்து இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்ட பெருமைக்குரிய இயக்கமென்பதை வரலாறு மறைக்க முடியாது.

இரண்டு நாளைக்கு முன்பு வேலூரில் உரையாற்றிய ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரான எஸ்.என். மிஸ்ரா எம்.பி. அவர்கள், நெருக்கடிகால எதிர்ப்புப் போராட்டத்தில் தி.மு.க.வின் பங்கினை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது என்று திட்டவட்டமாகக் கூறியிருப்பது நினைவு கூர்ந்திடத்தக்க ஒன்றாகும்.

மிஸ்ரா அவர்கள் மிசா கைதியாக இருந்து, தாயாரின் உடல்நிலை கருதி சில நாட்கள் பரோலில் வெளி வந்திருந்தபோது, நான் அவரை டில்லியில் அவரது வீட்டில் சந்தித்து நீண்டநேரம் உரையாடியிருக்கிறேன். நண்பர் இரா. செழியன் அவர்களும் உடனிருந்தார். மிகக் கண்ணியமான ஒரு மனிதரை சந்தித்த மகிழ்ச்சியுடன் நான் மிஸ்ராவிடம் விடை பெற்றுக் கொண்டேன். அவர் பூட்டப்பட்டிருந்த சிறைச் சாலைக்கு, நமது கழக செயற்குழு தீர்மானமும், கடற்கரையில் நான் பேசியதும், முரசொலியில் வெளிவந்த முக்கிய கட்டுரைகளும் ஆங்கில மொழிபெயர்ப்பாகக் கிடைத்தன என்று பூரிப்புடன் கூறினார்.

அதாவது, கௌகாத்தி காங்கிரஸ் மாநாட்டுக்குப் பிறகு - அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டிப் பேசுவதற்காக நானும் நண்பர் ராஜாராமும் டில்லி சென்றிருந்தோம் அல்லவா அப்போது!

இந்த நிகழ்ச்சிகளையும் தகவல்களையும் கூறுவதற்குக் காரணமே; இந்தியாவில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்ட முயன்ற கட்சிகளில் தி.மு.க.வுக்கு முக்கிய இடம் உண்டு என்பதைத் தெளிவுபடுத்தத்தான்!

எனவே, நெருக்கடி நிலைக்கு எதிராக - இந்திராவின் சர்வாதிகாரத்திற்கு எதிராக - ஓங்கி உயர்ந்த போர்வாளாக இருந்த

மார்க்சிஸ்டுக்கட்சி, அதே பணியில் தன்னைப் பலிகொடுக்கவும் தயாராகக் களத்தில் இறங்கிய தி.மு. கழகத்திற்கு விடுக்கின்ற அழைப்பை நாம் மதித்து வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால் கட்டுச்சோற்று மூட்டையில் பெருச்சாளியையும் வைத்துக் கட்டுகிறோம் என்பதுபோல, ஜனநாயக இடதுசாரி அணியில் சேர, அ.தி.மு.க. கட்சியையும் அழைக்கிறார்களே; அதுதான் நமக்குப் புதிராக இருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்டு கூட்டணிக்குத் தமிழகத்தில் தோல்வி ஏற்பட்டது உண்மை!

தோல்விகள் அடிப்படைக் கொள்கை முரண்பாடுகளைக்கூட அலட்சியப்படுத்தி விட்டு, ஜெயிக்கிற கட்சியுடன் கூட்டு சேரலாம் என்ற கருத்தை உருவாக்குவது, ஆரோக்கியமான அரசியலாகுமா?

என்பதை மதிப்புக்குரிய மார்க்சிஸ்டுகள் எங்கள் மீது ஆத்திரப்படாமல் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்றுதான்; உடன்பிறப்பே! உன் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திரா, அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திய அடுத்த விநாடியே ஆகா! இதுதான் சர்வரோக நிவாரணி என்று வரவேற்ற கட்சி அ.தி.மு.க. கட்சி!

ஜெயப்பிரகாஷ் நாராயணனைக் கொள்ளைக்காரன் என்றும் கள்ள நாணயம் என்றும் பேசியவர்கள் எழுதியவர்கள் அ.தி.மு.க.வினர்!

தேர்தல்கள் எல்லாம் முடிந்து எம்.ஜி. ராமச்சந்திரன் முதல்வரான பிறகும், சட்டசபையில் ஆற்றிய முதல் உரையில் நெருக்கடிப்பிரகடனத்தை நியாயப்படுத்தியும் - ஜே.பி.யைக் கடுமையாகக் கண்டித்தும் வார்த்தைகள் உதிர்த்ததை எதிரே அமர்ந்து மார்க்சிஸ்டுகளும் கேட்டுக் கொண்டுதானிருந்தனர்.

சர்வாதிகாரி இந்திராவின் போக்கினைக் கண்டித்து தி.மு.க., தி.க., மார்க்சிஸ்டுக் கட்சிகள் தமிழகத்தில் கருப்புக்கொடி காட்டியபோது எம்.ஜி.ஆர். ஆட்சி எப்படி நடந்து கொண்டது என்பது மார்க்சிஸ்டுகள் மறந்துவிட்ட செய்தி அல்ல!

இந்திரா வருகையை யொட்டிக் கழகத்தினர் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்ந்து

தீவிரப்படுத்தப்பட்டு கழக சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானவர்கள் நாள்தோறும் சிறைக்கு அனுப்பப் பட்டு வருகிறார்கள்.

கர்நாடகத்திலும், ஆந்திரத்திலும் ஜனதாவுடன் அ.தி.மு.க. தேர்தல் உறவுகொள்ளத் துடிப்பதற்குக் காரணமே - அவர்களுக்குள்ள தனிப்பட்ட பலகீனங்களும் - தலை தப்பினால் போதும் என்ற அச்சமும் தவிர வேறு எதுவுமில்லை!

இந்தியக் கம்யூனிஸ்டுகளாவது, தங்களின் கடந்த காலத்தைப்பற்றி விமர்சித்து நெருக்கடி நிலையை ஆதரித்தது தவறு என்கிற ஒரு பாராட்டத்தக்க முடிவினைச் செய்தார்கள்.

அ.தி.மு.க.வினர் நேற்று வரையில் ஏன்; இன்று வரையில் இந்திராவின் சர்வாதிகாரத்திற்குச் சிகப்புக் கம்பளம் விரித்தது சரியென்று சாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தேவராஜ் அர்ஸ் நமது கழகத்துக்கு நண்பரல்ல; நமது கழக அரசு கலைக்கப்பட்டபோது மகிழ்ந்து பேசியவர்! ஆனால் அவரது ஆட்சி கலைக்கப்பட்டபோது தி.மு.க. மாநில உரிமையை மறந்துவிடாமல் கருத்து தெரிவித்தது. சட்டசபை கூடும் வரையில் பொறுத்து இருந்திருக்கலாம் என்றுதான் நமது எண்ணத்தை வெளிப்படுத்தினோம்.

இங்கே, தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மனுக்கொடுத்த ஜனநாயகவாதிகள் (?) அல்லவா அ.தி.மு.க.வினர்!

தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் மார்க்சிஸ்டுகள், அ.தி.மு.க.வுடன் உறவு கொண்டதற்கு என்ன காரணங்கள் சொன்னாலும்; அந்தக் காரணங்களை அவர்களது மனச்சாட்சியே ஏற்றுக் கொள்ளாது.

ஏன்? அதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பு நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது திருச்சியில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் நானும், பா. ராமச்சந்திரன் அவர்களும், தோழர் உமாநாத் அவர்களும், தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்ட் கூட்டணி சார்பாகப் பேசினோம். அந்தக் கூட்டத்துப் பேச்சு டேப் செய்யப்பட்டிருந்ததை அண்மையில் நான் திருச்சி சென்றிருந்தபோது போட்டுக் காட்டினார்கள். அதனை கையோடு

வாங்கிக்கொண்டு வந்தேன். அதில் அ.தி.மு.க. பற்றியும் அதன் தலைவரைப் பற்றியும் தோழர் உமாநாத் பேசியதை அவரேகூட மறந்திருக்க முடியாது! பேச்சின் விபரம் - வர்ணனைகள் - ஆகியவற்றுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. அன்றையதினம் வலதுசாரி பிற்போக்கு சக்தியாகவும், ஜனநாயக விரோதக் கட்சியாகவும் மார்க்சிஸ்டுகளின் கண்ணோட்டத்தில் படம் பிடித்துக் காட்டப்பட்ட அ.தி.மு.க., திடீரென்று ஓரிரு மாதங்களில் ஜனநாயக இடதுசாரி இயக்கங்களில் ஒன்றாக ஆகிவிட்டது எப்படியென்றுதான் எனக்குப் புரியவில்லை.

இந்தியக் கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு இரண்டிலுமே, நாம் போற்றத்தக்க தியாகங்கள் செய்த தலைவர்கள் பலருண்டு! தொண்டர்களும் நிறைய உண்டு!

ஆனால் அந்தத் தியாகமும் தொண்டும் தேர்தலில் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கணக்கிடாமல் உறுதிவாய்ந்த கொள்கை வழிக்குப் பயன்படுத்தப்படுமேயானால் அந்தச் செயலை நம்மைப்போல் வரவேற்பவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.

அன்புள்ள,

மு. க.

(1-02-1978)

## 522. வரலாற்று வளையம்!

**உடன்பிறப்பே,**

வா! என்று விடுத்த என் வாஞ்சைமிகு அழைப்புக்கிணங்க வந்து குவிந்தவண்ணமிருக்கிறாய்; வயலில் விளைந்த கதிர்; களத்துமேட்டை நிரப்புதல் போல் சென்னைத் தலைநகரை நிரப்பிக் கொண்டிருக்கிறாய்! என்றைக்கு என் அழைப்பை நீ நிராகரித்திருக்கிறாய்; இன்றைக்கு நிராகரிக்க!

அண்ணன் நிறுவிய ஆட்சி, 1975-ல் கலைக்கப்பட்டபோதும் நீ அஞ்சி நடுங்கிடவில்லை; பயன் பெற்றதுகள் - பதவி சுகம் கண்டதுகள் - பாதை மாறத் துடித்தனவே தவிர; என் பத்தரைமாற்றுத் தங்கமே! நீ பதறி ஓடிடவில்லை! மாறாக மலைக்குலையினும் நிலைகுலையா மாமணியாய்க் காட்சி தந்தாய்! துண்டுச் சீட்டு ஏந்தி வந்த கூட்டம் ஒதுங்கியது; என்றைக்கும் தொண்டுள்ளம் கொண்டுழைக்கும் உந்தன் கூட்டம்பெருகியதே தவிர, வெயில் பட்ட வெண்ணெய் போல உருகிக் கரைந்திடவில்லை!

சர்க்காரியா விசாரணையென்றும் வழக்குகள் என்றும் கழகத்தைச் சல்லடைக் கண்களாய்த் துளைத்திட சர்வாதிகார ராணியார் துந்துபி முழங்கியபோதும்; அதற்குத் துரோக சக்திகள் துணை நின்றபோதும் - வழக்கு நிதிக்குத் தொகை தொகையாய்க் கொண்டுவந்து குவிப்பதற்குச் சிற்றூர், பட்டி தொட்டிகளில் இருந்தெல்லாம் மாணிக்க மழலைகளையும் தூக்கிக்கொண்டு - குடும்பம் குடும்பமாகப் பேருந்துகளில் நீ வந்த நிகழ்ச்சிகள்தானே; நித்த நித்தம் என் நெஞ்சப் புண்ணுக்கு மருந்தாக இருந்தது!

தோல்வி கண்டு துவளாதே! வெற்றி கண்டு வெறியாட்டம் போடாதே! என்று அடிக்கடி கூட்டங்களில் முழங்கியவர்கள் அதனை மறந்து போய்த் துவண்டுவிட்டாலும்; தோல்விகளையும் வெற்றிப்படியாக்கிக் கொள்ளும் தோள்

வலிமை - மனஉறுதி எமக்கு உண்டென்று சுடர்முகம் தூக்கி, சூழ்ந்து வந்த எதிர்ப்புக்கிடையே கழகத்தின் தனித் தன்மைக்கு ஒளிவிளக்கு ஏற்றிவைத்த ஒப்பற்ற கண்மணியன்றோ நீ!

போர்க்குணம் மறவாப் புலியே! இந்திரா அம்மையின் வருகையின்போது வெறுப்பினைக் காட்டிட வெள்ளமெனக் கறுங்கொடி தெரிய வேண்டுமெனத் தெரிவித்தபோது - துப்பாக்கி ரவைகளுக்கு மார்பைக் காட்டி நீ அணிவகுத்த காட்சிதனை மறக்கத்தான் முடியுமா?

இன்றும் அழைப்பை ஏற்று அண்ணன்சிலை திறப்பு விழாவுக்கு வந்து குவிந்துகொண்டிருக்கிறாய்.

உடல் நலிவால் மிகவும் களைப்புற்றிருக்கிற எனக்கு உன் வருகை எத்துணை உற்சாகத்தைத் தருகிறது தெரியுமா?

நேற்று மாலைதான் அண்ணா சிலை அமைப்பு ஏற்பாடுகளைக் காண என்னை அழைத்துச் சென்றார் சீத்தாபதி!

வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே, கோலத் திரு விழிகளைக் குறள் புத்தகத்தில் பதித்தவாறு - முற்றிய நெற்கதிர் போல் குனிந்த நிலையில் அமர்ந்திருக்கும் அண்ணன் சிலையின் மாட்சியே மாட்சி!

அடடா! அந்த அழகு சிந்தும் பீடம்! சென்ன கேசவலுவையும், முருகனையும் நினைவூட்டிக் கொண்டே யிருக்கிறது! கல்லை நமது முகம்பார்க்கும் கண்ணாடி போல மெருகேற்றியுள்ள புதுமையே புதுமை! அந்த பீடத்திலேயே வள்ளுவர் கோட்டத்து முகப்பினைக்கண்டு மகிழலாம்.

சென்னை மாவட்டத்து ஆற்றல்மிகு வீரரெல்லாம் விழாச் சிறப்புக்கு வியர்வை சிந்தி உழைக்கின்றனர்.

விழா காண வந்துள்ள உடன்பிறப்பே! அண்ணன் நினைவு நாளில் கலந்துகொள்ள இயலாமல் உன்னைப் போன்ற ஆயிரமாயிரம் உடன்பிறப்புகள் 1976-ஆம் ஆண்டு சிறையில் கிடந்தனர்! மிசா காரணமாக!

இப்போதும் நூற்றுக்கணக்கான உடன்பிறப்புகள் அண்ணன் நினைவு நாளில் பல்வேறு சிறைகளில் அடைபட்டுக்கிடக்கின்றனர்; மினி மிசா காரணமாக!

அண்ணன் நினைவு நாளை, இந்த ஆண்டும் சிறையில் கொண்டாடும் நம் உடன்பிறப்புகளுக்குக் கண்ணீர் கலந்த வாழ்த்துக்களைச் சொல்லுவோம்!

சிறை வாடும் உடன்பிறப்பே! நீ, இன்று அண்ணன் சிலை திறப்பு விழாவில் எம்முடன்தான் இருக்கிறாய் என்று எண்ணிக் கொள்கிறேன். அதேபோல நாங்களும் உன்னுடன் இருப்பதாக எண்ணிக்கொள்க!

வரலாறு ஒரு வளையம் - அது உருண்டு கொண்டே யிருக்கும். அதனால்தான் சரித்திரம் திரும்பும் என்று சான்றோர் கூறினர்.

அன்புள்ள,

மு. க.

(2-02-1978)

## 523. சந்துமுனைச் சிந்து பாடுகிறார்!

**உடன்பிறப்பே,**

வள்ளுவர் கோட்டம் - அண்ணா சிலை திறப்பு விழா நிகழ்ச்சியும், அதனையொட்டி நடைபெற்ற லட்சோப லட்சம் பேர் கலந்துகொண்ட ஊர்வலமும் எம்.ஜி. ராமச்சந்திரன் கும்பலுக்கு எவ்வளவு வயிற்றெரிச்சலை மூட்டியிருக்கிறது என்பதை அவர்கள் திருவல்லிக்கேணி கூட்டத்தில் உதிர்த்த திருவாசகங்களிலேயிருந்து தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

மகாப் புனிதர் ஒருவர் - கறைப்படாதக்கரங்களுக்குச் சொந்தக்காரர் - மதுரையைச் சுருட்டி வாயில் போட்டுக் கொள்ளக்கூடிய உத்தமர் ஊழலைப் பற்றி ஓங்காரக் குரல் எடுத்துப் பேச, சர்க்காரியா அறிக்கையில் குற்றத்திற்குட்பட்டவர் என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்ட நேர்மையாளர் தலைமையேற்று தி.மு.க. பற்றி வசைப்புராணம் பாட- ராஜமான்யம் புகழ் வீராதி வீரர்கள் போர் முழக்கம் செய்ய - இரண்டு லட்சத்திற்கு வீட்டை விற்கத் தயார் - கருணாநிதி வாங்கத் தயாரா? என்று கேட்டு தயார் என்று தந்தியும் கடிதமும் அனுப்பியதும் வாலைச் சுருட்டிக்கொண்டு; வாயை மூடிக்கொண்டு ஒதுங்கிவிட்ட சண்டப்பிரசண்டர்; சவால்களை விடுத்திட - படகு மகாராணி பட படவெனப் பல்லைக் கடித்துப் பேசிட இத்தனைக்கும் இடையிலே; பொய்யைத் தவிர வேறு எதுவும் பேசமாட்டேன் என்று சத்தியம் செய்து கொண்டு எம்.ஜி. ராமச்சந்திரன், அதிகார வெறியில் ஜன்னி கண்டவனைப்போல உளறியிருக்கிறார்.

முதலமைச்சர் என்ற பதவிக்குரிய மரியாதையுடன் அவருக்குப் பதிலளித்து வருவதை கோழைத்தனம் என்று கருதிக்கொண்டு கொக்கரித்திருக்கிறார்.

போட்டி ஊர்வலத்தில் ஏற்பட்ட தோல்வி! போட்டிக் கூட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி! மக்கள் கேள்விகளுக்குப் பதில்

அளிக்கப்போகிறேன் என்று மார்தட்டி அழைத்துவிட்டு, பாவம்; மாரடித்து அழுதிருக்கிறார்!

1949-ஆம் ஆண்டு அண்ணா, தி.மு.க. வைத் தொடங்கிய போது அழைக்கிறார் அய்யா! அழுகின்றார் அண்ணா என்று எழுதிக் கழகம் தொடங்க எதிர்ப்பு தெரிவித்தவர் கருணாநிதி என்று எம்.ஜி. ராமச்சந்திரன் அந்தக் கூட்டத்தில் பேசியிருக்கிறார். எவ்வளவு வடிகட்டிய பொய் இது!

அண்ணா, புதிய கழகம் தொடங்கியபோது - அய்யாவின் போக்கை எதிர்த்து அண்ணாவுக்கு ஆதரவாக நான் விடுத்த அறிக்கை, அப்போதே திராவிட நாடு இதழிலே வெளிவந்திருக்கிறது! எம்.ஜி. ராமச்சந்திரனுக்கு இப்படி ஒரு கோளாறு எப்போது ஏற்பட்டது என்றுதான் எனக்குப் புரியவில்லை. அழைக்கின்றார் அய்யா! அழுகின்றார் அண்ணாதுரை என்று தி.மு.க. தொடங்குவதற்கு எதிர்ப்பாக நான் எழுதியதாகச் சொல்கிறாரே; அந்த ஏட்டினைக் காட்டிட எம்.ஜி. ராமச்சந்திரன் தயாரா?

இவர், எனக்குக் கணக்கில்லாமல் அடிக்கடி பணம் கொடுத்தாராம்! ஆனைக்கவுனியில் மாற்றுத் துணியில்லாமல் இவர் கஷ்டப்பட்டபோது நான் கூட இவருக்கு இரண்டு கதர் வேட்டி எடுத்துக் கொடுத்தேன் என்று நானும் ஒரு மேடைபோட்டுப் பேசிவிட முடியும். கருணாநிதியும், அன்பழகனும் இவரிடத்தில் கைநீட்டி பணம் வாங்கினார்களாம்! உண்மையிலேயே வாங்கியவர்களை மேடையிலே தன்னைச் சுற்றி உட்கார வைத்துக்கொண்டு, ஆணவத்தின் உச்சியிலே உட்கார்ந்தவாறு என்னையும் பேராசிரியரையும் இழிவுபடுத்திப் பேசியது; இனி இவரது யோக்கியதையை நமது கழகப் பேச்சாளர்கள் அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்து எறிவதற்குத்தான் வழிகாட்டும்.

முன்பு இப்படித்தான் மதுரை முத்துவுக்கு மாற்று வேட்டி எடுத்துக் கொடுத்தேன் என்று மேடைக்கு மேடை பேசிக் கொண்டிருந்தார். இப்போது ஆள்மாறாட்டமாகப் பேசுகிறார்! அவ்வளவுதான்!

அண்ணா சிலை திறப்பு விழாவில் அன்பில் தர்மலிங்கம் நிதானமின்றிப் பேசினாராம்; ஒரு முதலமைச்சரின் பேருரை இது! ஒருமுறை தனக்கருகே அமர்ந்திருந்த மந்திரிகளையும்,

தனது கட்சியின் முன்னணியினரையும் திரும்பிப் பார்த்திருந்தால்; முதலமைச்சர் ராமச்சந்திரன், இவ்வளவு நிதானமற்றுப் பேசியிருக்கமாட்டார்.

என் செய்வது;

அதிகார வெறி அவருக்குத்
தலை சுற்றுகிறது!

ஆணவம் நெஞ்சை அடைக்கிறது!

சட்ட சபையில் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் இல்லை; விழிக்கிறார்! சமாளிக்கப் பார்க்கிறார்! தடுமாறுகிறார்; போனால் போகிறது என்று விட்டுவிடுகிறோம்!

இனி, சட்ட சபையில் அவர் நமது விளக்க வினாக்களுக்கு தகுந்த விடையளிக்கும் வரையில், அடுத்த பிரச்சினைக்குப் போகப்போவதில்லை.

ஃ இஸ்மாயில் கமிஷன் அறிக்கை விவகாரம்!

ஃ குடிகாரர் மீது வழக்குகளை வாபஸ் வாங்குக என்று உத்தரவிட்ட விவகாரம்!

ஃ கண்ணாடி மாளிகை விலைகூறிச்
சவால்விட்டுப் பின்வாங்கிய
விவகாரம்!

இன்னும் பல பிரச்சினைகள், எதிர்கொண்டழைக்கின்றன!

சட்டமன்ற முறைப்படி - மரபுப்படி - சந்திக்கத்தான் போகிறோம்!

அதுவரையில் அவர், இதுபோன்ற சந்து முனைச் சிந்துகளைப் பாடிக் கொண்டிருக்கட்டும்.

அன்புள்ள,

மு. க.

(5-02-1978)

# 524. உயரத்தில் உட்கார்ந்திருப்பதால்!

**உடன்பிறப்பே,**

ஜனதாவை எதிர்த்துப் போராட்டம் - என்று கருணாநிதி எப்போது அறிவிக்கிறார்? கர்நாடக மாநிலத் தேர்தலில் ஜனதாவிற்கும், தி.மு.க.வுக்கும் கூட்டு இல்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகு ஜனதாவை எதிர்த்துப் போராடப் போவதாக அறிவித்திருக்கிறார்.

அண்ணா நினைவு நாளன்று நடத்திய போட்டிக் கூட்டத்தில் எம்.ஜி. ராமச்சந்திரனின் புதிய கண்டுபிடிப்பு இது! ஏதாவது பிரச்சினைகளைத் தெளிவின்றிக் கூறுவதும், அதற்கு விளக்கமளித்து வினாக்களை எழுப்பினால் மௌனம் சாதித்து விட்டு, அதை விடுத்து வேறு பிரச்சினைக்குச் செல்வதும் அவருடைய வாடிக்கையாக இருப்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

அவரது கூர்த்தமதிக்கும், தெளிவான அறிவுக்கும் மிகப்பெரும் உதாரணமாகத் திகழ்வதுதான்; விஞ்ஞானக் கருத்தரங்கில் அவர் பேசிய மணிவாசகமாகும். மத்திய அரசு, மாநில அரசுக்கு ஆண்டுதோறும் 368 கோடி ரூபாய் மானியமாக வழங்குகிறது என்றார். நாம் எடுத்துக்காட்டியும் தன் தவறைத் திருத்திக்கொள்ள மறுத்தார். மக்களின் நன்மைக்காக எதையும் மிகைப்படுத்திச் சொல்வது குற்றமல்ல என்று சட்டசபையில் விளக்கமளித்தார். அவ்வளவு அற்புதமான தெளிவுபடைத்த அந்த மேதைதான் தி.மு.க. - ஜனதா பற்றியும் தனது விமர்சனத்தைச் செய்திருக்கிறார்.

ஜனதாவுடன் தி.மு.க. போராடும் அல்லது ஜனதாவை எதிர்த்து தி.மு.க. போராடும் என்று நான் எங்குமே பேசவில்லை. ராமச்சந்திரனின் பேச்சின் ஆரம்பமே கோணலாகத் தொடங்குகிறது. மாநில சுயாட்சி, இந்தியைத் தமிழ் மக்கள் மீது திணித்தல் போன்றவைகளில் இந்திரா அரசு என்ன பதில்களைக் கூறி வந்ததோ அதையேதான் இன்றுள்ள மத்திய அரசும் கூறுகிறது. மாநில சுயாட்சி பெறுதல், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போன்ற

போராட்டங்கள் நமக்குக் காத்திருக்கின்றன. புலி வேட்டையை மறந்துவிட்டு, பன்றி வேட்டைக்கு யாரும் அனுமதி கேட்காதீர்கள் என்று நான் பேசியது ஏடுகளில் வந்திருக்கிறது.

இந்தக் கருத்து, கர்நாடகத்தில் தி.மு.க. - ஜனதா உடன்பாடு ஏற்படவில்லை என்ற காரணத்தால் தெரிவிக்கப்பட்டதாக ராமச்சந்திரன் கூறுகிறார். தன்னைப்போல பிறரையும் நினைக்கும் இயல்பு அவருக்கு!

தி.மு.க. - ஜனதா உறவு கர்நாடகத்தில் ஏற்படக்கூடும் என்ற சூழ்நிலை இருந்தபோதே ஜனவரி 16-ஆம் நாள் திருச்சியில் நிருபர்கள் கூட்டத்தில் நான் ஒரு கருத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டேன். கர்நாடக சட்டசபை கலைக்கப் பட்டது குறித்து நிருபர்கள் கேட்டார்கள். சட்டசபை கூடி அதன் முடிவு தெரிகிறவரையில் பொறுத்து இருந்திருக் கலாம் என்றுதான் மாநில உரிமையை விட்டுக் கொடுக்காமல் விடையளித்திருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; டிசம்பர் திங்கள் மூதறிஞர் ராஜாஜி நினைவுநாள் மயிலை மாங்கொல்லையில் ஜனதா கட்சித் துணைத்தலைவர் டாக்டர் சந்தோஷம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது என்ன பேசினேன் என்பது எம்.ஜி. ராமச்சந்திரனுக்குத் தெரியாது போலும்!

மிசா சட்டத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக அந்த இடத்தில் தடுப்புக்காவல் சட்டத்தைக் கொண்டு வர மத்திய அரசு முனைவதாகக் கேள்விப்படுகிறேன். அந்த யோசனையைத் தி.மு. கழகம் ஏற்றுக்கொள்ளாது என்று திட்டவட்டமாக அந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவித்திருக்கிறேன்.

இவற்றையெல்லாம் தெரிவிப்பது - தெளிவாக்குவது - நமது உரிமைகளை வலியுறுத்தத்தானே தவிர; மத்திய அரசோடு மோதவேண்டும் என்ற அரிப்பால் அல்ல என்பதையும் ஜனதாவை எதிர்க்கிறோம் என்ற நிலையில் அல்ல என்பதையும் எம்.ஜி. ராமச்சந்திரனால் அவ்வளவு சுலபமாகப் புரிந்து கொள்ள முடியாது. ஜனதா கட்சியுடன் தி.மு.க. வுக்கு எவ்வளவு கருத்து மாறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள் வந்தாலும்கூட, இந்தியாவில் ஜனநாயகத்தைக் காக்க நடைபெற்ற இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் அந்தக் கட்சிக்குரிய பங்கினை என்றைக்கும் தி.மு.க. மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறது

என்றும் இரண்டு நாட்களுக்கு முன்புகூட, கடிதத்தில் எழுதியிருக்கிறேன். உடன்பிறப்பே! நீ அதனைப் படித்திருப்பாய்! எம்.ஜி. ராமச்சந்திரனுக்கு அவற்றைப் படிக்க நேரமில்லாமல் இருந்திருக்கலாம். அவரிடமுள்ள செயலாளர்கள், செய்தித் துறை, பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகளாவது படித்து அவற்றை அவர்களது முதலமைச்சருக்கு எடுத்துச் சொல்லியிருக்க மாட்டார்களா? நானறிந்த மட்டில் அந்த அதிகாரிகள், எதையும் சுலபமாகப் புரிந்துகொண்டு தெளிவாக விளக்கிடும் ஆற்றல் பெற்றவர்கள் என்பதுதான் என் எண்ணம்.

இந்திரா காங்கிரசுடன் தி.மு.க. உறவோடு இருந்தபோதே மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தி அதற்கெனத் தனி மாநாடு நடத்தியதுதான் தி.மு. கழகமென்பதை எம்.ஜி. ராமச்சந்திரன் மறந்திருக்கக் கூடும்.

இவரைப்போல் மக்களும் மறந்து விடுவார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாது.

ஒரு மலையாளத் தாய்க்குப் பிறந்தவன் நான் என்று சட்டசபையில் சென்ற கூட்டத் தொடரில்தான் அவர், தன்னைப் பற்றிய வாக்குமூலத்தை வழங்கினார்!

இப்போது கருணாநிதி ஆந்திராவில் இருந்து வந்தவன் என்று தமிழரசுக் கழக ஆண்டு விழாவில் முழங்கியிருக்கிறார்.

அவர் கூற்று மெய்யானால் கருணாநிதி மட்டுமல்ல; அறிஞர் அண்ணாவும் ஆந்திராவில் இருந்து வந்தவராகத்தான் ஆகிறார்!

உடன்பிறப்பே! காலத்தின் கோலத்தைப் பார்த்தாயா? அண்ணாவும் நானும் பிறந்த குலம், ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த குலமாம்!

எம்.ஜி. ராமச்சந்திரன் தமிழ்க் குலமாம்!

என் செய்வது? உயரத்தில் உட்கார்ந்திருப்பதால் உளறுவாயர்கள் எல்லாம் உண்மை விளம்பிகள் என்று ஆகிவிடுகிறார்கள்! அந்த நிலைதான் இன்றைக்கு எம்.ஜி. ராமச்சந்திரனுக்கு!

அன்புள்ள,

மு. க.

(7-02-1978)

# 525. கடந்த கால நினைவுகள்!

**உடன்பிறப்பே,**

1974-ஆம் ஆண்டு தமிழகச் சட்டப்பேரவையிலும், மேலவையிலும் மாநில சுயாட்சி பற்றிய தீர்மானம் கழக அரசின் சார்பில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாநில சுயாட்சி பற்றியும், ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும், தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், ராஜமன்னார் குழுவின் அறிக்கையையும் இந்த அவை, ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு,

பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும்,

மாநில சுயாட்சி பற்றியும், ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும், தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று, மத்தியில் கூட்டாட்சி மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டுமென்று இந்த அவை முடிவு செய்கிறது.

இதுவே தீர்மானத்தின் முன்னுரையாக அமைந்திருந்தது. இந்தியாவிலேயே இப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றிய மாநில சட்டமன்றமாகத் தமிழகச் சட்டமன்றம் சிறப்பினைப் பெற்றது.

பெரியவர் ஒருவர் அண்மையில் பேசியதாகச் சில ஏடுகளில் செய்தி கண்டேன்.

நான் தமிழ் மாநிலம் (மொழிவாரி மாநிலம்) கேட்டுப் போராடி சிறைக்குப் போனதால் நீங்கள் பத்து ஆண்டு ஆட்சியில் அமர்ந்து

அனுபவிக்க முடிந்தது. இன்னும் நான் மாநில சுயாட்சி கேட்டுப் போராடிச் சிறை செல்லவேண்டும்; மீண்டும் நீங்கள் ஆட்சிக்கு வந்து அனுபவிக்க வேண்டுமா?

உடன்பிறப்பே! மொழிவாரி மாநிலம் என்றால் புரிகிறதா? அந்தந்த மாநிலத்தில் பெரும்பான்மையோர் பேசுகிற தாய்மொழி - மாநில ஆட்சிமொழியாகவும், அப்படிப் பேசுகிற மொழிக்குரியவர்கள், சிறுபான்மை மொழி பேசுகிற மக்களின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்காமலும், அதே நேரத்தில் பெரும்பான்மை மொழி பேசும் மக்கள் பிறமொழியாளர் ஆதிக்கத்திற்கு அடிமைப்படாமலும் - விளங்குகிற ஒரு தன்மை நிலைப்பெறத்தான் மொழிவாரி மாநிலங்கள் அமைய வேண்டுமென்ற கருத்தே மலர்ந்தது. மொழிவாரி மாநிலத்துக்கு இந்தச் சுருக்கமான விளக்கமே போதுமென்று கருதுகிறேன்.

நான் சிறைக்கு போனதால் நீங்கள் பத்தாண்டு ஆட்சியில் அமர்ந்து அனுபவிக்க முடிந்தது

அதாவது; மறைந்துவிட்ட அண்ணா அவர்களுக்கும் சேர்த்து இந்த அறைகூவல்!

நான் முதலமைச்சராக இருந்தது ஏழெட்டு ஆண்டுகள் தானே! அறிஞர் அண்ணா முதலமைச்சராக இரண்டு ஆண்டுகள் இருந்ததையும் சேர்த்தால்தானே - பத்து ஆண்டுகள் கணக்கு வரமுடியும்?

அதற்கு முன்பே பெருந்தலைவர் காமராசரும், பக்தவத்சலனாரும்கூட மொழிவாரி பிரிந்துவிட்ட தமிழ் மாநிலத்தை ஆட்சி செய்திருக்கிறார்கள். அந்தக் கணக்கை நமது பெரியவர் ஏன் விட்டுவிட்டார் என்று புரியவில்லை?

ஒருவேளை, இவர் சிறை சென்றதால் காமராசரும், பக்தவத்சலமும் ஆட்சிக்கு வரவில்லைபோலும்! அண்ணாவும் நானும் பத்தாண்டு ஆட்சி நடத்தியதாக அவர் கணக்கிட்டுச் சொல்வது மட்டுந்தான் அவரது சிறைவாசத்தின் பயன்போலும்!

எளியேன்; என்னோடு விட்டிருக்கலாம்! பாவம்; பத்தாண்டுக் கணக்கைச் சொல்லி அண்ணாவையும் இழுத்திருக்கத் தேவையில்லை. இன்னும் நான் மாநில சுயாட்சி கேட்டுப் போராடிச்

சிறை செல்லவேண்டும். மீண்டும் நீங்கள் ஆட்சிக்கு வந்து அனுபவிக்க வேண்டுமா?

பெரியவரின் அடுத்த கேள்வி இது! அழுத்தம் திருத்தமான கேள்விகூட!

பெரியவர் கோபித்துக்கொள்ளாமல்; 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் 27-ஆம் நாளன்று மேலவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தின் மீது அவரே பேசியதை அவரே ஒருமுறை நினைவுபடுத்திக்கொள்வது நல்லது. உடன்பிறப்பே! உனக்கும் அவருக்கும் சிரமமில்லாமல் நானே அந்த வாசகங்களை அப்படியே தருகிறேன்!

யாரோ சொன்னார்களாம்; என்னுடைய மாநில சுயாட்சிக் கொள்கையைக் கலைஞர் எடுத்துக் கொண்டார் என்று! ஆணவம் இல்லாமல் மட்டுமல்ல - அடக்கத்தால் மட்டுமல்ல - சத்தியமாகச் சொல்லுகிறேன்; இந்தத் தத்துவம் எனக்குச் சொந்தமல்ல. அகில உலகின் அரசியல் சரித்திரம் - சரித்திரம் இது! 1781-ல் அமெரிக்காவில் தோன்றிய சமஷ்டி சகாப்தம், பின்னால் விரிவடைந்து வருகிறது. நாடு நாடாகப் பவனி வருகிறது, அதற்காக ஒரு இயக்கத்தைத் துவக்கியவன் என்ற சிறப்பு எனக்கு இருக்கலாமே ஒழிய தத்துவமே எனக்கு ஏக போகமல்ல! கலைஞர் என் கையில் இல்லை. நான் கலைஞர் கையில் இருக்கிறேன். நான் கலைஞரை வேண்டுகிறேன். அவரது ஆட்சியை வேண்டுகிறேன். இந்தப் பிரச்சினையில் எப்படி வேண்டுமானாலும் என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எங்கோ கிடந்த எளியனாகிய என்னை அழைத்து வந்து செக்ரடேரியட்டில் ஒரு அறை எனக்குக் கொடுத்து (ரூம் கொடுத்து) என்னை இங்கு வைத்திருக்கிறீர்கள். உங்களை வேண்டுகிறேன். நான் இப்படி நெடுநாட்கள் அறைக்குள் அடைபட்டுக் கிடக்க விரும்பவில்லை. அந்த அறையை விட்டு இந்த மாநில சுயாட்சிக்காகவே சிறைபுக விரும்புகிறேன். அந்தச் சிறைச்சாலைகளில் திறந்து வையுங்கள் அறைகளை! இன்னொருமுறை இந்த ஏழைத்தொண்டன் நோயாளியாக உள்ள நிலையில் சிறையில் அடைபட்டு அங்கு உயிர் விடுவேனானால் என் அஸ்தியிலிருந்து தோன்றுகிற பல லட்சக்கணக்கான தமிழ் வீரர்கள் மாநில சுயாட்சி தேட என்னை விடப் பத்தொன்பது வயது குறைந்தவரான கலைஞர் அவர்களுக்கு உதவி செய்வார்கள்.

அவர் சுயாட்சித் தமிழகத்தின் குடியரசின் தலைவராகவும் வருகிற வாய்ப்பை அவருக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

இப்படிப் பேசினார் எனது பெருமதிப்புக்குரிய பெரியவர் அன்று! நான் இறுதியாகப் பதில் அளித்தபோது,

மாநில சுயாட்சிக்காகப் போராட வேண்டும். அதற்காக சிறைக்குச் செல்லவும் தயார் என்றார்கள். அப்படி ஒரு நிலைமை தவிர்க்க முடியாதது என்றால் நானும் அவருடன் சிறையில் இருப்பேன். அவரைத் தனியாக விடமாட்டேன்

என்று குறிப்பிட்டேன்.

உடன்பிறப்பே! கடந்த காலம் இது! அந்த நேசம் எவ்வளவு இனிமையாக இருந்தது பார்த்தாயா? இன்று எவ்வளவு பெரிய கசப்பு! பெரியவர் என்னைப் பார்த்து நீ, நான்! என்று ஆத்திரமாகப் பேசுகிற அளவுக்கு அவருக்கு ஏற்பட்டுவிட்ட கசப்பு! ஒன்றைச் சரியாகச் சொல்லியிருக்கிறார்;

உனக்கு வந்தது உன் வினையின் விளைவு

என்று! உடன்பிறப்பே! நீ கூட அப்படித்தானே சொல்லுகிறாய்; என்னைப்பார்த்து! பெருந்தலைவர் காமராசரும், பேரறிஞர் அண்ணாவும் மனிதர்களை எடைபோடுவதில் எவ்வளவு திறமையாளர்கள் என்பது இப்போதுதானே நமக்குப் புரிகிறது.

அன்புள்ள,

மு. க.

(8-02-1978)

# 526. உனக்குப் புரியும் என்பதால்!

உடன்பிறப்பே,

உண்மை விடுக்கும் அறைகூவல்கள் உறுதி வாய்ந்தவைகளாக இருக்கும். அவ்வாறே அது ஏற்றுக்கொள்ளும் அறைகூவல்களையும் சந்திக்க அது எப்போதும் தயாராக இருக்கும். வாய்மையின் அடித்தளத்தில் அமையும் கோபுரம் உண்மை என்பதால் அது எப்போதுமே கம்பீரமான தோற்றங்கொண்டு வரலாற்றுச் சின்னமாகத் திகழும். உண்மை, ஆணவமாகக் கத்தாது! ஆனால் ஆணவம் எதிர்ப்பட்டால் அதனை உருத்தெரியாமல் ஆக்கவும் தயங்காது! பின்வாங்காத துணிவும் வலிமையும் உறுதியும் உண்மையின் உடைமைகளாகும்!

பொய் இருக்கிறதே; அது வேற்று மொழிகளை வெடிக்கும்! அத்தனையும் வெத்து வெடிகளாக இருக்கும். தொடை தட்டி அறைகூவல் விடுக்கும். அதை ஏற்று ஒருவன் தோள் தட்டினால் தொடை நடுங்கிப் பதுங்கும். பலமுறை பட்டாலும் பொய்க்குப் புத்தி வருவதில்லை. பட படவென்று கிடைக்கும் சில கைதட்டல்களுக்காகப் பொய், பட்டாசுபோல வெடிக்கும். அருகில் சென்று பார்த்தால் கரித்துண்டுகள்தான் கிடக்கும். உண்மை, எதிர்ப்படும் வரையில் பொய் பொம்மலாட்டம் போடும்! உண்மை, ஆயுதபாணியாக எதிரே வந்து நின்று விட்டாலோ - பொய், தனது அறைகூவலை அறையின் கூவலாக ஆக்கிக்கொள்ளும். அம்பலத்தில் நடமாடும் கால்கள் பொய்க்குக் கிடையாது! நடமாடுவது போலத் தோன்றினாலும் அது கட்டைக்கால்களே! அதாவது போலிக்கால்களே! அறைகூவல் என்ற பெயரால் அறையில் கூவிடும் பொய் ஒரு நொண்டி!

தடித்த நாக்கு -

கொழுத்த சொற்கள் -

அலட்சியப் போக்கு -

அடாவடிப் பேச்சு -

இவை, பொய்யின் போர்க்கருவிகள்!

உண்மையின் எதிர் முழக்கத்திற்கிடையே இந்தக் கருவிகள் முனை முறிந்து தூள் தூளாக உடைந்துவிடும்!

உடன்பிறப்பே; அசட்டுத்தனமாக அறைகூவல்களை விடுத்து ஆப்பசைத்த பிராணி போல் அகப்பட்டுக்கொண்ட பொய்யின் வடிவங்களை இன்று சில அரசியல் மேடைகளில் காணமுடிகிறதல்லவா?

ஏ, அப்பா! என்ன வீரம்?

என்ன கித்தாப்பு? என்ன கர்ச்சனை?

அந்தப் பொய்யின் பேய்க் கூச்சலுக்கு முன்னால், உண்மை அமைதியாக நின்று ஒருமுறை அகல விழிகளைத் திறந்து பார்த்தாலே; பொய்யின் வீரமெல்லாம் பொந்துக்குள் போய் அடங்கி விடுகிறதே!

அதையும் இன்று நமது தமிழ்நாடு அனுபவ ரீதியாகக் காணுகிறது அல்லவா?

ஓங்காரக் கூச்சலிட்டு, வலுவில் வம்புக்கிழுத்து விட்டு; வா பார்க்கலாம் என்று கூறியதும் உண்மையைக் கண்டு ஓடுகிற பொய்யை சும்மா விட்டு விட முடியாது!

புறமுதுகிட்டு ஓடுபவனைத் தாக்குவது மரபல்ல எனினும்; இந்தப் பொய்யைப் பிடித்திழுத்து அதன் தலையில் கனக விசயர் தலையில் கல்லேற்றியது போல ஏற்றிக்கொணர்ந்து சேரன் செங்குட்டுவன் ஆற்றிய செயலை; உண்மையும் செய்து காட்டும் என்பதில் எள்ளளவு சந்தேகமும் யாருக்கும் இருக்கத் தேவையில்லை. அப்போதுதான் பொய்யின் வாய் நீளம் காட்டும் வழக்கம் நிற்கும்! அந்தப் பணி முடிக்கும் வரையில் உண்மைக்கு ஓய்வில்லை.

உடன்பிறப்பே! இதனைப் புரிந்துகொள்ளும் தெளிவும் திறனும் உனக்கு உண்டு என்பதால் இத்துடன் இந்தக் கடிதத்தை முடிக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(9-02-1978)

# 527. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்திட...

**உடன்பிறப்பே,**

சென்னையில் மக்களின் கல்வி - சமுதாய கலாச்சார சங்கம் நடத்திய நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் பாபு. ஜெகஜீவன்ராம் அவர்கள், தன் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த பலவற்றை மிகத் தெளிவாக வெளியிட்டிருக்கிறார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அவர் விடுத்துள்ள எச்சரிக்கை மிக மிகத்தேவையான ஒன்றாகும். இந்தியச் சமுதாயத்தின் முழுமையான விடுதலைக்கு பிராமணீயக் கருத்துக்களின் பிடிப்பைப் பலகீனப்படுத்தினால்தான் அந்த விடுதலை சாத்தியமாகும் என்று அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பதை எவரும் மறுத்திட இயலாது!

பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்தக் கருத்தை எடுத்து வைத்ததற்காக வகுப்புவாதிகள் என்று தாக்கப்பட்டார்கள்.

அந்தத் தாக்குதலை அவர்கள் பொருட்படுத்தாமல் தங்கள் இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்த காரணத்தினால்தான் பாபு ஜெகஜீவன்ராம் அவர்களே பாராட்டத்தக்க அளவுக்கு, தமிழ்நாட்டில் பிராமணீயக் கருத்துக்களுக்கு எதிரான வெற்றியை நமது இயக்கத்தால் பெற முடிந்திருக்கிறது.

இன்னமும் அந்த வகுப்பு ஆதிக்கம் அறவே பட்டுப் போய்விடவில்லையென்பதற்கு அடையாளமாகத்தான் ஜெகஜீவன்ராம் அவர்களின் பேச்சைக்கூட அத்தகைய ஏடுகள் தங்களால் முடிந்த வரையில் இருட்டடிப்புச் செய்துள்ளன. பிரச்சினை, கொள்கைகளைக் கோட்பாடுகளை பொறுத்துத்தானே தவிர, தனிப்பட்டவர்களைப் பொறுத்து அல்ல!

தனிப்பட்ட முறையில் பிராமண நண்பர்கள் சிலர் திராவிடர் இயக்கக் கருத்துக்களை ஒத்துக்கொண்டவர்களாகவும் திகழ்கிறார்கள்.

இன்னும் கூறப்போனால் பார்ப்பனரல்லாத இயக்கத்தால் பயனடைந்த தமிழர்கள் சிலர் காட்டுகின்ற நன்றி உணர்வை விட, பார்ப்பன நண்பர்கள் சிலர் காட்டுகின்ற நன்றி உணர்வு மெச்சத் தகுந்த வகையிலேகூட இருக்கிறது.

இதனை நான் அனுபவ வாயிலாகக் கூறுகிறேன். அதற்குத் தனிப்பட்ட முறையில் பல உதாரணங்களைக் கூட கூறமுடியும்!

ஆனால் பிரச்சினை; தனிப்பட்டவர்களைப் பற்றியல்ல! மொத்த சமுதாயத்தின் முழுமையான விடுதலையைப் பற்றியதாகும்!

என்னதான் அந்நியனிடமிருந்தும் - அதற்கடுத்து சர்வாதிகாரிகளிடமிருந்தும் - நாடு விடுதலை பெற்று விட்டாலுங் கூட சமுதாய மக்களின் நியாயமான உரிமைகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மறுக்கப்படும் வரையில் முழுமையான விடுதலையைப் பெற்றவர்கள் என்ற மனநிறைவை அடைய முடியாது!

அதைத்தான் பாபு ஜெகஜீவன்ராமின் பேச்சு, சுட்டிக் காட்டுகிறது.

ஒதுக்கீடுமுறை எனப்படும் விகிதாச்சார முறையின் பின்னணியில் உள்ள தத்துவத்தை எடுத்துக் காட்டி, தாழ்த்தப்பட்டோரும் பிற்படுத்தப்பட்டோரும் உயர்நிலைக்கு வரும் வரையில் இப்போது அவர்களுக்கென வழங்கப்படும் சலுகைகள் நீடிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் (கம்யூனல் ஜி.ஓ.) பல கண்டங்களுக்குத் தப்பிப் பிழைத்து இன்றளவும் வாழ்ந்து வருகிறது.

தமிழகத்தில் இன்றுள்ள ஆளுங்கட்சியினர் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்திற்கு எதிர்ப்பாளர்கள் என்பதைப் பலமுறை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் என்றாலும், தி.மு. கழகமும், திராவிடர் கழகமும் அந்தக் கருத்தினைத் தடுத்து நிறுத்த உடனடியாகத் தயக்கமின்றிச் செயல்பட்டதால் தற்போதைக்கு

அவர்கள் கம்யூனல் ஜி.ஓ. எதிர்ப்புக் கொள்கையை ???? வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த ரகசியம் தெரிந்துள்ள காரணத்தால்தான் ஆதிக்கவாதிகளின் ஏடுகளில், இன்றைய அரசின் இமாலயத் தவறுகள் மறைக்கப்பட்டு இந்திரன், சந்திரன் என்றெல்லாம் புகழாரங்கள் சூட்டப்படுகின்றன.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலனில் அக்கறை கொண்டிருந்த கழக அரசு, தாழ்த்தப்பட்டோருக்கு 16 சதவிகிதம் என்றிருந்ததை 18 என்று உயர்த்தியும் - பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகிதம் என்றிருந்ததை 31 சதவிகிதம் என்று உயர்த்தியும் அவர்கட்கு கல்வி நிலையங்களில் சேருவதில், உத்தியோகம் வழங்குவதில் பெரும் சலுகை வழங்கியது.

இவைகளையன்னியில் பொதுத் தொகுப்பிலும் அவர்கள் அதிகமாக இடம் பெறுகிற அளவுக்கு வாய்ப்புக்கள் அமைக்கப்பட்டன.

தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் தேர்வுகளில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்கள் எந்த அளவுக்குப் பெரும்பான்மையாக இடம் பெற்றார்கள் என்பதை 1967 முதல் 1975 முடிய உள்ள விபரங்களைப் புரட்டிப் பார்த்தால் புரிந்துகொள்ள முடியும்.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோரில் வட பகுதி பகுதியாகச் சிலர் உயர்நிலைக்கு வந்துவிட்டால் போதாது! மொத்த சமுதாயமும் சம அந்தஸ்து பெற்று எல்லா உரிமைகளும் பெற்று விளங்கிடவேண்டும்!

நாடார் சமுதாயம் பொருளாதாரத் துறையில் முன்னேறி யிருப்பதை பாபு அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அதிலேகூட குறிப்பிட்ட எண்ணிக்கையினர்தான் தொழில் அதிபர்களாக, வணிகர்களாக இருக்கிறார்களே தவிர, பெரும்பான்மையோர் வறுமை நிலையில்தான் வாடிக் கொண்டு கிராமப்புறங்களில் உழன்று கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாகத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட - அல்லது பிராமணரல்லாத சமுதாயத்தில் சிலபேர் உயர் பதவிகளில் இருப்பதையோ, பொருளாதார ஏற்றம் பெற்றிருப்பதையோ, எண்ணி மகிழ்ந்திடாமல் - மிகப் பெரும்பான்மையோர் சமுதாயத்

தட்டிலும், பொருளாதார நிலையிலும் எங்கேயோ ஒரு மூலையில் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

அநீதிகள் இழைக்கப்பட்டால் கிளர்ச்சிகள், சத்தியாக்கிரகங்கள் நடக்கட்டும். அநீதியைப் போராடித்தான் வெல்ல வேண்டும்.

என்கின்ற அளவுக்கு ஜெகஜீவன்ராம் அவர்களின் ஒலித்துள்ள போர் முரசை, நமது கழகம் உணர்ச்சிப் பெருக்குடன் வரவேற்கிறது!

ஜெகஜீவன்ராம் அவர்களின் இந்தக் கருத்தினை நாம் வரவேற்பதும் ஆதரிப்பதும் புதிதல்ல! ஏனெனில் இந்தக் கருத்துக்களை பல்லாண்டு காலமாக எடுத்துச் சொல்லி வருகிற ஒரு இயக்கத்தின் இலட்சியவாதிகள் நாம்! அதற்காக ஏற்றுக்கொண்ட - இன்றளவும் ஏற்றுக் கொண்டிருக்கிற இன்னல்கள் ஏராளம்!

தொடர்ந்து அந்த இன்னல்களும் எதிர்ப்புக்களும் அடுக்கடுக்காக வரினும் அமைப்பதில் நாம் என்றைக்கும் பின்னடையப் போவதில்லை.

அன்புள்ள,

மு. க.

(10-02-1978)

# 528. மாங்கொல்லையில் கிடைத்த மாங்கனி!

**உடன்பிறப்பே,**

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் பெரும் பான்மையினராக உள்ள சமுதாய விடுதலை குறித்துச் சென்னையில் முழக்கமிட்ட பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள், அன்றிரவே மயிலாப்பூர் மாங்கொல்லைப் பொதுக்கூட்டத்தில் இந்திரா காந்தியின் சாதிவெறிச் செயல்களுக்கான சான்றுகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அதே வட்டத்தில் இந்திரா காந்தியை நோக்கி ஒரு அறைகூவலையும் விடுத்திருக்கிறார்.

கோயில்களில் அர்ச்சகர்களாக பிராமணரல்லாத பிற சமூகத்தினரும் பணிபுரியலாம் என்ற சட்டத்தைத் தங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் கொண்டு வரும் என்று ஒரு உறுதிமொழியை இந்திரா காந்தி கொடுப்பாரா?

இதுதான் ஜெகஜீவன்ராம் அவர்கள் விடுத்துள்ள அறைகூவல்.

ஒரு அரிஜனச் சகோதரர் கலெக்டராக ஆகிவிடலாம்! காவல் துறைத் தலைமை அதிகாரியாக ஆகிவிடலாம்! நூறாண்டு காலத்தில் சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதியாகக்கூட ஒரு அரிஜனப் பெருமகன் கழக ஆட்சிக் காலத்தில் அமர முடிந்தது! ஆனால் ஆலயத்தில் ஆண்டவனை அர்ச்சனை செய்கிற அந்தப் பணிபுரியும் உரிமை, சமுதாய ரீதியாக - சாஸ்திர ரீதியாக, சம்பிரதாய ரீதியாக மறுக்கப்பட்டு வருகிறது. பிராமணரல்லாத மற்ற சமூகத்தினர் குறிப்பாக அரிஜன சமூகத்தினர் அர்ச்சகர் என்னும் அந்தப் பெரும் பதவிக்குச் சென்று ஏராளமான மாத ஊதியம் பெறவேண்டுமென்ற ஆசையிலோ - அல்லது பெறலாம் என்ற

எண்ணத்திலோ, இந்தப் பிரச்சினை எழுப்பப்படவில்லை! இது உரிமைக்கப்பாற்பட்ட ஒரு உணர்வுப் பிரச்சினை! சுயமரியாதைப் பிரச்சினை!

எனவேதான் பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள், மாங்கொல்லைப் பொதுக்கூட்டத்தில், பிராமணரல்லாத பிற சமூகத்தினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வருவோம் என்று இந்திரா காந்தியால் உறுதி அளிக்க முடியுமா? என்று கேள்விக்கணை பூட்டியிருக்கிறார்.

உடன்பிறப்பே, நமது கழக அரசு 1972-ஆம் ஆண்டு, தமிழகச் சட்டமன்றத்தில் அப்படி ஒரு சட்டத்தையே கொண்டு வந்தது.

அர்ச்சனை செய்வதற்குப் பயிற்சிபெற்று அந்தப் பயிற்சியில் தேர்வுபெற்ற எந்த வகுப்பினராக இருந்தாலும் அவர்கள் கோயில்களில் அர்ச்சகராகத் தகுதி பெற்றவர்களாகிறார்கள் என்ற கருத்தமைந்த சட்டமாகும் அது!

சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு இறுதியில் அந்தச் சட்டம் நிறைவேறியது, அதன்படி, பிராமணர்களும் அர்ச்சகர்களாக வரலாம்; அவர்கள் அல்லாத அரிஜனங்கள் உள்ளிட்ட அனைத்து வகுப்பாரும் அர்ச்சகராக வருவதற்கான உரிமையைப் பெறுகிறார்கள்.

உடனே கொதித்தெழுந்த சில சனாதனிகள், கழக அரசு கொண்டுவந்த சட்டத்தை எதிர்த்து உச்சநீதி மன்றம் வரையில் சென்றார்கள். அங்கு ஆகமங்களைக் காட்டி அளிக்கப்பட்ட தீர்ப்பின் விளைவாக, கழக அரசு கொண்டு வந்த அந்த சம உரிமை சட்டம் முடக்கப்பட்டு விட்டது.

அந்தச் சட்டத்தை இயக்க வைக்க வேண்டுமானால் அரசியல் சட்டத்தில் தேவையான திருத்தம் செய்தாக வேண்டும் என்ற நிலை பிறந்தது.

அரசியல் சட்டத்தை அதற்கேற்ப திருத்தி, மனித உரிமையைக் காக்குமாறு கழக அரசின் சார்பில் அன்றைக்கிருந்த இந்திரா அரசுக்கு எத்தனையோ வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. பாபு ஜெகஜீவன்ராம் உட்பட மத்திய அமைச்சர்கள் பலரையும் நேரில் சந்தித்து அர்ச்சகர்கள் சட்டத்தை இயக்குவதற்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதைப் பலமுறையும் தமிழக அரசின்

சார்பில் நானும் மற்ற அமைச்சர்களும் வலியுறுத்தியிருக்கிறோம். ஆனால் இந்திரா காந்தி அரசியல் அமைப்புச் சட்டத்தில் எத்தனையோ திருத்தங்களை அவரது வசதிக்காகச் செய்திட முன்வந்தாரே தவிர, கழக அரசு நிறைவேற்றிய மனித உரிமைச் சட்டம் உயிர்ப்பெற்றிடும் வகையில் அரசியல் சட்டத்தில் கைவைத்திடத் தயாராக இல்லை.

அந்த நிலை கண்டு குமுறிக் கிளம்பிய பெரியார் அவர்கள், அர்ச்சகர் சட்டத்திற்குத் தேவையான அளவுக்கு அரசியல் சட்டத் திருத்தம் செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்தி அதனை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் போராட்டத்திற்கான திட்டங்களை வகுத்தார்.

பாசறை அமைத்துக் கொண்டிருந்த போதே, பெரியார் அவர்கள் மறைந்து விட்டார்.

நண்பர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் நடத்திய பெரியார் சிலை திறப்பு விழாவிலே கூட அன்னை மணியம்மையார் அவர்கள், அந்த அர்ச்சகர் சட்டம் மீண்டும் இயங்க வேண்டுமென்பதில் எவ்வளவு ஆர்வமும் துடிப்பும் கொண்டிருந்தார் பெரியார் என்று குறிப்பிட்டு, அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசியல் சட்டத் திருத்தம் தேவை என்று சுட்டிக் காட்டி வேண்டுகோள் விடுத்தார். சிலை திறப்பு விழாவுக்கு பாபு ஜெகஜீவன்ராம் அவர்களும் வந்திருந்தார்.

கோயிலுக்கே போகாத பெரியார் அர்ச்சகர், யார் இருக்க வேண்டுமென்பதில் கவலைப்பட்டாரா? என்று ஒரு கேள்வியைக் கேட்டு, அதே மேடையில் முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் அந்த உரிமைப் பிரச்சினையைக் கேலிக்குரியதாக ஆக்கினார்!

கோயிலைப் பற்றி பெரியார் கூறிய கருத்து கொள்கைக்கப்பாற்பட்டது என்றும், அங்கு எல்லா வகுப்பு மக்களுக்கும் அர்ச்சகராகும் தகுதியும் உரிமையும் வழங்கப்பட வேண்டுமென்பது மனித உரிமையின்பாற்பட்ட பிரச்சினையென்றும் நாம் விளக்கமளித்திருக்கிறோம்.

அதே விளக்கத்தைக் கூறித்தான் அப்போது பெரியார், அர்ச்சகர் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர போர்க்கொடி உயர்த்தினார்.

இதுவரை வெற்றி கிட்டவில்லை. கழக அரசு நிறைவேற்றிய அந்தச் சட்டம் முடக்கப்பட்டுக் கிடக்கிறது. மாங்கொல்லையில் திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் ஆற்றிய எழுச்சிமிகு உரையைத் தமிழக அரசினர் பயன்படுத்திக் கொண்டு, மத்திய அரசுக்கு நினைவூட்டி, ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள அர்ச்சகர் சட்டம் அமலுக்கு வரும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்திட வழி காண வேண்டும்.

ஜெகஜீவன்ராமின் உரையை, மயிலை மாங்கொல்லையில் கிடைத்த மாங்கனியெனக் கொண்டு - மனித உரிமைச் சுவையை அனைவரும் சமமாக அனுபவிக்க உடனடிப் பணியை மேற்கொள்ள வேண்டும். மத்திய, மாநில அரசுகள் இதில் தயக்கம் காட்டுதல் கூடாது!

அன்புள்ள,

மு. க.

(11-02-1978)

# 529. "அமைப்பும் - அணிவகுப்பும்! "

**உடன்பிறப்பே,**

நாள்தோறும் முரசொலி வாயிலாக மட்டுமல்ல; வாரந்தோறும் நம் நாடு வாயிலாகவும் கடிதங்கள் நம்மைத் தொடர்புப்படுத்தும் என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உனக்கு நான் எழுதும் கடிதத்தின் ஒவ்வொரு சொல்லிலும்; ஏன், ஒவ்வொரு எழுத்திலும் உன் பாசம் பொழிந்திடும் விழிகளைப் பார்க்கிறேன்; பரிவு காட்டும் உன் முகத்தைப் பார்க்கிறேன்; அன்பு வழியும் உன் இதயத்தைப் பார்க்கிறேன். அதனால்தான் மாற்றார் தொடுக்கும் அக்கினியாஸ்திரங்கள் அனைத்தும் உன் வாஞ்சையென்னும் வர்ணாஸ்திரத்தின் முன்னே நனைந்து வீழ்ந்து விடுவதை நாடு காண்கிறது!

அழைத்தேன் அண்ணா சிலை திறப்பு விழாவுக்கு உன்னை! கடன் வாங்கிக் கொண்டாவது வந்து சேர்ந்திடுக என எழுதினேன். சிட்டெனப் பறந்து வந்தாய். வந்து விட்டேன் பார்த்தாயா? என்று - அன்று காலையிலேயே வீட்டு வாசலில் வந்து நின்றாய்! உனைக் கண்ட எனக்கும், எனைக் கண்ட உனக்கும் ஏன்தான் அப்படிக் கண்களில் நீர் ததும்பியதோ தெரியவில்லை! ஏன் தெரியவில்லை - அது கண்ணீரல்ல; அதுதான் அய்யாவும் அண்ணாவும் நீண்ட நெடுங்காலமாகக் கட்டிக் காத்து நம்மிடம் விட்டுச் சென்றிருக்கிற குடும்ப பாசம்!

உடன்பிறப்பே, பிப்ரவரி மூன்றாம் நாள் - அண்ணனாக வந்து, தம்பி என்றாய்! தம்பியாக வந்து அண்ணனே! என்றாய்! அக்காள் தங்கைகளாக வந்து அருமைச் சகோதரனே என்றாய்! உன்னையும் என்னையும் பெறாமல் பெற்ற தாயாக, தந்தையாக வந்து முதியோர் பலர் தழுதழுத்த குரலில் வாழ்த்தியதையும் நீயும் நானும் கண்டோம்!

அடடா! அன்று நீ அண்ணா சதுக்கத்திலிருந்து வள்ளுவர் கோட்டம் வரையில் நடத்திக் காட்டிய அணிவகுப்பு இருக்கிறதே; அணிவகுப்பா அது?

ஒரு தாய் வயிறு தாங்காது என்ற காரணத்தால் தனித் தனித் தாய்களின் வயிற்றில் உதித்துப் பிறந்த உடன்பிறப்புகள் நாம் என்று அன்றொரு நாள் அண்ணா அறிவித்தாரே; அந்த உடன்பிறப்புகளின் சங்கமம் அல்லவா அது?

அண்ணா சதுக்கம் நிரம்பி வழிந்து, அண்ணா சாலையில் பெருகியோடி, அண்ணா மேம்பாலத்தையும் கடந்து விரிந்து, வள்ளுவர் கோட்டத்து அண்ணா சிலை வரையில் சென்றடைந்த அலைகடலின் தோற்றத்தை அணிவகுப்பு என்ற வார்த்தைக்குள் அடக்கிவிட இயலுமா?

ஒருவர் கையில் இரு வண்ணக்கொடி! இன்னொருவர் கையில் இலட்சியவேந்தன் அண்ணாவின் திருஉருவப்படம்! இப்படியே பல லட்சம் பேரும் பதாகை ஏந்தியும், அண்ணனின் படம் ஏந்தியும், பட்டொளி வீசிப் பறக்கும் கழகக் கொடி ஏந்தியும் ஏறு நடை போட்ட காட்சிதனைக் கவிதையாக்கித்தர மீண்டும் ஒரு பாரதிதாசன்தான் பிறந்து வரவேண்டும்! அந்த மாட்சியினைக் கட்டுரையாய் வடித்துத் தர, மறைந்துவிட்ட அண்ணல்தான் எழுந்து வரவேண்டும்!

அத்துணை எழுச்சி! அத்துணைக் கட்டுப்பாடு! அத்துணை உணர்வு!

ஆறெனப் பெருகி வந்தோம்; ஆறு ஆறு பேராக அல்ல! ஆறென வந்தாலும் இருமருங்கும் கரைகொண்ட ஆறாகவே அணிவகுத்தோம்!

இந்தக் கட்டுப்பாட்டை கற்றுத்தந்தவருக்கல்லவா அன்றைக்குச் சிலையெடுத்து விழா நடத்தினோம்!

நமது கழகத்தில் அணிவகுப்புகள் மட்டுமல்ல; அமைப்பு முறையே - தமிழ்நாட்டில் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் இல்லாத அருமையான முறை ஆயிற்றே! எத்தனையோ கட்சிகளுக்குச் சட்டதிட்டப் புத்தகங்களே கிடையாது! அந்தக் கட்சிகளின் உறுப்பினர்களுக்குத் தங்கள் நிர்வாக அமைப்புகளுக்கு யாரையும் தேர்ந்தெடுக்கும் வேலை கிடையாது! அதாவது உரிமை கிடையாது! நமது கழகமொன்றுதான் கொள்கை கோட்பாடுகளடங்கிய சட்டதிட்டத்தைப் பொதுக் குழுவில் நிறைவேற்றி, அதன் அடிப்படையில் முறைப்படி குறித்த

காலங்களில் கழக அமைப்புகளுக்கு கிளையிலேயிருந்து தலைமை அமைப்பு வரையிலே தேர்தலை நடத்தி அவ்வப்போது ஜனநாயக நெறிப்படி நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு இயங்குவதாகும். இந்த மடலுடன், அண்ணா சிலை திறப்பு விழா அணிவகுப்புப் புகைப்படம் மட்டுமன்றி, மற்றொரு படத்தையும் இணைத்திருக்கிறேன் பார்!

அது என்ன படம் தெரிகிறதா? நாடாளுமன்றத் தேர்தல் அல்லது சட்டமன்றத் தேர்தல்களில் வாக்களிக்கும்போது கியூ வரிசையில் வாக்காளர்கள் நிற்பார்களே; அதுபோல் நிற்கிறார்கள் அல்லவா?

யார் அவர்கள்? புரிகிறதா? நமது உடன்பிறப்புகள்தான்! திருச்சி கிளையின் 11-வது வட்டக் கிளை நிர்வாகிகள் தேர்தலுக்கு வாக்களிப்பதற்காக நிற்கிறார்கள்! வரிசையில் நிற்பவர்கள் பொது உறுப்பினர்கள் தேர்தல் ஆணையாளர் நண்பர் நாகசுந்தரம்! மேஜை மீது இருப்பது வாக்களிக்கும் பெட்டி!

இதுபோன்ற கழகக் கிளை தேர்தலின் காட்சி திருச்சியில் மட்டுமல்ல; தமிழகம் முழுவதிலும் பல்லாயிரக்கணக்கான கிளைக் கழகத் தேர்தல்களில் காணக் கூடியது! எல்லாப் படங்களையும் வெளியிட இயலவில்லை. இடமும் இல்லை, முதலில் கிடைத்த படத்தை மட்டுமே இந்தக் கடிதத்துடன் வெளியிட்டிருக்கிறேன்.

இப்படியொரு அமைப்பு முறையுள்ள இயக்கத்தை - அய்யாவும், அண்ணாவும் தந்த கொள்கைகளை உறுதியாகக் கடைப்பிடிக்கும் இயக்கத்தை - வலுவான அடித்தளத்துடன் கட்டப்பட்ட கருங்கல் மாளிகையை - வீழ்த்தி விடலாமென எண்ணிடுவோர் சித்தம் தடுமாறியோராக அல்லது பித்தர்களாகத்தானே இருக்கவேண்டும்!

தேர்தல் சூறைக் காற்றில் வீட்டுக்கு மேலேயுள்ள ஓடுகள் விழுந்து நொறுங்கி விடலாம்!

வீடு இருக்கிறது - மீண்டும் ஓடு மாற்றிக்கொள்ள முடியும் என்ற தைரியம் இருப்பதற்குக் காரணமே; உடன்பிறப்பே - நீ நடத்திக் காட்டிய அணிவகுப்பும் - அதற்கு அஸ்திவாரமாக உள்ள கழக அமைப்பும்தான்!

**அன்புள்ள,**

**மு. க.**

(12-02-1978)

**நன்றி : நம் நாடு (12-2-1978)**

# 530. பாடி வீடுகள்!

*(1974-ம் ஆண்டு கழக அமைப்புத் தேர்தல்கள் துவங்கும் முன் 1-1-74 அன்று முரசொலியில் வெளிவந்த கலைஞர் கடிதம், தற்போது நடைபெறும் கழக அமைப்புகளின் தேர்தலை யொட்டி மீண்டும் வெளியிடப்படுகிறது.)*

**உடன்பிறப்பே,**

வரும் ஜனவரி ஐந்து, ஆறு நாட்கள் சனி, ஞாயிறு ஆகிய இரு கிழமைகளில் நமது கழகத்தின் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட கிளை அமைப்புகளின் தேர்தல் நடைபெற இருக்கிறது. பத்து லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள், இருபதாயிரம் கிளைக் கழகச் செயலாளர்களையும் ஏனைய கிளை நிர்வாகிகளையும் தேர்ந்தெடுக்கப் போகும் நமது அடித்தள அமைப்புகள் உருவான பிறகு அதன் மேல்மட்டங்களின் தேர்தல் படிப்படியாக நடைபெறத் தொடங்கி விடும்.

அண்ணா அவர்கள் 1949-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் நமது கழகத்தைத் தொடங்கியதையொட்டி மிக விரைவாகவே கழகத்தின் ஜனநாயக அமைப்புகள் செயல்படத் துவங்கி விட்டன. ஏற்கனவே ஏற்றுக் கொண்டிருந்த இலட்சியங்களுக்கான வடிவம் அமைக்கப்பட்டது. கொள்கை, கோட்பாடுகளைப் பிரகடனம் செய்தோம். கழக உறுப்பினர்கள், அமைப்புகள், நிர்வாகிகள் அனைத்துக்குமான கழகச் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டன. கழகம் தோன்றிய காலத்திலிருந்து கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டினை, நாம் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தக் காலம் வரையில் அண்ணா வடித்தளித்த ஜனநாயக நெறி தவறாமல் கழகத்தின் கட்டுப்பாடு காக்கும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடைபோட்டு வருகிறோம்.

கழகக் கட்டுப்பாட்டை உடைத்தவர்களை - அவர்களில் முன்னணி வரிசை, தொண்டர் வரிசை என்ற வேறுபாடு பார்க்காமல்

கண்டித்தும், தண்டித்தும் நீங்காப் புகழ் எய்தியுள்ளது நமது கழகத்தின் வரலாறு.

தூக்கி எறியப்பட்ட துரோகிகள், துண்டிக்கப்பட்ட பல்லியின் வாலைப் போல் துடித்துக் காட்டியிருக்கிறார்களே தவிர, கழகத்தின் சட்ட திட்டங்களுக்கு அறைகூவல் விடத்தக்க அளவுக்கு நியாய நெஞ்சம் பெற்றவர்களாகத் திகழவில்லை.

தன்னால், கழகத்துக்கு என்ன லாபம் என்று கருதுகிறவன் கழகத்தின் ரத்த நாளமாவான், கழகத்தினால் தனக்கு என்ன லாபம் என்று கணக்குப் போடுகிறவன் கழகத்துக்கு ஏற்பட்ட வலிப்பு நோய் ஆவான்.

இந்த உண்மை உணர்ந்து உழைத்தால் ஓராயிரம் வெற்றிகளைக் குவித்திடலாம். அந்த உழைப்புக்கேற்ற பயிற்சிப் பாசறைகளாகத்தான் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அவைகளின் நிர்வாகிகள் தேர்தலில் எங்கும் கடுமையான போட்டியைக் காண்கிறேன் நான்! செயலாற்றும் பொறுப்புக்கு நான், நீ என்று ஒருவரையொருவர் முந்துவதும், போட்டி போடுவதும் கழகத்தின் வளர்ச்சியைத்தான் காட்டுகிறது.

ஓட்டுப் போடும் உறுப்பினரும், கழகக் கோட்டைக் காவலராய்த் தேர்வு பெறும் நிர்வாகியும், வேறு யாருமல்ல! உன்னைப்போல் உடன்பிறப்புகள்தான். அனைவரையும் சுமப்பதற்கு அன்னை வயிறு தாங்காத காரணத்தால், தனித்தனித் தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் நாம் என்று அண்ணா கூறியதை மறந்துவிடாதே!

ஆசைப்பட்டவர், அல்லது நீ நினைத்தவர் - ஒரு பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படாத நிலை ஏற்பட்டால், வெற்றிபெற்ற தோழரை விரோதியாகக் கருதாமல் அவருடன் இணைந்து கழக வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் பெருந்தன்மையும், கட்சிப் பற்றினையும் நீ பெற்றிருத்தல் வேண்டும்.

அன்பே! உன்னிடம் பகைமை விதைகளைத் தூவி கலகத்தை மூட்டி விட்டுக் கழகத்தைப் பிளவுபடுத்துவதற்கு எல்லா தரப்பிலிருந்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

எச்சரிக்கை! அண்ணன் தன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றுவதோடு, உழைப்பு - ஒற்றுமை - இரண்டின் பொருளும் அறிந்து செயலாற்றுக நீ சிங்கமென!

நீர் அடித்து நீர் விலகாது எனும் முதுமொழியை இதயத்தில் பதிய வைத்துக் கொள்க!

வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் வீரன் நீ என்பதை நாடறியும்.

சுழன்றடிக்கும் சூறைக் காற்றுக்கு இடையிலேயும் கழகம் என்கிற கைவிளக்கு அணைந்து போகாமல் காப்பாற்றும் திறன் படைத்தவன் நீ என்பதைப் பலமுறை உலகத்திற்கு அறிவித்திருக்கிறாய். அந்தத் திறமையை எனக்கும் உனக்கும் நமது முன்னணித் தலைவர்களுக்கும் அளித்தவர் நமது ஆருயிர் அண்ணனல்லவா? அந்த அண்ணன் கண்ட கொடியைக் காத்திட இருபதாயிரம் பாடி வீடுகளை அமைத்து பத்து லட்சத்துக்கு மேற்பட்ட சிப்பாய்கள் பணிபுரியப் போகிறோம். நமக்கு அஞ்சாநெஞ்சம் தருவதற்கு அய்யாவும், அன்பு வழி காட்டுவதற்கு அண்ணாவும் இருக்கும்போது கவலை எதற்காக?

அன்புள்ள,

மு. க.

(12-02-1978)

# 531. கவர்னர் உரை - ஏன் இல்லை?

**உடன்பிறப்பே,**

இந்த ஆண்டு தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை, ஆளுநர் உரையில்லாமலே சட்டப்பேரவையில் வைக்கப்படப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையும் அவையில் வைத்து விவாதிக்கப்படுதற்கு முன்னர் ஆளுநர் உரை நிகழ்த்துவதும் அந்த உரையின் மீது ஐந்தாறு நாட்கள் பொது விவாதம் நடத்துவதும் தொடர்ந்து இருந்து வருகிற முறையாகும். இந்த ஆண்டு திடீரென கவர்னர் உரையின்றியே வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுமென்று அரசாங்கம் அறிவித்துவிட்டது. சட்டப்பேரவை கூட்டத்தின் தொடரை கவர்னர் முடித்துவைக்காத காரணத்தால் கவர்னர் உரையில்லை என்று ஒரு போலி விவாதமும் எழுப்பப்படுகிறது.

கூட்டத்தொடரை முடித்து வைப்பதற்கு ஆங்கிலத்தில் Prorogue செய்வது என்று குறிப்பிடுவார்கள். Prorogue என்றால் கூடி discontinue the meetings of-for a time without dissolving என்று பொருள்.

அப்படிக் கூட்டத் தொடர் முடித்து வைக்கப்படுகிறது என்று ஆளுநர் அறிவித்தால்தான் சட்டப் பேரவையின் அடுத்த கூட்டம் கூட்டப்படுவதற்கு இடையில் அரசின் அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்க முடியும். கடந்த ஆண்டு அவ்வாறு ஆளுநர் கூட்டத் தொடர்களை முடித்து அறிவித்திருக்கிறார். அதன் பிறகு அவசரச் சட்டங்களும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கூட்டத் தொடரை ஆளுநர் முடித்து வைப்பது (Prorogue) என்பது எவ்வாறு நடத்தப்படுகிறது? அரசாங்கம் கூட்டத் தொடரை முடித்து வைப்பதற்கான ஒப்புதல் கேட்டு, ஆளுநருக்கு கோப்பு அனுப்பும். ஆளுநர் அதில் கையெழுத்திட்டு கூட்டத்தொடர் முடித்து வைக்கப்பட்டதாக அறிவிப்பார்.

சென்ற கூட்டத் தொடர் முடித்து வைக்கப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. காரணம் அப்படியொரு முடிவினை அரசு எடுத்து ஆளுநருக்குக் கோப்பு அனுப்பவில்லை. எனவே சட்டசபைக் கூட்டம் Prorogue செய்யப்படவில்லை. முடித்து வைக்கப்படவில்லை.

கவர்னர் உரையை நிகழ்த்திவிட்டு அதன்பிறகு நிதிநிலை அறிக்கையை வைக்க வேண்டுமென்று அரசு விரும்பியிருந்தால் கூட்டத் தொடரை முடித்து வைப்பது சம்பந்தமான கோப்பினை கவர்னருக்கு அனுப்பியிருக்கும்.

கவர்னர் உரையை தவிர்ப்பது என்று முடிவு கட்டிக் கொண்டு, அதற்கு முன்ஏற்பாடாக சட்டசபைக் கூட்டத் தொடரை முடித்து வைக்காமலே சபாநாயகரைக் கொண்டே பிப்ரவரி 20-ந் தேதி வட்டத்திற்கான அறிவிப்புக்கு வழி வகுக்கப்பட்டிருக்கிறது.

கவர்னர் பதவியைப் பொறுத்து தி.மு. கழகத்திற்குக் கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆனால் அந்தப் பதவியொன்று இருக்கும் வரையில் அதற்குரிய முறையான பணிகளை ஆற்றுவதற்கு என அமைந்துள்ள மரபுகளை அரசு மாற்றுவது என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல!

கடந்த காலத்தில் இப்படி கவர்னர் உரை நடைபெறாமல், சட்டசபைக் கூட்டம் நடந்ததற்கு முன்மாதிரி இருப்பதாகத் தேடிப்பிடித்துச் சொல்கிறார்கள். பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஓரிருமுறை நடந்ததாம்!

முன்மாதிரி என்றால் என்ன? எதை முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும்? இது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

தவிர்க்க முடியாமல் நடந்துவிட்டவைகளோ, அல்லது எப்படியோ தவறாக நடந்து விட்டவைகளோ, ஆண்டுதோறும் முன்மாதிரியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டியவைகளாக ஆகிவிட முடியாது.

விதிவிலக்குகளை, வழிகாட்டிகளாகவோ - முன் மாதிரிகளாகவோ கொள்வது என்பது ஏற்கக்கூடியதல்ல!

ஆளுநர் உரையென்பது அரசாங்கத்தின் கொள்கை விளக்க ஏடாகும்! அதைத் தொடர்ந்துதான் அந்தக் கொள்கை அடிப்படையில் நிதிநிலை அறிக்கை அவையில் வைக்கப்படுகிறது.

இப்போது வைக்கப்படுவதுதான் இந்த அரசின் முதல் பட்ஜெட் என்று திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் அண்மையில்கூட அறிவித்திருக்கிறார். அவரது கூற்று மெய்யானால் அத்தகைய ஒரு முதல் பட்ஜெட்டுக்கு முன்னுரை போன்ற கவர்னரின் கொள்கை விளக்க அறிக்கை தேவையான ஒன்றல்லவா?

கவர்னர் உரை என்றால் என்ன? கவர்னரே முழுதும் தயார் செய்து அவரது சொந்தக் கருத்துக்களைப் புகுத்தி ஆற்றுகிற உரையென்று பொருளல்லவே!

அரசாங்கத்தின் கொள்கைகளையும் கருத்துக்களையும் உள்ளடக்கியதுதான் கவர்னர் உரையாகும்!

இதில் சில நேரங்களில் கவர்னருக்கும் அரசாங்கத்திற்கும் கருத்து முரண்பாடு வருவதுண்டு! சில மாநிலங்களில் கடந்த காலத்தில் ஏற்பட்டிருக்கின்றன. நமது மாநிலத்தில் அப்படி எதுவும் கருத்து முரண்பாடு இருப்பதாகக் கூறமுடியாது!

இந்த நிலையில், கவர்னர் உரை வேண்டுமென்றே நிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்ன?

1977 ஜூலை 7-ந் தேதி கவர்னர் உரையாற்றினார். மீண்டும் 220 நாட்களுக்குள் பிப்ரவரி 20-ந் தேதி ஒரு கவர்னர் உரை தேவையில்லை என்பார்களேயானால்; கேரளத்தில் 1977 மார்ச் 28-ந் தேதிதான் கவர்னர் உரையாற்றினார். இப்போது 1978 பிப்ரவரி 6-ந் தேதி அதாவது 315 நாட்களில் மீண்டும் கவர்னர் உரை நடைபெற்றிருக்கிறது. சுமார்; எண்பது அல்லது எண்பத்தி ஐந்து நாட்கள் வித்தியாசம்தான்!

கவர்னர் உரையெனும் கொள்கை விளக்கத்தின் மீது சட்டமன்றப்பேரவை மேலவை உறுப்பினர்கள் ஏறத்தாழ ஒருவார காலம் விவாதம் நடத்திக் கருத்துக்களை எடுத்துச் சொல்கிற வாய்ப்பையும் - முதலமைச்சர் அவைகளுக்குத் தருகிற விளக்க உரையைக் கேட்கிற வாய்ப்பையும் பெறுகிறார்கள்.

முதல்வர் வேண்டுமானால் அந்த வாய்ப்பை விரும்பாமல் இருக்கலாம். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த வாய்ப்பை இழப்பது பெரும் ஏமாற்றமாகும்.

தமிழக அரசின் இத்தகைய முடிவு சட்ட விரோதமானது மட்டுமல்ல; ஏற்கனவே இருந்து வரும் நெடும் பழக்கத்திலிருந்து விலகுவதுமாகும். இது, ஒப்புக் கொள்ளப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட வழியில் நிர்வாகத்தைக் கொண்டு செல்லாது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுவின் சார்பாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட அறிக்கைக்கு முன்பு குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்துவதும் - மாநில சட்டமன்றத்தில் ஆளுநர் உரை நிகழ்த்துவதும் அரசின் கொள்கை முன் அறிவிப்புகளாகும். அவற்றைத் தட்டிக்கழிப்பதும் காரணம் கூறுவதும் பொருத்தமுடையவைகளாக இருக்க முடியாது.

அன்புள்ள,

மு. க.

(13-02-1978)

# 532. இதிலுமா இரட்டை வேடம்?

**உடன்பிறப்பே,**

புதுக்கோட்டை மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துயர் துடைப்புப் பணிகளை ஆற்றுவதற்காக, அந்த மாவட்டத்தில் மூன்று நான்கு லட்ச ரூபாய்களை வசூலித்து, துயர் துடைப்புப் பணிகளை ஆற்றிடத் திட்டம் வகுத்துச் செயல்படத் தொடங்கிவிட்டார். புயல் வீசி, வெள்ளம் புகுந்து - அதன் பிறகு இருபது நாட்கள் கழித்து பாதிக்கப்பட்ட பகுதிகளைக் காணச் சென்ற முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சீறிச் சினந்து, பொதுமக்களிடமும் வணிகர்களிடமும் வசூலித்த அந்தப் பணத்தை உடனடியாகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார். இச்செய்தியை ஏடுகள் சில வெளியிட்டு, ஆகா! முதல்வரின் உள்ளமே உள்ளம். மக்களாக வலிய வந்து வழங்காத நிதி உதவியை எந்தவகையிலும் பெறக்கூடாது என்று அறிவித்துவிட்டார் என்று புகழ்ச் சிந்துகள் பாடிக் களித்தன.

ஆனால் அடுத்த இரண்டு மாதங்களுக்குள்ளாக இப்போது நிலைமை என்ன? புயல் வெள்ள நிவாரண நிதி திரட்டக் கலைநிகழ்ச்சிகள் நடத்தித் தர நடிகர் சங்கத்தினர் முன்வந்தனர். பாராட்டப்பட வேண்டிய ஒன்று. ஐந்தாறு நாள் நிகழ்ச்சிகள் அதாவது நட்சத்திர இரவுகளின் வாயிலாக ஒரு கோடி அல்லது இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு புயல் நிவாரண நிதியாகக் கிடைக்கும் என்று தெரிகிறது. இந்த நிதி வசூலிக்கப்பட்ட முறை எத்தகையது?

ஒவ்வொரு அதிகாரிக்கும்; ஏன் கிராம சேவிகா உட்பட ஐநூறு ரூபாய் - ஆயிர ரூபாய் - மூவாயிர ரூபாய் என்ற அளவுக்கு நன்கொடைச் சீட்டுக்கள் தரப்பட்டு அவற்றை முழுதும் எப்படியாவது விற்றே ஆக வேண்டுமென்றும், எக்காரணத்தைக் கொண்டும் டிக்கெட்டுகளைத் திருப்பித் தரக்கூடாதென்றும்

எழுத்து மூலமான ஆணைகள் ஆங்காங்கு பிறப்பிக்கப்பட்டு, அந்த ஆதாரபூர்வமான உத்திரவுக் கடிதங்கள் அப்படியே நமது முரசொலி போன்ற ஏடுகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தக் கட்டாய உத்திரவுகளின் காரணமாக அதிகாரிகள் நிதி வசூலில் மிகுந்த கடுமையைக் காட்டினார்கள். வகையற்ற அப்பாவி அதிகாரிகள் பலர், நிர்ணயிக்கப்பட்ட தொகையில் துண்டு விழுவதைத் தாங்களே போட்டுக் கட்டி - தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளப் பெரும்பாடு பட்டிருக்கிறார்கள்.

இப்படி வசூல் நடப்பது பற்றி தமிழக நிதி அமைச்சரை அணுகி, நிருபர்கள் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிறார்கள். அவர் அந்தச் செய்தியை அடியோடு மறுத்தது மட்டுமல்ல; இந்த வசூல் ஒன்றும் கட்சி நிதிக்காக அல்ல என்றும் விளக்கமளித்திருக்கிறார்.

ஆளுங்கட்சியின் நிதிக்காக, திருச்சியில் நடன நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்வதாக விளம்பரப்படுத்தப் பட்டு, அமைச்சர் ஒருவரே பழனிக்கும், மேட்டூருக்கும், இன்னும் பல பகுதிகளுக்கும் சென்று தான் தங்கியிருந்த விடுதிக்கு வணிகர்களை அழைத்து லட்சக் கணக்கான ரூபாய்களை கட்சி நிதியாக வசூலித்ததைச் சட்டமன்றத் திலேயே சுட்டிக்காட்டியிருக்கிறோம். அதற்கு எந்த விளக்கமும் இதுவரையில் தரப்படவில்லை.

கலைஞர்கள், பல்வகைக் கலைநிகழ்ச்சிகளின் வாயிலாகக் குறிப்பிட்ட நகரங்களில் அரசின் புயல் நிவாரண நிதிக்கு வசூல் செய்து தர முன்வருகிறார்கள் என்றால்; அதற்கே ஓரளவு கணிசமான தொகை சேரும்.

அந்தத் தொகையை பலமடங்கு அதிகமாகக் காட்ட வேண்டுமென்பதற்காக, அதிகாரிகளையும், பொதுமக்களையும் கசக்கிப் பிழிகிற இந்தச் சூழ்நிலையை உருவாக்குவானேன்?

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒரு உத்திரவு! மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதற்கு நேர்மாறான உத்திரவா?

இப்படி ஒரு இரட்டை வேடம் எதற்காக? இதிலுமா இரட்டை வேடம்?

இதற்கு நட்சத்திர விழாக்களே நடத்தாமல், ஆங்காங்கு அதிகாரிகள் புயல் நிவாரண நிதிக்கு இவ்வளவு கோட்டா வசூலித்துக் கொடுக்க வேண்டுமென்று ஒரு தனி ஆணையே பிறப்பித்திருக்கலாமே!

அதன் காரணமாக கலைவிழா நிகழ்ச்சிச் செலவுகள் மிச்சப்பட்டிருக்குமல்லவா?

அளவுக்கு மீறிய வகையில் அதிகாரிகளையும், பொதுமக்களையும், சிறுவணிகர்களையும் இந்த வசூலுக்காகக் கெடுபிடிக்கு உள்ளாக்கியது வன்மையாகக் கண்டிக்கத்தக்க ஒன்றாகும்.

அன்புள்ள,

மு. க.

(14-02-1978)

## 533. உண்மையை ஒப்புக்கொள்கிறார்!

**உடன்பிறப்பே,**

நானிருக்கப் பயமேன்? நானே அனைத்துக்கும் பொறுப் பேற்றுக் கொள்கிறேன். அதிகாரிகள் கட்டாயப்படுத்தி, கெடுபிடி வசூல் செய்து நிதி திரட்டியதாகச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளுக்காக அதிகாரிகள் அஞ்சத் தேவையில்லை என்று அபயம் கொடுத்திருக்கிறார் முதலமைச்சர்.

ஆனால், அதிகாரிகள் அஞ்சுவது எதற்காக? கட்டாயப்படுத்தி வசூல் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்காக மாத்திரமா? அவரவர்களுக்கும் ஐநூறு, ஆயிரம், இரண்டாயிரம் என்று கோட்டாமுறை ஒதுக்கி அந்த டிக்கெட்டுகளைத் திருப்பித் தரக்கூடாது. எப்படியாவது பணம் தந்தாக வேண்டும் என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டதே; அந்த உத்திரவின்படி தங்கள் ஊதியத்திலிருந்து கொடுத்து அழ வேண்டுமே என்பதற்காகத்தான் அவர்கள் பெரிதும் அஞ்சுகிறார்கள்!

அதைப் புரிந்துகொள்ள மறுக்கின்ற முதலமைச்சர், அஞ்சேல்! என்று அபயம் கொடுக்கிறார்.

ஒன்று மிகத் தெளிவாக அறிவிக்கப்பட்டாகி விட்டது.

தங்களுக்குக் கீழுள்ள அதிகாரிகளுக்கு வசூல் சம்பந்தமான கண்டிப்பான உத்திரவுக் கடிதங்களை மேலேயுள்ள அதிகாரிகள் அனுப்பியதை ஆதாரபூர்வமாக அப்படியே முரசொலி வெளியிட்டிருந்தது அல்லவா; அத்தகைய உத்திரவிட்ட தவறுகள் அதிகாரிகள் மட்டத்தில் நடந்தது என்று யாரும் வாதிட முடியாது. முதலமைச்சரே பிரகடனப்படுத்தி விட்டார்; அதிகாரிகள் மீது வருகிற புகார்கள் எதுவாயினும் அதற்குத் தானே பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் என்று!

எந்த முதலமைச்சர் தெரியுமா? இஸ்மாயில் கமிஷன் அறிக்கை கவர்னருக்கு அனுப்பப்பட்டிருப்பதாக ஒரு தவறான தகவலை சட்டப் பேரவையில் சொல்லி, அதனைச் சுட்டிக்காட்டி உரிமைப் பிரச்சினை எழுப்பியபோது - நான் அனுப்பச் சொல்லி விட்டேன். அனுப்பாதது அதிகாரிகள் தவறு என்று பழியைத் தூக்கி அதிகாரிகள்மீது போட்ட முதலமைச்சர்தான், மதுரையில் அதிகாரிகளை மீட்ட பாண்டியனாகக் காட்சி அளித்திருக்கிறார்.

வன்முறையில் ஈடுபடாத குடிகாரர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்கி விடலாம் என்று ஒரு கொள்கை ரீதியான ஆணை அரசாங்கத்திலிருந்து பிறப்பிக்கப்பட்டுள்ளதை பேரவையில் சுட்டிக்காட்டியபோது தமிழ் தெரியாத அதிகாரிகளால் வந்த தவறு எனக்கூறி, அதுபற்றி விசாரித்து விளக்கமளிக்கிறேன் என்று உறுதியளித்த முதலமைச்சர்தான் இன்று திடீரென அதிகாரிகளைக் காப்பாற்றப் புறப்பட்டிருக்கிறார்.

இந்த அரசின் உத்திரவுகளை மாற்றுவதிலும் ஒத்துழைக்காமலிருப்பதிலும் பெரும்பாலான அதிகாரிகள் ஈடுபடுகிறார்கள் என்று குற்றம்சாட்டிப் பேசி ஒரு வாரம்கூட ஆகவில்லை. அதற்குள்ளாக அதிகாரிகளை மீட்பதற்காக மதுரைக்குப் போய்விட்டார் முதலமைச்சர்.

அதிகாரிகள், ஆளுங்கட்சி, எம்.எல்.ஏக்களைத் தூண்டிவிட்டு, காண்ட்ராக்டர்களை சிபாரிசு செய்யச் செய்து, அரசுக்கு விரோதமாக காண்ட்ராக்ட் வேலைகளைக் கொடுத்து தவறு செய்கிறார்கள் என்று சென்ற மாதம்தான் அதிகாரிகளைக் குற்றம் சொல்லி ஆளுங்கட்சி எம்.எல்.ஏக்களைக் காப்பாற்ற முனைந்து நின்றார்.

இப்போது, அதிகாரிகளே! உங்கள்மீது கட்டாய வசூல் புகார் கூறப்பட்டால் கவலைப்படாதீர்கள்! நானிருக்க பயமில்லை! என்று நாமுரசம் கொட்டுகிறார்!

மருத்துவமனைகளில் 90 சத விகிதம் மருந்து திருட்டுப் போவதற்கு அதிகாரிகள், அலுவலர்கள், டாக்டர்களைத் தவிர வேறு யாரும் பொறுப்பில்லையென்று தனது பொறுப்பைத் தட்டிக் கழித்துக்கொண்ட முதலமைச்சர்; இன்னாருக்கு இவ்வளவு தொகையென்று நிர்ணயித்து, வசூலாகாவிட்டால் அவர்கள் கைப்பணம் போட்டுக் கட்டவேண்டிய அளவுக்குக் கடுமையான

உத்தரவு போட்டதற்கும் தானே பொறுப்பேற்றுக் கொள்வதாக இப்போது அறிவித்திருப்பது முரண்பாட்டின் முழுவடிவமே தவிர வேறல்ல!

இந்தக் கெடுபிடி வசூலை கட்சி சார்பற்ற முறையில் அனைவருமே கண்டித்து எதிர்க் குரல் கொடுத்திருக்கும்போது அவ்வாறு தவறு செய்த அதிகாரிகள் யார் என்று அறிந்து, நடவடிக்கை எடுத்து, இனிமேல் இப்படி நடவாமல் பார்த்துக் கொள்வேன் என்று கூறவேண்டிய பொறுப்பில் இருக்கும் முதலமைச்சர்; அதிகாரிகளே! இதுபற்றி அஞ்சாதீர்! நான் பதில் சொல்லிக் கொள்கிறேன் என்று அறிவித்திருப்பதிலிருந்து என்ன புரிகிறது?

இப்படித்தான் வசூல் நடைபெற வேண்டும் என்று முதலமைச்சரே இந்தக் கெடுபிடி முறைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறார் என்ற உண்மையை அவரே ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார்; அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

(15-02-1978)

# 534. திடுக்கிட வைக்கும் தீர்மானம்!

உடன்பிறப்பே,

முதலையுண்ட பாலனை சுந்தரர் மீட்டது தமிழால் என்றார்களே; அந்தப் பக்தர்கள் பதைத்திடத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மறைக் கதவு திறந்தது தமிழால் என்று பக்தர்கள் மார் தட்டினார்களே; அவர்கள் அலறிப் புடைத்திடத் தீர்மானம் ஒன்று தீட்டப் பெற்றிருக்கிறது.

கண்ணுதற் பெருங் கடவுளும் கழக

மோடு அமர்ந்து, பண்ணுறத் தெளித்து

ஆய்ந்த தமிழ் என்று ஆன்மீகத் தமிழர்கள் ஆனந்தப் பள்ளுப் பாடினார்களே; அவர்தம் கூற்றினைப் பொய்யாக்கும் தீர்மானம் ஒன்று வடிக்கப்பட்டிருக்கிறது.

எந்த நாட்டில்? அல்லது எந்த மாநிலத்தில்? யார் அந்தத் தமிழ்மொழி எதிர்ப்பாளர்? என்று கேட்கத் துடிக்கிறாய் அல்லவா?

இங்கேதான்! தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் தமிழ்நாட்டிலேதான்!

திருப்பாவை, திருவெம்பாவை மாநாடு ஒன்று இரண்டொரு நாட்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்றிருக்கிறது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மிக விரிவாக முக்கியத்துவம் கொடுத்துச் சில ஏடுகள் வெளியிட்டது மட்டுமல்ல; வானொலியும் சாங்கோபாங்கமாக, சவிஸ்தாரமாக அந்தச் செய்தியை ஒலிபரப்பி மகிழ்ந்தது.

பிராந்திய மொழிகளில் அர்ச்சனைகள் நடப்பது சாஸ்திரங்களுக்கு விரோதமானது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில், ஒரே மொழியில் அதாவது சமஸ்கிருதத்தில் அர்ச்சனை நடந்தால்தான் தேசிய ஒருமைப்பாடு பலப்படும்.

உடன்பிறப்பே, தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரால் எதையும் அழிக்கச் சிலபேர் தயாராகி விட்டார்கள் என்பதையும், தங்கள் ஆதிக்கத்தை எல்லா வகையிலும் நிலைநாட்டிட ஒருமைப்பாட்டை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் விளக்க, இதைவிட வேறு எடுத்துக்காட்டே தேவையில்லை அல்லவா?

காஷ்மீர் முதல் குமரி வரையில் ஒரே ஒரு கடவுள்தான் இருப்பது போலவும், அவர் சமஸ்கிருதக் கல்லூரியில் பயின்றவரே தவிர; தமிழில் அரிச்சுவடி கூடப் படிக்காதவர் போலவும் கற்பனை செய்துகொண்டு இப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள், கடவுள் என ஒருவர் தனியாக இருந்து அருள்பாலிக்கிறார் என்றால்; அவர் நமது இதயமொழியை மட்டுமே கூடப் புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றல் பெற்றவராகத்தான் இருந்திட வேண்டும்.

இல்லை; அவரை அர்ச்சித்து வழிபட மொழிகள் தேவையென்றால் - அவர் எல்லா மொழிகளையும் புரிந்துகொள்ளக் கூடிய சக்தி படைத்தவராகத்தான் இருக்க வேண்டும்.

காஷ்மீர் முதல் குமரி வரையில் ஒரே மொழியில் - சமஸ்கிருதத்தில் தான் அர்ச்சனை என்றால்; நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன் - சுப்பிரமணியரும், முருகனும் ஒன்றா? இல்லை! இல்லவே இல்லை! சுப்பிரமணியர் வடமொழிக் கடவுள், முருகன் தமிழ்க் கடவுள்! முருகு என்றாலே அழகு என விளக்கம் தந்து திரு.வி.க. எழுதியதை யாரும் அதற்குள் மறந்திருக்க முடியாது, மகாவிஷ்ணு, வடமொழிக் கடவுள், திருமால் தென்மொழிக் கடவுள்! மொழி ஆதிக்கப் படையெடுப்புக்களால், தமிழனும், தமிழும் நிலைகுலைய நேரிட்டபோது ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோர் புலிவேடம் போடத் தொடங்கினார்கள்.

பின்னர், தமிழ்க்குலம், விழித்தெழுந்தது! அந்த விழிப்புக்குக் காரணமான தமிழ்ச் சான்றோர்கள், தலைவர்கள், என்றென்றும் நம் நன்றிக்குரியவர்கள்.

அந்த விழிப்புணர்வின் தொடர்ச்சியாகத்தான், தமிழ் நாட்டு ஆலயங்களில் தமிழ் அர்ச்சனை தொடங்கிற்று. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே ஓரிரு கோவில்களில் தமிழ் அர்ச்சனை இடம் பெற்றது. பின்னர் கழக ஆட்சிக் காலத்தில் எல்லாக்

கோவில்களுக்கும் தமிழ் அர்ச்சனை விரிவுபடுத்தப்பட்டது.

தமிழ்ப் பகைவர்கள்; அல்ல! அல்ல! சமஸ்கிருதப் பிரியர்கள்; கழக ஆட்சி எடுத்த முடிவை எதிர்த்து நீதிமன்றங்களுக்குச் சென்றார்கள். இப்படியொரு நிலை தமிழுக்கு! கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, தமிழ் உணர்வை அறவே அழித்துவிடும் போக்கினைக் குடியரசுத் தலைவர் ஆட்சியின் தமிழ்நாட்டு ஆலோசகர்கள் கடைப்பிடித்தார்கள்.

இப்போது, மாநாடு கூட்டித் தீர்மானம் போடுகிறார்கள்!

தமிழ்நாட்டில் உள்ள கடவுள்களுக்குத் தமிழ் புரியாது என்றால்; அந்தக் கடவுள்களுக்கு எந்த மொழி புரியுமோ - அந்த இடங்களுக்குப் போய்விட வேண்டுமே தவிர, பிறகு அவர்களுக்குத் தமிழ்நாட்டில் வேலை என்ன? என்பதுதான் நமது கேள்வி!

திருப்பாவை, திருவெம்பாவை மாநாட்டினர் தீர்மானத்திற்கெதிராக - தமிழ்நாட்டு ஆலயங்களில் தமிழ் மொழியே அர்ச்சனை மொழியாக இருக்க வேண்டு மென்பதற்கான நடவடிக்கைகளை - ஏற்கனவே கழக அரசு விட்ட இடத்திலிருந்து இன்றுள்ள அரசு தொடர்ந்திட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்மொழி அர்ச்சனை மொழியாவதற்கும், தகுதி படைத்த அனைத்து வகுப்பினரும் அர்ச்சகராவதற்கும் தற்போதுள்ள அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் தேவை யென்றால் அதனை வலியுறுத்தி, மத்திய அரசு அதனைச் செய்திட மாநில அரசு முன்வர வேண்டும். முன்பிருந்த மத்திய அரசைப் போல முரட்டுப் பிடிவாதம் காட்டாமல் இன்றுள்ள மத்திய அரசு, நியாயத்தை உணர்ந்து செயல்படும் என்று நம்புவோமாக! அதற்கான முயற்சிகளுக்கு நமது கழகத்தின் முழு ஒத்துழைப்பு உண்டு!

அன்புள்ள,

மு. க.

(16-02-1978)

# 535. இயந்திர மனிதர்கள்!

**உடன்பிறப்பே,**

புதுடெல்லியில் நடைபெறும் ஷா கமிஷன் விசாரணையில் எத்தனையோ திடுக்கிடும் தகவல்களும் நெஞ்சை உலுக்கும் நிகழ்ச்சிகளும் வெளிப்பட்ட வண்ணமிருக்கின்றன. நெருக்கடி காலத்தில் தங்களுக்குப் பிடிக்காதவர்களை, இந்திராவின் அரசாங்கம் எத்தகைய கொடுமைகளுக்கு ஆளாக்கியிருக்கிறது என்பதை நாட்டு மக்கள், நாள்தோறும் உணர்ந்து வருகிறார்கள். அதிகாரிகளை மிரட்டி, அவர்களை அநியாயத்தின் உருவங்களாக மாற்றி எதிர்க்கட்சியினர் மீது அடக்குமுறைகளைத் தொடுக்கவும், அவதூறுகளைப் பொழியவும் நகர்வாளா மகாராணியார் இந்திரா காந்தி அவர்கள் நடத்திய காட்டு தர்பாரை இன்னமும் நியாயப்படுத்துகிற இரக்கமற்ற இதயங்களுக்கு உடைமையாளர்கள் நாட்டிலே இருப்பது வேதனையானதுதான்!

அதிகாரிகள் மட்டுமல்ல; நீதிபதிகளும் - நீதிமன்றங்களும் இந்திரா காந்தியின் காலடியில் கிடந்து மிதிபட வேண்டியிருந்தது. மறுத்தால்; நியாயக் குரல் கொடுத்தால் அவர்களும் மிசாக் கைதிகளாகச் சிறைக் கோட்டத்தில் கிடக்கவேண்டும். இலட்சிய வானத்தில் கொள்கைச் சிறகடித்து வீரச்சிந்து பாடிய வண்ணம் பறந்த தீரமிக்க பறவைகளேகூட நெருக்கடியின் வெப்பத்தைத் தாங்காமல் தங்கள் இறக்கைகளை மடக்கிக்கொண்டு இருக்குமிடம் தெரியாமல் பொந்துக்குள் மறைந்துவிட்டன என்றால்; பாவம் - நீதிபதிகள் என்ன செய்ய முடியும்?

நீதி, ஒடுங்கிக் கிடந்தது; அதன் உதடுகள் உலர்ந்து கிடந்தன! பேச்சு அடங்கிவிட்டது! மூச்சு மட்டும் இழுத்துக் கொண்டிருந்தது. அநீதியின் ஆர்ப்பாட்ட நடனம், இந்திராவின் கொலு மண்டபத்தில் அனுதினமும் நடை பெற்றுக் கொண்டிருந்தது; அந்த நடனத்தின் காலில் சிக்கிய எறும்புகளைப்போல் இந்திய மக்கள் நசுங்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்தக் கொடுமையை வரவேற்றவர்கள், வாழ்த்தியவர்கள், அன்னையே இந்திரா என்று ஆராதித்தவர்கள் அன்றைக்கும் இருந்தார்கள். இன்றைக்கும் இருக்கிறார்கள். அதில் ஆச்சரியம் என்னவென்றால், அவர்கள் நீதி, நியாயம், மனிதாபிமானம், புனிதம், தர்மம் இவைகளைப் பற்றியெல்லாம் பேசத் தங்களைப்போல் தகுதி படைத்தவர்கள் இல்லையென்றும் கித்தாப்பு கொண்டு அலைந்து திரிகிறார்கள்.

உடன்பிறப்பே, ஷா கமிஷனில் வெளியான நிகழ்ச்சியொன்று! நம் நெஞ்சைப் பிழிகிறது!

குருதத் என்பார் - புகழ்பெற்ற நாவலாசிரியர் இந்தி மொழியில்! 84 வயது கொண்ட முதுபெருங் கிழவர்! நெருக்கடி நிலை வருவதற்கு முன்பு 1973-ஆம் ஆண்டு மது என்ற நாவலையெழுதி வெளியிட்டார். அவர் எழுதி வெளியிட்ட இருநூறு நாவல்களின் வரிசையில் அந்த மது என்ற நூலும் ஒன்று! அந்த நூலில் இந்திரா அரசுக்கு எதிரான சில மாறுபட்ட கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்ததாம்! எப்போது? 1973ல்! அந்த வயதான எழுத்தாளர், 1976ல் கைது செய்யப்படுகிறார்! ஏன்? 1973ல் அவர் எழுதிய நாவலுக்காக!

அவர், தனக்கு நேர்ந்த தொல்லைகளைப் பற்றிக் கூற ஷா கமிஷன் முன் சாட்சி சொல்ல வந்தபோது அவரால் நடக்க முடியாமல் தள்ளாடினார். அவரது மகன் கைத் தாங்கலாக அழைத்து வந்து சாட்சிக் கூண்டில் நிறுத்தினார் என்று செய்தி வருகிறது.

அவருக்கு நெருக்கடி காலத்தில் நேர்ந்த கதி என்ன?

1976 நவம்பர் 22ந் தேதி இரவு போலீசார், அவர் வீட்டில் நுழைந்து வாரண்ட் எதுவுமில்லாமல் காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்கின்றனர். மூன்றாண்டுகளுக்கு முன்பு வெளிவந்த மது என்ற நூலைப் பற்றி விசாரிக்கின்றனர். பிறகு அவர் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

மறுநாள் தீஸ் ஹஜாரி பகுதியில் உள்ள நீதிமன்றத்தில் அந்தக் கிழவர் நிறுத்தப்படுகிறார். அவர் வீட்டின் முன்பாக ஒரு பெரிய கும்பலைச் சேர்த்துக்கொண்டு கலவரங்களை விளைவிக்குமாறு தூண்டிவிட்டார் என்று அந்த எழுத்தாளர் மீது குற்றம் சாட்டப்படுகிறது. அந்தக் குற்றச்சாட்டைக் கேட்டுத் திகைத்துப் போன குருதத், அய்யோ! அது முழுப் பொய்! எனக்கு வயது 84

ஆகிறது. என்னால் சரியாக நடக்கக்கூட முடியாது. பார்வையும் மங்கல். காதுகளும் சரியாகக் கேட்காது. அத்தகைய கலகம் செய்யத் தூண்டியதாகச் சொல்வது சுத்தப் பொய்! அதற்கு எந்த ஆதாரமும் கிடையாது என்று நீதிமன்றத்தில் வாதாடுகிறார்.

இவரைக் கைது செய்ய வேறு காரணம் உண்டா? என்று நீதிபதி கேட்கிறார். கைது செய்யும்படி எங்களுக்குக் கூறப்பட்டது என்கிறார்கள் போலீசார்.

நீதிபதி, குருதத்தை ரிமாண்டில் வைக்க உத்தரவிடுகிறார். ஜாமீன் கோரப்பட்டது! ஏற்பார்களா என்ன - ஏற்று விடுவித்தால் என்ன ஆகும்?

நாவலாசிரியரின் ரிமாண்டு காலம் முடிகிறது. அவர் மீண்டும் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்படுகிறார். அவர் மீது இ.பி.கோ. 108-வது பிரிவின் கீழ் தொடரப்பட்ட வழக்கு வாபஸ் பெறப்படுகிறது.

அவர் அதைக்கேட்டு புன்னகை புரியத் தொடங்குவதற்குள் அவரை மிசாவின்கீழ் கைது செய்திருப்பதாக வாரண்டைக் காட்டி டில்லி-தீஹார் சிறையில் தள்ளிவிடுகிறார்கள்.

இந்தக் கொடுமை குறித்த விசாரணையில் இரண்டு நீதிபதிகள் ஷா கமிஷன் முன்பு சாட்சியமளித்திருக்கிறார்கள்.

சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாக இருந்த பைதண்டி யென்பார், என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

குருதத் கைது செய்யப்பட்டதை நான் எதிர்த்தேன். அதுபற்றி மாவட்ட மாஜிஸ்டிரேட்டிடம் முறையிட்டேன். ஒரு விஷயத்தை ஒப்புக்கொண்டு நான் வெட்கப்படுகிறேன். ஆனால் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். பொதுவாகக் காவல் கைதி, யாரையாவது விடுதலை செய்யும்படி நான் உத்திரவிட்டால், அந்த நபர் விடுதலையானதும் அருகில் உள்ள திலக்நகர் போலீஸ்காரர்கள் மீண்டும் அந்த நபரைக் கைது செய்துவிடுவார்கள்.

இது ஒரு நீதிபதியின் சாட்சியம், டெல்லி மாவட்ட நீதிபதியாக இருந்த கோஸ்வாமி என்பவர் சொன்ன சாட்சியம், இதோ! :-

நாவலாசிரியர் குருதத்தின் கைது பற்றி சப்மாஜிஸ்டிரேட் என்னிடம் ஆட்சேபம் தெரிவித்தது உண்மைதான். குருதத்

வயதானவர். நோயாளி. அவர் அரசியலை விட்டு விலகிவிட்டவர். அதனால் அவரைக் கைது செய்வது கூடாது என்று கருத்தறிவித்தது உண்மை. நானும் அதே கருத்தைக் கொண்டவனாக இருந்தேன். ஆனால் அப்போதைய லெப்டினென்ட் கவர்னர் இந்த விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருந்தார். தமது உத்திரவை நிறைவேற்றியே தீரவேண்டுமென என்னிடம் சொன்னார். குருதத் கைது செய்யப்படுவது தவறானது. சட்டவிரோதமானது. அநீதியானது என்று நான் அவரிடம் கூறினேன். வாயை மூடிக்கொண்டு சும்மா இரு என்ற பதில்தான் லெப்டினென்ட் கவர்னரிடமிருந்து கிடைத்தது.

இதுபோன்ற நீதிபதிகளின் சாட்சியங்களைக் கேட்ட நீதிபதி ஷா, அவர்களில் ஒரு நீதிபதியைப் பார்த்து

நீங்கள் எல்லாம் யந்திரங்களைப் போல் செயல்பட்டிருக் கிறீர்கள், இல்லையா?

என்று கேட்க, அதற்கு ஆமாம் என்று பதில் அளிக்கப் பட்டிருக்கிறது.

உடன்பிறப்பே, நேர்மைத் தாய், நியாயத் தேவதை, பாரத அன்னை என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட இந்திராவின் ஆட்சியில் நீதிபதிகள் இயந்திரங்களாகச் செயல்பட வேண்டியிருந்தது என்பதை, அப்படிச் செயல்பட்ட நீதிபதிகளே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்!

நீதிதேவன் மயக்கம் நடைபெற்ற காலம் அது! அந்த மயக்கம் தெளியவேண்டும்! அந்த மயக்கத்தால் ஏற்பட்ட கொடுமைகள் தொடராமல் தொலையவேண்டும்!

இயந்திர மனிதர்களாக நீதிபதிகளை இயங்க வைத்த இந்திராவின் ஆட்சி, இனியும் ஒருமுறை வரவேண்டுமாம் - ஏங்கித் தவிக்கிறார்கள் இன்னும் சில பேர்! வெட்கம்! வேதனை!

அன்புள்ள,

மு. க.

(17-02-1978)

# 536. சுயாட்சி கீதமும் - சுருதி பேதமும்!

**உடன்பிறப்பே,**

மாநில சுயாட்சி பற்றிய கருத்துக்கள் அனைத்திந்திய அளவில் இன்று பேசப்பட்டு வருகின்றன. இந்த நிலைமையை நாம் முன்பே எதிர்பார்த்தோம். தி.மு.கழகம் மாநில சுயாட்சி பற்றிப் பேசுகிறது என்ற காரணத்தினாலேயே அதனை எதிர்த்தவர்களும் உண்டு. நமக்கிருந்த நம்பிக்கையெல்லாம் மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி என்ற நமது முழக்கம் மெல்ல மெல்ல; ஆனால் உறுதியாக மற்ற மாநிலங்களிலும் பரவும் என்பதுதான்!

சில ஆண்டுகளுக்கு முன்பு உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த பேராசிரியை ஒருவர் தி.மு.க. பற்றி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

தி.மு.க. அதன் நடவடிக்கைகளைத் தமிழ்நாடு, புதுவை ஆகிய மாநிலங்களின் எல்லைக்குள்ளாகவே சுருக்கிக் கொள்ள நினைக்கலாம். ஆனால் தி.மு.க. உணர்வு இந்திய யூனியனில் உள்ள ஒவ்வொரு மாநிலத்தையும் கட்டாயம் சூழ்ந்து கொள்ளத்தான் போகிறது. மாநில சுயாட்சியும் அதிக அதிகாரம் கேட்கும் கோரிக்கையும் காலப் போக்கில் இளந்தலைமுறையினரிடையே உருவாகும் செயல்திறன் கொண்ட அரசியல் தலைவர்களின் சிந்தனையைக் கவரப் போவது நிச்சயம்.

அந்தப் பேராசிரியை கொண்ட நம்பிக்கை வீணாக வில்லை. இந்திய அரசியல் வானில் விவாதத்திற்குரிய பெருங்கருத்தாக மத்தியில் கூட்டாட்சியும் மாநிலத்தில் சுயாட்சியும் உருவாகியிருக்கிறது.

இந்த உணர்வுக்கு, தி.மு.கழகம் தனியுரிமை கொண்டாட எண்ணவில்லை. எண்ணிடவும் முடியாது. இந்திய நாட்டுச்

சுதந்திரம் உதயமாகிற வைகறைப் பொழுதில் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களால் அறிவிக்கப்பட்டு, காங்கிரஸ் கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான் மாநில சுயாட்சிக் கொள்கை!

ஒன்றாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டுத் தீர்மானமே; பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய மாநில சுயாட்சி தேவை என்று வலியுறுத்தியிருப்பதை வரலாறு சுட்டிக் காட்டிக் கொண்டுதானிருக்கிறது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு யாராலும் எடுத்துச் சொல்லப்படாமல் விடுபட்டுப்போன அந்தக் கொள்கை முழக்கத்தை தமிழ்நாட்டில் தி.மு.க. அரசும், தி.மு.கழகமும் மீண்டும் எழுப்பத் தொடங்கியது.

1968-ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாட்டில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், ஆற்றிய உரையின் அழுத்தத்தையும் ஆழத்தையும் யாரும் மறந்துவிட முடியாது.

வலுவான மத்திய அரசுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது தவறு. மாநில சுயாட்சி தரத் தயக்கம் காட்டுவார்களேயானால் அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கிப் பாதுகாப்பு போன்ற பெரிய விஷயங்களில் சோடை போய் விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம். மேல் அதிகாரம் அனைத்தும் டெல்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்துள்ளது.

- இப்படி 1968-ல் கருத்தறிவித்தவர் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களாவார்கள்.

அவர் மறைவதற்கு முன்பு ஹோம்ரூல் ஏட்டில் எழுதிய கட்டுரையில் கழக அரசின் கடமையைத் தெளிவாக உணர்த்தியிருக்கிறார்.

தி.மு.கழகம், பதவியில் இருப்பதின் மூலம்; இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் கொல்லைப்புறமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான் என்பதைச் சிந்திக்கக்கூடிய பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவர முடியுமானால், அது உண்மையிலேயே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும்.

அண்ணாவின் இந்தக் கட்டுரை வாசகத்தை அடிப் படையாகக் கொண்டுதான், கழக அரசு மத்திய மாநில உறவுகளை ஆராய்ந்து அறிக்கையொன்றைத் தயாரித்துத் தருமாறு 1969 செப்டம்பர் திங்களில் சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதியும் நான்காவது நிதிக் குழுவின் தலைவருமான இராஜமன்னார் தலைமையில் சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார், சென்னை முன்னாள் தலைமை நீதிபதி பி. சந்திரா ரெட்டி ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை அமைத்தது.

1970-ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடைபெற்ற திருச்சி மாவட்ட தி.மு.க. மாநாட்டில் மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி என்ற முழக்கம் பிறந்தது. ஆம்; அண்ணாவின் கொள்கை - அவர் வகுத்தளித்த தத்துவம் - அரசியல் அறிஞர்கள் பலரும் எடுத்துச்சொன்ன கருத்து - அன்றைய தினம் முழக்கமாக ஆயிற்று!

1971-ல் இராஜமன்னார் குழுவின் அறிக்கை அளிக்கப்பட்டது. இந்தியாவிலேயே ஒரு மாநில அரசு, மத்திய-மாநில உறவுகள் குறித்து ஆராயச்செய்து முதன் முதலாகப் பெற்ற அறிக்கையாகும் அது!

1971 ஏப்ரல் திங்களில் கோவையில் கூடிய கழகப் பொதுக் குழு, இராஜமன்னார் குழு அறிக்கையை ஆராய்ந்து பரிந்துரை கூற செழியன் - மாறன் ஆகியோரை அமைப்பாளர்களாகக் கொண்ட ஒரு குழுவினை அமைத்து அறிவித்தது.

அந்தக் குழுவின் அறிக்கை 1974-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அளிக்கப்பெற்று - அதனை செயற்குழு, பொதுக்குழு விவாதித்து அதன் பிறகு 1974-ஆம் ஆண்டில் சட்டப் பேரவையில் அரசின் சார்பில் மாநில சுயாட்சித் தீர்மானம் முன்மொழியப் பெற்று விரிவான விவாதங்கள் நடைபெற்று, பேரவையிலும், மேலவையிலும் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது இந்திய அரசியல் அரங்கில் ஒரு வரலாற்றுச் சம்பவம் என்பதை நான் மனநிறைவோடு இன்றைக்கும் கூறிக் கொள்கிறேன்.

1971-ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் பிரகடனத்திலும் மாநில சுயாட்சி அமைந்திட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது விளக்கப்பட்டிருக்கிறது.

இப்போது நமக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும், அந்தக் கட்சியின் மேற்கு வங்க அரசின் முதல்வரும் மாநில சுயாட்சிக் கொள்கையைத் தீவிரமாக எடுத்துரைத்து வருகிறார்கள்!

குடியரசுத் தலைவர் மேன்மைமிகு சஞ்சீவரெட்டி அவர்கள் லிங்க் என்ற இதழுக்கு அளித்த பேட்டியிலும் மாநில சுயாட்சிக் கொள்கைக்கு ஆதரவாகக் கருத்தறிவித்திருக்கிறார்.

காஷ்மீரின் முதல்வர் ஷேக் அப்துல்லா அவர்களும் தனது நீண்ட நாளைய உரிமைக் குரலை மீண்டும் எழுப்பியிருக்கிறார்.

இதற்கிடையே, மார்க்சிஸ்டுகள் தி.மு.க. கேட்கும் மாநில சுயாட்சிக்கும் அவர்கள் கேட்கும் மாநில சுயாட்சிக்கும் வேறுபாடு இருப்பது போல அறிவித்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்தின் உட்புகுந்து விவாதிக்கும் விபரங்களில் வேறுபாடு இருக்கலாம் - அவை இலகுவில் தீர்த்துக்கொள்ளக் கூடியதே தவிர சிக்கலானது அல்ல!

ஆனால் கொள்கை அளவில், மார்க்சிஸ்ட்கள் கோருவதும் - தி.மு.க. கோருவதும் மாநில சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி என்பதுதான்!

இதில், அரசியல் கருத்து மாறுபாடுகளுக்கோ - தேர்தல் உறவு முறைகளுக்கோ - இடமிருப்பதாக எண்ணிக் குழப்பிக்கொள்ளக் கூடாது.

மத்தியில் கூட்டாட்சி அமைவதும் - மாநிலங்களில் சுயாட்சி மிளிர்வதும்- எந்தக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும் அந்த மாறுதலின் விளைவாக மக்களுக்கு அதிக நன்மைகளைச் செய்ய முடியும் என்பதில் இருகருத்துக்கு இடமில்லை.

மார்க்சிஸ்டுகள் மாநில சுயாட்சிப் பிரச்சினையில் தி.மு.க.வை வேறுபடுத்திக் காட்டுவதற்கு நமக்குக் காரணம் புரியவில்லை.

பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய

மாநில சுயாட்சி என்று நாம் கேட்கவில்லை.

கம்யூனிஸ்டுகள், ஒருவேளை தங்கள் பழைய தீர்மானத்தின்படி -

பிரிந்து போகும் உரிமையுடன்

கூடிய மாநில சுயாட்சி

கேட்கிறார்களோ; என்னவோ -

அதுதான் வேறுபாடு என்றால் அது சரியான விவாதம்தான்!

நாம் கேட்பது பிரிந்து போகும்

உரிமையுடன் கூடிய மாநில

சுயாட்சி அல்ல!

உடன் பிறப்பே, இதுபற்றித் தேவைப்படும் போது மீண்டும் விளக்குகிறேன்.

இப்போது கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ள சுயாட்சி கீதத்தில் இதுபோன்ற சுருதி பேதங்கள் வேண்டா மென்று, மார்க்சிஸ்ட் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

(18-02-1978)

# 537. கவர்னர் உரை நிறுத்தம் - காரணம் இதுதானா?

**உடன்பிறப்பே,**

புதுடெல்லியிலிருந்து ஒரு செய்தி வெளியிடப்பட்டு அது எல்லா ஏடுகளிலும் வந்திருக்கிறது பார்த்தாயா.

இம்மாதம் 20-ந் தேதியன்று பார்லிமெண்ட் கூட்டுக் கூட்டத்தில் (மக்களவை, மாநிலங்களவை) குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்துவாராம். அதனையொட்டி ஏடு தந்துள்ள விபரம் வருமாறு.

குடியரசுத் தலைவர் தமது உரையில் 1978-79-ஆம் ஆண்டுக்கான ஜனதா அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் அறிவிப்பார். குடியரசுத் தலைவர் உரை என்பது ஒரு முக்கியமான கொள்கை அறிக்கையாகும். கடந்த பதினோரு மாதங்களாக ஜனதா அரசு செய்தவற்றை இந்த உரை விவரிக்கும்.

இப்படிச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. குடியரசுத் தலைவர் 1978-79-ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் அறிவிப்பாராம்! எவ்வளவு வீண் வேலை பார்த்தாயா? காலத்தையும் நேரத்தையும் உணராமல் எதற்காக இந்த மாதிரி மரபுகளையெல்லாம் காப்பாற்றுவதில் மத்திய அரசினர் இவ்வளவு அக்கறையெடுத்துக் கொள்ளவேண்டும்? தமிழ் நாட்டில் உள்ள எம்.ஜி.ஆர். ஆட்சியினரைக் கலந்து கொண்டிருந்தால் இவர்களும், இவர்களுக்கு அரிய ஆலோசனைகளை வழங்குகிற அதிகாரிகளும் எத்தகைய பொன்னான யோசனைகளையெல்லாம் கூறி; குடியரசுத் தலைவர் உரையே இல்லாமல் செய்வதற்கு வழி காட்டியிருப்பார்கள் தெரியுமா?

தவிர்க்க முடியாமல் ஏற்பட்ட, அல்லது தவறாக ஏற்பட்ட முன்மாதிரி என்ன இருக்கிறது என்று தேடிப்பார்த்து அந்த

முன்மாதிரியை துணைக்கு அழைத்து - கவர்னர் உரை இல்லவே இல்லை என்று ஒரேயடியாக அடித்து விட்டார்களே!

கவர்னர் பதவியென ஒன்றை ஏற்றுக் கொண்டிருக்கிற வரையில், அவர் வாயிலாக அறிவிக்கப்படுகிற அரசாங்கத்தின் கொள்கைகளை மன்றத்தில் ஐந்தாறு நாட்கள் விவாதிப்பது என்ற முறையும் - அதன் வாயிலாக உறுப்பினர்களுக்குக் கிடைத்த வாய்ப்பும் பறிக்கப்பட்டுவிடுவது சரியல்ல என்று எதிர்க்கட்சி, பொறுப்புடன் எடுத்துக் காட்டினால் அதெல்லாம் அரசியல் என்று நிருபர்களிடம் விமர்சனம் செய்கிற அளவுக்குத் தமிழக அமைச்சர்கள் திறமை படைத்தவர்களாக இருக்கிறார்களே; இந்தத் திறமை யாருக்கு வரும்?

குடியரசுத் தலைவர், இந்த ஆண்டுக்கான அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் அறிவிப்பாராம்! அத்துடன் கடந்த 11 மாத ஆட்சியில் ஜனதா அரசு செய்தவற்றையும் விவரிப்பாராம்! அதன் பிறகு நிதி அமைச்சர் எச்.எம். படேல், வரவு செலவுத் திட்டத்தை அவையில் வைப்பாராம்!

இங்கு அப்படியில்லை! அங்கே வண்டிக்கு முன்னால் குதிரையைப் பூட்டுகிறார்கள்! இங்கே - ஒரே புரட்சி! - குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டுகிறார்கள்!

அதாவது நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, விவாதங்கள் முடிவுற்று, தனித் தனி மானியக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்ட பிறகு - இரண்டு மூன்று மாதங்கள் கழித்து, 1978-79-ஆம் ஆண்டுக்கான அ.தி.மு.க. அரசின் கொள்கைகள், திட்டங்கள் என்ன என்பதைக் கவர்னர் உரையின் வாயிலாக நாட்டுக்கு அறிவிக்கப் போகிறார்களாம்!

இப்படிப்பட்ட ஒரு புரட்சியை, டெல்லியிலே இருப்பவர்களால் செய்ய முடிந்ததா?

அவர்கள் முதலில் அரசின் கொள்கையை அறிவித்துவிட்டு, அதைத் தொடர்ந்து பட்ஜெட்டை வழங்கப் போகிறார்கள்.

இங்கே இவர்கள் முதலில் பட்ஜெட்டை வழங்கிவிட்டு பிறகு சில மாதங்கள் கழித்து அரசின் கொள்கையை கவர்னர் உரையில் கூறப் போகிறார்கள்.

ஒருவேளை, நிதி நிலை அறிக்கையிலேயே அரசின் கொள்கையையும் அறிவித்துவிடக் கூடும். அப்படி அறிவித்துவிட்டால், சில மாதங்களுக்குப் பிறகு கவர்னர் உரையேகூட தேவையில்லை.

இந்த யுக்திகள் எல்லாம் டெல்லியில் இருப்பவர்களுக்குத் தெரியவில்லை. முதலில் கொள்கை விளக்கமாம் - பிறகு பட்ஜெட்டாம்! பாவம்; மரபுகளைக் கட்டிக்கொண்டு அழுகிறார்கள்!

உடன்பிறப்பே! கவர்னர் பதவி தேவையா இல்லையா? அது வேறு விவகாரம்! அந்தப் பதவி இருக்கும் வரையில் மரபுகளின்படி கவர்னர் உரை இருந்திருக்க வேண்டாமா? இதுவே இன்று நாம் எழுப்புகிற கேள்வி.

அரசியல் அமைப்பும் ஆளுநர் உரையும் என்ற தலைப்பில் முரசொலியில் நேற்று சென்னையிலும் இன்று வெளியூரிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரையைப் படிப்பவர்கள்; இந்த அரசு, அரசியலமைப்புச் சட்டத்திற்கு எந்த வகையில் முரணாகச் செயல்படுகிறது என்பதை விரிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

நான், தொடக்கத்தில் இந்தச் சட்ட நுணுக்க விபரங்களையெல்லாம்கூடக் கிளறாமல் - இருக்கின்ற மரபுகளை மாற்றிட வேண்டாமென்றுதான் அறிக்கை வாயிலாக வேண்டுகோள் விடுத்தேன்.

எனக்கு முன்பாகவே, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மாநிலக் குழு அரசின் போக்கைக் குறைக் கூறி அறிக்கை வெளியிட்டது.

அதற்குப் பிறகும் தங்கள் முடிவை மாற்றிக் கொள்ள நிறைய அவகாசம் இருந்த போதிலும் அரசு, தனது பிடிவாதத்தை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை.

இப்போது சில உண்மையான காரணங்கள் பரவலாகப் பேசப்படுகின்றன. முதல்வரின் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை யொட்டி, பட்ஜெட் கூட்டத்தொடரை விரைவில் முடித்திட வேண்டியிருக்கிறதாம்!

வெளிநாட்டில் குறிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலை மாற்றுவதற்கு இயலாத சூழ்நிலையாம்!

கவர்னர் உரையென்றால் அதற்கு ஒரு வாரம் தேவைப்படும் - பிறகு பட்ஜெட் சமர்ப்பிக்க இடைவெளி பத்து நாட்களாவது தேவைப்படும் - இப்படிச் சுமார் இருபது நாட்கள் தேவைப்படுவதால் - பட்ஜெட் கூட்டத் தொடரின் காலம் நீண்டுவிடக் கூடும். அதை அடிப்படையாகக் கொண்டுதான் முதலிலேயே கூட்டத் தொடரை முடித்து வைக்காமல் (Prorogue செய்யாமல்) அதனையே காரணமாகக் காட்டி, கவர்னர் உரையை இல்லாமல் செய்து விட்டார்கள் என்று கூறப்படுகிறது.

வேறு தவிர்க்க முடியாத காரணங்கள் எதையும் அவை முன்னவரோ மற்றவர்களோ இதுவரையில் காட்ட முனைய வில்லை. இருந்தால்தானே எடுத்துச் சொல்வதற்கு?

செய்துவிட்டத் தவறுக்குச் சப்பைக்கட்டுகள் கட்டப் பார்ப்பதும் - சட்டங்களின் சந்து பொந்துகளில் நுழைய நினைப்பதும் - மன்றம் கடைப்பிடிக்க வேண்டிய மரபுகளுக்குப் பொருத்தமுடையதல்ல!

முதல்வர், வெளிநாட்டில் இருக்கும்போது கூட, மற்ற அமைச்சர்களையும் - அவை முன்னவரையும் கொண்டு - சட்ட மன்ற நடவடிக்கைகளை நீட்டித்துக் கொள்வதற்கு வழியில்லாமல் போகவில்லை.

அதற்குள் இப்படி அவசரப்பட்டு ஒரு முடிவை எடுத்துவிட்டு, அது சரியல்ல என்கிறவர்கள் மீது சீறிப்பாய்வது தேவைதானா? என்பதை ஆரஅமரச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த அரசினரைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கும் என்மீது அவர்கள் காய்ந்து விழத்தான் போகிறார்கள்!

அன்புள்ள,

மு. க.

(19-02-1978)

# 538. குடியரசுத் தலைவர் உரையும் - நமது கருத்துக்களும்!

**உடன்பிறப்பே,**

நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் ஆற்றியுள்ள உரையினைப் படித்திருப்பாய். நடப்பு ஆண்டுக்கு ஒரு அரசு நிறைவேற்றத் தொடங்குகிற திட்டங்களையும் அவற்றிற்கான அடிப்படைக் கொள்கைகளையும் நிதிநிலை அறிக்கை மன்றத்தின் முன் வைக்கப்படுவதற்கு முன்பாக ஆற்றப்படுகிற அரசின் கொள்கை விளக்க அறிவிப்புத்தான் குடியரசுத் தலைவரின் உரையாகும்.

இந்த ஆண்டு அவரது உரையில்;

மக்களின் தீர்ப்புக்கு இணங்க அரசாங்கம் முதல் வேலையாக அரசியல் சாசனத்தில் நுழைக்கப்பட்டிருந்த சர்வாதிகாரப் பிரிவுகளை நீக்கியது. இதற்காக மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு அவைகளும் அரசியல் சட்ட 44-வது திருத்த மசோதாவை நிறைவேற்றியுள்ளன, இந்தத் திருத்த மசோதா முழுமை பெற்று உறுதி செய்யப்படுவதற்காக தற்போது மாநிலச் சட்டமன்றங்களின் முன் இருக்கிறது. மேலும் 42-வது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் ஏற்பட்டுள்ள சீர்கேடுகளை அகற்றுவதற்கான விரிவான மசோதாவுக்கு நகல் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி அரசியல் அமைப்புச் சட்டத்தில் பூசப்பட்டுள்ள கறைகளை அகற்ற அரசு எடுக்கும் முயற்சிக்கு எல்லாப் பிரிவினரின் ஒத்துழைப்பும் கிடைக்குமென நம்புகிறேன். எதிர்காலத்தில் அரசியல் சட்டத்தைப் பயன்படுத்தி ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளை வேரறுக்கும் முயற்சிக்கு இடம் தராமல் அரண் அமைப்பது இன்றியமையாத ஒன்றாகும்.

குடியரசுத் தலைவர் உரையில் நாம் படித்து மகிழத்தக்க ஒரு பகுதியாகும் இது! ஜனநாயகத்தின் அடித்தளம் குலைந்து விடாமல் பாதுகாப்பதில் நமது கழகம், எத்தகைய நிலைமைகளையும்

சந்திப்பதற்குத் தயாராக உள்ள கட்சி என்பதைக் கடந்தகால நிகழ்ச்சிகள் நாட்டுக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன.

இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் சர்வாதிகாரத்தின் கரம் ஓங்கியிருந்திருக்குமேயானால், இப்படியொரு உரை குடியரசுத் தலைவரின் உரையாக இருந்திருக்காது!

எதேச்சாதிகார சக்திகள் வலுப்பெறுவதற்கு இன்னும் எத்தகைய மாற்றங்களை அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்து ஜனநாயகத்தை அலங்கோலப் படுத்தியிருப்பார்களோ - தெரியாது!

இன்று ஜனநாயக அடித்தளம் காப்பாற்றப்பட்டு விட்டது. அதனை மேலும் உறுதிப்படுத்த வேண்டிய பணி, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்க வேண்டும்.

அந்த அடித்தளத்தின் மீது மக்களின் நல்வாழ்வுக்காகக் கட்டப்பட வேண்டிய கட்டிடம் புயலால், மழையால், இடியின் தாக்குதலால் இம்மியளவும் இடிந்து போகாத வகையில் பலம் பொருந்தியதாக இருந்திட வேண்டும்.

நாற்பதுக்கும் மேற்பட்ட திருத்தங்களைச் செய்து கொண்டுள்ள அரசியல் அமைப்புச் சட்டம்; மத்திய மாநில உறவுகளைப் பற்றியும் ஆராய்ந்து மத்தியில் கூட்டாட்சி அமையத்தக்க அளவுக்கும் - மாநிலங்களில் முழுமையான சுயாட்சித் தன்மை நிலைப்பெற்று மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிப் பணியாற்றக் கூடிய வாய்ப்பினைப் பெறுவதற்கும் ஏற்றவாறு இன்னும் திருத்தப்படவில்லையே என்ற ஏக்கத்தை நாம் வெளியிடாமல் இருக்க முடியவில்லை. அத்தகைய ஒரு திருத்தத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று குடியரசுத் தலைவரின் உரையில் அரசு, தனது கொள்கையை அறிவித்திருக்குமானால் மெத்தவும் மகிழ்ச்சி அடைந்திருக்க முடியும்.

ஜனதா கட்சி உருவாகத் தலையாய காரணமாக விளங்கிய ஜெயப்பிரகாஷ் அவர்களும் சரி; மற்றுமுள்ள ஜனதாத் தலைவர்களும் சரி; மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள், மாநில அரசுகளுக்குப் பங்கிடப் படவேண்டுமென்ற கருத்துக் கொண்டவர்கள்.

ஊராட்சி மன்றங்களில் தொடங்கி, அதிகாரங்கள் பகிர்ந்திடப்பட வேண்டுமென்ற கொள்கையையும் எடுத்துரைத்தவர்கள். அண்மையிலேகூட நமது குடியரசுத் தலைவர் அவர்கள் வேறு சில நேர்வுகளில் கருத்து வெளியிட்டபோது மாநில சுயாட்சிக்கு ஆதரவாகவே எண்ணங்களை வழங்கியுள்ளார்.

எனவே, நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில் மாநிலங்களின் சுயாட்சி முழுமை பெற அதிகாரப் பகிர்ந்தளிப்புக்கான திருத்தங்கள் வரும் என்று அறிவிக்காதது ஏமாற்றம் தரத்தக்க ஒன்றுதான்.

எனினும், நம்பிக்கையை இழக்காமல் தொடர்ந்து நமது கருத்தை வலியுறுத்திக் கொண்டேயிருந்தால் - வெற்றி கிட்டும் என்கிற உணர்வோடு பயணத்தை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அரிஜனங்கள், சிறுபான்மையினர், கிராம மக்கள், விலைவாசி போன்ற பிரச்சினைகள் கடந்த முப்பது ஆண்டுக் காலமாக உரத்தக் குரலில் பேசப்பட்டு வருகிறது. ஆனால் அவற்றிற்குத் தீர்வுகாண வேண்டிய அதிகாரங்களைக் கையில் வைத்திருக்கிற மத்திய அரசு, அவைகளைக் கோஷங்களாக்கி தேர்தல் நேரத்தில் மக்களைச் சந்திக்கப் பயன்படுத்திக் கொண்டதே தவிர உற்ற பலன் எதுவும் விளைந்திடவில்லை.

ஆறாவது ஐந்தாண்டு திட்டம் வருகிற ஏப்ரல் முதல் தொடங்கும் என்று குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டமாவது அடித்தளத்து மக்களை வாழவைக்கும் திட்டமாக - அங்கொன்றும் இங்கொன்றுமாக நல் விளைவுகளைக் காட்டாமல் நாடு தழுவிய நிலையில் விரிவான முறையில் ஏழை எளியோர் வாழ்வில் ஏற்றிவைக்கும் தீபமாக அமைந்திட வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும்.

நூற்றுக்கணக்கான கோடீஸ்வரர்களை உருவாக்குவதல்ல திட்டத்தின் விளைவு! கோடிக்கணக்கான ஏழை மக்களின் முகத்தில் புன்னகையை வரவழைத்து அவர்களும் நல்ல வீட்டில் வாழ - நல்ல உணவு கொள்ள - நல்ல உடை உடுத்த - புதியதோர் நாட்டை உருவாக்குவதாகத் திட்டம் செயல்பட வேண்டும்.

நெடுங்காலமாக இந்திய நாட்டுக் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டைடப் பொறுத்தவரையில் மாநிலத்திற்குரிய அதிகாரங்களை வைத்துக்கொண்டே, காமராஜர் காலந் தொடங்கி - கழகம் அரசோச்சிய 1975-ஆம் ஆண்டு முடிய நமது கிராமங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்வதில் மற்ற பல மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறோம்.

இன்றுள்ள மத்திய அரசும், கிராமங்கள் மீது தனி அக்கறை கொண்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

எந்த அரசானாலும் கோஷங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டு - நிறைவேற வேண்டிய திட்டங்களைக் கிடப்பிலே போட்டுவிடுமேயானால் - அறிவிப்புக்கள் அறிவிப்புக்களாகவே இருக்கும் -

ஆகவே, அடித்தள மக்கள் நல்வாழ்வு - அரிஜனங்கள், பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றம் - சாதி ஆணவம் ஒழிந்த சமத்துவம் - ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் - இவைகளைக் காண்பதிலும்; மக்களோடு நெருங்கியுள்ள மாநில அரசுகளுக்கு இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு, நேராவண்ணம் சுயாட்சி வழங்குவதிலும் ஜனதா அரசு, தயக்கம் காட்டலாகாது எனக் கூறி - தயக்கம் காட்டாது என்ற நம்பிக்கையுடன் இந்தக் கடிதத்தை முடிக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(22-02-1978)

# 539. கடமை வீரர்காள் - கட்டுப்பாடெனும் - கவசம் பூணுவீர்!

**உடன்பிறப்பே,**

ஏறத்தாழ இருபதாயிரத்திற்கும் சிறிது மேற்பட்ட எண்ணிக்கையுள்ள கழகக் கிளைகள் அனைத்துக்கும் அமைப்புத் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கிறது.

இவற்றில் மொத்தம் இரண்டாயிரத்திற்குட்பட்ட கிளைக்கழகத் தேர்தல்கள் தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களால் வேறு தேதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இந்திராவுக்கு எதிராக கழகம் நடத்திய கறுப்புக்கொடி நிகழ்ச்சியின் தொடர்பாக இன்னமும் அரசினர் நமது உடன்பிறப்புகளின் மீது வழக்குகளைத் தொடுத்த வண்ணமுள்ளனர். அதன் காரணமாகப் பல பகுதிகளில் நூற்றுக்கணக்கானவர்கள் தண்டனையேற்றுச் சிறை புகுந்துள்ளனர். அவர்கள் விடுதலையாகும் வரையில் அந்தப் பகுதிகளில் நடைபெற வேண்டிய கிளைகளின் தேர்தல்கள் வேறு தேதிகளுக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் உறுப்பினர் அட்டைகள் போய்ச் சேர்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், வேறு சில இடங்களில் உறுப்பினர்த் தாள்கள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்ததில் விளைந்த தவறுகள், அந்த அடிப்படையில் எழுப்பப் பட்டுள்ள தீர்வு காணவேண்டிய பிரச்சினைகள், ஓரிரு இடங்களில் போட்டியின் கடுமை காரணமாக எழுந்துள்ள சிக்கல்கள், இது போன்றவைகளால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அந்தக் கிளை அமைப்புகளின் தேர்தல்கள் விரைவில் நடைபெறுவதற்கான ஆக்க வேலைகளை நமது அமைப்புச் செயலாளர் நீல நாராயணன் அவருக்கேயுரிய அமைதியுடனும் பொறுமையுடனும் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

தலைமைக் கழகத்து அலுவலாளர்களும் கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக இந்த தேர்தல்களை யொட்டி அயராது ஆற்றுகிற பணியை எப்படித்தான் பாராட்டுவது என்றே புரியவில்லை.

அறிவகத்திற்குள் நுழைந்தால் நூற்றுக்கணக்கான எழுத்தர்கள், நிரந்தர அலுவலர் - தற்காலிக அலுவலர் என்ற நிலையில் உறுப்பினர் அட்டைகளை அடுக்கிக் கொண்டிருப்பவர்களும், அவற்றில் உறுப்பினர் பெயர், முகவரிகளை பொறித்துக் கொண்டிருப்பவர்களும் - உறுப்பினர் தாள்களை சரிபார்த்துக் கொண்டிருப்பவர்களும் அந்தந்த கிளைகளுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் உறுப்பினர் சீட்டுக்களையும் ஏனைய விபரங்களை அனுப்பிக் கொண்டிருப்பவர்களும் - இவற்றுக்கிடையே தங்கள் தங்கள் கிளைகளில் ஏற்பட்டுவிட்ட பிரச்சினைகளை எடுத்துக்கூற அறிவகம் முழுதும் குழுமியுள்ள கழகத்தினருக்கு விளக்கம் அளிப்பவர்களும் - அடடா! அந்தக் காட்சியே, நமது கழகத்தின் ஜனநாயக அமைப்பு முறைக்குச் சாட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

ஜனநாயக முறை எவ்வளவு நேர்த்தியானதோ - அதைப் போலவே சில வேளைகளில் அந்த நல்ல முறைக்குக் கேடுவிளைவிக்கக்கூடிய நிலைமைகளும், தோன்றி விடுவதுண்டு அல்லது தோற்றுவிக்கப்படுவதுண்டு. அவற்றையும் சந்தித்துச் சமாளித்துத் தீர்வு கண்டு போற்றிட வேண்டிய மாண்புறு முறைதான் ஜனநாயக முறையாகும்.

அதனை ஒழுங்குபடுத்திக் காப்பதில் நமது தலைமைக் கழகமும், அனைத்து அமைப்புகளும் அக்கறை கொண்டு அயராது தொண்டாற்றுகின்றன எனினும் - இருபதாயிரம் கழகங்களின் தேர்தல்கள் நடைபெறுகின்றன என்கிறபோது சில தவிர்க்க வொண்ணாததும், எதிர்பாராததுமான பூசலும் போட்டி உணர்வுகளும் சில இடங்களில் கசப்புக்கும் காழ்ப்புக்கும் வித்திட்டு விடுவது உண்டு.

கிளைக் கழகமெனும் ஒவ்வொரு பாசறையிலும் செயல்வீர மாமணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, புதுவேகத்துடன் பணிபுரியப் புறப்பட்டிருக்கிறார்கள்.

அண்ணா தந்த கழகத்துப் பெரும்படையின் அந்தச் சிப்பாய்களையெல்லாம் வாழ்த்தி வரவேற்கிறேன்.

சிறை சென்றும், சித்திரவதைகளையேற்றும், அயராது கழகப்பணி புரிந்த உடன்பிறப்புகள் சிலபேர், இந்த அமைப்புகளின் தேர்தல்களில் வெற்றி பெற இயலாது போயுள்ளனர். அந்த உடன்பிறப்புகள் அமைப்பில் ஒரு இடத்தைப் பெறவில்லையெனினும் என் இதயத்தில் நல்இடத்தைப் பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை.

வெற்றி பெற்றோர், பெறாதோர் இருவருமே கொள்கை முரண்பாட்டால் போட்டியிட்டோர் அல்லர்! கொள்கையைக் கட்டிக் காக்க யார் இந்த முறை பொறுப்பேற்பது என்று போட்டியிட்டவர்களே தவிர வேறல்ல!

இந்தப் போட்டிகள் எப்படி அமைந்திருந்தன? அமைப்பின் பொறுப்புகளுக்கு நிற்கும் வேட்பாளர்கள், பொதுத் தேர்தல்களில் வாக்காளர்களைச் சந்தித்து ஓட்டுக் கேட்பதுபோலவே அமைப்பின் தேர்தல்களும் தங்களுக்காக, இரவு பகல் அலைந்து ஆதரவு திரட்டினர்!

அமைப்புகளின் பொறுப்புகளுக்கு வந்தால் அடக்குமுறைக்கு முதல் பலியாக நேரிடும் - அறப்போர்களில் முன் வரிசையில் நின்றிடவேண்டும் - அதற்கு உறுதி கொண்டவர்களே, அந்தப் பொறுப்புக்குவர ஆசைப்படுங்கள்; என்று நான் பல முறை தெளிவுபடுத்திய பிறகும் இத்தகைய போட்டியென்றால், உடன்பிறப்பே! இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும்? என்ற அண்ணனின் மொழி, நம் செவிகளில் செந்தேனைப் பாய்ச்சுகிறது அல்லவா?

வென்றவர்கள், வெற்றி வாய்ப்பு இழந்தவர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும். வெற்றி வாய்ப்பு இழந்தவர்களும் பொறுப்புக்கு வந்தவர்களை மதித்து ஏற்றுக்கொண்டு நமது கழகத்தின் மாண்பினைக் காத்திட வேண்டும்.

அவ்வப்போது இந்தத் தேர்தல்களில் எழுகிற பிரச்சினைகளை, நமது பொதுச் செயலாளர் அவர்களும் - அமைப்புச் செயலாளரும் - மற்றும் தலைமைக் கழகத்தின் செயலாளர்களும் தீர்த்து வைப்பதில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றனர்.

சிற்சில இடங்களைப் பொறுத்து வந்துள்ள பிரச்சினைகளில் தவறு எந்த இடத்தில் நடந்திருந்தாலும் - அவற்றைக் களைந்திடவும் நல்ல முடிவுகள் ஏற்படவும் அவர்களும் நானும் ஏற்றதைச் செய்திடத் தயங்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போட்டியிட்டோர் - அடுத்துவரும் அமைப்புத் தேர்தல்களில் போட்டுயிடுவோர் அனைவருமே - கழகத்தின் கடமையாற்றும் வீரர்கள்தான்! என் அன்பு உடன்பிறப்புகள்தான்!

கடமையுணர்வோடு, கண்ணியத்தைக் கடைப்பிடித்துக் கட்டுப்பாடெனும் கவசம் பூண்டிடத் தவறாதீர் என்று அவர்களின் கரங்களைப் பற்றிக் கேட்டுக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே! ஒவ்வொரு அமைப்பிலும் ஒற்றுமைத் தென்றல் வீசிட உன் உழைப்பு பயன்பட வேண்டும்! அதற்குக் குந்தகம் விளைவிப்போர் யாராயினும் அவர்கள் நம் கழனியில்தான் விளைந்தார்கள் எனினும் களை எனக் கருதப்படுவர்!

அன்புள்ள,

மு. க.

(23-02-1978)

**நன்றி : "நம் நாடு" (19-2-1978)**

# 540. உன்னை நம்பித்தான்!

**உடன்பிறப்பே,**

கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தல்களில் நமது கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு நீ அயராது பாடுபடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த மாநிலங்களில் ஆட்சியைப் பிடிப்பதற்கோ அல்லது பெரும் எதிர்க்கட்சியாக அமர்வதற்கோ கழகம் போட்டியிடவில்லை. தி.மு. கழகத்தின் குரல்; கொள்கை முழக்கம்; அந்தச் சட்டமன்றங்களிலும் கேட்க வேண்டுமென்பதே நமது ஆசை! இந்திய அரசியல் அரங்கில் நமது மனதுக்கு மன நிறைவை அளிக்கக்கூடிய அளவுக்கு மாநில சுயாட்சிக் கோரிக்கை உருவெடுத்து உலவுகிறது. அந்தக் கோரிக்கையை ஆந்திர, கர்நாடக மாநில சட்டமன்றங்களிலும் நமது கழகத்தின் சார்பில் எடுத்துரைக்க ஒருசிலராவது அந்த மன்றங்களில் இருந்திட வேண்டாமா? அதை நெஞ்சில் நிறுத்தி அன்பு உடன்பிறப்பே, உன் சோர்வில்லாத பணியினால் இயன்றவரையில் வெற்றியினைத் தேடிக் கொடு!

ஆந்திரத்தில் நகரி, நெல்லூர் தவிர மற்ற தொகுதிகளில் நமது கழகம் காங்கிரசை ஆதரிக்கிறது.

கர்நாடகத்தில் பாரதி நகர், சிவாஜி நகர், சாந்தி நகர், காந்தி நகர், கோலார் தங்கவயல் தவிர மற்ற இடங்களில் நமது கழகம் ஜனதா கட்சியை ஆதரிக்கிறது.

மராட்டியத்தில் ஜனதா கட்சிக்கு நமது கழகத்தின் ஆதரவைத் தருவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்திரா கட்சியை எதிர்த்து நிற்கிற வலிமையுள்ள கட்சிக்கு அந்தந்த மாநில நிலைமைக்கு ஏற்ப நமது கழகத்தின் ஆதரவைத் தருகிறோம். யார் ஆட்சி அமைக்கிறார்கள் என்பதைவிட, யார் ஆட்சி அமைக்கக் கூடாது என்பதிலே நாம் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறோம்.

நான் முன்பே குறிப்பிட்டதுபோல இந்தத் தேர்தல்கள் ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் நடைபெறுகிற போராட்டம்!

ஜனதா அரசோ அல்லது ரெட்டி காங்கிரஸ் அரசோ, தவறுகள் செய்தால் கூட அதனைச் சுட்டிக்காட்டுகிற உரிமையை, தட்டிக் கேட்கிற உரிமையை ஜனநாயகத்திலே தான் நாம் பெற முடியும். இந்திரா அரசின் நெருக்கடி காலக் கொடுமையை நினைத்துப் பார்ப்பவர்கள் மறு படியும் ஏமாளிகளாக மாறி இந்திரா காந்தியை ஆதரிக்க மாட்டார்கள்.

இந்திராவுக்கோ, அல்லது இந்திராவை வெளிப் படையாகவோ; அல்லது மறைமுகமாகவோ ஆதரிக்கிற கட்சிகளுக்கோ வாக்களிப்பதும் வெற்றி தேடித்தர முயல்வதும் ஜனநாயக நெறிக்குத் தோண்டப்படுகிற குழியாகவே ஆகிவிடும்.

தமிழக முதலமைச்சர் பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் அவையில் ஆற்றிய உரையில் இந்திய ஜனநாயகத்தைக் காத்திடப் போர் புரிந்த தலைவர் ஜெயப்பிரகாஷைத் தாக்கிடத் தவறவில்லை.

இப்போது பாட்னா வரையில் சென்று ஜெயப்பிரகாஷரை சந்தித்துவிட்டு வந்தார் என்றும் செய்திகள் வந்தன.

இந்திராவை ஆதரித்த வேகத்தில் ஜே.பி. போன்றவர்களைத் தரக்குறைவாகப் பேசிய தவறை உணர்ந்து திருந்திவிட்டார் என எண்ணினோம்.

ஆனால், ஆந்திர மாநிலத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சித்தூரில் பேசும்போது ஜெயப்பிரகாசர் இந்திய ஜனநாயகத்தை அவமதித்தவர் என்றும் ராணுவத்தையும் போலீசையும் பணியாற்ற விடாமல் தடுத்தவர் என்றும் இப்படிப்பட்டவர்கள் எப்படிப்பட்ட இடத்தில் இருந்தாலும் எதிர்த்தே தீருவேன் என்றும் முழங்கியிருக்கிறார்.

இதே முழக்கத்தைத்தான் ஏழு மாதங்களுக்கு முன்பு சட்டப் பேரவையிலும் செய்தார்.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் பற்றி, ஜெயப்பிரகாசர் எத்தனையோ முறை விளக்கங்களும் - மறுப்புக்களும் தெரிவித்த

பிறகும், இன்னமும் நமது முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், இந்திரா காந்தி பாணியிலேயேதான் பேசிக் கொண்டிருக்கிறார்.

இதிலிருந்தே இந்திரா காங்கிரசுக்கும் இவர்களுக்குமுள்ள உறவு நிலைப்பெற்ற ஒன்று என்பது வெளிப்படையாகத் தெரிகிறது அல்லவா?

எனவே, உடன்பிறப்பே! சர்வாதிகாரத்திற்குத் துணைபோகிற சக்திகளையும் சர்வாதிகார வெறியையும் தோற்கடிக்க நமது கழகம் எடுத்துள்ள முடிவுகளுக்கேற்ப உன் உழைப்பை முடுக்கிவிடு!

நமது கழகக் குரல் கர்நாடக, ஆந்திர மாநில சட்ட மன்றங்களில் ஒலிப்பதற்கு இடைவிடாது பணியாற்று!

வசதிகள் குறைவு! அறிவேன் நான்! ஓடியாடிப் பணிபுரியும் உன்னை நம்பித்தான் இருக்கிறது கழகம்!

அன்புள்ள,

மு. க.

(24-02-1978)

# 541. "பத்திரிகா தர்மம்" பார்த்தாயா?

**உடன்பிறப்பே,**

25-2-1978 அன்றைய தினம் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை, பெரிய பத்திரிகைகள் என்று பேர் எடுத்த பத்திரிகைகள் எப்படி வெளியிட்டிருக்கின்றன பார்த்தாயா?

அரசிதழ்ப் பதிவுபெறாத ஊழியர்கள் நடத்துகிற அறவழி மறியலையொட்டி நமது கழகச் சார்பில் நானும், மற்றக் கட்சிகளின் தலைவர்களும் இரண்டொரு நாட்களுக்கு முன்பு அவையில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து எங்களின் கருத்துக்களைத் தெரிவித்தோம். கைதாகியுள்ள என்.ஜி.ஓ.க்களை விடுதலை செய்து பேச்சு வார்த்தை நடத்த அரசு முன்வரவேண்டுமென்றும் - ஆளுங் கட்சியாக தி.மு.க. இருந்தது என்ற நிலையில் நிதியாதாரங்களைப் பொறுத்து அவர்களது கோரிக்கைகளை அப்படியே ஏற்றுக் கொள்வதில் உள்ள இடையூறுகளை நாங்கள் உணராமல் இல்லையென்றும் எனினும் அரசின் அணுகுமுறை சரியாகக் கடைப்பிடிக்கப் படவில்லையென்றும், அவர்கள் பலமுறை முயன்றுங்கூட முன்கூட்டியே அவர்களுடன் கூடிப் பேச முதலமைச்சர் மறுத்து விட்டது வருந்தத் தக்கது என்றும் கருத்துப்பட நான் பேசினேன். இந்த அடிப்படையிலேயே மற்றக் கட்சிகளின் சார்பில் எண்ணங்கள் வெளிப்படுத்தப்பட்டன. இறுதியாக பதில் அளித்த நிதி அமைச்சரும் அவை முன்னவருமான மாண்புமிகு மனோகரன் அவர்கள், அவர்களோடு கலந்து பேசத் தயார். சொன்னதைச் செய்வதற்கு முதலமைச்சர் இருக்கிறார். அவர் நிச்சயம் விடுதலை செய்யும் தகவலை அறிவிப்பார் என அறிவித்தார். அந்த பதில் மன நிறைவை அளிப்பதாக அனைத்துக் கட்சிகளின் சார்பில் அன்றைக்கே தெரிவிக்கப்பட்டது.

ஆனால் முதலமைச்சர், 25-ஆம் நாள் காலை வந்ததும் என்.ஜி.ஓ. பிரச்சினைப் பற்றிப் பேசியபோது அவர்களை உடனடியாக விடுதலை செய்ய இயலாது என்று கூறினார்.

உடனே கழகச் சார்பில் நான் எழுந்து இது முன்பு அவை முன்னவர் தந்த உறுதிமொழிக்கு முரணாக இருக்கிறது. முன்னவர் உறுதிமொழிக்கும் முதல்வர் பேச்சுக்கும் உள்ள முரண்பாட்டை எதிர்க்கும் அடையாளமாக வெளிநடப்பு செய்கிறோம் என்ற கருத்தைக் கூறி கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தோம். அதற்குப் பிறகு கட்சிகளின் தலைவர்கள் சங்கரய்யா, உமாநாத், ஜேம்ஸ், அழகர்சாமி ஆகியோர் கோரிய விளக்கங்களுக்கு இடையிடையே பதில் அளித்த முதலமைச்சர் அவர்கள்,

எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி கூறிய குற்றச்சாட்டு, முன்னவர் உத்திரவாதம் தந்தார். அதை இப்போது நான் செய்யவில்லை என்பதாகும். அவர் (மனோகரன்) அப்படி உத்திரவாதம் தரவில்லை

என்று திட்டவட்டமாகச் சொன்னார். அந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காக பொதுப்பணி அமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள் முன்வந்து, முதல்நாள் நிதி அமைச்சரான அவை முன்னவர் மனோகரன் அவர்கள் என்ன பேசினார் என்ற சபைக் குறிப்பைப் படித்துக் காட்டினார். அதில் முதல் பகுதியாக;

உள்துறை பொறுப்பு வகிக்கும் முதல்வர் வர இருக்கிறார். வந்ததும் அவர்களோடு கூடிக் கலந்து பேசுவார். பிறகு கைது செய்யப்பட்டவர்கள் எப்போது விடுதலை செய்யப்பட வேண்டுமென்று அவர் அறிவிப்பார்.

இவ்வாறு அவர் படித்ததும் மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் உமாநாத் அதற்கு அடுத்தபடியாக எதிர்க்கட்சித் தலைவர் கூறியதும் அதற்கு அவை முன்னவர் அளித்த பதிலும் அவைக் குறிப்பின் பின்னால் இருக்கிறது. அதையும் படியுங்கள் என்று கூறியதும் பொதுப்பணித்துறை அமைச்சர் குறிப்பேட்டின் அடுத்த பக்கத்தைப் புரட்டிப் படித்தார். என்ன அது?

நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அவர்களோடு கலந்து பேசத் தயார். சொன்னதைச் செய்வதற்கு முதலமைச்சர் இருக்கிறார். அவர் நிச்சயம் விடுதலை செய்யும் தகவலை அறிவிப்பார்.

இந்த முற்பகுதி, பிற்பகுதி இரண்டையும் வெளியிடு வதுதானே பத்திரிகைகளுக்கு நேர்மை!

பிற்பகுதியை வெளியிட்டு விட்டால், நான் அவையில் எழுப்பிய குற்றச்சாட்டுக்கும் அதன் காரணமாகக் கழகம் வெளிநடப்புச் செய்ததற்கும் நியாயம் ஏற்பட்டு விடுகிறதல்லவா?

அப்படியொரு நற்கருத்து கழகத்தின் மீது மக்களுக்கு ஏற்பட அந்தப் பத்திரிகையாளர்கள் விரும்புவார்களா?

எனவே, தங்களால் முடிந்த அளவுக்கு அந்த ஏடுகள் அவையில் நடந்த உண்மையான நிகழ்ச்சியை இருட்டடிப்புச் செய்திருக்கின்றன.

உடன்பிறப்பே, நீ அந்த ஏடுகளை பொதுமக்களுக்கு அடையாளம் காட்டு! உண்மைகளை மறைத்துச் செய்திகளைத் திரித்திடும் அந்த ஏடுகள் உங்கள் கைகளில் இருக்கலாமா? என்று அவற்றை வாங்கிப் படிப்போரைக் கேள்!

அவற்றின் உருவத்தை பொதுமக்களுக்கு உணர்த்த ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல பிப்ரவரி 25-ஆம் நாள் சட்டப்பேரவை நிகழ்ச்சிகளை அந்த ஏடுகள் வெளியிட்டிருக்கும் முறையை, மற்ற ஏடுகளுடன் நீ ஒப்பிட்டுக்காட்டினாலே போதுமானது!

பாவம்! அந்த ஏடுகளும் பத்திரிகை தர்மம் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதுகின்றன! கதிரவனைக் கையால் மறைத்துவிடலாம் என்று கனவுகாணும் பித்தர்களுக்கும், இத்தகைய ஏடுகளுக்கும் வேறுபாடிருப்பதாகக் கூறமுடியாது.

அன்புள்ள,

மு. க.

(27-02-1978)

# 542. காரணம் பொருந்துகிறதா?

**உடன்பிறப்பே,**

நிதிநிலை அறிக்கை விவாதம் சட்டப் பேரவையில் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் ஒரு வார காலமாக உன்னுடன் கடிதத் தொடர்பு கொள்ள முடியவில்லை. நமது கழகத்தினர் நிதிநிலை அறிக்கை மீது எடுத்து வைத்த சத்தான கருத்துக்களையெல்லாம் நீ படித்து மகிழ்ந்திருப்பாய்.

எதிர்க் கட்சித் தலைவன் என்கிற வகையிலும், நமது கழகத்தின் சார்பிலும் நிதிநிலை அறிக்கை மீது நான் பேசிய போது மாநில சுயாட்சி பற்றிச் சில குறிப்புக்களைத் தந்தேன்.

மாநில சுயாட்சி கேட்டு முதன் முதலாகச் சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தது கழக அரசுதான் என்பதை விளக்கினேன். ஒரு மாநில அரசின் சார்பில் அன்று நாம் தூக்கிப் பிடித்த தீபச் சுடர், இன்று அனைத்திந்தியாவிலும் பல்வேறு மாநிலங்களில் ஒளிவிடத் தொடங்கியிருக்கிறது என்ற கருத்தினை மாமன்றத்தில் எடுத்துக் கூறிய நான், இன்றையத் தமிழ் நாட்டு ஆளுங்கட்சியினர் 1972-ஆம் ஆண்டு வரையில் மாநில சுயாட்சிக் கோரிக்கையில் எவ்வளவு வளமான - வலிமையான கருத்துக்களை மக்கள் மத்தியில் வழங்கினர் என்பதையும் நினைவுபடுத்தினேன்.

அதற்குச் சான்றாக 1972-ஆம் ஆண்டு இன்றைய நிதி அமைச்சர் நண்பர் மனோகரன் அவர்கள் எழுதி வெளியிட்ட அரசியல் அலைகள் என்ற நூலில் இருந்து அவர் தீட்டிய கட்டுரையொன்றைப் படித்துக்காட்டினேன்.

ராஜபாளையம் மாநாட்டில் பிரிவினைப் பிரச்சாரம் நடைபெற்றதாக சிலர் விஷயப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக் கிறார்கள். மாநாட்டில் பேசிய பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் தி.மு.க. கோரும் மாநில சுயாட்சிக் கோரிக்கை பிரிவினைவாதம் அல்ல என்று விளக்கியிருக்கிறார். தி.மு.கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசும்போது அதிகப்படியான அதிகாரங்களைக்

கோரும் அல்லது அளவுக்கு மீறி மத்தியில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பரவலாக்கும் கோரிக்கைக்கு பிரிவினை முலாம் பூசாதீர்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். இது தமிழகம் ஒன்றுக்கே உரித்தான தனிக்குரல் அல்லவென்றும் ஆகையினாலே தி.மு.க.வை தனிமைப்படுத்துகிற முயற்சியினின்று தரங்கெட்ட அரசியல்வாதிகள் விலகிக்கொள்ள வேண்டிய நியாயத்தை வலியுறுத்தியிருக்கிறார். STATE AUTONOMY (மாநில சுயாட்சி) என்பதற்கும் SELF DETERMINATION (சுயநிர்ணய உரிமை) என்பதற்கும் இருக்கின்ற இடைவெளியின் இணைக்க முடியாத தொலைதூரத்தைச் சுட்டிக்காட்டி, இந்த நியாயமான மாநில சுயாட்சிக் கோரிக்கையை கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். ..... இத்துணை தெளிவான விளக்கத்திற்குப் பிறகும் உண்மையை ஒத்துக் கொள்வதற்கு யாருக்காவது தயக்கம் வருமேயானால் அது ஒரு வகையான நோயின் அறிகுறியென்றே நான் கருதுகிறேன்.

நண்பர் மனோகரனின் கட்டுரையிலிருந்து நான் அவையில் படித்துக் காட்டிய பகுதிகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டேன்.

விவாத முடிவில் பதில் அளித்த நிதி அமைச்சர் அவர்கள்,

மாநில சுயாட்சியைப் பற்றி அவர் விரிவாகப் பேசிய போதெல்லாம் அன்றைய முதலமைச்சராக இருந்த நான் அவரை வெகுவாகப் பாராட்டியதையும், அவரது மாநில சுயாட்சி விளக்க உரை தமிழகமெங்கும் ஒலிக்க வேண்டும் என்று நான் ஒரு கூட்டத்தில் பேசியதையும் கூறிவிட்டு; அந்த மாநில சுயாட்சிக் கோரிக்கையை அவர் விட்டு விட்டதற்கு ஒரு காரணத்தையும் சொன்னார்.

உடன்பிறப்பே! என்ன காரணம் தெரியுமா அது?

என்னை முஜிபுர் ரகுமானுடன் ஒப்பிட்டு படங்கள் போட்டார்களாம். பேசினார்களாம்- அதனால் அவர் மாநில சுயாட்சிக் கோரிக்கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாராம். இவர் அவர் கூறும் காரணம்! ஒன்றை மட்டும் உனக்கு நினைவுபடுத்தினால் இன்றைய நிதி அமைச்சர் மனோகரன் அவர்கள் கற்பிக்கும் அந்தக் காரணத்தின் அடிப்படை நொறுங்கிப் போய்விடும்.

ராஜபாளையம் கழக மாநாட்டில்தான் பந்தல் முகப்பில் என் படத்தையும் முஜிபுர் படத்தையும் இணைத்து வைத்து; மாநில சுயாட்சி பற்றிய வாசகங்களையும் அந்தப் படத்தின் கீழே எழுதி வைத்திருந்தார்கள்.

அதுக் குறித்துத்தான் அப்போது சில பத்திரிகைகளும் - எதிர்க்கட்சியினர் சிலரும் தங்கள் விமர்சனங்களை மாநில சுயாட்சிக்கு எதிராகச் செய்தனர். கழகம், பிரிவினையைத் தூண்டுகிறது என்று திரித்துப் பேசினர்.

அந்த ராஜபாளையம் மாநாடு குறித்து எதிர்த்து எழுதிய ஏடுகளை மஞ்சள் ஏடுகள் என்றும், பேசியவர்களை கருத்துக் குருடர்கள் என்றும் - நோயின் அறிகுறிகள் என்று வர்ணித்தவர்தான் அரசியல் அலைகள் என்ற நூலில் கட்டுரை எழுதியுள்ள நண்பர் மனோகரன்.

அதாவது ராஜபாளையம் மாநாட்டையொட்டி அவர் எழுதிய நீண்ட கட்டுரையைத்தான் நான் அன்றைக்குப் பேரவையில் அவர் எதிரிலேயே படித்துக் காட்டினேன்.

நான் படித்த அந்தக் கட்டுரையை முரசொலியில் மீண்டும் ஒருமுறை படித்துப் பார்!

மனோகரன், மாநில சுயாட்சியைக் கைவிட்டதற்கான காரணம் சொல்கிறாரே; அது பொருந்துகிறதா? என்று பார்!

அன்புள்ள,

மு. க.

(4-03-1978)

# 543. "நரகம்" ஒரு விளக்கம்!

**உடன்பிறப்பே,**

மறைந்த நண்பர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களின் நினைவு நாள் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றிருக்கிறது. பல கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டு சம்பத் அவர்களுக்குத் தங்கள் நினைவு அஞ்சலியைத் தெரிவித்திருக் கிறார்கள். நமது முதலமைச்சரும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார். சம்பத் இப்போது உயிரோடு இருந்திருந்தால் அவர்தான் அ.தி.மு.க. அரசின் முதலமைச்சராக இருந்திருப்பார் - அல்லது போலீஸ் அமைச்சராக இருந்திருப்பார் - அந்த அளவுக்கு என் உள்ளத்திலே இடம் பெற்றிருந்தார் என்ற ஒரு கருத்தினைக்கூறி முதலமைச்சர் பாராட்டியிருக்கிறார்.

சம்பத் அவர்கள் தி.மு.கழகத்தை விட்டு பிரிந்த பிறகு, ஊருக்கு ஊர் அவர் பேசிய கூட்டங்களில் ஒரு கிழிந்த சட்டையைத் தூக்கி மக்களிடம் காட்டி, வேலூர் செயற்குழுவில் இரண்டு நடிகர்களால் இவ்வாறு தாக்கப்பட்டேன் என்று மிக உணர்ச்சிக்கரமாக அறிவித்துக் கொண்டிருந்ததை நாடு மறந்துவிடவில்லை. அந்த இரு நடிகர்களில் ஒருவர் எம்.ஜி.ஆர். என்று சம்பத் குறிப்பிட்டதையும் யாரும் மறந்துவிடவில்லை. சம்பத்தின் அன்றைய குற்றச்சாட்டுகள் எதையும் நாம் அன்றும் சரி; இன்றும் சரி - ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால் சில கடந்த கால நிகழ்ச்சிகளை நாம் மறந்துவிட முடியவில்லை: அல்லவா?

முதல்நாள் வரையில் அண்ணா என்று அழைத்த வாய்; அடுத்த நாள் திருவாளர் அண்ணாத்துரை என்று மேடைக்கு மேடை அழைக்கத் தொடங்கியதையும் அண்ணாவை ஒரு சர்வாதிகாரி என்று வர்ணித்ததையும் சரித்திரம் ஒளித்து விடாது அல்லவா?

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு கூட அவரது கல்லறை கடற்கரையில் எழுப்பப்பட்டதற்கு எதிர்க்கட்சியினர் பலர் எதிர்ப்புக் குரல் கொடுத்தபோது அதில் நண்பர் சம்பத் அவர்களின் குரலும் இணைந்திருந்தது என்பதை யார்தான் மறந்துவிட முடியும்.

இத்தனைக் கருத்து வேறுபாடுகளுக்கிடையிலேயும் பழகுவதற்கு இனிய நண்பர் தோழர் சம்பத் என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஆனால் அப்படிப்பட்டவர்கள் மறைந்துவிட்ட பிறகு, அவர்களுடைய நினைவு நாளில் இதுபோன்ற பழைய நிகழ்ச்சிகளையெல்லாம் நாம் நினைவுபடுத்த வேண்டிய விரும்பத்தகாத ஒரு நிலைமைக்கு நம்மைத் தள்ளுகிற அளவுக்கு ஒரு முதலமைச்சர் தன்னுடைய பேச்சை விவாதத்திற்குரிய முறைதானா என்பதை நடுநிலையாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

என்னைக் கைது செய்வதற்கு டாக்டர் கருணாநிதி முயன்றார். ஆனால் ஏனோ முடியவில்லை. நான் யாரையும் கைது செய்ய நினைக்கவுமில்லை. ஆனால் அவர்களாகவே குற்றத்தைச் செய்துவிட்டுக் கைதாக இருக்கிறார்கள்.

தினத்தந்தி சென்னை இதழில் வெளியாகியுள்ள முதல்வரின் பேச்சின் ஒரு பகுதி இது! ஆம்; சம்பத் நினைவு நாள் கூட்டத்தில் நமது முதல்வர் பேசியது!

இவரை நான் கைது செய்ய முயன்றதாக இவராகவே ஒரு கற்பனையான கதையைச் சொல்லி, எதிர்காலத்திலும் என்னையும் பிறரையும் கைது செய்யப்போவதாக மிரட்டியிருக்கிறார். நான் அடிக்கடி கூறியிருக்கிறேன். உறுதியாகக் கூறியிருக்கிறேன். தூக்குமேடையில் ஏற்றிக் கொன்று விடுகிற உச்ச தண்டனை வரையில் வந்தாலும் அதனையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிற என்னைப் பார்த்து ஏன்தான் இப்படி மிரட்டல் கணைகளை விடுத்துக் கொண்டிருக்கிறார் முதல்வர் என்று புரியவில்லை.

இன்று நான் முதலமைச்சர், கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவர். இதைவிட நரகம் எதுவும் ஒருவருக்கு இருக்க முடியாது. இதுவும் சம்பத் நினைவு நாளில் எம்.ஜி.ஆர். பேசியதுதான். தினத்தந்தியில் வெளிவந்துள்ளது.

முதல்வரின் வாசகத்தைத் திரும்பத் திரும்பப் படித்துப்பார்!

அவரை முதலமைச்சராக எதிரே உட்கார வைத்துக் கொண்டு நான் எதிரே அமர்ந்திருப்பது எனக்கு நரகமாம்!

அதை எம்.ஜி.ஆரே. உணர்ந்து கூறியிருப்பது எவ்வளவு பொருத்தமுடைய ஒன்று பார்த்தாயா?

நாடே அப்படித்தான் உணருகிறது - இவரது அரசின் போக்கையும், நிர்வாகச் சீர்குலைவையும், வேளைக்கு ஒன்று பேசுகிற வேடிக்கையையும், மற்றவர் மீது சொன்ன குற்றங்களை, இந்த ஏழே மாதத்தில் எண்ணற்ற அளவுக்குச் செய்துவிட்டு அதற்குத் திரை போடுகிற முயற்சியையும் பார்க்கிற நாடு, இவரை முதலமைச்சராகப் பெற்றதை நரகவேதனை என்றுதான் உணர்கிறது.

இந்த உண்மையை முதலமைச்சரே ஒத்துக் கொள்ளும் ஒரு சூழ்நிலையை உருவாக்கிய சம்பத்தின் நினைவுநாளை நாம் மறந்துவிட முடியாது.

கடந்தகாலக் கசப்பான நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவு கூர்ந்திட வேண்டிய கட்டாயத்திற்கு நம்மை இழுத்துச் சென்றது; அந்த நினைவு நாளில் கலந்துகொண்ட முதலமைச்சரின் பேச்சுத்தான்!

நம்முடன் பழகிய ஒரு நண்பர் சம்பத் - அவர் திசைமாறிச் சென்றாலும் - அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் இரு சார்பிலும் விளைந்தாலும் - இன்று அவர் இல்லை! நிறை ஆயுள் வாழாமல் நம் நெஞ்சு குலுங்குகிற அளவுக்குத் திடீரென மறைந்து விட்டார்.

அவர் மறைந்த போது ஏற்பட்ட அதே மன உணர்வுடன், இன்றைக்கும் அவரது நினைவுநாளில் நமது உணர்வுகளை இணைக்கிறோம்.

அந்த மேடையில் முதலமைச்சர், தனது நடிப்புத் திறமையைக் காட்டியதோடு நில்லாமல் நம்மையும் வம்புக்கு இழுத்துப் பேசியதால் இந்தக் கடிதம் எழுத நேரிட்டது என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(7-03-1978)

# 544. முடியாத தொடர் கதைகள்!

**உடன்பிறப்பே,**

இருட்டு, பகலைப் பார்த்து அய்யோ! கறுப்பே! என்று இளித்ததாம்! பிணக்காடு, மணமலர்த் தோட்டத்தைப் பார்த்து அடடா! என்ன துர்நாற்றம் என்று மூக்கைப் பிடித்துக் கொண்டதாம்! சிறுநீர்த் தொட்டியொன்று இனிக்கும் செவ்விளநீரைப் பார்த்து உபயோகமற்ற உப்புக் கழிவு நீரே என்று கேலிபுரிந்ததாம்!

இதுபோன்ற விசித்திர வேடிக்கைகள் இன்று நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசியல் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் பற்றி எழுதிக் கொண்டிருந்ததோடு நில்லாமல் கோயங்காவின் ஏடுகள்; தங்களின் சன்னிதானத்து மகிமைகளை மறந்துவிட்டுப் புனிதம் போதிக்கவும் புறப்பட்டு விட்டன!

கழகத்திற்கு இழுக்கும் களங்கமும் கற்பிப்பதென்றால் அந்த ஏடுகளுக்கு - இன்றல்ல என்றுமே கொண்டாட்டம்தான்! அது கண்டு மகிழவும், ஆனந்தக் கூத்தாடவும் விபீடணக் கும்பல் ஒன்று தமிழகத்தில் இருக்கிறதென்கிற போது அவர்களின் கூட்டத்திற்குக் குதூகலம்தானே!

சர்க்காரியா அறிக்கையின் இரண்டாவது தொகுப்பு விரைவில் வெளிவரப் போகிறதாம் - முன்கூட்டியே இந்த முனிபுங்கவர்களுக்கு அந்த அறிக்கையின் சில பகுதிகள் எப்படியோ தெரிந்துவிட்டதாம். உடனே ஊரை அடித்து உலையில் போடும் இந்த உத்தம சிகாமணிகள் முன் பக்கத்துக் கொட்டை எழுத்துச் செய்திகளாக எக்ஸ்பிரசிலும், தினமணியிலும் அவற்றை வெளியிட்டுக்களிக்கிறார்கள்.

கொஞ்சம் இரக்கம் காட்டுங்கள் இல்லையேல் நெஞ்சு வெடித்துச் செத்துவிடுவான். உடனடியாக சிகிச்சை செய்யுங்கள் என்று டாக்டரிடம் கெஞ்சிக் கும்பிட்டுக் காலில் விழுந்தவர்கள், டாக்டரின் சிகிச்சைக்குப் பிறகு நெஞ்சு வலிக்காரன் பிழைத்துக் கொண்டதும் - திருப்பதி ஏழுமலையான்

கிருபையால்தான் இவன் பிழைத்தான் என்று கூறுவது உண்டல்லவா?

அதுபோலத்தான் இந்தியாவின் ஜனநாயகத்தைப் பிழைக்கவைக்க எழுந்திட்ட அணியில் சர்வாதிகாரத்தை எதிர்த்து முதல் குரல் கொடுத்த, தி.மு.கழகத்தை மறந்துவிட்டு - அதன் காரணமாகப் பல இன்னல்களை இன்றளவும் ஏற்றுக் கொண்டிருக்கிற, தி.மு.கழகத்தைப் புறக்கணித்துவிட்டு - கோயங்காவின் அருளால் தான் ஜனநாயகம் பிழைத்தது என்று கூவுகிற திருப்பதி பக்தர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அந்தப் போலிப் பெருமைக்கு - அல்ல; அல்ல - அதிர்ஷ்டத்திற்கு (?) தன்னை ஆளாக்கிக் கொண்ட கோயங்காவின் ஏடுகள், சர்க்காரியா அறிக்கை பற்றிய யூகங்களை வெளியிட்டிருக்கின்றன.

சர்க்காரியா கமிஷன் கடந்த ஆண்டு தனது இடைக்கால அறிக்கையை அளித்தது. அது ஏழு புகார்களைப் பற்றியதாகும். அந்த ஏழு புகார்களில் ஆறு புகார்கள் முற்றிலும் நிரூபிக்கப்பட்டதாக அல்லது ஓரளவு நிரூபிக்கப்பட்டதாகக் கமிஷன் கூறியது.

இப்படி முடிகிறது கோயங்கா ஏட்டின் செய்திக் கட்டுரைகள்! முதற்கோணல் முற்றிலும் கோணல் என்பது பழமொழி! நெருக்கடி காலக் கொடுமைகளுக்கிடையேதான் பலத்த கெடுபிடியுடன் சர்க்காரியா விசாரணைகள் நடந்து முடிந்தன.

அதன் முதல் அறிக்கையில் இரண்டு குற்றச்சாட்டுகள் தவிர வேறெதுவும் முற்றிலுமாக நிரூபிக்கப்பட்டதாக தெளிவாக்கப்படவில்லை. அந்த இரண்டு குற்றச் சாட்டுகளுக்குரியவர்களும் இப்போது தி.மு.க.வில் இல்லை. அ.தி.மு.க.வில் இருக்கிறார்கள்! அவர்கள் அ.தி.மு.க.வில் இருப்பதாலேயே - சர்வாதிகாரச் சூழலில் அமைந்த சர்க்காரியாவின் விசாரணையோ; அல்லது அவரது அறிக்கை குறிப்பிடும் குற்றச்சாட்டுகளையோ நாம் ஏற்றுக்கொண்டுவிடப் போவதில்லை.

அரசியல் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்ட சர்க்காரியா கமிஷனின் அறிக்கையில் 28 புகார்களில் ஒரு சில புகார்கள் தள்ளப்பட்டன என்பதேகூட, நாம் எண்ணிப் பார்க்க முடியாத அதிசயம்தான்!

கிராம மட்டத்தில் தி.மு.க. நபர் ஒருவரின் ஒப்புதல் பெற்ற பிறகே அரசில் மின்சாரம், நீர், கடன், லைசென்சுகள் பெற முடிந்தது.

என்று சர்க்காரியா எழுதியிருப்பதாகக் குல்தீப் சர்க்காரியா நய்யாருக்கும், அவரது குருநாதர் கோயங்காவுக்கும் தெரியவந்துள்ளதாம்!

இந்த முடிவுக்கு சர்க்காரியா காட்ட இருக்கிற சான்று என்ன? முழு அறிக்கை வந்த பிறகுதான் தெரியும்! சாட்சியம் என்ன? கோர்ட்டில் மாநில அரசு, வழக்கு தொடுக்கும் போதுதான் புரியும்.

புகார்களுக்கும் மேலாகச் சென்று சம்பந்தப்பட்ட பல விஷயங்களையும் சர்க்காரியா ஆராய்ந்துள்ளாராம்!

என்ன அக்கறை சர்க்காரியாவுக்கு! அதுபற்றியெல்லாம் விசாரித்து அறிந்தாரா? அல்லது கேட்டறிந்தாரா? விசாரணையின் போது வெளிப்பட்டதா? எத்தகைய உண்மையாளர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டார்கள்?

நான் அ.தி.மு.க. அல்ல என்று உப்பிலியாபுரம் ராஜகோபால் என்பவர் சாட்சியம் சொல்லும்போது கூறுகிறார். ஆனால் அவர் எம்.ஜி.ஆர். முன்னிலையில் அ.தி.மு.க.வில் சேர்ந்த செய்தியை அவர்கள் கட்சி ஏட்டிலிருந்தே நாம் எடுத்து சர்க்காரியாவுக்கு அனுப்பி வைக்கிறோம் - ஆனாலும் சர்க்காரியாவுக்கு ராஜகோபாலின் சாட்சியமே அவரது முடிவுக்கு வலுவு ஊட்டுகிறது! இது போதாதா அறிக்கை, எந்தச் சூழலில் தயாரிக்கப்பட்டது என்பதற்கு!

ஒரு வங்கியில் ஒருநாள் மாலையில் 26.5 லட்ச ரூபாய் மதிப்புள்ள கரன்சி நோட்டுகள் மாற்றப்பட்டன.

இதுவும் சர்க்காரியா அளிக்க இருப்பதாக உள்ள அறிக்கையில் காணப்படுகிற விஷயமென்று கோயங்கா ஏடு குறிப்பிடுகின்றது.

எந்த வங்கியில்?

யார் மாற்றியது?

யாருக்கு சொந்தமான கரன்சி?

விபரங்களை, எக்ஸ்பிரசும், தினமணியும் வெளியிட வில்லை. ஒருவேளை சர்க்காரியா வெளியிடக்கூடுமோ என்னவோ? அல்லது நீதி மன்றத்தில்தான் இந்தக் குற்றச்சாட்டு

கொண்டு வரப்படுமோ? அப்போது விளக்க வேண்டிய விஷயம் என்று விட்டு விட்டார்கள் போலும்! 28 குற்றச்சாட்டில் இடம்பெறாத இந்தப் புதிய குற்றச்சாட்டு பற்றியும் சர்க்காரியா அறிவிக்க இருப்பது முன்கூட்டியே கோயங்கா கூட்டத்திற்குத் தெரிந்துள்ளது ஆச்சரியம்தான்! இதுவும் கோர்ட்டுக்கு வராமலா போகப் போகிறது! வரட்டும்! வரட்டும்! அந்த வடிகட்டிய பொய்யை அம்பலமாக்கியே தீருவோம்!

நாடாளுமன்றத் தேர்தலின்போது டில்லியிலிருந்து வந்த இருபது இலட்சத்திற்கான ஆயிரம் ரூபாய் நோட்டுகளை சென்னை வங்கியில் மாற்றினார்களே; அந்த விவகாரம் என்னவாயிற்று? அதுபற்றி மௌனம் ஏன்? அது வெளியாகும் காலம்தான் விரைவில் வரப்போகிறது!

பல கோயில்களில் அளிக்கப்பட்ட காணிக்கை, தி.மு.க.வினருக்குப் போய் சேர்ந்ததாம்

இப்படியும் அறிவிக்க இருக்கிறாராம்; அற்புத மனிதர் சர்க்காரியா! அபூர்வ மனிதர்களாக கோயங்காவும், குல்தீப்பும் கூறுகிறார்கள்!

எந்தக் கோயிலில்?

எந்த நபர், காணிக்கையைக்

கையாடியது?

இப்போது, இந்த வித்தகர்களுக்கு விபரம் கிட்டவில்லை! விபரம் பிறகு வரலாம் - விளக்கம் கோர்ட்டில் கிடைக்கலாம்! சந்திக்கத்தானே போகிறோம்!

சர்க்காரியா கமிஷன் தொடர்பான வழக்குகள் மட்டுமல்ல; இன்னும் அமைய இருக்கிற எத்தனை கமிஷன்களின் தொடர்பான எந்த வழக்குகளையும் சந்திக்கத் தயாராகத்தான் இருக்கிறோம்!

கோழைகள் அல்ல; கொள்கையை விற்று விட்டுக் கும்பிடு போட்டுக் குனிந்து கொடுத்து எப்படியும் வாழ்வோம் என்று நினைக்க!

இதனை ஆணவக்காரர்களும் - ஆதிக்க வெறியர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்!

சோதனைகளைத் தாங்கிப் பழக்கப்பட்ட நெஞ்சம்! இன்னும் எத்தனை சோதனைகளுக்கும் அஞ்சாது!

உடன்பிறப்பே ஒன்றை மட்டும் மறந்து விடாதே!

புகார்க் காண்டமானாலும் - கமிஷன் காண்டமானாலும் - முடிந்துவிட்ட அத்தியாயங்கள் அல்ல!

அவை இனி என்றென்றும் மெய்சிலிர்க்கும் மர்மத் தொடர்கதையாக - ஆம், முடியாத தொடர்கதையாக விளங்கத்தான் போகின்றன!

மாறி மாறிச் சுழலத்தான் போகின்றன!

சர்க்காரியா கமிஷன் அன்று!

ஷா கமிஷன் இன்று!

நாயுடு கமிஷன் இன்று!

அடுத்த கமிஷன் என்று?

அன்புள்ள,

மு. க.

(9-03-1978)

**குறிப்பு** :- இதன் தொடர்பாக நான் நம்நாடு இதழில் எழுதியுள்ள நய்யாருக்கு வந்த நெருக்கடி என்ற கடிதத்தையும் படித்துப் பார்த்திடுக!

# 545. இங்கேயும் உண்டு பொதுமக்கள்! எச்சரிக்கை!!

**உடன்பிறப்பே,**

பச்சைச் சிரிப்புக்கிடையே பழிவாங்கும் நச்சரவம் ஒளிந்து கொண்டிருக்கும் என்பதற்கு வேறெங்கும் ஆதாரம் தேடி அலையவேண்டிய தேவையில்லை; தமிழகத்தில் நடைபெறும் அ.தி.மு.க.அரசின் செயல்முறைகளைக் கூர்ந்து கவனித்தாலே போதும்!

இரட்டைவேட நாடகம் நடத்துவதில் இந்த அரசுக்கு இணையாக எதுவும் இருந்திட இயலாது.

அரசிதழ்ப் பதிவுபெறா ஊழியர்கள் (என்.ஜி.ஓ.) சில முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து அரசுடன் பேச்சு வார்த்தை நடத்திட மாதக் கணக்கில் தவமிருந்தனர். அவர்களை ஏறெடுத்துப் பார்க்க யாரும் முன்வரவில்லை கோட்டையில்!

வேறு வழியின்றி அவர்கள் அறவழி மறியலில் ஈடுபட்டனர். நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டு வேண்டுமென்றே அவர்களை மிரட்டிப் பணியவைக்கும் நோக்கத்துடன் வேலூர் சிறைக்குக் கொண்டு போகப்பட்டனர்.

சட்டப் பேரவையில் எதிர்க்கட்சிகள் காட்டிய எதிர்ப்புணர்ச்சி கண்டு நிதி அமைச்சர் மனோகரன், முதலமைச்சர் வெளியூரிலிருந்து திரும்பியதும் அவர்களை விடுதலை செய்கிற தகவலைத் தருவார் என்று உறுதியளித்தார், அந்த உறுதிமொழியை ஏற்று எதிர்க்கட்சிகள் என்.ஜி.ஓ.க்களின் விடுதலையை ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

சென்னை திரும்பிய முதல்வர் மறுநாளே பேரவைக்கு வராமல், எதிர்க்கட்சிகள் பிரச்சினை எழுப்பிய பிறகு அதற்கு மறுநாள் வந்தார். என்.ஜி.ஓ. பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டது. பதிலளித்த முதலமைச்சர், நிதி அமைச்சர் மனோகரன் உறுதிமொழி எதுவும் கொடுக்கவில்லை என்றார். முதலமைச்சரின் முரண்பட்ட பதிலுக்கு

எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. வெளிநடப்பு செய்தது. அதன்பிறகு, நிதி அமைச்சர் என்னதான் கூறினார் என்பது பற்றி சர்ச்சை எழுந்து நடவடிக்கைக் குறிப்புகளை அவையில் கொண்டுவந்து படிக்கப்பட்டது. உண்மை வெளிப்பட்டது. தொடர்ந்து நடந்த கருத்துப் பரிமாற்றத்திற்குப் பிறகு என்.ஜி.ஓ.க்களை விடுதலை செய்ய முதல்வர் ஒப்புக் கொண்டதோடு அவர்களை அழைத்துப் பேசுவதாகவும் கூறினார்.

விடுதலையான என்.ஜி.ஓ. தலைவர்கள் முதலமைச்சருடன் நடத்திய பேச்சு வார்த்தையில் எந்தவிதப் பயனும் பெறவில்லை. அவர்களின் கோரிக்கைகள் உதாசீனப்படுத்தப்பட்டன என்று அறிவித்து வேதனைப்பட்டனர்.

என்.ஜி.ஓ.க்களின் கோரிக்கைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுவதை விடுத்து - அவர்களோடு பசப்புமொழி பேசிக்கொண்டே அவர்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியையும், அவர்களுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இருக்கின்றன என்ற ஒரு மாயையை ஏற்படுத்துவதிலும் எம்.ஜி.ஆர். அரசு ஈடுபட்டது.

சம்பத் நினைவு நாள் கூட்டம்; கடந்த ஞாயிறன்று மாலை சென்னையில் நடைபெற்ற போதும் அதில் பேசிய முதலமைச்சர் தன்மானம் போன போக்கில் என்னைச் சாடியதோடு நில்லாமல் என்.ஜி.ஓ. போராட்டத்தைப் பொதுமக்களுடன் வீதிக்கு வந்து நானே தலைமையேற்று சந்திப்பேன் என்று முழங்கினார்.

மறுநாள் திங்கட்கிழமை காலை, பேரவையில் தி.மு.க. உள்ளிட்ட முக்கியமான எதிர்க்கட்சிகள் முதல்வரின் ஞாயிற்றுக்கிழமைப் பேச்சைக் கண்டித்தன. முதல்வர், தனது பேச்சுக்கு அளித்த விளக்கம் பொருத்தமாயில்லையென்று குறிப்பிட்டு ஜனதா, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, தி.மு.க. ஆகிய கட்சிகள் வெளிநடப்புச் செய்தன. பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகிறார் முதல்வர் என்பதை எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அவையில் இருந்த ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களின் விளக்கத்திற்கு விடையளிக்கும் வகையில், வெகு விரைவில் அரசின் சார்பில் இந்தப் பிரச்சினைக்கு முடிவு அறிவிக்கப்படும் என்று முதல்வர் மீண்டும் உறுதி கூறினார்.

ஆனால், அடுத்த நாள் நல்ல முடிவினை அறிவிப்பதற்குப் பதிலாக என்.ஜி.ஓ.க்களின் மீது எத்தகைய கடுமையான

நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை வரிசைப்படுத்தி அரசின் சார்பில் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

முதல்வரை அதுவரை நம்பியிருந்த மற்ற எதிர்க் கட்சியினரும் தங்கள் நல்ல எண்ணத்திற்கு விடப்பட்ட சவாலாக அந்த ஆணையைக் கருதினர். வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமல் ஒதுங்கியிருந்த அமைப்பும் போர்க்கொடியை உயர்த்திற்று.

தமிழக முழுவதும் வேலை நிறுத்தம்! அலுவலகங்கள் அசைவற்றுக் கிடக்கின்றன! அரசின் இந்த கெடுபிடிப் போக்கைச் சுட்டிக்காட்டியும், அரசு பிறப்பித்த பழிவாங்கும் ஆணையைக் கைவிட வேண்டுமென்று வலியுறுத்தியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்தியக் கம்யூனிஸ்டு, ஜனதா, காங்கிரஸ் (1), தி.மு.க. ஆகிய ஐந்து முக்கிய எதிர்க்கட்சிகளும் வெளிநடப்பு செய்து, அனைத்துக் கட்சிச் சார்பில் அறிக்கையொன்றையும் விடுத்தன.

இதற்குப் பிறகு சிலமணி நேரத்திற்கெல்லாம் பேரவையில் பொதுப்பணி அமைச்சர் ஒரு அறிவிப்பைச் செய்தார்.

பத்தாம் தேதி அமைச்சரவை கூடி பதினோராம் தேதி காலையில் முடிவுகள் அறிவிக்கப்படுமென்று எட்டாந் தேதி பிற்பகல் சபையில் தெரிவிக்கப்பட்டது.

எட்டாந் தேதி மாலையிலேயே அமைச்சரவை கூடிட என்ன தடையோ? ஒன்பதாம் தேதி கூடக் கூடாதா? பத்தாம் தேதி நாள் பார்த்திருக்கிறார்கள். எந்த அமைச்சரை எந்தவொரு முக்கியமான கேள்வி கேட்டாலும் முதல்வரைக் கலந்துதான் பதில் கூற வேண்டுமென்கிறார்கள். ஆனால்; பாவம் முதல்வரோ - அமைச்சரவையைக் கலந்து முடிவினை அறிவிப்பேன் என்று நாள் குறிப்பிடுகிறார்.

அத்துடன் சும்மா இருந்தார்களா? வேலைக்கு வரும் என்.ஜி.ஓ.க்களை ஏற்றி வருவதற்கு தனி பஸ்கள் வரும் என்று பெரிய விளம்பர அறிவிப்புகள்! போலீஸ் பாதுகாப்பு உண்டு என்று தடபுடல்கள்!

இதற்குப் பிறகும் அரசு அனுப்பிய தனி பஸ்களில் ஏறி அலுவலகம் செல்வதற்கு யாரும் தயாராக இல்லை. காலி பஸ்கள் வீதிகளில் நகர்ந்து கொண்டிருந்தன. இது என் கண்ணாலேயே கண்ட காட்சி!

அரசின் இந்த தர்பார் முறைக்கு படுதோல்வி ஏற்பட்டதும் எம்.ஜி.ஆரின் பொதுமக்கள் கிளம்பி விட்டனர்.

யார் அந்த பொதுமக்கள்? அரசின் ஆதரவோடு, கோபாலபுரத்தருகேயுள்ள கார்ப்பரேஷன் மைதானமொன்றில் பயிற்சி பெறும் அ.தி.மு.க. தொண்டர்கள்!

அவர்கள்தான், நூற்றுக்கணக்கானோர் கையில் சோடா பாட்டில்களுடனும், கார்களில் கற்களுடனும் புறப்பட்டு ஊர்வலமாகவே தேனாம்பேட்டைப் பகுதிக்குச் சென்று, அங்கே மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்திற்கு எதிரே அமைதியாக இருந்த என்.ஜி.ஓ.க்களைத் தாய்மார்கள் உட்படப் - பலரைத் தாக்கிக் கலாம் விளைவித்துள்ளனர்.

பத்தாம் தேதி அமைச்சரவைக் கூடுகிறது என்ற பாகுச் சொல்! அதற்கிடையே இப்படியொரு பழிவாங்கும் படலம்!

இந்த பாணி, இந்த அரசு நடத்துவோரின் சொந்த பாணி! அதை மாற்ற இயலாது! மாற்றலாம் என முனைவோர், ஏமாற்றத்தால் தலை குனிவர்!

என்.ஜி.ஓ. விவகாரத்தில் மட்டுமல்ல; எல்லா விவகாரத்திலும் இதுவே இவர்களது வாடிக்கை!

உடன்பிறப்பே, பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள்? என்று அறைகூவல் விடவும் அதனை மறைமுகமாகச் செய்து காட்டவும் எம்.ஜி.ஆரால் மட்டும்தான் முடியும் என்பதல்ல. இந்த நிலை நீடிக்குமானால் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களும், தாக்கப்படுகிற என்.ஜி.ஓ.க்களைக் காப்பாற்ற ஆயத்தமாகி விடுவார்கள் என்பதை மட்டும் எச்சரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்!

அதற்குள் அரசு, பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க முன்வரவேண்டும். இல்லை! பொதுமக்கள்தான் தீர்ப்பார்கள் என்று பதில் வருமேயானால், என்.ஜி.ஓ.க்கள் ஏழரை லட்சம் பேரைக் காப்பாற்றவும் பொதுமக்கள் தயங்க மாட்டார்கள்.

அன்புள்ள,

மு. க.

(10-03-1978)

# 546. நய்யாருக்கு வந்த நெருக்கடி! பாவம்; அது என்ன நெருக்கடியோ?

**உடன்பிறப்பே,**

குல்தீப் நய்யார் - ஒரு பிரபலமான எழுத்தாளர். துப்பறியும் மர்மக் கதைகளைப்போல அதிர்ச்சியூட்டும் செய்திகளைத் தொகுத்து ஏடுகளில் கட்டுரை தீட்டக் கூடியவர், நூல்கள் தயாரித்து வெளியிடக்கூடியவர். இந்திரா காந்தி அம்மையாரின் நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் போது சில மாதங்கள் சிறையில் இருந்து, பிறகு ஏதோ ஒரு சூழ்நிலையின் காரணமாக விடுதலை பெற்றுக் கொண்டவர்.

அவர் திடீரென்று மஞ்சள் ஏட்டுச் செய்தியாளர் போலத் தன்னை மாற்றிக் கொண்டு இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் சர்க்காரியா கமிஷன் தர இருக்கிற அறிக்கையைப் பற்றிய செய்திகளை முன்கூட்டியே அறிவித்திருக்கிறார்.

தெரிகிறது.

தெரிய வருகிறது.

என்ற சொற்களுடன் முடிகிற வாக்கியங்களைப் பயன்படுத்தி தனது செய்திக் கட்டுரையை எக்ஸ்பிரஸ் ஏட்டில் முதல் பக்கத்தில் எழுதியுள்ளார்.

அவர் அதில் அறிவித்துள்ள திடுக்கிடும் செய்திகளைப் பற்றி இன்னொரு கடிதத்தில் நான் எழுதியுள்ள காரணத்தால் இப்போது சர்க்காரியா கமிஷனின் தோற்றம் - அதன் நடைமுறை - அது வகுத்துக் கொண்ட வழிகள் - இவைகளைப் பற்றி மட்டுமே இதில் நான் நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதே குல்தீப் நய்யார், ஜட்ஜ்மெண்ட் என்ற ஒரு நூல் எழுதியுள்ளார். அந்த நூலில் பக்கத்திற்குப் பக்கம் நெருக்கடி காலத்து அட்டூழியங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்குவதற்கு இந்திரா காந்தி கையாண்டமுறைகளை ஹிட்லரின் கெடுபிடிகளோடு ஒப்பிடவும் அவர் தயங்கவில்லை. சட்டங்கள் இந்திராவின் காலடியில் சரணடைந்து கிடந்த காட்சிகளையும், நீதிமன்றங்களும், நீதிபதிகளும் நெருக்கடி காலத்தில் இந்திராவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு சாமரம் வீச வேண்டியவர்களாக இருந்த நிகழ்ச்சிகளையும், நெருக்கடியை எதிர்த்துக் கொடி உயர்த்திய தி.மு.க. அரசும், குஜராத் காங்கிரஸ் அரசும் கலைக்கப்பட்ட கொடுமைகளையும் அந்த ஜட்ஜ்மெண்ட் நூலில் விரிவாகக் காண முடியும்.

அவர் வர்ணிக்கிற பயங்கர நாட்களிலேதான் - இருண்ட காலத்தில்தான் - தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீது சர்க்காரியா கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷன் விசாரணையில் தி.மு.க.வுக்கு எதிரான வாக்குமூலங்கள் அதிகாரவர்க்கத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டு அவர்கள் தட்டச்சில் உருவாக்கிய அந்தத் தாள்களில் சாட்சிகளின் கையொப்பங்கள் பெறப்பட்டன.

கழகச் சார்பில், சர்க்காரியா கமிஷன் பற்றி வெளியிடப்பட்ட கருத்துக்கள் எதுவும் ஏடுகளில் வெளி வரமுடியாத நிலை! சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி இல்லை! புகார் கொடுத்தவர்களைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. அதிகார வர்க்கமும் இங்கிருந்த கவர்னர்களின் ஆலோசகர்களும் திட்டமிட்டுத் தயாரித்த சாட்சிகள், அவர்தம் வாக்குமூலங்கள் - இவைகளை வைத்தே சர்க்காரியா அறிக்கை தயாரிக்க ஏற்பாடாயிற்று. வாய்ப்பூட்டு! கைக்கட்டு! ஆம், எதிர்க்கட்சிகளுக்கு! இத்தகைய சூழ்நிலையில் அன்றைக்கு சென்னையிலுள்ள காஞ்சி மாளிகையில் எழுந்தருளி, வேறு பல சூழல்களின் இறுகிய பிடிப்பிற்கிடையே தனது விசாரணை நாடகத்தைச் சர்க்காரியா அரங்கேற்றினார்.

நெருக்கடி நேரத்தில் தொடங்கிய அந்த விசாரணை, நெருக்கடி முடிந்த பிறகும் சிலகாலம் தொடர்ந்து - அன்றைய சர்வாதிகாரப் பின்னணியில் அவர் எடுத்த பேனாவைத் திசை திருப்பாமல் அப்படியே ஒட்டித் தனது அறிக்கையைத் தயாரித்து முடித்திருக்கிறார்.

இப்படிப் பிறந்த ஒரு அறிக்கையை அது வெளியிடப் படுவதற்கு முன்பே தெரிகிறது என்ற வாசக அமைப்புடன் குல்தீப் நய்யார், கோயங்காவின் ஏட்டில் முந்திக் கொண்டு ஒரு செய்திக் கட்டுரையாக்கியதின் மர்மம் என்ன?

கோயங்கா மீது வழக்கு - கோயங்காவுக்கு மிரட்டல் - பெர்னாண்டஸ் மீது வழக்கு, பாதல் மீது வழக்கு, விசாரணை - இவைகள் அனைத்துக்கும் காரணம், அவர்கள் இந்திராவின் போக்கை எதிர்த்ததுதான் என்று வாதாடுகிற குல்தீப் நய்யார் அவர்கள் சர்க்காரியா கமிஷன் மட்டும் நியாயமான முறையில் நடைபெற்று நேர்மையான அறிக்கையொன்றைக் கொடுக்கிறது என்று கருத்தறிவிக்க வேண்டிய நெருக்கடி எப்படி வந்தது?

நெருக்கடி நிலை 1976-ஆம் ஆண்டுடன் முடிந்து விட்டதாக அல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறோம். பாவம்; குல்தீப் நய்யாருக்கு மட்டும், இன்னும் நெருக்கடி நீடிக்கிறதே - அது எப்படி? உடன்பிறப்பே! அது என்ன நெருக்கடியென்று நீயே யூகித்துக் கொள்க!

அன்புள்ள,

மு. க.

(12-03-1978)

நன்றி : நம்நாடு (12-03-1978)

# 547. யார், எங்கே இருந்தாலும்!

**உடன்பிறப்பே,**

ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடப் பெரும் பணியாற்றிய தியாகச் செம்மல்கள் ஒவ்வொருவராக நம்மை விட்டுப் பிரிந்தவாறு இருக்கிறார்கள். தமிழ் மக்கள் மீது கற்பிக்கப்பட்ட இழிவுகள் நீங்கவும், சாதியின்பெயரால் - மதத்தின் பெயரால் - கடவுள்களின் பெயரால் அவரவர் தன்னலப் பிழைப்பிற்காக அமைத்துக் கொள்ளப்பட்ட மூட நம்பிக்கை அரண்களைத் தகர்த்துத் தூளாக்கி அரசியல், சமுதாயப் பொருளாதாரத் துறைகளில் ஏற்றத் தாழ்வற்ற சமத்துவ நிலையை உருவாக்க வாழ்நாள் முழுதும் பாடுபட்ட தலைவர்களை இயற்கை நம்மிடமிருந்து பறித்துக்கொண்டேயிருக்கிறது. அந்தப் பட்டியலில் இப்போது அன்னை மணியம்மையாரும் இணைத்துக் கொள்ளப்பட்டு விட்டார்.

பெரியார் அவர்கள் நீண்ட காலம் உயிர் வாழ்வதற்கு ஒருவகையில் காரணமாக இருந்து, அவரது உடல் நலத்தைத் தனது உணவு உறக்கம் பற்றிக் கவலைப்படாது காத்திட்ட பெருமை, மறைந்த அன்னை மணியம்மையாரைச் சாரும் என்று சொன்னால் அது மிகையன்று!

இளமைப் பருவம் தொட்டே தன்மான இயக்கத்தில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து, இறுதியாகக் கண்மூடும் வரையில் தமிழ்ச் சமுதாயத்தின் கண்களைத் திறப்பதிலே ஈடுபட்டிருந்த ஒரு ஒப்பற்ற மாதர்குல திலகத்தை நாம் இழந்து விட்டோம்.

அந்தோ! குடியரசு அலுவலகத்தில் துணை ஆசிரியனாக, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஈரோடு நகரில் பணியாற்றிய அந்த நாட்கள் பசுமையாக என் மனத்தில் அசைந்தாடுகின்றன. பெரியாருடைய மாளிகையில் அவருக்கருகே அமர்ந்து நானும் தவமணிராசனும், சனார்த்தனமும், கருணானந்தமும் ஒவ்வொரு நாளும் உணவருந்தும் போது எங்களுக்குப் பரிவோடு உணவு பரிமாறித் தாயன்பைப் பொழிந்தவர்கள் மணியம்மையார்! இன்று அந்தத் தாயை நிகர்த்த தன்மானச் சுடர்

விளக்கு அணைந்து விட்டது. குடியரசில் கூடியிருந்த நண்பர்களாம் நாங்களும் இன்று ஒருவரையொருவர் பார்ப்பதே அரிதாகி விட்டது. ஆட்கள் மாறலாம் - அரசியல் அலைகளில் கிளிஞ்சல்கள் ஒதுங்குவது போல எங்கெங்கோ ஒதுங்கி விடலாம். ஆனால், அந்தக் கொள்கைகள்!

ஆம் - அந்தக் கொள்கைகள் வைரம் பாய்ந்தவை! நிலைகுலைகின்றவர்களால் கொள்கைகளை அழித்துவிட முடியாது! சுயமரியாதை இயக்கம் திராவிடர் இயக்கம் - இவைகள் தோன்றிய காலத்திலிருந்து பலர் இயற்கையாக மறைந்தும், பலர் கொள்கைகளுக்குத் துரோகம் செய்துவிட்டுச் சுயநலம் பாராட்டி வேறிடம் பாய்ந்தும் - பல சோதனைகளை ஏற்கவேண்டியிருந்தது என்றாலும்; அன்று பெரியாரால் எடுத்து வைக்கப்பட்டப் புரட்சிகரமான கொள்கைகள், பேரறிஞர் அண்ணா அவர்களால் முழக்கப்பட்ட இலட்சியங்கள் அல்லது குறிக்கோள்கள் இன்றளவும் உறுதி வாய்ந்த நெஞ்சங்களில் சலனத்திற்கோ, சபலத்திற்கோ ஆட்படாமல்தான் ஆழப் பதிந்திருக்கின்றன.

சுயமரியாதை இயக்க உணர்வும், திராவிடர் இயக்க உணர்வும் தமிழ்ச் சமுதாயத்தில் என்றென்றும் கட்டிக் காக்கப்பட வேண்டியவைகளாகும். இந்த உணர்வுகளைப் பயன்படுத்திக் கொண்டு உத்தியோகங்களைப் பெற்று, பின்னர் இந்த உணர்வுக்கே துரோகம் விளைவித்தவர்களையும் அவர்தம் தன்னலப் போக்கையும், கோழைத்தனத்தையும் எடைபோட்டு வைத்திருப்பவன் நான்!

அந்த சுயநலவாதிகளை அலட்சியப்படுத்திவிட்டு, மொத்த சமுதாயத்திற்கும் விரிவான நல்வாழ்வு, அறிவார்ந்த வாழ்வு, அடிமைத்தளையிலிருந்து விடுபட்ட வாழ்வு கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் பெரியார், அண்ணா வகுத்த கொள்கை, குறிக்கோள்களின் வழி நின்று நாம் பணியாற்றி வருகிறோம். நமது பணிக்கு உறுதுணையாக நின்றதோடு அல்லாமல், பெரியாருக்கு அடுத்துத் திராவிடர் கழகத் தலைமையை ஏற்று போர்க்குணம் மாறாமல் தியாகச் செயல்களில் ஈடுபட்டு அந்தத் தலைமைக்குச் சிறப்பு தேடிக்கொடுத்த வீராங்கனையைத்தான் இன்று நாம் இழந்துவிட்டோம்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற கறுப்புக்கொடி நிகழ்ச்சியில் நானும், நமது பேராசிரியர், சாதிக், ப.உ.ச., மற்றும் கழகத்து முன்னணியினர் கைது செய்யப்பட்ட போது அன்னை மணியம்மையாரும், வீரமணியும் மற்றும் திராவிடர் கழகத்தினரும்

கைது செய்யப்பட்டனர். காலை முதல் பிற்பகல் வரையில் போலீஸ் நிலையமொன்றில் ஒன்றாகவே அடைத்து வைக்கப்பட்டிருந்தோம். பின்னர் இரவு முழுதும், மறுநாள் பிற்பகல் வரையிலும் கமிஷனர் அலுவலகத்தில் அடைக்கப்பட்டிருந்தோம். அம்மையாரோடு நீண்ட நேரம் உரையாடுவதற்கு எங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வாய்ப்பு என்றே அதனைச் சொல்ல வேண்டும். அவர்களது பொதுவாழ்வில் இறுதியாக ஏற்றுக் கொண்ட சிறைவாசத்தில் நாங்களும் அருகில் இருந்தோம் என்பது பெரும் வாய்ப்புதானே!

துணிவும் கனிவும் தூய அன்பும் கொண்ட அன்னையை இழந்துவிட்ட நிலையில் திராவிடர் கழகத்தினர் உடனடியாகக் கூடித் தங்களை வழி நடத்திச் செல்லும் பொதுச் செயலாளராக நண்பர் வீரமணியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் அன்னை மணியம்மையார் இருந்தபோது அவர்களின் விருப்பப்படி வீரமணி அவர்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்பை, இப்போது திராவிடர் கழக மத்திய செயற்குழு உறுதியாக்கி நிலைப் படுத்தியிருக்கிறது.

கொள்கையில் குன்றா ஆர்வமும், ஓயாது உழைக்கும் திறனும், அறிவுத் தெளிவும் கொண்ட நண்பர் வீரமணி என்பதை நாடு நன்கறியும்.

பெரியார் அவர்களும் அன்னை மணியம்மையார் அவர்களும் வழி நடத்திச் சென்ற ஒரு இயக்கத்தை வழி நடத்தும் பெரும் பொறுப்பை ஏற்றுள்ள வீரமணி அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள்!

கண்களில் நீர் ததும்பும் நிலையில்தான் அவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார். கட்டுப்பாட்டுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் திராவிடர் கழகத்து உடன்பிறப்புகள், பெரியாரின் கொள்கைகள், அவரது சிந்தனைகள் செயலாக்கம் பெறத் தங்களது பணியை முடுக்கிவிடுவார்களாக!

யார் எந்த அரசியல் கட்சியில் இருந்தாலும், பெரியாரின் கொள்கைகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் இந்தச் சமுதாயம் தலை நிமிர்ந்து நடக்க முடியும் என்பதை மறவாமல் பணியாற்ற வேண்டுமென்றும் இந்தத் துக்ககரமான நேரத்தில் எடுத்துக் கூறுவதை என் கடமையாகக் கருதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(19-03-1978)

# 548. ஆலோசகர் ஆணை ஒரு அபாயக் குறி!

**உடன்பிறப்பே,**

அரசுப் பணிகளில் சேர்வதற்கு சர்வீஸ் கமிஷன் தேர்வில் ஈடுபட அரிஜன மக்களுக்கு வயது வரம்பு கிடையாது என்ற ஒரு நிலை கழக அரசு கலைக்கப்படும் வரையில் இருந்தது. கழக ஆட்சிக்குப்பிறகு தமிழகத்தில் நடைபெற்ற கவர்னர் ஆட்சியில் 1976-ஆம் ஆண்டு அப்போதிருந்த ஆலோசகர் ஆர்.வி. சுப்பிரமணியம் அவர்கள் முயற்சியால் ஒரு புதிய அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையின்படி தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்த சலுகையொன்றுக்குச் சமாதி எழுப்பப்பட்டு விட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒருவர் அரசாங்க உத்தியோகத்தில் சேர்வதற்கு அவரது வயது தடையாக இருந்தது கிடையாது. ஆனால் கவர்னர் ஆட்சியில் 1975-ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி 31 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் அந்தத் தாழ்த்தப்பட்டவருக்கு சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு அனுமதியில்லை என்று ஆக்கப்பட்டு விட்டது.

இப்படி ஆலோசகர் ஆட்சியில் அரிஜன மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையைச் சுட்டிக்காட்டி, அந்த ஆணையை ரத்து செய்ய வேண்டுமென்று நமது ப.உ.ச. அவர்கள் சட்டப்பேரவையில் கேட்டுக் கொண்டார்.

ஆணையை ரத்து செய்யத் தேவையில்லை. அதனால் அரிஜனங்களுக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள்ளலாம் என்ற கருத்தமைந்த பதிலை நிதி அமைச்சர் அளித்திருக்கிறார். நாம் இப்போது அந்த ஆணையை ரத்து செய்தாலும், எதிர்காலத்தில் வருகிற வேறொரு கொள்கையுடைய அரசாங்கம், நாம் ரத்து செய்த ஆணையைத் திரும்பக் கொண்டு வராது என்று எப்படி எண்ணிட முடியும் என்ற வகையில் முதலமைச்சரும் விடையளித்திருக்கிறார்.

நான் குறுக்கிட்டு விளக்கியபோது, அப்படி நாம் ரத்து செய்த ஆணையைப் பிறகு வருகிற ஒரு அரசு மீண்டும் கொண்டு வருமேயானால் அப்போது நாம் ஒன்றாக நின்று அதனை எதிர்த்துப் போராட முடியும் எனக் கருத்தறிவித்திருக்கிறேன்.

இப்போதே 31 வயதுக்குட்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் அந்தத் தேர்வுக்கு வருகிறார்கள் என்றும், அதனால் அவர்களுக்குச் சங்கடம் வரும் என்று கருதத் தேவையில்லை யென்றும், அவர்களுக்குப் பதவி உயர்வு போன்ற வாய்ப்புகள் கிடைக்க 31 வயது என்று இருப்பதே சரியென்றும், இப்படி இருந்தால்தான் அக்கறையோடு வந்து சேருவார்கள் என்றும் அரசின் சார்பில் சட்டப்பேரவையில் விவாதிக்கப்பட்டது.

சர்வீஸ் கமிஷனுக்கு அரிஜனங்கள், மலைவாழ் தாழ்த்தப் பட்ட மக்கள் தேர்வுக்குச் செல்ல வயது வரம்பு தடையாக இருக்காது என்றிருந்த சலுகையை எதற்காக நீக்க வேண்டும்? என்ற கேள்வியைத்தான் கழகத்தின் சார்பாக நானும், ப.உ.ச.வும் எழுப்பினோம்.

சலுகை தேவையில்லை, சங்கடம் வராமல் பார்த்துக் கொள்ளலாம் என்ற பதிலைத்தான் அரசு வழங்கியுள்ளது.

31 வயதுக்குள்ளே இருப்பவர்கள்தான் இன்று வந்து சேருகிறார்கள் என்பது உண்மையாகவே இருந்தாலும்கூட யாரோ ஒருவர் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் 31 வயதுக்கு மேற்பட்டவராக இருந்து சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு வர முனைந்தால், அவரை இப்போதுள்ள இந்த புதிய ஆணை தடுத்து நிறுத்திவிடுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களில் ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அது தவறுதானே!

இது ஒருவர் என்ற எண்ணிக்கையுடன் முடிவதில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் பலரும் இந்த சலுகை இழப்பினால் பாதிக்கப்படுவார்கள். அதனால்தான், இந்த அரசு இப்போது வாய்ப்பு இருக்கும் போதே அந்தப் புதிய ஆணையை ரத்து செய்ய வேண்டுமென்று கழகச் சார்பில் வலியுறுத்தினோம். இப்போதும் வலியுறுத்துகிறோம். தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டேயிருப்போம்.

31 வயதுக்குள்ளாகவே அக்கறையுடன் அவர்கள் வந்து சேரவேண்டும் என்று முதல்வர் கூறியதை நாம் மறுக்கவில்லை.

ஆனால், நீண்ட நெடுங்காலமாக மிகக் கொடுமையான முறையில் புறக்கணிக்கப்பட்டுச் சாஸ்த்திர சம்பிரதாயப் புனைச் சுருட்டுகளால் ஏமாற்றப்பட்டுப் பொட்டுப் பூச்சிகளாக ஆக்கப்பட்டுவிட்ட அந்தச் சமுதாயத்திற்குத் தானாகவே அக்கறை தோன்ற வேண்டும் என்று நாம் எண்ணிடாமல், அந்தச் சமுதாயத்தின் கைகளைப் பிடித்துக் கரையில் ஏற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

நல்ல வலுவுடைய கால்களை உடையவனைப் பார்த்து நான் பத்து எண்ணி முடிப்பதற்குள் அந்தப் படிகளில் ஏறு பார்க்கலாம் என்று கூறுவது பொருத்தமாக இருக்கலாம். நோயினால் தாக்குண்டு வலுவிழந்த நிலையில் உள்ளவனைப் பார்த்து எப்படியாவது அந்தப் படிகளில் ஏறு என்றுதான் சொல்ல முடியுமே தவிர, இத்தனை எண்ணுவதற்குள் ஏறித் தீர வேண்டும் என்று கூறுவது பொருத்தமாக இருக்க முடியாதல்லவா?

சனாதன வைதீக சாதி மதச் சேட்டைகளால் நோயுற்று வலுவிழந்து கிடந்து, காந்தி அடிகளார், அம்பேத்கர், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர் போன்றவர்கள் ஆற்றிய அருந்தொண்டினால் எழுந்து நடமாடுகிற தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குக் கேடு பயப்பதற்காகவே ஆலோசகர் ஆட்சியில் திட்டமிட்டுப் பிறப்பிக்கப்பட்ட அந்தத் திடீர் ஆணையை இந்த அரசு, திரும்பப் பெற்றுக் கொள்வதே சிறந்த செயலாகும் என்பது நமது வேண்டுகோள்! ஆலோசகர் ஆட்சியின் இந்த ஆணை ஒரு அபாயக்குறி என்பதை இந்த அரசு உணர்ந்துகொள்ள வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(23-03-1978)

# 549. மேடையிலே வீசுகின்ற புழுதிக் காற்று!

**உடன்பிறப்பே,**

தமிழகத்து அரசியல் கட்சிகளின் மேடைகள் தரத்தைத் தாழ்த்திக் கொண்டு மிக வேகமாக ஆபாசப் படுகுழியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. கட்சிச் சார்பில் நடைபெறும் சில ஏடுகளும், அல்லது கட்சிகளை ஆதரிக்கிற ஏடுகளும் பொதுக்கூட்ட மேடைகளுக்கு நாங்கள் என்ன சளைத்தவர்களா? என்ற போக்கில் நரகல் நடையில் உச்சத்திற்குப் போய்க் கொண்டிருக்கின்றன.

அரசியலில் கட்சிகளுக்கிடையே வாதப் பிரதிவாதங்கள் நடைபெறுவதும், ஒரு கட்சியின் போக்கை இன்னொரு கட்சி இடித்துரைப்பதும், ஆளுகிறவர்களின் நிர்வாகச் சீர்கேடுகளை, முறைகேடுகளைக் கடுமையாகக் கண்டிப்பதும், கேலி புரிவதும், பேச்சில் எழுத்தில் இடம்பெறுவதை யாரும் குறை கூற முடியாது.

கடந்த பல ஆண்டுக் காலமாகவே அரசியல் கருத்துக் களுக்கோ, கொள்கை வேறுபாடுகளுக்கோ விளக்கமளித்து எழுதுவது, பேசுவது என்பதை விட; தனிப்பட்ட முறையில் குலம், கோத்திரம், குடும்பம் இவற்றை விமர்சிக்கிற முறை கட்சிகளின் வட்டாரத்தில் தோன்றி, அது தொடர்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதற்கான உதாரணங்கள், ஆதாரங்களோடு நிறைய இருக்கின்றன. அப்படிப்பட்ட பேச்சுக்கள் யாரால், எந்த நேரத்தில், யாரைப் பற்றிப் பேசப்பட்டன என்று விவரங்களை அரசியலில் தொடர்ந்து இருப்போர் மறந்து விடுவதற்கில்லை.

அந்த நோய், இப்போது பெரிய அளவுக்கு முற்றிப்போய் விட்டிருக்கிறது என்பதைத் தமிழ்நாட்டு அரசியலைக் கூர்ந்து கவனிக்கும் நடுநிலையாளர்கள் உணர்ந்து வருந்துகிறார்கள்.

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு, அந்த நோய் விரிவடையத் தொடங்கி, இப்போது முழு அளவுக்கு முற்றிப்போய் தமிழ்ப் பண்பாட்டையே சவப்பெட்டியில் வைத்து மூடிவிடுகிற நிலைக்கு ஒரு ஆபத்து தோன்றியிருக்கிறது.

மற்ற கட்சிகளைக் கூட விட்டுவிடுவோம்; தமிழகத்தில் இன்றைய ஆளுங் கட்சியாக அ.இ.அ.தி.மு.க.வும், பிரதான எதிர்க்கட்சியாக தி.மு.க.வும் இருக்கின்றன.

இரு கட்சிகளிடையே சில அடிப்படைக் கொள்கைகள் ஒன்றுபட்டிருப்பினும், அவற்றை நடைமுறைப்படுத்துவதில், அந்தக் கொள்கைகளுக்காகப் போராடுவதில் இரு கட்சிகளிடையே வேறுபாடுகள் நிறைய இருக்கின்றன. இப்போது அதுபற்றிய விளக்கம் தேவையில்லை. ஏற்கனவே பலமுறை மக்களிடம் விளக்கப்பட்ட ஒன்றுதான் அது!

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அ.தி.மு.க. எதிர்க் கட்சியாக இருந்து பேசிய பேச்சுக்கள், எழுதிய எழுத்துக்கள், என் பிறந்த நாளின்போது கட்டியிழுத்துக் கொளுத்திய கொடும்பாவிகள் ஏராளம்! ஏராளம்!

அதே முறையை இப்போது எதிர்க்கட்சியாகவுள்ள தி.மு.க.வும் கடைப்பிடிக்க வேண்டுமா? என்பதே நான் நம்முடைய சொற்பொழிவாளர்களையும், எழுத்தாளர்களையும் பார்த்து எழுப்புகிற கேள்வியாகும்!

அவர்கள் ஆளுங்கட்சியான பிறகும்கூட அதே பாணியில்தானே பேசுகிறார்கள்; அமைச்சர்களே அப்படிப் பேசுகிறார்களே - என்று நம்மவர் என்னிடம் வாதிடக்கூடும்.

சிறைச்சாலையில் நான் வளர்த்த பூனைக்குட்டிக்கும் எனக்கும்கூட உடலுறவு ஏற்பட்டு அது கர்ப்பமுற்றதாகப் பல இடங்களில் அமைச்சர் ஒருவர் பேசினார் என்று என் செவிக்குச் செய்தி எட்டியது.

நிதி நிலை அறிக்கையில் உப்பில்லை என்று பேராசிரியர் கூறியதைக் குறிப்பிட்டு ஒரு அமைச்சர் அன்பழகனுக்கு சிறுநீர் குடிக்கும் பழக்கம் என்று வசைமாரி பொழிந்தார் என்று திருவண்ணாமலையிலிருந்து எனக்கு தகவல் கிடைத்தது.

அவ்வளவு ஏன், என் மகள் பத்து வயது சிறுமி கனிமொழியைப் பற்றிகூட கர்ண கொடூரமான வார்த்தைகள்!

ஆமாம்! இப்படித்தான் பேசுகிறார்கள் - எழுதுகிறார்கள்!

அதற்காக?

நம்மவரும் அதேபாணியில் பேசி, தமிழ்நாட்டு அரசியல் நெறியை எல்லோருமாகச் சேர்ந்து அழித்துவிட வேண்டுமா?

நேற்று முன்தினம் நானும் நமது பேராசிரியரும் இந்த நிலைகுறித்து மிகக் கவலையோடு பேசிக் கொண்டிருந்தோம்.

சட்டமன்ற அலுவல் ஆய்வுக்குழுவிலேகூட, அனைத்துக் கட்சி தலைவர்களும் இதுபற்றிப் பேசினோம். பேரவையில் முதல்வர்கூட இப்படியொரு நிலை நீடிக்கக் கூடாது என்ற எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

ஆனால்?

அவர் பேசிய மறுநாளே, அவரது கட்சி அமைப்பாளரால் நடத்தப்படும் ஏடொன்றில் கருணாநிதியின் வீட்டில் தற்கொலை என்று ஒரு அபாண்டமான தலைப்பிட்டுச் செய்தி வெளியிடப்படுகிறது. தலைவர்கள் சொல்லுக்கும் தளபதிகளின் செயலுக்கும் தொடர்பில்லாமல் போய் விடுகிறது.

எங்களுக்கும் எழுதத் தெரியாதா? என்று முழங்கி இனமுரசு ஏடு கிளம்பிற்று. அதனைக் கண்டித்து அறிவுரைகூறி அறிக்கை விடுத்தேன், மறந்திருக்க மாட்டாய்!

இனியும் அந்தப் பாணியில் நமது கழக ஏடுகள் எழுத முற்பட்டால், அந்த ஏட்டாளர்கள் கழகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட நேரிடும் என்று நானும் பொதுச்செயலாளரும் எச்சரித்திருக்கிறோம்.

நாம் மற்ற கட்சிகளுக்கு அறிவுரை கூற முன்வரவில்லை. நம்மை நாம் திருத்திக் கொண்டாக வேண்டும்.

கழக ஏடுகளில்

மேடைகளில்

பிரச்சினைகள் விளக்கப்பட வேண்டும். அரசின் தவறுகள், முறைகேடுகள் விமர்சிக்கப்பட வேண்டும். நமது கொள்கை, குறிக்கோள்கள் பரப்பப்பட வேண்டும். நம்மை எதிர்ப்போரை எதிர்த்து நாம் விடுக்கும் பதில்கள் ஆவேசத்தை அள்ளிச் செல்லும் வேலாகக் கூட இருக்கலாம்; ஆனால் ஆபாசத்தைப் பூசிக்கொண்டு அந்தப் பதில்கள் பயணம் கிளம்பிட வேண்டாம்.

இந்த வேண்டுகோளை, நமது கழகப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் தலைமைக் கழகத்தின் ஆணையாக ஏற்று தலைவரும் பொதுச் செயலாளரும் இணைந்து தருகிற எச்சரிக்கையாக ஏற்று நடந்துகொள்ள வேண்டும்.

ஆபாசமாகப் பேசி ஆயிரம் பேர் வருவதைவிட, நாகரிகமாக பேசி நாலு பேர் கொள்கை பற்றுடையவராக கட்சிக்கு வந்தாலே போதுமானது!

குழாயடிச் சண்டையில் யார் திறமைசாலிகள் என்று நாம் போட்டி போட்டுக்கொண்டு, தொன்மை வாய்ந்த தமிழ்க் கலாச்சாரத்தைக் களங்கப்படுத்திட நாமும் காரணமாக இருந்தோம் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாக வேண்டாம்.

இதுபற்றிக் கலந்துரையாடக் கழகப் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் அடங்கிய கூட்டமொன்றை நமது பொதுச்செயலாளர் கூட்ட இருக்கிறார்.

அதற்குள்ளாகவே, நமது மேடைகளில் நாராச நடைக் குறைந்து, ஒளிமிக்க வாதங்கள், அழுத்தமான ஆதாரபூர்வமான கண்டனங்கள் இடம்பெற்றன என்ற செய்தியைத் தலைமைக்கு அறிவிப்பவர்களாக நமது பேச்சாளர்கள் விளங்கிட வேண்டுகிறேன்.

இந்தக் கடிதம் நமது கழகத்தில் உள்ள எல்லாப் பேச்சாளர், எழுத்தாளர்களுக்குமாக எழுதப்பட்டதல்ல!

ஒரு சில குறிப்பிட்ட பேச்சாளர், எழுத்தாளர்களுக்காகவே எழுதப்பட்டது என்பதையும் நினைவுபடுத்துகிறேன்.

நான் யாரைக் குறிப்பிடுகிறேன் என்று அவர்களுக்கே தெரியும். அவர்களே தங்களை திருத்திக் கொள்வார்கள் என்றும் நம்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(24-03-1978)

# 550. "எல்லாமே நீதான்!" என்றிருக்கிறேன்!

**உடன்பிறப்பே,**

இந்த வாரம் உனக்கு எழுதும் இக்கடிதம் மிக மிக முக்கியமானதாகும். நம்நாடு இதழின் வாழ்வும் தாழ்வும் உன்னுடைய கையிலேதான் இருக்கிறதென்பதால் இம்மடல் எழுத நேரிடுகிறது.

அமைப்பு ரீதியாகக் கட்சி ஏடுகளை நடத்துவதென்பதில் எவ்வளவோ தொல்லைகள் இருக்கின்றன. அந்தத் தொல்லைகள் தொடரும் என்று எதிர்பார்த்தேதான் நம்நாடு இதழை மீண்டும் தொடங்கினோம். மற்ற வார இதழ்களைப் போல அல்லாது ஒரு குறிப்பிட்ட கொள்கை விளக்க ஏடாக வெளிவரும் போது வியாபார ரீதியில் நம்நாட்டை நடத்துவது என்பது இயலாத காரியமாகும். எனினும் எண்ணியதைவிட நம்நாடு இதழ் விற்பனையின் எண்ணிக்கை மனமகிழ்ச்சி தருவதாகவே அமைந்துள்ளது. வாரந்தோறும் வாசகர்கள் பெருகுகின்றனர். சந்தாதாரர்கள் அதிகரித்து வருகிறார்கள். பிரதிகளின் எண்ணிக்கை அதிகமாவது மனநிறைவூட்டுகிறது என்றாலும் கூட அதிகமாகும் எண்ணிக்கைக்கேற்ப இழப்பும் ஒவ்வொரு வாரமும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. காரணம் என்ன? அச்சிடும் தாளின் விலை அந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இதே நிலை நீடிக்குமானால் வாரந்தோறும் சிறிய அளவில் ஏற்படுகிற இழப்பு மாதக் கணக்கில் சிறு துளி பெருவெள்ளமாகி, இதழை நிறுத்திட வேண்டிய கட்டாயத்திற்கு நம்மை ஆளாக்கிவிடக்கூடும்.

நம்நாடு இதழின் தேவையை நீ உணருகிறாய்! கழகத்தின் கேடயமாக அது விளங்குகிறது என்பதையும் மறுக்க மாட்டாய்! நமது கழக முன்னணியினர் பலரும் அக்கறையுடன் முன்வந்து அரிய கொள்கை விளக்கக் கட்டுரைகளைத் தீட்டி இந்தக் கழக

ஏட்டினைக் காத்திட ஆற்றிடும் பணியை நீ கிழமைதோறும் காண்கிறாய்.

இதழ் தொடங்கிய ஒரு திங்களுக்கெல்லாம் நான் எழுதும் தொடர் கதை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கிடையே கறுப்புக்கொடி அறப்போர் சிறைவாசம் போன்ற பல நிகழ்ச்சிகள் குறுக்கிட்டு விட்டன. அப்போது வராத கதை, வராமல் போகாது! தொடர் கதை வரும். அதுவும் தொய்வின்றித் தொடர்ந்து வரும். ஏப்ரல் திங்கள் இரண்டாவது வாரம் அல்லது மூன்றாவது வாரம் முதல் போர் வாளும் பூவிதழும் என்று அறிவிக்கப்பட்ட தொடர்கதை துவங்கிவிடும்.

காலமாறுதலுக்கேற்ப கருத்துக்களுக்கு வண்ணமூட்டித் தரும் முறையும் மாறிட வேண்டும். அது முழுமையாக நம்நாடு இதழில் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

என்ன செய்வது; நானே அனைத்தையும் கவனிப்பது என்பது முடிகிற காரியமா?

முரசொலியில் ஒருநாள் கடிதம் எழுதாவிட்டால், அதனை முகஞ்சுளித்துக் கொண்டுதான் வாங்குகிறாய்!

குங்குமத்தில் குறளோவியத்திற்கு ஒரு வாரம் ஓய்வு என்றால் கோபித்துக் கொள்கிறாய்! குக்கிராமங்களிலிருந்து வருகிற உன்னை வரவேற்று, வந்த விவரம் கேட்டு, கழகப் பணி குறித்து விசாரித்து அனுப்பி வைத்தால்தான் உனக்கும் மன நிறைவு! எனக்கும் மன நிறைவு!

இதற்கிடையே காலை எட்டரை மணிக்கெல்லாம் புறப்பட்டால்தான் சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் கலந்துகொள்ள முடியும். அமைச்சர்கள் வராமல் இருக்கலாம். எதிர்க்கட்சித் தலைவனாயிற்றே நான்; போகாமல் இருக்க முடியுமா? சட்டசபை செத்து விட்டது என்று சொல்லி, வேறு வேலை பார்க்க முடியுமா என்ன?

கலைத்துறை மூலம் கருத்துக்களைச் சொல் என்றும் நீதான் கட்டளையிடுகிறாய். அந்தப் பணியையும் தோள் மீது போட்டுக் கொண்டிருக்கிறேன்.

அத்துடன் விடுகிறாயா? கூட்டத் தேதி - மண விழாத் தேதி - இப்படி தேதி கேட்டுச் சூழ்ந்து கொள்கிறாய். ஒப்புக்கொண்டு

வந்தாலோ, கசக்கிப் பிழிந்த பிறகே திரும்பச் சென்னைக்கு அனுப்புகிறாய்.

இத்துடன் முடிகிறதா? வழக்குகள், விசாரணைகள், வழக்கறிஞர்களுடன் விவாதங்கள் -

உடன்பிறப்பே! நீ என் மீது கொண்டுள்ள பாசமும், நம்பிக்கையும்தான் இத்தனை வேலைகளையும் செய்கிற உள்ள உறுதியையும், உடல் வலிமையையும் எனக்கு வழங்கியிருக்கிறது என்று சொன்னால் அதுதான் மறுக்க முடியாத உண்மை!

பணிகளின் குவியல்களினூடே நம்நாடு வளர்க்கப்பட வேண்டும் என்று நான் கொண்டுள்ள தீராத ஆசைக்கு நீதான் துணையிருக்க வேண்டும்.

இழப்பினைக் கணக்கிட்டுப் பார்த்து, ஏப்ரல் முதல் வாரத்து இதழிலிருந்து விலையை ஐம்பது காசாக்குகிறோம். பத்து காசுதான் அதிகம். நீ, கழகத்தின் மீது கொண்டுள்ள பற்றுக்காக அந்தப் பத்துக் காசைப் பெரிதாக எண்ணிட மாட்டாய்! எண்ணிடக் கூடாது!

அத்துடன் நில்லாது சந்தாதாரர்களின் எண்ணிக்கையை நீ முயற்சித்து அதிகப்படுத்து!

முடிந்த வரையில் விளம்பரங்களை வாங்கி அனுப்பு!

நம்நாடு இதழ் வாங்கப்படாத கிளைக் கழகம் - குறையுடைய கழகமே என்ற நினைப்பு உனக்கு இருந்திட வேண்டும்.

விற்பனையாளர்களும், தங்கள் கடமையைப் பொறுப்புணர்வோடு செய்திட நீ தூண்டுகோலாக இருக்க வேண்டும்.

எல்லாமே நீதான் என்று நம்பி இருக்கிறேன். அந்த நம்பிக்கை நம்நாடு வளர்ச்சியில் குன்றிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது; உடன்பிறப்பே! உன் தலையாய பொறுப்புகளில் ஒன்று.

அன்புள்ள,

மு. க.

(25-03-1978)

# 551. சிறையில் வாடுவோர் பற்றிய ஒரு முறையீடு!

**உடன்பிறப்பே,**

மிசா மட்டுமின்றி, மிசாவுக்குப் பதிலாக ஜனதா ஆட்சி கொண்டுவர நினைத்திருந்த தடுப்புக்காவல் சட்டமும் கைவிடப்பட்டு விட்டது என்றத் தகவலை உள்துறை அமைச்சர் மக்களவை மாநிலங்களவை இரண்டிலும் அறிவித்திருப்பது வரவேற்றுப் பாராட்டக் கூடிய ஒரு நற்செய்தியாகும்.

மிசாவை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் தடுப்புக் காவல் சட்டத்தை இடம்பெறச் செய்யப் போகிறோம் என்று ஜனதா அரசின் சார்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்ட போதே அதனைக் கண்டித்துக் கழகம் தனது எண்ணத்தை வெளிப்படுத்தத் தவறவில்லை.

மூன்று மாதங்களுக்கு முன்பு மயிலை மாங்கொல்லையில் தமிழ்நாட்டு ஜனதா கட்சியின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்ட ராஜாஜி விழாக் கூட்டத்தில் நான் பேசும்போது, மிசாவுக்குப் பதில் தடுப்புக் காவல் சட்டம் என்ற நிலை வருவதைக் கழகம் ஏற்றுக்கொள்ள இயலாது. அதுபற்றி மறுபரிசீலனைச் செய்து அந்த யோசனையை மத்திய அரசு கைவிட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

ஜனநாயகம் காக்கத் துணைநின்ற கட்சி ஜனதா கட்சி என்ற மதிப்பும், பாராட்டுதலும் என்றைக்கும் உண்டு என்பதைக் கழகம் உறுதிப்படுத்திக் கூறுகிற அதே நேரத்தில், அந்தக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தீட்டப்படுகிற சட்டங்கள், திட்டங்கள், வகுக்கப்படுகிற கொள்கைகள் - மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மாறுபட்டதாகவும், முற்போக்குச் சமதர்ம சமுதாயம் உருவாகிற நிலைக்குத் தடைக்கற்களாகவும் அமைந்திடுமேயானால் அவற்றைச் சுட்டிக் காட்டித் தனது எதிர்ப்புக் கருத்தைத் தெரிவித்திடத் தயங்காது என்பதை நாம் பல தடவை செயல்மூலம் காட்டியிருக்கிறோம்.

தடுப்புக் காவல் சட்டம் மத்திய அரசின் நினைவில் கருக்கிக் கொண்டிருக்கிறது என்றதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களும் தங்கள் கண்டனத்தை வெளியிட்டனர். தொடர்ந்து தெரிவிக்கப்பட்ட எதிர்ப்புக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் உள்துறை அமைச்சர், தடுப்புக் காவல் சட்டமும் கைவிடப்பட்டது என்று அறிவித்திருப்பது போற்றிப் புகழத்தக்க காரியமாகும்.

வன்முறையாளர்கள், சமூக விரோதிகள் போன்ற கடுங் குற்றவாளிகள் யாராக இருப்பினும் அவர்களைத் தண்டிக்கத் தற்போதுள்ள சட்டங்களும், அந்தச் சட்டங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குகிற நீதிமன்றங்களும் போது மானவை! சட்டமும், நீதியும் தமது கடமைகளைச் செம்மையாக நிறைவேற்ற அவற்றை இயக்குவோர் நேர்மையாகச் செயல்பட வேண்டும். அதில் இடையூறுகள் எழக்கூடும் என்பதற்காக, தடுப்புக்காவல், மிசா போன்ற சட்டங்களை ஒரு அரசு பயன்படுத்தத் தொடங்குமேயானால்; அந்தச் சட்டங்களும் அந்த அரசை இயக்குவோரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பத்தான் செயல்படத் தொடங்கும்.

கடத்தல்காரர், பதுக்கல் பேர்வழிகள், சமூக விரோதிகள் அடக்கப்படுவதற்காக என்று தோன்றிய மிசா, ஒரு லட்சத்து அறுபதாயிரம் அரசியல்வாதிகளைச் சிறையில் ஓராண்டுக்காலம் விசாரணையின்றி அடைத்துக்களித்த அனுபவத்தை அதற்குள் மறந்திட முடியாதல்லவா?

அதேபோலத்தான் தடுப்புக் காவல் சட்டமும் தன் உருவை மாற்றிக் கொண்டு ஆளுக்குத் தகுந்தாற்போல் தர்பார் நடத்தும் என்ற அச்சம் அனைவருக்கும் ஏற்பட்டது. இப்போது அந்த அச்சம் போக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை உள்துறை அமைச்சர் வெளியிட்ட போது இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் பூபேஷ் குப்தா, அமைச்சரிடம் ஒரு முறையீட்டைச் செய்துள்ளார்.

இன்னமும் சில மாநிலங்களில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களில் நக்சலைட்டுக்கள் குறிப்பிடத்தக்கவர்கள், உள்துறை அமைச்சர் தலையிட்டு அவர்களையும் விடுதலை செய்ய வேண்டும். இதுதான் அவரது முறையீடு! நக்சலைட் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையின் மீது தமிழகச் சட்டப் பேரவையில்

தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் அனைவரும் விரிவாகப் பேசியுள்ளனர்.

கொலைகளின் மூலம் கொள்கையை நிலைநாட்டலாம் என்பதோ அல்லது கொலைக்குக் கொலைதான் பரிகாரம் என்பதோ, கடந்த காலத்தின் நக்சலைட்டுக்கள் அரசியல் ரீதியாக வகுத்துக்கொண்ட இலட்சியமாக இருந்திருக்கலாம். அந்த நிலையை இப்போது அவர்கள் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பாராளுமன்ற முறைகளை ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளார்கள். வன்முறையை ஒரு கட்சி தனது கொள்கையாகக் கொண்டிருப்பதை ஏற்காத காரணத்தால்தான் நக்சல் பாரிகளைத் தங்கள் இயக்கத்திலிருந்து வெளியேற்றினோம் என்ற கருத்தினை அண்மையில்கூட சட்டப் பேரவையில் மார்க்சிஸ்ட் தலைவர்கள் வெளியிட்டார்கள். ஆனால் அவர்களேகூட, நக்சல்பாரிகளிடம் இன்று ஏற்பட்டுள்ள மனமாற்றத்தை ஏற்றுக்கொண்டு அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, மத்திய அரசு மட்டுமின்றி, மாநில அரசுகளும் இதனைச் சிந்தித்து அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்த வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்!

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நக்சலைட் தலைவர் கலியபெருமாளுக்கு கழக ஆட்சிக் காலத்தில் அந்தத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அப்போதிருந்த நிலையைவிட இப்போது பெரிதும் அவர்களிடம் மனமாற்றம் ஏற்பட்டிருப்பதால் மாநில அரசுகள் இந்தப் பிரச்சினையை மனிதாபிமான கண்ணோட்டத்துடன் அணுகி ஆவன செய்திட முன்வர வேண்டும்.

அரசியல் கைதிகள் விஷயத்தில் மட்டுமன்றி மூத்தறிஞர் ராஜாஜி அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, அவர் நினைவாக சிறையில் உள்ள ஏனைய மரண தண்டனை கைதிகள் பிரச்சினையிலும் அவர்கள் மகிழ்ந்து திருந்தத்தக்க அளவுக்கு உரிய, இயன்ற முடிவுகளை மத்திய அரசு மேற்கொள்வது பொருத்தமுடையதாகவும் பாராட்டுக்குரியதாகவும் அமையும்.

அன்புள்ள,

மு. க.

(26-03-1978)

# 552. மீண்டும் ஒரு வேண்டுகோள்!

**உடன்பிறப்பே,**

நெல்லையில் நமது கழகப் பேச்சாளர்கள் ஜெயச்சந்திரன், மைதீன் ஆகிய இருவரும் ஆளுங்கட்சிக்காரர்களால் திட்டமிடப்பட்டுத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவரை அவசரமாக ஜனதா கட்சித் தலைவர் அழைப்பதாகச் சொல்லி, அவர் அதனை நம்பிப் புறப்பட்டுச் செல்லும் வழியில் சுமார் பத்து பேர் அவரைச் சூழ்ந்து கொண்டு அவர் மயங்கிக் கீழே விழுகிற அளவுக்குத் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இன்னொரு நண்பர் சைக்கிளில் செல்லும் போது கார் கொண்டு அவரை மோதித்தள்ளி விழுந்தவரை இழுத்துக் கொண்டு போய் அடித்து ஒரு மைதானத்தில் தூக்கி வீசிவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இத்தகைய வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது காவல்துறையினர் உரிய நடவடிக்கை எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு உடனடியாக ஜாமீனில் விடப்பட்டதாகவும் செய்தி வந்துள்ளது.

யார் தவறு செய்தாலும் விடமாட்டேன் என்று உதட்டளவில் முழங்குகிற புனிதர் ஆட்சி நடக்கிறது இப்போது!

ஆனால் சொற்கள், செயலாகின்றனவா? என்றால் - இல்லை! இல்லவே இல்லை!

ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. ஒருவர், போலீஸ் நிலையத்திற்குள் நுழைந்து அங்கே கைது செய்யப்பட்டு லாக்அப்பில் இருக்கிற தனது உறவினர்களைப் பலாத்காரமாக மீட்டுக்கொண்டு அதிகாரிகளையும் ஏசிவிட்டுச் சென்றார். அந்த எம்.எல்.ஏ. மீது நாலு மாதங்களுக்கு முன்பு வழக்கு பதிவு செய்யப்பட்டதாகச் செய்தி வந்ததே தவிர நடவடிக்கை எதுவும் தொடர்ந்ததாக தெரியவில்லை.

இன்னொரு ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. மீது கற்பழிப்பு புகார்! வெடித்துக் கிளம்பிய அந்தச் செய்தி அப்படியே மூடப்பட்டு விட்டது! நடப்பது புனித ராஜ்யமல்லவா?

மற்றுமொரு ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. தனது ஆட்களுடன் சென்று ஒரு அரிசனச் சகோதரர் வீட்டைத் தரைமட்டமாக இடித்துப் போட்டு விட்டார் என்ற செய்தியை சட்டப் பேரவையிலேயே தி.மு.கழகச் சார்பிலும் ஜனதா மற்றுமுள்ள கட்சிகளின் சார்பிலும் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்கு எந்தவிதமான விளக்கமும் கிடைக்கவில்லை. நடவடிக்கையும் எடுத்ததாக விவரம் இல்லை. புனித ராஜ்யத்து நடவடிக்கைகள் அப்படித்தான் இருக்கும் போலும்!

இதோ, நெல்லைப் பகுதியிலிருந்து அடிக்கடி இதுபோன்ற செய்திகள் வரத் தொடங்கியிருக்கின்றன.

ஏற்கனவே தேனாம்பேட்டையில் கள்ளச்சாராயம் காய்ச்சியவர்களைப் பிடிக்கப்போன அதிகாரிகள் ஆளுங்கட்சியினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டதும், குத்துண்டதும் மறந்துவிட்ட நிகழ்ச்சிகள் அல்ல!

கழகத்தையும், கழகத்தினரையும், என்.ஜி.ஓ.க்களையும் மிகத் தரக்குறைவாகப் பேசினார்கள் என்றும், அதற்கு மறுப்பு தெரிவிக்கக் கழகச் சார்பில் கூட்டம் நடத்தப்பட்டதென்றும் அதில் பேசிய நம்மவர் சிலர், ஆளுங்கட்சியினர் பேசிய பாணியிலேயே பதில் அளித்தார்கள் என்றும் எனக்குச் செய்தி வந்துள்ளது. ஆகா! அவர்களுக்குப் பதில் கூறுகிற வகையில் அவர்களைப் போலவே பேசிவிட்டீர்களா? என்று நான் சபாஷ் போடப் போவதில்லை.

முன்பே, நான் கண்டிப்பாக எழுதியுள்ளவாறு - மேடையிலும், ஏடுகளிலும் புழுதி வாரி இறைப்பது அவர்களது பாணியாக இருக்கட்டும்! அதே நிலையை நமது கழகத்தினரும் மேற்கொண்டால், அதனை வீரம் என்று ஏற்றுக் கொள்ளக் கழகத்தின் தலைமை தயாராக இல்லை.

நமது வீரம், அடக்குமுறைகளை ஏற்றுக் கொள்வதில், எதையும் தாங்கும் இதயம் பெற்றவர்கள் என்ற பாராட்டைப் பெறுவதில் ஒளிவிட வேண்டுமேயல்லாமல், ஆளுங்கட்சியினரைப்போல ஆபாச அர்ச்சனை புரிவதில் காட்டப்பட வேண்டிய ஒன்றல்ல!

இந்தக் கருத்தை என் சார்பிலும் நமது பொதுச் செயலாளர் சார்பிலும் இடப்பட்ட கட்டளையாக ஏற்று நமது கழகப் பேச்சாளர்கள், கூட்டம் நடத்துவோர், ஏடு எழுதுவோர் நடந்துகொள்ள வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆபாசமாக அவர்கள் பேசுகிறார்களே; என்பாய்! அதனை அலட்சியப்படுத்து!

கனல் கிளம்பப் பேசு; அந்தக் கனலைக் கருத்துக்களை எடுத்து வைக்கப் பயன்படுத்து! வன்முறையைத் தூண்டவோ; கண்ணியக் குறைவான நிலை உருவாக்கவோ உனது பேச்சின் ஒரு பகுதியும் காரணமாக இருக்கக்கூடாது!

அடிக்கிறார்களே; தாக்குகிறார்களே - என்பாய்! ஆமாம்; அடிப்பார்கள் - உதைப்பார்கள் - காவல்துறையினரும்கூட கைகட்டிப் பார்த்துக் கொண்டுதானிருப்பார்கள்.

கண்ணீரும், செந்நீரும் சிந்தி வளர்ந்ததுதான் நமது கழகம் என்ற உறுதியோடு - உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் நாம் உழைத்துக் கொண்டுதானிருக்க வேண்டும்.

தியாகம் செய்வது, நமக்காக அல்ல! நமது திருநாட்டுக்காக!

தழும்புகளை ஏற்பது நமது கீர்த்திக்காக அல்ல; தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்காலத்திற்காக!

உடன்பிறப்பே, இந்தத் திட உள்ளத்துடன் விழிகளில் ஒளி மின்னிட, மொழியில் கண்ணியம் மிளிர்ந்திட நம்வழி நடப்போம்!

தாக்குதல் - தரக்குறைவு இவையனைத்தும் மாற்றாருக்கே உரியவைகளாக இருக்கட்டும்!

நமது பணி, தமிழ்ப் பண்பாட்டையும் வீரத்தையும் நிலை நிறுத்தும் வகையில் அமையட்டும்.

அன்புள்ள,

மு. க.

(29-03-1978)

# 553. மதுரைக்கு வருகிறேன்!

உடன்பிறப்பே,

ஏப்ரல் இரண்டாம் நாள் மதுரை மாநகரில், காலையில் நண்பர் பாண்டி வீட்டுத் திருமண விழாவிலும், மாலையில் கழக வளர்ச்சி நிதி திரட்டும் சிறப்புக் கூட்டத்திலும் கலந்து கொள்வதற்காக வர இருக்கிறேன். ஆம், நிச்சயமாக வருகிறேன். மதுரையில் எனக்குக் கறுப்புக் கொடி காட்டுவதாக மதுரை காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து ஏடுகளுக்கு அறிக்கை தரப்பட்ட பிறகு நான் மதுரைக்கு வராமல் இருக்க முடியுமா? எனவே என் மதுரைப் பயணம் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

நெருக்கடி காலப் பிரகடனம் செய்யப்பட்டு அதனைத் தி.மு.கழகம் எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியதோடு, தேசத் தலைவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்றும் நெருக்கடி நிலையைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் அரசியல்வாதிகள் மீது மிசா சட்டம் பயன்படுத்தக் கூடாதென்றும் நமது கூட்டங்களில், மாநாடுகளில் தொடர்ந்து வலியுறுத்தியும் வந்ததின் காரணமாகக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது - ஆட்சி கலைக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குப் பிறகு எதிர்க்கட்சியாளனாக நான் மதுரை நிகழ்ச்சியொன்றுக்குச் சென்றபோது எனக்குக் காங்கிரசார் கறுப்புக் கொடி காட்டினார்கள். நான் சென்ற கார் கல் வீச்சினால் சேதமுறுகிற அளவுக்கு அன்றைய தினம் அவர்கள் கறுப்புக் கொடியைக் காட்டி முடித்தார்கள். கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் கூடாது என்று கட்டுப்படுத்துகிற நெருக்கடி நிலை பிரகடனத்தின்போதே எதிர்க்கட்சிக்காரனாகிய எனக்குக் கறுப்புக் கொடி காட்டியவர்கள் இப்போது கறுப்புக் கொடி அறிவிப்பைச் செய்திருப்பதில் வியப்பு ஏதுமில்லை.

மதுரை இந்திரா காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து போராட்டத் தலைவர் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள அறிக்கையில் அவரது உள்நோக்கத்தை மிகமிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

அன்னை இந்திராவுக்கு இழைக்கப்பட்ட அவமானத்தைத் துடைக்க ஆயிரமாயிரம் வாஞ்சிநாதர்கள் நம்மிடம் உண்டு என்பதை நிலைநாட்டும் வகையில் வைகைக் கரைக்கு விரைந்து வரும்படி அனைவரையும் அழைக்கிறேன்.

இதுதான் போராட்டக் குழுத் தலைவரின் கையெழுத்துடன் கூடிய அறிக்கையில் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய வாசகம்!

ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்ட விடுதலை வீரன் வாஞ்சிநாதன்!

அந்த வாஞ்சிநாதன் குடும்பத்துக்கு நிதி வழங்கிய ஆட்சி கழக ஆட்சி! என் கையால்தான் வாஞ்சிநாதனின் சகோதரரிடம் ஐயாயிர ரூபாயை வழங்கினேன்.

வாஞ்சிநாதன் நினைவாக, மணியாச்சி ஜங்ஷனை வீரவாஞ்சி ஜங்ஷன் என்று பெயர் மாற்ற வேண்டுமென்று இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிய கையும் இதுதான்!

பிராந்தியத் தலைவர்களுக்கெல்லாம் அப்படி நினைவுச் சின்னங்களை அமைக்க முடியாது என்று இந்திரா அரசு பதில் எழுதி, கழக அரசின் கோரிக்கையை மறுத்துவிட்டதையும் நாடு நன்கறியும்.

இன்று மதுரைக் காங்கிரஸ் போராட்டக் குழுத் தலைவர் வாஞ்சிநாதன் பெயரை வேறு ஒரு நோக்கத்தோடு பயன்படுத்திக் கொண்டு, அறிக்கையின் வாயிலாகத் தன் திட்டத்தை சூசகமாக வெளியிட்டிருக்கிறார்.

ஆறிலும் சாவுதான்
நூறிலும் சாவுதான்
ஆனது ஆகட்டுமே!

என்ற பாவலர் பாலசுந்தரத்தின் பாட்டை மறவாமல் பணியைத் தொடர்பவன் நான்! பல ஆண்டுகளுக்கு முன்பு திராவிடர் கழக முன்னணி வீரராக இருந்து மறைந்துவிட்ட பாவலர் பாலசுந்தரம் அவர்கள் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய அந்தப் பாட்டை ஒலித்தவாறு ஊர்வலங்களில் கொடியேந்திச் சென்றவன் நான்!

இருப்பது ஒரு உயிர்

அது போகப் போவதும்

ஒரு முறைதான்!

என்று நமது அண்ணன் அடிக்கடி கூறுவாரே அந்த வாசகம் ஆழப்பதிந்துள்ள இதயம்தான் என் இதயம்!

இந்திரா காங்கிரஸ் போராட்டக் குழுத் தலைவர், தனது அறிக்கையில் காமராஜர் பெயரை வேறு அடிக்கடி இழுத்துள்ளார்.

கழக ஆட்சிக் காலத்தில் பெருந் தலைவர் காமராஜர் அவர்களது நினைவு மண்டபத்தில் அழகுற அமைக்கப் பட்டிருந்த கை ராட்டையை இரவோடு இரவாக இடித் தெறிந்தவர்கள் இந்திரா காங்கிரஸ் ஆட்சியாளர்கள் என்பதை காமராஜரின் உண்மைத் தொண்டர்கள் மறந்து விடவில்லை.

இந்திரா காந்தி நெருக்கடி நிலைப்பிரகடனம் செய்தபோது, மதுரையிலிருந்து வெளிவந்த தனது நாளேட்டில் இந்திராவை சண்டாளி என்றும் பேய் என்றும் பிடாரி என்றும் வர்ணித்து எழுதியவர்தான், மேடைகளில் பேசியவர்தான் இன்றைக்குத் தன்னை இந்திரா காந்தியின் தளபதி என்று கூறிக்கொண்டு கறுப்புக்கொடி என்ற பெயரால் வாஞ்சிநாதன்களே! வருக!! என்று அழைக்கிறார்.

உடன்பிறப்பே, மதுரைக்கு வருகிறேன்! சென்னையிலிருந்து விடைபெற்றுக் கொண்டு மதுரைக்கு வருகிறேன்.

உயிர் வெல்லமெனக் கருதுகிறவன் பொதுவாழ்வுக்குத் தகுதியற்றவன் என்று போதித்த பெரியாரின் தொண்டன் நான்! எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்ற பேரறிஞர் அண்ணாவின் தம்பி நான்!

விழுப்புண்களை விரும்பி ஏற்று மனம் தளராது கழகம் நடத்தும் உன்னை, உடன்பிறப்பாகப் பெற்றவன் நான்!

எனவே, மதுரை நிகழ்ச்சிகளைக் கட்டுப்பாடு குலையாமல் - வன்முறைகட்குச் சிறிதும் உள்ளத்தில் இடம் தராமல் - அதே நேரத்தில் உறுதி குலையாமல் நாம் நடத்திடுவோம்!

அன்புள்ள,

மு. க.

(31-03-1978)

# 554. நம்மவர் வெற்றிக்கு நாளும் உழைத்திடுக!

**உடன்பிறப்பே,**

பட்டதாரிகள் தொகுதி ஆசிரியர்கள் தொகுதிகளில் மேலவை உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் வரும் ஒன்பதாம் தேதியன்று நடைபெற இருக்கின்றன. அந்தந்தத் தொகுதிகளில் கழகத்தின் ஆதரவு எந்த வேட்பாளருக்கென்று நமது பொதுச் செயலாளர் ஆங்காங்குள்ள கழக அமைப்புகளுக்கு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார். அவர்களை வெற்றிபெறச் செய்யவேண்டிய பொறுப்பு மிகுந்த பணியை நீயும் துணை நின்று ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தலைமைக் கழகத்திலிருந்து அமைப்புகளுக்கு எழுதப்பட்டுள்ள வேண்டுகோள்களை மதித்து நடப்பதும், சிறிதளவு மனவேறுபாடுமின்றிக் கட்டுப்பாட்டு உணர்வைக் காத்து நிற்பதும், நமது கழகம் பெற்றுள்ள பண்பாகும்! மேலவையில் முற்றிலும் நமது கழகக் குரலையே முழங்குபவர்கள் என்றில்லாமல் கடமை, கண்ணியம் உணர்ந்து பணியாற்றக் கூடியவர்களையும் விவாதம் நடத்தக் கூடியவர்களையும் நான் கடந்த காலத்தில் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். அவர்களில் சிலர் மீண்டும் தேர்தல் களத்தில் நிற்கின்றனர். அந்தத் திறமையாளர்கள், மேலவையில் அங்கம் வகிப்பது என்பது அவர்களுக்கு அல்ல; நாட்டுக்கு நல்லது என்று கருதுகிறது நமது கழகம்!

அவர்களேயன்னியில் வேறு சில தொகுதிகளில் புதிய நண்பர்கள் - ஆனால் உழைப்பதில், நற்பணிகளை உருவாக்குவதில் பழைய தோழர்கள் - எடுத்த முயற்சியில் எதற்கும் துணிந்து அயராது பம்பரமெனச் சுழல்பவர்கள் - ஆனால் சாமானியர்கள் வேட்பாளர்களாக நிற்கிறார்கள். அவர்களுக்குக் கழகம் தனது இதய பூர்வமான ஆதரவை வழங்கிட முன்வந்துள்ளது.

அவர்கள் யார் என்று அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்து உண்மையும், உழைக்கும் திறனும் கொண்டவர்களுக்கு நன்றி காட்டுக என்று வாக்காளர்களைக் கேட்டுக் கொள்வதோடு, உடன்பிறப்பே, நீயும் உன் முழு ஒத்துழைப்பையும் தந்திடுமாறு வேண்டுகிறேன்.

மேலவையின் எதிர்க் கட்சித் தலைவரும் - அடர்ந்து நிமிர்ந்த மீசைக்காரர் ஆயினும் அடக்கத்தின் உறைவிடமாகத் திகழ்பவரும் - சலனங்கள், சபலங்கட்கு உட்படாத உறுதி வாய்ந்த நெஞ்சங் கொண்டவருமான திரு. சங்கரலிங்கம் அவர்கள் நெல்லை குமரி மாவட்ட ஆசிரியர் தொகுதியில் போட்டியிடுகிறார். எஃகு உள்ளமும் எதையும் தாங்கும் இயல்புங்கொண்டு ஆசிரியர் சமுதாயத்திற்கும் - பொதுவாகத் தமிழ்க் குலத்திற்கும் தொண்டாற்றும் அந்தத் தூயவரை வெற்றி வீரராக மேலவைக்கு அனுப்பி வைக்கும் பொறுப்பை நீ ஏற்றுக் கொள்க!

அப்பகுதி வாக்காளர்கள், இந்த என் பணிவன்பான வேண்டுகோளை அருள்கூர்ந்து ஏற்றுக் கொள்ளுமாறு கோருகிறேன்.

சென்னைப் பட்டதாரிகள் தொகுதியில் மிசா ஆர். கணேசன் போட்டியிடுகிறார். வழக்கறிஞர், ஒரு வருடம் மிசாவில் வாடியவர். எனினும், வளையாதவர். நிலைகுலையா நெஞ்சுக்குச் சொந்தக்காரர், மாணவப் பருவத்திலேயே இந்தியை எதிர்த்துச் சிறையில் அடைக்கப்பட்டதியாகச் சுடர். அன்று முதல் இன்றுவரை மனத் தடுமாற்றமின்றி, கொள்கைக் குன்றென நிமிர்ந்து நிற்பவர்.

அந்தத் தம்பிக்கு, வாக்காளர்கள் தங்களின் அன்பு ஆதரவை வழங்க வேண்டுமென்று கரங்கூப்பிக் கேட்டுக் கொள்கிறேன். உடன்பிறப்பே! நீயும் ஓய்ந்திருக்கலாகாது என்பதை கவனப்படுத்துகிறேன்.

இடையில் ஓரிரு நாட்கள்தான்! இடையறாது பணியாற்றி வெற்றிகளை ஈட்டித் தருமாறு மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்துகிறேன். உன் உழைப்பின் பயனை எதிர்பார்த்து நிற்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(7-04-1978)

# 555. மகாராஜா கூட்டிய மந்திராலோசனை மண்டபம்!

**உடன்பிறப்பே,**

இராமாபுரம் சமஸ்தானத்தில் அன்று கொலு மண்டபம் கூடுவதற்குப் பதிலாக மந்திராலோசனை மன்றம் கூடிற்று. மன்றத்தின் நடுவில் போடப்பட்டிருந்த தங்கச் சிம்மாசனத்தில் மகாராஜா வீற்றிருந்தார். வயது முதிர்ந்து அடந்த மீசை நரைத்துப் பழுத்த நிலையில் இருந்த மகாராஜா முன்னிலையில் ஒரு வரிசையில் மந்திரிமார்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு எதிர் வரிசையில் அமர்ந்திருந்தவர்களில் நாலைந்து துடிப்பான வாலிபர்கள் தோளைக் குலுக்கி மீசையை முறுக்கிய வண்ணம், மந்திரிமார்களைப் பார்த்துக் கேள்விகளை பொழிந்து கொண்டிருந்தனர்.

மகாராஜா அவர்களே! நமது மந்திரிமார்கள் - அதிலும் குறிப்பாக நமது பிரதான மந்திரியார் அவர்கள் ஊருக்கு உபதேசம் செய்வதில் கெட்டிக்காரராக இருக்கிறார். நமது பிரஜைகள் யாரும் தவறான வழியில் பொருள் திரட்டக்கூடாது என்றும், நமது சமஸ்தானத்துக்குச் சேரவேண்டிய வரிப்பணத்தை ஏமாற்றி வாயில் போட்டுக்கொள்ளக் கூடாது என்றும் சட்டம் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். அந்தச் சட்டங்கள் கடுமையாக்கப்படும் என்றும் அடிக்கடி எச்சரிக்கிறார். ஆனால் நமது பிரதான மந்திரியாரே கோடிக் கணக்கான ரூபாய்களை இந்த சமஸ்தானத்தைப் பொறுத்து வரி ஏய்ப்பின் மூலம், தவறான வழியிலும் சம்பாதித்துத் தன் சொந்த உபயோகத்திற்கு வைத்துக் கொண்டிருக்கிறார். இது எங்கள் குற்றச்சாட்டு.

இவ்வாறு அந்த வாலிபர்கள் குற்றம் சாட்டியதும் பிரதானமந்திரி எழுந்து விடையளித்தார். மகாராஜா அவர்களே! நான் வரி ஏய்ப்பின் மூலம் பொருள் குவித்தது உண்மை!

ஆனால், அந்தப் பொருளைப் பலருக்கு நன்கொடையாக வழங்கியிருக்கிறேன்.

இந்தப் பதிலை கேட்டதும் வாலிபர்கள் விடவில்லை. எழுந்து மடக்கினார்கள்.

மகாராஜா! மந்திரியார் கூற்று கேலிக்குரியது! வரியை ஏய்த்து, தவறான முறையில் பணம் சேர்ப்போர் அனைவரும் தான தர்மம் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். அதற்காகச் சட்டம், அவர்களை விட்டுவிடுகிறதா? வழிப்பறி செய்து கொள்ளையடிக்கிற கள்வர் தலைவன் கூடத் தன்னிடமுள்ள பொருளை ஏழை எளியோர்க்கு வழங்குவதாகச் சொன்னால், சட்டம் அவனைக் கொள்ளையடிப்பதற்கு அனுமதித்து விடுகிறதா? நமது பிரதான மந்திரி தவறான முறையில் சமஸ்தானத்து வரியை ஏமாற்றிச் சேர்த்த தொகை அதிகம். அதில் ஏதோ நாலு தர்மங்களை விளம்பரத்தோடு செய்துவிட்டு, மீதியைச் சுருட்டிக்கொண்டிருக்கிறார் என்பதே எங்கள் குற்றச்சாட்டு.

பிரதான மந்திரியார் மீண்டும் விளக்கமளித்தார்;

மகாராஜா! என்னை மன்னித்து விடுங்கள். நான் தவறான வழியில் பொருள் ஈட்டினேன். நமது சமஸ்தானச் சட்டத்திற்கு விரோதமாக வரி ஏய்ப்புச் செய்தேன். அனைத்தையும் நமது இந்திரபுரிப் பேரரசியாரிடம் நானே ஒத்துக்கொண்டு அவர்களது மன்னிப்பையும் பெற்று, அந்த மன்னிப்புக் கடிதத்தையும் தங்களிடம் சமர்ப்பித்திருக்கிறேன். இனிமேல் அப்படித் தவறு செய்யமாட்டேன். திருந்திவிட்டேன். இந்திரபுரிப் பேரரசியார் அவர்களே மன்னித்து எச்சரித்துவிட்ட பிறகு இந்தப் பிரச்சினையை அடிக்கடி எழுப்புவதில் அர்த்தமேயில்லை. வாலிப வீரர்கள் மந்திரியாரின் பேச்சைக் கரகோஷம் செய்து வரவேற்று,

இவ்வளவு பெரிய தவறுக்குச் சொந்தக்காரராகிய தாங்கள் மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும்போது உங்கள் மனச்சாட்சியே உங்களை குடையவில்லையா? என்று கேட்டனர்.

இதுவரையில் பேசாமலிருந்த மகாராஜா, தனது அடர்ந்து தழைத்த நரைத்த மீசையைத் தடவிக் கொண்டே பின்வருமாறு சொன்னார்;

ஏதோ நடந்தது நடந்து விட்டது. இதை இத்துடன் விட்டுவிடுவோம். பிரதான மந்திரியார், தவறான முறையில்

பணம் சம்பாதித்ததைப் பற்றிப் பேசிய பேச்சுக்கள், கொடுத்த விளக்கங்கள், அதுபற்றிய விவாதங்கள் அனைத்தையும் நமது மந்திராலோசனை நடவடிக்கைச் சுவடியில் எழுத வேண்டாமென்று உத்திரவிடுகிறேன்.

இந்த உத்திரவைக் கேட்டு, சுவடி எழுத்தர் அயர்ந்து போனார். இந்த விவகாரம் வெளியே தெரிவதும் விளம்பரமாவதும் இன்றல்ல, எதிர்காலத்திலேகூட, கூடாது என்பதற்காகவே அவைச் சுவடியிலிருந்து அவற்றை அகற்றுமாறு மகாராஜா உத்திரவிட்டுவிட்டார்.

ஆனால், மந்திராலோசனைச் சபைக்கு வந்தவர்களையெல்லாம் ஊமையாக்கிவிட முடியுமா என்ன?

அவர்கள், பிரதான மந்திரியாரின் உண்மை உருவத்தை உலகிற்குச் சொல்லிக் கொண்டுதானிருப்பார்கள். அவர்களில் ஒரு சிலர் வெளியே சொல்லாவிட்டாலும் அவர்களது நினைவில் வைத்துக் கொண்டுதானேயிருப்பார்கள்!

உடன்பிறப்பே! என்ன, நான் எழுதியிருப்பது ஒன்றும் புரியவில்லையா? முன்னொரு காலத்தில் ஒரு சமஸ்தானத்து மந்திராலோசனை மன்றத்தில் நடந்த நிகழ்ச்சி இது! புரியாவிட்டால் புரிந்தவர்களைக் கேட்டுப் புரிந்து கொள்க!

அன்புள்ள,

மு. க.

(9-04-1978)

# 556. ராஜபார்ட்டும் - ரங்கதுரையும்!

**உடன்பிறப்பே,**

அ.தி.மு.க. ஆட்சி என்றாலே அங்கு ஆளுங்கட்சியின் தலையீடு இருக்கவே இருக்காது என்பது போன்ற ஒரு மாயையைத் திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள் அல்லவா. அந்த மாயைத் திரையில் கடந்த ஏழெட்டு மாதங்களுக்குள்ளாகவே பல கிழிசல்கள் ஏற்பட்டு விட்டன என்பதற்கு ஏராளமான சான்றுகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

ஒரு தாழ்த்தப்பட்ட தோழரின் இல்லத்தை ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. தலைமையில் சென்று தரைமட்டமாக இடித்துப் போட்ட கொடுமையைத் தமிழகச் சட்ட மன்றத்திலேயே பல கட்சிகளின் சார்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது. அதுபற்றிக் கவனிக்கப்படும் என்று ஒரு பதிலைக்கூட அரசுத் தரப்பிலிருந்து பெறமுடியவில்லை.

என் மகனையா கைது செய்தாய்? என்று ஆர்த்தெழுந்து தோள் தட்டித் தொடை தட்டி காவல்நிலையத்துக்குள் புகுந்து, அதிகாரிகளுக்கு ஆபாச அர்ச்சனை நடத்திவிட்டு, பலாத்காரமாக மகனை விடுவித்துக் கொண்டு போனார் ஒரு ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.! இதைப்பற்றி வாய் திறக்க அமைச்சர்களில் யாருக்கும் துணிவிருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் அந்த அமைச்சர்கள், தங்கள் ஆளுகையின் புனிதம் பற்றிப் பேசிக் கொள்வதோ; கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய்விட்டது.

இதோ, அ.தி.மு.க. ஆளுகின்ற புதுவை மாநிலத்திலிருந்து ஒரு செய்தி! புதுவையின் முதலமைச்சரே நீதி நிர்வாகத்தில் தலையிட்டார் என்று மாவட்டக் கலெக்டரே முதலமைச்சருக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார். மாவட்டக் கலெக்டர், ரெவின்யூ கோர்ட் நீதிபதி என்ற முறையில் குடியிருப்புச் சட்டம்

சம்பந்தமான வழக்கொன்றை விசாரித்திருக்கிறார். அந்த வழக்கில் புதுவை மாநிலம் ஏம்பலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சம்பந்தப்பட்டிருக்கிறார். அவர் புனிதமான எம்.ஜி.ஆர். கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்! இந்த வழக்கிற்கு அந்தச் சட்ட மன்ற உறுப்பினர் வேண்டுகோளுக்கிணங்கப் பல வாய்தாக்கள் கொடுக்கப்பட்டு விட்டன. இறுதியாக இந்த வழக்கு ரெவின்யூ கோர்ட் நீதிபதி (மாவட்ட கலெக்டர்) முன்பு வந்த நேரத்தில் தனக்குச் சாதகமான தீர்ப்பைச் சட்டமன்ற உறுப்பினர் பெற நினைத்து முதலமைச்சரை அணுகினார். உடன் முதல்வர் என்ன செய்தார்!

ஆகா! என்ன பாவக்கரமான வார்த்தையைப் புகன்றாய்! ஏ! துராத்மா! தூயவர் எம்.ஜி.ஆர். கட்சியில் இப்படியும் ஒரு பாதகமா? உன் முகத்தையும் பாரேன்! ஓடிவிடு! என்று கூறினாரா? அப்படித்தானே கூறியிருக்க வேண்டும்! அதுதான் இல்லை! புனித ராஜ்யம் அல்லவா? தொலைபேசியை எடுத்து ரெவின்யூ கோர்ட் நீதிபதியிடம் பேசினார். தன் கட்சி எம்.எல்.ஏ.க்குச் சாதகமான தீர்ப்பு வழங்குக; அல்லது நீண்ட வாய்தா அளித்திடுக என்று திட்டவட்டமாக அறிவித்தார். தொலைபேசி போதாதென்று இதே கருத்தை எழுத்து மூலமும் அனுப்பினாராம். ஆனால் முதல்வரின் பரிந்துரையை மாவட்ட கலெக்டராகவும் ரெவின்யூ கோர்ட் நீதிபதியாகவுமுள்ள ரங்கதுரை என்பவர் ஏற்றுக்கொள்ளவில்லை, உறுதியாக மறுத்துவிட்டார்.

உடனே பாண்டி முதலமைச்சர் சினமடைந்து பளா! பளா! உன்னை என்ன செய்கிறேன் பார்! என்று ராஜபார்ட் வசனங்களை வாரி இறைக்கத் தொடங்கினார். நீதிபதி அந்தஸ்தில் தாம் கடமையாற்றும்போது முதலமைச்சர் தலையிடக்கூடாது. முடியாது - என்று ரங்கதுரை திடமாகக் கூறிவிட்டாராம். ராஜபார்ட் வசனம் வீணாகப் போகலாமா! விழலுக்கிறைத்த நீராகலாமா! எனவே முதலமைச்சர் எடுத்தார் பேனாவை! எழுதினார் உத்திரவை! மாவட்டக் கலெக்டரை உடனடியாகப் பதவிப் பொறுப்பிலிருந்து விடுவிப்பதாக ஆணை பிறந்தது! அதுவும் அந்த வழக்கு விசாரணைக்கு வருவதற்கு ஒருநாள் முன்னதாக முன்தேதியிட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம். இப்படி முன்தேதியிட்டது சரியில்லை என்று புதுவை அரசின் தலைமைச் செயலாளரும் கூறியிருக்கிறார். அதை மாநில கவர்னர் குல்கர்னியும்

ஏற்றுக்கொண்டார். ராஜபார்ட்டின் கோபத்திற்கு ஆளான ரங்கதுரை மாவட்டக் கலெக்டர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

அத்துடன் விவகாரம் முடியவில்லை. தன்னுடைய நீதிபரிபாலன விவகாரத்தில் அத்துமீறித் தலையிட்டது குறித்துக் காரணம் காட்டுமாறு ரங்கதுரை, முதலமைச்சருக்கும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறாராம்! இந்தப் பிரச்சினையை மத்திய அரசின் நீதித்துறை, சட்டத்துறை, உள்துறை அமைச்சகங்களின் ஆய்வுக்குப் புதுவை கவர்னர் குல்கர்னி அனுப்பியிருக்கிறாராம்.

உடன்பிறப்பே, தவறு செய்பவர் யாராயினும் நடவடிக்கை எடுப்பேன் - ஊழல் எங்கள் ஆட்சியில் தலைகாட்டாது - என்று ஒரு மணிநேரப் பேச்சில் ஓராயிரம் தடவை கூறும் புனித ராஜ்யத்தின் தலைவர் நண்பர் எம்.ஜி.ஆர். தலைமையில் உள்ள கட்சியின் முதல்வர் ஒருவர் நீதி நிர்வாகத்தில் தலையிட்ட இந்த நிகழ்ச்சியைப் பாவம், பத்திரிகைகளாலும் மறைக்க முடியவில்லை!

மத்திய அரசுதான் என்ன செய்யும் என்று பார்ப்போமே! பாரபட்சமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பது ஜனதா அரசின் முழக்கமாக இருந்தாலுங்கூட செயல்முறையில் எதையுங் காணோம். வேண்டியவர் - வேண்டாதார் என்ற நிலையிலேயே அங்கும் காரியங்கள் நடைபெறுகின்றன.

பாண்டி விஷயத்திலும் அதேதான் நிலைமையா? என்பதை விரைவில் தெரிந்து கொள்ளலாம்.

அன்புள்ள,

மு. க.

(10-04-1978)

# 557. பெர்னாண்டஸ் கவனத்திற்கு!

**உடன்பிறப்பே,**

அண்மையில் சென்னைக்கு வருகை தந்த மாண்புமிகு மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள், இந்திராகாந்தி ஒரு பாசிஸ்ட் என்பது கருணாநிதிக்குத் தெரியும். அதனால் கருணாநிதி, இந்திராவை ஆதரிக்க மாட்டார் என்று நிருபர்கள் பேட்டியிலே கூறியுள்ளார். இந்திரா அம்மையார் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலையை எதிர்த்து இந்தியாவிலேயே கட்சி ரீதியான முதல் குரல் கொடுத்தது தி.மு.க.தான் என்பதை எனது நண்பர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் மறந்திருக்க நியாயமில்லை. ஒருவேளை அவருக்குரிய எத்தனையோ வேலைகளில் அதை நினைத்துப் பார்க்க முடியாதவராக இருக்கலாம். இன்று ஜனதா அரசின் அமைச்சர்களாக இருக்கிற பலரும், ஜனதா தலைவர்களாக இருக்கிற பலரும் மிசாக் கைதிகளாக இருந்தபோது, அவர்களை விடுவிக்கக் கோரி, தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.கழகம் சூளுரைக் கூட்டங்கள் நடத்தியதையும், துண்டு அறிக்கைகளை நாடு முழுவதும் பரப்பியதையும், லட்சக்கணக்கான மக்கள் கூடிய மாநாடுகளை நெருக்கடி கால எதிர்ப்பு மாநாடுகளாக நடத்தியதையும் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள்தான் மறந்திருக்க முடியும். ஜனதா தலைவர்களின் நினைவாற்றலில் எனக்கு நம்பிக்கையிருப்பதால் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

தலைமறைவாக இருக்கின்ற பழைய காங்கிரஸ் தலைவர்களும், சோஷலிஸ்ட் தலைவர்களும் தமிழ்நாடு ஒரு தீவு போல் இருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறது என்ற குற்றச்சாட்டும் அன்றைய மத்திய அரசால் தி.மு.கழகத்தின் மீதும் தி.மு.க. ஆட்சியின் மீதும் சுமத்தப்பட்டது.

ஆனால் ஒன்றை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது! நெருக்கடி நிலையை எதிர்த்த கழகம், அந்த எதிர்ப்பைக்

காந்திய நெறியில், அண்ணா வழியில் அமைதியான முறையில் காட்டியதேயல்லாமல் கடுகளவும் வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுக்கவில்லை, வன்முறையற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு தனது கருத்துக்களை வலியுறுத்துவதுதான் அண்ணா கண்ட தி.மு.கழகத்தின் நிலையாகும்!

இந்திராகாந்தி அறிவித்த நெருக்கடி நிலையும் அதன் தொடர்பாக அதிகாரவர்க்கம் செயல்பட்ட தன்மையும் குறிப்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளும், பாசீசத்தின் மறுபதிப்பு என்ற அளவில் தி.மு.கழகம் கருத்தறிவித்து எதிர்ப்பினை காட்டியது!

ஆனால், இப்போது நிலை என்ன? பாசீசப் போக்கை வளர்க்கும் நெருக்கடி நிலை இப்போது இல்லை! மிசா இல்லை! எனினும், அந்தப் பாசீச முறைப்படி அன்றைக்குத் தொடங்கப்பெற்ற விசாரணைகள், வழக்குகள், அதிகாரிகளை மிரட்டி வாங்கிய சாட்சியங்கள், ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை அப்ரூவர்களாக்கும் மோசடிகள், குறிப்பிட்ட ஒரு கட்சியை ஒடுக்குகின்ற நோக்கம், அதற்காகக் கையாளப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் இன்றைய ஜனதா ஆட்சியிலும் தொடர்கின்றன இல்லையா?

இந்திரா ஆட்சியில் விசாரணைக் கமிஷன் முன் நின்று குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு, நீதிமன்றத்திலும் தண்டிக்கப்பட்டு, தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்த கட்டத்திலே ஜனதா ஆட்சி மலர்ந்து, வழக்கு வாபஸ் பெறப்பட்டு - இன்றைக்கு பாதல் அவர்கள் பஞ்சாபின் முதலமைச்சராக இருக்கிறார்!

இவையனைத்தும் பாசீச ஆட்சியில் தொடரப்பட்ட வழக்குகள் - விசாரணைகள் - எனவே மேல் நடவடிக்கையில்லை என்று மத்திய அரசு வெளிப்படையாக அறிவித்து விட்டது.

தி.மு. கழகத்தினர் மீது அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷனும், அதன் தொடர்பான வழக்குகளும் அந்த ஆட்சிக் காலத்திலே தானே தொடங்கின!

அவர்களுக்கு ஒரு நியாயம்! மற்றவர்களுக்கு ஒரு நியாயம் என்கிறதா, மத்திய அரசு?

பாதல் மீது வந்த விசாரணைகள், வழக்குகள் மட்டும் பாசீச ஆட்சியில் வந்தவை! தி.மு.க. மீது வந்த விசாரணைகள் வழக்குகள்

எல்லாம் பாசீச ஆட்சியில் வராதவை என்று வாதிடுகிறதா, மத்திய அரசு?

நெருக்கடி காலத்தில் பழைய மத்திய அரசு இந்தியா முழுவதும் நடத்தியதெல்லாம் அநியாயம், அக்கிரமம்; ஆனால் தி.மு.க.வினரை எதிர்த்து நடத்திய காரியங்கள் மட்டும் நியாயம் - தர்மம் என்று ஜனதா தலைவர்கள் எண்ணுகிறார்கள் போலும்!

உடன்பிறப்பே, விசாரணைகளுக்கும், வழக்குகளுக்கும் அஞ்சி நடுங்கி நான் இதனை எழுதவில்லை!

ஊருக்கு நியாயம் பேசுகிறவர்கள் சற்று தங்களையும் திரும்பிப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று உணர்த்துவதற்காக, நண்பர் பெர்னாண்டசுக்கு இதனைக் குறிப்பிடுகிறேன்.

பாசீசம் பற்றி என் நண்பர் ஜார்ஜ் அவர்களுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

ஜே.பி.

மொரார்ஜி.

அசோக் மேத்தா.

பெர்னாண்டஸ்.

முதலியவர்கள் எல்லாம் கடைந்தெடுத்த பாசிஸ்டுகள் என்றுகூறி, நெருக்கடி காலத்தில் தமிழகத்தில் பாசிஸ்டு எதிர்ப்பு மாநாடுகள் பல நடைபெற்றன. அந்த மாநாடுகளில் கலந்து கொண்டு, இன்றைய ஜனதா தலைவர்களைக் கொலை வெறியர்கள் என்றும், பாசிஸ்டுகள் என்றும் கடுமையாகத் தாக்கிப் பேசியவர்தான் இன்றைய தமிழக முதல்வர் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை பழைய செய்தித் தாள்களை எடுத்துப் பார்த்தால் தெரியும்.

எனக்கு எம்.ஜி.ஆரும் நண்பர்!

கருணாநிதியும் நண்பர்!

என்று ஜார்ஜ் பெர்னாண்டஸ் கூறியதாக ஒரு செய்தியை ஏடொன்றில் கண்டேன்.

அரசியலில் மாற்றங்கள் எப்படி ஏற்படுகின்றன என்பதையும் அவை தவிர்க்க முடியாதவை என்பதையும் ஜார்ஜ்

பெர்னாண்டஸ் அவர்களின் இந்த வார்த்தைகளே சான்றாக நின்று மெய்ப்பிக்கின்றன!

இதற்கு மேல் நான் அவருக்கு என்ன விளக்கம் தர வேண்டியிருக்கிறது!

எந்த நிலையிலும், கழகம் ஜனநாயகம் காப்பதிலும் - அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கை, மொழிக் கொள்கை, சமுதாயப் பொருளாதாரக் கொள்கை, இவற்றுக்காகப் போராடுவதிலும் பின்வாங்காது என்பதையும் இலட்சியங்களை விட்டுவிட்டு எந்த ஒரு உறவையும் பெரிதாகக் கொள்ளாது என்பதையும் நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாசீசம் - நாசீசம் - இவையெல்லாம் சொற்களைக் கொண்டு மாத்திரம் அறிந்து கொள்ளக் கூடியவை அல்ல! செயல்களைக் கொண்டுதான் கணிக்கப்பட வேண்டும்! ஜனநாயகப் போர்வையிலும் நாசீசம், பாசீசம் நடமாடலாம்! அதிலும் எச்சரிக்கையாக இருந்து அதனைத் தடுக்கவே தி.மு.க. விரும்புகிறது.

அன்புள்ள,

மு. க.

(11-04-1978)

# 558. வேடிக்கை பார்க்க முடியாது!

**உடன்பிறப்பே,**

கடந்த ஓராண்டுக் காலமாக தமிழகத்தில் எந்தக் கிளர்ச்சி அல்லது வேலை நிறுத்தம் நடைபெற்றாலும் தி.மு.கழகம்தான் தூண்டி விடுகிறது என்று அமைச்சர்கள் வீண் பழி போடுகிறார்கள் அல்லவா? ஆனால் உண்மையிலேயே அந்தக் கிளர்ச்சி தீப்பற்றி எரிய எண்ணெய் ஊற்றுவது யார் தெரியுமா? நமது மாண்புமிகு அமைச்சர்கள்தான்!

யாரும் அல்லது எந்தக் கட்சியும் தூண்டி விடாமலே சிறு பொறியைப் பெருந்தீயாக மாற்றுகிற பணியை அரசுப் பொறுப்பில் இருக்கிறவர்களே செய்துவிட்டு, பின்னர் மற்ற கட்சிகளின் மீது பழி போடுவது ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அதில் சுமுக முடிவு காண்பதற்கு நான் முயற்சி எடுத்துக் கொண்டு தொலைபேசி மூலம் அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டேன். அன்று மாலையில் வாணி மகால் விழா ஒன்றில் என்ன பேசினார்கள் தெரியுமா; அமைச்சர்கள்? காலையிலிருந்து ஒருவர் எங்களிடம் தொலைபேசியில் கெஞ்சுகிறார் என்று பேசினார்கள். அது மட்டுமா? பஸ் தொழிலாளர்களின் பல்லை உடைக்கும் பேச்சும் அங்குதான் பேசப்பட்டது.

இவை கிளர்ச்சிகளை அமைதிப்படுத்தும் முறையா? அல்லது தூண்டிவிடும் முறையா? என்பதை அந்த அமைச்சர்கள்தான் சிந்திக்க வேண்டும்.

என்.ஜி.ஓ.க்கள் கிளர்ச்சியில் மற்ற கட்சிகளுடன் இணைந்த கழகமும், சட்டமன்றத்தில் குரல் கொடுத்தது உண்மை! பேச்சு வார்த்தையின் மூலம் பிரச்சினையைத் தீர்த்திடுக என்று வாதிட்டது உண்மை! ஆனால் பிரச்சினையைப் பெரிதாக வெடிக்குமாறு செய்தது யார்?

முதல் நாள் 32 பேர் கைதாகியிருக்கிறார்கள். இன்று இதுவரையில் 12 பேர் தான் கைதாகி வந்து நிற்கிறார்கள். எனவே அவர்களைப் பின்பற்றுவோர் இல்லை. போராட்டம் தேய்ந்து விட்டது

என்ற கருத்தினை நிதி அமைச்சர் மனோகரன் தனக்கேயுரிய நாவடக்கம் இல்லாத தன்மையில் அலட்சியப்படுத்திப் பேசினார்!

அதன் விளைவு, என்.ஜி.ஓ.க்கள் ஆயிரமாயிரம் பேராக அணிவகுத்தனர்.

அதோடு விட்டார்களா? என்.ஜி.ஓ.க்களை மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று அறைகூவல்கள் கிளம்பின! ஆளுங்கட்சியின் தொண்டர்கள், என்.ஜி.ஓ.க்களைத் தாக்கினர். என்.ஜி.ஓ.க்களின் வீட்டுப் பெண்டிரைக்கூடத் தரக்குறைவாக மேடைகளில் விமர்சித்தனர்.

என்.ஜி.ஓ.க்கள் பிரச்சினை சுமுகமாகத் தீரவேண்டுமென்று அனைத்துக் கட்சியினரும் முயற்சி எடுத்துக் கொண்ட நேரத்தில் என்.ஜி.ஓ.க்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு அந்தப் போராட்டத்தைப் பெரிதாகத் தூண்டிவிட்ட பெருமையும் அரசாங்கத்திற்கே உரியதாகும்.

இப்போது விவசாயிகள் பிரச்சினையும் தி.மு.க.தான் தூண்டிவிட்டது என்று அமைச்சர்கள் பேசக் கிளம்பியுள்ளனர். அத்துடன் அவர்களை அண்டிக் கிடக்கும் ஒரு சில தோழமைக் கட்சிகளும் தி.மு.க. மீது பழி கூறி தங்கள் தேவைகளுக்காக அவர்களிடம் பல் இளித்து நிற்கின்றன.

ஒரு அமைச்சர் நெல்லையில் பேசியதுதான் தாமதம், உடனே கோவை மாவட்டத்தில் கழகத்தின் ஒன்றியச் செயலாளர்களும் மற்றவர்களும் முன்கூட்டியே கைது செய்யப்படுகிறார்கள்.

எந்த அரசியல் கட்சியையும் சாராத விவசாயிகளின் சங்கம்தான் இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

விவசாயிகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு குழுவை அமைத்துவிட்டு, அதன் அறிக்கை வருவதற்கு முன்பே - விவசாயிகளிடம் ஜப்தி செய்வது, மின்சாரத்தைத் துண்டிப்பது போன்ற கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டதை எதிர்த்துத்தான் விவசாயிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

துப்பாக்கிப் பிரயோகங்கள், கண்ணீர்ப் புகை வீச்சுக்கள், தடியடிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை எட்டு விவசாயிகள் பலியாகியிருக்கிறார்கள்!

அடக்குமுறைகளைக் குறைக்கவும், வன்முறைச் செயல்களைத் தவிர்க்கவும், ஒரு அரசு பொறுப்புடன் கவனம் செலுத்த வேண்டுமேயல்லாது இந்தச் சமயத்திலும் தி.மு.க. மீது பழி போடலாமா என்று யோசித்து எடுத்தேன் கவிழ்த்தேன் எனப் பேசுவது, அறிவுடைமையாகாது!

துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதி விசாரணை நடத்துவதால் எந்தப் பயனுமில்லை! சுட்டதற்கான காரணங்களைச் சொல்லி, அதனை நியாயப்படுத்துகிற ஒரு காரியமாகத்தான் அத்தகைய நீதி விசாரணை முடிவுகள் பெரும்பாலும் அமைந்து விடுகின்றன.

எனவே, விவசாயிகளின் திடீர்க் கொந்தளிப்புக்கும் - குமுறலுக்கும் என்ன காரணம் என்பதை ஆராயவும் - அரசின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது, அல்லது எவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பதை அறிந்து கூறவும் - விவசாயிகளின் கோரிக்கைகளின் நியாயத்தை உணர்த்தவும் கூடிய ஒரு நீதி விசாரணைதான் நடைபெற வேண்டும். அந்த விசாரணையில் நீதிபதியுடன், பொது மக்களின் பிரதிநிதிகள் சிலருக்கும் இடமளிக்கப்பட வேண்டும்.

இத்தகைய பயனுள்ள நடவடிக்கைகளில் அக்கறை காட்டாமல் அரசு, எதிர்க் கட்சிகளை அர்ச்சனை செய்வதில் பொழுதைப் போக்குவது நல்லதல்ல!

தி.மு.க.வைத் திட்டுவதால் சிறிது தினவு அடங்கலாம், அமைச்சர்களுக்கு!

அந்த அமைச்சர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன், விவசாயிகள் இப்படி நாள்தோறும் வேட்டை யாடப்படுவதை எந்த ஒரு எதிர்க் கட்சியும் வேடிக்கை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது!

அன்புள்ள,

மு. க.

(13-04-1978)

# 559. மிக நெருக்கமாக இருக்கிறேன்!

**உடன்பிறப்பே,**

கழகப் பொதுத் தேர்தலில் ஒரு கட்டம் முடிவுற்று, அடுத்த கட்டத் தேர்தலுக்கான அறிவிப்பினைப் பொதுச் செயலாளர் அவர்கள் வெளியிட்டுள்ளார். ஏப்ரல் 30-ஆம் நாள் தொடங்கி, மே திங்கள் 14-ஆம் நாள் முடிய - ஒன்றிய, நகர, நகரிய, சென்னையில் பகுதி ஆகிய கழக அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன.

இதற்கு அடுத்த கட்டம், மாவட்டக் கழகத் தேர்தலாகும். நடந்து முடிந்த முதல் கட்டத் தேர்தலில் கிளைக் கழக நிர்வாகப் பொறுப்புக்களுக்கு வர, பலத்த போட்டிகள் ஆங்காங்கு இருந்தன என்பது நமது கழகத்தின் வலுவையும் பொலிவையும், ஜனநாயகக் கட்டுக்கோப்பையும் உணர்த்துகின்றன என்பதில் துளியும் ஐயமில்லை.

கடும் போட்டிகளின் காரணமாகச் சில இடங்களில் கசப்பு உணர்ச்சிகளும் தலைகாட்டியதை நான் மறந்து விடவில்லை. நடைபெற்றதாகக் கூறப்பட்ட முறைகேடுகள், குறைபாடுகளைத் தலைமைக் கழக அளவில் முறையோடும் அக்கறையோடும் விசாரித்து அவற்றினைச் சீர்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப் பெற்று, ஏற்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தலைமைக் கழகத்தின் கவனத்திற்கோ, பொதுச் செயலாளரின் கவனத்திற்கோ கொண்டு வரப்பட்ட பிரச்சினைகளுக்கு, கழகச் சட்ட திட்டங்களின்படியும், தேர்தல் விதிமுறைகளின்படியும் அவ்வப்போது தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

கழக அமைப்புகளின் நிர்வாகப் பொறுப்புக்கு வர இயலாமல் வெற்றி வாய்ப்பை இழந்தவர்களில் சிலர், தங்கள் தோல்விக்குக் காரணம் தேடும் வேளையில் ஈடுபட்டு, அதனையே பெரும்

பிரச்சினையாக ஆக்கிக் கொண்டிருப்பது கழகத்திற்கு வலுவூட்டும் காரியமாக அமையாது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். பல்லாயிரக் கணக்கான கிளைக் கழக அமைப்புகளின் தேர்தல்களைத் தலைமையிலிருந்து கவனித்துக் கட்டுப்பாடு குலையாமல் நடத்துவதென்பது எவ்வளவு கடினமான செயல் என்பதை உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் அறியாதவர்கள் அல்ல!

எனவே, வருகிற நகர, நகரிய, ஒன்றிய, பகுதித் தேர்தல் களிலும் தலைமையின் தாக்கீதுகளுக்கு ஏற்ப கடமை உணர்வும், கண்ணியமும், கட்டுப்பாட்டுத் தன்மையும் சிறிதளவும் மாசுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது உன் பொறுப்பாகும்!

உடன்பிறப்பே! நீ ஒரு வேட்பாளராக இருந்தால், இதோ நான் சொல்வதை தயவு செய்து மறந்து விடாதே! எப்படியும் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக எந்த முறையை வேண்டு மானாலும் கடைப்பிடிக்கலாம் என்று எண்ணிச் செயல்படாதே! அப்படிச் செயல்படத்தொடங்கினால் கழகத்திற்குள் குழுக்கள் (கோஷ்டி மனப்பான்மை) தோன்றக்கூடும். இப்போதே சில மாவட்டங்களில் தோன்றியிருக்கின்றன. அதனை நான் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். அந்தக் குழுக்கள், தலைமையிடத்தில் பற்றும் பாசமும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை!

ஆனால், தங்களுக்குள்ளாக சில மாவட்டங்களிலோ, ஒன்றிய, நகர பகுதிகளிலோ ஒன்றுக்கொன்று மோதிக் கொள்கிற குழுக்களைப் பார்த்து நான் வேதனையுறாமல் இருக்க முடியாது. எதற்கு இந்த மோதல்? ஒரு அமைப்புக்கு நிர்வாகிகளாக வருவதற்கு ஜனநாயகத்தில் இது தவிர்க்க முடியாததுதான்! ஆனால், எதற்கும் ஒரு அளவு இருக்க வேண்டும் அல்லவா? அந்த அளவு மீறப்படுமேயானால் அதற்கு எந்த வகையில் தீர்வு காணவேண்டுமோ அந்த வகையில் தீர்வுகாணத் தலைமைக் கழகம் தயங்காது!

எல்லா மலர்களும் கழகச் சோலையில் பூத்த மலர்கள்தான் என்று வெற்றிபெற்றவராயினும், பெறாதவராயினும் நான் கருதுவேன் என்பதை உனக்கு அடிக்கடி கூறியிருக்கிறேன்.

அதனால் யார், எங்கே எந்த அமைப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதில் தலைமைக் கழகம் அக்கறை காட்டாது! காட்டக் கூடாது! ஆனால் வெற்றி பெறுவதற்காக யாரேனும் சில வேட்பாளர்கள் முறையற்றதும், கட்டுப்பாடு குலையக் கூடியதுமான போக்குகளைக் கடைப்பிடித்தால் அப்போது, தலைமை தனிப்பட்ட ஆட்களைவிடக் கட்சியைத்தான் பெரிதாகக் கருதும் என்பதை மறந்துவிடக் கூடாது.

உடன்பிறப்பே! நீ ஒரு வாக்காளராக மட்டும் இருந்தால் நான் குறிப்பிடுவதை உன் நெஞ்சில் குறித்து வைத்துக்கொள்! உன் வாக்கு, சுதந்திரமானது; அதனை யாரும் அடிமையாக்கிக் கொள்ளவிடக் கூடாது! யார், யார், குழுக்களை உருவாக்கினாலும் உன் தயவு இல்லாவிட்டால், அவை இயங்க முடியாது. எனவே நீ, உன் வேலையுண்டு நீயுண்டு என இரு! யார் அழைத்தாலும் இழுத்தாலும் அசைந்து கொடுக்கத் தேவையில்லை.

தேர்தல் நாளன்று உனக்கென்றுள்ள அமைப்பில் நீ யாருக்கு வாக்களித்தால் கட்சியின் இலட்சியமும், உறுதியும், கொள்கையும், கண்ணியமும், கட்டுப்பாடும் காக்கப்படும் என்று உன் மனச்சாட்சி சொல்கிறதோ; அந்த உடன்பிறப்புக்கு வாக்கினை அளித்திடு; அதுதான் நீ செய்யவேண்டிய கடமை! உன்னைப் போல ஒவ்வொரு உடன்பிறப்பும் முடிவு எடுத்துவிட்டால், கோஷ்டி என்ற தொற்று நோயைத் தொடக்கத்திலேயே பரவவிடாமல் தடுத்துவிடலாம்!

நான் பயமுறுத்துகிறேன் என்று எண்ணாதே! ஏனைய கட்சிகளைப் போல பெரிய அளவில் நமது கழகத்தில் குழுப் பூசல்கள் இல்லை! மிகச் சிறிய அளவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பதை மறைக்கக் கூடாதல்லவா? அந்தக் கோஷ்டிகளை நீ அடையாளம் புரிந்துகொண்டு - அவற்றை ஊக்கப்படுத்தாமல் செயல்படுவாயானால்; கழகத்தின் கண்ணியத்துக்கும், கட்டுப்பாட்டிற்கும் அணுவளவு களங்கமும் வந்து சேராது!

எனவே, கழகப் பொதுத் தேர்தல் என்பது கழகப் பணியாற்ற நான் முந்தி நீ முந்தி என்ற நிலையில் அமையவேண்டுமே யல்லாமல் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு யாரும் ஒரு சிறிதும் இடந்தரலாகாது என்பதை அழுத்தமாகக் கூறிக்கொள்கிறேன்.

எங்களூரில் எந்தக் கோஷ்டியும் இல்லையே என்று கூறுகிறாயா? மகிழ்ச்சி! இரட்டிப்பு மகிழ்ச்சி! உன்னைப்போல் உண்மைச் சொல்கிறவர்களும் உண்டு! இருப்பதை மறைத்து, இதமாகப் பேசுவோரும் உண்டு! இருவருக்குமே என்மீதும் கழகத்தின் மீதும் தணியாத அன்பு உண்டு! ஆனால் ஒரு சிற்றூர்க் கிளையிலே நடைபெறுகிற நிகழ்ச்சிக்கூட என் காதிலே விழக்கூடிய அளவுக்கு நான் உன்னோடு மிக நெருக்கமாக இருக்கிறேன் என்பதை மறந்து விடாதே!

அன்புள்ள,

மு. க.

(14-04-1978)

# 560. தாக்குதலும் - தாங்குதலும்!

**உடன்பிறப்பே,**

பிஞ்சுப் பருவத்தில் கொஞ்சும் மழலையொன்று தனக்கு முன் தோன்றிய அண்ணனைப் பார்த்து சீ! போ! கழுதை! என்று கூறுகிறது! அண்ணன், அந்தக் குழந்தைத் தம்பியை வாரியணைத்து அடடே! பேசக்கூடக் கத்துகிட்டானே! அதோ பாரு, மாமா! அவரை ஒரு உதை கொடு! உதைப்பேன்னு சொல்லு! என்று குலாவிடுகிறான்.

ஆண்டுகள் சில கழிந்த பின் வீதியிலே ஓடியாடும் இளந்தளிராக ஆகிறான் தம்பிப் பயல்! டே! தம்பிக்கண்ணு! விளையாட்டு போதும், வாடாம்மா உள்ளே! என்று அண்ணன் செல்லமாக அழைக்கிறான்! தம்பிக்கண்ணு, அண்ணனிடம் அலட்சியமாக வரமாட்டேன் போடா என்று ஏகவசனத்தில் பேசிவிட்டு மீண்டும் விளையாடப் போகிறான். பையனுக்கு வாய் ரொம்ப நீண்டுவிட்டது என்று முணுமுணுத்தவாறு அவன் தாயார் பையனை, ஓடிப் பிடித்து இழுத்து, நல்லபிள்ளை நீ! இனிமே இப்படியெல்லாம் பேசக்கூடாது! என்று கனிவாகக் கூறி, குளிப்பாட்டிப் புது ஆடை அணிவிக்கிறாள். அண்ணனும் அருமைத் தம்பியை அழைத்துக் கொண்டு கடைத்தெருவுக்குப் போய் அவனுக்குப் பிடித்தமான சாக்லட் வாங்கித் தருகிறான்.

மேலும் சில ஆண்டுகள் உருண்டு விடுகின்றன. ஒரு நாள் அண்ணனும் தம்பியும் தாழ்வாரத்தில் அமர்ந்து எதைப் பற்றியோ விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். விவாதத்தில் ஏறிய சூட்டின் காரணமாக, தம்பி-அண்ணனைப் பார்த்து தடிப்பயலே! உனக்கென்னடா தெரியும். என் விவகாரத்துக்கு வராதே! பேசாமல் ஓய்வெடுத்துக்கொள்! மீறி என் விஷயத்தில் தலையிட்டால், மரியாதை கெட்டுவிடும். ஜாக்கிரதை! என்று கூச்சலிட்டு

விடுகிறான். உடனே, அண்ணனின் கரங்கள் தம்பியின் கன்னத்தில் விளையாடத் தொடங்கிவிட்டன. நல்லா நாலு போடு! அப்பத்தான் புத்திவரும் என்று தாழ்வாரத்தில் இருந்த தாயாரும் - வாயாடிப் பயலுக்கு வகையாகக் கொடுத்தாதான் வழிக்கு வருவான் என்று ஈசிச்சேரில் சாய்ந்தவாறு தந்தையும் விமர்சித்தனர்.

இஃதென்ன கதை என்று தோன்றுகிறதல்லவா உனக்கு! உன் அவசரத்தைப் புரிந்து கொண்டு நானே விளக்கி விடுகிறேன்.

குழந்தைப் பருவத்தில் கழுதை என்று தம்பிப் பயல் கூறுவதை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறான் அண்ணன்.

விளையாட்டுப் பருவத்தில் வாடா போடா! என்று திட்டுவதையும் தமையன் தாங்கிக் கொள்கிறான்.

வயது வந்த வாலிபனான பிறகும் தம்பியின் நாக்குத்தடிப்பு மாறாத காரணத்தால், தாங்குதலை விடுத்துத் தாக்குதலில் ஈடுபடுகிறான் மூத்தவன்! அதுவும் இளையவன் திருந்த வேண்டும். தன்னை ஏசியதைப்போல் பிறரை ஏசிக் குடும்ப கௌரவத்தைக் கெடுத்துவிடக் கூடாது என்ற நல்ல எண்ணத்துடன்தான் தாக்கிப் பணிய வைக்க முனைகிறான்.

உடன்பிறப்பே, அரசியலிலே கூட இப்படிச் சில செல்லப்பிள்ளைகளைப் பார்த்திருக்கிறோம். குழந்தைப் பருவ முதல் அதற்கு செல்லம் கொடுத்து வளர்த்தே அதன் வாயை நீளவிட்டிருக்கிறோம்.

பொதுவாகவே அரசியல்வாதிகள், பொது வாழ்வின் தொடக்க காலத்தில் துடிப்புமிக்கவர்களாகவும் - அனுபவங்கள் குவியக்குவிய அடக்கமும் அறிவும் பெற்று முதிர்ச்சியுற்ற முழு மனிதர்களாகவும் மாறுவது வாடிக்கை! அதற்கும் மாறாக, தொடக்கத்தில் துடிப்பும், போகப் போக நாக்கு தடிப்பும் ஏற்பட்டு எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவோரும் செயலாற்றுவோரும் அரசியல் அரங்கில் இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள். குழந்தைப் பருவத்துத் தம்பி, பேசும் வசை மொழிகூட வண்ணத் தமிழின் இசையாகத் தெரிகிறது வீட்டில் இருப்போருக்கு! அவனே மரம்போல வளர்ந்த பிறகும் மரியாதையற்றுப் பேசுவதை தனது மாமூலாகக் கொள்வானேயானால், வீட்டார் புத்தி கற்பிக்காவிட்டால்; ஊரார் புத்தி புகட்டக் கிளம்பிடுவர்! அந்த ஊராரிடமிருந்து அவனை

பாதுகாக்க அவன் வீட்டார்; தாங்குதலை விடுத்துத் தாக்குதலை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறதல்லவா; அதைப் போலத்தான் அரசியலிலும் தாங்கும் நிலையும் உருவாகிறது! அது தவிர்க்க முடியாதது.

கோவணமின்றித் திரியும் குழந்தைப் பருவத்தில்; குரங்கே! கோட்டானே! என்று பிறரைப் பார்த்து ஏசுவதை அவர்கள் தாங்கிக் கொள்வர்! அறியாப் பிள்ளை என்பதால்! கொழுந்துப் பருவம் என்பதால்! அங்கே தாங்குதல் இயற்கை! அதே குழந்தை கொழு கொழுவென வளர்ந்து மணமேடையை எதிர்நோக்கும் மாப்பிள்ளைப் பருவத்திலும் இளம்பிள்ளைப் பேச்சைப் பேசினால் தாங்குதல் மாறி தாக்குதல் தானே நடைபெறும்! இரண்டு சொற்களிலுமே ஒரு எழுத்துதான் வேறுபாடு! ஆனால் பொருளில் பெரும் முரண்பாடு! ங் என்ற எழுத்து க் என்று மாறுகிற சிறிய வித்தியாசம்தான்! ஆனால் அவை குறிக்கும் செயல்கள் வெவ்வேறு! தாங்கும் பண்புக்கும் ஒரு நிலையுண்டு - எல்லையுண்டு - அது கடக்கும்போது தாக்கும் உணர்வு தானாகவே உருவாகிறது! அதற்காகத் தாக்குவதையே தொழிலாகக் கொண்டிருக்கமாட்டார்கள்; தரமுடையவர்கள்! அவ்வாறு கொண்டிருக்கக்கூடாது!

அண்மையில் ஒரு மாமேதை நிருபர்கள் மத்தியில் கூறியதாகச் செய்தி கண்டேன்.

கருணாநிதிக்குத் தாங்கும் சக்தியுமில்லை - தாக்கும் சக்தியுமில்லை! அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது அவருக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது. அவர் அரசியலில் ஒதுக்கப்பட்டு விட்டவர்

இவ்வாறு பேசியவர், மாண்புமிகுவாக இருப்பவர்! அதனால் யாரைப் பற்றியும் எதையும் பேசலாம்! எதையும் எழுதலாம்! இது அவர் நினைப்பு! இதைவிட உக்கிரமான வார்த்தைகளை அவர் கோர்த்து என் கழுத்தில் மாலையாக அணிவித்து மாதங்கள் இரண்டுகூட ஆகவில்லை. எப்போது என்று கேட்கிறாயா?

என் வீட்டை, கருணாநிதியே! இரண்டு லட்சத்துப் பத்தாயிரத்துக்கு வாங்கிக் கொள்ள நீ தயாரா? நீ வாங்கு! அல்லது வேறு நபர் மூலமாகவாவது வாங்கு! இதற்கு 14 நாட்கள் அவகாசம் தருகிறேன். அதற்குள் வாங்கிக்

கொள்ள முன் வராவிட்டால் நீ ஒரு பொய்யன் என்பது நிரூபிக்கப்படும்.

இப்படி ஜனவரி 30-ஆம் நாள் திருச்சி திருவரங்கத்தில் அறைகூவல் விட்டவர் யார் என்பதை அப்போதே ஏடுகள் விவரமாக வெளியிட்டிருக்கின்றன.

வாங்கிக் கொள்ளத் தயார்! கழகத்திற்கே அதனை வாங்கிக் கொள்கிறேன்

என்று நான் தந்தியும், கடிதமும் உடனடியாக அவருக்கு அனுப்பியதும், என்ன செய்தார் தெரியுமா? எடுத்தார் பேனாவை! எழுதினார் ஒரு கட்டுரையை அவரது கட்சி ஏட்டில்! வீட்டை, சொன்னபடி தருவதற்குத் தயார் என்று எழுதினாரா? இல்லை! அப்படி எழுதுவது வீரர்களின் வேலையல்லவா? இவர் விடுத்த அறைகூவலில் இருந்து பின் வாங்கினார் - அதை மறைக்க என்மீது அர்ச்சனை!

கருணாநிதிக்கு திமிர் என்பதா? வாய்க்கொழுப்பு என்பதா? மடத்தனம் என்பதா? அகந்தை என்பதா? கருணாநிதியே! நீ ஒரு மலிவான நபர்! அருவருப்பான பிறவி! படுகோழை! அவசரக்காரன்! அழிவுக்கு அச்சாரம் வாங்குவதில் முதல் ஆள்! சோரம் போனவனே! ஓரம் போ!

உடன்பிறப்பே! மாண்புமிகுவின் மணிவாசகங்கள் இவை! என் மீது பாடப்பட்ட பாயிரம்! தாங்கும் சக்தி கருணாநிதிக்கு இப்போது இல்லையென்கிறார் அந்த மாமேதை! ஆம், அடக்கத்தின் மொத்த உருவம் (?) அவர்தான் சொல்லுகிறார் - எனக்குத் தாங்கும் சக்தி இல்லையாம்; இந்த அர்ச்சனைகளை மட்டுமல்ல; கடந்த சில ஆண்டுக் காலமாக என் மீதும் கழகத்தினர் மீதும் பாய்ந்த கணைகளையும் - அடக்குமுறைகளையும் - நன்றிக் கொன்ற மனிதர்களின் துரோகச் செயல்களையும் - அவதூறு வழக்குகளையும் - இடையறாத இன்னல்களையும் - ஈட்டியெனப் பாயும் செய்திகளையும் - நிகழ்ச்சிகளையும் தாங்கிக் கொண்டு தான் இருக்கிறேன் என்பதை உடன்பிறப்பே! நீ அறிவாய்! என் உண்மையான உடன்பிறப்புகள் அனைவரும் அறிவர்! இந்த வேதனைகளில் எவ்வளவு வேதனை - எள்ளின் முனையளவு வேதனை - எனக்குத் தாங்கும் சக்தி இல்லையென்கிறாரே; அவருக்கு வந்திருக்குமானால் - என்ன ஆவார் என்பதும் எங்கே

போய் நிற்பார் என்பதும் - எங்கே தாவிட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எண்ணினார் என்பதும் யாரும் அறியாத சிதம்பர ரகசியமல்ல!

இந்தக் கட்டைக்கு தாங்கும் சக்தியும் உண்டு - காந்தீய வழியில், அண்ணா வழியில் எதிர்ப்புக்களைத் தாக்கும் சக்தியும் உண்டு!

தாங்குதல் எப்போது தாக்குதலாகும் என்பதை முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன். அது, வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் முறை! நாட்டுப் பிரச்சினைகளில் இப்படிப்பட்ட நாவடக்கமற்றோர் நரகல் நடையிலும் நடுங்கா நாக்கு நடையிலும் பேச முற்படுவரேல், அவர்களைப் பண்பார்ந்த பொதுமக்களுக்கு அடையாளம் காட்டுவதையே எனது தாக்கும் குணமாகக் கொள்வேன் என்பதையும் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

உடன்பிறப்பே, அரசியலில் எனக்கு ஓய்வளிக்க யார் யார் புறப்பட்டிருக்கிறார்கள் பார்த்தாயா? பரவாயில்லை; நான் யார் யாருக்கு அரசியலில் வாழ்வளித்தேனோ அவர்கள் எல்லாம் எனக்கு ஓய்வளிக்க கிளம்பியுள்ளார்கள்!

எல்லா மனிதர்க்கும் ஓய்வுண்டு! அது தடுக்கப்பட முடியாத ஓய்வு! தவிர்க்க முடியாத ஓய்வு! அந்த நீண்ட ஓய்வு எனக்குக் கிடைக்கும் வரை, இந்த உடலின் இயக்கம், நமது இயக்கத்திற்காகவே - அண்ணாவின் கொள்கைகள் வெற்றி பெறுவதற்காகவே - தொய்வின்றித் தொடரும்! ஏமாந்தக் காலத்தில் ஏற்றங் கொண்டோர் புலிவேஷம் போடுவதை தமிழ்நாட்டு மக்கள் மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக உணர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

அன்புள்ள,

மு. க.

(16-04-1978)

# 561. கொடுங்கோன்மையை எதிர்த்துக் குரல் கொடுப்போம்!

**அடக்குமுறைக் கண்டன வாரம் –**

**நாடு முழுவதும் நடக்கட்டும்!**

**உடன்பிறப்பே,**

இது உனக்கு அவசரமாக சில விஷயங்களைத் தெரிவிக்க வேண்டிய கடிதம். எனவே ஒரே நேரத்தில் நம்நாடு இதழிலும் முரசொலி இதழிலும் வெளியிடப்படுகிறது.

சென்னையில் ஏப்ரல் 19-ஆம் நாள் காலையில் கூடிய செயற்குழுவின் தீர்மானங்கள் நாட்டுக்கும் நாடாள்வோரின் கவனத்திற்கும் வைக்கப்பட்டுள்ளன, தொடர்ந்து பல நாட்களாகக் கிராமப்புறங்களிலும், சாலைகளிலும் இராணுவத்தினரை நடமாடவிட்டு பொதுமக்களை பீதிக்கு ஆட்படுத்துகிற சர்வாதிகார பாணியையும், நியாயமான கோரிக்கைகளுக்காக இப்போதும், இனி எதிர்காலத்திலும் விவசாய சங்கங்கள், நெசவாளர் அமைப்புக்கள், தொழிலாளர் இயக்கங்கள் மட்டுமன்றி எந்த ஒரு அரசியல் கட்சியும்கூட கிளர்ச்சிகளில் ஈடுபட முடியாதவாறு ஜனநாயகத்தின் குரல்வளையை அழுத்துகிற முறையையும் இன்றைய தமிழக அரசு, தொடங்கி வைத்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

தலைமைக் கழகத்தின் சார்பில் சாதிக், அன்பில், புலவர், கண்ணப்பன், வி. கிருட்டிணமூர்த்தி, கோ.சி. மணி, அக்கினிராசு ஆகியோர் கொண்ட ஆய்வுக்குழு, விவசாயக் கிளர்ச்சி நடைபெற்ற எல்லா இடங்களுக்கும் சென்று நேரிடையாக பல விவரங்களைத் திரட்டி வந்து, தலைமைக் கழகத்திற்கு நீண்டதொரு அறிக்கையாகத் தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கை செயற்குழுவிலும், தலைமைக் கழகச் செயலாளர்கள்

மத்தியிலும் விரிவாக விவாதிக்கப்பட்டு ஒன்பது தீர்மானங்கள் வடித்தெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இந்திரா காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினரிடம் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் உறுதியளித்ததாக ஒரு செய்தி எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

ஜப்தி போன்ற கடும் நடவடிக்கைகளை நடுத்தர சிறு விவசாயிகளின் மீது எடுக்காமலிருக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் அறிவித்ததாக வந்த தகவல்தான் அது!

இதிலிருந்தே சிறு விவசாயிகள் - நடுத்தர விவசாயிகள் - ஜப்தி போன்ற கைது போன்ற கடும் நடவடிக்கைகளைச் சகித்துக் கொள்ள முடியாமல்தான் குமுறிக் கொந்தளித்து இந்தப் போராட்டம் வெடித்துக் கிளம்பியிருக்கிறது என்ற உண்மை தெளிவாக்கப்பட்டு விட்டது.

தாங்கமுடியாத தொல்லையின் காரணமாக விவசாயிகள் சீறி எழுந்தனர். அமைதியான முறையில்தான் அவர்கள் கிளர்ச்சியைத் தொடங்கினார்கள் என்றாலும் - இதுபோன்ற கிளர்ச்சிகளில் வாடிக்கையாக நுழைந்துவிடக் கூடிய சமூக விரோதிகள் சில இடங்களில் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். சட்டம் ஒழுங்கு அமைதி காப்பதில் போலீசாருக்கு இடமளிக்காமல் சமீபகாலமாகச் சட்டத்தைத் தங்கள் கையில் தூக்கிக் கொண்டு அலைகின்ற ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் அமளிகள் விளைவதற்குக் காரணகர்த்தாக்களாயினர்.

அமைதி வழி அறப்போர் மார்க்கமே சிறந்தது என்றும் - வன்முறை வழிகள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் கருத்துக்கொண்ட தி.மு.கழகம் - வன்முறை எந்தக் காரணத்திற்காகத் தோன்றினாலும் அதனை வரவேற்காது! அதற்காக, நியாயமான போராட்டக்காரர்கள் மீது அவதூறு கூறி, அவர்களது போராட்டத்தை நசுக்குவதற்காக வன்முறை வண்ணத்தை வேண்டுமென்றே பூசுவதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல!

சில வாரங்களுக்கு முன்பு தி.மு.க. சார்பில் சென்னையில் விவசாயப் பேரணி யொன்று நடத்தப்பட்டு சில முக்கியமான

கோரிக்கைகள் முதல்வரிடம் தரப்பட்டது. அதன் பிறகு அரசாங்கம் அமைத்த விவசாயப் பிரதிநிதிகள் குழுவில் தி.மு.க. சார்புடைய விவசாயப் பிரதிநிதிகள் யாருக்கும் இடமளிக்கப்படவில்லை. ஆளுங்கட்சிச் சார்புடைய விவசாயப் பிரதிநிதிகள் (ஆளுங்கட்சியின் கணிப்புப்படி சிறிய நடுத்தர விவசாயிகள் அல்லாதார்) அந்தக் குழுவில் நியமிக்கப்பட்டனர். திரு. நாராயணசாமி நாயுடு அவர்களும் அவரது சங்கத்தைச் சேர்ந்தோரும் அந்தக் குழுவில் இடம் பெற்றனர்.

குழுவின் ஆய்வுக் கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கும் போதே, கடன் கட்ட முடியாத சிறு விவசாயிகள் ஜப்திக்கு ஆளாக்கப்பட்டும் - கைது செய்யப்பட்டும் - அரசு தந்த உத்திரவாதத்துக்கு மாறாகக் கொடுமைப்படுத்தப்பட்டனர். இதனை நாயுடு அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொல்லியும் அரசாங்கம், காதில் போட்டுக் கொள்ளவில்லை. எனவே அவர்களில் சிலர் அந்தக் குழுவிலிருந்து விலகித் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அதன் பிறகும் அரசு, மெத்தனப் போக்கையே கடைப்பிடித்தது. அதன் விளைவு போராட்டமாக மாறிவிட்டது.

போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தையும் - இராணுவ நடவடிக்கைகளையும் - தி.மு.கழகம் மட்டுமல்ல; இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக் காரசாரமாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டு, ஆய்வுக் குழுவையும் அனுப்பி விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளது. காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், மார்க்சிஸ்ட் கட்சியும், ஜனதாக் கட்சி எம்.பி.க்களும் இந்திரா காங்கிரஸ் கட்சியும் அரசு கையாண்டுள்ள முறைகள் குறைபாடுடையவை என்று சுட்டிக்காட்டியுள்ளனர். ஆளுங்கட்சியுடன் அதன் தோழமைக் கட்சிகளுக்குள்ள தொடர்புக்கு ஏற்ப அந்த அறிக்கைகளின் தன்மையில் வேறுபாடான வாசகங்கள் காணப்பட்டாலும் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் விவசாயிகளின் பொதுவான சங்கங்களுக்குத் தீர்வு காண வேண்டுமென்ற கருத்து அனேகமாக எல்லாக் கட்சித் தலைவர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தி.மு.கழகத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டின் தலையாய எதிர்க்கட்சி என்ற நிலையில் தனது கடமையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அதற்கு உண்டு. கழக

முத்திரையுடன்தான் விவசாயிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றில்லாமல் அனைத்துக் கட்சிகளின் சார்பிலே தீர்வு காண்பதற்குக் கழகம் இப்போதும் தயாராகவே இருக்கிறது. அந்த நிலை உருவாகிறவரையில் கழகம், இந்தப் பிரச்சினையில் ஒதுங்கியிருக்க முடியாது.

ஆளுங்கட்சியாக இருந்த அனுபவத்தில் விவசாயிகளின் உணர்ச்சிகளை நன்கு புரிந்து கொண்டிருக்கிற வாய்ப்பு தி.மு.கழகத்திற்கு உண்டு! கழக ஆட்சியின்போது விவசாயிகளின் போர் மூண்டெழுந்து விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் - விபரீத விளைவுகள் - ஏற்பட்ட போது; உடனடியாகக் கழக அரசு, அந்தப் போராட்டத்திற்குத் தலைமையேற்றவர்கள் முன்நின்று நடத்தியவர்கள் கம்யூனிஸ்டு தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் உட்பட அனைவரையும் அழைத்துப் பேசி சுமுக உடன்பாடு கண்டதை யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால் இப்போது; போராட்டம் நடத்தியவர்களையும் அந்தச் சங்கத்துத் தலைவர்களையும் சிறையில் பூட்டிவிட்டு விவசாயப் பிரதிநிதிகள் என்ற பெயரால் வேறு சிலரை மட்டும் வைத்துக் கொண்டு பேசுகிறோம் என்பது பொருத்தமற்ற கூற்றாகும்.

இவற்றை எல்லாம் எடுத்து விளக்கவும் செயற்குழுவுத் தீர்மானங்களை மக்கள் மன்றத்தில் வைக்கவும் தான் ஏப்ரல் 23-ஆம் நாள் முதல் ஒரு வார காலம் அடக்குமுறை கண்டன வாரம் நடத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டங்களில் இந்தப் பிரச்சினையைப் பொறுத்து ஒத்த கருத்துடைய மற்ற அரசியல் கட்சிக்காரர்கள் கலந்து கொள்ள ஒப்பினால் அவர்களையும் இணைத்து நடத்தலாம்.

இராணுவத்தைத் திரும்பிப் போகச் செய்திடுக!

அரசின் அணுகுமுறை, விவசாயக் கிளர்ச்சி ஏற்படக் காரணங்கள், ஆளுங்கட்சியினர் விளைத்த அமளி, இவை போன்றவைகளை ஆராய; நீதிபதியும் பொது மக்கள் பிரதிநிதிகளும் கொண்ட விசாரணைக் குழு அமைத்திடுக!

விவசாயிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்திடுக!

# 562. "சித்தப்பிரமை" - யாருக்கு?

**உடன்பிறப்பே,**

மே தின விழாவில் மேதை எம்.ஜி. ராமச்சந்திரன், கருணாநிதிக்கு சித்தப்பிரமை பிடித்து விட்டதா? என்று கேலியாகக் குறிப்பிட்டு, முதலமைச்சர் பதவிக்குரிய தனது தகுதியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். மே தினத்தன்று நான் பேசியதையும் படித்துப் பார்த்து அவர் பேசியதையும் அவர் கட்சி ஏட்டில் படித்துப் பார்ப்பவர்கள், நடுநிலையாளர்களாக இருப்பார்களேயானால் யாருக்கு சித்தப்பிரமை பிடித்திருக்கிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பார்கள்.

சவால் விடுவது எளிது! எதிரியிடம் அடிவாங்கிய பிறகல்லவா எத்தனை ரவுண்டு மோத முடியும் என்பது தெரியும். கீழே விழுந்தபின் புஸ் புஸ் என்று மூச்சு வாங்கினால் என்ன ஆவது? சிலருக்கு முன்னால் தம் வரும்! சிலருக்கு பின்னால் தம் வரும்! ஆனால் இவருக்கு (கருணாநிதிக்கு) முன்னாலும் தம் வராது. பின்னாலும் தம் வராது - தம் வேறு யாரிடமோ இருக்கிறதாம்!

இந்த நாகரிகமான வாசகங்களைப் பேசியவரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான்! எனக்கு முன்னால் என்ன வரும் - பின்னால் என்ன வரும்; என்பதைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள முதலமைச்சரைப் பாராட்டத் தான் வேண்டும். சுமார் அறுபத்தி ஐந்து வயதுக்குப் பிறகும் அவருக்கு தம் பிடிக்க முடிகிறதென்றால் அந்த தம்மை வழங்குகிற காயகல்பத்தை அவருக்குச் சிபாரிசு செய்தவர்கள், அவரது நன்றிக்குரியவர்கள்தான்! மே தின விழாவில் கருணாநிதிக்கு தம் உண்டா? இல்லையா? என்று மிகப் பெரிய கேள்வி ஒன்றைப் போட்டு எம்.ஜி.ஆர்., ஏன் - தன்னையே அலட்டிக் கொண்டார் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. அதைப் பற்றிக் கவலைப்பட

வேண்டியவர்களே வேறு! வீணான கவலை எம்.ஜி.ஆருக்கு வந்திருப்பது வேடிக்கைதான்!

சவாலைப்பற்றி எம்.ஜி.ஆரா பேசுவது? இவரது சக அமைச்சர் மனோகரன் அவர்கள் அவரது வீட்டைப் பற்றி விடுத்த சவால்; இறுதியில் என்ன கதிக்கு ஆளாயிற்று என்பது நாடறிந்த விஷயமாயிற்றே! நாற்றமெடுத்த விஷயமாயிற்றே!

புயல் வெள்ளத்தால் பாதிக்கப்படாத பகுதிகளை, பாதிக்கப்பட்ட பகுதி என்று பொய்யாக அறிவித்து, வேண்டியவர் களுக்கும் உறவினர்களுக்கும் - நாமினேஷன் முறையில் காண்ட்ராக்ட் கொடுத்து ஊழல் நடத்தியதையும், அதே நேரத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புறக்கணித்திருப்பதையும் சட்டசபையில் எடுத்துக் காட்டி பொது விசாரணை வைக்கத் தயாரா என்று கேட்டபோது தயார்! என்று தோள் தட்டிய அமைச்சர்கள், பிறகு பின்னடைந்து தம் இழந்து தவித்தது ஏன் என்பதை எம்.ஜி.ஆர். விளக்குவாரா? பண்ருட்டி யூனியனில் அமைக்கப்பட்ட மக்கள் குழுவுக்கு படிக்கப்பட்டுக் கையில் கொடுக்கப்பட்டது ஒரு அறிக்கை! பிறகு மற்றொரு அறிக்கை தயாரித்து மக்கள் குழுவுக்கே வைக்காத மர்மத்தை எம்.ஜி.ஆர். வெளியிடுவாரா? இவைகளையெல்லாம் விசாரித்து - தவறு எந்த மட்டத்தில் நடந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளத்தானே பொது விசாரணை கேட்டோம்! முதலில் சரி என்றவர்கள், பிரச்சினையை சந்திக்க தம் இல்லாமல் இப்போது ஓடி ஒளிவானேன்? இப்போதும் கேட்கிறேன்; புயல் வெள்ள நிவாரண வேலைகள் ஏராளமானவை நாமினேஷன் என்ற பெயரால் பிரித்துப் பிரித்து ஆளுங்கட்சியினருக்கும் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது - அந்த உண்மையை அறிய உத்தமன் வேடம் போடும் எம்.ஜி.ஆர்.; ஒரு பொது விசாரணை வைக்கத் தயாரா? அப்போது தெரியும் புஸ் புஸ் மூச்சுவிடப் போகிறவர்கள் யார் என்று?

வயது வரம்பு பற்றி ப.உ.ச. பேசியதற்குப் பதிலாக ஏதோ சட்டசபையில் கோப்புக்களைக் காட்டினாராம் - நான் அயர்ந்து விட்டேனாம் - பேராசிரியருக்கு வியர்த்துக் கொட்டியதாம். இவர்தான் துடைத்து விட்டாராம் - நான் உத்திரவு போட்ட கோப்பு என்கிறார் அதனை! உத்திரவு வேறு செயற்குறிப்பு வேறு! அந்த

யோசனை கூறப்பட்ட செயற்குறிப்பு, சர்வீஸ் கமிஷன் கருத்தறிய அனுப்பப்பட்டது அவ்வளவுதான்! உத்திரவு போடப்பட்டது 1976-ஆம் ஆண்டு கவர்னர் ஆட்சியில்தான்!

இன்னொரு கோப்பு கூட முதல்வரால் சட்டசபையில் காட்டப்பட்டது. மதுவிலக்கு வழக்குகளை வாபஸ் வாங்கலாம் என்று எம்.ஜி.ஆர். உத்திரவு போட்ட கோப்பு அது! இப்படி ஒரு உத்திரவு போடுவதுதான் மதுவிலக்கை அமல்படுத்தும் அழகா? என்று கேட்டபோது நான் போட்ட உத்திரவை அதிகாரிகள் சரியாகக் காப்பி எடுக்கவில்லை என்று எம்.ஜி.ஆர். காட்டிய கோப்பில் - பிரச்சினை சட்ட சபையில் வந்த பிறகு; முன்பு அவர் எழுதியதைத் திருத்தி வரி பிளந்து எழுதியிருக்கிறார் என்பதை சுட்டிக் காட்டினேன். அப்படியொன்றுமில்லை கோப்பை எல்லோருக்கும் காட்டுகிறேன் என்றார். ஆனால் சொன்னபடி காட்டினாரா? இல்லை!

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை கவர்னருக்கு அனுப்பப் பட்டுள்ளது. வந்ததும் சபையில் வைக்கப்படும் என்றார். ஆனால் உண்மை என்ன? அவர் இந்தப் பதிலைச் சொல்லி ஒரு வாரம் ஆகியும்கூட அந்த அறிக்கை கவர்னருக்கு அனுப்பப் படவில்லை என்ற தகவலை சட்டசபையில் நான் வெளியிட்டேன். நான் அனுப்பிவிட்டேன். ஆனால் அதிகாரிகள் கவர்னருக்கு அனுப்பவில்லை. அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி முதல்வர் புஸ் புஸ் என்று மூச்சுவிட்ட காட்சியைத்தான் காண முடிந்தது! எந்த அதிகாரி மீதும் தம்முடன் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

நான் சில கோப்புகளில் ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறேனாம் - அதுபற்றி மே தின விழாவில் முதல்வர் கிண்டல் செய்திருக்கிறார். ஆங்கிலத்தில் அதிகாரிகளின் குறிப்பு எழுதிவரும் ஒன்றிரண்டு கோப்புக்களில் நான் மட்டுமல்ல, அறிஞர் அண்ணா கூட ஆங்கிலத்தில்தான் கையெழுத்திட்டிருக்கிறார். அண்ணாவும் நானும் தமிழில் கையெழுத்திட்ட ஆயிரக்கணக்கான கோப்புகளை எம்.ஜி.ஆர். பார்க்கவில்லை போலும்! அதுமட்டுமல்ல, இனிமேல் அதிகாரிகள் தமிழில் குறிப்பெழுதி, தமிழில் கையெழுத்திட வேண்டுமென்று நான் குறிப்பெழுதியுள்ள கோப்பினை, யாரும் எம்.ஜி.ஆருக்கு காட்டவில்லை போலும்!

ஒரு மாதம் விவசாயப் போராட்டம் பல கட்சிகளின் துணையோடு நடைபெற்றபோது ஒரு மாதத்திற்குப் பிறகு கழக அரசு 1972-ல் ராணுவத்தை வெலிங்டன் பகுதிக்குக் கீழே மேட்டுப்பாளையத்தில் தயார் நிலையில் வைத்திருந்ததே தவிர, (அதுவும் ஓரிரு நாட்கள்) இப்போது எம்.ஜி.ஆர். செய்தது போல் கிராமங்களில் துப்பாக்கி ஏந்திப் பல நாட்கள் ரோந்து சுற்ற விடவில்லை என்று பலமுறை பதில் கூறி விளக்கமளித்த பிறகும் சொன்ன பொய்யையே திரும்பத் திரும்பச் சொல்லும் சித்தப் பிரமை பிடித்தவராக எம்.ஜி.ஆர். தான், தன்னை அடையாளம் காட்டிக் கொள்கிறார்.

உடன்பிறப்பே, அவர் ஏன் சினிமாவில் நடிக்கிறார் தெரியுமா? மே தின விழாவில் ஒரு புதுக் காரணத்தைக் கூறியிருக்கிறார் - நான் எழுதும் படங்களில் வரும் வசனங்களுக்குப் பதில் கூற இவர் நடிக்கப் போகிறாராம்! ஏன், இவர் கட்சியில் திறமையான வசனம் எழுதக் கூடிய எழுத்தாளர்கள் இல்லையா என்ன? அவர்களைப் பயன்படுத்தி எழுதச் சொல்லி, வேறு யாரையாவது நடிக்கச் சொல்ல முடியாதா? வேறு யாராவது நடித்தால் வசனங்களை ஒழுங்காகப் பேசுவார்களே!

தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன். இது பாட்டல்ல என் கொள்கை

என்று மே தினத்தில் நமது முதல்வர் முழங்கியிருக்கிறார். கிணத்துக்கடவு எம்.எல்.ஏ. போலீஸ் ஸ்டேஷனில் புகுந்து அங்கு கைதாகி லாக் அப்பிலிருந்த தனது மகனை பலாத்காரமாக விடுவித்துச் சென்றாரே, ஆறு மாதமாகிறதே இந்த அக்ரமம் நடந்து - அந்த தேவாதி தேவனை இந்த புனிதர் இதுவரையில் என்ன செய்தார்? அவர் மீது என்ன நடவடிக்கை?

மக்கள் பணத்தை நான் கொள்ளையடித்தேனாம் - அதற்காக வழக்குகளில் தண்டனை பெறப் போகிறேனாம் - அந்தத் தண்டனைக்கு என்னைத் தயாராகிக் கொள்ளுமாறு எச்சரிக்கிறார் எம்.ஜி.ஆர். மே தின விழாவில்!

**உடன்பிறப்பே,**

எம்.ஜி.ஆர். அவரது படத்திலே நடிப்பவர்களை மிரட்டுவதுபோல் என்னை மிரட்டிப் பார்க்கிறார். தண்டனையை

இவரே உறுதிப்படுத்துவதிலிருந்து நீதித் துறையில் தலையிட முடிவு செய்துவிட்டார் அல்லது தலையிட்டுக் கொண்டிருக்கிறார் என்பது விளங்குகிறது அல்லவா?

உடன்பிறப்பே, உன் வாயிலாக எம்.ஜி.ஆருக்குச் சொல்லுகிறேன், எதையும் தாங்கும் இதயத்தோடுதான் இந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறேன். என்னையே சிறையில் பூட்டி அழித்து விட்டாலும் அமைப்பு ரீதியாக வளர்க்கப்பெற்ற அண்ணா தந்த கருவூலமாம் இந்தக் கழகத்தை அழிக்க, உடன்பிறப்புகளின் உணர்ச்சியை அழிக்க, தன்மான ரத்தம் பாயும் தமிழர்களின் வாழ்வை சிதைக்க - ஆயிரம் எம்.ஜி.ஆர். பிறந்து வந்தாலும் முடியாது! முடியாது! முடியாது!

வீணாக - சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர் சித்தப் பிரமை கொண்டு பிதற்ற வேண்டாம். பொறுப்பில் உள்ளவர்களின் பேச்சுக்கள் இப்படி இருக்குமேயானால் பொறுப்பில் இல்லாத கட்சிக்காரர்களின் பதில்கள் சற்று கடுமையாகத்தான் இருக்கும். அந்த நிலைக்குத் தன்னை எம்.ஜி.ஆர். ஆளாக்கிக் கொண்டு ஆப்பு அசைக்க வேண்டாம் என்று அவர்பால் இன்னமும் உள்ள அன்பால் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(3-05-1978)

## 563. காட்டூராரும், கண்டியூராரும்! சிந்தனைக்குச் சில செய்திகள்!

உடன்பிறப்பே,

அண்மையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில், கண்டியூரார் திரைப்படங்களில் நடிப்பது பற்றி காட்டூரார் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். உடனே கண்டியூராருக்கு ஆத்திரம் பொங்கி விட்டது. காட்டூராரை கண்டபடி சாடினார் - கனல் கக்கப் பேசினார். காட்டூர் என்பதே கேலிக்குரிய ஒரு சொல் எனும் விதத்தில் தமது சொல்லாற்றலைக் காட்டினார் கண்டியூரார்! காட்டூரார் அதற்காக வருந்தவில்லை - மகிழ்ச்சியே அடைந்தார். காரணம், காட்டூர் தமிழ் நாட்டிலே - தாயகத்திலே இருக்கும் ஊர்! தன்னைக் கேலி செய்பவரோ, இலங்கையில் கண்டியில் பிறந்து இந்தத் தமிழகத்தை இன்றைக்கு ஆளும் பொறுப்பை ஏற்றிருப்பவர் - தமிழ் மக்களில் ஒரு பகுதியினரின் ஏமாளித்தனத்தின் காரணமாக அரியாசனம் ஏறிக்கொண்டவர். அவர், காட்டூராரைக் கேலி பேசுகிற அளவுக்கு ஒருநிலை!

காட்டூரார், தொழிலாளர்கள் மத்தியில் உழைப்பவர்களில் ஒருவர். எனவே அவர், தொழிலாளர்கள் விழாவில் பேசும்போது அதிக ஊதியம் கேட்கும் தொழிலாளியைப் பார்த்து, ஏ, தொழிலாளியே உன்னை விடக் குறைவாகச் சம்பாதிக்கும் மக்களைப் பார்! என்று உபதேசம் செய்கிற கண்டியூரார், தனக்கு மட்டும் மாதம் ஆயிர ரூபாய் சம்பளமும் ஏனைய அரசாங்க வசதிகளும் போதவில்லையென்று மேலும் வருமானத்திற்கு வழிதேடத் திரைப்படத் தொழிலுக்கு போகிறேன் என்கிறாரே, இதுமட்டும் என்ன நியாயம்? என்று ஒரு கேள்வியைக் கேட்டார்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க முடியாத கண்டியூரார், கேள்வி கேட்டவரைப் பார்த்து, அவர் காட்டூரார்

என்று கிண்டல் செய்து, தன் ஆத்திரத்தைத் தணித்துக் கொண்டார்.

நான் முதல்வர் பதவிக்கு வந்தால் நஷ்டம் எனக்குத்தான்! என்றாலும் என்னுடைய வருமான நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டு பதவிக்கு வர விரும்புவது மக்களுக்குத் தொண்டு செய்யத்தான் - தியாகம் செய்யத்தான்!

என்று கண்டியூரார் தேர்தல் நேரத்தில் பேசி, அவரது கட்சிப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வெளிவந்திருக்கிறது. இது திருப்பூர் கூட்டத்தில் பேசியது ஏடுகளில் வந்ததோ 26-5-1977ல்!

தொழில் செய்பவர்கள் ஆட்சிக்குச் செல்லக்கூடாது! தியாகம் செய்பவர்கள்தான் ஆட்சிக்குச் செல்ல வேண்டும்.

இது உளுந்தூர்ப் பேட்டை தேர்தல் கூட்டத்திலே கண்டியூராரால் கண்டிப்பாகப் பேசப்பட்டு தடித்த எழுத்துக்களில் அவரது கட்சி ஏட்டில் 4-6-1977ல் வெளிவந்திருக்கிறது.

இப்படி நடிப்புத் தொழிலையும் அதனால் கிடைக்கும் பல லட்ச ரூபாய் வருமானத்தையும் (கறுப்பாக முக்கால் பகுதியும் வெள்ளையாகக் கால் பகுதியும்) விட்டுவிட்டு, முதல்வர் பதவிக்கு வந்துள்ளதை பெரிய தியாகம் என்று தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த கண்டியூரார், தன்னிடமுள்ள கவர்ச்சி போய்விட்டால் கட்சி போய் விடும் என்று அவரது கட்சிக்காரர்களின் அந்தரங்கக் கூட்டத்தில் தெரிவித்துவிட்டு, திடீரெனத் திரையுலகிற்குத் திரும்பி வந்து நடிக்கப் போவதாகவும் - அதே சமயம் பகுதி நேர முதல்வராகப் பதவி வகிக்கப் போவதாகவும் அறிவித்து விட்டார்.

பணம் வாங்காமல் நடிக்கப் போகிறேன்.

இது கண்டியூராரின் முதல் அறிவிப்பு!

சில வாரங்கள் ஓடுகின்றன. சினிமாவில் நடிப்பதற்கு மற்றொரு புதிய காரணத்தை வழங்குகிறார்.

ஏற்கனவே ஒத்துக் கொண்டு நடித்த பழைய படங்கள் பாக்கியிருக்கின்றன. அவைகளை முடித்துக் கொடுக்கப் போகிறேன்.

கண்டியூராரின் அடுத்த அறிவிப்பு இது.

மேலும் சில நாட்கள் ஓடுகின்றன.

புதிய படத்திற்கான தொடக்க விழாவில் கலந்து கொண்டு அந்தப் புதிய படத்தில் நடிக்கப் போவதாக அறிவிக்கிறார் அதே கண்டியூரார்!

அதன் பிறகு இப்போது ஒரு புத்தம் புதிய காரணத்தை வெளியிட்டுள்ளார்.

கருணாநிதி எழுதுகிற உரையாடல்களுக்கு, நான் படங்களில் நடித்துத்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

இது கண்டியூரார் வெளியிட்டுள்ள புதிய காரணம் - உடன்பிறப்பே! நான் நாலு நாட்கள் உட்கார்ந்து எழுதுகிற உரையாடல்களுக்குப் பதில் சொல்ல; பாவம் - கண்டியூரார் நாலு மாதமோ ஆறு மாதமோ கஷ்டப்பட்டு நடிக்கப் போகிறார்.

இப்படி முரண்பாடுகளின் மொத்த உருவமாகக் காட்சி தருகிற கண்டியூரார் தான் காட்டூராரைப் பார்த்து ஏளனம் புரிகிறார்; ஏகடியம் செய்கிறார்!

காட்டூரார் என்று கண்டியூராரால் இழித்துரைக்கப்பட்டாலும் அந்தக் காட்டூராரிடம் காணப்படும் தெளிவு - இந்தக் கண்டியூராரிடம் ஒரு துளியும் இல்லையே!

இந்த அழகில், கண்டியூர் காட்டூரைப் பழிப்பதா?

வேடிக்கை காட்டும் விதூஷகர் ஒருவரை நாடாளும் முதல்வராகப் பெற்றால், இப்படிப் பல குழப்பமான நிகழ்ச்சிகளை கண்டு களிக்கத்தான் வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(07-05-1978)

**நன்றி : நம்நாடு (07-05-1978)**

# 564. மாவட்ட பாசறைகள் அமையட்டும்!

**உடன்பிறப்பே,**

பெரும்பான்மையான இடங்களில் கழகத்தின் ஒன்றிய, நகர, நகரிய அமைப்புகளின் தேர்தல்கள் முடிவுற்று பொறுப்புக்கு வந்துள்ள உடன்பிறப்புகள் மகிழ்ச்சிப் பொங்கிட ஓடோடி வந்து மாலைகளையும், கைத்தறி ஆடைகளையும் அணிவித்துத் தங்கள் உணர்வுகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அமைப்புகளில் பொறுப்புகளை ஏற்றிடத் தேர்ந்தெடுக்கப்படாதவர்களும் கூட அதனைத் தோல்வியாகக் கருதிடாமல் தங்களின் கழகத் தொண்டு என்றும்போல் தொடருமென்று செயல் மூலம் காட்டுகின்ற காட்சியினைக் காணுகின்றேன். தமிழ்நாட்டில் ஒரு கட்சியினுடைய பொதுத் தேர்தல் அடித்தள அமைப்புக்களில் இருந்து தலைமை வரையில் ஜனநாயக முறைப்படி மகத்தான அளவில் நடைபெறுவது நமது கழகம் ஒன்றில்தான் என எண்ணிடும்போது எவ்வளவு களிப்பு ஏற்படுகிறது.

இனி எந்த ஒரு கட்சியும் இதுபோன்ற ஜனநாயக முறையில் தனது அமைப்புகளின் நிர்வாகிகளைக் கீழ் மட்டத்திலேயிருந்து தேர்ந்தெடுக்க முற்படுமேயானால் அதற்கு வழிகாட்டியாக இருக்கும் பெருமை நமது தி.மு.கழகத்திற்கே உண்டு. வீட்டில் இருந்தாலும், கழக அலுவலகத்திற்குச் சென்றாலும், வெளியூர் நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானோர் புடைசூழ ஒவ்வொரு அமைப்பின் நிர்வாகக் குழுவினர் வருகை தந்து மாலைகளைக் குவிக்கும் நிகழ்ச்சி, எத்துணை மனவலிமையை அளிக்கிறது தெரியுமா?

இன்று கூடப் பாரேன்; சர்க்காரியா கமிஷனின் அறிக்கையை ஜனதா அரசு, வெளியிட்டு அதனைத் தமிழ்நாட்டில் உள்ள மாற்றார் ஏடுகள் எல்லாம் பயங்கரத் தலைப்புகளைக் கட்டிப் பிரசுரித்திருக்கின்றன. தலைப்புக்கும் உள்ளேயிருக்கிற விவரங்களுக்கும் உள்ள தொடர்பு, சாதாரண அறிவு படைத்தவர்களுக்கே கூட விளங்கும். இதுபற்றி என்னைச் சந்தித்த பி.டி.ஐ., யு.என்.ஐ., இந்து மற்றுமுள்ள ஏடுகளின் நிருபர்களிடம் நான் சர்க்காரியா கமிஷன் அறிவிப்பு பற்றிய விளக்கங்களை அறிவித்துள்ளேன். படித்திருப்பாய் என்று நம்புகிறேன்.

இப்படி ஒரு விளக்கமே தேவையில்லை. சுமார் மூன்றாண்டுகளாகக் கூறப்பட்டு வருகிற அவதூறுகளையும், களங்கங்களையும் நாங்கள் எங்கள் கால் தூசிக்குச் சமமாக மதிக்கிறோம். அங்ஙனமிருக்க இதற்கேன் இத்தனை பெரிய விளக்கம்? என்று என்னைப் பார்த்து வார்த்தைகளால் கேட்காவிட்டாலும் விழிகளால் உணர்த்தி அன்புமழை பொழிந்து, கழகப் பணிகளை மேலும் தீவிரமாகத் தொடரப் போகிறோம் என்றுதானே அமைப்புகளின் புதிய நிர்வாகிகள் ஒவ்வொரு நாளும் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கின்றனர். இந்த எழுச்சியையும் உணர்ச்சியையும் எதையும் தாங்கும் இதயம் கொண்டோர் நாம் என்ற நெஞ்சுறுதியையும் சர்க்காரியா அறிக்கையோ அல்லது வழக்குகளோ என்ன செய்துவிட முடியும்? எதுவும் செய்ய முடியாது! எதற்கும் தயார் நிலையில்தான் தி.மு.கழகப் பாசறை வீரர்கள் தோள்தட்டி நிற்கிறார்கள்.

எம்.ஜி. ராமச்சந்திரன் குழுவினர் ஜனாதிபதியிடம் கொண்டு போய்க் கொடுத்த குற்றச்சாட்டுகள் ஐம்பத்திநாலு! அவசர அவசரமாக ஆட்சியைக் கலைத்தபிறகு அதைவிட அவசர அவசரமாக அந்தக் குற்றச்சாட்டுகளைப் பொறுக்கி, அதில் இருபத்தி எட்டை விசாரணைக்கு அனுப்பினார்கள். விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டபோது எம்.ஜி. ராமச்சந்திரனுடன் சேர்ந்துவிட்ட சத்தியவாணிமுத்து போன்றவர்கள் மீது சாட்டப்பட்டிருந்த மிகப்பெரிய குற்றச்சாட்டுகளையெல்லாம் விசாரணைக் கமிஷனுக்கு அனுப்பவேயில்லை. விசாரணை முடிவுகள் வெளிவந்துவிட்டன. பூச்சி மருந்து, சர்க்கரை விவகாரம் என்ற இரண்டைத் தவிர இன்று கழகத்தில் உள்ளவர்கள் மீது மற்ற எந்தக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்பட்டதாக சர்க்காரியா

அறிவிக்கவில்லை. ஆனால் நமது கழகத்தில் இப்போது இல்லாமல் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களிடம் தஞ்சமடைந்திருக்கும் முன்னாள் தி.மு.க. அமைச்சர்கள் மீது புகார்கள் நிரூபிக்கப் பட்டுள்ளன. எந்த எம்.ஜி.ஆரால் புகார் கூறப்பட்டதோ அந்தப் புகாருக்குரியவர்கள் அவைகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் எம்.ஜி.ஆரின் புனித (?) கட்சியில் இருக்கிறார்கள்.

இந்த அறிக்கையின் தொடர்பாக நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்குமென்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அந்த நடவடிக்கைகள் எவ்வாறு இருக்கும்? எப்படி அமையும்? எவ்வாறு இருப்பினும் அவற்றைக் கழகம் முறைப்படி சந்திக்கத்தான் போகிறது!

ஐம்பத்தி நான்கு என்ற புகார்ப் பட்டியலில் விட்டுப்போன குற்றச்சாட்டுகள் இருபத்தி ஆறுக்கும் மத்திய அரசோ, மாநில அரசோ, விசாரணைக் கமிஷனைப் புதிதாகப் போடக் கூடும்! போட வேண்டுமென நாம் பல நாளாகக் கூறி வருகிறோம். இவை குறித்தெல்லாம் நானோ, பொதுச்செயலாளரோ மற்ற தலைமைக் கழக நிர்வாகிகளோ சிந்திக்கச் சிறிது நேரம் எடுத்துக் கொண்டால்கூட சே! அதை விட்டுத் தள்ளுங்கள் - எதுவரினும் இந்தக் கழகம் காக்க நாங்கள் இருக்கிறோம்! கழகத்தினை வளர்க்க, கொள்கை வெற்றி காண, அண்ணாவின் லட்சியம் நிறைவேற என் பணி என்ன? ஆணையிடுங்கள்! என்று வீர முழக்கமிடுகிற உடன்பிறப்புகளின் தின் தோள்களை தினந்தோறும் நாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

எனவே, வழக்குகள், கமிஷன்கள் நமது லட்சியப் பாதையில் ஓரிரு நெருஞ்சில் முள் குத்துவது போல! இவற்றைப் பெரிதுபடுத்திக் கழகத்தை அழித்து ஒழித்து விடலாம் என்று கனவு காண்கின்ற கயவர் கூட்டமொன்றும் தமிழகத்தில் இல்லாமல் இல்லை. அவர்களுக்கு நேராக நெஞ்சுயர்த்தி நிற்கிற அடலேறுகளாம் கழக உடன்பிறப்புகள், பட்டி தொட்டிகளில் இருந்து பட்டினக் கரைகள் வரையில் உள்ள பல்லாயிரக்கணக்கான அமைப்புகளில் செயலாற்றும் பொறுப்பாளர்களாக வந்துள்ளனர்.

இதில் யாரும் யாரையும் தோற்கடித்து விட்டதாக எண்ணிக் கொண்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பாராட்டு விழாக்கள் நடத்திக் கொண்டிருக்கக் கூடாது! கழகப் பணியை யார் ஆற்றுவது என்ற போட்டியே தவிர, இதில் மனக் கசப்புகளுக்கோ - விட்டேனா பார்! என்ற பழிவாங்கும் உணர்வுகளுக்கோ சிறிதும் இடமில்லை! தோ்வு பெற்றோர்க்குப் பாராட்டு விழா எனில் அதில் தோ்வு பெறாதவர்களும் சேர்ந்து வாழ்த்திடக் கூடிய சுமுக நிலை இருந்திட வேண்டும். இல்லையேல் அந்தப் பாராட்டு விழாக்கள், பகை மூட்டும் விழாக்களாக மாறிவிடும்!

வாய்ப்பு இழந்தவர்களும், விரிந்த மனத்துடன் வாய்ப்புப் பெற்றோர்க்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். அதேபோல் வாய்ப்பு பெற்றோரும் வாய்ப்பு இழந்தோரை அரவணைத்துக் கழகப்பணி ஆற்றிட வேண்டும்.

அடுத்த கட்டமாக மாவட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கான தோ்தல் நாள்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பொறுப்புகளை ஏற்கத் திறனுடையார் எவர் என சிந்தித்து அதற்கேற்ப அவர்களை அந்தப் பொறுப்புகளுக்கு அனுப்ப வேண்டுமேயல்லாது - போட்டியிடும் வேட்பாளர்கள்; கழகத் தலைமையில் உள்ள யார் பெயரையாவது இழுத்து அவர் சொன்னார்; இவர் சொன்னார்! அதனால் நிற்கிறோம் என்றெல்லாம் தங்களுக்குத் தேவையான தோ்தல் பிரச்சாரங்களில் ஈடுபடக் கூடாது!

பெரும்பாலும் முதல் இரண்டு கட்டத் தோ்தல்கள் ஓரிரு இடங்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் அமைதியான முறையில் நடைபெற்று முடிந்திருக்கின்றன.

அவற்றைவிடப் பெரும் பொறுப்புக்கு வரப்போகிற மாவட்ட நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் தோ்தல்; தலைமையில் உள்ள நாங்கள் மகிழத்தக்க அளவுக்கு அமைதியான முறையில்; ஒற்றுமைக்கு ஒரு சிறிதும் குந்தகம் வராத வண்ணம் நடைபெறுவதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க வேண்டுமென்று கழக உடன்பிறப்புக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

வீராப்பைக் குறைத்து, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை உணர்த்தி அனைத்து மாவட்டக் கழகத் தளபதிகளும் தோளோடு தோள் நின்று தொகை தொகையாய் வரும் சோதனைகளை எதிர்த்து வாகை சூடுவோம் என்று எழுப்புகின்ற அந்த எக்காளக் குரல் எட்டுத்திக்கும் எதிரொலிக்கட்டும்! எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தோழர் ஒன்றாதல் கண்டே எனும் விதத்தில் மாவட்டங்களில் நமது பாசறைகள் அமையட்டும்.

உடன்பிறப்பே, என் இதய உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடந்து காட்டு!

அன்புள்ள,

மு. க.

(14-05-1978)

# 565. வழக்குகளை நம்புகிறார்; வழுக்கி விழப் போகிறார்!

உடன்பிறப்பே,

இருக்கின்ற வழக்குகள் போதாதென்று இதோ ஒரு வழக்கு! அதுவும் இந்திரா காந்தி அம்மையாரைக் கொலை செய்யச் சதி செய்ததாகவும் கொலை செய்ய முயன்றதாகவும் வழக்கு! இன்னும் பல வழக்குகள் ஜோடிக்கப்பட இருக்கின்றன. எம்.ஜி.ஆரிடம் ஆட்சிப் பொறுப்பு வந்து ஓராண்டுக் காலமாகிறதே; என்ன சாதித்தார் என்றால் இதோ பாரீர்! தி.மு.கழகத்தினர் மீது அடுக்கடுக்கான வழக்குகள்; இந்தச் சாதனை போதாதா? என்று எம்.ஜி.ஆர். முழங்குவது காதில் விழுகிறதா?

ஆட்சிப் பொறுப்பேற்ற ஓரிரு மாதங்களில் நமது சட்டப்பேரவையின் முன்னாள் அவைத் தலைவர் புலவர் கைது செய்யப்பட்டார். அவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

குடிநீர் வாரிய முன்னாள் தலைவர் நண்பர் கந்தப்பனை அவசர அவசரமாக மதுரையிலே போய்க் கைது செய்து சென்னைக்கு அழைத்து வந்தார்கள். வழக்கும் தொடருகிறோம் என்றார்கள்.

இந்திரா காந்திக்குக் கறுப்புக்கொடி காட்டியதற்காக எங்கள் மீது வழக்கு! நாற்பது நாள் சிறையில் வைத்தார்கள். பிறகு சம்மன் வரும்போது வந்தால் போதுமென்று நிபந்தனையின்றி விடுதலை செய்தார்கள். எங்களை விடுதலை செய்ய வேண்டுமென்று ஆங்காங்கு அறப்போர் மறியலில் ஈடுபட்ட உன்போன்ற உடன்பிறப்புகள் ஆயிரக்கணக் கானோரைக் கைது செய்து வழக்கும் போட்டு, அந்த வழக்குகள் இன்னும் முடியாத நிலையில் - பல வழக்குகளில் மறியல் போர் வீரர்கள் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டுமிருக்கின்றனர்.

இப்படியெல்லாம் கைதுகள், வாரண்டுகள், தண்டனைகள் போன்ற மிரட்டல்களாலேயே தி.மு.கழகத்தை ஒதுக்கி விடலாமென்று நண்பர் எம்.ஜி.ஆர். திட்டம் தீட்டுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

அவர், படங்களில் கதாநாயகனாக நடித்தவர் - இனியும் அவ்வாறே நடிக்க விரும்புகிறவர் - கதையில் வில்லனாக வருகிறவன், கதாநாயகனை வீழ்த்த எவ்வாறெல்லாம் சதிவலைகள் பின்னுவான் என்பதும், அவற்றில் எல்லாம் கதாநாயகன் சிக்கிக்கொள்ள நேரிட்டாலும் கூட, இறுதியான வெற்றி கதாநாயகனுக்கும் - வீழ்ச்சி வில்லனுக்கும்தான் கிடைக்கும் என்பதையும் அறியாதவரல்ல அவர்!

ஆனால், ஆட்சிப் பொறுப்பில் இன்று அவர் ஏற்றுள்ள பாத்திரம் வில்லன் பாத்திரமாக வடிவெடுத்துள்ளது. அதனால்தான் பொழுதெல்லாம் அவர் நினைவு, என்னையும் கழகத்தையும் சுற்றிச் சுழலுகிறது! சட்டம், தன் கடமையைச் செய்யும் இது அவர் நிருபர்கள் கூட்டத்தில் தவறாது ஒலித்திடும் தாரக மந்திரம்!

ஓராண்டுக்கால ஆட்சியில் தமிழ்நாட்டில் தன் கடமையை சட்டம் எவ்வாறெல்லாம் செய்திருக்கிறது தெரியுமா?

போலீஸ் லாக்அப்பில் இருந்த தன் புத்திரனை மீட்க; உள்ளே அத்துமீறி நுழைந்து அதிகாரிகளை வசைமாரி பொழிந்து, லாக்அப்பில் இருந்தவர்களை பலாத்காரமாக மீட்டுக்கொண்டு போனார் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. ஒருவர்! அவரை நெருங்க முடியாமல் சட்டம் ஆறுமாத காலமாகத் தவியாத் தவித்துக் கொண்டிருக்கிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களைப் பிடிக்கப்போன போலீஸ் அதிகாரி, சென்னையில் கட்டிப் போடப்பட்டுக் கத்தியால் குத்தப்பட்டார்! சாராயம் காய்ச்சியோர் சர்க்கார் கட்சியினர் என்பதால், சட்டம் தன் கடமைக் கரத்தை நீட்ட முடியாமல் முடக்கிக் கொண்டு கிடக்கிறது.

பிரேமா கொலை வழக்கில் துப்பு துலக்காமல் விடப் போவதில்லையென்று தொடை தட்டல்கள் என்ன - தோல் குலுக்கல்கள் என்ன - மாதங்கள் பல உருண்டோடி விட்டன; சட்டம், தன் கடமையைச் செய்ய அந்தப் பக்கம் திரும்பவே மறுத்து விட்டது.

செஷன்ஸ் கோர்ட் தீர்ப்பை எதிர்த்து ஐகோர்ட்டில் அப்பீல் செய்தனர் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு தண்டனைபெற்ற ஆளுங்கட்சியினர்! ஐகோர்ட் அவர்களது தண்டனையை உறுதிப்படுத்தியது - ஆனால் அவர்கள் இன்னும் போலீசார் கையில் சிக்கவில்லை! கேட்டால் போலீசார் தேடுகிறார்கள் என்று பதில் வந்தது! அப்படிப் பதில் வந்தபோதே அந்தக் குற்றவாளிகள் மூவரும், அமைச்சர் கலந்து கொண்ட ஒரு திருமண விழாவில் திருவொற்றியூரில் கலந்து கொண்டனர்! சட்டம் அந்தக் கல்யாணத்தில் சந்தனம் பூசிக்கொண்டு நின்றது - குற்றவாளிகள் பக்கம் முகத்தைக் கூடத் திருப்பவில்லை!

கோரிக்கைகளை எழுப்பிக் கிளர்ச்சி செய்த, பஸ் தொழிலாளர் - ஆசிரியர் - அரசு ஊழியர் - விவசாயிகள் - அனைவர் மீதும் ஆளுங்கட்சியின் தொண்டர்கள் வெறியாட்டம் நடத்தினர். இதனை அனைத்துக் கட்சிகளும் கண்டித்து அறிக்கை விட்டன. எம்.ஜி.ஆரின் சட்டம் மௌனப்புன்னகை புரிந்துகொண்டிருந்ததே தவிர, எழுந்து வந்து என்னவென்றுகூட கேட்கவில்லை!

இப்போது நம்மனோர் 135 பேர் மீது பயங்கர சட்டப் பிரிவுகள் பாயவிடப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது!

இந்திரா காந்தி நெருக்கடி நிலையின் காரணமாக தி.மு.க.வுக்குத் தொல்லைகள் பல தந்தார் என்பது மட்டுமல்ல; ஜனநாயக விரோதமாகவும் - சர்வாதிகாரமாகவும் - செயல்பட்டார் என்பதைக் கண்டிக்கக் கழகம், கறுப்புக் கொடி நிகழ்ச்சியை நடத்தியது?

மாதங்கள் ஐந்து பறந்து விட்டன! இப்போது திடீரென இந்த வழக்குத் தொடர இவ்வளவு ஆர்வம் ஏன் தெரியுமா?

அரசியல் உறவுகளில் எந்த மாற்றமும் எப்போதும் ஏற்படலாம் என்று நான் மதுரையில் பேசியதை வைத்துப் பலரும் பலவிதமான யூகங்களை செய்து கொண்டனர்! இந்திரா காங்கிரசுக்கும் - தி.மு.க.வுக்கும் உறவு ஏற்பட்டு விடுமோ என்று நண்பர் எம்.ஜி.ஆருக்கு ஒரு சந்தேகம்!

இப்படி ஒரு வழக்கினைப் பயங்கரமாக ஜோடிப்பதின் வாயிலாக - தி.மு.க., இந்திரா காங்கிரஸ் இரண்டையும்

மோதவிடலாம் என்று ஒரு திட்டம்! அதற்காகவே இந்திரா காந்தியும் சாட்சி சொல்லப்போகிறார் என்று ஒரு அறிவிப்பு!

பாவம்! மதுரை மாநகராட்சித் தேர்தலுக்காக இந்த ஸ்டண்ட் வேலையைச் செய்கிறார் புரட்சி நடிகர்!

தி.மு.க. எந்தக் கட்சியையும் - எந்தத் தனிப்பட்ட நபரையும் தாக்கவேண்டுமென்றோ பழி வாங்க வேண்டுமென்றோ கொள்கை கொண்ட இயக்கமல்ல!

நாட்டுக்கு விரோதமான கொள்கைகளை, மக்களுக்குக் கேடுபயக்கும் செயல்களை, தி.மு.கழகம் வன்மையாக எதிர்க்கும்! அந்தக் கடுமையான எதிர்ப்பும் காந்தீய வழியில் - அண்ணா வழியில்தான் இருக்கும்! இந்திரா காலத்து நெருக்கடிச் சட்டத்தை எதிர்த்துக் கழகம் போட்ட தீர்மானத்திலேகூட இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண அண்ணா, காந்தி வழியில் அமைதியான முறையில் அணுகுவோம் என்றுதான் வாசகம் நிறைவு பெற்றிருந்தது.

எம்.ஜி.ஆர்., இந்த வழக்கைப் போட்டு விட்ட காரணத்தாலேயே - தி.மு.க. பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் எல்லோரும் ஏமாந்துபோய் எம்.ஜி.ஆர். ஆட்சியின் அலங்கோலங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வதை விட்டு விட்டு, இந்திரா காங்கிரஸ் மீது பாய்வார்கள் என்று கருதுவாரேயானால் அது எம்.ஜி.ஆர். போடும் தப்புக்கணக்காக ஆகிவிடும்!

தி.மு.க. இன்று தமிழகத்தின் தலையாய எதிர்க்கட்சி! இந்திரா அன்று டெல்லியில் அதிகாரத்தில் இல்லை! ஆளுங்கட்சிகளின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதே ஒரு எதிர்க்கட்சியின் முக்கியக் கடமை! பொறுப்பு! அதே நேரத்தில் இந்திரா காந்தியின் நெருக்கடி காலத்துக் கொடுமைகளை முதன் முதலாக எதிர்த்த பெருமை தி.மு.க.வுக்கு உண்டு! அதிகாரத்தில் இல்லாதவர்களுடன் கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம். அவர்கள் இருந்தபோது நடந்த கேடுபாடுகளுக்காக அடையாளப் பூர்வமான எதிர்ப்பைக் கறுப்புக் கொடி நிகழ்ச்சி மூலம் உணர்த்தினோம் - அது தொடர்ந்து காட்டப்பட வேண்டிய எதிர்ப்பு நிகழ்ச்சி அல்ல என்பதால்தான் இந்திரா காந்தி திருச்சி மாநாட்டுக்கு வந்தபோது கழகம், கறுப்புக்கொடி காட்டாது என்று அறிவிக்கப்பட்டதாகும்.

ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு நடந்த ஒரு அமைதிவழி ஆர்ப்பாட்டத்தைப் போலீசாரைக் கொண்டு வன்முறைக்குத் திருப்பி, மூன்று உயிர்களையும் (தீனன், பாபு, சுப்பிரமணி) வாயில் போட்டுக் கொண்ட எம்.ஜி.ஆர். ஆட்சி, இன்று அதனை மீண்டும் வழக்கு வாயிலாகப் பெரிதுபடுத்துவதால் அவர் நினைக்கின்றபடி யாரையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்க முடியாது!

தேர்தல்கால உறவுகளைத் தேடி எம்.ஜி.ஆர். அலையலாம்! அதற்காக ஆயிரம் தந்திரங்களையும் கையாளலாம்! தேர்தல் களங்களில் மோதிக் கொண்டாலும் கூட, அரசியல் கட்சிகளுக்கிடையே விமர்சனங்கள் நாகரிகமான முறையில் அமைய வேண்டுமென்று விரும்புகிறது கழகம்!

அதனை மீறுவோர் கழகத்தினராயினும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறுவதில்லை!

ஆனால் அவரோ, தனது கட்சியினரை நரகல் நடையில் தாக்குவதற்கே பயிற்சி அளித்து வருகிறார்!

அதுவும் பயன்படாமல், கழகம், வளர்ந்து வருகிற காரணத்தால் - இப்போது வழக்குகளை நம்புகிறார்! பாவம்; வழுக்கி விழப் போகிறார்!

அன்புள்ள,

மு. க.

(26-05-1978)

# 566. கேட்காததும் - சொல்லாததும்!

**உடன்பிறப்பே,**

முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், நிருபர்களுக்குப் பேட்டியொன்று அளித்திருக்கிறார். அவரது பேட்டியில் அவர் வெளியிட்ட சில கருத்துக்களை (குறிப்பாக நாவலரைப் பற்றிச் சொன்னதை) அவரது கட்சி ஏடுகளே வெளியிடாமல் இருட்டடிப்பு செய்துள்ளன. நிருபர்கள் கேட்ட கேள்விகளையும், எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் அளித்த பதில்களையும், இந்தக் கடிதத்தில் குறிப்பிடுகிறேன். நிருபர்கள் கேட்டிருக்க வேண்டிய கேள்விகள் - எம்.ஜி.ஆர். சொல்லியிருக்க வேண்டிய பதில்கள் - அவைப்பற்றியும் இந்தக் கடிதத்திலேயே விளக்குகிறேன். கேட்டிருக்க வேண்டிய கேள்விகள் என்பதற்கு அடையாளமாக நிருபர் என்ற சொல்லுக்குக் கீழே கோடு கிழிக்கப்பட்டிருக்கும். அதேபோல சொல்லியிருக்க வேண்டிய பதில்கள் என்பதற்கு அடையாளமாக எம்.ஜி.ஆர். என்ற பெயருக்கு கீழே கோடு கிழிக்கப்பட்டிருக்கும்.

**நிருபர்** : இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. கூட்டு வைத்துக் கொள்ளும் என்று கருணாநிதி பேசியதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**எம்.ஜி.ஆர்.** : அண்மையில் நடந்த சட்டப் பேரவையில் இந்திரா காந்தியை மோசமான வார்த்தைகளால் அவரும் அவர் கட்சியினரும் பேசி இருக்கிறார்கள். அவைகள் சட்டசபைக் குறிப்பிலிருந்தும் நீக்கப் பட்டிருக்கின்றன.

**நிருபர்** : நாங்களும் சட்டசபை நிகழ்ச்சிகளைக் கவனித்து வந்தோம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு உறுப்பினர்களும், ஜனதா உறுப்பினர்களும், தி.மு.க. உறுப்பினர்களும்

இந்திராவைப் பற்றி சர்வாதிகாரி என்ற வார்த்தையை பயன்படுத்தினார்கள். அந்த வார்த்தையை இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்த்தனர். அதைத்தவிர வேறு நீங்கள் சொல்வது போல சட்ட சபையில் மோசமான வார்த்தைகள், இந்திராவைப் பற்றிப் பேசி, அவைகள் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதாக எங்களில் யாருக்கும் நினைவில்லையே!

**எம்.ஜி.ஆர்.** : நினைவு என்பது என்னவென்றால்... நம்முடைய மனமானது மறக்காமல் இருப்பதற்கு இயற்கையாக மனிதனுக்குக் கிடைக்கின்ற சக்தி என்று சொல்லப்படுகின்ற ஞாபகத்தின் மறுவடிவம் என்று கூறுவது என் நினைவுக்குப் பொருத்தமானதாகவும் உங்கள் நினைவுக்கு வேறு விதமாகவும் அதாவது மறதிக்கு மாறுபட்ட தன்மையென்கிற தத்துவம் என்று எடுத்துக் கொண்டால்.....

**நிருபர்** : போதும்! போதும்! புரிந்து கொண்டோம். நீங்கள் நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் மொரார்ஜி தேசாய் ஆர்.டி.ஓ.வாக இருந்தபோது லஞ்சம் வாங்கினார் என்று ஊருக்கு ஊர் பேசினீர்கள்! ஜெயப்பிரகாஷ் ஒரு செல்லாத நோட்டு! மொரார்ஜி ஒரு கள்ள நாணயம்! ஜனதா ஒரு கொள்ளைக்கூட்டம்! என்று நீங்களும் உங்கள் துணைப் பொதுச்செயலாளரும் பேசிய பேச்சுக்கள் உங்கள் ஏடுகளிலேயே வெளிவந்திருக்கிறதே; இப்போது நீங்கள் ஜனதாவுடன் உறவுகொண்டு ராஜ்யசபைத் தேர்தலில் ஓட்டுப் போட்டீர்களே; அது எப்படி?

**எம்.ஜி.ஆர்.** : நான் அப்போதே தெளிவாகச் சொல்லியிருக்கிற கருத்தை எல்லாப் பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கின்றன. அரசியலில் எதுவும் நடக்கும். உறவுகளில் எந்த மாற்றமும் ஏற்படலாம் என்று நான் சொல்லி நான்கைந்து மாதங்கள் ஆகின்றனவே - அதை நீங்கள் பத்திரிகைகளில் படிக்கவில்லையா?

**நிருபர்** : அரசியலில் எந்த மாற்றமும் நடக்கலாம் என்று நீங்கள் சொன்னதைப் போலத்தானே கருணாநிதியும் சொல்லியிருக்கிறார். அது எப்படி இந்திரா காங்கிரசின்

உறவை அவர் நாடுகிறார் என்று எடுத்துக்கொள்ள முடியும்?

**எம்.ஜி.ஆர்.** : நான் சொன்னது எனக்கு காப்பிரைட் அதை எப்படி அவர் சொல்லலாம்?

**நிருபர்** : கருணாநிதியின் பேச்சுக்களைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

**எம்.ஜி.ஆர்.** : நான் அரசியல் தெரிந்தவனில்லை. ஆனால் அரசியலைப் பார்த்தவனாக இருக்கலாம். அப்படிப்பட்ட பொது வாழ்க்கையில் இதுபோன்று நிதானமிழந்து பேசும் தலைவரை நான் பார்த்ததே இல்லை.

**நிருபர்** : பாண்டிச்சேரி தேர்தலின்போது உங்களுக்கும் இந்திரா காங்கிரசுக்கும் கூட்டு இல்லை! அப்போது தேர்தல் பிரச்சாரத்துக்கு இந்திரா காந்தி ஹெலிகாப்டரில் வருவது யார் வீட்டுப் பணம்? அவர் சொந்தப் பணமா? என்று செங்கல்பட்டு போன்ற இடங்களில் நடைபெற்ற உங்கள் கட்சி மாநாடுகள், கூட்டங்களில் முழங்கினீர்கள்! நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டு ஏற்பட்டபோது இந்திரா காந்தி தனி விமானங்களிலும், ஹெலிகாப்டரிலும் அரசாங்கச் செலவில், தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்றபோது தாங்கள் வாயே திறக்காமல் வரவேற்று வழியனுப்பினீர்கள்! மந்திரிகளைக் கட்சியில் உள்ள உறுப்பினர்களே தேர்ந்தெடுப்பார்கள் என்றீர்கள் - நடக்கவில்லை! தி.மு.க. விலிருந்து வருகிற யாராயிருந்தாலும் விசாரணை செய்து வடிகட்டி ஆய்வு செய்து தான் கட்சியில் சேர்த்துக் கொள்வேன் என்றீர்கள்! அப்படி எந்த விசாரணையும் நடத்தவில்லை. 1972-ஆம் ஆண்டிலேயே அறிவித்தீர்கள், சத்யா ஸ்டூடியோவுக்கு அரசாங்கத்திடம் குத்தகைக்குப் பெற்ற இடத்தை உடனடியாகத் திருப்பித் தரப்போகிறேன் என்று! அந்த அறிவிப்பு எல்லாப் பத்திரிகையிலும் வந்தது! ஆனால் ஆறு வருடமாகியும்

திருப்பித் தரவில்லை! தி.மு.க.வில் இருந்தபோது கிளைக்கழகச் செயலாளர்களில் இருந்து தலைமை வரையில் உள்ள எல்லோருடைய கணக்குகளையும் காட்ட வேண்டுமென்றீர்கள் - ஆனால் அ.தி.மு.க. ஆரம்பித்து ஆறு வருடமாகியும் இன்னும் உங்கள் கட்சியில் உள்ளவர்களின் கணக்குகளை நீங்கள் காட்டச் சொன்னதாகவே தெரியவில்லை - இப்படிப் பலவற்றைக் கேட்க முடியும்! முதல்வர் அவர்களே! இதெல்லாம் நிதானமான பேச்சு என்று நீங்கள் கருதுகிறீர்களா?

**எம்.ஜி.ஆர்.** : நிதானம் என்றால்...

**நிருபர்** : போதும்! போதும்! கருணாநிதி, நிதானம் தவறி என்ன பேசுகிறார்? என்ன பேசினார்?

**எம்.ஜி.ஆர்.** : எத்தனை ஆண்டு சிறை அல்லது தண்டனை என்று தீர்ப்பு வழங்க வேண்டியவர் நீதிபதி! ஆனால் கருணாநிதி; தானே நீதிபதியாகி தீர்ப்பு வழங்கிக் கொண்டு சிறைக்குப் போகிறேன் என்கிறார்.

**நிருபர்** : சில வாரங்களுக்கு முன்பு சென்னையில் பேசிய கூட்டத்தில் நீங்களே கூறியிருக்கிறீர்களே; கருணாநிதி சிறைக்கு போவது உறுதி என்று? அப்படி ஒரு முதல்வர் நீதிபதியைப்போல் தீர்ப்பளிக்கலாமா? அதுமட்டுமல்ல இரண்டு நாளைக்கு முன்பு நிதியமைச்சர் மனோகரன் பேசியிருக்கிறாரே - கருணாநிதியை வேலூர் சிறையில் வைப்பதா? பாளையங்கோட்டை சிறையில் வைப்பதா? என்று யோசித்துக் கொண்டிருப்பதாகப் பேசியிருக்கிறாரே; இப்படியெல்லாம் மந்திரிகள் பேசும்போது ஒரு எதிர்க்கட்சித் தலைவர் தனது பேச்சில் சிறை செல்லத் தயாராயிருக்கிறேன் என்று கூறுவது எப்படித் தவறாகும்?

**எம்.ஜி.ஆர்.** : நீதி என்பது வேறு - நீதிமன்றம், சிறை என்பவைகள் வேறு - நீதியை நீதிமன்றம் தீர்ப்பாக வழங்கி - அதனால் நீதி என்கிற தன்மையானது தனது உயிரான ஒரு குறிக்கோளை அடைவதற்கான முயற்சியில்.....

**நிருபர்** : (அது போகட்டும்) முதல்வர் அவர்களே! தி.மு.கழகத்திலிருந்து கருணாநிதியை விலக்குவது என்பதற்கு சந்தர்ப்பம் உண்டா?

**எம்.ஜி.ஆர்.** : அதுபற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் தவறு செய்தவர்கள் தலைமைப் பொறுப்பில் இருக்கும்வரை இணைப்பு என்பது இல்லை. நாவலர் இங்கு இருக்கிறாரே என்று கேட்கலாம் - அதெல்லாம் வழக்குப் போட்டு முடிந்த பிறகுதான் தெரியும்.

**நிருபர்** : நாவலர் தவறு செய்தார் என்று கூறுகிற சர்க்காரியாவின் அறிக்கை மட்டும் வழக்குப் போட்டு முடிந்தபிறகுதான் தெரியும் என்கிறீர்கள்! ஆனால் இதே இலக்கணம் கருணாநிதிக்கு மட்டும் பொருந்தாதா? - அவர் தவறு செய்தவர் என்று கூறுகிறீர்களே; எப்படி? அதுவும் வழக்குப் போட்டு முடிந்த பிறகுதானே தெரியும்? ஒருவேளை உங்கள் கட்சியினர் மீதுள்ள சர்க்காரியா வழக்குகளை மட்டும் லேசாக நடத்தி அவர்கள் தவறு செய்யாதவர்கள் என்று அறிவித்து விடுவீர்களா?

**எம்.ஜி.ஆர்.** : காலம் வரும்போது இதற்குப் பதில் சொல்லப்படும்.

(நிருபர்கள் மௌனம்; ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு மனதுக்குள் சிரித்துக் கொள்கிறார்கள்.)

**எம்.ஜி.ஆர்.** : ஒரு முக்கிய அறிவிப்பு! ராணி ஆறுமுகம் கொலை வழக்கு பற்றி மீண்டும் விசாரணை நடத்தப்படும்.

**நிருபர்** :மகிழ்ச்சி! வரவேற்கிறோம்! உங்கள் ஆட்சியில் நடந்த பிரேமா கொலை வழக்கு என்ன ஆயிற்று? ஏதாவது துப்பு துலங்கியதா? மதுரையில் உங்கள் கட்சி எம்.எல்.ஏ. ஒரு பெண்ணை கற்பழிக்க முயன்றதாக ஒரு செய்தி வந்ததே; அந்த வழக்கு என்ன ஆயிற்று? ஹைகோர்ட்டில் தண்டிக்கப்பட்ட கொலைக்குற்றவாளிகள், போலீசார் கண்ணில் படாமல் தலைமறைவாக இருந்து கொண்டே உங்கள் அமைச்சர்களோடு சேர்ந்து திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்களே; அந்த

தண்டிக்கப்பட்ட அ.தி.மு.க.காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

**எம்.ஜி.ஆர்.** : ராணி வேறு! பிரேமா வேறு! ராணி என்பது ஒரு பெண்! பிரேமா என்பது வேறொரு பெண்! ராணி ஆறுமுகம் இறந்தது கருணாநிதி ஆட்சியில்! பிரேமா இறந்தது என்னுடைய ஆட்சியில்! இரண்டு சாவுகளிலும் மர்மங்கள் இருக்கலாம்! ஆனால் ஒன்றைச் சொல்லுவேன்; மர்மம் என்பது என்ன? நீங்கள் நான் நடித்த மர்மயோகி என்ற படத்தைப் பார்த்திருப்பீர்கள் என்று நினைப்பதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

(நிருபர்கள் மீண்டும் மௌனம்)

**எம்.ஜி.ஆர்.** : நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பதினோரு மாத ஆட்சியில் ஊழல் ஒழிக்கப்பட்டு விட்டது.

**நிருபர்** : எப்படி என்று விளக்க முடியுமா?

**எம்.ஜி.ஆர்.** : இதோ விளக்குகிறேன். சர்க்காரியா விசாரணையில் புகார்கள் நிரூபிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள நாவலர்தான் என் கட்சிக்கு அவைத்தலைவர்.

நித்த நித்தம் லஞ்சம் வாங்குகிற ஒரே மந்திரி சத்தியவாணிமுத்துதான் என்று ஜனாதிபதியிடம் புகார் கொடுத்தேனே; அந்த அம்மையார்தான் டெல்லி ராஜ்ய சபாவில் எங்கள் கட்சிக் குழுவுக்குத் தலைவர்! தி.மு.க. ஆட்சியில் மருத்துவக் கல்லூரி அட்மிஷனுக்காக நாவலரிடம் லஞ்சம் கொடுக்கப்போய் பிடிபட்ட ஒருவர் எங்கள் கட்சியின் பிரதம பேச்சாளர்களில் ஒருவர்! அவரோடு உதவியாகப் போய், லஞ்சத்தில் பங்கு பெற்ற ஒருவர், இன்றைக்கு என் அமைச்சரவையில் புதிய அமைச்சர்! லஞ்சம் வாங்கியதாக வெங்கடாத்திரி கமிஷன் முன் குற்றவாளியாக நிறுத்தப்பட்ட மற்றொருவரும் என் அமைச்சரவை சகாவாக இருக்கிறார்! அதனால்தான்

அந்தக் கமிஷனையே கலைத்துவிட்டோம். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்படாத பகுதிகளில் வேண்டியவர்களுக்கு ஆதாயம் தர, வேண்டுமென்றே புயலால் பாதிக்கப்பட்ட பகுதி என்று தவறாக அறிவித்து காண்ட்ராக்ட்டுகளில் பெரும் ஊழலுக்கு வித்திட்டவர்களும் என்னோடுதான் இருக்கிறார்கள், அதற்கு ஒரு பொது விசாரணை நடத்தப்படும் என்று ஒத்துக் கொண்டு, மறுநாள் முடியாது என்று அறிவித்து விட்டோமே சட்டசபையில்; அது ஊழல் ஒழிந்ததற்கு அடையாளமில்லையா? மதுரை மாவட்டத்தில் எங்கள் மந்திரியொருவரின் தம்பிக்கு எந்தத் தொழிலும் இல்லை. இரண்டொரு மாதங்களுக்கு முன்பு அவர் இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள சொத்து வாங்கியிருக்கிறார் - இது ஊழல் ஒழிப்புக்கு உதாரணமில்லையா? கடுமையாக மதுவிலக்கை அமல்படுத்தி கடல்போலக் கள்ளச்சாராயத்தை பெருக்கெடுக்கச் செய்து அதில் அகப்படுகிறவர்களை, ஆளுங்கட்சி எம்.எல்.ஏக்கள் தலையிட்டுக் காப்பாற்றி வருகிறார்களே; இதைவிட ஊழல் ஒழிப்பு வேறு என்ன இருக்க முடியும்? இப்படி என்னால் ஊழல் ஒழிப்புக்கு எடுத்துக்காட்டாக ஏராளமான ஆதாரங்களைத் தரமுடியும்.

(நிருபர்கள் சிலர் கொட்டாவி விடுகிறார்கள்.)

**எம்.ஜி.ஆர்.** : ஒன்றைச் சொல்லுகிறேன். கோவையில் மேலவை உறுப்பினர் வீராசாமி பேசும்போது நான் நாற்பது லட்ச ரூபாய் லஞ்சம் வாங்கியதாகப் பேசியிருக்கிறார். அவர் மீது கிரிமினல் வழக்கு போடப்படும்.

**நிருபர்** : அப்போது நீங்கள் கட்டாயம் கோர்ட்டுக்குப் போகத்தானே வேண்டும்! குறுக்கு விசாரணைக்குப் பதில்களை அளித்துதானே ஆகவேண்டும்.

**எம்.ஜி.ஆர்.** : அதுபற்றி சட்ட நிபுணர்கள் கலந்து ஆலோசிக்கப்படுவார்கள்.

**நிருபர் :** பார்லிமெண்டரி செயலாளர்களுக்கு பணிகள் பிரிக்கப்பட்டு விட்டதா?

**எம்.ஜி.ஆர். :** (புன்னகை)

**நிருபர் :** சென்னை நகரில் வீடுகளுக்குக் காய்கறி விற்பனை செய்யும் திட்டத்தைத் தொடங்கினீர்களே; அதன் முடிவு என்ன?

**எம்.ஜி.ஆர். :** காய்கறிகள் அழுகக்கூடிய பொருள்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? அதுபோல அந்தத் திட்டமும் அழுகிவிட்டது.

**நிருபர் :** டெல்லியில் உள்ள தமிழக அரசின் பிரதிநிதியாக அதிகாரியல்லாத ஒருவரை நியமித்திருக்கிறீர்கள்! வீட்டு வசதி வாரியத்துக்கும் அவ்வாறே அதிகாரியல்லாத ஒருவரை நியமித்துள்ளீர்கள்! இது இப்படியே விரிவடைந்து சீப் செகரட்டரியாகவும் அதிகாரியல்லாத ஒருவரை நியமிக்கும் நிலை வருமா?

**எம்.ஜி.ஆர். :** வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இன்னும் எத்தனையோ புதுமையான நடவடிக்கைகளும் புதிய அறிவிப்புகளும் உங்களைக் குழப்புவதற்குத் தயாராக இருக்கின்றன.

நிருபர்கள் விடைபெற்றுக் கொள்கிறார்கள். பேட்டி முடிந்த பேரானந்தமுடன் முதல்வர் ஓய்வு கொள்ளப் போகிறார்.

உடன்பிறப்பே, முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரனின் நிருபர்கள் பேட்டியைப் படித்திருப்பாய் என்று நம்புகிறேன். இல்லையேல் அதனை ஒருமுறை படித்துப் பார்த்துவிட்டு மீண்டும் இந்தக் கடிதத்தைப் படி! சுவை மிகையாகும்!

அன்புள்ள,

மு. க.

(31-05-1978)

# 567. நீ எனக்குத் தரும் பிறந்த நாள் பரிசு!

**உடன்பிறப்பே,**

ஐம்பத்தி நான்கு ஆண்டுகள் என் வாழ்க்கையில் உருண்டோடிவிட்டன. பதினாலாவது வயதிலேயே இந்தி எதிர்ப்புக் கொடியேந்தி பொதுவாழ்வில் புகுந்துவிட்ட காரணத்தால் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் ஊருக்கு உழைக்கும் கட்டை என்ற அளவில் உன்னைப் போன்ற உடன்பிறப்புகளுக்கு மத்தியில் இருந்திடும் வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்.

இளமைப் பருவம் முதல் இந்தக் காலம் வரையில் எதிர் நீச்சலே என் வாழ்க்கை வரலாறாகிவிட்டது. எனக்கு மட்டுமல்ல; பெரியாரின் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணாவின் குறிக்கோளையும், மனதார ஏற்றுக்கொண்டு அதற்கென உண்மையாகப் பாடுபடுகிற எவருடைய வாழ்க்கையும் எதிர்நீச்சல் போடும் காரியத்திற்கு விதிவிலக்கல்ல!

பொதுவாகவே வாழ்க்கையில் ஒரு போராட்டம் என்று கூறுகிறோம். அதிலும் நமது நாட்டில் உள்ள அடித்தள, நடுத்தர மக்களின் வாழ்க்கை எப்படி வாழ்வது? என்ற கேள்விக் குறியின் அடிப்படையில் எழுந்த முடிவடையாத போராட்டமாகவே இருந்து வருகிறது. நடுத்தர மக்கள் - அடித்தள மக்கள் - அவர்களை விடக் கீழான நிலையில் - உயிரை; உடலில் கட்டி வைக்கத் திணறிக்கொண்டிருக்கிற நிலையில் - பெரும் பகுதி மக்கள், தங்களின் வாழ்க்கைப் போராட்டத்தை இடைவிடாது நடத்திக் கொண்டுதானிருக்கிறார்கள்!

இத்தகைய மக்களின் நல்வாழ்வுக்காகவும், தன்மான உணர்வு தழைத்திடும் சமுதாயத் தருவின் கிளைகளாக, வேர்களாக, விழுதுகளாக, அந்த மக்கள் விளங்கிடவும் - மனிதரில் நீயுமோர் மனிதன்! மண்ணன்று! என்ற உணர்ச்சி ஒவ்வொரு உள்ளத்திலும்

ஏற்றப்படவும் - மொழித் துறையில், கலை இலக்கியத் துறையில், பொருளாதாரத் துறையில், அரசியல் துறையில், ஆற்றிட வேண்டிய பணிகளுக்காகவும், ஈடுபட வேண்டிய அறப்போர்களுக்காகவும், பெற்றிடவேண்டிய விழுப்புண்களுக்காகவும், தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்களின் பட்டியலில் இடம் பெறும் மிகப் பெரிய பேறு இந்த எளியோனுக்கும் கிட்டியது. எனவே இளமைப் பருவமானாலும் - வாலிபப் பருவமானாலும் - ஐம்பத்தி நான்கை முடித்துக்கொண்டு இன்னும் எவ்வளவு ஆண்டுகள் - அல்லது மாதங்கள் - அல்லது நாட்கள் - எஞ்சியிருக்கிறதோ; அப்படி மிச்சமுள்ள இறுதிப் பருவமானாலும் சரி - எந்நேரமும் களத்தில் நிற்கிற ஒரு போர் வீரனுடைய வாழ்க்கையாகவே என் வாழ்க்கை அமைந்து விட்டது!

என்னைப்போல இன்னும் பலரது வாழ்க்கை அமைந்திருப்பதை மறந்துவிட்டு நான் இதைக் கூறவில்லை. அப்படியொரு வாழ்க்கை அமைந்தவர்களையெல்லாம் நினைத்துப் பார்த்துக் கொள்வதால்தான், என் வாழ்க்கையில் நீக்கமற நிறைந்து கிடக்கும் நிம்மதியற்ற நாட்களையெல்லாம் நான் எண்ணி எண்ணி அலட்டிக் கொள்ளாமல் அந்த நிம்மதியற்ற தன்மையையும் என் இலட்சியப் பயணத்துக்கேற்ற ஒரு வாகனமாக ஆக்கிக் கொள்கிறேன். இந்தத் திறனையும், வலிவையும் எனக்குத் தொடர்ந்து தந்து கொண்டேயிருப்பது என் ஆருயிர் உடன்பிறப்பே! நீயல்லவா?

என்னை அழித்துவிட்டால் கழகத்தை அழித்து விடலாம் என்று தவறான கணக்குப் போட்டுக் கொண்டு மிக மிகத் தவறான கணக்குப் போட்டுக் கொண்டு என்மீது பாய விடப்பட்ட அடக்குமுறைப் புலிகள் எத்துணை! எத்துனை! என் மீது மோதவிடப்பட்ட அவதூறு எனும் மதயானைகள் எத்துனை! எத்துணை! என்னை விழுங்கிப் புடைக்கட்டும் வயிறு என்பதற்காகச் சுற்றிவிடப்பட்டுள்ள வழக்குகள் என்னும் மலைப்பாம்புகள்தான் எத்துணை! எத்துணை!

மிகக் கொடியோனாக என்னைத் சித்தரித்து மிரட்டும் வழக்கு! இழிமகனாக என்னைச் சித்தரிக்க இதுவரை போடப்பட்டுள்ள வழக்கு! இனியும் தொடுப்பதற்கு சிந்தித்துக்கொண்டிருக்கிற வழக்கு இவ்வளவும் ஏன்! எதற்காக? எந்த நோக்கம் நிறைவேற?

உடன்பிறப்பே! அந்த உண்மை உனக்குத் தெளிவாகப் புரிகிற காரணத்தாலேயே; நீ என்னையும் கழகத்தையும் ஒன்றாகவே இணைத்துப் பார்க்கிறாய்! நான்தான் கழகம் என்ற நினைப்பிலே அல்ல! என்ன கொடுமைச் செய்தாலும் என்னைக் கழகத்தை விட்டுப் பிரிக்க முடியாது என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறாயே; அதைத்தான் குறிப்பிடுகிறேன். இதேபோன்ற உறுதிகொண்ட இலட்சக்கணக்கான உடன்பிறப்புகள் இந்தக் கழகத்தில் இருக்கிறார்கள் என எண்ணிடும்போது இமயமே மோதினாலும் அதனைப் பஞ்சுபோல் ஊதிவிடக் கூடிய தெம்பு பிறப்பது இயல்புதானே!

இதோ; திருமதி இந்திரா காந்தி அம்மையாரைக் கொலை செய்யச் சதி செய்தோமென்றும், முயற்சித்தோமென்றும் என்மீதும், பேராசிரியர் அவர்கள் மீதும், சாதிக் மீதும், ப.உ.ச. மீதும் - எங்களைச் சேர்த்து 135 கழகக் கண்மணிகள் மீதும்; ஆம் -உன்னைப்போன்ற உடன்பிறப்புகள் மீதும் மாநில அரசு, 15 சட்டப் பிரிவுகளில் பயங்கர வழக்கொன்றைத் தொடுத்து ஜூன் 12-ஆம் நாள் நீதிமன்றத்துக்கு வா என்று சம்மனும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மனச்சாட்சியைத் தூக்கித் தூர வைத்துவிட்டு, இன்றைய ஆட்சியாளர்கள், கழகத்தைத் தொல்லைக்கு ஆளாக்க வேண்டுமென்று தொடுத்துள்ள வழக்குதான் இதுவென்று அரசியலில் பாலபாடம் பயின்று கொண்டிருப்பவர்கள்கூட புரிந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

கட்சியின் கிளை அமைப்பின் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைவர், பொதுச்செயலாளர் உள்ளிட்ட தலைமைப் பொறுப்பிலே இருப்பவர்கள் ஆகிய அனைத்து மட்டத்திலும் உள்ளவர்களை இணைத்து இப்படியொரு பயங்கர வழக்கை இதுவரையில் எந்த அரசும் எந்தக் கட்சியின் மீதும் தொடுத்தது கிடையாது.

சோதனைகளையும் வேதனைகளையும் சாதனைகளாக்கிக் கொள்வதற்குப் பழக்கப்பட்ட நாம், வழக்குகளைக் கண்டு வளைத்தேடி ஓடப்போவதில்லை, ஒண்டி ஒளிந்து ஒதுங்குவதற்கு!

ஜூன் திங்கள், நான் பிறந்த திங்கள்! பிறந்த நாள் ஜூன் மூன்றாம் நாள் என்பதை நான் மறந்தாலும் மறந்து விடுவேன்! இந்திராவை கொலை செய்ய முயற்சித்தேன் என்றும் சதி செய்தேன் என்றும் பொய்யானதொரு வழக்கு முடுக்கி விடப்பட்டு, அதற்காக நான் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டிய அந்த ஜூன் 12-ஆம் நாளை நான் மறக்க முடியுமா? அது என் வாழ்க்கை ஏட்டிலும் பொதுச்செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச்செயலாளர் உள்ளிட்ட 135 உடன்பிறப்புகளின் வாழ்க்கை ஏட்டிலும் மிக முக்கியமான நாள் அல்லவா?

உடன்பிறப்பே! தூங்கும் புலியை இடறினாலே அதன் விளைவு விபரீதமாகும்! நீயோ தூங்காப் புலி! நீ இடறப்படுகிறாய்! அதன் விளைவு, அண்ணா வளர்த்த கழகத்துக்கு அண்ணா வழியிலேயே வெற்றிகளைக் கொணர்ந்து குவித்திடுவதாக அமையட்டும்!

ஏதேதோ எழுதிக்கொண்டு போகிறாயே; இந்த ஆண்டு பிறந்த நாளுக்கு எனக்கென்ன கடமை? அதைச் சொல் என்று நீ நினைப்பதை நான் தெரிந்துகொள்ளும் கலை பயிலாதவனா என்ன?

கழகத்திற்குப் புதிய அமைப்புகள்! பொறுப்புக்குப் புதிய தேர்வுகள்! போட்டிகள்! வெற்றிகள்! தோல்விகள்! ஒரு சில இடங்களில் கசப்பு உணர்வுகள்! எந்த நிலையிலும் நிதானம் இழக்காமல் கழகக் கட்டுப்பாடு காப்பேன் என்ற உறுதியினை நீ மேற்கொள்வதும் - காழ்ப்பு உணர்ச்சிகளை நெஞ்சிலிருந்து நீக்கி விடுவதும்தான் நீ எனக்குத் தரும் பிறந்தநாள் பரிசு!

அந்தப் பரிசைத்தான் நீ கொண்டு வருவாய் என நான் எதிர்பார்க்கிறேன். பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உனக்கு என்றைக்கும் இந்த எளியவனின் இதயத்தில் இடம் உண்டு என்பதை நீ அறிவாய்!

உன் தியாகத்திற்குத் தலைவணங்குகின்றவன் நான்!

உன் தொண்டுக்குப் பாராட்டுப்பண் இசைக்கின்றவன் நான்!

துரோகம் செய்துவிட்டுப் போனவர்களைக் கூட வாழ்க என்றே வாழ்த்திக் கொண்டிருக்கும் நான்;

என் தூய உடன்பிறப்பே! உன்னை நான் என் நெஞ்சில் அழியாத ஓவியமாகத் தானே எழுதி வைத்திருப்பேன்! அதனால்,

நீ பொறுப்பில் இருப்பினும் பொறுப்பில் இல்லாதிருப்பினும் பொறுப்பினை மறவாமல் கழகம் காத்திடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

அந்த நம்பிக்கைப் பேரொளியாக நீ என்னை வாழ்த்தினாலே போலும்; அதைவிடப் பிறந்த நாளுக்கு பெரும் பரிசு வேறெதுவுமில்லை!

உனக்குச் சரி! கழகத்திற்கு? என்று அடுத்த கேள்வியைத் தொடுப்பாய்! நானும், கழகமும் உன்னிடம் ஒரு ஒற்றுமை உணர்வைத்தான் விரும்புகிறோம்!

அத்துடன் கழகத்திற்கென்று நீ தனியாகத் தரவேண்டியது - வழக்கம்போல் வாரி வழங்குகின்ற காணிக்கைதான்!

வழக்குகளைக் கடந்து, தனது வளர்ச்சியையும் பெருக்கிட வேண்டும் கழகம்!

நிதிப் பற்றாக்குறையால் பணிகள் தடைபடுதல் கூடாதல்லவா?

அதற்கென ஒரு வேண்டுகோள் - நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்களும் என் பிறந்த நாளன்று கழகத்திற்கு காணிக்கையாக, ரூபாய் நூறுக்குக் குறையாமல் அளித்திட வேண்டும். அதிகமாக அளிப்பவர்கள் தடுக்கப்பட மாட்டார்கள். போக்குவரத்துச் செலவைக் குறைத்துக்கொண்டு, ஊரில் இருந்தவாறே அனுப்புகிறவர்களும் போற்றுதற்குரியவர்களே! மாலைகள், கைத்தறி ஆடைகள் வாங்கும் செலவைக் குறைத்து, கழகத்திற்குச் சேரும் நிதியைப் பெருக்கிட வேண்டுகிறேன்.

அவரவர்கள் தரும் நிதியை ஒரு கவரில் வைத்து அதன்மீது அளிப்போர் பெயரும் தொகையும் எழுதித் தந்திடவேண்டும். மாலை வாங்கும் பணத்தை மிச்சப்படுத்தினால் பத்து ரூபாய் கழக நிதி தரலாம் என்பதை மற்ற உடன்பிறப்புகள் மறந்துவிட வேண்டாம்.

பிறந்த நாள் கொண்டாடுவது வேறு எதற்காகவும் அல்ல! ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது சில சமூகப் பணிகளுக்காக நிதி

சேர்க்க ஒரு வாய்ப்பாகப் பயன்பட்டது! இப்போதும் என் பிறந்த நாள், என் ஊணோடும் உயிரோடும் கலந்து நிற்கும் கழகத்தின் வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நிதிக் கோரிக்கை!

உடன்பிறப்பே, தமிழ்ச் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக - ஏற்றத்தாழ்வற்ற சமதர்மக் கொள்கைக்காக - மக்களாட்சியின் மாண்பு காக்கப்படுவதற்காக - இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்பதற்காக - மத்தியில் கூட்டாட்சியும் மாநிலங்களில் சுயாட்சியும் மலர்வதற்காக -அண்ணா வழியில் அயராது உழைக்க உன்னுடன் இணைந்து ஓயாது பணியாற்ற வேண்டுமென்ற என் அவாவினைத்தான் இந்தப் பிறந்த நாளிலும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(1-06-1978)

# 568. புதிய பொதுக்குழு கூடுகிறது!

**உடன்பிறப்பே,**

என் பிறந்த நாளை யொட்டி நேரில் வந்து வாழ்த்துக் கூறியும், தந்திகள் - கடிதங்கள் வாயிலாக வாழ்த்துக் கூறியும், கழக நிதி அளித்தும் அன்பைப் பொழிந்த உன் போன்ற உடன்பிறப்புகள் அனைவருக்கும் நன்றி குவிக்கின்றேன். நான் மேற்கொண்டுள்ள பணியில் என்னை ஊக்கப்படுத்தும் வண்ணம் மேடைகளில் பாராட்டியும், ஏடுகளில் என்னைப் பற்றிய நிறை குறைகளை எழுதியும் பிறந்த நாள் வாழ்த்துக் கூறிய தமிழ்ச் சான்றோர், அரசியல் தலைவர்கள் எல்லார்க்கும் தலை தாழ்த்தி வணக்கம் தெரிவிக்கிறேன். நிருபர்கள் என்னைச் சந்தித்துப் பிறந்தநாள் செய்தி கேட்டபோது நான் என்ன கூறியிருக்கிறேன் என்பதை நீ ஏடுகளில் படித்திருப்பாய்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, இராஜாஜி, காமராஜர், காயிதே மில்லத் ஆகியோர் தமிழ்நாட்டுக்குக் காட்டிய வழியில் என் தொண்டு தொடரும் எனக் குறிப்பிட்ட நான்; இந்தியாவைப் பொறுத்தவரையில் சமதர்மச் சமுதாயமும் பகுத்தறிவுப் பேரொளியும் பரவிட வேண்டுமென்ற பொதுவான அவாவினைத் தெரிவித்து அரசியல் ரீதியாக மத்தியில் கூட்டாட்சியும், மாநிலங்களில் சுயாட்சியும் அமைய, தி.மு.க. தீவிரப் பணிகளில் இறங்குவதற்கான திட்டங்களைத் தீட்டுமென்றும் தெரிவித்துள்ளேன். மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பு காக்கவும், தமிழர் நலன் காக்கவும், தமிழ் மொழி காக்கவும், தி.மு.கழகம் என்றென்றும் அறப்போர்க் களத்திலே நிற்கின்ற சிப்பாயாகவே விளங்குமென்றும் அறிவித்துள்ளேன்.

இந்த அறிவிப்புகள் எதுவும் புதிதுமல்ல - நான் ஒருவன் தன்னந்தனியாக எடுத்துச்சொன்ன கொள்கை

கோட்பாடுகளுமல்ல! ஏற்கனவே பெரியார் பாதையிலும், அண்ணா வழியிலும் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இந்த ஜனநாயகப் பாசறை மேற்கொண்டுள்ள கொள்கை கோட்பாடுகள்தான்! அவற்றினின்றும் பிறழாது பயணத்தை நடத்துவேன் என்பதுதான் பிறந்தநாள் செய்தியாகும்! நமது கழகக் கொள்கைகளையும், குறிக்கோளையும், திட்டங்களையும் அடிக்கடி எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டுமென்பதற்கு ஏற்ற வகையில் கிடைத்திடும் நாட்களில் ஒன்றாகத்தான் என் பிறந்த நாளும் அமைந்துள்ளது. மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டிய அந்த நாளில் இலங்கையில் மீண்டும் அவதிக்கும் அடக்குமுறைக்கும் ஆளாக்கப்படுகிற தமிழ்ச் சமுதாயத்தினரை எண்ணி நான் கண்கலங்கத்தான் வேண்டியிருந்தது. ஆம்; நம் கழகத்தின் இதயமே, இலங்கையில் தமிழர்க்கு எந்த இன்னலும் நேரிடக் கூடாது என்றுதான் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. உலகு முழுதும் பரவிக் கிடக்கின்ற தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் தி.மு.க. திகழ்கிறது. அந்த நம்பிக்கை, கூனிப் போகவோ, குறுகிப் போகவோ - தி.மு.க. ஒருநாளும் இடமளிக்காது.

இன்று கழகம் எதிர்க் கட்சிதான்! ஆளுங் கட்சியாக இருந்து ஒரு கட்சி எதிர்க் கட்சியாக மாறுகிறபோதுதான் உண்மையான நண்பர்கள் யார்? ஒதுங்கிவிடுகிற சந்தர்ப்பவாதிகள் யார்? என்பதை உணர்ந்து கொள்ளமுடியும் - அந்த வகையில் இன்று கழகம், எதிர்க் கட்சியாக இருப்பது பலரைப் பற்றிய படிப்பினையைப் பெற்றுக் கொள்வதற்குக் கிடைத்த வாய்ப்பு என்று முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. அவர்கள் குறிப்பிட்டது எத்துணைப் பொருத்தமானது என்பதை நீயும் நானும் எண்ணிப் பார்த்திடத் தவறவில்லை.

அதற்காக அவர்களைப் பற்றியே எண்ணிக் கொண்டும், அவர்களது நடவடிக்கைகள், பேச்சுக்கள் இவை குறித்தே கவலைப்பட்டுக் கொண்டும் இருந்தால் கழகத்தின் வேகமான பயணம் தடைப்படும். எனவே நடைப்பயணம் நடைபெற நீ தடந்தோள் தட்டிடவேண்டும்.

வருகிற 18-ஆம் நாள் மதுரையில் நமது புதிய பொதுக்குழு கூடி, தலைமைக் கழக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க இருக்கிறது. தேர்தலுடன் முடியாமல் நமது கழகக் கொள்கைகளின் வெற்றிக்கான தீர்மானங்களையும் அந்தப் பொதுக்குழு, வடித்தெடுத்து வழங்கும்.

இந்தியாவின் தென்கோடி முனையில்; ஆம்; நம் அருமைத் தமிழகத்தில் எழுப்பிய எந்த முதல் முழக்கமும் வீண் போனதில்லை. வெற்றித் தாமதமாகக் கிடைத்திடினும் விதைத்த விதை மண்ணுக்குள்ளேயே மக்கிப் போனதில்லை. வெற்றித் தரு வாகத்தான் அது வளர்ந்திருக்கிறது.

வெள்ளையனை எதிர்த்து முதல் முரசு கொட்டியதும் தமிழகம்தான்! வீரபாண்டியக் கட்டபொம்மன்தான்!

வெள்ளையன் ஆதிக்கம் அகன்ற பிறகு தமிழகத்தை நோக்கி இந்தி மொழி ஆதிக்கப் பெருவெள்ளம் புகுந்தபோது அதைத் தடுத்து நிறுத்தப் பெரும் போர் நிகழ்த்திய வரலாறு நமது வரலாறுதான்! 1938-ஆம் ஆண்டு ஏதோ ஒரு சிறு கிளர்ச்சி என்று அகில இந்திய அரசியல்வாதிகளால் விமர்சிக்கப்பட்ட இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, இன்றைய தினம் இந்தி பேசாத மக்கள் அனைவரது பிரச்சினையாகவும் ஆகிவிட்டிருக்கிறது. நெருக்கடி காலத்திலே கூட நாடாளுமன்றத்தில் பேசிய எனது நண்பர் மனோகரன் அவர்கள், இந்திப் பிரச்சினையைத் தமிழ் நாட்டில் கருணாநிதி ஒருவன்தான் கிளப்பி விடுகிறான் என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? உடன்பிறப்பே! உனக்குத் தெரியும்! கருணாநிதி ஒருவன்தான் கிளறிவிடுகிறான் என்ற தகவல் தவறானது - இந்தித் திணிப்புக்கு எல்லாத் திசைகளிலும் பேரெதிர்ப்பு உருவாகியிருக்கிறது. ஆனால் அது வெறும் பேரளவு எதிர்ப்பாக இல்லாமல்; திணிப்பு இல்லை என்ற திரைமறைவில் - இந்தியை வேகமாகப் பரப்புகிற சதிச் செயலைச் சூழ்ந்தெதிர்க்கத் திட்டங்கள் தீட்டப்பட்டாக வேண்டும்.

மத்தியில் கூட்டாட்சி - மாநிலங்களில் சுயாட்சி என்பது குறித்து எத்தனையோ ஆண்டுகளாக எத்தனையோ கட்சியினர் பேசினர் எழுதினர். தீர்மானங்கள் தீட்டினர். ஆனால் தமிழகத்தில் நாம்தான் அதற்கென அறிஞர் குழு அமைத்து, அதனையொட்டி ஆட்சிமன்றத்திலேயே மாநில சுயாட்சித் தீர்மானத்தையே நிறைவேற்றி அதற்கு வடிவம் கொடுத்தோம். ஐந்தாறு ஆண்டுகட்கு முன்பு நமது சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேறியபோது அது குறித்து கவனத்தைத் திருப்பவும் மறுத்தவர்கள், இன்று அதற்களிக்கும் மதிப்பினையும் நாடு கண்டு கொண்டுதானிருக்கிறது. மாநில சுயாட்சி குறித்து நமது எதிர்கால ஆக்கப் பணிகள் என்ன என்பது பற்றியும் புதிய

பொதுக்குழு தீர்மானங்களை நிறைவேற்றித் திட்டங்களை வகுக்கும்.

எதிர்க்கட்சி என்ற முறையில் நமக்கு ஏராளமான கடமைகள் இருக்கின்றன. அந்தக் கடமைகளை நிறைவேற்ற முடியாமல் நாம் திசை திருப்பப்பட்டாலும் அந்தச் சோதனையையும் தாங்கிக்கொண்டு நாம் கொண்டுள்ள குறிக்கோளுக்காக நம்மை நாமே ஒப்படைத்துக் கொள்ளவும் பின் வாங்காது - எவ்வித இழப்புகளுக்கும் தயாராக - இருவண்ணக் கொடியை உயர்த்திப் பிடிப்போம்!

உயர்க் கொள்கைகள் நிறைவேற உயிர்த் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை என்று சூளுரைக்கும் விதத்தில்தான் ஜூன் மூன்றாம் நாள் காலை முதல் மாலை வரை கழகக் கண்மணிகள் ஆயிரமாயிரவர் அணிவகுத்தார்கள். இவர்களிருக்க பயமேன்? என்ற உள்ளத் துணிவு எப்படி ஏற்படாமலிருக்கும்?

தமிழ்நாட்டு மக்கள் - அந்தத் தமிழ்நாட்டு மக்களிலேயே தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக நாளெல்லாம் இமை கொட்டாது விழிப்புடனிருந்து உழைத்துவரும் கழகம் - அடித்தள மக்கள், பாட்டாளிகள், நடுத்தர வர்க்கத்தார் நல்வாழ்வுபெற உறுதியெடுத்துக் கொண்டுள்ள கழகம் - தமிழ்மொழி காக்கும் பாசறையாக அமைந்துள்ள கழகம் - ஜனநாயகம் போற்றும் கோட்டமாகத் திகழும் கழகம் - மாநில உரிமைகள் நசுக்கப்படாமல் இருந்தால்தான் இந்திய ஒருமைப்பாடு அர்த்தமுள்ளதாக இருக்க முடியும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திடும் கழகம் -

உடன்பிறப்பே, அந்தக் கழகத்தின் இதயம் போன்ற தலைமைப் பொதுக் குழுவும், தலைமைச் செயற் குழுவும் ஒருங்கிணைந்து கூடுகின்ற நேரத்தில் நமது கழகம் மேற்கொண்டுள்ள கொள்கைக் கோட்பாடுகள் வெற்றி நடைபோடப் போற்றத் தகுந்த திட்டங்களைத் தீட்டிட ஆழமானக் கருத்துக்களுடன் மதுரைக்கு வந்திடுவாய் என எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(6-06-1978)

# 569. அபாய அறிகுறிகள்! அரணைப் பலப்படுத்துவோம்!!

உடன்பிறப்பே,

நமது முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் பெரியார் பெயரையும் அண்ணா பெயரையும் ஒரு நாளைக்கு ஓராயிரம் தடவையாவது உச்சரித்துக் கொண்டு அந்த மாபெரும் தலைவர்களின் கொள்கை, கோட்பாடுகளுக்கு குழித் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

டெல்லியில் ஜெகஜீவன்ராம் பிறந்த நாள் விழாவில் நான் பேசினேன். என்னுடைய தமிழ்ப் பேச்சு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அந்தப் பேச்சு, இந்திப் பேசும் தாழ்த்தப்பட்ட வடநாட்டு மக்களையெல்லாம் அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத்தில் உறுப்பினர்களாக வர வைத்திருக்கிறது

இவ்வாறு முதலமைச்சர் பேசியிருக்கிறார், சென்னை நிகழ்ச்சி யொன்றில்! அ.தி.மு.க. உறுப்பினர் அட்டைகள் இந்தியிலும் அச்சடிக்கப்படும் என்று அமைச்சராகவும், அ.தி.மு.க. செயலாளராகவும் உள்ள ஒருவர் பத்திரிகைகளுக்கு அறிவித்திருக்கிறார். அந்த அறிவிப்புக்கு மேற்கொண்டு விளக்கம் அளிக்கும் போது மலையாளம், கன்னடம், தெலுங்கு போல இந்தியும் சகோதர மொழிதான் என்று அவர் தெளிவு(!) படுத்தி அந்தச் செய்தி எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

கன்னடமும் களி தெலுங்கும்

கவின் மலையாளமும் துளுவும்

உன் உதிரத்துதித் தெழுந்தே

ஒன்று பல ஆயிடினும் ஆரியம்போல்

உலக வழக் கழிந் தொழிந்து

சிதையா வுன் சீரிளமைத் திறம்வியந்து

செயன்ன மறந்து வாழ்த்து துமே!

என்றுதான் மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரனார் தமிழுக்கு வாழ்த்துக் கூறியிருக்கிறார். தமிழின் சகோதர மொழிகளாக மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு போன்ற மொழிகள்தான் மொழி ஆராய்ச்சியாளர்களாலும், தமிழ் அறிஞர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டு உணர்த்தப்பட்டு வருகிறதே அல்லாமல், இந்தியும் சகோதர மொழிதான் என்று அ.தி.மு.க. அமைச்சர் இப்போது வெளியிட்டுள்ள கருத்தாழமிக்க (?) கண்டுபிடிப்பை, இதுவரையில் யாரும் வெளியிட்டதே இல்லை.

இந்தி, ஆதிக்க மொழியாகத் தன்னை ஆக்கிக் கொள்ள அரும்பெரும் முயற்சிகளை மேற்கொண்டு, தெரு வழியாகச் சத்தியமாக உள்ளே நுழைய மாட்டேன் என்று கூறிக்கொண்டே கொல்லைச் சுவர் ஏறிக் குதித்துத் தமிழர் நலனைக் களவாடத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில் ஆ! என் பிரிய சகோதரா! என்ற அந்த மொழியைக் கட்டித் தழுவுவதற்கு இன்றைய ஆளுங்கட்சிக்குத் திடீரென அக்கறை பிறந்த காரணமென்ன!

சகோதர மொழிகளாக இருக்கிற தமிழோ - மலையாளமோ - கன்னடமோ - தெலுங்கோ ஒன்றையொன்று ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்றும் மொழி வழி மாநிலக் கட்டுக்கோப்பில் அவை ஆட்சி மொழிகளாகவும் அதே நேரத்தில் சிறுபான்மை மொழிக்காரர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் தன்மையிலும் விளங்கிட வேண்டுமென்று நாம் நீண்ட காலமாகக் கொள்கை கொண்டிருக்கிறபோது, ஆதிக்க மொழியான இந்தியைச் சகோதர மொழி என்று கூறுவது, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் செயலாகவே இருக்கிறது!

இன்னொரு அமைச்சர் இந்திப் பிரச்சினை குறித்து மொரார்ஜிக்கு எழுதிய கடிதத்தில் மொழிப் பிரச்சினையைத் தெளிவுபடுத்துங்கள் என்று குறிப்பிட்டதோடு நிற்காமல், இங்குள்ள கட்சிகள் அதனைப் பிரச்சினையாக்கிக் கொண்டிருக்கின்றன; அது எந்தக் கட்சியென்று உங்களுக்குத் தெரியுமென்றும் அதே கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார் என்பதை எல்லா ஏடுகளும் வெளியிட்டுள்ளன.

உடன்பிறப்பே, அ.தி.மு.க. மேலிடத்துத் தலைவர்கள் இந்திப் பிரச்சினையில் எத்தகைய நிலையற்ற போக்குக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட என்ன சான்று தேவை!

இந்திப் பிரச்சினையை எந்தக் கட்சி கிளப்புகிறது என்று உங்களுக்கு தெரியுமென்று பிரதமருக்கு மடல்!

இந்திப் பேசுவோர் ஏராளமானவர்கள் அ.தி.மு.க. உறுப்பினர்களாகி வருகின்றனர் என்று முதல்வர் சொற்பொழிவு!

அ.தி.மு.க. உறுப்பினர் அட்டைகள் இந்தியிலும் அச்சடிக்கப்படும். அது கன்னடம், மலையாளம், தெலுங்கைப் போல் சகோதர மொழி!

இவ்வளவையும் கூறிவிட்ட பிறகு, இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம் என்று அ.தி.மு.க.வினர் கூறுவதற்கும் - இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று மத்திய அரசினர் கூறுவதற்கும் - இடையிலே ஏதோ ஒரு மர்ம இழை ஓடுவதாகவே நமக்குத் தெரிகிறது.

உடன்பிறப்பே, அனைத்து இந்தியக் கட்சி என்பதால் உறுப்பினர் அட்டைகளை இந்தியிலும் அச்சியற்றுகின்றனர் போலும்! அதேபோல அனைத்துலக எம்.ஜி.ஆர். ரசிகர் மன்ற உறுப்பினர் அட்டைகள், இந்திய மொழிகளில் மட்டுமன்றி பிரெஞ்சு, ஆங்கிலம், சீனம், சிங்களம் போன்ற உலக நாடுகளின் மொழிகளில் கூட அச்சியற்றப்படலாம்! அது அவர்களின் கட்சி விவகாரம் - ரசிகர் மன்ற விவகாரம்!

ஆனால், ஆட்சிப் பொறுப்பில் இருந்துகொண்டு அ.தி.மு.க. அமைச்சர்கள், தங்களின் பேச்சால், செயலால் - ஆதிக்கம் செலுத்தத் துடித்து நிற்கும் இந்தி மொழியைத் தமிழுக்குச் சகோதர மொழி என்று நிலை நாட்டப் பார்ப்பது மன்னிக்க முடியாத குற்றம்!

உடன்பிறப்பே, இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் இன்றுள்ள தமிழக ஆட்சியாளர்கள் வெறும் வேடதாரிகளே என்பது மிகத் தெளிவாகப் புரிகிறதல்லவா?

அந்தக் கட்சியில் உண்மையிலேயே இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கக் கூடிய - இந்தியை சகோதர மொழியென வர்ணிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாத - ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒரு சில மேலிடத் தலைவர்கள் இருக்கிறார்கள்; நான்

மறுக்கவில்லை! அவர்களை யாரென நான் அறிந்து மனத்திற்குள் அவர்களைப் பாராட்டிக் கொண்டுமிருக்கிறேன். என் செய்வது பதவித் திரையால் அல்லவா அவர்தம் உணர்வுகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

ஒன்று உறுதியாகப் புரிகிறது; இந்தித் திணிக்கப்பட மாட்டாது என்று சொல்லிக்கொண்டே, இந்தியைத் தமிழகத்தில் வேர்விடச் செய்ய மத்திய அரசு துணிந்து விட்டது. அதற்கான காரியங்களும் விரைவுபடுத்தப்படுகின்றன. இங்குள்ள மாநில அரசும் - இந்தித் திணிப்புதான் கூடாது என்று கூறிக் கொண்டே மத்திய அரசின் மாய்மாலத்திற்குத் தமிழ் மக்களை இரையாக்கப் பார்க்கிறது.

ஒரு சாதாரண உதாரணம் போதுமே - இந்தியைப் பரப்ப, இந்திப் படங்கள் ஏராளமாகப் படையெடுக்கின்றன! மக்களைக் கவர்ந்திழுத்து அந்தப் படங்களுக்கு ஆதரவு பெருகி இந்தி மோகத்தைப் பரவலாக்க, அந்தப் படங்களில் தணிக்கை அதிகாரிகள் மிகத் தாராளமாக இருக்கின்றனர். தமிழ்ப் படங்கள் தவிர, மற்ற மொழிப் படங்கள் அனைத்தும் தணிக்கை அதிகாரிகளின் அமோக ஆதரவைப் பெறுகின்றன. தமிழ்ப் படங்களோ திட்டமிட்டுத் தணிக்கை அதிகாரிகளால் குலைக்கப்படுகின்றன என்று அண்மையில் திரைப்படக் குழுவினர் கூடிப் பேசி அறிவித்த கருத்துக்களையும் அலட்சியப்படுத்தி விட முடியாது!

வரலாறே அப்படித்தான் - ஆளுகின்றவர்களின் மொழிதான் ஆதிக்கம் செலுத்துகிற மொழியாக வடிவெடுக்கும்!

அந்த நிலைதான் இன்று தமிழ் மொழிக்குத் தீங்காக முளைத்திருக்கிறது. தமிழ் மக்களுக்குக் கேடாக விளைந்திருக்கிறது. இந்த அபாய அறிகுறியை அலட்சியப்படுத்தாமல் நமது அரணைப் பலப்படுத்தி பிறமொழி ஆதிக்க முற்றுகையை முறியடிக்கத் தயாராக வேண்டியது நமது நீங்காக் கடமை!

அன்புள்ள,

மு. க.

(7-06-1978)

# 570. இன்னுமா இன அழிப்பு வேலை? உணர்வு படைத்தோர், உடன் செயல்படுக!

**உடன்பிறப்பே,**

இதிகாசங்கள், புராணங்கள் வாயிலாக, நமது மக்களை வீரமற்றவர்களாகவும், விவேகமற்றவர்களாகவும் ஆக்கிடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டவர்களை ஈரோட்டுப்படை அரண் அமைத்து தடுத்தது. அறிவுக்கு ஒவ்வாத கதைகளை ஆண்டவன் பெயராலும், அவதாரங்களின் பெயராலும் பரப்பியவர்களால் தமிழர்களின் இலக்கியப் பெருமை, வரலாற்றுப் பெருமை அனைத்தும் மறைக்கப்பட்டன. மறைந்துகிடந்த அந்த மாணிக்கங்களைத் தமிழ்ப் புலவர்கள் வெளிக் கொணர்ந்தனர். அந்தப் பெருமைமிகு புலவர் பெருமக்களால் தோண்டி எடுக்கப்பட்ட தமிழ் மக்களின் கருவூலங்கள், தமிழர்களின் தொன்மைக் காலச் சிறப்பையும், வீர வரலாற்றையும் எவ்வாறு விளக்குகின்றன என்பதனைப் பண்டிதர்களல்லாத பாமர மக்களிடமும் பரப்பிய பெருமை பெரியாரின் தானைத் தளபதியாம் பேரறிஞர் அண்ணா அவர்களையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களையும் சாரும்!

அவர்கள் வழி நின்று பழந்தமிழ் இலக்கியங்களைப் பரப்புவதின் மூலம் இன்றைய தமிழ் மரபு விழிப்புக்கொண்ட மரபாகவும், வீரங்கொள் மரபாகவும் ஆக வேண்டுமென்பதே நமது குறிக்கோள். அந்தக் குறிக்கோள் நிறைவேறவே நமது கழகம் இலக்கிய அணி ஒன்றைத் துணை அமைப்பாகக் கொண்டு அந்த முனையில் பணியாற்றி வருகிறது. நமது பணி எவ்வளவு இன்றியமையாதது என்பதற்கும் - நமது பணியினால் யார் யாருக்கு மன உளைச்சல் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கும் ஆதாரம் தேடி எங்கும் அலைந்திட வேண்டிய அவசியமில்லை. சில நாட்களாகத் தினமணி இதழில் எழுதப்பட்ட புறநானூறு பற்றிய தொடர் கட்டுரையே போதுமானது.

புறநானூறு குறித்துப் புகழ்பாடப் போவது போலப் போக்குக்காட்டி, பாலில் நஞ்சினைப் பக்குவமாகக் கலந்திடும் வேலையைச் செய்து முடித்திருக்கிறார்கள்.

தமிழ் மன்னர்கள் தானே ஒருவரோடொருவர் மோதிக் கொண்டார்கள்? இதில் பெருமைப்பட என்ன இருக்கிறது? தோற்றுவிட்ட நாட்டின் மீது வெற்றி கண்ட மன்னர்கள் வெறித் தாக்குதல் நடத்தி அந்த நாடுகளையே அழித்தொழித்தனர், இது என்ன பண்பாடு?

குளிரால் வாடிய மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகன் என்ற மன்னன், தன் இல்லத்து மயில் வாடுவதைப் பற்றிக் கவலைப்படாமல் பரத்தையர் இல்லம் சென்றது போற்றத்தக்க பண்பா? தமிழ் மன்னர்களும் தமிழ்ப் புலவர்களும் மது அருந்தினர் என்பதற்குச் சான்றுகள் புறநானூறு நூலில் காணப்படுகின்றனவே!

இப்படியெல்லாம் தினமணிக் கட்டுரையாளர் எழுதிப் புறநானூற்றின் மீது புழுதிவாரித் தூற்றி, அடுத்து அகநானூறு பற்றியும் எழுதப் போவதாக அறிவித்துள்ளார்.

தமிழர்கள் தங்களுக்குள்ளாகவே போரிட்டுக் கொண்டது பாராட்டுக்குரிய வீரமா? என்று கேட்கிறார். பல்வேறு நிலப் பகுதிகளைத் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டிருந்த மன்னர்களிடையே போர் மூண்டது என்பது தமிழ் நாட்டில் மட்டுமல்ல; உலகெங்கும் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள்தான்! ஏன்; இன்றளவும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள்தான்! சூதாட்டத்தில் தோற்றுவிட்ட நாட்டைத் தன் சகோதரர்களே ஆளட்டும் என்று துரியதன் கூட்டத்தாரிடம் நாட்டை விட்டுவிடக் கூடிய பெருந்தன்மை தருமனுக்கே வரவில்லையே! அவர்களை ஊக்கப்படுத்திய கண்ணனுக்கே வரவில்லையே! அதுபற்றி விமர்சிக்க, தினமணி கட்டுரையாளரின் பேனா முன்வருமா? வராது! பேகன், தன் மனைவியை விடுத்து இன்னொருத்தியை நாடியது குற்றமெனப் பூதக் கண்ணாடி கொண்டு ஆராய்ந்து அதற்காகப் புறநானூற்று இலக்கியத்தின் மீதே சேறு வாரி வீசுகிறவர்; குளத்தில் நீராடிக் கொண்டிருந்த பெண்களின் சேலைகளைத் திருடி, மரத்தில் அமர்ந்து குழலூதிக் கும்மாளமிட்ட கோபால கிருஷ்ணன் பற்றி விமர்சிப்பதற்குப் பேனாவைத் திருப்பியதுண்டா? கோபிகைகள் என்ன; பிறன் மனைவி இராதையென்ன - பாமா என்ன - ருக்மணி என்ன இந்த

விளையாட்டுக்களை நடத்தியது மனிதன்கூட அல்ல தெய்வம் நடத்தியது; ஆம்; கிருஷ்ணாவதாரம் நடத்தியது! அது தினமணிக் கட்டுரையாளருக்குத் தித்திக்கும் காட்சிகள் போலும்!

பகைவர் நாட்டையே அழிப்பது பண்பாடாகாது என்று பதைக்கிறாரே; கட்டுரையாளர் - இராமாயணத்தில் அனுமக் கடவுள் இலங்கையையே எரித்தது எந்த வகையில் நியாயம் என்று நிலை நாட்டப் பார்க்கிறார்? சோமா, சுரா போன்ற பானங்களை அருந்துவதே தேவர்களின் பழக்கம் - அந்தப் பழக்கத்தின் அடிப்படையில் இராமாயணத்தில் இராமன் குழுவினர் கூட மது அருந்தினர் என்று வான்மீகி கூறுகிறாரே; தினமணிக் கட்டுரையாளர் அதனை மறைப்பதில் காட்டுகிற ஆர்வத்தை புறநானூற்று இலக்கியத்தில் குறிப்பிடுகிற தேறல் எனும் ஒரு வகை மதுவைப் பற்றிக் குறிப்பிடாமலிருக்கக்காட்டவில்லையே என்ன காரணம்?

வாலி சுக்ரீவன் மோதலில், மறைந்திருந்து வாலியை இராமன் கொன்றது நியாயமென நிலை நாட்டுகிறவர்கள் தமிழக வரலாற்றில் காணப்படும் வீரமிக்க நிகழ்ச்சிகளை இகழ்ந்துரைப்பானேன்?

முதுகில் காயம்பட்டுப் போரில் மடிவதை இழிவாகக் கருதிய வீரம் புறநானூற்றுக் காலத்து வீரம்! தந்தையும், கணவனும் களம்பட்ட செய்தி கேட்டும் பதறாமல், தன் இளம் மகனையும் போருக்கு அனுப்பிய தாயொருத்தியின் வீரகதையை விளக்குவது புறநானூறு! தமிழ் மன்னர்களுக்கிடையே போர் மூளக் கூடாதென்று இரு சாராரையும் அமைதிப்படுத்திடப் புலவர்கள் முயற்சி மேற்கொண்ட செய்திகளை அறிவிப்பது புறநானூறு!

அந்த வீர இலக்கியத்தைப் பற்றி எஸ். வையாபுரிப் பிள்ளையே கூட பின்வருமாறு கூறுகிறார்.வையாபுரிப் பிள்ளையே கூட என்பதற்கான பொருள் பலருக்கும் விளங்குமென்றே நம்புகிறேன்.

நாடு நலம் பெற வேண்டுமாயின் - பழங்கால நல்லுணர்ச்சிகளை நாம் மீண்டும் பெறுதல் வேண்டும். நாட்டுக்காக உயிர் விடுதல் என்பது பழங்கதையாகப் போய் விடக்கூடாது. அந்த வீர உணர்வுகளை மீண்டும்பெற, புறநானூற்றுச் செய்யுட்களைவிட உற்ற துணை நமக்கு வேறு யாதும் இல்லை. வையாபுரியாரே, புறநானூற்றின் சிறப்புப் பற்றி இவ்வாறு கூறியிருக்கிறார்.

நமக்கு, இலக்கியங்களே வரலாற்றுக் குறிப்புக்களாக இருக்கின்றன. அந்தக் குறிப்புகளையும் அழுக்குப்படுத்த தினமணிக் கூட்டம் மிக்க திறமையுடன் செயல்படத் தொடங்கியுள்ளது.

அவர்களது முயற்சி எழுச்சியுற்ற நமது இனத்துக்கு மீண்டும் கேடு சூழ்வதற்காகவே அரும்பியிருக்கிறது!

இனப் புலவர்கள் - இலக்கிய அணியினர் இன்றே அந்தச் சதியை முறியடித்திடத் தங்கள் அறிவு, ஆராய்ச்சி, ஆற்றல் அனைத்தையும் கருவிகளாக்கிக் கொண்டு களம்புகத் தயாராக வேண்டும். இல்லையேல் இதிகாசங்களைப் பரப்பி, நமது இனத்தை அழிக்கத் துணிந்தவர்கள், நமது இலக்கியங்களையும் இழிவுபடுத்தி ஆழப் புதைத்து விடுவார்கள்! இது அலட்சியப்படுத்தப்படக் கூடிய எச்சரிக்கை அல்ல; உணர்வு படைத்தோர் உடன் செயல்படுக!

அன்புள்ள,

மு. க.

(11-06-1978)

நன்றி : நம்நாடு (11-06-1978)

# 571. தூயவனின் நினைவு நாளில்!

**உடன்பிறப்பே,**

ஆறு ஆண்டுகள் ஆகின்றன நமது அருமை உடன்பிறப்பு தளபதி பிரதாபச்சந்திரனை இழந்து! தி.மு.கழகத்தின் துணையோடும் தூய ஒத்துழைப்போடும், வெற்றி பெற்று மத்திய அரசில் அமைச்சராக்கி விட்டிருந்த ஒருவரின் மறைமுகத் தூண்டுதலோடு, கழகச் சார்புடைய தொழிற் சங்கத்திற்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைக் கிளர்ச்சியின் தொடர்பாக, ஒருநாள் சூழ்ச்சிக்காரர்களால் சூழ்ந்து கொள்ளப்பட்டு, குருச்சேத்திரப் போரில் அபிமன்யூ கொல்லப்பட்டது போல வீழ்த்தப்பட்டான் பிரதாபச்சந்திரன்! வீடணனால் காட்டிக் கொடுக்கப்பட்ட இந்திரஜித்தன் சாய்ந்தது போலவும் - சுக்ரீவனால் காட்டிக் கொடுக்கப்பட்ட வாலி சாய்ந்தது போலவும் - அந்த வாலிப வைரம் வெறியர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு நொறுக்கி எறியப்பட்டது. அந்தத் தீரனின் குடும்பத்திற்குக் கழகமும், கழகச் சார்புடைய தொழிலாளர் அமைப்புகளும் தங்களால் இயன்ற உதவியினைச் செய்து நன்றிக் கடனை ஆற்றின என்றாலும் அவனது இழப்பினால் பெருக்கெடுக்கும் கண்ணீர் நதி கரை புரண்டல்லவா ஓடிக் கொண்டிருக்கிறது!

கழகத்தைத் தாங்கும் தூண் என்று சொல்லத்தக்க உருவம்! உயரம்! வடிவம்! உள்ளம் - எல்லாமே அமைந்தவன்தான் மறைந்துவிட்ட அந்த மாவீரன்!

அவன் நினைவுநாள் நிகழ்ச்சியை நடத்துகிற நேரத்தில், அவனுக்குக் கவிதாஞ்சலி இசைக்கிற நேரத்தில், அவன் ஈடுபட்டு இன்னல்களுக்கு நடுவே நடத்திய நமது தொழிற்சங்கப் பேரியக்கத்தைக் கட்டிக் காக்கும் சூளுரையை அனைவரும் மேற்கொண்டாக வேண்டும்.

நமது தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை வளரும் வலுவுடனும், அசைக்க முடியாத கட்டுக்கோப்புடனும் இன்று

விரிவடைந்து கொண்டிருக்கிறது. இன்று தமிழகத்தில் நடைபெறும் தொழிலாளர் விரோத அரசைத் தொழிலாளர்கள் அடையாளம் கண்டுகொண்டு விட்டார்கள். தங்கள் கோரிக்கைகளுக்காகப் போரிடும் தொழிலாளர்களை அறவே நசுக்குவது - அவசரச் சட்டம் போட்டு மிரட்டுவது - தொழிற்சங்கத் தலைவர்களுடன் சமரசம் என்ற நாடகத்தை நடத்தி, அவர்களை விருந்துக்கும் அழைத்துவிட்டு, மறுநாள் அவர்களைக் கேவலமாகக் கேலி பேசுவது, வழக்குகளை திரும்பப்பெற முடியாது என்று வஞ்சினம் கூறுவது - ஆளுங்கட்சியின் ஆட்களைக் கொண்டு அடிப்பது உதைப்பது - இத்தகைய கொடுமைகளின் ஊற்றுக் கண்ணாக இன்றுள்ள எம்.ஜி.ஆர். அரசு விளங்குகிறது!

மிகப் பிரபலம் வாய்ந்த - தீவிரம் பாய்ந்த நெஞ்சுடைய தொழிற்சங்கத் தலைவர்கள் இருக்கின்ற கட்சிகள்கூட, தேர்தல் உறவுகளை மனதில் எண்ணிக் கொண்டு, உமிழ்ந்த வாய்க்குச் சர்க்கரை கொட்டும் திருப்பணியில் உழன்று கொண்டிருக்கின்றன.

இந்திரா காந்தியின் அவசரச் சட்டங்கள் தொழிலாளர் குரல் வளையை நெரிப்பதாகும் என்று இடிமுழக்கம் செய்த தொழிலாளர் தலைவர்கள் சிலர், அதேபோன்ற ஒரு சட்டத்தைத் தொழிலாளர்கட்கு எதிராக எம்.ஜி.ஆர். ஆட்சி பிரகடனம் படுத்தியிருப்பதைக் கண்டிப்பதுபோல உதட்டை அசைத்தார்களே தவிர, அந்தச் சட்டத்தை திரும்பப்பெற வேண்டுமென்று வலியுறுத்தும் அழுத்தமான மனப்போக்கை வெளிக்காட்டிக் கொள்ள முன்வரவில்லை. என் செய்வது, அதற்குள்ளாக மாநகராட்சித் தேர்தல் - மதுரையிலே வந்துவிட்டதே, உரக்கப் பேசினால் உறவல்லவா கெட்டுப் போய்விடும்!

மற்றவர்கள் வாய்மூடிக் கிடக்கட்டும்; அதற்காகக் கழகத்தின் தொழிலாளர் பேரவை வாளாவிருந்திட இயலாது! தொழிலாளர் பேரணியைத் திரட்ட வேண்டும் - அரசின் தொழிலாளர் விரோதப் போக்கினை எதிர்த்திடும் மற்றக் கட்சிகளின் சார்புடைய தொழிற்சங்க அமைப்புகளுடன் தொடர்புகொண்டு தொழிலாளர்களின் சக்தியை ஒன்று திரட்டிக் காட்ட வேண்டும்.

நியாயமான கோரிக்கைகளுக்காக அறப்போர்க் கிளர்ச்சிகளில் ஈடுபடும் எந்தத் தொழிற்சங்கங்களுடனும் துணை நின்று

தொழிலாளர் ஒற்றுமையைக் காட்டிடத் தி.மு.க. தொழிற்சங்கத் தலைவர்கள் தவறியதே கிடையாது.

யார் முதலில் முன் நின்று குரல் கொடுப்பது என்பதல்ல பிரச்சினை! அக்கிரமச் சட்டங்களைக் கண்டித்து யாரும் குரலே கொடுக்காமல் இருந்துவிட்டால், தொழிலாளர்கள் பொட்டுப்பூச்சிகளாக ஆக்கப்பட்டு விடுவார்கள். ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர் புலி வேஷம் போடுவதை நிறுத்த மாட்டார்கள்!

எனவே, பிரதாபச்சந்திரனின் மறக்க முடியாத இந்த நினைவு நாளில் தொழிலாளர்களின் சக்தியை ஒன்று திரட்டி ஒருமுனைப்படுத்தும் செயலில் நமது தொழிற்சங்கப் பேரவை ஊக்கத்துடன் ஈடுபட வேண்டும்.

பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தொழிற் சங்கங்கள்; அவை தவிர்க்க முடியாதவை என்று ஆகிவிட்ட போதிலும் நியாயமான தேவைகளையும், உரிமைகளையும் பெற கழகச் சார்புடைய தொழிற் சங்கம், எந்த ஒரு தொழிற் சங்க அமைப்புடனும் அணிவகுக்கத் தயாராக இருக்கிறது. அதேபோன்று, கழகப் பேரவையும் மற்ற அமைப்புகளின் துணையை வரவேற்கிறது!

இந்த அடிப்படையில் கழகத்தின் தொழிற்சங்கப் பேரவையின் அமைப்புகள் இருக்குமிடங்களில் எல்லாம் அவற்றில் தங்களை இணைத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள் நமது கழகத் தோழர்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தளபதி பிரதாபன் கண்ட கனவு நிறைவேற - தொழிலாளர் இயக்கத்தின் கொடியை உயரப் பறக்க விடுவோம்! அதுவே அந்த வீரத் திருமகனின் நினைவு நாளில் நாம் முழங்கிடும் சபதமாக அமையட்டும்.

அன்புள்ள,

மு. க.

(18-06-1978)

**நன்றி : நம்நாடு (18-6-1978)**

# 572. புயல் இருக்கலாம் - புழுதிக் காற்று கூடாது!

**உடன்பிறப்பே,**

பொதுக்குழு தீர்மானத்தையும், பொதுச்செயலாளர் பேராசிரியர் விடுத்துள்ள அறிக்கையையும் படித்திருப்பாய்! ஜூலை 1 சனிக்கிழமையும் ஜூலை 2 ஞாயிற்றுக்கிழமையும் நாடு முழுதும் பொய் வழக்குக் கண்டன நாள் பொதுக்கூட்டங்களை நடத்திட கழக அமைப்புகளின் பொறுப்பாளர்கள் இந்நேரம் தயாராகிக் கொண்டிருப்பார்கள் என்று எனக்குத் தெரியும். எந்தெந்த ஊர்களில் யார் யார் கலந்து கொண்டு விளக்கவுரையாற்றுகிறார்கள் என்ற ஏற்பாடுகளும் இத்தனை நாட்களுக்குள் முடிவு பெற்றிருக்கும். அந்தப் பட்டியலை மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்களைக் கலந்துகொண்டு உடனடியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தால் அந்த விபரங்களைக் கழக ஏடுகள் வாயிலாகவும் ஆதரவு ஏடுகள் வாயிலாகவும் அறிவிக்க வாய்ப்பாக இருக்கும்.

வழக்குகளில் கழகத் தலைவர்களையும், செயல் வீரர்களையும் இணைத்தே கழகத்தை ஒடுக்கிவிடலாம், ஒழித்துவிடலாமென்று இன்றுள்ள அரசு, தவறான ஆலோசகர்களிடம் கருத்துக்களைப் பெற்றுக் காரியமாற்றி வருகிறது. தமிழக அரசு மட்டுமன்றி மத்தியிலே உள்ள அரசு கூட, நெருக்கடி காலத்தில் தி.மு.கழகத்தின் மீது போடப்பட்ட வழக்குகள், விசாரணைகள் அனைத்துக்கும் இன்னமும் உயிர்கொடுத்து இயக்குவதிலே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது.

நெருக்கடி காலத்தில் கழகத்தின் மீது அரசியல் நோக்கத்துடன் வேண்டுமென்றே திட்டமிட்டுப் போடப்பட்ட வழக்குகள், விசாரணைகள் என்று மிகத் தெளிவாக மத்தியில் உள்ள ஜனதா கட்சித் தலைவர்கள் மேடைகளிலே முழங்கினார்கள். அவ்வாறே

பாதல் மீது போடப்பட்ட ஊழல் புகார் வழக்கு, பொன்னாண்டஸ் மீது போடப்பட்ட வெடிகுண்டு வழக்கு நெருக்கடி கால அடக்குமுறைகள் என்ற பட்டியலில் இணைக்கப்பட்டு ஜனதா அரசாங்கத்தினால் திரும்பப் பெறப்பட்டுள்ளன. நெருக்கடியை எதிர்த்தோரையும், எதிர்க் கட்சிகளையும் முன்பிருந்த மத்திய அரசு எவ்வாறெல்லாம் வேண்டுமென்றே பழி வாங்கிற்று என்பதைக் கண்டறிந்து இன்று பல கமிஷன்கள் அறிக்கைகளைத் தந்துள்ளன. ஆனால் ஜனநாயகம் காத்திடத் துணிந்து முதல் குரல் கொடுத்த நமது கழகம், ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டது மட்டுமல்ல; அவதூறுகள் பலவற்றுக்கும் திட்டமிட்டே உள்ளாக்கப்பட்டதை உலகமே அறியும். எனினும்; ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாகச் சொல்லப்படுகிற இந்த நாளிலும் தி.மு.கழகம், நெருக்கடிச் சட்டத்தை எதிர்த்ததற்கான பரிசைத் தொடர்ந்து பெற்றுக் கொண்டே வருகிறது!

கட்சியின் தொண்டர்களிலேயிருந்து, கட்சியின் தலைவர்கள் வரையிலே சேர்த்து - கொலை, சதி வழக்குகளிலே ஈடுபட்டார்கள் என்று குற்றம் சுமத்தி 135 பேரை நீதிமன்றத்திற்கு அழைக்கவும் 450 பேரை சாட்சிகளாகத் தயாரிக்கவும் ஒரு அரசு, அக்கறை எடுத்துக் கொள்கிறதென்றால்; இந்தக் கொடுங்கோன்மையை நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள மக்களுக்கெல்லாம் விளக்கியாக வேண்டியது நமது கடமையல்லவா?

ஜூலை மூன்றாம் நாள் அந்த வழக்கிற்காக 135 பேரும் நீதிமன்றம் வரவேண்டுமாம்! அடுத்த சம்மனும் வந்துவிட்டது. 135 பேர், நீதிமன்றம் செல்வதென்றால் நடந்து செல்வதைத் தவிர வேறு வழியென்ன? அண்ணா சாலை, அண்ணன் சிலையிலிருந்து புறப்பட்டு, அமைதியுடன் அண்ணன் வகுத்த நெறியைக் கட்டிக் காத்து அன்றைய தினம் நீதிமன்றம் செல்ல இருக்கிறோம்.

அதற்கு முதல் - ஜூலை ஒன்று, இரண்டு ஆகிய நாட்களில் நாடு முழுதும் நடைபெறுகின்ற நமது கண்டனக் கூட்டங்கள், பொதுமக்களுக்கு பொய் வழக்குப் போடும் அரசின் போக்கைக் சுட்டிக் காட்டட்டும்!

சர்க்காரியா அறிக்கை - மற்றுமுள்ள பழிவாங்கும் வழக்குகள் - எப்படி தயாரிக்கப்பட்டன? ஏன் தயாரிக்கப்பட்டன? என்ற

விபரங்களை வாரி வழங்கும் மேடைகளாக அந்த மேடைகள் அமையட்டும்!

கண்டனக் கூட்ட மேடைகளில் - மெல்லிய பூங்காற்று வீசாது; நானறிவேன்! புயல் வீசலாம்; ஆனால் புழுதிக் காற்று கூடாது! கனல் இருக்கலாம்; ஆனால் கண்ணியக் குறைவு தலைகாட்டக்கூடாது! வஞ்சகர் நோக்கத்தைப் படம் பிடித்துக் காட்டலாம்! ஆனால் வன்முறை துளியளவும் இடம் பெறலாகாது!

இதனை நெஞ்சில் நிறுத்தி,

நடத்திடுக கண்டனக் கூட்டங்களை!

அன்புள்ள,

மு. க.

(24-06-1978)

# 573. திரளட்டும் தொழிலாளர் அணி!

உடன்பிறப்பே,

கடமையைச் செய்வோம் உரிமையைப் பெறுவோம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் இதய முரசமாக இருக்க வேண்டுமென்று கழகம் கொள்கை வகுத்துக்கொண்டு தொழிலாளர் இயக்கங்களில் நீண்ட நாட்களாகப் பங்கு கொண்டு வருகிறது. தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து அவர்தம் வியர்வையிலே பன்னீர்க் குளியல் நடத்துகிற ஆதிக்க வர்க்கத்தையும் - தொழிலாளர்களைப் பகடைக்காயாக ஆக்கிக்கொண்டு தங்கள் சொந்த வாழ்வை உயர்த்திக் கொள்கிற ஒரு சில சுயநலத் தலைவர்களையும் - ஒரே நோக்குடன் கவனித்து அவர்தம் பிடியிலிருந்து தொழிலாளர் வர்க்கத்தை விடுவித்துத் தன்னலமற்ற தொழிற்சங்கத் தலைவர்களின் வழிநடத்துதலுக்கு ஊக்கம் கொடுத்து வருவதும் கழகத்தின் நடைமுறையாக இருந்து வருகிறது.

தொழிலாளர்கள் கோருவது சலுகைகள் அல்ல! உரிமைகள்! அந்த நாடிநரம்புகள் இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதார இருதயம் இயங்கவே இயலாது! ஆனால் நிலை என்ன? காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் - அவன் காணத் தகுந்தது வறுமையும் - பூணத் தகுந்தது பொறுமையுமா? என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கேட்கிறாரே; அந்தக் கேள்விக்கு விடை காணத்தானே தொழிலாளர் வர்க்கம் தோள் உயர்த்திட வேண்டியிருக்கிறது!

பொறுமையிழந்து போர்க்கொடி தூக்கி வன்முறைகள் தலையெடுத்து அமைதிக்குச் சாவு மணி அடிக்கப்படுகிற அமளிதுமளிகளைத் தி.மு.கழகம் வரவேற்கவில்லை! அதே நேரத்தில் அவர்களது முறையீடுகள், தேவைகள் உணரப்பட்டு அவர்கள் மரியாதையுடன் நடத்தப்பட்டு அவர்தம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஒரு அரசுக்கு உள்ள பொறுப்புகளைத் தட்டிக் கழித்துவிடக் கூடாது!

இதோ, காடுமேடு திருத்தி, கழனிகளில் உழன்று கடுங்குளிர் என்றும் கொடும் கோடையென்றும் பாராமல் நாளெல்லாம் உழைக்கின்ற நாட்டின் இதயநாடிகளான விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களைப் பழிவாங்கும் அரசின் போக்கினை எதிர்த்துப் பத்து நாட்களுக்கு மேலாக அறப்போர் நடத்தி வருகிறார்கள். வழக்குகளைக் காட்டி மிரட்டியே எதிர்க்கட்சிகளையும் எதிர்தரப்புக் கருத்துக்களையும் வளைய வைத்து விடலாம் என்று எம்.ஜி.ஆரின் அரசாங்கம் கருதுகிறது! வளைவது போலக் கூடத் தோன்றலாம் அவர்கள் கண்களுக்கு! ஆனால் ஒன்று! வில், வளைந்தால்தான் கணை வேகமாகப் பாயும்! அதையும் மறந்து விடக்கூடாது!

பஸ் போக்குவரத்து தொழிலாளர் பிரச்சினையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லையென்பதற்காக மீண்டும் அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் தொடங்கிட நாள் குறித்தார்கள். அந்தத் தொழிற் சங்கங்களில் உள்ள நமது கழகத்தாரிடம் நானும் பொதுச்செயலாளரும் பேசி, முதலில் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துங்கள்! வேலை நிறுத்தத்தில் ஈடுபடாதீர்கள் என்றுதான் அறிவுரை கூறினோம். அவ்வாறே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட தொழிற்சங்கத் தலைவர்களின் மனம் புண்படும்படியாக அமைச்சர்கள் நடந்து கொண்டார்கள். பிறகு ஒருவழியாக பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிந்தது. அதற்கிடையே வேலை நிறுத்தங்களைத் தடைசெய்யும் ஒரு அவசரச் சட்டத்தை எம்.ஜி.ஆர். அரசு, பிரகடனப்படுத்தியது! அனைத்துக் கட்சித் தொழிற்சங்கத் தலைவர்களும், அந்தக் கொடுமையான அவசரச் சட்டத்தை எதிர்த்தனர். அறிக்கைகள் விடுத்தனர். எம்.ஜி.ஆர். அவற்றைக் காதில் போட்டுக் கொள்ளாமலே எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் தன் தோட்டத்தில் விருந்து வைத்தார். அதில் தொழிற்சங்கத் தலைவர்கள், முதலமைச்சரின் அழைப்புக்கு மரியாதை கொடுக்க வேண்டுமேயென்ற நல்லெண்ணத்தில் கலந்து கொண்டனர். மறுநாள் ஒரு அமைச்சர் நேற்று இடிமுழக்கம் செய்த தொழிற்சங்கத் தலைவர்கள் இன்று எங்கள் எம்.ஜி.ஆர். வீட்டில் இட்லி முழக்கம் செய்கிறார்கள் என்று கேலி பேசினார்! கேலிகள் கிடக்கட்டும்! அது இந்த அமைச்சரவையின் தரத்தைக் காட்டுகிறது - அண்மையில் என்னைக்கூட ஒரு அமைச்சர் செருப்பால் அடித்தாலும் புத்தி போகாது என்று காரசாரமாக அறிக்கை மூலம்

விமர்சிக்கவில்லையா? அது அவர்தம் இயல்புக்கேற்ற வாசகம் - அமைச்சரவையின் இன்றைய அலங்கோலத்தின் படப்பிடிப்பு! நான் இதைவிடக் கேவலமான ஏச்சுப்பேச்சுக்களைத் தாங்கிப் பழக்கப்பட்டிருக்கிறேன்; பரவாயில்லை!

ஆனால் உடன்பிறப்பே! தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து விருந்தளித்துப் பேசிய பிறகும் வேலை நிறுத்தத் தடை என்னும் அவசரச் சட்டம் இன்னும் திரும்பப் பெறப்படவில்லை. இது தொழிலாளர்களின் தொண்டைக் குழியை நெரிக்கும் சட்டம் என்று அனைத்துக் கட்சியினரும் அறிவித்தாகி விட்டது. எனினும், அவசரச் சட்டம் தனது அகன்ற வாயைத் திறந்தபடியேதான் ஆட்டம் போடுகிறது!

இதனை எதிர்த்து நேரடியாகவே போராட எல்லாக் கட்சித் தொழிற்சங்கங்களும் இத்தனை நாள் பேரணி அமைத்திருக்க வேண்டும்!

ஆனால் மதுரை மாநகராட்சித் தேர்தல் உடன்பாடுகள் சில கட்சிகளுக்குச் சிக்கலை உருவாக்கியிருக்கலாம். அதற்காக, தி.மு.க. சார்புடைய தொழிற்சங்கப் பேரவையும் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்துவிட முடியுமா? ஆகவேதான் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அவர்கள் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். நாளை ஜூன் 25-ஆம் நாள் வேலை நிறுத்தத் தடை அவசரச் சட்டத்தைத் திரும்பப் பெறுமாறு ஆளுநரிடம் முறையீடு கொடுக்க சென்னையில் காலை 10 மணி அளவில் தொழிலாளர் ஊர்வலம் ஒன்று நடைபெறுகிறது.

அதற்குக் கிடைக்கும் பதிலைப் பொறுத்து, இந்த வேலைநிறுத்தத் தடை அவசரச் சட்டத்தைப் பற்றிய அடுத்த நடவடிக்கைகள், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் மூலம் தொடரும்! இதில் கட்சிச் சார்பற்று எல்லாத் தொழிலாளர்களும் கலந்துகொள்ளலாம்! ஏனெனில் இது தொழிலாளர் வர்க்கத்திற்காக எழுப்பப்படும் போர்க்குரல்!

நாளை திரளட்டும் தொழிலாளர் அணி!

அவசரச் சட்ட வாளைக் கீழே போடட்டும் அரசு!

அன்புள்ள,

மு. க.

(25-06-1978)

# 574. அஞ்சாமல் - கண்துஞ்சாமல் ஆற்றிடுக கடமை!

**உடன்பிறப்பே,**

மதுரையில் கூடி, என்னையும் பேராசிரியர் அவர்களையும் நண்பர் சாதிக்பாட்சாவையும் மீண்டும் இதே பொறுப்புக்களில் இருந்து தொடர்ந்து தொண்டாற்றுங்கள் என்று கூறிவிட்டாய்!

நமது கழகத்தின் பொதுக்குழுக்களிலே மிகப் பெரியது இப்போது அமைந்துள்ள பொதுக்குழு! ஒரு தடவை பொதுக்குழுவைக் கூட்டுவதென்றால் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் மாவட்டக் கழகமோ, அல்லது நகரக் கழகமோ ஆயிரக்கணக்கான ரூபாய் செலவிடத் தயாராக இருக்க வேண்டும். இதை எண்ணிப் பார்த்துத்தான் ஏற்கனவே நியமனத்தின் வாயிலாக அமைக்கப்பட்டு வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தலைமைச் செயற்குழு அமைய வேண்டுமென்று சட்ட திட்டக் குழு கருத்தறிவித்து, அந்தக் கருத்து தலைமைச் செயற்குழுவுக்கு ஏறத்தாழ நூறு பேர் அளவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழுவுக்கும் செயற்குழுவுக்கும் இன்றும் சிலரைப் பொதுச்செயலாளர், கழகச் சட்ட திட்டப்படி முறையாக நியமிக்கும் உரிமை பெற்றுள்ளார். அடிக்கடி கலந்து பேசி ஆக்கப்பணிகளை நிறைவேற்றத் தலைமை நிர்வாகக் குழு ஒன்றும் திருத்தப்பட்ட சட்ட திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. அந்தக் குழுவில், தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், பொதுச்செயலாளரால் நியமிக்கப்படும் துணைப் பொதுச்செயலாளர் - தலைமைக் கழகச் செயலாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டக் கழக செயலாளர்கள், மாநில அமைப்பாளர்கள் இடம் பெறுகிறார்கள்.

கட்சியின் பணிகள் விரைவாகவும் பரவலாகவும் ஜனநாயக முறையிலும் செம்மையாக நடைபெற நமது அமைப்பில் இத்தகைய சீரான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எழுநூறு பேர் அளவுக்கு உள்ள பொதுக்குழுதான் எல்லா அதிகாரங்களும் படைத்தது என்றாலும், அந்தக் குழு தலைமைச் செயற்குழுவுக்கும் - தலைமை நிர்வாகக் குழுவுக்கும் முறையான அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்து கழகத்தின் அன்றாட அலுவல்களும் - நிலைமைக்கேற்ப எடுக்கும் முடிவுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு கழகம் வலிவும் பொலிவும் பெற வழிவகை கண்டுள்ளது.

பொதுக்குழு உறுப்பினர்கள், தணிக்கைக் குழுவுக்கு மூன்று பேரையும், ஆட்சிமன்றக் குழுவுக்கு ஆறு பேரையும் தேர்ந்தெடுக்கக் காலை 10 மணி முதல் மாலை நாலரை மணி வரையில் வாக்களிக்கும் பணியில் ஈடுபட்டார்கள் என்றால் நமது கழகம் கட்டிக்காக்கும் ஜனநாயக மரபுக்கு அது, தலையாய எடுத்துக்காட்டல்லவா?

அருமை நண்பர் ஆசைத்தம்பி அவர்களால் ஒரு இடத்தில் தொடர்ந்து நீண்ட நேரம் உட்கார்ந்திருக்க முடியாது. அவர், அன்று ஆணையாளராகப் பொறுப்பேற்றுக்கொண்டு காலை முதல் மாலை முடிய அந்தப் பணியைத் தொய்வின்றி நிறைவேற்றிக் கொடுத்தார். எளிமையும், அதே நேரத்தில் எழுச்சியும் பொங்கிட மதுரை நகர், மதுரை மாவட்டங்களின் செயல்வீரர்கள் பொதுக்குழுக் கூட்டமும் அதனையொட்டிய சிறப்புக் கூட்டமும் நடைபெறத் தங்கள் பேருழைப்பை நல்கியிருக்கிறார்கள்.

மாலையில் நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில் மக்கள் வெள்ளமெனத் திரண்டிருந்தனர். இலட்சக்கணக்கானோர் என்றுதான் கூற வேண்டும். ஆனால், நுழைவுக் கட்டணத்தை முறையாகச் செலுத்தி வந்தவர்களின் எண்ணிக்கை குறைவுதான். ஒரு ரூபாய் நுழைவுக் கட்டணம் செலுத்தி வந்தவர்களின் வாயிலாக அன்றைய சிறப்புக்கூட்ட வசூல் இருபத்து இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்! இது சாதாரணத்தொகையல்ல! பெருந்தொகைதான்! ஆனால் சிறப்புக்கூட்டம் திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற காரணத்தால் சுற்றுச் சுவர்களையும் தட்டி அடைப்புக்களையும் தாண்டிக்கொண்டும் தள்ளிக்கொண்டும் பல்லாயிரக்கணக்கானோர் நுழைந்துவிட்டார்கள்! பரவாயில்லை; பணத்திற்குப் பணமும் கிடைத்தது - ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசிய

மனநிறைவும் ஏற்பட்டது. இனி நடைபெறும் சிறப்புக்கூட்டங்களில் நமது செயல் வீரர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரையில் மற்றொரு சிறப்பு - நமது பழம்பெரும் தோழமைக் கட்சிகளான முஸ்லீம் லீக்கும், பார்வர்டு பிளாக் கட்சியும் இரண்டாண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு நம்முடன் உறவைப் புதுப்பித்துக்கொண்டு உணர்வுபூர்வமான உடன்பாடு கொண்டதுதான்!

அன்பு நண்பர் சமத் அவர்களும் அருமை நண்பர் ஆண்டித்தேவர் அவர்களும் ஆற்றிய உரை இதயத்திற்கு இதமாக இருந்தது! அடிபட்டுப் புண்ணாகியிருக்கிற நெஞ்சமல்லவா? அந்த நெஞ்சுக்கு ஒத்தடம் கொடுத்தது போல் இருந்தது நீண்ட நாட்களுக்குப் பிறகு ஏற்பட்ட அந்தச் சந்திப்பு!

பொதுக்குழுவில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களைத் தனக்கேயுரிய அழகு தமிழில் மிடுக்கு நடையில் தெளிவும் ஒளியும் கிடைக்கத்தக்க வகையில் விளக்கி விரிவுரையாற்றினார் நமது பொதுச்செயலாளர் பேராசிரியர்! மற்றும் கழக முன்னணியினர் முத்தான தமிழெடுத்து இனமுரசு ஒலித்தனர் மதுரையம்பதியில்!

அந்தக் கூட்டத்தில்தான் மதுரை மாநகராட்சி தேர்தலுக்கான வேட்பாளர்கள் பட்டியலை நான் அறிவித்தேன்.

நமது தோழமைக் கட்சி வேட்பாளர்களையும், கழக வேட்பாளர்களையும் ஒன்றாகவே கருதி அவர்களின் வெற்றிக்காகக் களங்கமற்ற உள்ளத்தோடு உழைப்பவன்தான் கழகத்தின் உடன்பிறப்பு என்பதை நாடறியும்!

அந்த வரலாற்றை மாற்றாமல் - பணிகளை வகைப்படுத்திக்கொண்டு அதிகார ஆர்ப்பாட்டம் கண்டு அஞ்சாமல் - ஆரவாரத்துக்கு இடமின்றி - கண்துஞ்சாமல் கடமையாற்றினால் மதுரையில் வெற்றிக்கொடி நாட்டலாம். இன்றே உன்னை அதற்குத் தயார்ப்படுத்திக் கொள்க! இது என் அன்பு வேண்டுகோள்!

அன்புள்ள,

மு. க.

(26-06-1978)

**நன்றி : நம்நாடு (25-6-1978)**

# 575. "தமிழகம் செய்த தவப்பயன்?"

**உடன்பிறப்பே,**

பெரிய பதவியொன்றில் இருந்துவிட்டால் அந்த நபர், அத்திமரத்துப் பூக்கள் அழகானவை என்று சொன்னாலும், குதிரையின் கொம்புகள் கூர்மையானவையென்று கூறினாலும், சேவல் முட்டை உடலுக்கு நல்லது என மொழிந்தாலும் -அதை அப்படியே ஏற்றுக் கொண்டு ஆமாம் போடுகிற மக்கள் தொடர்ந்து ஏமாந்து கொண்டேயிருப்பார்கள் என்பதில் இந்நாள் முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறார். அவரது புனித (?) பேச்சுக்களை வெளியிட்டுப் புகழ்ந்து பாராட்ட தி.மு. கழகத்தின் பகையேடுகளான சில பரம்பரை ஏடுகள் தயாராக இருப்பதால் அவரால் தைரியமாக எல்லாவிதமான பொய்களையும் சொல்ல முடிகிறது. எத்தனை முரண்பாடுகள் மலிந்த அறிக்கைகளையும் விடுக்க முடிகிறது.

காவிரிப் பிரச்சினை பற்றித் திருவாய்மலர்ந் தருளியிருக்கிறார். தி.மு.க. அரசு, சுப்ரீம் கோர்ட்டில் காவிரிப் பிரச்சினைக்காக வழக்குப் போட்டது என்றும், பிறகு அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் உள்ளவர்களைக் கலந்து கொள்ளாமலே அந்த வழக்கைக் கழக அரசு திரும்பப் பெற்றுக் கொண்டதென்றும் ஒரு விளக்கத்தை அளித்துள்ளார். விபரம் தெரிந்தவர்களை விசாரித்துக் கொண்டாவது அவரது தெளிவுரைகளை வழங்கினால் நலமாக இருக்கும்.

கழக அரசு, பேச்சுவார்த்தைகளின் வாயிலாகத் தீர்வு காண முடியாத நிலையில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தது உண்மைதான்! அதற்கு முன்பே ஒவ்வொரு முறை பேச்சுவார்த்தைக்கு முன்பும் அனைத்துக் கட்சித் தலைவர்களை கலந்து பேசி, அவர்கள் வழங்கும் கருத்தின் அடிப்படையில்தான் கழக அரசு அந்தப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழகத்தின் நிலையை விளக்கியிருக்கிறது. வழக்குத் தொடருவதற்கு முன்பும்

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து ஆலோசிக்கப்பட்டார்கள். பிறகு தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்கள், வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டால் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான முடிவு காணலாம் என்று கூறினார். பிரதமரும், அன்றைய மத்திய அரசின் பாசன அமைச்சரும் வெளியிட்ட அந்தக் கருத்தினையும், கழக அரசு உடனடியாக ஏற்றுக்கொள்ளாமல் - அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, அனைவரும் சேர்ந்து ஒரே மனதாக முடிவு செய்து, எப்படியாவது பிரச்சினை தீர்ந்து தமிழ்நாட்டு விவசாயிகளின் நலன்கள் காப்பாற்றப்பட்டால் போதுமென்று வழக்கினைத் திரும்பப் பெறுவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன் பிறகே சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு திரும்பப் பெறப்பட்டது. அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் என்னென்ன பேசப்பட்டது - என்ற விபரங்களை நான் வெளியிட விரும்பவில்லை. முதல்வர் பொறுப்பில் இருக்கும் எம்.ஜி.ஆர். அவர்களே அந்தத் தலைவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றிருக்கிறார்.

பிறகு மத்திய அமைச்சர்களின் முன்னிலையில் தமிழக, கர்நாடக, கேரள அமைச்சர்கள் பல தடவை சந்தித்துப் பேசியதன் விளைவாக, சிக்கலைத் தீர்ப்பதில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டதே தவிர, முழுமையான பலன் கிட்டவில்லை. அந்தப் பேச்சுவார்த்தைகளில் கூறப்பட்ட கருத்துக்களைக்கூட, கழக அரசு மற்ற கட்சித் தலைவர்களிடம் எடுத்துரைத்து யோசனை கேட்கத் தவறவில்லை. முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களேகூட அண்மையில் ஒரு அறிக்கையில், முதல்வராக இருந்த கருணாநிதியும், பொதுப்பணி அமைச்சர்களாக இருந்த ப.உ. சண்முகமும், சாதிக்பாட்சாவும், காவிரி சம்பந்தமாக என்னிடம் அடிக்கடி வந்து கலந்து பேசியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். பக்தவத்சலனார் அவர்களை மட்டுமன்றி பெருந்தலைவர் காமராஜர் இல்லத்துக்கும் சென்று நாங்கள் விவரங்களைக் கூறி, அவரது அரிய ஆலோசனைகளைப் பெற்றிருக்கிறோம்.

ஒப்பந்தத்திற்கு எந்தப் பெயர் வேண்டுமானாலும் இருக்கலாம்; ஆனால் தமிழ்நாட்டு விவசாயிகள் ஏற்கனவே அனுபவித்து வருகிற பாசனப் பாத்தியதைக்குச் சிறு குந்தகமும் ஏற்படக்கூடாது என்று அழுத்தமான அடிப்படைக் கருத்துடனேதான் கழக அரசு, அன்றைய தினம் பேச்சுவார்த்தைகளில் மத்திய அரசால் கூறப்பட்ட

முடிவுகளை அணுகிற்று என்பதைச் சட்டமன்றத்திலும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

1974-ஆம் ஆண்டிலேயே ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ளவில்லையென்று ஒரு தெளிவற்ற குழப்பமான தகவலையும் இன்றுள்ள அமைச்சர்கள் வெளியிட்டு மக்களை திசை திருப்பப் பார்க்கிறார்கள். ஒப்பந்தத்தைத் தமிழக அரசு மட்டுமே உட்கார்ந்து புதுப்பித்துக்கொண்டு விடமுடியாது. எந்த உரிமை போனாலும் பரவாயில்லை; எப்படியோ ஒப்பந்தம் முடிந்தால் சரி என்று ஏனோதானோவாகக் கையொப்பமிட்டு விட்டு கித்தாப்பு தேடிக்கொள்கிற போலிப்புகழையும் கழக அரசு விரும்பவில்லை! பெரியவர் பக்தவத்சலம் குறிப்பிட்டது போல, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாத காரணத்தாலேயே அந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று யாரும் கூறிவிடவும் முடியாது!

தமிழ்நாட்டு நலன்களுக்காக, கர்நாடகத்தின் நலன்கள் பாதிக்கப்பட வேண்டுமென்று நாம் சொல்லவில்லை! அதே நேரத்தில் தொன்மைக் காலந்தொட்டு தமிழ்நாட்டு விவசாயிகள் அனுபவித்து வருகிற உரிமைகளையும், நலன்களையும் இழந்துவிட முடியாது!

இதை நெஞ்சில் நிறுத்திக்கொண்டு நமது உரிமைகளை நிலைநாட்டப் பாடுபடுங்கள் என்று இன்றுள்ள தமிழக அரசை நாம் வலியுறுத்தினால் - அவர்கள் காவிரியை மறந்துவிட்டு கருணாநிதி மீது என்ன பழி போடலாம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்!

தமிழகம் வந்த தேவராஜ் அர்ஸ் தனது பிடிவாதத்தைப் பேச்சின் மூலம் வெளிப்படுத்திவிட்டுப் போயிருக்கிறார்! ஆனால் இங்குள்ள முதல்வரோ - அதுபற்றித் தொடர்ந்து தனது கண்டனக் குரலை எழுப்புவதற்குப் பதிலாக, கழகத்தின் குரல்வளையை எப்படி நெரிக்கலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார். என் செய்வது தமிழகம் செய்த தவப்பயன்? என்று எண்ணிக்கொள்வதைத் தவிர!

அன்புள்ள,

மு. க.

(27-06-1978)

# 576. அந்த வரிசையில் முதல்வரே தான்!

**உடன்பிறப்பே,**

மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதற்கும், ஒத்தி வைப்பதற்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ள முடியாதவர் நமது முதலமைச்சர் என்று நான் கருதவில்லை. ஆனால் புரிந்து கொள்ளாதவரைப் போலப் பேசியிருக்கிறார். இதே முதலமைச்சர், அன்றைக்குக் கழகத்தின் பொருளாளராக இருந்தபோது கோவையில் நடைபெற்ற பொதுக்குழுவில், கழக அரசு மதுவிலக்குச் சட்டத்தை ஒத்தி வைக்க வேண்டிய அவசியத்தை விளக்கி ஆணித்தரமாகப் பேசியிருக்கிறார். அவரது வாழ்க்கை வரலாற்றினை ஆனந்தவிகடனில் எழுதியபோது மதுவிலக்குச் சட்டத்தை ஒத்தி வைப்பதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது என்பதற்கான காரணங்களை அவரே விரிவாக எழுதியிருக்கிறார். மாநிலத்தின் பொருளாதார நிலையில் அன்றிருந்த நெருக்கடி, மதுவிலக்குச் சட்டம் ஒத்தி வைக்கப்பட்ட காரணத்தினால் எந்த அளவுக்குச் சீர்பட்டது என்பதை இன்றைய முதலமைச்சர் அன்றைக்கே அறிவார். ஒத்தி வைக்கப்படுகிறது என்றாலே மீண்டும் அந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் என்ற அறிவிப்பும் அதிலே மறைந்து கிடக்கிறது. அந்த எண்ணம் இருந்ததால்தான் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்கிறோம் என்று அறிவிக்காமல் ஒத்தி வைக்கிறோம் என்று குறிப்பிட்டோம். அவ்வாறே இரண்டாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மதுவிலக்குச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வரவும் செய்தோம்.

அந்த நடவடிக்கையையும் குதிரைப் பந்தயத்தை அரசாங்கமே எடுத்து நடத்தும் என்று இப்போது எம்.ஜி.ஆர். அறிவித்துள்ளதையும் எப்படி ஒப்பிட முயற்சிக்கிறார் என்று தெரியவில்லை. குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் வெளியிட்ட தேர்தல் பிரகடனத்திலேயே இருக்கிறது. அவ்வாறே கழக அரசு, கொள்கை ரீதியாக குதிரைப் பந்தயத்தை ஒழித்து சட்டத்தை நிறைவேற்றியது. அதை

எதிர்த்து குதிரைப் பந்தய சங்கத்தினர், சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்தனர். அந்த வழக்கு விரைவுபடுத்தப்பட்டு குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதை விட்டுவிட்டு, அதனை அரசாங்கமே ஏற்று நடத்தும் என்று முதலமைச்சர் அறிவிப்பது அண்ணாவின் கொள்கைக்கே விரோதம் என்று நான் கூறினேன். உடனே நமது முதல்வர் மதுவிலக்கை அண்ணாவின் கொள்கைக்கு விரோதமாக ரத்துச் செய்யவில்லையா? என்று சுடச்சுடப் பதில் சொல்கிறார்!

வாதத்திற்காக கேட்கிறேன்; நான்தான் அண்ணாவின் கொள்கைகளை நிறைவேற்றாதவன் என்று எம்.ஜி.ஆர். என்னைக் குற்றம் சாட்டுகிறாரே; அண்ணாவின் கொள்கைகளை நிறைவேற்றக் கூடியவர் என்று தன்னைப் பற்றி அடிக்கடி அறிவித்துக் கொண்டிருக்கிற அவர் ஏன்; குதிரைப் பந்தய விஷயத்தில் அண்ணாவின் கொள்கையைக் குழிதோண்டிப் புதைக்கிறார்? அவர் கூற்றுப்படி அவர்தானே அண்ணாவின் உண்மையான வாரிசு! (?) உடன்பிறப்பே! சிரிக்காதே! அந்த அண்ணாவின் வாரிசு, (?) அண்ணாவின் கொள்கைக்கு விரோதமாகச் செயல்படலாமா? அவரது பாஷைப்படி சொல்ல வேண்டுமானால் அமரர் அண்ணாவின், ஆத்மா சாந்தியடையாதே!

மதுவிலக்கை ஒத்தி வைத்த காரணத்தால் அப்போது அரசுக்கு நூறு கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் கூடியது! குதிரைப் பந்தயத்தை அரசு நடத்தினால் எத்தனை கோடி ரூபாய் வருமானம் அரசுக்கு வரும் என்று கணக்காவது பார்க்கப்பட்டதா? அதற்காவது நிதி அமைச்சரையோ - நிதித் துறையையோ - முதலமைச்சர் கலந்து பேசினாரா?

மதுவிலக்கை ஒத்தி வைத்த கழக அரசு, மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வந்து அந்தச் சட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தியது!

இன்று நிலை என்ன? அரசுக்கு வரவேண்டிய வருமானம் சுமார் இருநூறு கோடி ரூபாய் அளவு, கள்ளச் சாராய வியாபாரிகளுக்கும் - அவர்களை ஆட்டிப் படைத்து அச்சுறுத்தி - அடிக்கடி காவல்துறையினரிடமிருந்து மீட்டுக் கொடுக்கிற ஆளுங் கட்சிக்காரர்களுக்கும் - அதிகாரிகளின் மாமூலுக்கும் - பல்வேறு வாய்க்கால்களின்வழியாகப் போய்ச் சேருகிறது!

காவிரி நீர், தமிழகத்திற்கு வருகிறதோ இல்லையோ - கள்ளச் சாராயம், காவிரி நதி போல் தமிழகத்தில் இன்று பெருக்கெடுத்து அலைமோதிக் கரைகடந்து பாய்ந்து கொண்டிருக்கிறது.

ஓராண்டு எம்.ஜி.ஆர். ஆட்சியின் ஒப்பற்ற சாதனைகளில் இது மிக முக்கியமான சாதனையாகும்!

உடன்பிறப்பே! நிருபர்கள்; எம்.ஜி.ஆர். அவர்களை கேட்டிருக்கிறார்கள் - அண்ணா முதலமைச்சரானதும் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டாரே - அதேபோல் அமைச்சர் சோமசுந்தரம் ஏன் ராஜினாமா செய்யவில்லை? என்று!

அதற்கு முதல்வரின் பதில் என்ன தெரியுமா?

சட்டத்துக்கு உட்பட்டு சட்டத்தை மீறாத வகையில் எந்த நேரத்தில் ராஜினாமா செய்வது என்பதைத் தேதி குறிப்பிட்டுவிட்டு நிச்சயம் நாங்கள் கடமையை நிறைவேற்றுவோம்!

இதுதான் முதல்வரின் விளக்கமான பதில்! புரிகிறதா உனக்கு? புரியாவிட்டால் நீயும் நானும் அண்ணாவின் வாரிசுகள் இல்லை!

நல்லவேளை எம்.ஜி.ஆர். இப்படி ஒரு பதிலைச் சொல்லாமல் விட்டாரே, அதாவது முதலமைச்சராக ஆனால்தான் எம்.பி. பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் - சாதாரண அமைச்சர்கள் எம்.பி. பதவியை ராஜினாமா செய்யத் தேவையில்லையென்று! யாராவது அருகில் இருந்தவர்கள் இப்படி ஒரு கருத்தைச் சொல்லியிருந்தால் அதையும் நமது முதல்வர், நிருபர்களின் கூட்டத்தில் எடுத்தெறிந்து நிருபர்களை வியப்பில் ஆழ்த்தியிருப்பார்.

அந்த அற்புதமான பதிலை, இந்து - எக்ஸ்பிரஸ் - தினமணி - போன்ற ஏடுகள்; முதல் பக்கத்திலேயே வெளியிட்டு நமது முதல்வரின் திறமைக்கு ஆயிரம் பாராட்டுக்களை வழங்கியிருக்கக்கூடும்!

பொய் பேசுவது - அல்லது புரியாமலே பேசுவது - இவற்றின் மூலம் எதையும் சமாளித்து விடலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டு காலம் தள்ளுகின்றவர்களின் வரிசையில் நமது முதல்வர் முதல்வரேதான்!

அன்புள்ள,

மு. க.

(28-06-1978)

# 577. ஐந்து நகரங்களில் அணிவகுப்பு! அவசரச் சட்டம் ஆகாது! கூடாது!

**உடன்பிறப்பே,**

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் சார்பில் தொழிலாளர் பேரணி சென்னை மாநகரில் மிக்க எழுச்சியுடன் நடத்தப்பட்டு 25-6-1978 அன்று ஆளுநரிடம் வேலை நிறுத்தத் தடை அவசரச் சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்ற முறையீட்டை வலியுறுத்துகிற வேண்டுகோள் அளிக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர் விரோதச் சட்டமாம் இந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து முன்னேற்றச் சங்கப் பேரவை முழுமூச்சுடன் போராடுவது என்று எடுத்துள்ள முடிவு வரவேற்கத்தக்கது! வாழ்த்திப் பாராட்டத்தக்கது! பேரவை எடுக்கும் அறவழியிலான நடவடிக்கைகளுக்கு ஆங்காங்குள்ள கழக அமைப்புகளும் துணை நிற்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளத் தேவையில்லை! ஏனெனில் கழக உறுப்பினர்களிலேயே பெரும் பகுதியினர் பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

சென்னையில் நடைபெற்ற வகையில் தமிழகத்தில் குறிப்பிட்ட நகரங்களில் பேரணிகளை நடத்த முன்னேற்றச் சங்கப் பேரவை ஆயத்தங்களைச் செய்து வருகிறது.

ஜூலை ஆறாம் நாளன்று திருச்சியில் நடைபெறும் பேரணிக்கு; தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அவர்கள் தலைமை தாங்குகிறார். நீண்ட நெடுங்காலமாகத் தொழிற்சங்க இயக்கத்தில் உழைத்து வரும் அவரது சீரிய தலைமையில் திருச்சி நகரத்தில் தொழிலாளர்கள் அணி திரளப் போகிறார்கள். ஜூலை எட்டாம் நாள் பேரவையின் தலைவர் குப்புசாமி அவர்களின் தலைமையில் கோவையில் அணிவகுக்கின்றனர் தொழிலாளர்கள்! இவர்

தொழிலாளர் நலனுக்காகப் பல்லாண்டுகளாகப் பணிபுரிபவர் - கோவை நகரத்தில் இவரது தலைமையில் குவிகிறது தொழிலாளர் சக்தி!

அடுத்து ஜூலை பத்தாம் நாள் தூத்துக்குடியில் மாநிலங்களவை உறுப்பினரும் தொழிற் சங்கங்களைக் கட்டி வளர்த்து வருபவருமான ஜி. இலட்சுமணன் அவர்களின் தலைமையில் பாட்டாளி வர்க்கம், அறப்போர்ப் பரணி பாடப்போகிறது. ஜூலை பதினோராம் நாள் தொழிலாளர்களின் எழுச்சிக் குரலாக ஒலிக்கும் கே. சுப்பு எம்.எல்.ஏ. அவர்களின் தலைமையில் மதுரை மாநகரில் தொழிலாளர்கள் பேரணி நடத்தி அறப்போர் முரசு கொட்டுவர்!

ஜூலை பன்னிரண்டாம் நாள் ஜி. பராங்குசம் அவர்களின் தலைமையில் தஞ்சையில் தொழிலாளர்கள் அணிவகுப்பர். திராவிடர் இயக்கத்தில் தொடக்க காலந்தொட்டு தொழிற்சங்கத்தைக் கட்டிக்காத்து வரும் பெருமை பராங்குசத்திற்கு உண்டு. அண்மையில்தான் சிறையிலிருந்து வெளிவந்தார். அவரது தலைமையில் தஞ்சை நகர் குலுங்கிடப் பாட்டாளி வர்க்கத்தின் பவனி நடைபெறப் போகிறது.

ஐந்து நகரங்களில் கிளர்ந்தெழும் தொழிலாளர் வர்க்கம், தங்களுக்கெதிராக - தங்கள் உரிமைகளுக்கெதிராக - கோரப்பற்களைத் தீட்டிக்கொண்டு நிற்கும் அவசரச் சட்டத்தை இந்த அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென்று அமைதியான முறையில் வலியுறுத்தும்.

தொழிலாளர்களின் அறவழிக் கிளர்ச்சிகளை அலட்சியப்படுத்தக்கூடியவர் இன்றைய முதலமைச்சர் என்பதும் - ஆணவம் கொடி கட்டிப் பறக்கிற நிலையில் அவசரச் சட்டத்தின் காரண கர்த்தாவாக அவர் விளங்குகிறார் என்பதும் - தொழிலாளர் சமுதாயம் அறியாத உண்மை அல்ல!

தொழிலாளர் சமுதாயம் முழுமைக்கும் எதிரான ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துவிட்டு, நாங்கள்தான் தொழிலாளர்களின் நம்பிக்கைக்குரியவர்கள் என்று நாடாள்வோர் நாப்பறைகொட்டுவதும், அவர்களை நத்திக் கிடப்போர் நாவைச்

சுருட்டிக் கொண்டு ஊமைகளாக உழல்வதும் - தமிழகத்தில் வேடிக்கையும், வேதனையும் கலந்த நிலையாகும்!

நமக்கு மற்றவர்களைப் பற்றி கவலையில்லை ; அவர்களை விமர்சிக்கத் தேவையில்லை - சந்தர்ப்பவாத அரசியல் இன்று இந்தியா முழுமையும் பரவிக் கிடக்கிறது என்றாலும், அதில் தமிழகம் சிறப்பான இடத்தை வகிக்கிறது என்பதற்கு அவர்கள் எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கிறார்கள். அவர்களைத் தொழிலாளர்கள் அடையாளம் கண்டுகொள்ள நீண்ட நாட்களாகாது! எனவே நமது கடமையை நாம் ஆற்றிடவேண்டும். எந்தக் கட்சிச் சார்புடைய தொழிற்சங்கங்கள் நடத்துகின்ற நியாயமான போராட்டங்களிலும் நாம் நமது ஆதரவை வழங்கத் தயங்கியதில்லை. அது கட்சிச் சார்பற்ற முறையில் தொழிலாளர் வர்க்கத்திற்காக நாம் ஏற்றுக் கொண்ட கொள்கை! நமது கழகச் சார்புடைய தொழிற்சங்க அமைப்பு ஒன்று உருவாக வேண்டுமென்று நாம் கொண்ட கருத்தும் தேவையின்பாற்பட்டதாகி விட்டது - எந்தச் சூழ்நிலையிலும் தொழிலாளர்களின் நியாயமான உரிமைகளுக்காகப் போர்க்குரலை எழுப்பக் கூடிய பெரும் பாசறையாக இன்றைய தினம் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை திகழ்கிறது.

தொழிலாளர்களின் குரல்வளையை நெரித்த நெருக்கடி நிலையை எதிர்த்த காரணத்திற்காக மிசாக் கைதிகளாக ஓராண்டுக்காலம் சிறையில் கிடந்த தியாக மறவர்கள் பலரும், இந்தப் பேரவையின் அங்கங்களாகத் திகழ்கிறார்கள். அன்றைக்கு அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வீழ்த்திட அணிவகுத்து அடக்குமுறைகளை ஏற்றுக்கொண்ட நமது முன்னேற்றச் சங்கப் பேரவை இன்றைக்கு இந்த அவசர சட்டத்தை வீழ்த்திட ஒருக்காலும் தயங்காது!

ஆர்ப்பரித்துக் கிளம்பிவிட்டது! பாட்டாளி வர்க்கத்தைப் பந்தாட எண்ணுவோர் - பதைபதைத்துப் பின்வாங்கிடும் வரையில் இந்தப் போர்ப் பாட்டு ஓயாது!

இந்தக் கட்டத்திலேயே எம்.ஜி.ஆரின் அரசு, அவசரச் சட்டத்தைக் கைவிட்டுவிடுவதுதான் வரவேற்கத்தக்கதாக

இருக்கும். இல்லையேல் இந்தக் கறுப்புச் சட்டம் கைவிடப்படும் வரையில் அறப்போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதானிருக்கும். அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களாலும் எதிர்க்கப்பட்ட கறுப்புச் சட்டம், இன்னமும் பாட்டாளிகளை நோக்கிப் பாய்வதற்குத் தயாராக இருப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதன் விளைவே ஐந்து நகரங்களில் நடைபெறப்போகும் அணிவகுப்பு!

அன்புள்ள,

மு. க.

(6-07-1978)

**நன்றி : நம்நாடு (2-7-1978)**

# 578. கோர்ட்டுக்கு ஆறில்! கோவைக்கு ஒன்பதில்!

உடன்பிறப்பே,

நீதிமன்றத்துக்குப் புறப்படுவதற்கு முன் இந்தக் கடிதம் எழுதுகிறேன். கொலை முயற்சியில் ஈடுபட்டதாகத் தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் இன்று தீர்ப்பு வழங்கப்பட இருக்கிறது. அந்தத் தீர்ப்பு என்ன என்பது வெளியாகிற நேரத்தில் இந்தக் கடிதம் உனக்குக் கிடைத்திருக்கும். எந்த ஒரு நண்பரை நீண்டகாலமாக நான் நெஞ்சார நேசித்து வந்தேனோ - எந்த ஒரு நண்பருக்காக நான் இதயத்தில் இடம் ஒதுக்கி என்னாலியன்ற அளவுக்குத் துணை நின்றேனோ அந்த நண்பரைக் கொலை செய்ய முயற்சி - அல்லது தூண்டிவிட்டது என்ற வகையில் நான் குற்றம் சாட்டப்பட்டேன். என் மீதும், நண்பர்கள் கண்ணப்பன், கோவை ராசமாணிக்கம், லட்சுமணன் எம்.பி., கோபாலசாமி, செபாஸ்டியன் ஆகியோர் மீதும் வழக்கு விசாரணை நடைபெற்று இன்று மாலை தீர்ப்பு வழங்கப்பட இருக்கிறது. இந்தக் கொலை முயற்சி வழக்கிற்கு அடுத்து இன்னொரு கொலை முயற்சி சதிவழக்கு காத்துக் கொண்டிருக்கிறது. அதுதான் இந்திராகாந்தி அம்மையாரைக் கொலை செய்யச் சதி செய்தோம் என்று என் மீதும், பேராசிரியர் மீதும் மற்றும் கழக முன்னணியினர், தொண்டர்கள் மீதும் மொத்தம் 135 பேர் மீது போடப்பட்டுள்ள வழக்காகும். அது இந்த மாத இறுதியில் ஆரம்பமாகிறது. இப்படி இன்னும் எத்தனையோ வழக்குகள்! தீர்ப்புகள்! அதற்குள்ளாகவே தண்டனைகளை நிச்சயம் செய்து அமைச்சர்கள் பேசும் பேச்சுக்கள்!

இத்தனைக்கும் மத்தியிலே உன்னைச் சந்திப்பதும், உனக்குக் கடிதங்கள் எழுதுவதும், உன்னால் ஏற்பாடு செய்யப்படுகிற விழா நிகழ்ச்சிகளில் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப்பெருங்குடி மக்களைக் கண்டுகளிப்பதும் எனக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது தெரியுமா?

அண்மையில், மதுரை, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, செங்கல்பட்டு, தர்மபுரி, சேலம், தென்ஆற்காடு மாவட்டங்களில்

ஏராளமான நிகழ்ச்சிகளில் இலட்சக்கணக்கான மக்களைச் சந்தித்தது மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான ரூபாய்களையும் கழக வளர்ச்சி நிதியாகப் பெற்று வந்தேன்.

இதோ வருகிற ஒன்பதாம் தேதி கோவை அழைக்கிறது! இன்று ஆறாம் தேதி கோர்ட் அழைக்கிறது! அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் கோவையும் அழைக்கிறது!

கோர்ட், அழைப்பது வழக்கில் தீர்ப்பு வழங்க!

கோவை அழைப்பது கழக நிதி வாரி வழங்க!

கழக வளர்ச்சி நிதிக்குப் பெருந்தொகையொன்றை அளிக்கக் கோவை மாவட்டக் கழகம் சிறப்புக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. தமிழ் மக்கள், உணர்ச்சிப்பெருக்குடன் நிதியினை இப்போதே ஆங்காங்குள்ள கழக அமைப்புகளிடம் தருவதற்குத் தொடங்கிவிட்டார்களாம். அதிலும் கோவை, தொழிலாளர்களின் கூடாரம்! அவர்கள், தங்களின் ஊதியத்திலேயே ஒரு பகுதியைக் கழக வளர்ச்சிக்குத் தர முன்வந்துள்ளனராம்!

கழகம், தேர்தல் நிதியானாலும் - வழக்கு நிதியானாலும் - எந்த நிதி கேட்டபோதும் அள்ளி அள்ளிக் கொடுத்துப் பெருமைபெற்ற வரலாறு கோவை மாவட்டத்துக்கு உண்டு!

அந்த மாவட்டத்தின் எல்லா உடன்பிறப்புகளையும் சந்திக்கத்தான் ஒன்பதாம் தேதி கோவையில் இருப்பதாகத் திட்டமிட்டிருக்கிறேன்.

வழக்குகள், விசாரணைகள், இன்னும் எத்தனை கொடுமைகளை மோதவிட்டாலும் - என் இனிய உடன்பிறப்பே! உன்னை நினைத்துக் கொள்வதாலேயே எனக்குத் தெம்பு பிறக்கிறது! உறுதி வளர்கிறது! உன்னை சந்தித்து விட்டாலோ, மலைபோல் தோன்றும் எதிர்ப்புகள் கதிரவனைக் கண்ட பனிபோல் கலைகிறது! அத்தகைய ஆற்றல் பெற்ற அருமை உடன்பிறப்பே! கோவையில் நாம் சந்திக்கும் அந்த நாளை நாம் இருவருமே எத்துணை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். நம்மை எந்தச் சூழ்நிலையும் பிரித்து விடமுடியாது - எந்தச் சூராதி சூரர்களும் வீழ்த்திவிட முடியாது!

அன்புள்ள,

மு. க.

(7-07-1978)

# 579. வீறுநடை போடு! வெற்றி நமதே!

**உடன்பிறப்பே,**

கொங்குச்சீமை பொங்கியெழுந்து கொள்கைத் தங்கங்கள் - குன்றாத இலட்சியச் சுடர்கள் - மங்காத புகழ்மிக்க வரலாற்றுப் புதியதோர் எழுச்சிமிகு அத்தியாயத்தைக் கடந்த ஒன்பதாம் நாள் படைத்தார்கள்.

நான் அந்தச் சிறப்புக் கூட்டத்தில் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கக் குறிப்பிட்டது போல உண்மையிலேயே அது ஒரு பந்தல் இல்லாத மாநில மாநாடுதான்!

மாவட்ட அளவிலே உள்ள கழகத்து உடன்பிறப்புகளும், மாநகரைச் சுற்றியும் மாநகரத்திலும் உள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களும் இலட்சக்கணக்கிலே கூடி, மூன்று லட்சத்து ஐம்பதாயிர ரூபாயைக் கழக வளர்ச்சி நிதியாக வழங்கியிருக்கிறார்கள்.

எல்லா மாவட்டங்களுக்கும் கோவை மாவட்டம் வழிகாட்டியிருக்கிறது! குறிப்பாக மாவட்டச் செயலாளர் அருமை உடன்பிறப்பு கண்ணப்பன் அடியெடுத்துக் கொடுத்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, மாதந்தோறும் என்னை அழைத்து ஒன்றியங்களின் சார்பில் பெருநிதி வழங்கவும் ஏற்பாடுகளை முடுக்கி விட்டிருக்கிறார்கள். கழக நிதி எத்துணை அவசியமானது என்பதை அறியாத உடன்பிறப்பல்ல நீ! எனவே அந்த நிதி திரட்டும் பணிக்கு நான் சென்றிட நீ இடையில் எந்தவிதத் தடங்கலும் விளைவிக்காமலிருக்க கேட்டுக் கொள்கிறேன்.

கோவையை வென்று காட்டுவதாக சென்னை சீறி எழுந்திருக்கிறது. செயலில் காட்டினால் செந்தேன் பருகியது போலத்தான் இருக்கும் எனக்கு!

இதோ, மதுரை மாநகராட்சித் தேர்தல் - அடுத்து உள்ளாட்சி மன்ற ஊராட்சி ஒன்றியத் தேர்தல் - தஞ்சை இடைத்தேர்தல் - பிறகு பொதுத்தேர்தல் - இத்தனைக்கும் கழகம் பொறுப்பேற்றுச் செலவிட, உடன்பிறப்பே! உன்னைத்தான் நம்பியிருக்கிறது!

கடந்த சட்டமன்றத் தேர்தலில் உண்டியல் எடுத்துத் தொகை சேர்த்துத்தான், தேர்தல் செலவினங்களை ஓரளவு சந்திக்க முடிந்தது!

அந்த உண்டியல் முறையை இப்போது மதுரை மாநகராட்சித் தேர்தலில் எம்.ஜி.ஆர். கடைப்பிடிக்கப் போகிறாராம்! பாவம்; புதிய கண்டுபிடிப்பு போல அறிக்கை விடுத்துள்ளார்.

இல்லை! இல்லை! அழகாகத் தமிழ் எழுதத் தெரிந்த ஒருவர் எழுதிய அறிக்கையில் கையெழுத்திட்டு அதனை ஏடுகளுக்குத் தந்துள்ளார்.

அறிக்கை எழுதியவருக்கு மதுரை மாநகராட்சி கலைக்கப்பட்டதாக யாரோ ஒருவர் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார். மதுரை மாநகராட்சியின் காலக்கெடு முடிந்தவுடன் மேலும் காலம் நீட்டித்துத் தரப்படவில்லையே தவிர, கழக ஆட்சிக் காலத்தில் மதுரை மாநகராட்சியைக் கலைத்ததாகக் கூறுவது தவறு! அந்தக் காலக்கெடு கூட ஒருமுறை வழங்கப்பட்டது! இரண்டாவது முறைதான் வழங்கப்படவில்லை! பின்னர் எல்லா நகராட்சிகளுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடைபெறும்போது மதுரைக்கும் இணைத்துத் தேர்தல் நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது!

இது மதுரைக்கு மட்டுமில்லை. கோவை நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் இதுபோலவே பதவிக் கால நீட்டிப்பு (எக்ஸ்டென்ஷன்) தரப்படவில்லை.

யாரோ தனிப்பட்டவர் ஒருவர் மீதுள்ள கோபத்தால் கழக அரசு இப்படிச் செய்தது என்று எம்.ஜி.ஆர். பெயரால் வந்துள்ள அறிக்கை கூறுகிறது!

யார் அந்த தனிப்பட்டவர்? எம்.ஜி.ஆர். அவர்களால் குண்டர்களின் அரசன் என்று வர்ணிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் குற்றப்பட்டியல் தரப்பட்டதே அந்த குணாளர் (?) தான்! இப்படி எம்.ஜி.ஆர். கூறக்கூடும். அடிக்கடி மாநகராட்சி மன்ற

உறுப்பினர்களின் காலத்தை, தேர்தல் இல்லாமலே நீட்டிப்பது நாகரீகமல்ல என்ற காரணமே அப்போது மேலோங்கியிருந்தது!

கருணாநிதியுடன் அந்த மதுரைக்காரர் இருக்கும் வரை கருணாநிதிக்குக் கஷ்ட காலம்தான் என்று இதே எம்.ஜி.ஆர்.தான் திண்டுக்கல் தேர்தலிலே திருவாய் மலர்ந்தருளினார்!

இன்று எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அதே மதுரைக்காரர் உத்தமராகத் தெரிகிறார். ஊழலற்ற பத்தரை மாற்றுப் பொன்னாகத் தெரிகிறார். அவருக்காக ஓட்டுக் கேட்கிறார். உண்டியல் ஏந்தச் சொல்கிறார்!

பஸ் முதலாளிகளிடம் தி.மு.க. அரசு பல லட்சம் ரூபாய் பணம் வசூலித்தது உண்மை! தியேட்டர்காரர்களிடம் நிதி திரட்டியது உண்மை! ஆனால் எதற்காக? யுத்த நிதி ஆறு கோடி ரூபாய் தந்ததே; அதற்காக! வறட்சி நிவாரணப் பணிகளை நிறைவேற்றுவதற்காக! ஆனால் இன்றுள்ள எம்.ஜி.ஆர். அரசு - பஸ் முதலாளிகளிடமும், தியேட்டர்காரர்களிடமும், தன் கட்சி நிதிக்காகக் கிட்டி கட்டி வசூல் செய்கிறது! இந்த ஊழலை மறைக்க உண்டியல் எடுக்கச் சொல்கிறார் எம்.ஜி. ராமச்சந்திரன்!

புயல் வெள்ள நிவாரண நிதியில் பெரும் பகுதியை நாமினேஷன் என்ற பெயரால் கட்சிக்காரர்களுக்கு ஒதுக்கிக் கொண்டவர்கள், மற்றவர்களுக்கு மாசு கற்பிக்க மார்தட்டுகிறார்கள்!

சட்டசபையில் வைத்துள்ள சொத்து விவரங்களிலேயே மூன்று லட்ச ரூபாய் வீட்டை ஒரு லட்ச ரூபாய் மதிப்பு என்று கூறி முழுப் பூசணியை சோற்றில் மறைப்பவர்கள், கழகத்தின் மீது சேற்றை வாரி வீசுகிறார்கள்!

அ.தி.மு.க. அமைப்பாளர்கள் கள்ளச் சாராய வியாபாரிகளாக இன்றைக்கு நகர் வலம் வருகிறார்கள்!

அ.தி.மு.க. கிளை - எம்.ஜி.ஆர். மன்றம் - கள்ளச் சாராய கூட்டுறவு சங்கம் - அனைத்துக்கும் ஒரே தலைவர்தான்! அவர்தான் உத்தமபுத்திரன்! சத்தியசீலன்! புதிய புத்தன்! மறுபிறவி எடுத்துள்ள மகாத்மா!

நிர்வாகத் தலையீடே இல்லாத ஆட்சி நடக்கிறதாம்! எம்.ஜி.ஆர். அறிக்கை விடுகிறார்! ஹைகோர்ட்டில் தண்டனை பெற்றவர்கள் மூன்று மாதம் தலைமறைவாக இருந்து

அமைச்சர்களோடு அமர்ந்து திருவொற்றியூர் திருமணத்தில் மணமக்களை வாழ்த்திய காட்சியிருக்கிறதே; அது ஒன்று போதாதா? இந்த ஆட்சியில் நிர்வாகத் தலையீடே இல்லையென்பதற்கு!

பாவத்தின் சுரங்கம் - மோசடியின் மொத்த உருவம் - தன்னைத்தானே புண்ணியத்தின் புதுவடிவம் என்று கூறிக்கொள்வதுபோல - முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன்; தன்னுடைய ஆட்சி புனிதமான ஆட்சியென்று பறைச்சாற்றிக் கொண்டிருக்கிறார்!

அரசாங்கக் காரில் அமைச்சரின் தாயார் அடிக்கடி குதிரைப் பந்தயத்திற்குப் போன விவகாரம் அம்பலத்திற்கு வந்து - அது ஒரு விளக்க அறிக்கையோடு மூடி வைக்கப்பட்டு விட்டது!

வெங்கடாத்திரி கமிஷன் முன்னால் லஞ்சக் குற்றம் சாட்டப்பட்டு நின்றார் ஒரு அ.தி.மு.க. அமைச்சர்! அந்த அமைச்சரைக் காப்பாற்ற கமிஷனே கலைக்கப்பட்டு - சட்டமேரத்து செய்யப்பட்டது இந்த நேர்மையாளர் (?) ஆட்சியில்!

இவர்கள் பசுத்தோலைப் போர்த்திக்கொண்டு கழக ஆட்சியைக் காரசாரமாகத் தாக்கி மதுரை வாக்காளர்களை மறுபடியும் ஏமாற்ற முயற்சிக்கிறார்கள்!

ஆணவ மொழி - அதிகாரச் செருக்கு - கொலை வழக்கு - பொய்க் குற்றச்சாட்டு - இவற்றால் கழகத்தை அழித்து விடலாம் என்று கனவு காண்கிறார்கள்!

மாநில சுயாட்சி கூடாதாம்! இதுதான் அண்ணா வழியாம்! அண்ணாவின் ஆன்மா சாந்தியடைய வேண்டுமென எம்.ஜி.ஆர். தலையங்கம் எழுதினாரே; அதுதான் பெரியார் கொள்கையாம்!

மக்களை இன்னும் பைத்தியக்காரர்கள் என்று நினைத்துக்கொண்டு நம்மை அண்ணாவுக்கும் பெரியாருக்கும் எதிரி என்று காட்டப் பார்க்கிறார்! பரிதாபத்திற்குரியவர்!

உடன்பிறப்பே, பஸ் முதலாளிகளிடமும், தியேட்டர்காரர்களிடமும் லட்சக்கணக்கில் கெடுபிடி வசூல் செய்துகொண்டு, ஏற்கனவே திருச்சி நடன நிகழ்ச்சியென்ற மோசடியில் வசூலிக்கப்பட்ட பத்து லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையையும் வைத்துக்கொண்டு, மதுரைத் தேர்தலில்

படையெடுக்கும் எம்.ஜி.ஆரின் கட்சி, அந்த உண்மையை மறைக்க உண்டியல் ஏந்தப் போகிறதாம்!

அவர்களின் மோசடியை அம்பலப்படுத்த - மதுரை மாநகராட்சி தி.மு.க. நிர்வாகத்திற்குக் களங்கம் ஏற்படுத்தியவர் யார்? அவர் இப்போது எங்கே இருக்கிறார்? என்பதை மக்களுக்கு விளக்கிச் சொல்ல நீ வீடு வீடாகப் போ! விரிவாகப் பேசு! ஒரு மாநகராட்சித் தேர்தலில் உள்ளாட்சித் துறை அமைச்சரே வந்து ஒரு மாதமாக முகாம் போட்டுக்கொண்டு அதிகார வர்க்கத்தை வைத்துப் பல வழியிலும் ஆட்டிப் படைக்கும் அக்கிரமத்தைப் பற்றி ஒவ்வொரு மேடையிலும் போர்க்குரல் கொடு!

ஏடுகள் சில, இன்றைய ஆட்சியாளர்களின் எடுபிடிகள் ஆகிவிட்டன! சந்தர்ப்பவாதமே அவற்றின் கொள்கை! அவைகளைப் பற்றிக் கவலைப்படாதே! நெஞ்சுயர்த்தி நில்! நேர்மை வழி செல்! தமிழினம் மேலும் தாழாமல் காப்பாற்ற அயராமல் உழைத்திடு!

அண்ணாவையும், பெரியாரையும் பெயரளவில் தங்கள் அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்துகிற இன்றைய ஆட்சியாளரின் உண்மை உருவத்தை மக்கள் முன்னால் தெளிவு படுத்து! இன்னும் ஏமாளிகளாக இருப்போரை திருத்து! வீறு நடைபோடு! வெற்றி நமதே!

அன்புள்ள,

மு. க.

(13-07-1978)

# 580. குன்றென நிமிர்ந்து நில்! கோவையைப் பின்பற்று!!

**உடன்பிறப்பே,**

கோவை சிறப்புக் கூட்டத்தின் வசூல் விபரத்திற்கான பட்டியல் ஒன்றியங்கள் வாரியாக இன்றைய முரசொலி இதழில் வேறொரு பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. நுழைவுக் கட்டணச் சீட்டுக்கள் தலைமைக் கழக முத்திரையுடன் கணக்கிட்டு மாவட்டக் கழகத்தினரால் பெற்றுக் கொள்ளப்பட்டன. வரவு செலவு விபரங்கள், எஞ்சியுள்ள நன்கொடைச் சீட்டுக்கள் தணிக்கைக் குழுவினரால் விரைவில் சரி பார்க்கப்படும். அண்மையில் பொதுக்குழுவையொட்டி மதுரையில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட வசூல் விபரங்களும், எஞ்சியுள்ள நன்கொடைச் சீட்டுக்களும் அவ்வாறே தணிக்கைக் குழுவின் ஆய்வுக்கு வைக்கப்படும்.

இந்த விபரங்களையெல்லாம் நான் குறிப்பிடுவதற்கு காரணம், என்றும்போல் நமது கழக வரவு செலவு கணக்குகள் தொடர்ந்து முறையாக வைக்கப்படும் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக மட்டுமல்ல; கோவை மாவட்ட ஒன்றியக் கழகங்களின் ஒப்பற்ற பணியைப் பாராட்டுவதற்காகத்தான்! இந்தப் பாராட்டுக்களைப் பெற மற்ற மாவட்டக் கழக ஒன்றியங்கள் ஒன்றோடொன்று போட்டியிட வேண்டாமா?

ஒரு சில மாவட்ட ஒன்றியங்கள் என்னை நிதியளிப்புக் கூட்டத்திற்கு அழைத்து, வாக்களித்த தொகையில் பாதியைக் கூடத் தராத நிலையும் இன்னமும் நீடித்துக் கொண்டுதானிருக்கிறது. கொடியேற்றுவதற்கு இருநூறு ரூபாய் தருவதாகச் சொல்லி, ஆர்வ மிகுதியால் ஐநூறு ரூபாய் நிதி தருகிறவர்களும் உண்டு!

மேலுறையில் இருநூற்றி ஐம்பது என எழுதி, உள்ளே நூற்றி ஐம்பதை வைத்துக் கொடுக்கிற ஆற்றல் படைத்தவர்களையும்

ஓரிரு வாரங்களுக்கு முன்பு கண்டேன். கொடியேற்று விழா நிகழ்ச்சிகளில்!

நேற்று நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல எதிர்காலத்தில் நாம் சந்திக்க வேண்டிய தேர்தல்களுக்கும், கழகத்தின் ஆக்கப் பணிகளுக்கும் கழக வளர்ச்சி நிதி சேர்ப்பது மிக மிக முக்கியமானதும், கட்டாயமானதுமான ஒரு காரியம்! அதில் நான் கண்டிப்பாகத்தான் இருப்பேன்! கழக நிதி, யார் அதிகம் தருகிறார்களோ அந்த நிகழ்ச்சிகளுக்குத்தான் முன்னுரிமை தர இயலும்! ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித் தனியாக உதிரி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து கொண்டு திருமணம், பொதுக்கூட்டம் என்றெல்லாம் என்னிடம் தேதி கேட்பதை தயவு செய்து கழக உடன்பிறப்புகள் மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நாளோ இரண்டு நாளோ மாவட்டச் செயலாளர் மூலமாக சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். அந்தச் சுற்றுப்பயணத்தையொட்டித்தான் திருமண நிகழ்ச்சியானாலும், கொடியேற்று விழா நிகழ்ச்சியானாலும், வரவேற்பு நிகழ்ச்சியானாலும் - முன் ஒப்புதல் பெற்று நடத்திக்கொள்ள வேண்டும்.

சென்னையில் ஒரு மண விழாவில் நான் குறிப்பிட்டது போல் எல்லா மண நிகழ்ச்சிகளுக்கும் நானோ; அல்லது பொதுச்செயலாளரோதான் வரவேண்டுமென்று பிடிவாதம் பிடிக்காமல் கழகத்தின் மற்ற தலைவர்களையும் - கழக முன்னணியினரையும் - ஆங்காங்கு மாவட்டத்தில் உள்ள கழகச் செயல்வீரர்களையும் - நிர்வாகிகளையும் நாடாளுமன்ற, சட்டமன்ற பேரவை - மேலவை உறுப்பினர்களையும் அழைத்து அவர்களின் தலைமையிலே எளிய முறையில் திருமண விழாக்களை நடத்திக் கொள்கிற இயல்பினை, கழக உடன்பிறப்புகள் உருவாக்கிட வேண்டும்.

கோவை மாவட்டத்திற்கு இளைத்ததல்ல நமது மாவட்டம் என்று ஒவ்வொரு மாவட்டமும் சூளுரையெடுத்துத் தோள்தட்டிக் கிளம்பினால் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் என நன்கொடை நுழைவுச் சீட்டுகளை விற்று மூன்றரை லட்சம் ரூபாய் நிதி திரட்டிய கோவை மாவட்டத்தை வென்று காட்டமுடியும்.

அதே நேரத்தில் நான் கோவை சிறப்புக் கூட்டத்தில் ஒற்றுமையை வலியுறுத்தி நீண்ட நேரம் பேசியிருக்கிறேனே; அதையும் நிர்வாகப் பொறுப்பிலே இருப்பவர்களும், நிர்வாகப் பொறுப்பிலே இல்லாதவர்களும் மீண்டும் ஒருமுறை பொறுப்புடன் படித்து பார்த்திடுமாறு பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

எந்த மாவட்டத்தில், எந்த ஒன்றியத்தில், எந்தப் பகுதிக் கழகத்தில், எந்த வட்டம் அல்லது கிளை அமைப்பில்; யார் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கிறார்கள் என்று தலைமைக் கழகம் தெளிவாக ஆராய்ந்து உணருமேயானால் - அவர்கள் மீது கழகத்தின் சட்டதிட்டப்படி முறையான நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்பட வேண்டியிருக்கும்! இந்த விஷயத்தில் பொறுப்பிலே இருப்பவர்களுக்கு ஒரு நியாயம் - பொறுப்பிலே இல்லாதவர்களுக்கு ஒரு நியாயம் என்ற பாரபட்சம், தயவு தாட்சண்யம் காட்டப்படவே மாட்டாது!

கழகத்தின் கட்டுப்பாடுதான் கழகத்தின் வலிவு!

தொண்டர்களாம் என் அன்பு உடன்பிறப்புகளின் உழைப்பென்னும் அசையாத அடித்தளத்தில் எழுந்து நிற்கும் வான்முட்டும் கோபுரம்தான் கழகம்!

கோபுரத்துக் கலசங்களுக்கு கும்பாபிஷேகமும் நடைபெறலாம்! பறவைகளின் எச்சமும் அவற்றின் மேல் படலாம்! கோபுரத்துப் பொம்மைகள், உடைந்தும் விடலாம்! ஒன்றிரண்டு விழுந்தும் விடலாம். ஊனமுற்றுச் சில பொம்மைகள் கோபுரத்தில் ஒட்டிக்கொண்டுமிருக்கலாம்! ஆனால் - ஆலமரத்தின் ஆணிவேர் போல வெளியே தெரியாமல் - ஆலயத்துக் கோபுரத்தின் அடித்தளம் மண்ணுக்குள் மறைந்து கிடக்கும்! ஆம்! அப்படித்தான் கழகக் கண்மணிகளாம் தொண்டர்களின் உழைப்பு கழகக் கோபுரத்தின் அடித்தளமாக விளங்குகிறது!

அவர்கள் எறும்புகள்போல் சுறுசுறுப்புக்காட்டி, ஒன்றியந்தோறும், கிளைதோறும் விற்று வந்த நுழைவுச் சீட்டுகளின் விளைவன்றோ; கோவையில் குவிந்த மூன்றரை லட்சம் ரூபாய்!

இந்த எழுச்சி, தமிழகமெங்கும் தொடர வேண்டாமா?

மீண்டும் ஒருமுறை கோவை மாவட்ட வசூல் பட்டியலைப் படித்துப்பார் உடன்பிறப்பே!

உன்னிடம் நான் கழக நிதியை எதிர்பார்க்கிறேன்; காரணம் - இந்தக் கருணாநிதியையே உனக்காகவும் நம் உயிரனைய தமிழ் இனத்திற்காகவும் ஒப்படைத்திருப்பதால்! நான் சொல்வது தவறில்லையானால் - குன்றென நிமிர்ந்து நில்! கோவையைப் பின்பற்று!!

அன்புள்ள,

மு. க.

(14-07-1978)

# 581. மாற்றுக் குறைந்திருக்குமே! மாசு படிந்திருக்குமே!!

**உடன்பிறப்பே,**

நாவலர் அவர்கள் மீண்டும் மன்றம் இதழைத் தொடங்கியிருக்கிறார். அதற்கெனத் தொடக்கவிழா ஒன்று நடைபெற்றிருக்கிறது. அந்த விழாவில் தி.மு.க. பற்றியும், என்னைப் பற்றியும் எவ்வளவு தாக்கிப் பேச முடியுமோ அவ்வளவு தாக்கிப் பேசப்பட்டிருக்கிறது. தாக்கிப் பேச அவர்களுக்கு உரிமையில்லையென்று நான் கூறமாட்டேன். இதைப் போலவே காமராஜர் வாழ்ந்த வீடு நினைவகமாக மாற்றப்பட்ட நிகழ்ச்சியிலும் கடந்த காலத்தில் கழக அரசு, காமராஜரை மறந்துவிட்டது என்பது போன்ற குற்றச்சாட்டுகளை அமைச்சர்கள் வாரி இறைத்துத் தாக்குதல்கணை தொடுத்திருக்கிறார்கள். தாக்கட்டும், ஏசட்டும், பேசட்டும்; பேச நீ யார்? என்று கேட்கிற அளவுக்கு ஜனநாயக நெறியினை உணராதவனல்ல நான்.

ஆனால், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் கட்சி சார்பற்றவராக இருந்திட வேண்டிய கவர்னரும், மேலவைத் தலைவரும் கலந்துகொண்டு அந்தப் பேச்சுக்களை சுவைத்து மகிழ்வது எப்படிப் பொருத்தமானது என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

காமராஜர் வாழ்ந்த வீடு, நினைவகமாக மாற்றப்பட்ட விழாவிலாவது கேரள கவர்னர் திருமதி ஜோதி அம்மையார் அவர்களும், மத்திய அமைச்சர் பா.ரா. அவர்களும் தமிழக அமைச்சரின் உளறலுக்கு சரியான மறுப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

காமராஜர் விழாவிலாகட்டும், நாவலரின் ஏடு தொடக்க விழாவிலாகட்டும் - கட்சி சார்பற்ற நிலையில் பணியாற்ற வேண்டிய மேலவைத் தலைவர் அதுபற்றி வாய் திறக்கவில்லை. எதிர்க்கட்சிகளைச் சாடுகிற ஆளுங்கட்சியின் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகிற போது தங்களுக்கு ஏற்படும் சங்கடத்தை இனிமேலாவது கவர்னர் பட்வாரி அவர்களும், மேலவைத் தலைவர் சிலம்புச்

செல்வர் அவர்களும் உணர்ந்து பார்த்து முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்வது இவர்களுக்கு முன்பு இந்தப் பதவிகளை வகித்த பண்பாளர்களின் வழியை ஏற்றுக் கொண்டதாக அமையும்.

இதை இத்துடன் நிறுத்திக்கொண்டு அந்த மேடைகளில் பேசப்பட்ட விவகாரங்களைச் சற்று கூர்ந்து கவனிப்போம்.

காமராஜரால் கொண்டுவரப்பட்ட முதியோர் கல்வித் திட்டத்தை, அண்ணா விரிவுபடுத்தித் திட்டம் தீட்டினார் - அதை முன்னாள் முதல்வர் கருணாநிதி காலத்தில் கைவிட்டு விட்டார்கள் என்பது குற்றச்சாட்டு!

இந்த குற்றச்சாட்டை அமைச்சர் ஒருவர் ஆர்ப்பரிப்புடன் கூறும்போது முன்னாள் கல்வி அமைச்சர் நாவலர் அவர்களும் அதே மேடையில்தான் அமர்ந்திருக்கிறார்! கல்வித்துறையில் கழக அரசு காலத்தில் முழுப்பொறுப்பும் ஏற்றுக்கொண்டு அந்தப் பணிகளை கவனித்தவர் நாவலர் அவர்கள் என்பது நாடறிந்த செய்தி! இப்போது அவர் இருக்கிற இடம் அந்த இடமாகிவிட்டதால், அமைச்சரின் குற்றச்சாட்டுக்கு விளக்கமளிக்கவோ விடையளிக்கவோ அவரால் இயலாமற் போய்விட்டது! இருந்தாலும் பாவம்; இதயம் குமுறியிருக்கும்! உடனே நாவலர், தன் இதயத்திற்கு ஆணையிட்டிருப்பார் - அமைதியாக இரு என்று! வேறென்ன செய்ய முடியும்!

பத்திரிகை வெளியீட்டு விழாவிலோ முதல்வர் இராமச்சந்திரன் பேசுகிறார்; நினைத்ததை எழுத முடியாமல் போனதால்தான் நாவலர் மன்றத்தைத் தொடர முடியாமல் போய்விட்டது என்பதாக!

உடன்பிறப்பே, இந்தக் குற்றம் யார் மீது சுமத்தப்படுகிறது! நினைத்ததை எழுதுகிற நெஞ்சுரம் நாவலருக்கு இல்லையென்றல்லவா எம்.ஜி.ராமச்சந்திரன் கேலி பேசியிருக்கிறார்!

இல்லை! இல்லை! அப்படிப் பொருள் கொள்ளக்கூடாது; நினைத்ததை எழுத முடியாமல் அவர் தடுக்கப்பட்டார் எனப் பொருள் கொள்ளவேண்டுமென்று யாராவது வாதிடக்கூடும்!

நாவலர், மன்றம் இதழைத் தொடர முடியாமற்போனது அறிஞர் அண்ணா வாழ்ந்த காலத்திலேயே என்பதை எம்.ஜி.ஆர்.

அறிந்திருக்க நியாயமில்லை! அறிந்திருந்தார் என்றால் நினைத்ததை எழுத முடியாமல் தடுத்தது அண்ணாவின் தலைமை என்றல்லவா ஆகிவிடுகிறது!

நினைத்ததை எழுத முடியாமற் போனதால்தான் மன்றத்தை நாவலர் தொடர முடியாமல் போயிற்று என்று கூறுவது முதல்வராயிற்றே! நாவலருக்கு இப்போது தலைவராயிற்றே!

ஒரு தலைவரின் படத்தைக் கொடியிலே போட்டுப் பறக்க விடுகிற கிறுக்கன் எம்.ஜி.ஆரைத் தவிர வேறு யாராக இருக்க முடியும் என்று சிங்கம் போல் உறுமினாரே கூட்டத்திற்கு கூட்டம்; அந்த நாவலர் அல்லவே இப்போது மன்றம் வெளியீட்டு விழா நடத்திய நாவலர்!

உள்ளத்தில் உண்மைகள் துள்ளிக் குதித்து - மன்றம் நின்று போனதற்குக் காரணத்தை உரக்கக் கூவினாலும் கூட அந்த ஒலி வெளியே கேட்காதபடி உதடுகளை அழுத்தி மூடிக் கொள்ளவேண்டிய நிலையல்லவா இப்போது!

ரப்பர் ஸ்டாம்பு என்று நான் நாவலரைச் சொன்னதுண்டு! கருணாநிதி சொன்னதையெல்லாம் ஒத்துக்கொள்கிறாரே; என்பதற்காக!

இதுவும் பத்திரிகையை வெளியிட்ட விழா மேடையில் மக்கள் மத்தியில் எம்.ஜி.ஆர். உதிர்த்த வைர மொழிகள்தான்!

ரப்பர் ஸ்டாம்பு என்று நாவலரை எம்.ஜி.ஆர். கேலி செய்த காலத்தில் அதற்கு நாவலர் அளித்த ஆணித்தரமான பதில்கள் ஏடுகளில் வெளிவந்துள்ளன.

எத்தனையோ ஊர்களில் நாவலர் பேசிய பேச்சை கழக உடன்பிறப்புகள் டேப் ரிக்கார்டரில் பதிவு செய்தும் வைத்திருக்கிறார்கள்.

அ.தி.மு.க. ஜனநாயக ரீதியில் செயல்படுகிறதாம்! நமது கழகம் சர்வாதிகார ரீதியில் யாருக்கும் கருத்து சொல்ல உரிமை அளிப்பது கிடையாதாம்! எம்.ஜி.ஆர்.தான் இப்படிக் கூறுகிறார்!

நியமன அமைப்பாளர்கள்! நியமன கிளைக் கழகச் செயலாளர்கள்! நேரத்துக்கு நேரம் விருப்பத்திற்கேற்ப மொத்தப் பொதுக்குழுவுக்கும் நியமன உறுப்பினர்கள்! அந்த நியமனப்

பொதுக்குழுவில் தன்னைத்தானே நியமித்துக்கொள்ளும் நியமனப் பொதுச்செயலாளர்! இப்படி ஐந்தாறு வருட காலமாக அட்ஹாக் கமிட்டி கட்சியாக இருக்கிற அ.தி.மு.க. ஜனநாயக கட்சியா? என்று எத்தனை மேடைகளில் நாவலர் வேல்களென, வீறுகொண்டு பாயும் கணைகளென வினாக்களைத் தொடுத்திருக்கிறார்!

ஆனால் இன்று! அங்கேயே அல்லவா போய்விட்டார்! ஆள் உயர மாலையல்லவா அணிவித்துப் போற்றிப் புகழ வேண்டியிருக்கிறது! நெஞ்சில் எழும்பும் நினைவலைகளை அடக்குவதற்குப் படாதபாடு அல்லவா படவேண்டியிருக்கிறது!

என் செய்வது; மன்றம் இதழ் தொடர்ந்து நடக்க கோவையில் பல ஆண்டுகளுக்கு முன்பு சிறப்பு நிதி திரட்ட நாடகம் நடத்திக் கொடுத்தமைக்காக நாவலர் அவர்கள் எனக்கும் திரு. அரங்கண்ணல் அவர்களுக்கும் நன்றி கூறி அவர் கைப்பட எழுதிய கடிதத்தை இன்னும் கசங்காமல் அப்படியே பாதுகாத்துத்தான் வைத்திருக்கிறேன்.

எல்லோரையும் ஒருவர் பின் ஒருவராக வெளியேற்றிவிட்டு, தான் மட்டும் இருக்க நினைக்கிறார் கருணாநிதி என்று பண்ருட்டி ராமச்சந்திரன் பேசியதைக் குறிப்பிட்டுப் பண்பாளர் (?) எம்.ஜி. ராமச்சந்திரன் பேசியிருக்கிறார், அந்த விழாவில்!

ஆட்சியிருந்த போது மத்தியில் இருந்து வந்த மிரட்டலால் வெளியேற்றப்படுகிற நிலையை உருவாக்கிக் கொண்டவர் எம்.ஜி.ஆர்.!

உடனே கழக ஆட்சி கலைந்துவிடும் - 1972-லேயே எம்.ஜி.ஆர். முதல்வராக மத்திய ஆட்சியினால் நியமிக்கப்பட்டு விடுவார் என்று கூறப்பட்ட மாய்மாலச் செய்தியை நம்பி வெளியேறியவர்கள் சில பேர்!

ஆட்சியிருக்கும் வரையில் இருந்துவிட்டு கலைக்கப்பட்டதும் எம்.ஜி.ஆர். காலடியில் போய் விழுந்தவர்கள் சில பேர்!

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு இனி, கழகம் வளராது என்று கணக்கிட்டுக்கொண்டு பச்சை கண்ட இடத்திற்கு மேயப்போனவர்கள் சில பேர்!

பதவியும் பவுசுமின்றி ஒருநாளைக்கூட நகர்த்த முடியாது என்று ஏங்கித் தவித்து ஆளுங்கட்சியின் ஆலிங்கனத்திற்காகத் துடித்துக்கிடந்து ஓடிவிட்டவர்கள் சில பேர்!

இத்தகைய குணங்கொண்டவர்களைப் பற்றி 1976ஆம் ஆண்டு முரசொலியில் நாவலர் ஒரு அழகான கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையின் மையக் கருத்தே இவர்கள் எல்லாம் அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள் என்பதாகும்!

அவர் மீண்டும் தொடங்கியுள்ள மன்றம் இதழில் அந்தக் கட்டுரையை அவரே மீண்டும் பிரசுரித்தால் பயனுடையதாகக்கூட இருக்கும்.

தொண்டர்களுக்குச் செருப்பாக இருப்பேன் என்று கருணாநிதி இப்போது சொல்கிறார். இதற்கு முன்பு எப்போதாவது சொல்லியிருக்கிறாரா?

எவ்வளவு பெரிய கேள்வியை எம்.ஜி.ஆர். கேட்டிருக்கிறார் பார்த்தாயா?

நான், கட்சியில் தலைவனாக வந்து நுழைந்தவனில்லை! கூட்டங்களுக்கு மேடை போட்டு, விளம்பரச் சுவரொட்டிகளை சுவர்களில் பசை தடவி ஒட்டி, துண்டு அறிக்கைகளை விநியோகித்து தொண்டனாகவே பொதுவாழ்வைத் தொடங்கியவன் என்று எம்.ஜி.ஆருக்குத் தெரியும்.

அவரே என்னைப் பற்றிய ஒரு சிறப்பு மலரில் அதை எழுதியிருக்கிறார். இப்போது மறதி மனச்சாட்சியை மறைத்து விடுகிறது; மகுடம் தலையில் இருப்பதால்!

கல்லக்குடிப் போரில் ரயிலுக்கு முன் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்த கருணாநிதியை நான் மதிக்கிறேன். ஆனால் ஊழல் கருணாநிதியை நான் மதிக்க முடியாது!

உடன்பிறப்பே, இப்படிப் பேசியவர் யார் தெரிகிறதா?

முதல்நாள் குரோவர் கமிஷன் தேவராஜ் அர்ஸ் அவர்களுடன் கைகுலுக்கிக் கட்டித் தழுவிய நமது எம்.ஜி.ஆர்.தான்!

படத்துக்கு பத்து லட்ச ரூபாய் வாங்கிக்கொண்டு ஒரு லட்சத்துக்கு ஒப்பந்தம் போட்டுக்கொண்டு ஒன்பது லட்சத்தை

கறுப்புப் பணமாக வாங்கி, கோடிக்கணக்கான ரூபாய்க்கு வரி ஏய்ப்பு ஊழல் செய்துள்ள எம்.ஜி.ஆர்.தான்!

அவர் கறுப்புப் பணம் வாங்கியது உண்மைதான் என்று ஒரு அவையிலே நீண்டநேரம் விளக்கமளித்து, பிறகு அந்த அவையின் தலைவர் அந்த விளக்கமும் உண்மையும் வெளியில் வந்தால் விகாரமாக இருக்குமென்று கருதி எம்.ஜி.ஆர். பேசியது அனைத்தையும் நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து எடுத்துவிட்டு ஏடுகளிலும் வெளியிடக் கூடாதென்று சில மாதங்களுக்கு முன்புதான் ஆணை பிறப்பித்தார் என்பதும் மறந்து விட்ட செய்தியல்ல!

அவர் என்னைப் பார்த்துச் சொல்கிறார்; ஊழல் கருணாநிதி என்று! கழக ஆட்சி தோன்றிய பிறகு காங்கிரஸ்காரர்கள் கிளப்பிய முதல் ஊழல் குற்றச்சாட்டே, எம்.ஜி.ஆர். சத்தியா ஸ்டுடியோவுக்கு அரசாங்க நிலத்தை நீண்டகாலக் குத்தகைக்குக் குறைந்த வாடகைக்கு எடுத்துக்கொண்டார் என்றுதானே!

அவர், தி.மு.க. அமைச்சரவையில் யார் யார் மீது புகார் கொடுத்தாரோ; அவர்களில் முக்கால் பங்கிற்கு மேற்பட்டோர் இன்றைக்கு அவர் பக்கத்தில்தான் வீற்றிருக்கிறார்கள்!

கழகம் ஆளுங்கட்சியாக இருந்தபோது சட்டப் பேரவையில் அ.தி.மு.க. கட்சியின் சார்பில் யார் யார் மீது அடுக்கடுக்கான ஊழல்களை எடுத்துரைத்தார்கள் என்பது, சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பேடுகளைப் பார்த்தாலே தெரியுமே! எரிமலையின் கனலோ - எரியீட்டியின் தாக்குதலோ - எனும் விதத்தில் அன்றைய எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வினர் சட்ட மன்றத்தில் பேசிய பேச்சுக்கள் நிறைந்த சபை நடவடிக்கை ஏடுகளைக் கடல் கொண்டு விடவில்லை! கறையான் அரித்து விடவில்லை! நெருப்புக்கும் இரையாகி விடவில்லை!

படகு ஊழல் என்றார் எம்.ஜி.ஆர்.! இப்போது அந்தப் படகு எம்.ஜி.ஆரின் கடற்கரையில்தான் ஒதுங்கிக் கிடக்கிறது!

மதுரையில் குண்டர்களின் அரசன் - லஞ்ச லாவண்யப் பேர்வழி என்று வர்ணித்தார் ஒருவரை! இன்று அந்த ஊழலால் உயர்ந்த உப்பரிகையில்தான் விருந்துண்டு மகிழ்கிறார்.

கப்பல் பேர ஊழல், கரைத் தட்டிப் போய்க் கிடக்கிற கட்சி, இன்று எம்.ஜி.ஆர். கட்சிதான்!

அரிசி என்றார் - சர்க்கரை என்றார் - நெக்லஸ் என்றார் - புத்தகக் கம்பெனி என்றார் - கூட்டுறவு சொசைட்டி என்றார் - இப்படி எத்தனையோ புகார்களைப் பாயவிட்டார்! அதில் காயம்பட்டோர் எல்லாம் இன்று அவர் அணியில் கட்சம் ஏந்தி நிற்கின்றனர் நமது கழகத்தை வீழ்த்திடும் கருத்துடன்!

என்னை மதிக்க முடியாதாம்; திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்! காரணம் நான் ஊழல் கருணாநிதியாம்! உத்தமர் சொல்கிறார் உடன்பிறப்பே அப்படி! இனி என் செய்வேன் நான்! இவர் என்னை மதிக்க மாட்டாராமே! இதைவிட மகிழ்ச்சிகரமான செய்தி வேறு எதுவும் எனக்கில்லை!

ஒரு அந்நியச் செலாவணி

மோசடிக்காரர் - ஒரு

கறுப்புப்பண முதலை

பஸ் முதலாளிகளிடமும், தியேட்டர்

அதிபர்களிடமும் கட்சி நிதி

கட்டாயப்படுத்தி வசூலிக்கும் ஒரு

ஊழல் மன்னர் - இன்னும் பல

இப்போது வெளியிடப்படாமல்

பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள

பழிபாவங்களுக்குச் சொந்தக்காரர்

அத்தகையவர் என்னை மதிக்கிறேன் என்று சொல்லியிருந்தால்தான் என் மாற்றுக் குறைந்திருக்கும். எனக்கு மாசு படிந்திருக்கும் - நல்லவேளை மன்றம் தொடக்க விழாவில் நான் மகிழத்தக்க செய்தியைச் சொல்லியிருக்கிறார். அதற்காக அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அன்புள்ள,

மு. க.

(19-07-1978)



# 1924 - 2018


நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

**கௌரா ஏஜென்ஸீஸ்**
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

அக்டோபர் 2022